கலைஞரின்

நெஞ்சுக்கு நீதி

நான்காம் பாகம்

கலைஞர்

நெருக்கடி நீதி

பாகம்—4

தலைவர் **கலைஞர்**

ANNA CENTENARY LIBRARY
0010375
18 JAN 2010
CHENNAI - 600 085

வெளியீடு:
திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண்: 55
வெங்கட் நாராயணா ரோடு
தி.நகர், சென்னை—600 017.
☎: 24342899 -24327696

முதற் பதிப்பு : ஜூலை, 2003
இரண்டாம் பதிப்ட : ஜூலை, 2007
© உரிமை : தமிழ்க்கனி பதிப்பகம்

தாள் : 80 G.S.M. JK Maplitho

பக்கங்கள் : XVIII + 630 = 648

நன்றி : முரசொலி

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 ...
Acc. No. 0010375
Call No. 928.9481 KAR
KAR.4;
Number and Date of Invoice 39/18.01.2010
Indian Price 340/-
Director

விலை ரூ. 340.00

திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண்: 55,
வெங்கட் நாராயணா சாலை,
தி.நகர், சென்னை–17.
தொலைபேசி: 24342899, 24327696
Fax: 91-44-24341559

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-26. Ph: 23610810

Printed at: Chennai Micro Print Pvt. Ltd., Chennai-29.

பதிப்புரை

தலைவர் கலைஞரின் சுயசரிதமான 'நெஞ்சுக்கு நீதி' முதல் மூன்று பாகங்களையும் படித்து இன்புற்று மகிழ்ந்த எமது நெஞ்சிற் கினிய வாசகர்களுக்கு இந்த நான்காவது பாகத்தையும் தருவதற்கு மிகவும் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சி அடைகிறோம்.

கலைஞர் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு, இயக்க வரலாறு மற்றும் உலக வரலாற்றுக் குறிப்புகளை தெள்ளிய ஆற்று நீர் போல 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகம் முதல் மூன்றாம் பாகம் வரை தொகுத்துக் கொடுத்துள்ளார்.

இதோ! 'நெஞ்சுக்கு நீதி'யின் நான்காம் பாகம் வாசகர்களின் கரங்களில் பிறந்த குழந்தையின் பிஞ்சு விரல்களை வருடும் போது ஏற்படுகின்ற உணர்வுடன் வாசகர்களின் கரங்களை வருடிக் கொண்டிருக்கிறது.

உலகளாவிய வரலாற்று நிகழ்வுகள்; இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள்; அவற்றைத் தீர்க்க கலைஞர் மேற்கொண்ட நடவடிக்கைகள்; ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது தமிழகத்தில் கழகம் செய்த சாதனைகள் ஆகியவற்றை தனக்கேயுரிய கற்கண்டுத் தமிழில் சமைத்த இனிப்புப் பொங்கலாய் 'நெஞ்சுக்கு நீதி' நான்காம் பாகத்தில் வாசகர்களுக்கு விருந்து படைத்துள் ளார், கலைஞர் அவர்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த, இந்த நூலை வெளியிட அனுமதி அளித்த இருபதாம் நூற்றாண்டின் தொல்காப்பியர்; அறிஞர் இலக்கியக் கடல் கலைஞருக்கு பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

வழக்கம் போல், இந்த நூலை வாங்கிப் பயனடைந்து எம் நிறுவனத்தைப் பெருமைப் படுத்தும் இனிய வாசகர்களையும் நினைவு கூர்கிறோம்.

'நெஞ்சுக்கு நீதி' ஐந்தாம் பாகத்தை கலைஞர் எழுதி, அதனையும் நாங்கள் வெளியிடும் பாக்கியத்தை காலம் எங்களுக்குத் தர வேண்டும் என்று இறைஞ்சுகிறோம்.

இந்நூல் வெளியிடுவதற்கு தேவைப்பட்ட அனைத்து உதவிகளையும் காலத்தே செய்துதவிய திரு.சண்முகநாதன் அவர்களையும் இத்தருணத்தில் அன்புடன் நினைவு கூர்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

திருமகள் நிலையம்

முன்னுரை

'நெஞ்சுக்கு நீதி' நான்காவது பாகத்தில் உங்கள் விழி மலர்கள் விரிகின்றன.

முதற்பாகம், நான் பிறந்த 1924ஆம் ஆண்டு முதல் 1969 வரையிலான என் வாழ்க்கை வரலாற்றையும், என் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த இயக்க வரலாற்றையும் மற்றும் உலக வரலாற்றுக் குறிப்புகளையும் உங்களுக்குச் சுட்டிக் காட்டுவதாகும்.

1969 முதல் 1976 வரை ஏழாண்டுக் கால வரலாற்றுக் குறிப்புகளையும், என் வாழ்க்கைக் குறிப்புகளையும் தொகுத்தளிப்பது தான் 'நெஞ்சுக்கு நீதி' இரண்டாம் பாகம்.

1976க்குப் பிறகு 1991 வரையிலான 15 ஆண்டுக் கால சரித்திர நிகழ்வுகளை நினைவூட்டுவது தான் நெஞ்சுக்கு நீதியின் மூன்றாம் பாகம். மூன்றாம் பாகத்தில் 1988ஆம் ஆண்டு வரையிலான சம்பவங்கள் தான் முழுமையாக எழுதப்பட்டுள்ளன.

எனவே இந்த நான்காம் பாகத்தில் 1989 முதல் 1996ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகள் முறையாகத் தொகுக்கப்பட்டு, இறுதி அத்தியாயத்தில் அதற்குப் பிறகு நடந்த முக்கிய நிகழ்வுகள் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

இந்த வாழ்க்கை வரலாற்று நூலில் முதல் பாகம் 755 பக்கங்கள்; இரண்டாம் பாகம் 586 பக்கங்கள்; மூன்றாம் பாகம் 612 பக்கங்கள். நான்காம் பாகம் 633 பக்கங்கள் என மொத்தம் 2586 பக்கங்கள் என அமைந்துள்ளது.

நான்காம் பாகத்தை என் எண்பதாவது அகவையில் அடியெடுத்து வைத்திடும்போது உங்களிடம் தந்துள்ளேன். 'நான்காம் பாகம் முற்றும்' என்று

எழுதுவதற்கே இயலாமல் இன்னும் பல நிகழ்ச்சிகள் காத்துக் கிடக்கின்றன.

காலம் இடம் தந்தால்; அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, விட்டுப் போனவைகளையும் இட்டு நிரப்பி 'ஐந்தாம் பாகம்' தருவதற்கு முயற்சி எடுப்பேன்.

இல்லையேல் என்னைத் தொடர்ந்து தொண்டாற்றுபவர்கள் அப்பணி மேற்கொள்வர்.

அன்புள்ள

15.6.2003

என்னுரை

மனிதன், நூறாண்டுகளுக்கு மேலும் வாழ்வது என்பது அதிசயச் செய்திகளில் ஒன்று. தொண்ணூறு ஆண்டுகளைக் கடந்து வாழ்பவர்களே மிகச் சிலர்தான். இந்த அடிப்படையில் பார்த்தால், ஐம்பது வயதைத் தாண்டிய நான், வாழ்க்கையில் முக்கால் பகுதிக்கு மேல் முடித்துவிட்ட நிலையில் என் கடந்த கால வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் இந்தப் பெருநூலின் முதற் பாகத்தைத் 'தினமணி கதிர்' இதழில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாம் பாகத்தை 'குங்குமம்' இதழில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாம் பாகத்தை எழுதி முடிக்கும்போது அறுபது வயதைக் கடந்து, இந்த நூல்களுக்கான முன்னுரையை எனது அறுபத்தி இரண்டாவது அகவையின்பொழுது எழுதுகிறேன்.

இந்த அறுபத்து இரண்டு ஆண்டுகளில்- மிகப் பெரும் பகுதி- பொது வாழ்வுக்கே செலவாகியிருக்கிறது என்பது, என் இதயத்துக்கு ஆறுதலைத்தர வல்லதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் சிறப்பாகத் தமிழுக்கும், தமிழின மக்களுக்கும்- பொதுவாக மக்கட் பணிக்கே பெரிதும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை.

நடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, "ஏ, அப்பா! இவ்வளவு தூரம் நடந்துவிட்டோமா? இனிமேல் நடக்க முடியாது." என்று அயர்ந்து போவதற்குப் பதிலாக- "பரவாயில்லை! இவ்வளவு தூரம் நடந்துவிட்டோம். இன்னும் சிறிது தூரம் தானே!" என்ற புதிய விறுவிறுப்பைப் பெற்றாக வேண்டும்.

VII

அந்த விறுவிறுப்பைப் பெறத்தான் என் வாழ்க்கையை நான் திரும்பிப் பார்த்துக் கொள்கிறேன்.

வாழ்க்கையை ஒரு போராட்டம் என வர்ணிப்போர் உளர்! எனக்கோ; போராட்டமே வாழ்க்கையாகி விட்டது.

போர் வீரனுக்கு மகிழ்ச்சியே கிடையாதா? ஏன் கிடையாது? கொட்டும் குளிரில், பனிப் பாறைகளில் ஊர்ந்து சென்று பகையைத் தாக்கும்போது சூடாக ஒரு கோப்பைத் தேநீர், அவனும் அருந்துவது உண்டு. அதுவே அவனுக்குப் பெரிய இன்பம்.

மீனைச் சுவைத்துச் சாப்பிடும்பொழுது, அதன் முள் நாவிலே குத்தி விடுவதுண்டு. அதனால் சிறிது ரத்தமும் கசிவதுண்டு. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மீன் துண்டுகளைச் சுவைப்போரைப் பார்த்திருக்கிறோம்.

சில பேருக்கு மீனின் முள் தொண்டையிலே அடைத்துக் கொண்டு, அவஸ்தைப்படுவதும் உண்டு.

என் வாழ்வு, இதில் இரண்டாவது வகை.

“உன்னை ஒருவன் இழித்துப் பேசினான்” என்று தன் நண்பனிடம் ஒரு நண்பன் கூறினான். அதைக் கேட்ட அந்த நண்பன் வியப்புற்று, “அப்படியா! இருக்காதே! என்னை அவன் இழித்துப் பேசியிருக்கமாட்டானே! நான் அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லையே! பிறகு எப்படி அவன் என்னை ஏசியிருக்க முடியும்?” என்று கேட்டான்.

இந்த உரையாடல் துணுக்கில் இந்த உலகத்தின் படமே தெரிகிறதல்லவா? இத்தகைய உலகில்தான் நமது வாழ்க்கைப் பந்து உருளுகிறது.

அந்தப் பந்தை நாம்தான் உதைத்து விளையாட வேண்டும். யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலாயிருந்தால், அவர்கள் நம்மையும் சேர்த்து உதைப்பார்கள்.

கல்லிலும், முள்ளிலும், கட்டாந்தரையிலும் அடித்து ‘அவுட்’ (Out) ஆகாமல் பந்து, (Goal)

கோலுக்குள் நுழைந்திட வேண்டும். (Goal) கோல் இல்லாமல் பந்தாடுவதில் மட்டும் திறமையைக் காட்டிப் பயனில்லை. வெற்றி தோல்விகள் இயற்கைதான் எனினும் விடாமுயற்சியும் கொள்கை உறுதியும் ஓயா உழைப்பும் தேவை.

'ஓய்வெடுத்துக் கொள்க!' என்று சில மாற்றுக் கட்சி நண்பர்கள் கேலியாகக் கூறினர். "ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்" என்று என் கல்லறையின் மீதுதான் எழுதப்படும் என்று பதில் சொன்னேன்.

அந்த உணர்வுகளின் தொகுப்புத்தான் இந்த நூல். இது முழுமையானதல்ல. இன்னும் நிறைய இருக்கிறது, எழுத! மூன்றாம் பகுதியாக, அது வெளிவரக்கூடும்.

இந்த முதல் பகுதியைத் தொடர்ந்து துணையாக, அவ்வப்போது நான் கேட்ட அரசியல் குறிப்புகளைத் தந்து உதவிய, தி.மு.க. தலைமை நிலைய நண்பர் சண்முகம், தம்பி சண்முகநாதன், நண்பர் மறைமலையான் ஆகியோர் மறக்க முடியாதவர்கள்.

இதன் முதற்பதிப்பை, 'தினமணிக் கதிர்' நிறுவனத்தார் வெளியிட்டனர். முதல் பாகத்தின் இரண்டாம் பதிப்பையும், இரண்டாம் பாகத்தின் முதல் பதிப்பையும் 'திருமகள் பதிப்பகம்' நண்பர் திரு.இராமநாதன் அவர்கள் வெளியிடுவதற்கு முன்வந்தமைக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது அரிய முயற்சிக்கு என் நன்றி!

★ பெற்றெடுத்த தாய் தந்தை

★ அறிவூட்டிய பெரியார்

★ ஆளாக்கிய அண்ணா

ஆகியோருக்கு இது காணிக்கை

அன்புள்ள

சென்னை
1985

நிகழ்ச்சி சுருக்கம்

1.	முன்னுரை	
2.	28–12–1988 பேரவை தகராறு	2
3.	ஜெ–ஜா அணி தகராறு	4
4.	ஜா ஆட்சிக் கலைப்பு	4
5.	தேர்தல் காலம் நீடிப்பு	4
6.	தேசிய முன்னணி தொடக்க விழா	7
7.	பொன்னர் சங்க நூல் வெளியீட்டு விழா	9
8.	வேட்பாளர்கள் அறிவிப்பு	9
9.	தேர்தல் வெற்றி – நன்றி	10
10.	விகிதாச்சார பிரதிநிதித்துவம்	12
11.	சட்டமன்றத் தலைவராகத் தேர்தல்	14
12.	அமைச்சரவை அறிவிப்பு	14
13.	பதவியேற்பு விழா	14
14.	நன்றி அறிவிப்பு கூட்டம்	14
15.	வி.பி.சிங் பாராட்டு	15
16.	ஜனதா தள நிகழ்ச்சி	17
17.	வி.பி. சிங் கோபாலபுரம் வருகை	18
18.	அண்ணா காமராஜர் பெயர் விமான நிலையத்திற்கு	20
19.	பெண் ஆசிரியை நியமனம்	21
20.	தலைமைச் செயலகச் சங்கத்தினர் பாராட்டு	21
21.	பேரவைத் தலைவர் தேர்தல்	22
22.	டெல்லிப் பயணம், பிரதமர் ராஜிவ் சந்திப்பு	22
23.	டெல்லியில் பிரதமரிடம் நிதி கேட்பு	26
24.	குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் சந்திப்பு	27
25.	டெல்லி பத்திரிகையாளர் சந்திப்பு	27

26.	கலைத்துறையினர் பாராட்டு	27
27.	ஆளுநர் உரை	28
28.	மது விற்பனையில் ஊழல்	29
29.	வைகோ இலங்கை பயணம்	30
30.	9வது நிதிக் குழு வருகை	33
31.	சாவி – இயல் இசை நாடக மன்றத் தலைவர்	34
32.	சாவி மறைவு – கைதான நிகழ்ச்சி	35
33.	மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகித ஒதுக்கீடு	37
34.	எந்தெந்த வகுப்பினர் எவ்வளவு பேர்?	39
35.	ஈழப் பிரச்சினை குறித்து பேச்சு	40
36.	நிதிநிலை அறிக்கை – திருநாவுக்கரசு பேச்சு	41
37.	ஜெயலலிதா ராஜினாமா கடிதம்	45
38.	நிதிநிலை அறிக்கை பறிப்பு – பேரவை கலவரம்	48
39.	ஆளுநரிடம் விளக்கம்	51
40.	அலெக்சாண்டரின் பெருந்தன்மை	52
41.	மேற்கு வங்கத்தில் காங்கிரசார் கலவரம்	54
42.	கர்நாடக அரசில் பொம்மை மீது புகார்	55
43.	கலவரம் பற்றி தினமணி தலையங்கம்	55
44.	கழக ஆட்சியின் மிக முக்கிய சாதனைகள்	59
45.	தாளமுத்து நடராஜன் மாளிகை திறப்பு விழா	64
46.	இந்தியத் திரைப்படத் துறையின் பவள விழா	64
47.	எம்.ஜி.ஆர். நினைவக அபிவிருத்திக்கு 30 லட்சம்	65
48.	கர்நாடகாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி	65
49.	பொம்மை வழக்கு – 356வது பிரிவு	66
50.	கோர்பசேவ் வரலாறு	67
51.	சத்துணவுத் திட்டத்தில் முட்டை	72
52.	யுனெஸ்கோ கூரியர் வெளியீட்டு விழா	75
53.	ஆட்சி மொழியாக தமிழ்	76
54.	ஈழப் பிரச்சினை குறித்து முரசொலி மாறன் கடிதம்	77
55.	ராஜிவ் காந்தி மாறனுக்குப் பதில் கடிதம்	77
56.	கலைஞர், செல்வா, அமிர்தலிங்கம் படம்	80

57. விடுதலைப் புலிகள் பிரச்சினை 81
58. மோகன்தாஸ் புத்தகம் 82
59. டெசோ மாநாடு 84
60. கலைஞர் பிறந்த நாளில் வசூலான நிதி பங்கீடு 86
61. மண்டல் குழு பரிந்துரை 89
62. இட ஒதுக்கீடு 90
63. சீனாவில் மாணவர்கள் புரட்சி 93
64. பாரதிதாசன் நூல்கள் நாட்டுடமை 93
65. சஞ்சீவ ரெட்டியார் பேச்சு 98
66. திரைப்படத் துறையினர் சந்திப்பு 100
67. ராஜிவ் காந்தியுடன் இலங்கை பற்றி பேச்சு 101
68. கல்கி பாராட்டு தலையங்கம் 101
69. ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி 102
70. நடந்தாய் வாழி காவேரி 105
71. நடுவர் மன்றம் 108
72. எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகம் 117
73. எத்திராஜ் பெண்கள் கல்லூரி விழா 119
74. ராஜாதி ராஜா வெற்றி விழா 119
75. வங்க தேச உதயம் 121
76. பூட்டோ வரலாறு 124
77. பஞ்சாயத்து ராஜ் சட்டம் 127
78. வானூர் மாரிமுத்து அரசு நிலம் கைப்பற்றல் 131
79. தேசிய முன்னணி சார்பில் கூட்டம் 134
80. ஆர்.வெங்கட்ராமனுடன் ஜெ. சந்திப்பு 136
81. தொலைக்காட்சி பெட்டிகள் உடைப்பு 137
82. அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு 138
83. மாநிலங்களவை தேர்தல் 141
84. வட சென்னை அனல் மின் நிலையம் 142
85. சாதி மத பேதமற்ற சமுதாய அமைப்பு 145
86. போடி கலவரம் 149
87. இதயம் மணியம் நூல் வெளியீட்டு விழா 150

88. மனிதச் சங்கிலி போராட்டம் 152
89. மத்திய அரசிடம் அதிக அரிசி 154
90. மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடங்கள் 155
91. காமராஜர் தங்கையோடு சந்திப்பு 156
92. தலைமைக் கழகத்திடம் விருதுகள் 157
93. அண்ணா பிறந்தநாள் கைதிகள் விடுதலை 159
94. கால்நடைப் பல்கலைக் கழகம் 160
95. பரலி நெல்லையப்பர் குடும்பத்திற்கும் ஓய்வூதியம் 161
96. ராஜராஜன் விருது 162
97. கருணானந்தம் மறைவு 166
98. அபூர்வ சகோதரர்கள் படம் வெற்றி விழா 167
99. நாமக்கல்லாருக்கு பாராட்டு 168
100. வி. பி. சிங் ஆட்சிக்கு பாஜக, கம்யூனிஸ்ட் ஆதரவு 170
101. நாடாளுமன்ற வேட்பாளர்கள் பட்டியல் 173
102. வன்னியர் சங்கத்தின் போராட்டம் 175
103. சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்ப நலத் திட்டம் 177
104. மூப்பனார் இல்ல மண விழா 177
105. ராஜிவ் காந்தி நன்றி 178
106. எம்.ஜி.ஆர். நினைவகம் திறப்பு விழா 179
107. திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 181
108. நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் 184
109. பிரதமர் தேர்வில் வி.பி. சிங் 188
110. தமிழகத்திற்கு கூடுதல் அரிசி 192
111. மத்திய அமைச்சரவையில் முரசொலி மாறன் 193
112. மார்க்கோஸ் அகினோ வரலாறு 196
113. மத்திய உள்துறை அமைச்சரின் மகள் கடத்தல் 201
114. இலங்கைப் பிரச்சினை 203
115. பத்மநாபா கொலை 210
116. விடுதலைப் புலிகள் பிரச்சினையில் ஜெயலலிதா 214
117. பனாமா சர்வாதிகாரி நொரிகா 221
118. ஜெயில் சிங் பாராட்டு 225

119. மண்டல் கமிஷன் பரிந்துரைகள் 226
120. மண்டல் கவிதை 232
121. கண்ணகி சிலை 237
122. எம்.ஜி.ஆர். சிலைக்கு அனுமதி 240
123. திருவள்ளுவர் திருநாள் 241
124. ஆளுநர் அலெக்சாண்டர் சென்று பர்னாலா வருகை 243
125. ஆர்.எம்.வீ. மீது ஜெ. பாய்ச்சல் 247
126. மீனம்பாக்கம் லாரி விபத்து 249
127. திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன் 251
128. விஜயகாந்த் இல்லத் திருமணம் 253
129. திருச்சி 6வது மாநில மாநாடு 254
130. நெல்சன் மண்டேலா 255
131. அமைப்பு ரீதியாக உருவாகாத கட்சிகள் 264
132. வி.பி.சிங், தேவிலால் தகராறு 266
133. மாநிலங்களவை தேர்தல் 268
134. செ. கந்தப்பன் மறைவு 270
135. பிறந்த நாள் விழாவில் மது தண்டவதே 270
136. வ.ரா. துணைவியாருக்கு நிதி உதவி 272
137. ஜெகஜீவன்ராம் சிலை திறப்பு விழா 273
138. ஓட்டல்கள் சங்கப் பொன்விழா 274
139. ஜெ. கட்சியிலிருந்து திருநாவுக்கரசு நீக்கம் 275
140. ஜெ அணி – ஜா அணி – சமாதானம் 277
141. கிருபானந்தவாரியார் கல்லூரி, சிலை திறப்பு 278
142. குவைத் ஈராக் போர் 280
143. ஆந்திர முதல்வர் சென்னா ரெட்டி பாராட்டு 283
144. அண்ணா அருங்காட்சியகம் திறப்பு 284
145. தேசிய ஒருமைப்பாட்டு குழுக் கூட்டம் 284
146. ரத யாத்திரை 287
147. மதச் சார்பற்ற – மத நல்லிணக்க அணி 291
148. வி.பி. சிங் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிகள் 293
149. சந்திரசேகர் பதவியேற்பு 300

150. பட்டதாரிகளே இல்லாத குடும்பச் சலுகை 302
151. ஆட்சிக் கலைப்புக்கான வேலைகள் 303
152. சந்திரசேகர் 304
153. இங்கிலாந்தில் தேர்தல் 306
154. வி.பி. சிங் அவர்களுக்கு வரவேற்பு 311
155. தலாய்லாமா 313
156. இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 316
157. இலவசக் காங்கிரீட் விடுதிகள் திட்டம் 319
158. சஞ்சீவ ரெட்டி பேச்சு 321
159. ஜெ. வீட்டில் சந்திரசேகருக்கு விருந்து 321
160. பர்னாலாவிடம் ஜெ. புகார் 322
161. ஜெ. குடியரசு தலைவரிடம் புகார் 322
162. ஏடுகள் தலையங்கம் 323
163. கழகத்தில் காளிமுத்து 325
164. சட்டமன்றத்தில் அதிமுக அராஜகம் 326
165. வி.சி. சுக்லா சந்திப்பு 329
166. தமிழகச் சட்டப் பேரவை கலைப்பு 330
167. ஏடுகள் தலையங்கம் 333
168. கண்டனப் பொதுக்கூட்டம் 336
169. வைரமுத்து கவிதை 339
170. நரேந்திர தேவா நினைவகம் 341
171. சந்திரசேகர் பற்றி முரசொலி மாறன் பேச்சு 343
172. பாட்னாவில் தேசிய முன்னணி பேரணி 348
173. வைகோ கட்டுரை 351
174. பி.ராமமூர்த்தி நினைவகத் திறப்பு விழா 352
175. மற்ற மாநிலங்களில் அரசியல் 353
176. ஜார்ஜியா 356
177. தென்னரசு மறைவு 356
178. 1991ஆம் ஆண்டு சட்டப் பேரவை தேர்தல் 358
179. ராஜிவ் காந்தி படுகொலை 359
180. கழக ஆட்சியில் ராஜிவ் காந்தி பாதுகாப்பு 364

181. தேர்தலில் தி.மு.க. தோல்வி 366
182. நரசிம்மராவ் பிரதமர் ஆனார் 367
183. டாக்டர் ராமதாஸ் உண்ணாவிரதம் 374
184. இந்தியாவில் கடத்தல்கள் 375
185. வாரன் ஹேஸ்டிங்ஸ் எட்மண்ட் பார்க் 377
186. ஆர். நாகராஜன் கைது 377
187. கச்சத்தீவு பற்றி ஜெயலலிதா 378
188. துறைமுகம், எழும்பூர், முசிறி இடைத்தேர்தல் 380
189. பேருந்துகளுக்கு முன்கூட்டியே வரி ரத்து 381
190. கே.பி. ராமலிங்கம் கைது 381
191. கரசேவை பற்றி ஜெயலலிதா 388
192. அவுங்சான் புதல்வி அனுபவித்த கொடுமை 389
193. மதுரை பாண்டியம்மாள் வழக்கில் தீர்ப்பு 393
194. நாகராஜன் வாக்குமூலம் 395
195. கர்நாடகத்தில் வன்முறை 399
196. பேரணிக்கு வந்தவர்கள் மீது தாக்குதல் 400
197. பேரணி நடத்த ஒப்பந்தத்தில் கையெழுத்து 405
198. பஞ்சாப்பில் சட்டமன்றத் தேர்தல் 406
199. மதுரையில் பவள விழா மாநாடு 406
200. அதிமுக ஆட்சியில் பத்திரிகை சுதந்திரம் 411
201. வெற்றிகொண்டான் மீது நடவடிக்கை 412
202. நன்னிலம் நடராசன் மீது நடவடிக்கை 414
203. சட்டமன்ற கூண்டிலே முரசொலி செல்வம் 415
204. யாசர் அராபத் 423
205. கும்பகோணம் மகாமக விழாவில் ஜெ. 424
206. சந்திரலேகா மீது திராவகம் 429
207. பிறந்த நாள் விழா ரத்து 430
208. தலைமைக் கழகத் தேர்தல் 431
209. அதிமுக ஆட்சியில் இலவச மின்சாரம் 432
210. மதுரை சிறையில் அனுமதி மறுப்பு 434
211. பம்பாய் பங்கு மார்க்கெட் ஊழல் 437

212. அதிமுக மதுரை மாநாடு 439
213. ராஜிவ் காந்தியால் வெற்றி பெறவில்லை 441
214. குடியரசுத் தலைவராக சங்கர் தயாள் சர்மா 442
215. ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி 444
216. முரசொலி பொன் விழா 445
217. சிவசுப்ரமணியம் கமிஷன் விளம்பரச் செலவு 447
218. ஆந்திரா, கர்நாடகாவில் அரசுக்கு எதிர்ப்பு 450
219. அயோத்தியில் கரசேவை துவக்கம் 453
220. அத்வானியுடன் ஜெ. சந்திப்பு 458
221. கரசேவை பற்றி கவிதை 460
222. கரசேவை நிகழ்ச்சிகள் 461
223. தலைமுறை இடைவெளி 468
224. அமெரிக்கத் தேர்தல் 469
225. சமூக நீதி வெற்றியும் சில சங்கடங்களும் 473
226. அன்பில் தர்மலிங்கம் மறைவு 476
227. கோவை தி.மு.க. மாநாடு 479
228. ஆசிரியர் பயிற்சி பள்ளி அனுமதி ரத்து 482
229. அதிமுக காங்கிரஸ் உறவு முறிவு 484
230. சட்டப் பேரவையில் தர்ணா, உண்ணாவிரதம் 485
231. ராணிப்பேட்டை தொகுதி இடைத் தேர்தல் 487
232. விடுதலைப் புலிகள் தப்பித்தல் 491
233. இலங்கையில் தேர்தல் 494
234. தமிழக ஆளுநர் மாற்றம் 496
235. ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு 496
236. மண்டல் குழு பரிந்துரைகள் அல்ல 497
237. வைகோ பற்றி தலைமைச் செயலாளர் கடிதம் 498
238. தஞ்சை பொதுக்குழு மதிமுக உதயம் 504
239. வைரமுத்து கவிதை 504
240. சில மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் 505
241. ஆளுநர்கள் மாற்றம் 508
242. இந்திரா காந்தி கொலை வழக்கில் தீர்ப்பு 513

243. 356வது பிரிவு பற்றி முக்கிய தீர்ப்பு 514

244. ஜெ. மீது காங்கிரஸ் ஆளுநரிடம் ஊழல் புகார் 515

245. சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி அனுபவித்த வேதனைகள் 516

246. சாதிக், கோவை ஜானகிராமன் மறைந்தனர் 522

247. சமூக நீதிக்காக மீண்டும் போர்க்குரல் 524

248. சேஷன் புத்தகத்தில் அண்ணா பற்றி 532

249. சந்தனக் கடத்தல் வீரப்பன் 535

250. தமிழகத்தில் ஆளுநர்–முதல்வர் மோதல் 537

251. கி.ஆ.பெ. விசுவநாதம் மறைவு 539

252. இலங்கையில் குண்டு வெடிப்பு 540

253. ஜெயா காங்கிரஸ் 541

254. நிதிப் பற்றாக்குறை–ஜெ. புகார் 542

255. காவல்துறை அலுவலகம் இடிப்பா 543

256. கணக்கு கவியரங்கம் 543

257. சி.எஸ். ஜெயராமன் மறைவு 544

258. தஞ்சை உலகத் தமிழ் மாநாடு 545

259. சிறையிலிருந்து 9 பேர் தப்பினர் 549

260. அன்னை மேரியாக ஜெயலலிதா 550

261. பீகார், மணிப்பூரில் சட்டப் பேரவை தேர்தல் 551

262. டாக்டர் ராமதாஸ் கைது 553

263. ஆட்சியாளரின் வன்முறைத் தாக்குதல்கள் 555

264. ஆளுநரிடம் புகார் மனு 557

265. குன்றக்குடி அடிகளார் மரணம் 558

266. செயல்படாத பிரதமர் நரசிம்ம ராவ் 561

267. சட்டப்பேரவை செயலாளருக்கு பதவி நீடிப்பு 562

268. வழக்கறிஞர் சண்முகசுந்தரம் மீது தாக்குதல் 563

269. வளர்ப்பு மகன் திருமணம் 566

270. ஈழத் தமிழர்களுக்கான போராட்டம் 571

271. இந்திரா காந்தி கொலை வழக்கு தீர்ப்பு 574

272. ஜெ.–ரஜினிகாந்த் மோதல் 575

273. ஆர்.எம். வீரப்பன் பதவி பறிப்பு 576

274. தி.மு.க.–தேசிய முன்னணி உறவில் விரிசல் 577

275. விடுதலைப் புலிகள் தப்பினர் 581

276. தெலுங்கு தேசம் கட்சியில் பிளவு 581

277. சிலம்புச் செல்வர் மறைவு 584

278. விழுப்புரத்தில் பா.ம.க. நடத்திய மாநாடு 586

279. யாசர் அராபத் 588

280. திருச்சி தி.மு.க. மாநாடு 590

281. அதிமுக ஆட்சியின் ஊழல்கள் 595

282. நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தல் 598

283. த.மா.கா. உதயம் 602

284. தேர்தல் பிரச்சாரத் தொடக்க விழா 603

285. திரைப்படக் கலைஞர்கள் பாராட்டு விழா 604

286. திருக்குறள் உரை வெளியீட்டு விழா 608

287. அ.ச. ஞா., சங்கராச்சாரியார் பாராட்டு 609

288. தேர்தல் பிரச்சாரம் 617

289. வல்லநாடு சம்பவம் 618

290. போயஸ் தோட்டத்திலிருந்து புறப்பட்ட லாரி 619

291. தேர்தலில் மகத்தான வெற்றி 620

292. பதவியேற்பு விழா 621

293. மக்களவை தேர்தல் முடிவுகள் 622

294. புதுவையில் கழக ஆட்சி 624

295. சாதனைப் பட்டியல் 624

296. த.மா.கா. பிரிவு 626

297. நள்ளிரவில் கைது 628

298. ராமச்சந்திர ஆதித்தன் கண்டனம் 629

நெஞ்சுக்கு நீதி
நான்காம் பாகம்

நெஞ்சுக்கு நீதி மூன்று பாகங்களை எழுதி முடித்து வெளியிட்டு விட்டு, இப்போது நான்காம் பாகத்தை எழுத ஆரம்பிக்கிறேன். எனக்கு 77 வயது நிறைவுற்று 78ஆம் வயது நடைபெற்றுக் கொண்டிருக் கும் இந்தக் காலகட்டத்தில் என்னுடைய 64–வது வயதில் மூன்றாம் பாகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தேன்; ஏறத்தாழ இடையில் 14 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு மூன்றாம் பாகத்தில் விட்ட இடத் திலிருந்து இந்த நாலாம் பாகத்தைத் தொடங்குகிறேன்.

1924ஆம் ஆண்டு நான் பிறந்தது முதல் 1969 வரையில் முதல் பாகமும்,

1969 முதல் 1976 வரையில் இரண்டாம் பாகமும்,

1976 முதல் 1988 வரையில் மூன்றாவது பாகமும்,

தீட்டப் பெற்று, இந்த நாலாம் பாகம் 1989 முதல் அரும்புகிறது.

அரும்பு என்பதால் மலர் போன்று விரியும் என் வாழ்க்கை வரலாறு என்று யாரும் எண்ணிடக் கூடாது. மூன்று பாகங் களையும் படித்து முடித்தவர்களுக்குத் தெரியும்; முள்ளும், கல்லும், புதரும், காடும் நிரம்பிய பாதைதான் நான் பயணித்துக் கொண்டிருப்பது என்ற உண்மை!


போர்க்களத்தில் பாய்ந்து வரும் ஈட்டிகளும், அம்புகளும் நம்மீது முத்தமாரி பொழியும் என்றெண்ணுவது எத்துணை

பைத்தியக்காரத்தனமோ அதைப் போன்றதுதான் பொது வாழ்வில் நம்மீது பகைவர்கள் பனிமலர்களை அள்ளி வீசுவார்கள் என்று எதிர்பார்ப்பதுமாகும் என்பதை இத்தனையாண்டுக் கால அனுபவம் எனக்குக் கற்றுக் கொடுக்கத் தவறவில்லை.

இந்தியத் திருநாட்டில்- தமிழ் விளையும் தாய் நிலத்தில் - தஞ்சைத் தரணியில்- எங்கோ ஒரு மூலையில்- திருக்குவளை எனும் அழகிய சிற்றூரில்- அஞ்சுகத்தம்மை, முத்து வேலர்க்கு, ஒரு சாதாரண குடும்பத்துப் பிள்ளையாகப் பிறந்த நான்; பெரியார்க்கு மாணவனாவேன்; அண்ணாவுக்குத் தம்பியாவேன், ஆயிரம், லட்சம் என்று எண்ணற்ற உடன்பிறப்புக்களின் அன்புக்குரிய ஓர் உடன்பிறப்பாவேன் என்று நினைத்துப் பார்த்ததுகூட இல்லை! ஏன்; கனவுகூடக் கண்டதில்லை!

நான் காணாத கனவுகள்கூட உயிர்பெற்று பொது வாழ்வுக் கடலில் என்னைச் சுமந்து செல்லும் கட்டுமரங்களாக என் கண் எதிரே தோன்றியதையும் அவற்றில் நான் ஏறிச் சென்றதையும், கடல் அலையில் கட்டுமரங்கள் கவிழ்ந்து கவிழ்ந்து நிமிர்ந்ததையும் எண்ணிப் பார்த்திட அண்மையில் எனக்கோர் வாய்ப்பு கிடைத்தது.

கண்ணியமுடன் கடமையாற்ற வேண்டிய காவல்துறை அதிகாரிகள் ஆளவந்தார் இட்ட கட்டளைப்படி இல்லாத வழக்கொன்றை இட்டுக்கட்டி, செய்யாத குற்றத்துக்குச் சிறையில் அடைக்கிறோமென்று, நள்ளிரவில் வீட்டுக் கதவை நொறுக்கி - படுக்கையறையில் புகுந்து கைது செய்து, கை முடங்கிடும் அளவுக்கு அடித்து உதைத்து நகராட்சி வண்டிகளில் தெருநாயை அடித்துப் போட்டு இழுத்துச் செல்வார்களே அதுபோல, இழுத்துச் சென்று பூட்டி வைத்தனரே; அந்த ஐந்து நாட்கள் தன்னந்தனியனாக இருந்த போதுதான் இந்த நாலாவது பாகத்தை எழுதுவதற்கான சிந்தனை துளிர்த்தது. அன்று நடந்த நிகழ்ச்சி முழுவதையும் கண்ணீரும் செந்நீரும் சிந்திக் கிடக்கும் எழுத்துக்களை நிமிர்த்தி வைத்து விவரிப்பதற்கு இந்த நான்காம் பாகத்தின்



சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணியின்
தொடக்க விழாவில் கலந்து கொண்ட அரசியல் தலைவர்கள்.

இறுதிப் பகுதியில்தான் இயலும் என்பதாலும்; அதுதான் வரிசைப்படி அத்தியாயவாரியாக பொருத்தமாக இருக்கும் என்பதாலும்; இப்போது அதனை இத்துடன் நிறுத்துகிறேன். மீண்டும் தொடர்ந்து எழுதிடும் எண்ணம் ஏன் வந்தது? எப்போது வந்தது? என்பதற்காக மட்டுமே இந்த நிகழ்ச்சியைக் கோடிட்டுக் காட்ட வேண்டியதாயிற்று.

இந்த வரிகளைப் படிக்கும் என் உடன்பிறப்புகள் கலங்குவது என் மனக் கண்களுக்குத் தெரிகிறது. அந்தக் காட்சியைத் தொலைக்காட்சிகளில் இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளில் கூட பார்த்து விட்டுப் பதறிய உள்ளங் களின் உணர்வுகளை அறிந்து அவற்றையே என் மனக் காயங்களுக்கு மருந்தாக ஆக்கிக் கொண்டேன். ஆனால் அந்த நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு தமிழகத்தின் பல பகுதிகளைச் சார்ந்த 67 அன்புஉடன்பிறப்புகள் என் பொருட்டு உயிர் விட்டும் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டும் பலியானார்களே அதை மட்டும் என்னால் என்றும் மறக்க முடியாது.

இப்படி ஒரு கொடுமையான பகையை என்மீது கொட்டிட வேண்டுமென்று முடிவெடுத்துக் கொண்டு சிலர் 1988ஆம் ஆண்டே செயல்படத் தொடங்கிவிட்டனர். 1987 ஆம்

ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் முதல் அமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்த பிறகு ஜானகி அணி, ஜெயலலிதா அணி என இரு அணிகளாக அ.தி.மு.க. பிரிந்து; அண்ணா சொல்வாரே "சந்து முனை சிந்து பாடிகள்" என்று; அப்படி ஒரு அணியினரைப் பற்றி இன்னொரு அணியினர்; கேட்போர் காதுகளைப் பொத்திக் கொள்கிற அளவுக்கும் - படிப்போர், கண்களை மூடிக் கொள்கிற அளவுக்கும் காழ்ப்பு மொழி கச்சேரிகளை நடத்தினர்.

இதுபற்றி "நெஞ்சுக்கு நீதி" மூன்றாம் பாகம் 73-வது அத்தியாயத்தில் இயன்ற அளவு விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

மறுபடியும் அவற்றை நினைவுபடுத்தத் தேவையில்லை யென்றே கருதுகிறேன்.

அந்த இரு அணிகளின் இறுதிக் கட்ட நேரடி வன்முறை மோதுதல் 28-12-1988 அன்று சட்டப் பேரவையில் நடைபெற்ற போது, தங்கள் தங்கள் அணியின் பக்கம் ஆதரவு தந்து உதவிடுமாறு என் வீட்டுக்குப் பலர் படையெடுத்ததும்; எந்த அணிக்கும் எங்கள் எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கிடையாது என்று நாங்கள் அறிவித்து விட்டதும்; அப்போதே நாடறிந்த செய்தியாகும்.

பேரவையில் நடந்த பயங்கர அமளியைத் தொடர்ந்து மத்திய காங்கிரஸ் அரசு, தமிழக ஜானகி அணி ஆட்சியைக் கலைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப் படுத்தியது. 24 நாள் நடைபெற்ற ஜானகி அம்மையாரின் ஆட்சி முடிவுற்றது.


அது பற்றிச் செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, "கிரீடத்தை சூட்டி விட்டு, தலையை வெட்டி விட்டது போல, எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, "பாரதரத்னா" பட்டத்தை வழங்கி விட்டு, அவர் அமைத்த ஆட்சியை ராஜீவ் கலைத்து விட்டார்" என்று கூறினேன்.

ஜெயலலிதா, குடியரசுத் தலைவர் ஆட்சியை வரவேற்று அறிக்கை வெளியிட்டார். அவரது அணியில் அப்போது

இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் ஜானகி அம்மையார் ஆட்சி கலைக்கப்பட்டதை வரவேற்று, அவரை முதலில் முதல்வர் பதவி வகிக்க கவர்னர் குரானா அழைத்ததே தவறு என்று குறிப்பிட்டார். திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள், 9-1-1988 அன்று விடுத்த அறிக்கையில் அமைச்சரவை அமைத்திட ஜானகி அம்மையாரை கவர்னர் குரானா அழைத்தது சரி என்று கருத்தறிவித்தார்.

மத்திய அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜானகி அணியினரும் ஜெயலலிதா அணியினரும் ஒருவர் மீதொருவர் சேறு வாரி இறைத்த அறிக்கைப் போராட்டக் களங்களாகவே நாளேடுகளின் பக்கங்கள் விளங்கின. நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப் போன்ற முன்னணித் தலைவர்கள் ஜெயலலிதாவை ஆதரிப்பதும் எதிர்ப்பதுமான புதிய அணியொன்றை நடத்திக் கொண்டிருந்தனர். ஆதரிக்கும்போது அவரை உச்சந்தலையில் வைத்துக் கொண்டாடியும், எதிர்க்கும்போது காலில் போட்டு மிதித்து குப்பைத் தொட்டியில் வீசுவது போலவும் நாவலர் அவர்கள் அறிக்கை விட்டதும், அதே பாணியில் ஜெயலலிதா மறுப்பு அறிக்கை வெளியிட்டதும், அந்த நேரத்துத் தமிழக அரசியல் வரலாற்றில் தெளிந்த காவிரி யாற்றுக்குப் பதிலாக, கழிவு நீரோடைகள் தோன்றி மூக்கைத் துளைத்து நடுநிலையாளர்களின் மூளையையும் குழப்புவ தாகவே இருந்தது.

ஒரு மாநிலத்தில் ஓர் ஆட்சி இடையிலே கலைக்கப் பட்டால், கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் அடுத்த தேர்தலை நடத்துவதுதான் ஜனநாயக மரபு. ஆனால் தமிழகத்தில் 1988 ஜூலை திங்களுக்குள் முறைப்படி பொதுத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட வில்லை. கவர்னராக இருந்த குரானாவுக்குப் பதில் அலெக்சாண்டர் அவர்கள் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த



தேசிய முன்னணியின் தொடக்க விழாவை முன்னிட்டு சென்னையில் நடைபெற்ற பிரமாண்ட ஊர்வலத்தின் ஒரு பகுதியினர்.

ஒரே மாற்றத்தைத் தவிர, சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான எந்த சமிக்ஞையும் காட்டப்படவில்லை.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் அணியைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு அதற்கான அவகாசத்தைப் பெற்றிட; 1988 ஜூலை மாதத்திற்கு மேலாக குடியரசுத் தலைவர் ஆட்சியை கூடுதலாக ஆறு மாதங்களுக்கு நீட்டித்துக் கொள்ளப்பட்டது. அதன்படி 1989 ஜனவரி திங்களுக்குள் தேர்தலை நடத்தி முடித்திட வேண்டுமென்றாலுங்கூட, அதற்கு மேலும் கால நீட்டிப்பு செய்யலாமா என்று டெல்லி வட்டாரத்தில் காங்கிரசார் யோசித்துக் கொண்டிருந்தனர்.

அதனை அறிந்து கழகத்தின் பொதுக்குழுவை, 1988 நவம்பர் திங்களில் கூட்டி, தேர்தலை மேலும் தள்ளி வைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டித்தால் மாநிலம் தழுவிய அளவில் கழகம் போராட்டத்தை நடத்துமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தைப் பொதுக் குழுவில் எனதருமை நண்பரும் சிறுகதை மன்னரும் சிந்தாமணி

எனும் இயற்பெயரும் தென்னரசு எனும் புகழ்ப் பெயரும் கொண்டவருமானவர் முன் மொழிந்தார். தீர்மானத்தை வழி மொழிந்தவர் பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்து வைத்துக் கீர்த்தி பெற்ற சி.டி. தண்டபாணி அவர்களாவார்.

இத்தகைய அரசியல் சூழலில்தான் தி.மு.க., ஜனதா, லோக் தளம், ஜனமோர்ச்சா, காங்கிரஸ் (எஸ்), அசாம் கண தந்திர பரிட்சத், தெலுங்கு தேசம் ஆகிய ஏழு கட்சிகளின் முன்னணி யான "தேசிய முன்னணி" என்ற பெரியதோர் அமைப்பினை 6-8-1988 அன்று டெல்லியில் கூடி உருவாக்கியிருந்தோம். அதன் தலைவராக திரு. என்.டி. ராமராவும், அமைப்பாளராக திரு. வி.பி.சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தக் கூட்டத் தில் என் விருப்பத்தையேற்று "தேசிய முன்னணி" தொடக்க விழாவை செப்டம்பர் 16, 17 தேதிகளில் சென்னையில் நடத்துவதென முடிவாயிற்று.

தேசிய முன்னணியின் தலைமைக் குழு உறுப்பினர்கள் 11 பேரில் நானும் ஒருவனாக நியமிக்கப்பட்டேன்.

செயலாளர்களில் ஒருவராக முரசொலி மாறனும், பிரச்சாரக் குழு உறுப்பினர்களில் ஒருவராக வைகோவும் நியமிக்கப்பட்டனர்.

சென்னையில் செப்டம்பர் 17 அன்று நடைபெற்ற பிரம் மாண்டமான ஊர்வலத்தைக் கண்ட வி.பி. சிங், என்.டி. ராமராவ், தேவிலால், எஸ்.ஆர். பொம்மை, மகந்தா, பிஜு பட்நாயக், ஐ.கே. குஜரால், பர்னாலா, பீம்சிங், தத்தா சாமந்த், பகுகுணா, உன்னிகிருஷ்ணன், உபேந்திரா, அஜீத் சிங், ராம்தன் மற்றும் வட நாட்டுத் தலைவர்கள் தங்கள் வாழ்நாளில் இப்படியொரு மகத்தான பேரணியைக் கண்டதில்லை எனப் பாராட்டினார்கள்.

பட்டொளி வீசிக் காற்றில் படபடக்கும் கறுப்பு சிகப்பு வண்ணக் கொடிகளுடன் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இளைஞர்களின் அணிவகுப்பு அந்தப் பேரணிக்குப் புதிய கம்பீரத்தை அளித்தது.

கடற்கரையில் 30 லட்சம் பேர் கூடிய கடலை வெல்லக் கூடிய பொதுக்கூட்டத்தில் என்னுடைய உரையை முடிக்கும்போது குறிப்பிட்டதாவது :-

"பேரறிஞர் அண்ணா ஜெய்ப்பூர் பல்கலைக்கழகத்தில் ஒரு முறை பேசும்போது நான் பாரத முன்னேற்றக் கழகம் என்று பெரிய அளவில் கட்சியின் பெயரை மாற்றத் தயாரில்லை. ஆனால் அகில இந்திய அளவில் சில எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி ஒரு அமைப்பை உருவாக்குமேயானால், அந்த அகில இந்திய எதிர்க்கட்சிகளின் அமைப்பில் தி.மு.கழகம் இடம் பெறும்" என்று சொன்னார். அன்றைக்கு அண்ணா சொன்னதை இன்றைக்கு நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். நாற்பதாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் சுயமரியாதையை நிலைநாட்ட உருவாக்கப்பட்டதுதான் தி.மு.கழகம். மாநிலக் கட்சிகள் ஒரு காலத்திலே ஓரங்கட்டப்பட்டதுண்டு. மாநிலக் கட்சிகள், பிராந்திய கட்சிகள் என்றெல்லாம் பேசப்பட்டு, கேவலப்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டதுண்டு. ஆனால் இன்றைக்கு தேசிய முன்னணி என்ற ஆரத்தில் பதக்கங்களாக தெலுங்கு தேசம், அஸ்ஸாம் கண பரிஷத், தி.மு.கழகம் போன்றவைகள் எல்லாம் பளபளக்கின்ற காட்சியை நீங்கள் பார்க்கிறீர்கள். அதுதான் தேசிய முன்னணி.

இந்தியாவினுடைய சரித்திரத்தை எழுதியவர்கள் ஒரு தவறு செய்து விட்டதாக வின்ஸ்டன் ஸ்மித் என்ற வரலாற்றுப் பேராசிரியர் சொன்னார். இந்தியாவின் சரித்திரம் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்? அது காவேரி தீரத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றார்.

ஆனால் அன்றைக்கு யாரும் அதை எழுதவில்லை. இன்றைக்கு நாம் எழுதுகிறோம். தென்னகத்திலிருந்து சரித்திரத்தை எழுதுகிறோம். இந்தச் சரித்திரம் - அரசியல் சரித்திரம். இந்த அரசியல் சரித்திரத்தை நாம் வெற்றிகரமாக எழுதி முடிப்போம். இது ஏதோ ராஜீவ் காந்தியின் ஆட்சியை அப்புறப்படுத்துவதற்காக அல்ல. காங்கிரஸ் ஆட்சியை நீக்குவதற்காக அல்ல. கள்ளிக் காட்டை அழிப்பது கள்ளிக் காட்டின் மீதுள்ள கோபத்தால் அல்ல. அங்கே ஒரு

நந்தவனத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக! நாடு வாழ- நலிவு தீர- உண்மையான கூட்டாட்சித் தத்துவம் மலர- மாநிலங்கள் உரிமையோடு வாழ- உறவுக்குக் கை கொடுக்க- உரிமைக்குக் குரல் கொடுக்க- அந்தந்த மொழிகளும் மத்திய ஆட்சியில் சம அந்தஸ்து பெற- பொருளாதாரத்திலே ஒரு தலைகீழ் மாற்றத்தைச் செய்ய- இந்த நாட்டிலே உள்ள பொருளாதாரம் வெளிநாட்டு வங்கிகளில் முடங்கிக் கிடக் கின்றதே, அதை மாற்றியமைக்க- இந்த முன்னணி பணியைத் தொடங்குகின்றது."

நள்ளிரவு 1.45 மணிக்கு என்னுடைய பேச்சைத் தொடங்கி, 2.20 மணிக்கு முடித்தேன். மாலை 5 மணிக்கு மெரினா கடற்கரைக்கு வந்து அமர்ந்த மக்கள் அதே இடத்தில் 10 மணி நேரம் அமர்ந்திருந்து வரலாறு படைத்தனர்.

1988-ஆம் ஆண்டு முடிவடையவிருந்த டிசம்பர் திங்களில் அனைத்துக் கட்சிகளும் பொதுத் தேர்தலுக்கான பணிகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தன. கழகமும் அந்தப் பணியிலே ஈடுபட்டு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க நேர்காணலில் ஈடுபட்டிருந்த நேரத்தில் 17-ந்தேதியன்று நான் எழுதிய பொன்னர் சங்கர் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

டாக்டர் நன்னன் தலைமையில் பொதுச் செயலாளர் பேராசிரியர் நூலினை வெளியிட முதல் பிரதியை டாக்டர் வா.செ. குழந்தைசாமி பெற்றுக் கொண்டார். சிலம்பொலி செல்லப்பன், நன்னியூர் ராஜேந்திரன், சக்திக்கனல் ஆகி யோர் வாழ்த்துரை வழங்கினர்.

கழக வேட்பாளர்களின் முதல் பட்டியல் 18-12-1988 அன்றும்- இரண்டாவது பட்டியல் 21-12-1988 அன்றும் - மூன்றாவது பட்டியல் அதே 21-ந்தேதி மாலையிலும் வெளியிடப்பட்டது. அந்தத் தேர்தலில் தி.மு.கழகம் 198 இடங்களிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 21 இடங் களிலும், ஜனதாதளம் 10 இடங்களிலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 5 இடங்களிலும் போட்டியிட்டன. அந்தத் தேர்தலில் நான் துறைமுகம் தொகுதியிலிருந்தும், பொதுச்

செயலாளர் பேராசிரியர் அண்ணாநகர் தொகுதியிலிருந்தும் போட்டியிட்டோம். கழகத்தின் தேர்தல் அறிக்கையை 30-12-1988 அன்று வெளியிட்டு விட்டு 1-1-1989 முதல் 19-1-1989 வரை கடுமையான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன்.

சோவியத் குடியரசின் ஆர்மேனிய மாநிலத்தில் காகஸஸ் மலைத் தொடர் பகுதியில் 7-12-1988 அன்று ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். பல கிராமங்கள், நகரங்களிலிருந்த கட்டிடங்கள் இடம் தெரியாமல் தரை மட்டமாகி விட்டன. 80 ஆண்டு காலத்தில் இது போன்ற பூகம்பம் ஏற்பட்டதே இல்லையென டாஸ் செய்தி நிறுவனம் அறிவித்தது. அப்போது அமெரிக்கா சென்றிருந்த சோவியத் அதிபர் கார்பசேவ் தனது பயணத்தை ரத்து செய்து விட்டு உடனடியாக நாடு திரும்பினார்.

1989-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகம் 146 இடங்களிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 15 இடங்களிலும், ஜனதா தளம் 4 இடங்களிலும், முஸ்லீம் லீக் 4 இடங்களிலும், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் 1 இடத்திலுமாக தி.மு.க. அணி மொத்தம் 170 இடங்களிலும், ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. 27 இடங்களிலும், காங்கிரஸ் கட்சி 26 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களிலும், தமிழக ஜனதா 2 இடங்களிலும், ஜானகி அம்மையார் தலைமையிலான அ.தி.மு.க.1 இடத்திலும், மற்றவர்கள் 3 இடத்திலுமாக வெற்றி பெற்றன.

வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட அதே நேரத்தில் தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், கழகத்தின் வெற்றிக்காக தமிழகத்திலே சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரச்சாரம் செய்த ஆந்திர முதல்வரும், தெலுங்கு தேசக் கட்சியின் தலைவருமான என்.டி. ராமராவ், தேசிய முன்னணியின் அமைப்பாளர் வி.பி. சிங், ஜனதா தளக் கட்சித் தலைவர்களில் ஒருவரான அஜித் சிங், அரியானா மாநில முதல்வர் தேவிலால், மேற்கு வங்க முதல்வர்

ஜோதிபாசு, கர்நாடக முதல்வர் எஸ்.ஆர்.பொம்மை மற்றும் ஜார்ஜ் பெர்னாண்டஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உபேந்திரா, மதுதண்டவதே, ஜேத்மலானி ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

தேர்தல் வெற்றிக்குப் பிறகு நான் விடுத்த செய்தியில் - "தங்களுக்குப் பணியாற்றுவதற்காக தமிழ் மக்கள் தெளிவான தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். இந்த வெற்றியை அமைதியாகவும் அடக்கமாகவும் ஆர்ப்பாட்டமின்றியும் கொண்டாட வேண்டுகிறேன். யாருடைய மனமும் புண்படக் கூடிய அளவிற்கு தயவுசெய்து எத்தகைய நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டேன்.



மீண்டும் மீண்டும் ஆட்சி பொறுப்பு
தொண்டு வந்த பொழுது கருணாநிதியையே

தமிழகம்

திமுக - 1967 - 1971 - 137 - seats.

DMK - 1971 - 1976 - 184 - seats.

bmk - 1977 - 1980 - 48 - seats.

DMK - 1980 - 1984 - 37 - seats


DMK - 1984 - 1989 - 24 seats

2 இவர் காட்டிய அன்பும் அவர் காட்டிய பண்பாடும்!

கழகத்தின் வெற்றி பற்றி நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டிய போதிலும் "33. 44 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற்ற தி.மு. கழகம் ஆட்சியில் அமரலாமா" என்ற கேள்வியை இந்திரா காங்கிரஸ் கட்சியினர் எழுப்பினார்கள். அதற்குப் பதிலளித்த போது, 1961ஆம் ஆண்டு டிசம்பரில் கோவையில் நடைபெற்ற கழக மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இந்தியாவிற்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை வேண்டுமென்று கூறியிருந்ததைச் சுட்டிக் காட்டினேன். அந்த முறை கடைப்பிடிக்கப்பட்டால், தனிப்பட்டவர்கள் தேர்தலிலே போட்டியிட்டு, ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கக் கூடிய வாக்குகளின் சதவிகித அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்படும். உதாரண மாக ஒரு கட்சி 30 சதவிகித வாக்குகளைப் பெறுமேயானால் அந்தக் கட்சி சட்டமன்றத்திற்கு 30 சதவிகித உறுப்பினர் களை அனுப்பலாம். இந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஆஸ்திரியா, பெல்ஜியம், சைப்ரஸ், டென்மார்க், பின்லாந்து, ஜெர்மனி, கிரீஸ், அயர்லாந்து, லக்ஸம்பர்க், மால்டா, மொனாக்கோ, நெதர்லாந்து, நார்வே, போர்த்துக்கல், ஸ்பெயின், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து, பல்கேரியா, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, ரஷ்யா (50 சதவிகிதம்), இஸ்ரேல், கம்போடியா, இந்தோனேசியா, ஜப்பான், ஆஸ்திரேலியா (50 சதவிகிதம்), நியூஸிலாந்து, அங்கோலா, மடகாஸ்கர், செனகல், தென்னாப்பிரிக்கா, கயானா,

மெக்சிகோ, பனாமா, அர்ஜண்டினா, பிரேசில், சிலி, பெரு, வெனிசுலா போன்ற நாடுகளிலே அமுலிலே உள்ளது.

இந்த முறையைப் பின்பற்றினால் மொத்தத்தில் அதிக சதவிகிதம் வாக்குகளைப் பெற்ற கட்சி குறைந்த இடங்களிலும், குறைந்த சதவிகித வாக்குகளைப் பெற்ற கட்சிகள் அதிக இடங்களிலும் மன்றங்களுக்கு வர முடியாது என்பதை விளக்கியதுடன், தமிழ்நாட்டில் 1952 சட்ட மன்றத் தேர்தலில் 35 சதவிகித அளவிற்கு வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் 152 இடங்களையும், மற்ற தேர்தல்களில் கூட அவ்வாறே குறைந்த சதவிகித வாக்குகளைப் பெற்ற கட்சிகள் அதிக இடங்களைப் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டதையும் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டி, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில்தான் உண்மையான ஜனநாயகம் ஒளிவிட முடியும் என்றும் கூறினேன்.



1989–ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு தேசிய முன்னணியின் அமைப்பாளர் வி.பி.சிங் வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம். அருகில் முரசொலி மாறன் உள்ளார்.

1989 சட்டமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் ஜனவரி 22ஆம் நாள் வந்ததையொட்டி ஜனவரி 25 அன்று தி.மு.க. சட்டமன்றக் கட்சிக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. அப்போது கோவை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த மு.கண்ணப்பன் தலைமையில் சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தல் நடைபெற்று தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனார் முன்மொழிய, பொருளாளர் சாதிக் பாட்சா வழி மொழிந்திட, என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து தமிழக ஆளுநர் அலெக்ஸாண்டரைச் சந்தித்து என்னையும் சேர்த்து 17 பேர் கொண்ட அமைச்சரவைப் பட்டியலை அளித்தேன்.

அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்கள் வருமாறு:-

பேராசிரியர் அன்பழகனார், சாதிக் பாட்சா, நாஞ்சிலார், மு.கண்ணப்பன், கே.பி.கந்தசாமி, கோ.சி.மணி, ஆர்க்காடு வீராசாமி, பொன்.முத்துராமலிங்கம், வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், சுப்புலட்சுமி ஜெகதீசன், டாக்டர் ராம கிருஷ்ணன், பொன்முடி, கே.என். நேரு, சந்திரசேகரன், ச. தங்கவேலு.

ஜனவரி 27 அன்று நானும் அமைச்சர்களும் ஆளுநர் அலெக்ஸாண்டர் அவர்கள்முன் பதவிப்பிரமான உறுதி மொழி எடுத்துக் கொண்ட மாபெரும் விழா சென்னை வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்றது. அந்த விழா நிகழ்ச்சிக்கு தேசிய முன்னணி அமைப்பாளர் வி.பி.சிங், ஆந்திர முதல்வர் என்.டி.இராமராவ், கர்நாடக முதல்வர் எஸ்.ஆர். பொம்மை, கேரள முதல்வர் இ.கே. நாயனார், அஜீத்சிங், உபேந்திரா, ராம் விலாஸ் பஸ்வான் ஆகிய வெளி மாநிலத் தலைவர்கள் வந்திருந்தனர்.

அன்று மாலை சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில், அன்று வள்ளுவர்

கோட்டத்தில் பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற வெளி மாநிலத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

உள்ளத்தில் ஊறிக்கிடந்த உணர்வுகளை ஒளிவு மறை வின்றி அந்தக் கூட்டத்தில் உணர்ச்சிமயமாக வி.பி.சிங் வெளிப்படுத்தினார். அவரது பேச்சின் சுருக்கமாக ஒரு பகுதி, வருமாறு:-

"இன்று காலையில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று, கலைஞர் கருணாநிதி முதல்வராகப் பதவியேற்றிருக் கிறார். வள்ளுவர் கோட்டத்துக்கு அடிக்கல் நாட்டி, அந்தக் கோட்டத்தைக் கட்டி முடித்த கலைஞர் கருணாநிதி அவர்களை அதன் திறப்பு விழாவுக்கு அழைக்காதது மாத்திரமல்ல; அவர் நாட்டிய அடிக்கல்லையும் 13 ஆண்டுகளுக்கு முன்பு தூக்கி எறிந்தார்கள்.

அவ்வாறு கலைஞர் நாட்டிய அடிக்கல்லை அப்புறப்படுத்தியவர்கள், தமிழ் மக்களின் இதயங் களிலே அவர் அடிக்கல் நாட்டியிருக்கிறார் என்பதை யும், அதனை எந்தக் காலத்திலும் எந்தச் சக்தியும் அப்புறப்படுத்த முடியாது என்பதையும் ஏனோ அறியவில்லை.

13 ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள், பாண்டவர்கள் குரு க்ஷேத்திரப் போர்க்களத் திற்கு வந்தது போல வந்து, அடிக்கல்லை அகற்றியவர் களுக்குச் சரியான பாடம் கற்பித்திருப்பதோடு, எந்த வள்ளுவர் கோட்டத்தை அவர் உருவாக்கினாரோ; அந்தக் கோட்டத்துக்குள்ளேயே வந்து பதவிப் பிரமா ணம் எடுத்திருக்கிறார். இந்த வெற்றி இந்தியாவுக்கே வழிகாட்டுகிற வெற்றி."

தேசிய முன்னணியின் அமைப்பாளரும் அகில இந்திய அளவில் மட்டுமில்லாமல் அனைத்து நாடுகளிலும் ஒளி

பரப்பியவாறு புகழ் மலையின் உச்சியில் ஏறிக் கொண்டிருந்த தேசத் தலைவர்களில் ஒருவராக அடையாளம் காட்டப் பட்டவருமான திரு.வி.பி.சிங் அவர்களின் அந்த உரை கேட்டு, கடற்கரை மணற்பரப்பில் தேனடை போல் திரண்டிருந்த தமிழ்ப் பெருமக்களும், களம் பல கண்ட காளையராம் கழகத்து உடன்பிறப்புக்களும் மெய்சிலிர்த்துக் கையொலி எழுப்பி, வானத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதித்த காட்சி: வாழ்நாளில் சில நேரங்களில்தான் வாய்க்கும்.

1989 ஜனவரியில் நடைபெற்ற இந்த நன்றியறிவிப்புப் பொதுக் கூட்டத்தில் வி.பி.சிங் கலந்து கொண்ட போது அவர் இந்தியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதே ஆண்டு டிசம்பர் திங்களில்தான் அவர் இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்றார். அவர் பிரதமராக இருந்த போதும்; அந்தப் பதவியில் அமர்வதற்கு முன்பு எத்தகைய கொள்கை உறுதிப்பாட்டுடனும் மனிதநேயப் பண்புடனும்; குறிப்பாக என் போன்றோரிடம் கொண்டிருந்த நட்புக்கு எள் முனையளவு குறைவுமின்றி இருந்து வந்தாரோ; அதிலே எந்த மாற்றமுமின்றி-மகுடத்திற்குத் தனிப்பெருமை வந்துவிட்ட தாகக் கருதாமல்; எளியவராகவும், இனியவராகவுமாகத்தான் திகழ்ந்தார்.

அவரது ஆட்சியில் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த நன்மை கள் பல எனினும்; சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் முதலமைச்சராக இருந்த என் வேண்டுகோளை ஏற்று நீண்ட காலக் கோரிக்கையாக இருந்த காவேரிப் பிரச்சினைக்கு 1990 ஆம் ஆண்டு நடுவர் மன்றத்தை அமைத்துக் கொடுக்கக் காரணமாக இருந்தவர் அவர்!

மண்டல் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மத்திய அரசுக்கு அளிக்கப்பட்ட பிற் படுத்தப்பட்டோர் நலனுக்கான மண்டல் கமிஷன் அறிக்கை; பல்லாண்டு காலமாகக் கிடப்பிலே போடப்பட்டிருந்ததை எடுத்து தூசி தட்டி, இந்தியா முழுமையுமுள்ள பிற்படுத்தப் பட்ட மக்கள் நலனுக்காக நடைமுறைப்படுத்தும் நிலையை உருவாக்கிட ஆணை பிறப்பித்தவர் அவர்! அதன் விளைவாக,

அவரும், நானும் கொடுத்த விலை மிக அதிகம்! அதனைப் பிறகு விவரிக்கிறேன்.

அவரது இதயம் எத்தகையது என்பதற்கு; அவர் இந்தியப் பிரதமராகவும், நான் தமிழக முதல்வராகவும் இருந்த காலத்தில் 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இப்போது நினைவு படுத்தாமல் என் பேனா நகர மறுப்பதால்; அந்தப் பாசமும், பரிவும், உணர்வும், உருக்கமும் மிகுந்த நிகழ்ச்சியைச் சில வரிகளில் குறிப்பிடு கிறேன்.

பிரதமர் வி.பி.சிங் அவர்கள் அந்தப் பதவிப் பொறுப்பை ஏற்ற பின்னர் எனது அழைப்பின் பேரில் சென்னை நிகழ்ச்சி யொன்றுக்கு வருகிறார். அந்தச் சமயம் என் நண்பர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தேர்தல் நேரத்தில் தனது தலைமையில் இயங்கிய தமிழக முன்னேற்ற முன்னணி கட்சியைக் கலைத்துவிட்டு, தேசிய முன்னணியில் இணைந் திருந்தார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஜனதா தளத் துடன் சேர்ந்து, தமிழக ஜனதா தளக் கட்சியின் தலைவரு மானார். எனவே அவரது வேண்டுகோளையேற்று பிரதமர் வி.பி.சிங் அவர்கள் ஜனதா தளம் சார்பில் ஏற்பாடு செய் திருந்த ஒரு நிகழ்ச்சிக்குப் புறப்பட்டார். அந்த நிகழ்ச்சியை முடித்து விட்டு, நானும் பிரதமரும் கலந்து கொள்கிற நிகழ்ச்சிக்கு வருவதாக ஏற்பாடு.

சிவாஜி ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிக்கு பிரதமர் அவர்களும் சிவாஜியும் என்னை வலியுறுத்தி அழைத்ததின் பேரில் நானும் அவருடன் சென்றேன்.

சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சி யில் தமிழக ஜனதா தள நிர்வாகிகளும், தொண்டர்களும், ஏராளமான சிவாஜி ரசிகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அண்மையில்தான் நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் தேசிய முன்னணியுடன் உறவு கொள்ளத் தொடங்கியிருந்த தால் அந்த அரசியல் மாற்றத்தை சரிவரப் புரிந்து கொள்ளாத காரணத்தாலோ; அல்லது யாரோ சிலர் தூண்டிவிட்டோ;

அந்த விழாவில் நான் பேசத் தொடங்கியதிலிருந்து பேச்சை முடிக்கும் வரையில் சிலர் எதிர்ப்புக் கூச்சல் எழுப்பிக் கொண்டே இருந்தனர். சிவாஜி அதனைத் தடுக்க முனைந்தும் அந்த ரசிகர்கள் கட்டுப்படவில்லை. பிரதமர் கலந்து கொள்கிற ஒரு நிகழ்ச்சியில் அசம்பாவிதம் துளியும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக; அவர்களை அடக்கப் பாய்ந்த போலீசாரை எச்சரித்து அமைதிப்படுத்தி; நான் என் பேச்சைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, வி.பி.சிங் அவர்கள் பேசுவதற்கு வழி விட்டேன். மேடையிலிருந்தவாறே நடந்த வைகளைப் புரிந்து கொண்ட அவர், மிகுந்த உணர்ச்சிவசப் பட்டவராக அங்கு பேசுவதற்கே தயக்கம் காட்டி மறுத்து விட்டார். பிறகு நான் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதின் பேரில்; சில நிமிடங்கள் மட்டுமே உரையாற்றிவிட்டு, அந்த ரசிகப் பெருமக்களில் சிலரின் செயலுக்குத் தனது வருத்தத் தையும் கண்டனத்தையும் தெரிவித்துவிட்டு; நான் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள என்னுடன் புறப்பட்டார்.

பிரதமருக்காக தி.மு.க. தேசிய முன்னணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கடற்கரைப் பாராட்டுக் கூட்டத்திற்குச் செல்லும் வழியில், திடீரென வி.பி. சிங் அவர்கள் என்னைப் பார்த்து, "முதலில் உங்கள் வீட்டுக்குச் செல்லலாம்" என்றார். அவருடன் என் காரில் வந்த அவரது செயலாளர்களில் ஒருவர்; "இல்லை! கவர்னர் மாளிகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது; அங்கே போய் விட்டு அங்கிருந்து கடற்கரை கூட்டத்துக்குச் செல்ல சரியாக இருக்கும்" என்றார்.

உடனே வி.பி.சிங் அவர்கள் சற்றுக் கடுமையாக உரத்த குரலில்; அந்தக் குரலும் தழுதழுத்திட "இல்லை! இல்லை! முதலமைச்சர் வீட்டுக்கே போகிறோம்!" என்று முடிவாகக் கூறவே; கார் என் வீட்டுக்கே சென்றது.

காரிலிருந்து இறங்கியதும் என் வீட்டுக்குள் நுழைந்த வி.பி.சிங் அவர்கள் என்னுடன் மாடி அறைக்கு வந்து: "மிகவும் வருந்துகிறேன். பெரியார் திடல் நிகழ்ச்சியில் நடந்த, அந்த விரும்பத்தகாத சம்பவத்துக்காக நான் மன்னிப்புக்



புதுடெல்லியில் இலங்கைப் பிரச்னை குறித்து பிரதமர் ராஜீவ்காந்தியுடன் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆலோசனை நடத்திய காட்சி.

கேட்டுக் கொள்கிறேன். அநாகரீகமாக சில பேர் நடந்து கொண்டது என் நெஞ்சுக்கு நிரம்ப வலியை ஏற்படுத்தி விட்டது" என்றவாறு என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். அவர் கண்களில் இருந்து பொலபொலவெனக் கண்ணீர் கொட்டியது. என்னை ஆறுதல் படுத்துவதற்காக அதிகார பூர்வமான நிகழ்ச்சி நிரல் இன்றி; திடீரென என் வீட்டுக்கு வந்துவிட்ட பிரதமர் வி.பி. சிங்கை; நான் ஆறுதல் சொல்லி அமைதிப்படுத்த வேண்டியதாயிற்று.

வீட்டிலிருந்து நேரே கடற்கரை மேடைக்குச் சென்றோம். செல்லும் வழியில் பிரதமர் அவர்களும் நானும் அண்ணா சதுக்கம் சென்று: அன்று பிப்ரவரி 3 அண்ணா நினைவு நாளையொட்டி மலரஞ்சலி செலுத்தினோம்.

அடுத்து நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்திற்கு தமிழக ஜனதா தளத் தலைவராக இருந்த நடிகர் திலகம் சிவாஜியும் வந்திருந்தார். அவரும் பிரதமர் வி.பி. சிங்கைப் பாராட்டி, வரவேற்று, வாழ்த்திப் பேசினார்.

பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டி பதிலுக்கு இந்த நிகழ்ச்சியில் ஏதாவது சலசலப்பு ஏற்பட்டு விடுமோ என்று வி.பி.சிங் கவலையுடன் எதிர்பார்த்தார். எனினும்; கழக உடன்பிறப்புகள் காட்டிய கண்ணியத்தையும்-கட்டுப்பாட்டுணர்வையும் கண்டு; மிகவும் வியப்புற்று, என்னிடம் மனம்விட்டுப் பாராட்டினார்.

அந்தக் கூட்டத்தில்தான் பேசும்போது, சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலையங்களுக்கு அண்ணா பெயரும், காமராஜர் பெயரும் சூட்ட வேண்டுமென்று பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தேன்.

உடனடியாக பிரதமர் வி.பி.சிங் அவர்கள், மேடைக்குச் சற்றுத் தொலைவில் பிரதமருக்காக பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருந்த (Hot Line) தொலைபேசியில் டெல்லிக்குத் தொடர்புகொண்டு; தொடர்புடைய அதிகாரிகளிடம் பேசினார்.

பின்னர், மேடைக்கு வந்து உரையாற்றினார். உரை நடுவே சென்னையில் உள்ள உள்நாட்டு விமான தளத்துக்கு காமராஜர் பெயரும்; வெளிநாட்டு விமான தளத்துக்கு அண்ணா பெயரும் சூட்டப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின் அடையாளச் சின்னங்களாக மட்டுமல்ல; வி.பி. சிங் அவர்களின் விரைந்து முடிவு எடுக்கும் செயலின் அடையாளமாகவும் அந்த இரண்டு பெயர்களும் என்றைக்கும் அந்த விமான நிலையங்களின் முகப்பில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும்.

மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அதே 1989ஆம் ஆண்டில் தான்; இப்போது இந்த நான்காம் பாகத்தை எழுதும்போது அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருக்கும் புஷ் அவர்களின் தந்தை ஜார்ஜ் புஷ் அவர்கள் அமெரிக்காவின் 41வது ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

தமிழகத் தேர்தல் நடைபெற்ற அதே காலகட்டத்தில் மிஜோரம், நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அதே சமயம் மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் இந்திரா காங்கிரசின் மேலிடத்தை எதிர்த்து அக்கட்சியின் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிளர்ச்சி செய்தனர்.

ஒரு லாட்டரி ஊழல் வழக்கில் மத்தியப் பிரதேச முதல மைச்சர் அர்ஜுன் சிங்கின் மீது மாநில உயர்நீதிமன்றம், கண்டனம் தெரிவித்ததையொட்டி, அவர் பதவி விலக வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் மேலிடம் கட்டளை யிட்டது. அவர் பதவி விலகிய போதிலும் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் அவரது ஆதரவு நிழலிலேயே இருந்தனர். எனவே மேலிடத்திலிருந்து பூடாசிங்கும், பொத்தேதாரும் மத்தியப் பிரதேசத்துக்குச் சென்று, சமரசம் பேசி மோதிலால் வோரா என்பவரை முதல்வராக ஆக்கினார்கள்.

தமிழகத்தில் கழக அமைச்சரவையின் முதல் கூட்டம் பிப்ரவரி முதல் நாளே (1989) நடைபெற்று... அரசு, மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களிலும் உள்ளாட்சித் துறையிலும் ஏற்படும் காலி இடங்களில் 30 சதவிகித இடம் பெண்களுக்கே என்றும், ஆரம்பப் பள்ளிகளில் 1வது 2 வது வகுப்பு ஆசிரியர்களாக பெண்களையே நியமிக்க வேண்டு மென்றும் முடிவெடுக்கப்பட்டது.

1989 பிப்ரவரி 5ஆம் நாள் புதிய சட்டப் பேரவை கூடியது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற் றனர். 6-2-89 அன்று தலைமைச் செயலக அலுவலர் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு, பழிவாங்கும் மனப்பான்மை கழக அரசிடம் கிடையாது என்றும், வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த அலுவலர்க்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்கப்படு மென்றும் அறிவித்தேன்.

8-2-89 அன்று நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில் பேரவைத் தலைவராக முனைவர் தமிழ்க்குடிமகன் தேர்ந் தெடுக்கப்பட்டார். அவர் மதுரை யாதவா கல்லூரியின் முதல்வராக இருந்து என்னிடம் நிறைந்த அன்பு கொண் டிருந்தவர். அவர் இந்தப் பொறுப்புக்கு வரவேண்டுமென்று நானே விரும்பி அழைத்து அவர் இளையான்குடி தொகுதி யில் வென்று, பேரவைத் தலைவரானார். பேரவையின் துணைத் தலைவராக நாமக்கல் துரைசாமி தேர்ந்தெடுக்கப் பட்டார். சட்டப்பேரவையில் எனது பாராளுமன்ற செயலாளராக எல். கணேசன் நியமிக்கப்பட்டார்.

9-2-89 அன்று டெல்லியிலே நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டிலே கலந்து கொள்ளவும், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மரியாதை நிமித்தமாக பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்திக்கவும் டெல்லி சென்றேன். நான் எதிர்பார்த்ததற்கு மாறாக பிரதமருடனான சந்திப்பு மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்ததோடு, பிரதமர் ராஜீவ் அவர்கள் என்னிடம் இலங்கைப் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் விளக்கமாகப் பேச வேண்டுமென்றும் நான் இரண்டு நாட்கள் டெல்லியில் தங்கிச் செல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பொதுத் தேர்தல் தமிழ்நாட்டில் நடந்தபோது தி.மு.க.வை எதிர்த்து தேர்தல் பிரச்சாரத்தை மிகக் கடுமையாகச் செய்த ராஜீவ் காந்தியா; நம்மோடு இவ்வளவு அன்புடன் பழகுகிறார் என்ற திகைப்புடனும், வியப்புடனும், நேரு குடும்பத்தின் பண்பாடு இது என்ற நினைப்புடனும் நான் அவர் கூறியவாறு மேலும் இரண்டு நாட்கள் டெல்லியில் தங்கிச் செல்வதற்கு ஒப்புதல் அளித்தேன். இலங்கைத் தமிழர் பிரச்சினை சுமுகமாகத் தீர்வதற்கு ஏதாவது பெரிய அளவில் வழி பிறக்காதா என்ற நம்பிக்கை வேறு ஏற்பட்டதால் அவர் சொன்னதை உடனடியாக ஏற்றுக்கொண்டேன்.

3 ஈழப் பிரச்சினையில் ஒரு திருப்பம்


கடந்த அத்தியாயத்தில் நேரு குடும்பத்தின் பண்பாடு என பிரதமர் ராஜீவ் காந்தி குறித்து எழுதியதைத் தொடர்ந்து, இந்த அத்தியாயத்தைத் தொடங்கும் பொழுது நேருவின் 113-வது பிறந்த நாள் நவம்பர் 14-ஆம் தேதி என்பதும் 2001-ஆம் ஆண்டு இந்த நான்காம் பாகம் நான் எழுதும் போதும் அதே நாள் (நவ. 14) என்பது பொருந்தி வருவதும் வியப்புக்குரியதாகவும் மனநிறைவு தருவதாகவும் இருக்கிறது. 31 ஆண்டுகளுக்கு முன்பு 14.11.1970 நேரு பிறந்த நாளன்று சென்னையில் "நேரு கண்ட ஜனநாயகம்" எனும் தலைப்பில் என் தலைமையில் நடைபெற்ற கவியரங்கம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தக் கவியரங்கில் கவிஞர்கள் கண்ணதாசன், அப்துல்ரகுமான், எஸ்டி.சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, முருகுசுந்தரம் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டி நூற்றுக்கணக்கானோர் குதிரைப் படையின் தாக்குதலுக்கு ஆளாகிற அளவுக்கும், மொய்தீன் பிச்சை என்ற கழகத் தொண்டர் மாண்டு போகிற நிலைமைக்கும் - நேரு அவர்களுக்கும் தி.மு.கழகத்திற்கும் அரசியல் ரீதியான கருத்து மோதுதல் இருந்த போதிலும்; நாட்டு விடுதலைக்காகத் தியாகப் போரில் ஈடுபட்ட தலைவர்கள் எக்கட்சியினராயினும் அவர்களிடத்திலே மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்க வேண்டும் என்ற கண்ணிய மிக்க கலாச்சாரத்தைக் கடைப்பிடிக்கும் தலைமை இந்தக் கழகத்தின் தலைமை என்பதால்; அண்ணா வகுத்த அந்த

வழியில் பண்டித நேருவின் தியாக வரலாற்றின் மீது எனக்கு அசைக்க முடியாத பற்று உண்டு.

அதனை 1970-ல் நான் தலைமையேற்ற கவியரங்கத்தி லேயே விரிவாகப் பாடியிருக்கிறேன். அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் நினைவுபடுத்துகிறேன்.

"மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடிபறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்
அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக் கொள்ள
அண்ணல் வகுத்தவழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
எண்ணையிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம் எனினும்
எண்ணையிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்.
பணமலைக்கிடையே பிறந்தார் எனினும் ஏழையை
அணைக்கும்
குணமலையாய்த் திகழ்ந்தார் என்போம்.
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்;
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்!



டெல்லியில் செய்த்யாளாகள் கூட்டத்தில

இடி இடிக்கும் பேச்சில் – இளமை
துடி துடிக்கும் எழுத்தில் – தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் – அதிர்
வெடி முழக்கும் செயலில் – விடாப்
பிடியிருக்கும் குணத்தில் – விடுதலைக்
கொடியிருக்கும் கையில் – கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்''

அத்தனை ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் மாறுபாடு கடந்து நேருவின் மீது நான் கொண்டிருந்த அந்த மரியாதையின் தொடர்ச்சியாகத்தான்; அந்தப் பாரம்பர்யத் தில் வந்த அவரது பேரன் ராஜீவ் காந்தியின் பண்பாடும் என்னைக் கவர்ந்தது எனலாம்.


ஒரு முதலமைச்சர், ஒரு பிரதமரை மரியாதை நிமித்தம் சந்திப்பது - அதுவும் இருவேறு கட்சிகளின் தலைவர்கள் என்கிற போது; அந்தச் சந்திப்பு மரியாதை அளவில் ஒரு சில நிமிடங்கள்தான் நீடிக்கும். ஆனால் ராஜீவ் காந்தி அவர் களோ; ஈழத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசவேண்டும்; அதற்கு வாய்ப்பாக டெல்லியிலே நான் மேலும் இரண்டு நாள் தங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஈழத் தமிழர் பிரச்சினையில் ஒரு திருப்பம் ஏற்படக்கூடும் என்ற நம்பிக்கை யோடு ராஜீவ் விருப்பப்படி டெல்லியில் மேலும் ஒருநாள் தங்கப் போவதாக சென்னைக்கு அறிவித்துவிட்டு அங்கே தங்கினேன். மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் டெல்லியில் நான் தங்கியிருந்த தமிழ்நாடு அரசு இல்லத்துக்கு ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த முழுமையான விபரங்களை எனக்கு விளக்கிட மத்திய அரசின் வெளிவிவகாரத்துறை இணை அமைச்சராக இருந்த நட்வர்சிங் அவர்களை ராஜீவ் அனுப்பி வைத்து விட்டார்.

அவருடனும் வெளியுறவுத் துறை அதிகாரிகளுடனும் நானும் தம்பி முரசொலி மாறனும் நீண்ட நேரம் விவாதித் தோம். மாலையில் மீண்டும் பிரதமர் ராஜீவ், நட்வர்சிங், முரசொலி மாறன் மற்றும் அதிகாரிகளுடன் ஒரு கலந்துரை யாடல் கூட்டம் நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து பிரதமருடன் நானும் மாறனும் மட்டுமே, ஈழப் போராட்டம் பற்றிய முக்கிய பிரச்சினைகள் குறித்துப் பேசினோம். அப்போது மனந்திறந்து பேசிய ராஜீவ், விரைவில் இலங்கைக்கு மாறனையும், வைகோவை யும் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளையும், பிரபாகரனைச் சந்தித்து பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரத்தேவையான வாய்ப்புகளையும் உருவாக்கிடத் தக்க வழிவகைகளை வகுத்துத் தருவதாகவும், சென்னைக்குச் சென்றபிறகு மீண்டும் தொடர்பு கொள்வதாகவும் உறுதி படக் கூறினார்.

அன்றைய தினம் டெல்லியில் மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து கொடுத்த செய்தி வெளியீட்டில் "இலங்கையில் நடக்கும் பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, மீண்டும் சந்தித்து, இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதித்து, வன்முறைக்கு முடிவு காணுகிற சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து நல்லிணக்கமும், முழு அமைதியும் ஏற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்று அறிவிக்கப்பட்டது.

அத்துடன் பிரதமரிடம் தமிழக அரசின் நிதிநிலை நெருக்கடியை விளக்கிக் கூறி, குறைந்தபட்சம் ரூபாய் 200 கோடி அளவுக்காவது உடனடியாக மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.



11.2.89ல் சட்டப்பேரவையில் ஆளுநர் உரை நிகழ்த்தியபோது...

அன்றைய தினமே, குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட் ராமன் அவர்களையும், குடியரசுத் துணைத் தலைவராக இருந்த சங்கர்தயாள் சர்மா அவர்களையும், மத்திய நிதி அமைச்சராக இருந்த எஸ்.பி.சவான் அவர்களையும் சந்தித்தேன். நாடாளுமன்ற தி.மு.க. குழுவின் தலைவர் தம்பி முரசொலி மாறனும் என்னுடன் வந்திருந்தார். தமிழக அரசுக்கு உடனடியாக நிதியுதவி தேவையென்று பிரதமர் ராஜீவிடம் வலியுறுத்தியதை நிதி அமைச்சர் சவானிடமும் நினைவுபடுத்தி ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்.

டெல்லியில் ஏராளமான செய்தியாளர்கள் நிரம்பியிருந்த கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் பற்றி அவர்கள் விடுத்த கேள்விக் கணைகளுக்கு விடையளித்தேன். அன்றைய டெல்லி "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "கவனத்தைக் கவர்ந்த கருணாநிதி" (Karunanidhi steals the show) எனும் தலைப்பிட்டுப் பாராட்டி எழுதியிருந்தது.

11.2.1989 காலை சட்டப் பேரவையில் ஆளுநர் உரையை முன்னிட்டு நான் 10.2.1989 இரவு சென்னை திரும்பினேன்.

11.2.1989 அன்று மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்த் திரைப்பட வர்த்தக சபையின் சார்பில் எனக்கு மிகப்பெரிய பாராட்டு விழா, கலைத்துறையிலும் ஈடுபாடு கொண்ட முதலமைச்சர் என்பதற்காக நடத்தப்பட்டது. இசைஞானி இளையராஜா அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய அந்த நிகழ்ச்சிக்கு திரைப்பட வர்த்தக சபைத் தலைவர் கோதண்டராமன் தலைமை வகித்தார். இயக்குனர் பாலச்சந்தர், இயக்குனர் பாரதிராஜா, ஏ.வி.எம். சரவணன், ஜி. உமாபதி, வலம்புரி சோமநாதன், கவியரசு வைரமுத்து, நடிகர்கள் கலைஞானி கமலஹாசன், புரட்சி கலைஞர் விஜயகாந்த், வி.கே. ராமசாமி, நாகேஷ், ஜெய்சங்கர், கலையரசி ராதிகா, செந்தாமரை மற்றும் பல கலைஞர்கள் அந்த விழாவிலே கலந்துகொண்டு என்னைப் பாராட்டியும் வாழ்த்தியும் உரையாற்றினர். நடிகர் சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.



டெல்லியில் பிரதமர் ராஜீவ் அவர்களை முரசொலி மாறனுடன் சந்தித்தபோது...

பிறகு 11.3.1989 அன்று தென்னிந்திய நடிகர் சங்க விழாவில் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் படத்தைத் திறந்து வைத்தேன். இந்த நிகழ்ச்சியில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களும் கலந்து கொண்டார்.

இதற்கிடையே சட்டப்பேரவையில் ஆளுநர் உரை நிகழ்த்தப்பட்டு கழக அரசின் கொள்கை கோட்பாடு எதிர்காலத் திட்டங்கள் குறித்து அறிவிக்கப்பட்டிருந்ததை யொட்டி விவாதம் விரிவாக நடைபெற்றது; பேரவையில் என் பதிலுரை 17.2.1989 ஆம் நாளன்று இடம் பெற்றது.

“கடந்த காலத்தில் மதுவிலக்கு சட்டத்தின் தொடர்பாக அரசினால் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்து, மது உற்பத்தியாளர்களுக்கு பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அதனால் மாநில அரசுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பெரும் வருவாய் இழப்பு கோடிக்கணக்கிலே ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றி நிதி வருவாயைப் பெருக்கிட சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்”

என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி; நான் பதிலுரை பகர்ந்தபோது கடந்த காலத்தில் எத்தகைய சலுகைகள் அளிக்கப்பட்டு, வரிவிலக்களிக்கப்பட்டு, அவற்றுக்கான ஆணைகளே பிறப்பிக்கப்

பட்டு அதன் காரணமாக சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு நிதி வருவாய் குறைந்து; அது மது உற்பத்தியாளர் களுக்கும் இடைப்பட்டவர்களுக்கும் பங்கிடப்பட்டது எவ்வாறு என்பதை விளக்கியதுடன்; கடந்த கால அரசு பிறப்பித்திருந்த ஆணையை ரத்து செய்ததின்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு மேலும் 100 கோடி ரூபாய் கிடைத்திட வழிவகுக்கப்பட்டுள்ள விதங்களையும் விரிவாக விளக் கினேன்.

இந்த முடிவினை ஆதரித்தும், என் விளக்கத்தை ஏற்றுக் கொண்டும் - 20.2.1989 இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கத்தில் "மதுபான வகைகளுக்குக் குறைந்த ஆயத் தீர்வையும், அதிகமான விலையும் என்பதால் கடந்த காலத்தில் ஏற்பட்ட இமாலய ஊழலை முதல்வர் கருணாநிதி தடுத்து நிறுத்தி, வருவாய் இழப்பையும் தவிர்த்துள்ளார்" என்று எழுதியது.

21.2.1989 இந்து இதழில் வந்த தலையங்கத்தில், "சாராய வியாபாரத்தில் இந்த மாநிலத்தில் நடந்துள்ள ஊழல்களைச் சுட்டிக்காட்டி, அந்த ஓட்டைகளை அடைத்து ஒரே வீச்சில் மாநிலத்தின் அரசு கருவூலத்திற்கு 100 கோடி ரூபாய்க்கு மேலாக நிதி ஆதாரத்தை முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் திரட்டியுள்ளார்" என்று பாராட்டப்பட்டிருந்தது.

டெல்லியிலிருந்து வெளிவரும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' 20.2.1989 அன்று எழுதிய தலையங்கத்தில் "இருபதே நாள் ஆட்சியில் ஓர் இமாலய சாதனை" என்று புகழாரம் சூட்டியிருந்தது.

22.2.1989 வெளிவந்த "எகனாமிக் டைம்ஸ்" என்ற ஆங்கில ஏடும் இதே விதமாகப் பாராட்டியிருந்தது.

இத்தகைய மகிழ்ச்சிகரமான சூழலில் அரசு இயந்திரம் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது; ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி டெல்லியில் பிரதமர் ராஜீவ்காந்தியிடம் பேசியது குறித்து அதன் தொடர்ச்சியான செய்தி என்ன வரப் போகிறது; எப்போது வரப்போகிறது என எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தச் சமயத்தில்தான்- அதாவது 1989 பிப்ரவரி திங்களில் தலைமைக் கழகச் செயலாளர்களில்

ஒருவரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ அவர்கள் (வை. கோபால்சாமி) ரகசியமாக இலங்கையில் ஈழப் பகுதிக்குச் சென்றிருப்பதாக ஒரு செய்தி பரவியது.

அச்செய்தி குறித்து கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் 19.2.1989 அன்று விடுத்த அறிக்கையில், "வைகோ, இலங்கை சென்றது குறித்து என்னிடமோ, தலைவரிடமோ கலந்து பேசி அனுமதி பெறவில்லை. பிரதமர் ராஜீவ் காந்தியுடன் முதல்வர் கலைஞர் அண்மையில் பேசியதற்கும் இந்தப் பயணத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை'' என்று விளக்கியிருந்தார்.

சட்டப்பேரவையில் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இதைப்பற்றி விளக்கம் கேட்டபோதும், பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நான் பேசியதற்கும் இந்தப் பயணத்திற்கும் சம்பந்தமில்லை என்று அறிவித்தேன்.

பின்னர் 24.2.1989 அன்று, 5.2.1989 எனத் தேதியிட்டு வைகோ எழுதிய கடிதம் அவரால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு நண்பர் வாயிலாக எனக்குக் கிடைத்தது.

அந்தக் கடிதம் வருமாறு:-

"எனது உயிரினும் மேலான சக்தியாய் இமைப் பொழுதும் நெஞ்சில் நீங்காமல் என்னை இயக்கி வரும் தலைவர் அண்ணன் முதல்வர் கலைஞர் அவர்களின் பாதங்களில் இந்த மடலை சமர்ப்பிக்கிறேன். கடுகளவு கூட வருத்தமும் கோபமும் என்மீது எந்தக்கட்டத்திலும் ஏற்படா வண்ணம் பயம் கலந்த பக்தியுடன் தங்களின் எண்ணங்களுக்கு ஏற்ப பணியாற்றி வரும் நான், பல இரவிலும் பகலிலும் ஆழமாகச் சிந்தித்து எடுத்த முடிவின் விளைவாக நான் எழுதிய இக்கடிதம் தங்கள் திருக்கரங்களில் கிடைக்கும் வேளையில் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்குமானால் ஈழத் திருநாட்டில் வவுனியா காட்டுப் பகுதிக்குள் தம்பி பிரபாகரனைக் காணச் சென்றுகொண்டிருப்பேன். தமிழகத்தில், வரலாறு இதுகாறும் கண்டறியாத மகத்தான அத்தியாயத்தைப் படைத்து விட்டீர்கள். தரணி எங்கும் வாழும்

தமிழர்கள் களிப்புடனும் பெருமிதத்துடனும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாபெரும் வெற்றிக்குப் பின்னர் ஈழத் தமிழர்களுக்குத் தங்களால் விடிவும் விமோசனமும் பிறக்கும் என்ற நிறைந்த நம்பிக்கை யுடன் உலகமெங்கும் வாழும் தன்மான உணர்வுள்ள தமிழர்கள் ஏக்கத்தோடும் தவிப்போடும் ஆவலோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் உலகம் உள்ளவரை சாகா வரம் பெற்ற சிரஞ்சீவி உயிரோவியங்களாக சங்கத்தமிழையும் குறளோவியத்தையும் எண்ணற்ற பல காவியங்களையும் தமிழன்னைக்கு ஜொலித்திடும் ஆபரணங்களாகச் சூட்டி விட்டீர்கள். சராசரி முதல் அமைச்சராக உங்களை என் மனம் கணிப்பதில்லை. செந்நீரில் கண்ணீரில் மிதக்கும் ஈழத் தமிழரின் தலைவிதியை மாற்றி தரணியில் தமிழனுக்கும் தலைநிமிர்ந்து வாழும் நிலை அமைந்திட என் தலைவன் காரணமானார் என்பதையும் அகிலம் காண வேண்டும் என்பது எனது தணியாத தாகம். ஈழப் போர்க் களத்தில் பிரபாகரன் உறுதியான நிலையொன்றை எடுத்துக் கொண்டு அதிலேயே வலுவாக ஊன்றி நிற்கிறார். அந்தகாரத்துக்கு இடையே மின்னிடும் ஒரே ஒளி ரேகையாக உங்களை நம்பியிருப்பதாக மரண பயங்கரத்தின் பிடியிலிருந்து எழுதினார். காலமறிந்து, இடமறிந்து, மாற்றார் வலியறிந்து தன் வலியையும் கணித்து வியூகம் அமைப்பதே சாலவும் சிறந்தது என்ற தங்களின் உணர்வுகளை அவருக்குத் தெளிவுபடுத்த வேண்டிய சூழல் எனது ஈழப் பயண எண்ணத்துக்குக் காரணமாயிற்று. 13 ஆண்டுகளுக்குப் பிறகு வாராது வந்த மாமணி போல் தமிழகத்தில் அமைந்திட்ட நமது கழக ஆட்சிக்கு குன்றிமணி அளவு கூட குந்தகம் ஏதும் ஏற்பட விடாமல், மத்திய அரசுடன் மோதுகிற நிலையையும் தவிர்த்துக் கொண்டு ஈழத் தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்பை நிரந்தரமாக உத்தரவாதமாக்கக் கூடிய வழிமுறைகளைக் காண பிரபாகரனுடன் பல கோணங்களிலும் இப்பிரச்சினையை விவாதித்து கருத்துக் களைப் பரிமாறி அதன்மூலம் பேச்சுவார்த்தைக்குத் தயாரா கின்ற மனப்பான்மையை உருவாக்கிடவும் உண்மை நிலையை நேரில் கண்டறியவும் இப்பயணத்தை மேற்கொண்

டுள்ளேன். சிங்கள ராணுவத்தினிடமோ, இந்திய ராணுவத்தினிடமோ, நான் பிடிபட நேர்ந்தால் நமது கழக அரசுக்கோ, இயக்கத்துக்கோ கடுகளவு பிரச்சினை எதுவும் ஏற்படாவண்ணம் நான் செயல்படுவேன். என்னைப் பலியிட்டுக் கொள்ளவும் சித்தமாக இருப்பேன் என்பதையும் தாங்கள் அறிவீர்கள். ஈழத் தமிழர் பிரச்சினைக்காக தமிழர் அமைப்புக்களின் அழைப்பினை ஏற்று ஈரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செல்கிறேன் என்று எனது வீட்டாரிடமும், நண்பர்களிடமும் கூறியுள்ளேன். எனது பயணத் திட்டத்தை எவரும் அறிய மாட்டார்கள். ஆனால் எதையும் அறிந்து கொள்ளும் தங்களின் உள்ளுணர்வுதான் "பாயும் புலி பண்டாரக வன்னியனி"ன் இந்த வார அத்தியாயத்துக்கு "நண்பர்கள் சந்திப்பு" என்று தலைப்பு தந்தது போலும். "இரத்தம் கசியும் இதயத்தின் குரல்" என்ற எனது நூலுக்கு அணிந்துரை வழங்குகையில் "நான் தாயானேன்" எனக் குறிப்பிட்டீர்கள். "மானம் எனது மகன் கேட்ட தாலாட்டு - மரணம் அவன் ஆடிய விளையாட்டு" என்ற தங்களின் வரிகளை ஆயிரக்கணக்கான மேடைகளில் முழங்கியுள்ளேன். தொண்டைக் குழியில் ஜீவன் இருக்கும்வரை தங்கள் புகழையே என் உதடுகள் உச்சரிக்கும். வாழ்நாளில் தங்களின் அன்பையும் பாசத்தையும் பிறவிப் பெரும் பயனாகப் பெற்றிருக்கிற தங்களின் தம்பி, வை.கோபால்சாமி, 5-2-89."


கடிதத்தைப் படித்ததும் என் இதயத்தில் எத்தனையோ மின்னல் வீச்சுகள்! இடிக்குமுறல்கள்! ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து இப்போதுதானே பிரதமர் ராஜீவிடம் பேசிவிட்டு வந்திருக்கிறோம்; அந்தச் சூழ்நிலை கெட்டு விடுமோ? என்ற கவலையுடன்; இவர் இலங்கையிலிருந்து பத்திரமாகத் திரும்பி வரவேண்டுமே என்ற பதற்றமும் என்னைப் பற்றிக் கொண்டது.

பழுக்கக் காய்ச்சிய ஓர் இரும்புத் துண்டு நீரை உறிஞ்சி விடும் சக்தி கொண்டது என்பதற்காக; அந்த முயற்சியை, ஆறு, குளம், ஏரிகளில் செய்து பார்க்க முடியாது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் அவரது ஈழத்து ரகசியப் பயணம் அமைந்தது.

4 ஆட்சியைக் கலைக்க சதி ஆரம்பம்!

வைகோ அவர்களின் ஈழப் பயணம் குறித்த அவரது கடிதம் என் கைக்குக் கிடைத்த அதே 24-2-1989 அன்று டெல்லியிலிருந்து தமிழகம் வந்த ஒன்பதாவது நிதிக் குழுவை தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலகத்தில் வரவேற்றேன்.

மாநில அரசின் நிதி வருவாயைப் பெருக்கிட பல்வேறு துறைகளில் தி.மு.க. அரசு நடவடிக்கைகளை எடுத்தது. கடந்த கால அரசில் உருவாக்கப்பட்ட அரசியல் ரீதியான வாரியங்கள், கழகங்கள் என இருந்த 77 பதவிகளில்



எழுத்தாளர் சாவியின் 85வது பிறந்தநாள் விழாவில்
முதல்வர் கலைஞர் கலந்து கொண்ட காட்சி.

41 பதவிகள் நிர்வாகச் சீர்திருத்தம் கருதியும், சிக்கனம் கருதியும் ரத்து செய்யப்பட்டன. அமைச்சர்கள், அதிகாரிகள் மிகுந்த சிக்கனத்தைக் கடைப் பிடிக்க வேண்டுமென்பதையும், அரசு நிகழ்ச்சிகள் ஆடம்பரமாக நடைபெறக்கூடாது என்பதையும் வலியுறுத்தியதில் மிகக் கண்டிப்பாக இருந்தேன் எனினும், கலை, இலக்கியத் துறை தொடர்புடைய இயல் இசை நாடக மன்றத்துக்குத் தலைவராக பழம் பெரும் எழுத்தாளர் - பல எழுத்தாளர்களை உருவாக்கிய எழுத்துலகச் சிற்பி "சாவி" என்ற சா. விசுவநாதன் அவர்களை நியமிக்க விரும்பினேன். எனது வலியுறுத்தலின் பேரில் அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அதற்கு முன்பே அவரது நெருங்கிய நட்பும் - நகைச்சுவை உணர்வுடனும் கருத்தாழத்துடனும் எழுதும் திறனும்- அத்துடன் என்னிடம் அவர் நெஞ்சாரக் கொண்டிருந்த இனிய உறவும்- அவர் வாழ்வாங்கு வாழ்ந்து அந்த முழுமையான வாழ்வு, நானும் அவரும் அமர்ந்திருந்த அவரது 85-வது பிறந்தநாள் விழா மேடையில் யாரும் எதிர்பாராத வகையில் முடிவுற்றதும்; இந்த வரிகளை மையினால் அல்ல; என் கண்ணீரால் எழுதிட வைத்துள்ளன.

என் கரங்களில் நினைவுக் கேடயத்தை வழங்கினார். எனக்குப் பெரிய மல்லிகை மாலை ஒன்றை அணிவித்து கட்டித் தழுவிக் கொண்டார். எனக்கு அணிவிப்பதற்காக அவரே கடைக்குச் சென்று தனியாகக் கட்டச் சொல்லி வாங்கி வந்த மாலையாம் அது. பின்னர் அவருக்கு வாழ்த்து இதழ், நினைவுக் கேடயம், பொன்னாடை அனைத்தும் மக்களின் பெருத்த கையொலிக்கிடையே சென்னை நாரத கான சபாவில் வழங்கப்பட்டன. அந்த இனிய காட்சியை அவரது துணைவியாரும், குடும்பத்தாரும், உற்றார் உறவினர் களும் அரங்கத்தில் அமர்ந்து ஆனந்தமாக ரசித்துக் கொண் டிருக்கிறார்கள்.

"நன்றி கூறி நான் பேசிவிடுகிறேன். நீங்கள் எனக்கு முன் பேசி விட்டால் பிறகு கூட்டம் கலைந்து விடும்" என்று ஓலி பெருக்கியிடம் சென்றார். எழுத்தாளர் சிவசங்கரி அவரைக்

கைத்தாங்கலாக ஒலி பெருக்கியின் முன்னால் அழைத்துச் சென்றார். அப்போதுதான் எனக்குத் தெரிந்தது, அவருக்கு சற்று உடல் நலிவு என்று! எங்களுடன் மேடையிலிருந்த கவிப்பேரரசு வைரமுத்துவும், ஆர்க்காடு வீராசாமியும், ஆர்.எம்.வீரப்பனும், மேயர் மு.க.ஸ்டாலினும், பொள்ளாச்சி மகாலிங்கம், ஏவி.எம்.சரவணன், முனைவர் வா.செ.குழந்தை சாமி, ராணி மைந்தன் ஆகியோரும் சுருக்கமாகப் பேசுமாறு சாவியிடம் கேட்டுக் கொண்டனர்.

"நான் தினமணிக் கதிர் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். அப்போது கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட நேரம். நான் கலைஞருக்கு ஆதரவாக இருந்து வந்தேன். அதனால் அந்தப் பத்திரிகையின் உரிமையாளர்களுக்கும் எனக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. அந்த நேரம் பார்த்து எனக்கு ஓய்வு பெறும் வயதாகிவிட்டது என்று சொல்லி வீட்டிற்கு சீட்டு அனுப்பி விட்டார்கள். இதனைக் கேள்விப்பட்ட கலைஞர் என்ன செய்தார் தெரியுமா?

எனக்காக "குங்குமம்" தேசத்தை உருவாக்கி அதற்கு என்னை ராஜாவாக ஆக்கியவர் கலைஞர்." இவ்வாறு ஒலி பெருக்கியில் சாவி அவர்களின் குரல் ஒலித்துக் கொண் டிருக்கும்போதே திடீரென நின்றது. திடுக்கிட்டு அவர் அருகில் ஓடினோம். அரங்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து சாவி சொன்னார்; "எனக்கு நெஞ்சு வலிக்கிறது" என்று! அடுத்த கணம் அப்படியே சாய்ந்தார். சாய்ந்தவர் சாய்ந்தது தான். எழுத்தாளர்கள் சூழ இருந்த அந்த எழில் மிகு அரங் கில்; பல எழுத்தாளர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய அந்தப் பண்பார்ந்த எழுத்தாளர் தனது முழுமையான வாழ்க்கைக்கு முடிவுரை எழுதிக் கொண்டார். அவரது அரிய நகைச்சுவைப் படைப்பான "வாஷிங்டனில் திருமணம்" என்ற நாடகம் எந்த நாரத கான சபாவின் சார்பில் பலமுறை நடைபெற்று ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண் டதோ அதே நாரத கான சபா மேடையில் இப்படியொரு முடிவுக்கு அவர் ஆளானார் என்பது எவ்வளவு பெரிய

சோகம். இது நடந்தது இதே 2001-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ஆம் நாள்!

காந்தியடிகளுடன் நவகாளி யாத்திரைக்குச் சென்று அவரைப் பேட்டி கண்டு, அதை மக்களுக்கு எழுதிக் காட்டியவர் அவர். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் சிறை புகுந்த தேசியவாதிகளில் ஒருவர் அவர். "பாரதமாதா" வின் சுதந்திரத்திற்காக சிறைசென்ற அவர்; இந்தச் சுதந்திர நாட்டில் பத்திரிகை சுதந்திரத்திற்காகவும் சிறை செல்ல வேண்டியிருந்தது. அவரது "சாவி" பத்திரிகையில் அட்டைப் படமாக யாரோ ஒரு பெண்ணின் ஓவியம் இடம் பெற்றதற் காக; அதிலே ஏதோ ஆபாசம் இருப்பதாகக் கூறி 11-5-1992 அன்று செல்வி ஜெயலலிதா ஆட்சியில் கைது செய்யப் பட்டார். தேச விடுதலைக்காக முகம் வாடாமல் சிறை சென்ற சாவி அவர்கள், பத்திரிகை அட்டைப்படத்துக்காகக் கைது செய்யப்பட்டதால் வாடி வதங்கிப் போனார். செய்தி கேள்விப்பட்டு நானும், கழக முன்னோடிகளும் காவல் நிலையம் சென்று அவரைச் சந்தித்து ஆறுதல் கூறி அவரை ஜாமீனில் எடுக்கிற ஏற்பாடுகளைச் செய்தோம். அந்த நிகழ்ச்சி எங்கள் இனிய நட்பை மேலும் மேலும் மெருகேற்றி ஒளிவிடச் செய்தது.

அந்த நல்லவரின் நினைவாக நான் வைக்கும் விளக்கு வரிசையாக இந்த வாக்கிய வரிசை, இந்த அத்தியாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கட்டும்.

தமிழ்நாட்டில் ஒரு நீண்ட காலப் பிரச்சினை, தீர்க்கப்படா மலே இருந்தது. பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட் டோர்க்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் தனித்தனி இட ஒதுக்கீடு என்பது திராவிட இயக்கத்தின் சமுதாயப் புரட்சி சாதனையாக இருந்த போதிலும் குறிப்பிட்ட சில சமூகத் தினர், தங்களின் சமுதாயத்தின் மிகப் பின்தங்கிய நிலையை எடுத்துரைத்துத் தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயமாக அறிவித்து, அதற்கான தனி இட ஒதுக்கீடு கோரிப் போராட்டங்களை நடத்தி வந்தனர். அதன் உச்ச கட்டமாக இன்றைய பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத்

தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் தலைமையில் 1987-ஆம் ஆண்டு பெரிய போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அந்தப் போராட்டத்தை அடக்கிட அன்றிருந்த அ.தி.மு.க. ஆட்சியினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் 30 பேர் உயிரிழந்தார்கள். அதற்குப் பிறகும் அவர்களின் கோரிக்கை நிறைவேறாமலே இருந்தது.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்திடம் கூறி டாக்டர் இராமதாஸ் அவர் களை என் வீட்டுக்கே அழைத்து அவரிடமும், வீரபாண்டி ஆறுமுகத்திடமும், தீரனிடமும் விவாதித்து அந்த விவாதத்தின் விளைவாக 13-3-1989 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற முடிவாக, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர்மரபினருக்கும் இருபது சதவிகிதம் தனி இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த முடிவையொட்டி சில ஆண்டு களுக்குப் பிறகு ஏற்கனவே இந்த இட ஒதுக்கீடு உரிமைப் போரில் பலியாகிவிட்ட சுமார் 30 பேர்களின் குடும்பங் களுக்கு தலா மூன்று இலட்ச ரூபாயும், மாதாந்திர ஓய்வூதியமாக தலா மூவாயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அவ்வாறே முறைப்படி வழங்கப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கு 20 சதவீதமென கல்வி, வேலை வாய்ப்புகளில் ஒதுக்கப்பட்டதால்; அவர்களுக்குப் பல மடங்கு அதிகப் பயன் கிட்டியது என்பதை சமூக நீதியில் அக்கறையுள்ளோர் அனைவரும் இன்னமும் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர்.


படரக் கொழுகொம்பின்றி தவித்துக் கொண்டிருந்த பச்சைக் கொடியை அழுத்தமான மரமொன்றில் தவழவிட்டு, அதன் கிளைகளில் எல்லாம் படரவிட்டது போன்ற பூரிப்பை மிகவும் பின்தங்கிய சமுதாயத்து இளைஞர்கள் தங்கள் புன்னகை மூலம் வெளிப்படுத்தினர்.

ஏற்கனவே தி.மு.க. ஆட்சியிலும், பின்னர் அ.தி.மு.க. ஆட்சியிலும் படிப்படியாக விரிவடைந்த இட ஒதுக்கீடு

இந்தப் புதிய ஆணையின் விளைவாக பொதுத் தொகுப்பில் (Open Competition) 31 சதவிகிதம், பிற்படுத்தப்பட்டோர்க்கு 30 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு 20 சதவிகிதம், தாழ்த்தப்பட்டோர்க்கு 18 சதவிகிதம், ஆதிவாசிகளுக்கு 1 சதவிகிதம் என்பதாக அமைந்தது.

அழுத்தப்பட்டுக் கிடக்கும் சமுதாயத்திலிருப்போரில், ஓரிருவருக்கு பதவி வாய்ப்புகள் அளிப்பதென்பது அவற்றை அளித்திட்ட நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கலாம்; ஆனால் அதை விட அந்த மொத்த சமுதாய மக்களும் முன்னேற்றம் பெற்றுப் பயனடையக் கூடிய வாய்ப்பு வசதிகளையும், உரிமைகளையும் அவர்களுக்கு வழங்குவதில் வெற்றி கிட்டுவதே முழுமையான மறுமலர்ச்சியாக இருக்க முடியும் என்ற உறுதியான எண்ணத்துடன்தான் தி.மு.க. அரசு திட்டங்களைத் தீட்டியது. சட்டங்களை இயற்றியது.

அப்போதுகூட மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள 107 சமூகங்களுக்கும் சேர்த்துத்தான் 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, அதிலே வன்னியர்



கோபாலபுரம் இல்லத்தில் முதல்வர் கலைஞர் அவர்களை பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ் சந்தித்துப் பேசிய காட்சி.

களுக்கு குறைவாகத்தானே கிடைக்கும் என்றார்கள். அதுபற்றி 22-4-1989 அன்று நான் விளக்கமளித்த போது, அந்தப் பட்டியலிலே 107 சமூகங்கள் என்று எண்ணிக்கையிலே இருந்த போதிலும், வன்னியர் மட்டும் 68 லட்சம் பேராகும். அந்தப் பட்டியலில் உள்ள மற்ற வகுப்பினரை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான வகுப்புகளில் வெறும் ஆயிரக்கணக்கிலேதான் மக்கள் இருக்கிறார்கள். உதாரணமாக நரிக் குறவர்கள் 20,162 பேர், ஜோகி 19,848 பேர், யோகீஸ்வரர் 18,618 பேர், தாசரி 15,907 பேர், பட்ராஜு 15,700 பேர், ஸ்ரீவைஷ்ணவா 15,354 பேர், தொண்டமான் 14,036 பேர், குன்னுவர் மன்னாடி 11,055 பேர், நோக்கர் 7,559 பேர், மகேந்திரா 7,418 பேர், பேஸ்தா சிவியர் 7,063 பேர், மொண்டாடன் செட்டி 6,254 பேர், மொண்டு கொல்லா 5,700 பேர், புன்னான் வேட்டுவ கவுண்டர் 4,562 பேர், டொம்மாரா 4,436 பேர், குருகினி செட்டி 4,225 பேர், கொரச்சா 3,429 பேர், முட்லகம் பட்டி 1,575 பேர், ஜாம்புவனோடை 1,399 பேர், எரவல்லர் 1,377 பேர் என்று இருபதாயிரத்திற்கு உட்பட்டவர்களே 20 சாதியினராகும்.

20 ஆயிரத்திற்கும் குறைவாக உள்ளவர்களின் பட்டியலை மேலும் பார்த்தால் வேட்டுவ கவுண்டர் 17,430, ஒட்டர் 16,977, கந்தர்வக் கோட்டை கள்ளர் 14,556, போயாஸ் 12,478, ஆத்தூர் கீழ்நாடு குறவர் 7,994; உப்புக் குறவர் 7,626; தெலுங்கப்பட்டி செட்டி 5,184; கொட்டப்பால் 4,888; ஜோகிஸ் 4,512; செங்கயம் புடி குறவர் 3,136; சேலம் உப்புக் குறவர் 2,782; சூரமரி ஒட்டர் 2,691; கலாகுறவர் 887; தோகமலை குறவர் 512; குடுதாசரீஸ் 482; பட்டு துர்காஸ் 441; டோங்கா 287; டோம்ஸ் 260; மொண்டா கொல்லா 64; சாரங்கா பள்ளி குறவர் 54; தொப்பை கொறச்சா 51; வயல்பாடு அல்லது நாவல்பேடா கொறச்சா 15; என்று இது போன்ற எண்ணிக்கை கொண்டதையெல்லாம் சேர்த்துத்தான் 107 சமூகங்கள் என்று விளக்கினேன்.

இதற்கிடையே மாநிலங்களவைக்கான இடைத் தேர்தல் அறிவிக்கப்படவே தி.மு.க. வேட்பாளர்களாக இயக்கத்தின்

நீண்ட கால முன்னோடிகளான தா. கிருட்டிணன், விடுதலை விரும்பி இருவரும் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றனர்.

9-3-1989 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்; இலங்கையில் நிகழும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வர, விடுதலைப் புலிகள் குறித்து பிரதமரும் முதலமைச்சர் கருணாநிதியும் மேலும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று நாடாளுமன்றத்தில் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்த செய்தி வெளிவந்தது. அதைத் தொடர்ந்து, 15-3-1989 அன்று டெல்லியில் நடை பெற்ற திட்டக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற என்னைப் பிரதமர் ராஜீவ் சந்திக்க விரும்பியதன் காரணமாக அன்றைய தினம் காலையிலும், மீண்டும் 16-ந் தேதி மாலை யிலுமாக இருமுறை சந்தித்து ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து இந்திய அரசின் சார்பில் எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து விவாதித்தோம். வைகோவின் இலங்கைப் பயணம் எதிர்பாராத ஒன்று என்று கூறி, அது குறித்து என் வருத்தத்தை அவரிடம் தெரிவித்தபோது, பிரதமர் ராஜீவ் இடை மறித்து, அதைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை; அவர் பத்திரமாக இருப்பதே மகிழ்ச்சி என்று மெத்தப் பெருந்தன்மையுடன் கூறினார். ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து விரைவில் டெல்லியில் உள்ள முரசொலி மாறனுடன் தொடர்பு கொண்டு தகவல் அனுப்புவதாகவும் கூறினார்.

அண்ணா தலைமையில் 1967ல் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அண்ணா அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையையும், நான் படித்த நிதிநிலை அறிக்கைகளையும் நாங்களேதான் எழுதுவோம். புள்ளி விபரக் குறிப்புகளை அதிகாரிகளிடம் பெற்றுக் கொள்வோம். நிதிநிலை அறிக்கை தயாரிக்க நிதித்துறை செயலாளர்களும் எனது ஆலோசகராக (Adviser) இருந்த அறிவுசால் அன்பு நண்பர் திரு.குகன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் பெரிதும் துணை புரிவார்கள். அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் ஒன்றுதான் மூன்றாவது முறையாக நான் முதல்வர்


பொறுப்பேற்ற பிறகு முதன் முதலாக சட்டப் பேரவையில் 25-3-1989 அன்று வைக்கப்படுமென அறிவிக்கப் பட்டது.

13 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நான் படிக்கும் நிதிநிலை அறிக்கை. அந்த நிதிநிலை அறிக்கையினை நான் படித்தபோது சட்டமன்றத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நான் கூறுவதைவிட, அன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக அ.தி.மு.க.விலே ஜெயலலிதாவிற்கு ஆதரவாக இருந்த திருநாவுக்கரசு அவர்கள் அந்தச் சம்பவம் நடைபெற்ற ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு அதே சட்டப் பேரவையில் பேசியதை அப்படியே குறிப்பிடுகிறேன். அவரது பேச்சு வருமாறு :-

"இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பட்ஜெட்டைப் படித்தபோது சட்ட மன்றத்திலே ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது அனைவருக்கும் தெரியும். இப்போது நான் சொல்வது; என்னுடைய தாய் மீது ஆணையாக நான் தெய்வமாக வணங்குகிற எம்.ஜி. ஆர். அவர்கள் மீது சத்தியமாக சொல்வதாகும்.

முதல் பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்தபோது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அவரது வீட்டில் உட்கார வைத்துக்கொண்டு என்னைப் பார்த்து "நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர் பட்ஜெட் படிக்கும் போது நான் பிடித்து இழுத்தால் நன்றாக இருக்காது. எனவே என் பக்கத்திலே இருக்கிற நீங்கள் முதலமைச்சர் கருணாநிதியின் கையிலே இருக்கிற பட்ஜெட் காப்பியை பிடித்திழுத்து அடிக்க வேண்டும்" என்று சொன்னார். நான் உடனே மிகுந்த வேதனையோடு சொன்னேன். "தெரிந்தோ தெரியாமலோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களை பத்தாண்டு காலம் கௌரவ மிக்க பதவிகளில் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். தயவு செய்து அடியாட்களாக எங்களை மாற்றாதீர்கள். அதற்கு என்னுடைய மனச்சாட்சி இடம் தரவில்லை. இரண்டாவது, இதுபோன்ற சம்பவம் வேண்டாம்" என்று நான் வாதாடிய

துடன்; "முதல் அமைச்சர் நமக்குப் பிடிக்காதவராகக்கூட இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அவருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர் மீது கை வைக்கிறபோது அவர்கள் உணர்ச்சி வசப்படுவார்கள். அங்கு நிச்சயமாக அடிதடி நடக்கும், ரகளை நடக்கும். புரட்சித் தலைவர் இருக்கும்போது எவ்வளவோ பிரச்சினை நடந்திருக்கின்றன. அவருக்குப் பக்கத்தில் யாராவது போனால் கூட நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தாக்கியிருப்போம். அதுபோல இன்றைய முதலமைச்சருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாகத் தாக்குவார்கள். அசம்பாவிதம் நடக்கும். அசிங்கமாகப் போய்விடும். பத்திரிகைகளிலே எல்லாம் கேவலமாக எழுதுவார்கள்" என்று வாதாடினேன். "மூத்த தலைவர்களை எல்லாம் கேட்டீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "அவர்களைக் கேட்டால் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினாலே அவர்களை எல்லாம் டைனிங் ஹாலிலே உட்கார வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்.



தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையினைப் படிக்கும் காட்சி.

"நான் முடியாது" என்று சொன்ன உடனே சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து "சரி, அவர் மாட்டேன் என்று சொல்லுகிறார். உங்களில் யாருக்கு வசதிப்படுகிறதோ அவர்கள் போய் பட் ஜெட் படிப்பதைப் பிடுங்கி கிழியுங்கள்" என்று சொல்லிவிட்டு மேலே போய்விட்டார்.

டைனிங் ஹாலுக்கு உள்ளே டாக்டர் ஹண்டே, திரு. ராக வானந்தம், திரு. மாதவன், திரு. எஸ்.டி.எஸ். மற்றும் அப்போ திருந்த மூத்த தலைவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நான் அங்கே போய், "யார் இந்த ஆலோசனையைச் சொன்னது?" என்று அவர்களிடத்திலே சண்டை போட்டேன்.

செல்வி ஜெயலலிதா மாடியிலிருந்து இறங்கி வந்தார். வந்த வுடனே, அங்கே இருந்தவர்களைப் பார்த்து, "புறப்படலாம், நேரம் ஆச்சு" என்றார். மூத்த தலைவர்கள் யாருக்கும் அவர் வந்த வேகத்திலே தடுத்துச் சொல்ல துணிச்சல் இல்லை. அவரை அழைத்துச் சென்று சட்டமன்ற அவையிலே உட்கார வைத்து விட்டு, "தோழமைக் கட்சி, காங்கிரஸ் கட்சியிடத்திலே இதுபற்றி கேட்டீர்களா?" என்றேன். அவர், "எல்லோரையும் கலந்துதான் சொல்லுகிறேன். இன்றைக்குச் சட்டமன்றத்திலே வன்முறை நடந்தால் இன்றைக்கு மாலையே ஆட்சி கலைக்கப்படுகிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது" என்று சொன்னார்.

நான் உடனே தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் அறைக்குச் சென்று "இன்றைக்கு நாங்கள் எல்லாம் வெளிநடப்பு செய்வதாக இருக்கிறோம். நீங்களும் எங்களோடு ஒத்துழைப்பு தர வேண்டும்" என்றும், அத்துடன், "இன்றைக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் நீங்களும் உள்ளேயிருந்து ஏதாவது உதவி செய்வீர்களா?" என்றும் மறைமுகமாகக் கேட்டேன். நேரிடையாகச் சொல்லாமல், அவர் "நான் புறப்படுவதற்கு முன்னாலேயே பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் 8.30 மணிக்கு பேசி விட்டுத்தான் வந்தேன். அதற்கு காவல் துறையின் மீது ஒரு கண்டன அறிக்கையைப் படித்துவிட்டு எங்களுடைய காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்யப்போகிறது. இதுதான்

எங்களுக்கு டெல்லியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற உத்தரவு" என்று சொன்னார்.

செல்வி ஜெயலலிதா அவையில் உட்கார்ந்திருந்தார். நான் வேகமாக வந்து, "திரு. மூப்பனார் அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் எந்த விதமான அசம்பாவிதமும் இங்கே நிகழ்த்துவதற்குத் தயாராக இல்லை. காங்கிரஸ் காரர்கள் வெளிநடப்பு செய்யப் போகிறார்கள்" என்று சொன்னேன். "மூப்பனார் எப்போதும் இப்படித்தான். எனக்கு விரோதமாகத்தான் அவர் சொல்லுவார். எனக்கு வேறு மாதிரித் தகவல் வந்திருக்கிறது" என்று கூறியதுடன் "நீங்கள் போய் ஏன் அவரிடத்தில் கன்சல்ட் செய்தீர்கள்?" என்றார்.

அதன்பிறகு அன்றைக்கு இங்கு சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். வன்முறை யைத் தொடர்ந்து சட்டமன்றத்திற்குள்ளே அடிதடி ரகளை எல்லாம் நடந்தது. பிறகு செல்வி ஜெயலலிதா அவர்களை அழைத்துக் கொண்டு வண்டியிலே நானும் திரு.கே.கே. எஸ்.எஸ்.ஆரும் முன்னாலேயும், பின்னாலேயும் அமர்ந்து கொண்டு போகிறோம். வீடு போகிறவரை, "இன்றைக்கு மாலையே ஆட்சியை கலைக்கப் போகிறார்கள், ஆட்சியைக் கலைக்கப் போகிறார்கள்" என்று சொல்லிக் கொண்டே வந்தார்."

திரு. திருநாவுக்கரசு அவர்களின் இந்த நேரடி வாக்கு மூலத்தின்படி, ஆட்சியைக் கலைப்பதற்காகவே திட்டமிட்டு நடைபெற்ற அந்த வன்முறைச் சம்பவத்தை சுருக்கமாகவா வது அறிந்து கொள்ள அடுத்த அத்தியாயத்திற்குச் செல்வோம்.

5 சதித் திட்டத்தின் உச்சகட்டம்!

நான் நிதிநிலை அறிக்கை படிக்க முற்படும்போது காவல் துறையைக் கண்டித்து வெளிநடப்பு செய்வதாகத் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தால் போதும் என்று காங்கிரஸ் தலைவர் மூப்பனாரும்; காவல் துறையைக் கண்டித்து வெளி நடப்பு செய்தால் மட்டும் போதாது, கலவரமே செய்து ஆட்சிக் கலைப்புக்கு வழி காண வேண்டுமென்று செல்வி ஜெய லலிதாவும் செயல்படுகிற அளவுக்குக் காவல் துறையினர் மீது அவர்கள் கண்ட குற்றம்தான் என்ன?

மார்ச் 15 டெல்லி சென்று பிரதமர் ராஜீவ் சந்திப்புக்குப் பிறகு, சென்னைக்கு நான் திரும்பிய சில நாட்களில் 18-3-89 அன்று மாலை செல்வி ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகி விட்டதாக யு.என்.ஐ. நிறுவனத்தின் மூலம் செய்தி தெரிய வந்தது. அவரது கைப்படவே எழுதப்பட்ட அந்த ராஜினாமா கடிதம்; பேரவைத் தலைவர் கைக்குக் கிடைத்ததும், பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள், செல்வி ஜெயலலிதாவுக்கு சட்டமன்ற விதி 24ன்படி ஒரு கடிதம் அனுப்பி, தாங்கள் எழுதிய ராஜினாமா கடிதம் தங்கள் சொந்த விருப்பத்தின்பேரில் எழுதி அனுப்பப்பட்டதா என்று கேட்டதற்கு; அதற்குப் பதிலளித்த ஜெயலலிதா அவர்கள்; தனது ராஜினாமா என்பதை மறுத்து விட்டதால் பிரச்சினை அத்துடன் முடிந்து போயிற்று!

அதுபற்றி செய்தியாளர் என்னைக் கேட்டபோது யாரையும் முறைகேடான வகையில் பதவியிலிருந்து



கலைஞருடன் முன்னாள் தமிழக ஆளுநர் பி.சி. அலெக்சாண்டர்


வெளியேற்றும் மனப்பான்மை எங்கள் அரசுக்கு இல்லை என்றும், அதனால்தான் அந்தக் கடிதத்தை உடனடியாக ஏற்றுக் கொள்ளாமல் முறைப்படி பேரவைத் தலைவரால்

செல்வி ஜெயலலிதாவிடம் விளக்கம் கேட்கப்பட்டு பதில் பெறப்பட்டது என்றும் பதில் அளித்தேன்.

ஆனால் இந்தச் சம்பவங்களுக்கு முன்பு ஏதோ ஓர் புகாரின் பேரில் போலீசார் திரு. நடராஜன் (சசிகலா) அவர்கள் வீட்டுக்குச் சென்று விசாரணை நடத்தியதற்கும் இதற்கும் தொடர்பு படுத்திப் போலீசார் மீது ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டு; போலீஸ் துறைப் பொறுப்பு ம முதல் அமைச்ச ராகிய என்னிடம் இருந்ததைக் காரணம் காட்டி; துரும்பைத் தூணாக்கிடும் முயற்சியில் செல்வி ஜெயலலிதா ஈடுபட்ட தாலும்; யாரோ ஒருவர் டெல்லியிலிருந்து- பேரவையில் பெரும் அமளி நடந்தால், அதை வைத்து ஆட்சியைக் கலைத்திட ராஜீவ்காந்தியும் தயாராக இருப்பதாகத் தவறான தகவல் கொடுத்திருந்ததாலும்; அந்த நம்பிக்கையில் நிதி நிலை அறிக்கை படிக்கும் நாளில் செல்வி ஜெயலலிதா மிகுந்த ஆவேசத்துடன் போர் முழக்கமிடத் தொடங்கினார்.

இப்படியொரு கலவரத்துக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை நான் உளவுத் துறை வாயிலாக அறிந்து, என் இருக்கைக்கு முன்பு; நிதிநிலை அறிக்கையைப் படித்திட வசதியாக ஒரு சிறிய சாய்வு மேஜையை தற்காலிகமாகவும், தற்காப்புக்காகவும் அமைத்திடச் செய்தேன். அத்துடன் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிடமும் தகவலைச் சொல்லி, எது நடந்தாலும் அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டிருந்தேன்.

இதற்கு முன்பு 1988 ஜனவரி 28ஆம் நாள் எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மையார் முதலமைச்சராக இருந்த போது; எதிர் அணியான ஜெயலலிதா அம்மையார் அணியினர், கலவரத்தை ஆரம்பித்து, சட்டப் பேரவையே ரணகளமாகி, பேரவைக்குள் காவல்துறை தலைவர் தேவாரம் தலைமையில் போலீசார் நுழைந்து தாக்குகிற அளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல் போய், அதை வைத்து ஜானகி அம்மையாரின் ஆட்சி கலைக்கப்பட்டது போல, தி.மு.க. ஆட்சியையும் கலைத்து விடலாம் என்பதுதான் திட்டம்!



25.3.89 அன்று சட்டசபையில் எதிர்க்கட்சியினர் நிதிநிலை அறிக்கையை முதல்வர் கலைஞர் அவர்களின் கையிலிருந்து பிடுங்கும் காட்சி.

அந்தத் திட்டத்தை நிறைவேற்றிடத்தான்; நிதிநிலை அறிக்கையைப் படிப்பதற்கு நான் காலை 11 மணிக்கு எழுந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா குறுக்கிட்டு; "முதலமைச்சர் கிரிமினல் குற்றவாளி! அவர் நிதிநிலை அறிக்கை படிக்கக் கூடாது! அவரும், அவருடன் கூட்டுப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரவையும் பதவி விலக வேண்டும்" என்றார்.

அந்தச் சமயம்; ஆவேசத்துடன் உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் எழுந்தார். அவர் ஜானகி அம்மையார் அணியின் சார்பில் வெற்றி பெற்றவர். அவர் உரத்த குரலில் "இங்கேயுள்ள 234 உறுப்பினர்களும் சமமானவர்கள்தான். அதனால் ஜெயலலிதா எந்த வகையிலும் மேலானவர் அல்ல" என்று சொன்னதுதான் தாமதம்; அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டு என்னால் எழுதிக் காட்ட முடியாத இழிதகை சொற்களால் பாண்டியனை அர்ச்சித்தனர். அவரும் பதிலுக்கு அவற்றை விட மோசமான

சொற்களால் தாக்கிடத் தலைப்பட்டார். பாண்டியன் அவர்கள் அப்போது பயன்படுத்திய அந்தக் கடுமையான வார்த்தைகள், ஜெயலலிதாவை மட்டுமல்ல, பேரவையின் கண்ணியத்தையே பாதித்தவைகளாகும். அந்த பி.எச். பாண்டியன்தான் இதை நான் எழுதும் இந்தக் காலகட்டத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார் என்பது ஜெயலலிதாவின் பெருந்தன்மைக்கு அடையாளம் என்பதை நான் சுட்டிக் காட்டாவிடில் இந்த வாழ்க்கை வரலாறுக்கு "நெஞ்சுக்கு நீதி" என்ற தலைப்பு பொருந்தாமல் போய் விடும்.

பேரவைத் தலைவர் அந்த அமளியை அடக்கிட அரும் பாடுபட்டு ஓரளவு வெற்றி கண்டார். நான் அமைதியாக சிறிது நேரம் இருந்துவிட்டு, நிதிநிலை அறிக்கையைப் படிக்க முற்பட்டேன். ஆனால் அந்த அமைதி மின்னல் வெட்டாகத் தோன்றி மறைந்தது.

மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்களும், அவரது கட்சி உறுப்பினர்களும் என்னைச் சூழ நின்று கொண்டு "படிக்காதே! படிக்காதே" என்று கூச்சலிட்ட துடன் அவர்கள் கட்சியின் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் என் மீது பாய்ந்து என் கையிலிருந்த நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தைப் பிடித்திழுத்துக் கிழித்தெறிந்தார். அதைத் தடுக்க முனைந்த போது என் முகத்தில் ஒரு குத்து விழுந்து, எனது மூக்குக் கண்ணாடி கீழே நொறுங்கித் தரையில் சிதறியது. நான் தாக்கப்பட்டவுடன் இரு தரப்பிலும் மோதுதல் - அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் தலையில் ஒலி பெருக்கி கம்பியால் தாக்கியதில் ரத்தம் ஒழுகிய நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

திட்டமிட்டுக் கலவரம் நடத்தப்படுவதை உணர்ந்த நான் அமைச்சர்களை அழைத்துக் கொண்டு பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் அறைக்குச் சென்றேன். நான் தாக்குண்டு வருவதையும், என் கண்ணாடி நொறுங்கியதையும் கண்டு செய்தியாளர்கள் கண்ணீர் வடித்து தழுதழுத்த குரலில் எனக்கு ஆறுதல் கூறினர். பேரவைத் தலைவர் தமிழ்க்குடி

மகன் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

அவையிலிருந்து அ.தி.மு.க. வினரும், அவர்களைத் தொடர்ந்து அவர்களது தோழமைக் கட்சியான காங்கிரஸ் உறுப்பினர்களும் வெளியேறிவிட்டனர்.

பின்னர் 11.30 மணிக்கு நிதிநிலை அறிக்கையை நான் பேரவையில் படித்தேன்.

"எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் குடி கொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு சார்பில் அவர் உறங்குகின்ற இடம் நோக்கித் தொழுது இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்." என்று கூறி பல்வேறு திட்டங்களும், மக்கள் நலப் பணிகளும் நிறைந்த அந்த அறிக்கையைப் படித்து முடித்ததும்; அவையில் கலவரம் செய்த அ.தி.மு.க. உறுப்பினர்களை ஒரு வாரகாலம் தற்காலிக நீக்கம் (சஸ்பென்ஷன்) செய்யும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

ஆனால் அடுத்த நாளுக்கு அடுத்த நாள் 27-3-89 திங்கட் கிழமை அன்று சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள்; அ.தி.மு.க. உறுப்பினர்களைத் தற்காலிகமாக ஒரு வார காலம் நீக்கி வைத்த தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

உடனே நான் எழுந்து; "எதிர்க்கட்சிகள் இல்லாமல் இந்த அவை நடவடிக்கைகளை நடத்த வேண்டும் என்கிற குறுகிய மனப்பான்மை எனக்கோ இந்த அரசுக்கோ நிச்சயமாக இல்லை. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை நான் அணுகுகிறேன். அன்றைய தினம் ஏற்பட்ட ஒரு உணர்ச்சியின் காரணமாக கொந்தளிப்பின் எதிரொலியாக நிறைவேற்றப் பட்ட அந்தத் தீர்மானத்தைத் திரும்பப்பெற்று எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் வந்து அவையில் பணியாற்ற

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட் டேன்.

அவ்வாறு அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டதற்காக பாரத ரத்னா சி. சுப்ரமணியம் அவர்கள் ஏடுகள் வாயிலாகப் பாராட்டியிருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கல்கத்தாவிலிருந்து வெளிவரும் ஸ்டேட்ஸ்மென் ஏடு வெளியிட்ட செய்தியில்- "செல்வி ஜெயலலிதா தன் கட்சியினரான 28 உறுப்பினர்கள் கொண்ட தாக்குதல் படையை நோக்கி 'அடி', 'குத்து' என்று உத்தரவுகளைப் பிறப்பித்ததை எல்லோரும் கேட்க முடிந்தது. ஒரு அ.தி.மு.க. உறுப்பினர் முதலமைச்சரை நோக்கிப் பாய்ந்து அவர் முகத்தில் குத்தினார். இதில் முதல்வரின் கண்ணாடி தரையை நோக்கிப் பறந்தது. இன்னொரு அ.தி.மு.க. உறுப்பினர் முதலமைச்சர் படிப்பதற்காக வைத் திருந்த பட்ஜெட் உரை புத்தகத்தைப் பிடுங்கிக் கிழித்தெறிந் தார். இதர அ.தி.மு.க. உறுப்பினர்கள் எம்.ஜி.ஆர். படத்தில் வரும் சண்டைக் காட்சியை நினைவூட்டும் விதமாக மைக்குகளைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு தி.மு.க. உறுப்பினர் களைத் தாக்கத் தொடங்கினார்கள்" - என்று எழுதியிருந்தது.

இதற்கிடையே செல்வி ஜெயலலிதா அவர்கள், அவையில் தன்னைத் தாக்கி விட்டதாகவும்- ஆட்சியை உடனே கலைக்க வேண்டுமென்றும், பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் தந்திகள் அனுப்பி வைத்தார். ஆளுநரிடமும் முறையிட்டுக் கொண்டார். தேவகி மருத்துவமனையில் இருந்தவாறு; அ.தி.மு.க.-இந்திரா காங்கிரஸ் கூட்டணி சேர்ந்து இனி வரும் தேர்தல்களில் தி.மு.க.வை எதிர்க்கும் என்று செய்தியாளர் களுக்கு அறிவித்தார்.

பேரவையில் நடந்தவற்றை ஆளுநரிடம் விளக்கிக் கூறுவதற்காக பேரவைத்தலைவர் தமிழ்க்குடிமகன் ராஜ்பவன் சென்று ஆளுநரைச் சந்தித்தார். குழப்பத்திலே இருந்த ஆளுநர் அலெக்சாண்டர் அவர்களிடம் தமிழ்க்குடி மகன் அவர்கள், "சற்று சிந்தித்துப் பாருங்கள். சுமார்

13 ஆண்டுகள் எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு பல சோதனைகளைச் சந்தித்த கலைஞர் அவர்கள் 13 ஆண்டு கழித்து மீண்டும் முதல்வராக வந்திருக்கிறார். அவர் நிதிநிலை அறிக்கை படிக்கும்போது எல்லாம் அமைதியாக நடந்து முடிய விரும்புவாரே தவிர அதற்கு மாறாக அவரது ஆளுங் கட்சிக்காரர்களைக் கொண்டே ஒரு கலவரத்தைத் தூண்டி, மாநிலமே எதிர்பார்க்கும் ஒரு நல்ல நிகழ்ச்சியைக் களங்கப் படுத்திக் கொள்ள நினைப்பாரா?" என்று கேட்டுவிட்டு; அவர் கண்ணெதிரே அவையில் நடந்தவைகளை விபரமாக விவரித்துச் சொன்னவுடன் ஆளுநர் அலெக்சாண்டர் மனத்தில் இருந்த குழப்பம் நீங்கியதாக நான் கேள்விப் பட்டேன்.

பிறகு நானும் பேரவைக் கலவரப் புகைப்படங்களை எடுத்துக் கொண்டு ஆளுநர் மாளிகைக்குப் போய் ஆளுநரிடம் பேரவையில் நடந்தவைகளை விபரமாகச் சொன்னேன்.

ஆளுநர் அலெக்சாண்டர் கண்டிப்பானவர் என்பது மட்டு மல்ல; கண்ணியமிக்கவருங்கூட! அவரது பொறுப்பான தன்மைக்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். 1993ஆம் ஆண்டு அவர் மராட்டியத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்த போது; அந்த மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டுவதாக அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பு பல ஆண்டு களாகக் கிடப்பிலே போடப்பட்டதால் ஒரு கிளர்ச்சிக்கு ஏற்பாடாகிறது எனச் செய்தியறிந்து உடனே நான் தமிழ் நாட்டிலிருந்து தி.மு.க. சார்பில் லட்சக்கணக்கான தந்திகளை மராட்டிய முதல்வர் திரு. சரத்பவாருக்கும், மராட்டிய ஆளுநர் அலெக்சாண்டருக்கும் அனுப்பச் செய்தேன். கடிதங்களும் இருவருக்கும் எழுதினேன்.

எங்கள் கோரிக்கையை கவனிப்பதாக மராட்டிய ஆளுநர் அலெக்சாண்டர் எனக்குக் கடிதம் எழுதினார்.

அடுத்து சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பல்கலைக் கழகத்துக்கு டாக்டர் அம்பேத்கர் பெயர் வைக்கப்பட்டதற்கான மராட்டிய அரசின் ஆணையின் ஒரு பிரதியையும் எனக்கு அனுப்பி வைத்தார் என்றால்;

நான் அப்போது இங்கே முதலமைச்சராக இல்லாத நேரத்திலும் என் மீதும், நான் வைத்த கோரிக்கையின் மீதும் எவ்வளவு மரியாதை வைத்துள்ளார் என்பதை உணர முடிகிறதல்லவா!

அவரைப் போன்றவர்களால்தான் ஆளுநர் பதவி மட்டுமல்ல; எந்தவொரு பதவிக்குமே பெருமை சேர்கிறது என்று ஒவ்வொருவரும் எண்ணிப் பெருமைப்படலாம்.

மத்தியில் ஆட்சியிலே இருந்த காங்கிரஸ் அமைச்சர் தினேஷ் சிங் ஜெயலலிதாவிற்கு ஆதரவாக ஒரு அறிக்கை விடுத்தார். டெல்லியிலிருந்து சென்னை வந்த அவர் நேராகச் சென்று ஜெயலலிதாவைச் சந்தித்து பூச்செண்டு கொடுத்து விட்டு, நிருபர்கள் கூட்டத்தில் ஜெயலலிதாவின் கட்சி பாதிக்கப்பட்ட கட்சி என்று தெரிவித்தார். மத்திய அமைச்சர் என்ற முறையில் தமிழக முதல்வரைச் சந்திப்பீர்களா என்று கேட்டதற்கு, அவர் விரும்பினால் என்னை வந்து பார்ப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை என்றார். மேலும் அவர் கூறுகையில் அரசியல் சாசனப்படி தமிழக அரசு செயல்பட வேண்டும், எல்லா இடங்களிலும் எதிர்க்கட்சிகள் உள்ளன, இந்திரா காங்கிரசும் பல மாநிலங்களில் எதிர்க் கட்சியாக உள்ளது. நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சிகள் உள்ளன. ஒரு சர்ச்சை அல்லது விவகாரம் வரும்போது அதை விவாதித்து தீர்வு காண வேண்டும். அதற்குப் பரிகாரம் வன்முறையாகாது என்றார்.

அகில இந்திய அளவில் தெலுங்கு தேசம், ஜனதா தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அசாம் கண பரிஷத், அகாலி தளம் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் சட்டப் பேரவையில் நடத்தப்பட்ட அ.தி.மு.க. வின் செயல்பாட்டினையும் அதற்கு ஆதரவு தெரிவித்த



திரு. பொம்மை

இந்திரா காங்கிரசையும் கண்டித்து டெல்லியில் அறிக்கை விடுத்தனர்.

அரசியல் சாசனப்படி தமிழக அரசு செயல்பட வேண்டுமென்று கூறிய மத்திய அமைச்சரின் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அதே பிப்ரவரி திங்கள் 27ந் தேதி என்ன செய்தார்கள் என்பதை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

1989-ஆம் ஆண்டு பிப்ரவரி 27-ந்தேதி மேற்கு வங்க சட்ட சபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஆரம்பம். திரு. ஜோதி பாசு அவர்களின் தலைமையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அங்கே நடைபெறுகிறது. அந்த மாநில கவர்னர் பேராசிரியர் நூருல்ஹாசன் முதல் நாளன்று உரை நிகழ்த்த வருகிறார். அப்போது மேற்கு வங்க சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்துஸ் சத்தார் தலைமையில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வர் ஜோதிபாசுவை வசைபாடும் வகையில் எழுதப்பட்ட விளம்பர அட்டைகளைக் கையிலே எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். ஆளுநர் உரை நிகழ்த்தத் தொடங்கியதும், ஜோதிபாசுவின் ஊழல்களைப் பற்றிக் குறிப்பிடு என்று குரலெழுப்பினார்கள். கவர்னர் தொடர்ந்து படிக்க முயற்சிக்கையில் கையிலே வைத்திருந்த அட்டைகளை கவர்னர் மீது வீசினார்கள். அதனைத் தொடர்ந்து அந்தக் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஓடிச் சென்று கவர்னரைச் சூழ்ந்து கொண்டார்கள். கவர்னரின் மேஜை மீது எரிந்து கொண்டிருந்த விளக்கை சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் அணைத்தார். கவர்னரின் பின்னாலிருந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் அவரை முன் பக்கமாகப் பிடித்துத் தள்ளினார்கள். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல அவரது கையைப் பிடித்து அடித்தார்கள். இவைதான் காங்கிரஸ்காரர்கள் அரசியல் சாசனத்தை மதித்து

அப்போது நடந்து கொண்ட விதம் என்று அனைத்து ஏடு களும் விமர்சித்திருந்தன. இது மேற்கு வங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி. அதே திங்களில் கர்நாடகத்தில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சி இதோ!

கர்நாடக மாநில முதலமைச்சராக இருந்த திரு.பொம்மை அவர்கள் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் டாக்டர் களுக்கென்று ஒதுக்கப்பட்ட எம்.டி. சீட் கோட்டாவில் சொந்தமாகத் தொழில் செய்யும் ராமகிருஷ்ண ரெட்டி என்ற டாக்டருக்கு இடம் தரச் சொல்லி உத்தரவிட்டிருந்தார். இது வேண்டியவருக்கு சலுகை காட்டும் ஊழல் என்றும், முதல்வர் பொம்மை பதவி விலக வேண்டுமென்றும் இந்திரா காங்கிரசார் கர்நாடக மேலவையிலே போராட்டம் நடத் தினர். "ராமகிருஷ்ண ரெட்டி அரசு டாக்டர் இல்லாவிட் டாலும் திறமை மிக்கவர், புத்திசாலி, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையில் தேசிய விருது பெற்றவர், எனவேதான் மேல் படிப்பு படிக்க எனக்குரிய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்கு சீட் தரச் சொன்னேன். இதை ஊழல் என்று கருதினால் நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்கு போடுங்கள், தீர்ப்பு எப்படி வந்தாலும் நான் கட்டுப் படுகிறேன்" என்று முதல்வர் பொம்மை பதிலளித்தார். மேலும், இவருக்கு இடம் வழங்க பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான திருமதி கே.எஸ். நாகரத்தினம்மா பரிந்துரை கடிதத்தை அனுப்பியிருப்பதாகவும் முதல்வர் கூறியும் காங்கிரசார் கேட்கவில்லை. போராட்டம் நடத்தியதோடு மேலவையிலே தர்ணாவும் மேற்கொண்டு அமளியில் ஈடுபட்டனர். மேலவைத் தலைவர் எவ்வளவு சொல்லியும் கேளாததால் பின்னர் 12 இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் நடைமுறை குறித்து 28-3-89 தேதிய தினமணி இதழ் தலையங்கத்தில் குறிப் பிட்டிருந்த சில வாசகங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை யாகும்.

"கடந்த வார சட்டமன்ற அமளிகள் தமிழகத்தில் உரசினால் பற்றிக் கொள்ளும் பாஸ்பரஸ் சூழ்நிலையை உருவாக்கியிருக்கும் தருணத்தில் இ.காங்கிரஸ் தலைவர்களின் சிந்தனைப்போக்கு கவலை தருவதாக இருக்கிறது. சட்டமன்றத்தில் நிகழ்ந்த ஜனநாயக விரோதமான காட்சிகளுக்கும், தமிழ்நாட்டில் நிலவும் கெடுபிடியான அரசியல் சூழ்நிலைக்கும் ஆளும் கட்சி மட்டும் பொறுப்பல்ல, எதிர்க்கட்சிகளுக்கும் சம பொறுப்புண்டு. குறிப்பாக சட்டப்பேரவையில் அமளிகள் உருவாவதற்கு எதிர்க்கட்சிகளின் சண்டித்தனமான செயல்முறையே காரணமாக இருந்தது. காங்கிரசும் அ.தி.மு.க.வும் சட்டமன்றத்திலும் வரும் தேர்தல்களிலும் இணைந்து செயல்படப் போவதாக தினேஷ் சிங்கைச் சந்தித்தபிறகு ஜெயலலிதா கூறியிருக்கிறார். இதில் ஆட்சேபிப்பதற்கு ஏதுமில்லை. ஆனால் மத்திய அரசின் அதிகார பலத்தை துஷ்பிரயோகம் செய்து இரண்டு மாதங்களுக்கு முன்புதான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசைக் கவிழ்ப்பது இக்கூட்டு முயற்சியின் நோக்கமாக இருக்கக் கூடாது."

இதுபோன்ற கருத்தினை அழுத்தம்திருத்தமாக தமிழகத்தில் மட்டுமின்றி வடமாநிலத்து ஏடுகளும் வெளியிட்டதைக் காண எனக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

6 356 பிரிவு குறித்து முக்கிய தீர்ப்பு!

எனக்கு மிகவும் பிடித்த பொன்மொழிகளில் ஒன்று; "நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்" என்பதாகும்.

இதனை எனது வாழ்க்கை வரலாறு கொண்டு மாத்திரமல்ல; என்னுடன் இரண்டறக் கலந்துள்ள இந்த திராவிட இயக்க வரலாறு கொண்டும் எண்ணிப் பார்க்கிறேன்.



பெருந்தலைவர் காமராஜருடன்
தலைவர் கலைஞர் அவர்கள் உரையாடும் காட்சி.

திராவிட இயக்கத்தின் வைகறைப் பொழுது எனப்படும் 1916ஆம் ஆண்டிலிருந்து இந்த 85 ஆண்டு கால நீண்ட தூரப் பயணத்தில்; தொடக்கத்தில் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே ஆட்சி மன்றப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் எனும் உரிமை முழக்கத்தினால்; அடித்தட்டு மக்களை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை, கல்வி வேலை வாய்ப்புக்களில் தலை தூக்கிப் பார்க்கச் செய்ய முடிந்தது என்றாலும் சமூக ரீதியான விழிப்புணர்வையும், அரசியல் ரீதியான உரிமைகளையும் அந்த மக்கள் முழுமையாகப் பெற்றிட வாய்ப்புகள் வராமலே போயிற்று.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே டாக்டர் அம்பேத்கர் எழுப்பிய குரலும், அண்ணல் காந்தியடிகள் காட்டிய பரிவும், பெரியார் புரிந்த கர்ச்சனையும் கண்மூடிக்கிடந்த மக்களைத் தட்டியெழுப்பிடப் பெரிதும் துணையாக அமைந்தன.

இந்தியா முழுமையும் அடிமைச் சங்கிலி அறுக்கப்பட்ட ஆனந்தத்தில் மிதந்தாலும்; தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் ஓர் ஏக்கம் இருக்கத்தான் செய்தது.

சுதந்திரம் பெற்ற பிறகு 1947 முதல் ஓர் இருபதாண்டு காலம்; இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியே நடைபெற்றது. ஆனால் வட மாநிலங்களில் நிறைவேற்றப்பட்ட மிகப் பெருந்திட்டங்கள், பிரமாண்டமான தொழிற்சாலைகள், இவற்றுக்கு ஈடாகத் தமிழ்நாட்டில் திட்டங்களோ, தொழில் வளங்களோ இல்லை. ஏதோ பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த ஒன்பதாண்டு காலத்தில் சிறார்க்குக் கல்விக்கண் திறக்கப்பட்டதுடன் சில தொழிற்சாலைகள், அணைக்கட்டுத் திட்டங்கள் எனத் தமிழகம் பெற்ற நன்மைகள் பட்டியலிடப்பட்டன.

அதனால்தான் "வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது" என்ற வருத்தமும்; "சிந்திரித் தொழில் சிறக்கிறது அங்கே! முந்திரித் தொழிலும் சிதைகிறது இங்கே!" என்ற ஆதங்கமும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோஷங்களாக வெளிப் பட்டன. 1957-ஆம் ஆண்டு; வெட்ட வெளியில் முழங்கினால் மட்டும் போதாது; சட்டசபையிலும் முழங்கினால்தான்; கோஷங்களாக இருக்கக்கூடிய நமது கொள்கைக்கும் கோரிக்கைகளுக்கும் வெற்றி கிடைக்கும் என்பதற்காக; வெறும் சமுதாய இயக்கமாக மட்டுமன்றி அரசியல் துறையி லும் பணியாற்ற முனைந்து, அண்ணா அவர்கள் தலைமை யில் 15 பேர் சட்டமன்றத்தில் இடம் பெற்றிருந்தபோது; அன்றைய முதலமைச்சர் காமராசர் அவர்களையும், நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் அவர்களையும் பார்த்து; "எங்களைக் காட்டி; டெல்லியிடமிருந்து தமிழ்நாட்டுக்குப் பெற வேண்டியவைகளைப் பெறுங்கள்!" என்று அண்ணா கேட்டுக் கொண்டார்.

தமிழ் உணர்வு போற்றுகிற இயக்கமாகவும், தமிழ் மொழி காத்திடும் இயக்கமாகவும், தன்மான இயக்கக் கொள்கை களைப் பரப்பிடும் இயக்கமாகவும், சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபடும் இயக்கமாகவும், அதே சமயம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் இயக்கமாகவும் இருந்து எழுப் பிடும் குரலுக்குச் செயல்வடிவம் கிடைக்க வேண்டுமானால் ஆட்சி பீடத்தில் இந்த இயக்கம் அமர வேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்பினார்கள். அவர்கள் விருப்பம் 1967-ல் நிறைவேறி, அண்ணா அவர்கள் கையில் ஆட்சிப் பொறுப்பு வந்தது. எதிர்க்கட்சியாக இருந்து வைத்த கோரிக்கைகளைச் செயல்படுத்தும் வாய்ப்பை அண்ணாவும் அவர் தலைமை யில் இருந்த கழக ஆட்சியும் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

அதன் விளைவுதான் சென்னை ராஜ்யத்துக்கு தமிழ்நாடு என்று பெயர்.

சுயமரியாதைத் திருமணங்கள் இதுவரை நடைபெற்றவை களும் இனி நடைபெறப் போகிறவையும் சட்டப்படி செல்லும் என்ற பேரவைத் தீர்மானம்.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் - ஆங்கிலம் என்ற இரு மொழிகளுக்குத்தான் இடம்! இந்திக்கு இடமில்லை என்ற உறுதியான நிலை!

அண்ணாவின் மறைவுக்குப் பிறகும்; தி.மு. கழகத்தின் நீண்டகாலக் கோரிக்கைகளும், திராவிட இயக்கத்தின் தொடக்க காலத் தீர்மானங்களும் எனது தலைமையில் நடைபெற்ற ஆட்சியிலும் அரசாணைகளாகவும் அல்லது சட்டங்களாகவும் பிறப்பிக்கப்பட்டன.

நல்ல எண்ணத்துடன் பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் 1960-ல் கொண்டு வரப்பட்ட 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்புச் சட்டம்; பெரும் நிலச் சுவான்தாரர்களின் முன்னேற்பாட்டுத் தந்திரத்தால் வெற்றியே பெறாமல் போனதை உணர்ந்து; கழக ஆட்சியில் 1970-ல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்து அதன் வாயிலாக 1 லட்சத்து 79 ஆயிரம் ஏக்கர் நிலம் உபரி நிலமாகக் கையகப்படுத்தப்பட்டு நிலமற்ற ஏழை விவசாயிகள் 1 லட்சத்து 37 ஆயிரம் பேருக்குப் பிரித்து வழங்கப்பட்டது. இதில் 62 ஆயிரம் பேர் தாழ்த்தப்பட்டவர்கள்.

இந்தியாவிலேயே கழக ஆட்சியில் முதன் முறையாகக் குடியிருப்புமனைச் சட்டம் 1971-இல் கொண்டு வரப்பட்டு, மிராசுதாரர்களின் நிலங்களில் வீடு கட்டிக் குடியிருந்த 1 லட்சத்து 75 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்க்கு அந்த வீடுகள் சொந்தமாக்கப்பட்டன. அதில் தாழ்த்தப்பட்டோர் மட்டும் 1 லட்சம் பேர்!

1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் சௌந்திரபாண்டியனார் தலைமையில் பெரியார் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானமான "பெண்களுக்கும் ஆண்களைப் போல சொத்தில் சம பங்கு" என்பதை; 60 ஆண்டுக்குப் பிறகு 1989-ல் சட்டமாக ஆக்கிய பெருமையும் தி.மு.க. ஆட்சிக்கு உண்டு.

காமராசர் ஆட்சியில் பள்ளி இறுதி வகுப்பு வரை என்றிருந்த இலவசக் கல்வி, கழக ஆட்சியில் புகுமுக வகுப்பு வரையிலே இலவசக் கல்வியென விரிவு படுத்தப்பட்டது. மின்விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்ற நிலையை உருவாக்க சபதம் செய்து அறிவித்து எல்லா



சௌந்திர
பாண்டியனார்

கிராமங்களுக்கும் மின்விளக்கு வசதி செய்திட வழி காணப்பட்டது. 20 ஆயிரம் ஆதிதிராவிடர் காலனிகளில் 18 ஆயிரம் காலனிகளுக்கு மின் விளக்கு வசதி செய்து தரப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மீனவர் களுக்கும் இலவசமாக வீடு கட்டி வழங்கும் திட்டம் தொடங்கப் பட்டது. பேருந்துகளை தேசிய மய மாக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. அனைத்துச் சாதி யினரும் அர்ச்சகராக ஆகலாம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டு, அது உச்சநீதிமன்றத் தீர்ப்பால் தடைப்பட்டது.

1974-ஆம் ஆண்டு; அரசு அலுவலர் பணியாற்றும் காலத்தில் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அது படிப்படியாக உயர்ந்து பின்னர் ஒரு லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்தது. கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் அறிவிக்கப் பட்டு, அது பின்னர் 20 ஆயிரம் ரூபாய் அளவுக்கு உயர்ந்தது. 1970-ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டும் திட்டமும், 1971-ஆம் ஆண்டு இரவலர் மறுவாழ்வுத் திட்டமும், 1972-ஆம் ஆண்டு கண்ணொளி வழங்கும் திட்டமும், 1973-ஆம் ஆண்டு கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டு இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டமும், 1974-ஆம் ஆண்டு ஊனமுற்றோர் மறு வாழ்வுத் திட்டமும், கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டமும், ஆதிதிராவிடர்களுக்கு இலவச காங்க்ரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டமும் கழக ஆட்சியின் சாதனைப் பட்டியலிலே இடம் பெற்ற திட்டங்களாகும்.

ஆகஸ்ட் 15 அன்று கோட்டையிலே விடுதலை நாளன்று கொடியேற்ற உரிமை இந்தியாவிலே உள்ள அனைத்து முதல மைச்சர்களுக்கும் கிடைக்கத்தக்க வகையில் மத்திய

ANNA CENTENARY LIBRARY

அரசிடம் கேட்டுப் பெற்றதும் கழக ஆட்சிக் காலத்திலே நான் மேற்கொண்ட முயற்சியின் விளைவுதான்.

இந்தப் பட்டியலின் தொடர்ச்சியாகத்தான் 1989-ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற போதும், தேர்தல் அறிக்கையிலே அறிவித்த பல்வேறு திட்டங்களில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுவதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினர்க்கும் 20 சதவிகிதம் கல்வி வேலை வாய்ப்பில் தனி ஒதுக்கீடு செய்தது, நலிந்த பிரிவினருக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தியது, வட சென்னையில் புதிதாக அனல் மின் நிலையம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தது, ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவாக மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம் என்ற பெயரில் அனைத்து வகுப்பைச் சேர்ந்த ஏழை, நடுத்தரப் பெண்களுக்கு இளங் கலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியது, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் நினைவாக மகப்பேறு நிதி உதவித் திட்டத்தைத் தொடங்கியது ஆகியவைகள் எல்லாம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட சீர்மிகு திட்டங்கள்தான்.

பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, முதியோர் உதவித் தொகை பெற அதற்கு முன்பு இருந்த எண்ணிக்கை உச்சவரம்பு நீக்கப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாற்றியமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடன்களின் தவணை தவறிய கடன்தொகைகள் அனைத்தும் அறவே ரத்து செய்யப்பட்டதோடு, குறுகிய, மத்தியக் காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப் பட்டது. நீண்ட காலக் கடன்கள்மீது ஒத்தி வைக்கப் பட்டிருந்த வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டது. பத்தாயிரம் ரூபாய் வரை கடன் நிவாரணம் அளிக்கும் மத்திய

அரசின் திட்டத்தின் கீழ் கூட்டுறவு, வணிக, கிராமிய வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிருந்த சுமார் 19 லட்சம் விவசாயிகளுக்கு 508 கோடி ரூபாய் கடன் நிவாரணம் அளிக்கப்பட்டது.

1990-ஆம் ஆண்டு, கழக ஆட்சியிலேதான் விவசாயி களுக்கு இலவச மின்சாரம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் சேர்ந்து கல்வி, வேலை வாய்ப்பில் 18 சதவிகிதம் என்றிருந்த இட ஒதுக்கீட்டினை மாற்றி தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் 18 சதவிகிதம் என்றும் மலைவாழ் மக்களுக்கு தனியாக ஒரு சத விகிதம் ஒதுக்கீடு என்றும் ஆக்கப்பட்டது.

இத்தனை சாதனைகளுக்கும், மக்கள் நல்வாழ்வு வளர்ச் சித் திட்டங்களுக்கும் வழி வகுத்ததும்; வழி வகுத்திடக் கூடியதுமான நிதிநிலை அறிக்கையை நான் படிக்கத் தொடங்கியபோது அ.தி.மு.க.வினர் ஆரம்பித்த கலவரம் ஒவ்வொரு நாளும் அவையிலே தொடரவே செய்தது. அ.தி.மு.க. உறுப்பினர்கள் கறுப்புத் துணி அணிந்து கொண் டும், வாயைக் கட்டிக்கொண்டும், அவைக்கு வருவதும், கேள்வி நேரம் முடிந்ததும் ஏதாவதொரு பிரச்சினையைக் கிளப்பி அதைக் காரணமாக வைத்து கூச்சலிட்டவாறு வெளிநடப்பு செய்வதுமாக இருந்தனர். நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் முடிந்து 3-4-1989 அன்று நான் பதிலுரை ஆற்ற முற்பட்ட போதும் அவர்கள் அமைதியாக இருந்து என்னுரையைக் கேட்கத் தயாராக இல்லை.

நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி 27-3-89 நாளிட்ட இந்து, 29-3-89 நாளிட்ட பைனான்ஷியல் எக்ஸ்பிரஸ் மற்றும் எகானமிக் டைம்ஸ் ஏடுகள் எழுதியிருந்தன.

பதில் உரையில் எந்தெந்த தேர்தல் வாக்குறுதிகள் நிறை வேற்றப்பட்டுள்ளன என்பதற்கான விவரங்கள்- மாநிலத் திட்டக் குழு, பாசன மேம்பாட்டு நிலைக்குழு, இந்து அறநிலையத் துறை ஆக்கப்பணி ஆலோசனைக் குழுக்கள்

பற்றிய அறிவிப்பு- விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி விகித உயர்வு ஆகியவை இடம் பெற்றிருந்தன.

1974-க்கு முன்பே அடிக்கல் நாட்டப் பெற்று, கட்டி முடிக்கப்பட்டிருந்த சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலகத்திற்கான 12 மாடிக் கட்டிடத்திற்கு இந்தி எதிர்ப்புத் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் பெயர் சூட்டி 14-4-1989 அன்று திறப்பு விழா நடத்தி வைத்தேன்.

இந்தியத் திரைப்படத் துறையின் 75-வது ஆண்டு விழாவை யொட்டிய பவள விழா மற்றும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் 50-வது ஆண்டு பொன் விழா 16-4-89 மாலை- சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத் தில் நடைபெற்றது. குத்துவிளக்கேற்றி விழாவை குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். ஆளுநர் அலெக்சாண்டர், மத்திய தகவல் ஒளி பரப்புத்துறை அமைச்சர் எச்.கே.எல். பகத், மாநில செய்தித் துறை அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர். அகில இந்திய அளவில் புகழ்பெற்ற 75 கலைஞர்களுக்கு பதக்கம் வழங்கப்பட்டது. கலைத்துறைப் பணிக்கான முதல் பதக்கம் எனக்கு மத்திய அமைச்சர் எச்.கே. எல். பகத் அவர்களால் வழங்கப்பட்டது. மற்ற கலைஞர் களுக்கு பதக்கங்களை நான் வழங்கினேன்.

பதக்கம் பெற்றவர்களில் முக்கியமானவர்கள் நடிகர் திலகம் சிவாஜி, ஏ. நாகேஸ்வர ராவ், ராஜ்குமார், அசோக் குமார், மது, நடிகை சாரதா, எம்.என். நம்பியார், இயக்குநர் கிருஷ்ணன், கவிஞர் மருதகாசி, ஜி. உமாபதி, இயக்குநர் ரிஷிகேஷ் முகர்ஜி, ஏ.வி.எம். சரவணன், நடிகை அஞ்சலி தேவி, ஜி.பி. சிப்பி, நௌசாத் அலி, பி.கே. கரஞ்சியா, சுந்தர் லால் நஹாதா, பிலிம் நியூஸ் ஆனந்தன் மற்றும் பலராகும்.

விழாவில் நான் உரையாற்றும் போது, அரசியல் துறையில் ஆயிரம் மாறுபாடுகள் கடைசி காலத்தில் ஏற்பட்டாலுங் கூட ஆரம்ப காலந்தொட்டு 40 -ஆண்டு கால கலையுலக வாழ்க்கையில் ஒன்றாகப் பழகிய என்னுடைய அருமை

நண்பர் எம்.ஜி.ஆர். பெயரால் தமிழக அரசின் சார்பில் தரப்படுகிற கலைஞர்களுக்கான ஒரு விருது வழங்கப்படு மென்று அறிவித்தேன்.

மேலும் அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 30 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கி எம்.ஜி.ஆர். மறைந்து அடக்கம் செய்தவிடத்தில் எந்தவிதமான நினைவு மேடையும் கட்டப்படாமல் கற்கள் மட்டுமே கொட்டிக் கிடந்த நிலையை மாற்றி உடனடியாக அந்த இடத்தை அழகுபடுத்து வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டு மென்று பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகனிடம் கூறி அவ்வாறே அந்த இடம் அழகு படுத்தப்பட்டது.

அந்த வாரம் 21-4-1989 அன்று இரவு கர்நாடக மாநிலத்தில் எட்டு மாதகாலமாக திரு.பொம்மை அவர்கள் தலைமை யிலே நடைபெற்று வந்த ஜனதாதள அரசு திடீரென்று 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டு, மாநில சட்டப் பேரவையும் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் இரவு 8 மணிக்கு உள்துறை அமைச்சர் பூட்டாசிங் அவர்கள் அந்த அறிவிப்பினைச் செய்தார். பொம்மை அமைச்சரவைக்கு ஆதரவு அளித்து வந்த 19 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவை விலக்கிக் கொண்டதால் அவரது அரசு சிறுபான்மையாகி விட்டது என்று மாநில ஆளுநர் வெங்கட சுப்பையா அளித்த அறிக்கையை ஏற்று குடியரசுத் தலைவர் இந்த ஆணையைப் பிறப்பித்தார்.

உடனடியாக குடியரசுத் தலைவரை முக்கிய தலைவர்கள் சந்தித்து கர்நாடக அரசு கலைப்பு குறித்து தங்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். அந்தக் குழுவில் ஆந்திர முதல்வர் என்.டி.ஆர்., ஜனதாதள தலைவர் வி.பி.சிங், நாடாளுமன்ற ஜனதா தள தலைவர் மதுதண்டவதே, அரியானா முதல்வர் தேவிலால், சி. மாதவ ரெட்டி, பி. உபேந்திரா (தெலுங்கு தேசம்), வாசுதேவ் ஆசார்யா (மார்க்சிஸ்ட்), சதுரணன் மிஸ்ரா (இந்தியக் கம்யூனிஸ்ட்), தினேஷ் கோஸ்வாமி (அஸ்ஸாம் கண பரிஷத்), எஸ்.சி. சின்ஹா (எஸ். காங்),

அமர்ராய் பிரதான் (பார்வர்டு பிளாக்), பயஸ் திர்கே (ஆர்.எஸ்.பி.), தி.மு. கழகத்தின் சார்பில் என்.வி.என். சோமு எம்.பி., ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

பொம்மை அரசுக்கு 19 பேர் முதலில் தங்கள் ஆதரவை விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்தபோதிலும், அதிலே 7 பேர் அன்று மாலையே தங்கள் ஆதரவைத் தொடர்ந்து தருவதாகக் கூறினர். மேலும் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் 4 உறுப்பினர்களும் தங்கள் ஆதரவை பொம்மை அரசுக்குத் தருவதாகக் கூறினார்கள். முதல்வர் பொம்மை அவர்களோ, 27-ந்தேதி சட்டசபையைக் கூட்டுங்கள், அதிலே எனக்கு பெரும்பான்மை இருக்கிறதா என்பதை முடிவு செய்து கொள்ளலாம் என்றார்.

மத்திய, மாநில அதிகாரங்கள் குறித்து ஆய்வு செய்த சர்க்காரியா கமிஷன், ஒரு அமைச்சரவைக்கு பெரும்பான்மை இருக்கிறதா இல்லையா என்பதை சட்டசபையைக் கூட்டித் தான் முடிவு செய்ய வேண்டுமென்று கூறியிருந்தபோதிலும், உச்ச நீதிமன்றத்திலேயே இந்த நிகழ்ச்சிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னால் நாகாலந்து அரசை டிஸ்மிஸ் செய்தது சரியா என்ற பிரச்சினையிலே தீர்ப்பு கூறியபோது, சட்ட சபையைக் கூட்டித்தான் பெரும்பான்மை இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு கட்ட வேண்டுமென்று தெரிவித்ததற்கும் மாறாக கர்நாடக அரசு கலைக்கப்பட்டது என்பதுதான் ஜனநாயகத்தில் ஒரு வேதனையான நிகழ்ச்சியாகும்.

குடியரசுத் தலைவர் ஆட்சியை எதிர்த்து முதல்வர் எஸ்ஆர். பொம்மை அவர்களும் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கு ஐந்து ஆண்டுக் காலம் நடைபெற்று 1994-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ஆம் நாள் உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பளிக்கப்பட்டது. 1989-ஆம் ஆண்டில் கர்நாடக அரசு கலைக்கப்பட்டது குறித்தும், 1988-இல் நாகாலந்து அரசு கலைக்கப்பட்டது குறித்தும், 1991-ஆம் ஆண்டில் மேகாலய அரசு கலைக்கப்பட்டது குறித்தும், 1992-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், இமாலயப்

பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் கலைக்கப்பட்டது குறித்தும் அந்தந்த மாநிலங்களின் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்திலே ஒன்பது நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் தமிழகத்தைச் சேர்ந்த நீதிபதி திரு. ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் விசாரணையை நடத்தி, வரலாற்றில் இடம் பெறத்தக்க தீர்ப்பினை வழங்கினார்கள். இந்தத் தீர்ப்பிலே, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளைக் கலைத்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டது செல்லும் என்று தீர்ப்பளித்த போதிலும், கர்நாடக அரசு, நாகாலந்து, மேகாலயா மாநிலங்களில் அரசு கலைக்கப்பட்டதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு மாநில அரசைக் கலைத்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டால் மட்டும் போதாது, குறிப்பிட்ட காலத்துக்குள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும், அப்போதுதான் அது செல்லுபடியாகும் என்ற சிறப்புக்குரிய தீர்ப்பு அந்த வழக்கிலேதான் வழங்கப் பட்டது. எந்த ஒரு வழக்கிலாவது, மாநில அரசைக் கலைத்து குடியரசுத் தலைவர் உத்தர விட்டது செல்லாது என்று நீதிமன்றம் கருதுமானால் அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் கலைக்கப்பட்ட அரசை உயிர்ப்பிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் பெரும்பான்மையான நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியிருந்தார்கள்.

இதே காலகட்டத்தில் நடைபெற்ற மற்றொரு முக்கிய நிகழ்ச்சி சோவியத் யூனியனில் நடைபெற்ற தேர்தல். 26-3-1989 அன்றுதான் சோவியத் அதிபர் மைக்கேல் கோர்பசேவ் அவர்களும், லட்சக்கணக்கான சோவியத் மக்களும் அந்த நாட்டிலே முதன்முதலாகப் பல வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலில் வாக்களித்தனர். இந்தத் தேர்தல்; அதிபர் யார் என்பதை நிர்ணயிக்கக் கூடிய தேர்தல் இல்லை என்ற போதிலும், அந்த நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு, பாதுகாப்புத் துறைகள் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடிய அமைப்பிற்கான தேர்தலாகும். கம்யூனிஸ்ட்


கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து; சோவியத் யூனியனின் அதிபராக 1990-ஆம் ஆண்டு கோர்பசேவ் பொறுப்பேற்றுக் கொண்ட சூழலில் சோவியத்தில் ஜன நாயக சமதர்மக் கொள்கை, பொருளாதாரத்தில் சீர்திருத்தம் போன்ற புதிய நிலைகளை அறிமுகப்படுத்தினார்.

எரிமலையில் திடீரென பனிக்கட்டிக் குழம்பு வழியத் தொடங்குகிறதே என உலகம் வியப்புடன் பார்த்தபோது; எரிமலையே வெடித்துச் சிதறிய காட்சியைப் பார்க்க நேரிட்டது. இதற்கான விளக்கத்தை அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

7 ராஜீவ் - மாநன் கடிதப் போக்குவரத்து

"இம்மென்றால் சிறைவாசம்; ஏன் என்றால்
வனவாசம்; இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்,
இமயமலை வீழ்ந்தது போல் வீழ்ந்துவிட்டான்
ஜார் அரசன்; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக் கெல்லாம் பொய் கூறி
அறங் கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்"

என்று எந்தப் பாரதிப் புலவர் 1917 அக்டோபர் புரட்சியினால் ஆர்த்தெழுந்த பொதுவுடைமைப் பூங்கா சோவியத் ரஷ்யாவைப் பற்றிப் "புதிய ருஷ்யா" என்ற தலைப்பில் ஆவேசமான வரிகளைப் பாடினாரோ; அந்தச் சமதர்ம பூமி, தனது 70-வது ஆண்டு விழாவைக் கொண்டாடிவிட்டு அடுத்த மூன்றாண்டுகளில்; 1990-1991 ஆம் ஆண்டுகளின் வாக்கில் உலக நாடுகளின் கண்களுக்குப் பின்னடைவுப் பிரதேசமாகத் தோற்றமளிக்கத் தொடங்கி விட்டது.


கோர்ப்பசேவ்

அந்த வீழ்ச்சியின் கதாநாயகனாகச் சரித்திரம் சித்தரிப்பது; தொடக்கத்தில் சோவியத் யூனியன் மக்களால் மலையளவு புகழப்பட்டு; பிறகு அவர்களே மறந்து போய் விடுகிற அளவுக்கு ஆகி

விட்ட கோர்ப்பசேவ் என்று சொன்னால் அதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்து கொண்டே, அதை வைத்துப் பல்கலைக் கழக சட்டப்படிப்பு வரையில் தேர்வு பெற்று; சிறந்த சிந்தனை யாளராக விளங்கிய அவர், பொதுவுடைமைக் கட்சியின் இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பேற்று, தனது 39-வது வயதில்; ஸ்டாலினுக்குப் பிறகு குருஷேவ் ஆதிக்கம் சோவியத்தில் தொடங்கிய போது "ஸ்டவ்ரோ போவ்" என்ற பகுதிக்கு கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளராக ஆனார்.

1977-ஆம் ஆண்டு விவசாய அறுவடை முறையில் ஒரு புதிய அணுகுமுறையைக் கண்டுபிடித்ததின் காரணமாக, கோர்ப்பசேவ் பெரிதும் புகழப்பட்டார்.

பின்னர் 78-ஆம் ஆண்டு பிரஷ்னேவ் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக இருந்தபோது, இவரது செல்வாக்கு மாஸ்கோ வரையில் பரவியது. அப்போது சோவியத் யூனியன் தலைவர்கள் வரிசையில் 20-வது இடத்துக்கு உயர்ந்தார்.

1985-ஆம் ஆண்டு அவர் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கே உயர்ந்தது; சோவியத் ஆய்வாளர்கள் மத்தியில் பரபரப்புடன் கவனிக்கப்பட்டது. 1984ல் ஆந்த்ரப் போவ் இறந்து போனதும், இவர்தான் அடுத்து பொறுப்புக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக; செரன்கோ என்பவர் பொறுப்பேற்றார். அவரின் உடல்நிலை சரியாக இல்லாததால் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை முழுமை யாகக் கவனித்து வந்த கோர்ப்பசேவ், செரன்கோவின் மறைவுக்குப் பிறகு 1985-ல் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளரானார். தொடர்ந்து 1990-ஆம் ஆண்டின் வாக்கில் சோவியத் யூனியனின் அதிபராகவும் பொறுப் பேற்றார்.

சோவியத் மக்கள், கோர்ப்பசேவுக்கு முன்னாலிருந்து மறைந்த தலைவர்களுடன் அவரை ஒப்பிட்டுப் பார்த்து; அவரிடம் தனியாக ஒரு மரியாதை கொள்ளத் தொடங்கினர்.

லெனினுக்கு; பேசுவதில் சிறு குறைபாடு- ஸ்டாலினுக்கு பெரிய மீசை- பிரஷ்னேவுக்கு முடிகள் அடர்த்தியான புருவம்- குருஷேவுக்கு முழுமையான வழுக்கை- ஆகியவை களுடன் கோர்ப்பசேவுக்கு முன்தலையில் உள்ள பெரிய தொரு தழும்பை ஒப்பிட்டு; அது பைபிள் குறிப்பிடும் மாதிரியான தூதராக வந்துள்ளார் என்பதற்கு அடையாள மென சோவியத்தில் மக்கள் பேசிக் கொண்டதாக செய்திகள் வந்தன.

அவர் சோவியத் ரஷ்யாவின் தலைமையை ஏற்ற பிறகு, முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளை நடைமுறைப் படுத்தத் தொடங்கினார். சோவியத் யூனியனின் தேசிய இனங்கள் வாரியாக மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமையை நடைமுறைப்படுத்தினார். உள்நாட்டில் கிலாஸ் நோஸ்த் (சுதந்திர சமுதாயம்) மற்றும் பெரெஸ்த் நோய்க்கா (பொருளாதாரச் சீரமைப்பு) போன்ற ஜனநாயக ரீதியான கொள்கைகளை வகுத்ததுடன்; வெளி விவகாரங்களில் படைபலக் குறைப்பு, அணு ஆயுதக் குறைப்பு ஆகியவற்றை மேற்கொண்டார்.

இவற்றால் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளும்- பின் விளைவுகளும்- சோவியத்தை பலவீனப்படுத்திய காலகட்டத் தில்; 1979-ஆம் ஆண்டிலேயே சோவியத் யூனியனால் ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் அனுப்பப்பட்டிருந்த ஒரு லட்சம் ராணுவ வீரர்கள் கோர்ப்பசேவ் ஆட்சிக் காலத்தில் அமெரிக்க உதவியோடு தாலிபான்களால் தாக்கப்பட்டு தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

கோர்ப்பசேவுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு 1990-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ஆம் நாள் வழங்கப் பட்டது. நோபல் பரிசு பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாட முடியாத அளவிற்கு கலவரங்களும், குழப்பங்களும்,

பொருளாதார வீழ்ச்சியும் சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்டன. சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைந்து சிதைந்ததற்கும், பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டதற்கும் பல காரணங்கள் குறிப்பிடப்பட்டாலும், சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தான் மீது தொடர்ந்த போரும், அதில் சந்தித்த தோல்வியும்தான் ஒரு முக்கிய காரணமாக ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.

சோவியத்தின் பழைய தலைவர்களுடன் கோர்ப்பசேவை ஒப்பிட்டு- அனைவரிலும் உயர்ந்தவர் என்றும் "தூதர்" என்றும் புகழ்ந்து பேசிய மக்கள், பின்னர் அவரை மறந்தே போய்விட்டனர்.

டுனீஷ்ய தலைநகரில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தேசிய கவுன்சில் கூட்டம் 2-4-1989 அன்று நடைபெற்று யாசர் அராபத் அதிபராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார் என்பது அந்த ஆண்டின் வரலாற்று நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இதே ஆண்டு இந்திய அரசியல் சாசனத்தின் 61-வது திருத்த மசோதா குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்று சட்டமாக ஆக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் பயனாகத்தான் வாக்காளர்களின் வயது 21-லிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது. அரசியல் சாசனத்தின் 326-வது பிரிவை இதற்காகத் திருத்தி அமைக்க நாடாளுமன்றத்திலே மசோதா நிறைவேற்றப்பட்டு அதற்குப் பிறகு பெரும்பாலான மாநிலப் பேரவைகளிலும் அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு அவராலும் அங்கீகாரம் தரப் பட்டு சட்டமாக ஆக்கப்பட்டது.

மார்ச் 31, 1989 அன்று சட்டப்பேரவையில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.டி. உக்கம்சந்த், சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு கோழி முட்டை வழங்குவதற் கான செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா என்று கேள்வி நேரத்தின்போது கேட்க, அந்தத் துறையின் அமைச்சர்

திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் எழுந்து பதில் அளிப்பதற்கு முன்பு நான் குறுக்கிட்டு எழுந்து சத்துணவுத் திட்டம் உண்மையிலேயே சத்துணவுத் திட்டமாக இருக்க வேண்டும் என்பதற்காக பள்ளிக் குழந்தைகளுக்கு கோழி முட்டை வழங்கப்பட வேண்டுமென்ற கருத்து கழகத் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டது உண்மைதான் என்றும், ஜூன் திங்கள் 3-ஆம் தேதி முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். அறிவித்ததோடு நில்லாமல் 1989-இல் ஜூன் 3-ஆம் தேதியிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முட்டை வழங்கப் பட்டது. ஏழைப் பெற்றோர்கள் தங்களால் வாங்கிக் கொடுக்க முடியாதது குறைந்த பட்சம் 15 நாட்களுக்கு ஒருமுறையாவது தங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கிறதே என்ற மகிழ்ச்சியில் இருந்தார்கள். அதற்கிருந்த வரவேற்பைக் கண்ட கழக அரசு பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முட்டை என்றிருப்பதை வாரம் ஒரு முட்டை என்று மாற்றி அதன்படியே வழங்கி வந்தது. ஏழைக் குழந்தைகள் அதனை மகிழ்ச்சியோடு சாப்பிட்டு வந்தார்கள்.

(கழக அரசு காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் ஆயிற்றே; எனவே 2001 தேர்தல் முடிந்து அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக அந்தப் பள்ளிக் குழந்தைகளின் உண விலே கை வைத்து, இனிமேல் முட்டை கிடையாது, அதற்குப் பதிலாக உருளைக்கிழங்கு போடுகிறோம் என்று கூறி முட்டை வழங்கும் திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது!)

1989 ஏப்ரல் முதல் வாரத்தில் ஜெயலலிதா டெல்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து- நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் 198 இடங்களில் போட்டியிட்டு 28 இடங்களை மட்டுமே பெற்ற அ.தி.மு.க.வும்- 208 இடங்களில் போட்டியிட்டு 26 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற இ.காங்கிரசும் மீண்டும் கூட்டணி அமைக்க முடிவு செய்து அறிவிக்கப்பட்டது. ஜெயலலிதா அதே நாளில் குடியரசுத்



கலைஞருடன் சி.எஸ்., மால்கம் ஆதிசேஷையா, மணவை முஸ்தபா

தலைவர் வெங்கட்ராமனையும், உள்துறை அமைச்சர் பூட்டா சிங்கையும் சந்தித்தார்.

செய்தியாளர்களிடம் பின்னர் ஜெயலலிதா கூறும்போது, இரண்டு கட்சிகளும் கூட்டணி அமைப்பது தொடர்பாக ராஜீவ் காந்தியுடன் பேசியதாகவும், இந்த இரு கட்சிகளுக் கிடையே எம்.ஜி.ஆர். காலத்திலேயே கூட்டணி இருந்ததால் மீண்டும் கூட்டணி அமைப்பதில் எந்த சிரமமும் இல்லை என்றும், இந்தக் கூட்டணிக்காக காங்கிரஸ் கட்சியிடமிருந்து பிரதியுபகாரமாக எதையும் பெற விரும்பவில்லை என்றும், இனி நடைபெறவிருக்கின்ற எல்லா தேர்தல்களிலும் கூட்டணி நீடிக்குமென்றும், 25-3-89 தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்காக விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று பிரதமரிடம் தான் கேட்டுக் கொண்டிருப்பதாகவும், அந்த விசாரணை வெளி மாநில நீதிபதியைக் கொண்டோ அல்லது சி.பி.ஐ. மூலமாகவோ நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும் கூறினார். மேலும் அவருக்கு விஷம் வைத்துக் கொலை

செய்ய கழக அரசில் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றும், அவருடைய உதவியாளர்களை விபத்தில் சிக்க வைத்துத் தீர்த்துக்கட்ட சதி செய்யப்படுகிறது என்றும், அது தொடர்பாக அவர் மீது நான் வழக்குத் தொடர்ந்தால் அந்த வழக்கைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் கூறியதோடு, அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று பிரதமரிடமும், உள்துறை அமைச்சரிடமும் வேண்டிக் கொண்டிருப்பதாகவும் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். அவர் விருப்பப்படி பிரதமர் ராஜீவ் அவர்கள் எந்த விசாரணைக் கமிஷனும் அமைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


ஜெயலலிதாவின் இந்த டெல்லி பயணத்திற்குப் பிறகு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து வந்த திரு. மூப்பனார் அவர்கள் அனுப்பிய ராஜினாமாவை பிரதமர் ராஜீவ் காந்தி ஏற்றுக் கொண்டு - அந்தக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவராக வாழப்பாடி ராமமூர்த்தியை நியமனம் செய்தார். ஆனால் இந்த நியமனத்திற்கு எதிராக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுமார் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட ஒரு பகுதியினர் தங்களின் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து, அந்த நியமனத்தை ரத்து செய்து விட்டு தொடர்ந்து மூப்பனார் அவர்களே நீடிக்க வேண்டுமென்று கோரி அறிக்கை விடுத்தனர். அந்த அறிக்கையை டெல்லி மேலிடம் ஏற்றுக் கொள்ளவில்லை.

தென் மொழிகள் புத்தக நிறுவனத்தின் சார்பில் 11-4-1989 அன்று சென்னையில் தேவநேயப் பாவாணர் மத்திய நூலக சொற்பொழிவு அரங்கில் நடைபெற்ற யுனெஸ்கோ கூரியர் இந்தியா சிறப்பிதழ் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு அந்த இதழை வெளியிட்டேன். மால்கம் ஆதி சேஷையா முதல் சிறப்பிதழைப் பெற்றுக் கொண்டார். முன்னாள் மத்திய அமைச்சர் சி.சுப்ரமணியம், அமைச்சர் ஆற்காடு வீராசாமி, சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த ஞானம், கூரியர் தமிழிதழ் ஆசிரியர் மணவை முஸ்தபா ஆகியோர் இந்த விழாவிலே கலந்து கொண்டனர்.

அந்த விழாவிலே பேசிய ஞானம் அவர்கள், இந்தியாவிலே இந்தி, தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில்தான் இந்த இதழ் வெளியிடப்பட வேண்டுமென்று மத்திய அரசு பிடிவாதம் செய்ததாகக் குறிப்பிட்டார். அதைச் சுட்டிக் காட்டிப் பேசிய நான், "மத்திய அரசு இந்தியாவைப் பொறுத்தவரையில் எதைப் பிடிவாதமாகச் சொன்னதோ அதைத்தான் நாங்களும் பிடிவாதமாகச் சொல்கிறோம். இந்தியாவிலே எப்படி கூரியர் இதழ் இந்தியிலும், தமிழிலும் இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்களோ அதைப் போல இந்தியாவின் ஆட்சி மொழியாகக் கூட, இந்தியும் தமிழும் இருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பம். இந்தியாவிலே இருக்கின்ற எல்லா தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக ஆக வேண்டுமென்ற நிலை எய்த நீண்ட பல ஆண்டுகளாகும் என்றாலும்கூட உடனடியாக ஆகக் கூடிய எல்லா தகுதியும் தமிழுக்குத்தான் இருக்கிறது என்பதை இதன் மூலம் மிக நன்றாக உணரலாம்" என்று குறிப்பிட்டேன்.

அந்த நிகழ்ச்சியிலே மட்டும் நான் இந்தக் கருத்தினைத் தெரிவிக்கவில்லை. 1978-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23, 24 ஆகிய நாட்களில் புலவர் கோவிந்தன் தலைமையில் திருச்சி மாநகரில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநில மாநாட்டில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்து நான் வழி மொழிந்து நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்திலேயே தமிழையும் மத்திய அரசின் ஆட்சி மொழி ஆக்குக என்று வலியுறுத்தியும், அனைத்து மாநில ஆட்சி மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாகச் சேர்த்து அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியும், அதுவரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்றும் தெரிவித்திருந்தோம் என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

டெல்லி சென்ற போது ராஜீவ் காந்தி அவர்கள் என்னுடன் மிகுந்த ஆர்வமுடன் கலந்துரையாடிய ஈழப்பிரச்சினை



ராஜீவ்காந்தி

குறித்து; மீண்டும் அவரிடமிருந்து தொடர்ந்து எந்தத் தகவலுமில்லையே என்பதற்காக அதுபற்றி அறிந்து கொள்வதற்காக நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் முரசொலி மாறன் பிரதமர் ராஜீவ்காந்திக்கு 1989 மே 2-ஆம் நாள் பின்வரும் கடிதத்தை எழுதினார்:

அன்பார்ந்த பிரதமர் அவர்களுக்கு,

இலங்கைப் பிரச்சினை குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 மற்றும் 16-ஆம் தேதிகளில் தங்களுடன் விரிவான ஆலோசனைகள் நடத்தியது குறித்து நினைவு கூர்கிறேன். அதன் தொடர்ச்சியாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையில், இலங்கை அதிபர் திரு. பிரேமதாசா, இப்பிரச்சினைக்கு ஒரு புது வடிவம் அளித்துள்ளார். முன்னரே நாம் தொடர் நடவடிக்கை எடுத்திருந்தால் நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும் என்று கருத வேண்டியுள்ளது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிலிருந்து, இப்பிரச்சினையில் எவ்வித தொடர் நடவடிக்கையும் இல்லாமல் விடப்பட்டுள்ளது என்பது தெரியவரும். தங்களை நேரில் கண்டு பேச, நான் முயற்சி எடுத்தும் தங்களைப் பார்க்க அனுமதி கிடைக்காததால், இக் கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறேன். இதற்கு அரசியல் தவிர பிற காரணங்கள் இருக்குமானால், இதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது சரியென்று கருதுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(முரசொலி மாறன்)

முரசொலி மாறனின் கடிதத்திற்கு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 15-5-1989 தேதியிட்டு எழுதிய பதில் வருமாறு :-


அன்புடைய திரு. மாறன்,

தங்களுடைய மே 2-ஆம் நாளிட்ட கடிதத்தைக் கண்டு வியப்படைகிறேன். திரு. கருணாநிதி அவர்கள் ஒரு தி.மு.க. தூதுவர் அல்லது ஒரு தூதுக்குழுவை விடுதலைப்புலி களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுப்பலாம் என்று கூறிய போது நான் அந்தப் பயணம் வெற்றி பெறு வதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் மகிழ்ச்சியோடு செய்து கொடுப்பேன் என்று கூறியிருந்தேன். திரு. கருணாநிதி மார்ச் 15 மற்றும் 16-ஆம் தேதி என்னுடன் சந்தித்துப் பேசிய பிறகு நீங்கள் மீண்டும் என் அலுவலகத்தைச் சார்ந்த திரு.ரோனென்சென் மற்றும் வெளி விவகாரத்துறை அமைச்சகத்தைச் சார்ந்த திரு. குல்தீப் சகதேவ் அவர்களுடனும் இப்பேச்சுவார்த்தைகளின் வழிமுறைகள் பற்றியும் வரம்புகள் பற்றியும் கலந்து பேசியிருக்கிறீர்கள். அப்போது முதலாவதாக விடுதலைப் புலிகளோடு தங்களுக்குத் தெரிந்தவர்கள் மூலமாகத் தொடர்பு கொள்ள முயற்சிப்ப தாகத் தெரிவித்திருந்தீர்கள். விடுதலைப் புலிகளுக்குச் சொல்ல வேண்டிய செய்திகள் பற்றிய ஒப்புக் கொள்ளப் பட்ட வரம்புகள் குறித்தும், யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டிய குழுவின் உறுப்பினர்கள் யார் என்பது பற்றியும் மார்ச் 27-ஆம் தேதி தாங்கள் டில்லிக்குத் திரும்பிய பிறகு எனக்கு உறுதி செய்வீர்கள் என்று என்னிடம் சொல்லப் பட்டது. இதுபற்றி திரு. கருணாநிதியிடமிருந்து ஒரு கடிதம் மூலம் எனக்குத் தெரிவிப்பதாகவும் இருந்தது. மேலும் இதுபற்றி என்னுடைய அலுவலகத்திற்கு எந்த செய்தியும் வராத காரணத்தினால், ஏப்ரல் 12-ஆம் நாள் என்னுடைய அலுவலகத்திலிருந்து உங்களைத் தொடர்பு கொண்டார்கள். அதைத் தொடர்ந்து வெளியுறவுத்துறை அதிகாரி திரு.சகதேவ் உங்களைச் சந்தித்து ஏற்கனவே ஒப்புக் கொண்டதை வலியுறுத்தியதோடு, தி.மு.க. எடுக்கவிருக்கும் முயற்சிக்குத் தேவையான அனைத்து வசதிகளை மத்திய அரசு செய்து கொடுக்கும் என்ற விருப்பத்தையும் தெரிவித்தார். அதற்குப் பிறகு தாங்கள் தமிழ்நாடு முதலமைச்சரைக் கலந்து

பேசியபின் எங்களுடன் தொடர்பு கொள்வதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. அதற்குப்பிறகு உங்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்த தகவல் மே 2-ஆம் நாளிட்ட கடிதம் தான். நீங்கள் அரசியல் காரணம் என்று குறிப்பிட்டிருப்பது எனக்குப் புரியவில்லை. எங்களது ஆவணங்களும், நாள் வாரியான நிகழ்வுகளும் மிகவும் தெளிவாக உள்ளது. எங்கேயோ நமது தொடர்புகளில் இடைவெளி இருப்பது தெளிவாகிறது.

உங்கள் உண்மையுள்ள,


(ராஜீவ் காந்தி)



8 மண்டல் பரிந்துரை- மாநில அரசு தீர்மானம்

பிரதமர் ராஜீவ் காந்திக்கு முரசொலி மாறன் எழுதிய கடிதமும், அதற்கு அவர் எழுதிய பதிலும் ஏறத்தாழ 35 ஆண்டுக்கால இலங்கைத் தமிழர் பட்ட வேதனைகளையும், அந்த வேதனை துடைக்க இங்குள்ள தமிழர்கள் எடுத்த முயற்சிகளையும் என் மனத்திரையில் நிழலாட விடுகின்றன. இலங்கைப் பிரச்சினை பற்றிய கடந்த கால நிகழ்ச்சிகள், முன்னும் பின்னுமாகக் காட்சியாகின்றன.

1958-ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக அண்ணா அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பேரணி, சென்னையில்



தலைவர் கலைஞருடன், ஈழத்தந்தை செல்வா, திரு. அமிர்தலிங்கம்

நடத்தப்படுகிறது. அதற்கு இரண்டு ஆண்டுகட்கு முன்பே 29-1-1956 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்பதற்கான தீர்மானத்தை நான்தான் முன் மொழிகிறேன். திரு.பொன்னம்பலனார் அவர்கள் அதனை வழி மொழிகிறார்.

உரிமைகளுக்காக வாதாடி வந்த ஈழத் தமிழர் தந்தை செல்வா அவர்கள் 1972-ஆம் ஆண்டு திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் சென்னை வந்து என்னையும், மற்றும் பல தலைவர்களையும் சந்தித்து; ஈழத் தமிழர்களின் நலனுக்கு அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்.

அங்கு தமிழர்கள் படும் அவதி மேலும் மேலும் அதிகமாகவே 1976-ஆம் ஆண்டு ஈழத்தில் வட்டுக் கோட்டை எனுமிடத்தில் நடைபெற்ற மாநாட்டில், செல்வா அவர்கள் தமிழர் ஐக்கிய முன்னணி என்பதை, தமிழர் விடுதலை ஐக்கிய முன்னணி என மாற்றி அறிவித்ததுடன், ஈழத் தமிழகம் சுதந்திரம் பெற வேண்டுமென்ற பிரகடனத்தையும் வெளியிடு கிறார்.

அவரும் அவரது இயக்க முன்னோடிகளும்; அந்த விடுதலைப் போராட்டத்தை அண்ணல் காந்தியடிகளைப் போல அமைதி வழியிலேயே நடத்திட முனைகின்றனர்.

1977-ல் தந்தை செல்வா மறைந்த பிறகு; அமிர்தலிங்கம் போன்றவர்கள் அதே வழியில் சுதந்திர இயக்கத்தை நடத்தி வந்தபோதிலும்; 1983-ஆம் ஆண்டு; அதுவரையில் அடுக்கடுக் காக நடைபெற்று வந்த சிங்கள வெறியர்களின் அக்கிரமங் களுக்குச் சிகரம் வைத்தாற்போல, அரசின் அதிகார வர்க்க துணையுடன் குட்டிமணி, ஜெகன், தங்கதுரை உள்ளிட்ட 50-க்கு மேற்பட்டோர் வெளிக்கடைச் சிறைச்சாலையில் சித்ரவதைக்காளாகிக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி, உலக நாடுகள் அனைத்திலும் வாழும் தமிழர்களின் உள்ளங்களை உலுக்குகிறது.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தக் கொடிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இலங்கையில் நடைபெறுவது இனப் படுகொலை (Genocide) என்கிறார்.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமின்றி, இந்தியத் திருநாடு முழுதும் இலங்கைத் தமிழர்களுக்காக அக்கறை காட்டத் தொடங்குகிறது.

தமிழ் ஈழம் அமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு எல்.டி.டி.ஈ. (விடுதலைப் புலிகள்), டெலோ, இ.பி.ஆர்.எல்.எப்., ஈராஸ், ப்ளாட் ஆகிய இயக்கங்கள் ஆயுதமேந்தி விடுதலைப் போராட்டம் நடத்த முன்வந்தபோது; அந்த இயக்கங்களுக் காக இந்தியாவில் முகாம் அமைக்கும் வசதிகளைச் செய்து கொடுத்து; ஆயுதங்களையும் அன்றைய இந்திரா காந்தி அரசு வழங்கியதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

தமிழ்நாட்டில் காவல் துறைத் தலைவராகவும், எம்.ஜி.ஆர். அவர்களிடம் நெருக்கம் மிகக் கொண்டவராகவும் இருந்த திரு.கே.மோகன்தாஸ் அவர்கள் 1992-இல் எழுதிய "எம்.ஜி.ஆர். மேன் அண்ட் மித்" என்ற நூலில்,

"விடுதலைப் போராளிகளின் ஒவ்வொரு பயிற்சி முகாமும் மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட பகுதிபோல் மத்திய நிறுவனங்களின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தன. அந்த முகாம்களுக்குள் மாநிலப் புலனாய்வுத் துறையினரோ, மாநிலக் காவல் துறையினரோ நுழைய அனுமதிக்கப்பட வில்லை" என்றும்;

"ஒவ்வொரு குழுவினரும் உளவு வேலை பார்ப்பதற் கென்று தனிப் பிரிவை நடத்தி வந்தனர்; அதில் விடுதலைப் புலிகளின் பிரிவே சிறந்து விளங்கியது. இந்தத் தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் குறித்து நான் அவ்வப் போது தெரிவித்து வந்த காரணத்தால் அந்தக் குழுக்களின் தலைவர்களையும், குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலை வரையும் சந்திக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். ஒரு சமயம் என்னிடம் தெரிவித்தார். மத்திய ஏஜன்சிகளின் கழுகுக்


கண்காணிப்பையும் மீறி மாநில உளவுத்துறை அந்த அமைப்புகளோடு தொடர்பு வைத்திருந்தது. எனவே அந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்வதற்கு அதிகச் சிரமம் தேவைப் படவில்லை. சோதனை செய்த பிறகு எம்.ஜி.ஆர். இல்லத்தில் உள்ள அவரது அறைக்குள் அவர்கள் அனுப்பி வைக்கப் பட்டார்கள். விவாதம் பொதுவான முறையில் அமைந்திருந் தது. பயிற்சி முகாம்கள் குறித்து எம்.ஜி.ஆர். முன்னெச்சரிக் கையுடன் எதையும் குறிப்பிடவில்லை. ஆனால் தீவிரவாதி கள் (ஒவ்வொரு குழுவிலிருந்தும் நான்கு பேர் வந்திருந்தனர்) இலங்கை இராணுவத்தினரும், காவல்துறையினரும் ஏதுமறி யாத தமிழர்களுக்கு இழைத்து வரும் கொடுமைகள் குறித்துச் சொன்னார்கள். எம்.ஜி.ஆர். பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். ஆனால், விடுதலைப் புலிகளின் ஏகத் தலைவர் பிரபாகரனுக்கும், எம்.ஜி.ஆருக்கும் கண நேரத்தில் ஒரு நேச உணர்வு ஏற்பட்டது, வெளிப்படையாகத் தெரிந்தது. எம்.ஜி.ஆர். தனது அற்புதமான உள்ளுணர்வு காரணமாக விடுதலைப் புலிகளுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொண்டுவிட்டார். இதன் விளைவாகப் பின்வரும் ஆண்டுகளில் அரசாங்கப் பணத் திலிருந்தும், தனது சொந்தப் பணத்திலிருந்தும் அவர்களுக்கு நிதி உதவி செய்தது எல்லோரும் அறிந்த உண்மை" என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதே புத்தகத்தில் பிறிதோர் இடத்தில் காவல் துறைத் தலைவர் மோகன்தாஸ் அவர்கள்; "போராளிகளிடமிருந்து 40 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன - இன்றைய சர்வதேசச் சந்தையில் அதன் மதிப்பு சுமார் 120 கோடி ரூபாய்" ; என்று எழுதிவிட்டு; "பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட அந்த ஆயுதங்களை போராளிகளிடமே திருப்பிக் கொடுக்குமாறு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உத்தரவிட்டார்" என்றும் எழுதி யிருக்கிறார்.

மற்றுமொரு அழுத்தமான சான்றாக; இந்திய வெளியுறவுச் செயலாளராகவும் - இலங்கையில் இந்தியத் தூதுவராகவும் இருந்த- ஜெ.என். தீட்சித் அவர்கள்; அவர் எழுதிய "அசைன் மென்ட் கொழும்பு" என்ற நூலில்;

"விடுதலைப் புலிகளுக்கு எதிராக அமைதிப்படையை ஏவி விடப்பட்ட பிறகும் கூட, ஆயுதங்களையும் அத்யாவசியப் பொருள்களையும் வாங்குவதற்கான பணத்தை தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்தார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அளவுக்கு மத்திய, மாநில அரசுகளின் உதவிகள் மட்டுமல்ல; தமிழ் மக்களின் பேராதரவையும் திரட்டிப் பெரியதோர் எழுச்சியை பல்வேறு இயக்கங்களும், குறிப்பாக தி.மு.கழகம், வீரமணி அவர்களின் தலைமையில் உள்ள திராவிடர் கழகம், மதுரை நெடுமாறன் தலைமையில் இருந்த காமராஜ் காங்கிரஸ் இயக்கம் ஆகியவை இணைந்த தமிழ் ஈழ ஆதரவாளர் இயக்கமும் (டெசோ) உருவாக்குகின்றன.

மதுரையில் 4-5-1986 அன்று டெசோ இயக்கத்தின் சார்பில் நானும், வீரமணி, நெடுமாறன், அய்யணன் அம்பலம் ஆகியோரும் முன்னின்று நடத்திய ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டுக்கு டி.யு.எல்.எப். சார்பாக அமிர்தலிங்கம், எல்.டி.டி.ஈ. சார்பாக திலகர், புரோடெக் சார்பாக சந்திர காசன், ஈராஸ் சார்பாக ரத்தின சபாபதி, டி.இ.எல்.எப். சார்பாக ஈழவேந்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பாக வரதராஜப் பெருமாள், ப்ளாட் சார்பாக வாசுதேவன் ஆகியோர்



டெசோ மாநாட்டிற்கு வருகை புரிந்த என்.டி.ஆர். மற்றும் அகில இந்திய தலைவர்களை தலைவர் கலைஞர் வரவேற்கும் காட்சி.

வருகைதந்து கலந்து கொண்டனர். அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ், வாஜ்பய், எச்.என். பகுகுணா, ராம்வாலியா, உபேந்திரா, அப்துல் ரஷீத் காபூல், ஜஸ்வந்த்சிங், ராச்சய்யா, சுப்பிரமணியம் சுவாமி, உன்னிகிருஷ்ணன் மற்றும் பேராசிரியர் அன்பழகனார், முரசொலி மாறன், எல். கணேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு இந்திய நாட்டுத் தலைவர்களின் ஆதரவும் பெருகுகிறது ஈழத் தமிழர் பிரச்சினைக்கு!

அது மட்டுமல்ல, அதற்கென தமிழகத்தில் எத்தனையோ அறவழிப் போராட்டங்கள் - நானும் கழகத்தினர் ஆயிரக் கணக்கானோர் சிறையேகிய நிகழ்ச்சிகள் - அதன் தொடர் பாக தீக்குளித்து சாவுகள் - ஈழத் தமிழர் பிரச்சினைக்காக நானும் பேராசிரியர் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகல்-

இப்படி நாடு முழுதுமே ஈழத் தமிழர்களின் பக்கம் ஆதரவுக்கரம் நீட்டியும் கூட; அந்த ஆதரவுக்கு முட்டுக் கட்டை போல சில நிகழ்ச்சிகள் நடந்து விடுகின்றன. அவை பிறகு தொடர் கதையாகவும் ஆகிவிடுகின்றன.

போராளிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மதுரை மாநாட்டிலேயே அவர்களுக்குள்ளே ஒற்றுமையில்லாமை தெளிவாகத் தெரிந்த காரணத்தினால், கலந்து கொண்ட எல்லா தலைவர்களும் "ஒற்றுமையாகச் செயல்படுங்கள்" என்றே அவர்களுக்கு அறிவுரை கூறினர்.

சென்னைக்கு வந்த திரு. வாஜ்பய் அவர்கள் நிருபர்களிடம் பேசியபோது,

"ஈழ விடுதலைப் போராளிகள், தங்களுக்குள் மோதலை நிறுத்திக் கொண்டு, ஒன்றுபட்டு, தனித் தமிழ் ஈழம் காண என்ன வழியென்பதை முடிவு செய்ய வேண்டும்" என்று கூறினார்.



எம்.ஜி.ஆருடன் பிரபாகரன்

அதே கருத்தைத்தான் நானும் அவர்களுக்கு "உங்களுக்குள் சகோதர யுத்தம் வேண்டாம்" என்று பலமுறை தொடர்ந்து சொல்லி வந்தேன். அந்த மாநாட்டிலும் சொன்னேன்.

மாநாட்டிற்கு சில மாதங்களுக்கு முன்பே ஒரு நாள் அவர்களையெல்லாம் என் வீட்டிற்கு அழைத்து ஒற்றுமையை உருவாக்குவதற்கு விரும்பினேன். அவர்களில் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா, டெலோ ஸ்ரீசபா ரத்தினம், ஈராஸ் பாலகுமார் ஆகியோர் வந்திருந்தார்கள். விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ.) சார்பில் வருவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால் வரவில்லை. நீண்ட நேரம் நாங்கள் காத்திருந்தும் அவர்கள் வராத காரணத்தினால் மற்ற மூன்று இயக்கத்தினரும் என்னுடன் நின்று புகைப்படும் எடுத்துக் கொள்கின்றனர்.

மதுரையிலே டெசோ மாநாடு மே திங்கள் 4ந்தேதி முடிந்ததற்கு அடுத்த நாளைக்கு அடுத்த நாள் அதாவது 6-5-86 அன்று டெலோ இயக்கத்தின் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்ட செய்தி வருகிறது.

அதன் பிறகு 3-6-1986 அன்று என்னுடைய பிறந்த நாள் விழாவினையொட்டி எனக்கு மாலை அணிவிப்பதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட நிதி 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயை போராளி இயக்கங்களுக்கு பகிர்ந்தளிப்பது என்று தி.மு.கழகப் பொதுக் குழுவில் முடிவெடுத்து, மறைந்த சபாரத்தினம் குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாயும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும், டெலோ இயக்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும், ஈராஸ் இயக்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும் அளிப்பதென முன்வந்தபோது, விடுதலைப் புலிகள்

இயக்கத்தைத் தவிர ஏனைய இயக்கத்தினர் முன்வந்து அதனைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் விடுதலைப் புலிகள் சார்பில் கடைசிவரையில் யாரும் வந்து அந்த நிதியைப் பெற்றுக் கொள்ளவில்லை. பிறகு அந்தத் தொகை யையும் மற்ற போராளிகள் இயக்கத்திற்குப் பிரித்துத் தரப்படுகிறது.

1989-ல் கொழும்பு நகரில் அமிர்தலிங்கம் அவர்களும், யோகேஸ்வரனும் அவரது இல்லத்திலேயே சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். அதற்கடுத்த வாரத்தில் உமாமகேஸ் வரன் என்ற முகுந்தன், (பிளாட் இயக்கத் தலைவர்) இலங்கையில் கொல்லப்படுகிறார்.

எனவே ராஜீவ்காந்தி அவர்கள் என்னிடம் கலந்துரை யாடியதற்கேற்பவும் கடிதம் எழுதியதற்கேற்பவும் ஈழப் பிரச்சினையில் ஒரு நல்ல முடிவு காண்பதற்காக வழிவகுத் திட வேண்டுமேயென்று எண்ணிக் கொண்டிருந்தபோது முன்னும் பின்னுமாக இந்த நிகழ்ச்சிகள் என் மனக்கண் முன்னால் நிழலாடியது என்பது இயற்கைதானே!

ஆனால் அந்த முயற்சி சற்று சுணங்கிப் போய் இருந்த சூழலில் 1989 மே திங்கள் 2-ம் தேதியன்று சட்டப்பேரவை யில் அ.தி.மு.க. உறுப்பினராக இருந்த கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன் இலங்கைப் பிரச்சினை குறித்து என்னைக் கேட்டபோது, "நான் முதல் அமைச்சர் பொறுப்பையேற்ற வுடன் இந்தப் பிரச்சினையில் சுமுகமான முடிவு காண விடுதலைப்புலிகள் உள்ளிட்ட எல்லோரையும் அழைத்துப் பேச வேண்டும் என்று டெல்லிக்கு இரண்டுமுறை சென்ற



டெசோ மாநாட்டில் தலைவர் கலைஞருடன் அகில இந்தியத் தலைவர்கள்.

சமயம், பிரதமரைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவரும் உடனடியாக இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும் வாய்ப்பை உருவாக்குவதாகச் சொன்னார். நானும் இதுகுறித்து தாக்கீது வரும், வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அது தடைப்பட்டுள்ளதற்கு அரசியல் காரணங்களா அல்லது வேறு என்ன காரணங்களா என்பது தெரியாது! ஆனால் பிரேமதாசா இப்போது இந்த வாய்ப்பை உருவாக்கி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அவர்களின் நிபந்தனைகளை இலங்கை அரசு ஏற்றுக் கொள்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது" என்று குறிப்பிட்டேன்.

இதற்கிடையே 1989 மே 4-ஆம் நாளன்று இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக் கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை தொடங்கியது. அந்தப் பேச்சுவார்த்தையில் பிரேமதாசா கலந்து கொண்டார்.1989 ஜூன் இறுதியில் இலங்கை அரசுக் கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த் தையில் சமரச உடன்பாடு ஏற்பட்டதாகவும், ஒருவரையொரு வர் எதிர்த்து போர் புரிய மாட்டோம் என்றும், எல்லா பிரச்சினைகள் குறித்தும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்போம் என்றும் அறிவித்தனர்.

அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட கோரிக்கை முழுமையாக நிறைவேறியதாகவோ, ஈழத் தமிழர்களின் உரிமைக்குப் பாதுகாப்பாக அவர்கள் கேட்ட தமிழ் ஈழம் அமைப்பதற்கான முடிவு ஏற்பட்டதாகவோ அல்லது விடுதலைப் புலிகள் அதை இனி பிரச்சினையாக்க மாட் டார்கள் என்பதாகவோ எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

அதனால் அந்தப் பிரச்சினை முற்றுப் பெறவில்லை; இந்தியாவைப் பொறுத்தவரையில் மேலும் முயற்சிகள் தொடருகின்றன என்று கருதுமளவுக்கு இருந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்காக தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் திருச்சியில் 5-11-1989 அன்று நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும் போது,

"இலங்கைத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கடந்த பல மாதங்களாக ஒத்துழைப்பு வழங்கி வரும் தி.மு.க. அரசுக்கும் முதலமைச்சர் மு.கருணாநிதிக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்" என்றும்; அதே நாளில் கோவையில் பேசும்போது, "இலங்கைத்தமிழர் பிரச்சினையில் முழு ஒத்துழைப்பு தந்து வருவதற்காக தி.மு.க. அரசுக்கு ராஜீவ் காந்தி மீண்டும் பாராட்டு தெரிவித்தார். ஆனால் தேர்தலில் எதிர்க்கட்சிகளுடன் தி.மு.க. கைகோத்துக் கொண்டதற்கு அதிருப்தி தெரிவித்தார்" என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் (6-11-1989) ஏடு செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். எனவே தேர்தலில் எதிரெதிர் அணியில் இருந்த நிலையிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஒருமித்த கருத்து உருவாக்கிட அது இடையூறாக இல்லை என்பது பிரதமர் ராஜீவ் அவர்களின் பேச்சிலிருந்து தெளிவாயிற்று.

சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கிக் கிடக்கும் மக்களை தனி ஒதுக்கீடுகள், சிறப்புத் திட்டங்கள் மூலமாகக் கைதூக்கிவிட மண்டல் குழுவின் பரிந்துரைகளை உடனடியாக நிறைவேற்றிட மத்திய அரசு முன்வர வேண்டுமென்று ஒரு சிறப்புத் தீர்மானத்தை 12-5-1989 அன்று சட்டப் பேரவையில் முன்மொழிந்தேன்.

மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் 20-12-1978 அன்று மண்டல் குழு அமைக்கப்பட்டு, 31-12-1980 அன்று பிரதமராக இருந்த இந்திரா காந்தியிடம் அறிக்கை ஒப்படைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அது நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளின்படி மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்புடைய நிறுவனங்களில் உள்ள அனைத்துப் பணிகளிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் 27 சதவிகித இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஆதிதிராவிடர்கள், பழங்குடி மக்களுக்கு உள்ளது போல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நிரப்பப்படாமல் உள்ள இடஒதுக்கீட்டளவு மூன்றாண்டு

களுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு கொடுப்பது போலவே - அதே அளவில் பிற்படுத்தப்பட்டோருக்கான வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டும். மத்திய அரசும் மாநில அரசுகளும் பிற்படுத்தப்பட்டோர் நல முன்னேற்ற வாரியம் அமைக்க வேண்டும். இதனை நாம் இந்த மாநிலத்திலே 71-ஆம் ஆண்டே அமைத்து விட்டோம். மேலும் மைய, மற்றும் மாநில அரசுகளின் கீழ் பிற்படுத்தப்பட்டோருக்கான தனி அமைச்சகம், தனித்துறை அமைக்க வேண்டும் என்று மண்டல் குழு சிபாரிசு செய்திருக்கின்றது. மாநில அளவிலே நாம் 1971-ஆம் ஆண்டே இதற்கென தனி இலாகா, தனி அமைச்சர் என்று உருவாக்கி விட்டோம்.

1976-க்கு முன்பே கழக ஆட்சியிலே பலமுறை மத்திய அரசிலும் இப்படிப்பட்ட இட ஒதுக்கீடுகள் தேவை என்பது வலியுறுத்தப்பட்டது. 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் அலகாபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போதும் இதனை நான் வலியுறுத்தி இதற்கென ஒரு குழு அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன். 1976-க்குப் பிறகு கழகம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலகட்டத்திலேகூட, தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், மற்றுமுள்ள சமுதாய நல அமைப்புகள் டெல்லி வரையிலே சென்று, டெல்லியிலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள், தலைவர்களோடு சேர்ந்து டெல்லியிலே ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். டெல்லியில் உண்ணாநோன்புகள் எல்லாம் நடத்தப்பட்டிருக்கின்றன.

இந்த நாட்டில் மக்கள்தொகையிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 52 சதவிகிதம். தாழ்த்தப்பட்ட மலைசாதி மக்கள் 22.5 சதவிகிதம். இந்த 52 சதவிகித பிற்படுத்தப்பட்ட மக்களில் மத்திய அரசின் வேலை வாய்ப்பில் எத்தனை சதவிகிதம் கிடைத்திருக்கிறது என்றால்

பொதுவாக மொத்தத்தில் கிடைத்திருப்பது 12. 55 சதவிகிதம் தான். அதிலும் குறிப்பாக மத்திய அரசு நிறுவனங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும், மத்திய அரசு வங்கி போன்றவைகளிலும் கிளாஸ் 1 என்ற பணிக்கு மேல்நிலை உத்தியோகங்கள் என்ற அளவிலே எடுத்துக் கொண்டால் 4.69 சதவிகிதம்தான் பின்தங்கிய மக்களுக்குக் கிடைத்திருக் கிறது.

உதாரணத்திற்கு ஒரே ஒரு புள்ளிவிபரத்தை எடுத்துப் பார்த்தால் மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட் டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்த அளவுக்கு ஓரம் கட்டப்பட்டிருந்தார்கள் என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரியும். கிளாஸ் 1 அதிகாரிகள் பாதுகாப்புத் துறையில் மட்டும் மொத்தம் 1379 பேரில் தாழ்த்தப்பட்டோர் 48 பேர்- பிற்படுத்தப்பட்டோர் 9 பேர். தாழ்த்தப்பட்டோர், மலை சாதியினருக்கான இடஒதுக்கீடு 22.5 சதவிகிதப்படி அவர்களுக்கு 310 இடங்கள் கிடைத்திருக்க வேண்டும். அதைப்போலவே மண்டல் பரிந்துரைப்படி பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் அளித்திருந்தால் 372 இடங்களும் கிடைத்திருக்க வேண்டும்.

இதையெல்லாம் எடுத்துக்காட்டித்தான் நாம் இந்த 27 சத விகிதம் பின்தங்கிய மக்களுக்கு மத்திய அரசிலும் பொதுத் துறையிலும் வங்கிகளிலும் மத்திய அரசு சார்புடைய நிறுவனங்களிலும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி அதற்கான மண்டல் கமிஷன் பரிந் துரைகளை ஏற்குமாறு கேட்டு வருகிறோம். இந்தக் கருத்துக் களை எடுத்து வைத்து நான் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது உரையாற்றினேன். என்ன காரணத்தினாலோ 1980 முதல் சுமார் பத்தாண்டு காலம் மண்டல் கமிஷன் அறிக்கை, குளிர்ப்பதனப் பெட்டிக்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தது.

9 செங்குருதியில் குளித்த சீனத்து மாணவர்கள்!

சோளக் கொல்லைக் காவலுக்கு ஒரு பொம்மை; பறவைகள் அந்தப் பொம்மையின் மீதே கூடு கட்டிக் கொண்டு சோளக் கதிர்களைச் சுவைத்துக் கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ; அப்படி சில அரசுகள் இந்த நாட்டில் மட்டுமல்ல; வெளிநாடுகளிலும் அமைந்துவிடுகின்றன. உலக வரலாற்றில் அன்று முதல் இன்று வரை குன்றனைய ஊழல் புரிந்த அரசுகளின் வரிசையில் 1989 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டு லிபரல் ஜனநாயகக் கட்சியின் அரசு, தன்னை இணைத்துக் கொண்ட பரிதாபம் நடைபெற்றது.

அக்கட்சியின் சார்பில் பிரதமராக இருந்த தகேஷிதா என்பவர், "ரெக்ரூட்" என்ற மிகப் பெரிய தொழில் நிறுவனத் திடம் பத்து கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியது. ஆளுங்கட்சியின் தலைவராக இருந்த ஷிண்டோரா அபி என்பவர்; அந்தக் குற்றச்சாட்டு உண்மை என்று ஒப்புக் கொண்டார்.

பிரதமர் தகேஷிதாவோ; அவரும் அவரது உதவியாளர் களும் "ரெக்ரூட்" நிறுவனத்திடம் பணம் வாங்கியது உண்மையென்றும்; ஆனால் அது லஞ்சமாக வாங்கப்பட்ட தில்லையென்றும் கட்சிக்காக வாங்கப்பட்ட நன்கொடை என்றும் கூறினர்.

இந்த ஊழலை எதிர்த்து ஜப்பானில் ஏற்பட்ட கொந் தளிப்பை எதிர்கொள்ள முடியாமல்; தகேஷிதா பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்த ஆண்டில் ஜப்பானில் மட்டுமல்லாமல் புரட்சியில் பூத்த புது மலர் எனப்படும் சீனப் பெருநாட்டிலும் எதிர்பாராத விதமாக மாணவர்களின் கிளர்ச்சியொன்று வெடித்துக் கிளம்பியது.

தமிழ் மொழி காத்திடும் போருக்குப் புது வலிவூட்டி இரத்தத் தடாகத்திலே தங்கள் உடல்களை மிதக்க விட்ட தாய்நாட்டு மாணவச் செல்வங்களின் மன உறுதியையும், தியாகச் செயல்களையும், துப்பாக்கி ரவைகளைத் தும்பைப் பூச்செண்டுகளாக அவர்கள் தமது நெஞ்சகத்தில் தாங்கிக் கொண்ட வீரதீர நிகழ்ச்சிகளையும்; பாளையங்கோட்டை தனிமைச் சிறைக் கொட்டடியிலிருந்து கேட்டறிந்து இதயம் நொறுங்கிப் போனவன் நான் என்ற காரணத்தால்; மாணவர் கள் போராட்டம் எங்கு நடைபெற்றாலும், எந்தக் காரணங் களுக்காக நடைபெற்றாலும் அதன் தன்மையும், அதனால் ஏற்படும் விளைவுகளும் எப்படியிருக்குமென்பதை நன்கு உணர்ந்தவன் என்ற முறையில் அந்தப் போராட்டச் செய்தி களை அறிந்து கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டினேன்.

1989-ஆம் ஆண்டு சீனாவில் அந்தப் போராட்டம் வெடித்த அதே ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாள் "வண்மை யொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண்; மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்" என்று மாணவர்களைப் போற்றிப் பாடி வீறு கொள்ளச் செய்திட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 99-வது பிறந்த நாள் விழாவிலே கலந்து கொண்டு, அவரது 100-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவரது நூல்கள் அரசுடைமை ஆக்கப்படு மென்றும், அவரது குடும்பத்தினர்க்கும் பதிப்பகத்தினருக் கும் பத்து இலட்சம் ரூபாய் கொண்ட பொற்கிழி வழங்கப் படுமென்றும் அறிவித்து, அவ்வாறே அளித்து மகிழ்ந்திருக் கிறேன். அந்த விழாவில் கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்களுக்கு திரு.வி.க. விருதும், அதே விருதுகள் டாக்டர் சுப்பு ரெட்டி யார், மணவை முஸ்தபா ஆகியோருக்கும், பாரதிதாசன் விருது, கவிஞர்கள் முடியரசன், பொன்னிவளவன், அப்துல் ரகுமான் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன. விழாவில் கல்வி

அமைச்சர் பேராசிரியர் அன்பழகனார், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், சட்டப் பேரவை முன்னாள் தலைவர் பி.எச். பாண்டியன், அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.


விழா மகிழ்ச்சியில் இருந்த போதிலும், சீனத்து மாணவர்களின் கிளர்ச்சி என்னவாயிற்று என்றறியும் துடிப்பு மிகையாக இருந்தது. ஜனநாயக உரிமைகள் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அங்கே மாணவர்கள் போர்க் கொடி உயர்த்தியிருந்தார்கள்.

மக்களின் தேவைகளை நிறைவு செய்வதாயினும்; நல்வாழ்வுத் திட்டங்களையே நிறைவேற்றுவதாயினும்; அதனைச் சர்வாதிகார அடிப்படையில்தான் நடைமுறைப் படுத்துவது என்று சங்கற்பம் செய்து கொண்டு பரிபாலனம் நடத்துவோர் முன்பு ஜனநாயக உரிமைகள் தேவை என்ற கோரிக்கை, அவ்வளவு எளிதில் ஒரு மலரைக் கிள்ளிப் பறிப்பது போல் நிறைவேறிவிடுமா? மரத்தைப் பிளப்பது போலத்தானே சிரமம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

அதன் காரணமாக, மாணவர்களின் முதற்கட்டப் போராட்ட மாக அமைந்த உண்ணாவிரதப் போராட்டம் உதாசீனப்படுத்தப் பட்டு விட்டது எனினும், ஒரு வார காலம் நீடித்த அந்தப் போராட்டம் லட்சக்கணக்கான மாணவர்கள் கலந்து கொள்ளும் போராட்டமாக உருவெடுத்து, தலைநகர் பீகிங்கில் தியானன்மென் சதுக்கத்திலேயே மிகப் பெருங் கிளர்ச்சியாக மாற்றம் பெற்றது.

கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் ஜாவோ ஜியாங்கும், சீனப் பிரதமர் லீ பெங்கும் அந்த மாணவர்கள் மத்தியில் நேரில் சென்று வேண்டுகோள் விடுத்தும் பலனில்லை.

பீகிங் நகரில் இராணுவ சட்டம் முதன் முறையாகப் பிறப் பிக்கப்பட்டது. பல இடங்களில் போலீசாருக்கும் மாணவர் களுக்குமிடையே மோதல் ஏற்பட்டு நூற்றுக்கணக்கான மாணவர்கள் காயமுற்றனர்.



சீனாவின் தியானன்மென் சதுக்கத்தில் நடந்த போராட்டக் காட்சிகள்.

போலீசாருக்கு உதவிட ராணுவத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அழைக்கப்பட்ட அந்த ராணுவம், பீகிங் நகரை நோக்கி ஐந்து கல் தொலைவில் வந்து கொண்டிருந்த போது, மாணவர்களும் பொதுமக்களும் எதிரே சென்று தடுத்து நிறுத்தி விட்டார்கள். இராணுவம் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும், அவர்களுக்குத் துணை நின்ற தொழிலாளர்களும், பொதுமக்களும், சீனத்துச் சிந்தனையாளர்களும் இணைந்து போராட்டத்தை விரிவுபடுத்திட ஓர் அமைப்பினை உருவாக்கினார்கள்.

அந்த அமைப்புக்குத் தலைவராக மாணவரான சியாலிர்ல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரான ஜாவோ ஜியாங் அந்தப் போராட்டத்தால் கவரப்பட்டு, மாணவர்களை ஆதரிக்கத் தொடங்கியதால், அவருக்கும் மற்ற தலைவர்களுக்குமிடையே மனக்கசப்பும் மோதலும் ஏற்பட்டது.

போராட்டம் உச்சகட்டத்தை அடையவே; சீன ராணுவம் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 மாணவர்கள் பலியானார்கள் என்ற செய்தி வந்தது. அப்போது எனக்கு மாணவர்கள் மாயூரம் சாரங்கபாணி, சிவகங்கை ராஜேந்திரன் நினைவுதான் நெஞ்சைப் பிழிந்தது. மொழிப் போரில் உயிர் நீத்த மாணவ சிங்கங்கள் அவர்கள். அங்கே சீனாவில் ஜனநாயக உரிமை கேட்கும் போரில் மாணவர்கள் மடிந்து போகிறார்கள். இங்கே ஜனநாயக உரிமை இருந்தும் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

சீனாவில் நிலைமை மேலும் மேலும் விபரீதமாகவே போராட்டத்தை அடக்கிட, மறியல் செய்த மாணவர்கள் மீது ராணுவ டாங்கிகளை ஏற்றியதில் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். இந்தச் செய்தி ஜூன் முதல் வாரத்தில் சீன வானொலியில் ஒலிபரப்பப்பட்டதுடன்; கலவரம் வெடித்ததில் ராணுவ அதிகாரி ஒருவர் உயிருடன் கொளுத்தப்பட்டார் எனும் செய்தியும் வந்தது.

மூவாயிரம் மாணவர் இறந்து, பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் காயமுற்றதைத் தொடர்ந்து, இராணுவ அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்ற ராணுவ வீரர்கள் மறுத்தனர். அப்படி மறுத்தவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் சீன அரசின் இந்தக் கொடுமையான நடவடிக்கைக்குப் பலத்த கண்டனத்



புரட்சிக் கவிஞர் 99வது பிறந்தநாள் விழா

தைத் தெரிவித்தன. சீனாவுக்கு ஆயுத உதவியை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்தது. மாணவர்களுக்கு எதிராக ராணுவத்தை ஏவிய பிரதமர் லீ-பெங்கை இளம் போலீஸ் அதிகாரி ஒருவர் சுட்டதில் அவர் காலில் குண்டு பாய்ந்த காயத்துடன் தப்பினார்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கைது செய்யப் பட்டனர். புரட்சியில் பூத்த புதுமலர் என சிறப்பிக்கப்பட்ட செஞ்சீனம்; செங்குருதியில் குளித்த எதிர்ப் புரட்சியொன் றைக் காண நேரிட்ட அந்த 1989-ஆம் ஆண்டினை அவ்வளவு சுலபத்தில் மறக்க முடியாது.

மாணவர்கள் தொடங்கிய மொழிப் புரட்சியினால் இங்கே வெற்றி கிடைத்து இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட்ட தென்றால்; அதற்கு இங்கே ஜனநாயக முறை இருந்ததே காரணம்; ஆனால் அங்கே ஜனநாயக உரிமை கோரியே போராட வேண்டியிருந்ததால் அந்தப் போராட்டம் நசுக்கப் பட்டது!

சீனாவில் மாணவர்களைச் சுட்டுத் தள்ளி அவர்கள் மீது ராணுவ டாங்கிகளை ஏற்றி மூவாயிரம் பேரைச் சாவுக் குழியில் தள்ளிய அதே 4-6-1989 அன்றுதான் பத்தாண்டு காலம் சர்வாதிகாரியாக இருந்து ஈரான் நாட்டை வழி நடத்திக் கொண்டிருந்த கோமேனி அந்த நாட்டு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந் தார்.

அந்தத் துயரத்தை வெளிப்படுத்த ஈரான் மக்கள் அனைவரும் கறுப்புடை அணிந்து, கறுப்புக் கொடியுடன் 40 லட்சம் பேர் திரண்டனர் என்றும், கூட்ட நெரிசலில் இறுதி ஊர்வலத்தில் பலர் நசுங்கி மாண்டனர் என்றும் செய்திகள் வந்தன.


இதற்கு முதல் வாரம் 26-5-1989 அன்று தேசிய முன்னணி யின் தலைவர்களில் ஒருவரான வி.பி.சிங் அவர்கள் சென்னையில் என்னை என் இல்லத்தில் சந்தித்து, விரைவில் வரவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் குறித்தும், தேர்தல்

அறிக்கை தயாரிப்பது குறித்தும் விவாதித்தார். அப்போது பிஜு பட்நாயக், பி. உபேந்திரா ஆகியோர் உடனிருந்தனர்.

அதே ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற எனது 66-வது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றிய போது;

"டாக்டர் கருணாநிதி எனது நெருங்கிய நண்பர்களிலே ஒருவர். அவர் எப்படி உங்களுக்கு நெருங்கிய நண்பர் என்று கேட்கலாம். ஆதி காலத்திலிருந்து அவர் எனக்கு நெருங்கிய நண்பரல்ல. எமர்ஜன்சி காலத்தில் நானும் அவரும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் இரவு பகல் என்று பாராமல் பலமுறை சந்தித்துப் பேசியிருக் கிறோம்.

நான் மக்களவையில் சபாநாயகராக இருந்தபோது சென்னைக்கு வந்திருந்தேன். அப்போது ராஜாஜி அவர் களையும் அண்ணா அவர்களையும் டாக்டர் கருணாநிதி அவர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டபோது, அண்ணாவும் கருணாநிதியும் அருகருகே அமர்ந்திருந்தார் கள். அப்போது ராஜாஜி என்னிடம் அறிமுகப்படுத்தி வைக்கும்போது டாக்டர் கருணாநிதியைக் காட்டி, இவர்தான் தமிழ்நாட்டின் வருங்கால முதலமைச்சர் என்று அப்போதே எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப் போதே ராஜாஜி அவர்கள், கருணாநிதி மிகவும் சிறந்தவர், கண்ணியமானவர், பிரகாசிக்கப் போகிறவர் என்பதை அறிந்து வைத்திருந்தார். ராஜாஜியைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவரை உடம்பெல்லாம் மூளையைப் பெற்றவர் என்று சொல்வதுண்டு. நான் இங்கு வந்திருப்பதற்குக் காரணமே டாக்டர் கருணாநிதி அவர்களை வாழ்த்துவதற் காகத்தான். அவர் மிகவும் என்னிடத்திலே அன்பு கொண்டவர். அது மட்டுமல்ல, இந்த நாட்டிற்கு பல நல்லது செய்திருக்கிறார். எமர்ஜென்சியை எதிர்த்து தமது முதல் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய முன்வந்தவர். அந்த




குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி,
மத்திய அமைச்சர் முரசொலி மாறன், முதல்வர் கலைஞர்

அளவுக்கு எமர்ஜென்சியை எதிர்த்து நாட்டிற்கு அரும்பணி ஆற்றியவர் என்பதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். டாக்டர் கருணாநிதி 90 வயதிற்கு மேல் நிச்சயமாக வாழ்வார். அதே நேரத்தில் அவர் தமிழ்நாட்டிற்கு மட்டும் தொண்டாற்றுவது மாத்திரமல்ல, அவருடைய சேவை இந்தியாவிற்கே தேவை. அவருக்கு கருணாநிதி என்று பெயர்வைத்த அவரது பெற்றோர் மிக அருமையான பெயரை வைத்திருக்கிறார்கள். கருணை உள்ள அந்தப் பெயர் கொண்ட அவர், இந்திய மக்களுக்கே அவரது கருணையால் நன்மைகள் கிடைக்கச் செய்ய முன்வர வேண்டும்" என்றார்.

இப்படி அவர் பேசியபோது: எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவரை அழைத்து சட்டமன்ற மண்டபத்தில் பெருந்தலைவர் காமராஜர் படத்தைத் திறக்கச் செய்தாரே; அப்போதும் அவர் (சஞ்சீவ ரெட்டி) இதே "எமர்ஜென்சி" செய்தியைச் சொல்லி பேரவை மண்டபத்தில் என்னைப் பாராட்டியதை நினைவு கூர்ந்து நெகிழ்ந்து போனேன்.

"நெருக்கடி நிலை" தீதானது என்ற போதிலும் எவ்வளவு பெரிய உள்ளம் படைத்த தலைவர்களை எனக்கு நெருக்கமான நண்பர்களாக்கியிருக்கிறது என்ற பெருமிதம் ஏற்பட்டது.

தமிழகத்தில் திரைப்படத் துறை பிரச்சினைகள் குறித்து என்னிடம் கலந்து பேச வேண்டுமென்று, திரைப்படத் தயாரிப்பாளர்கள்- விநியோகஸ்தர்கள்- திரைப்பட அரங்கு உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளையேற்று அவர் களின் பிரதிநிதிகளை தலைமைச் செயலகத்துக்கு அழைத்து விவாதித்தேன். அதன் விளைவாக 9-6-1989 அன்று வெளி யிட்ட அறிக்கையில், கேளிக்கை வரியைக் குறைத்தும் - சினிமா அரங்குகளில் நியாயமான அளவு கட்டணத்தை உயர்த்திக் கொள்ள அனுமதித்தும்- குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான படங்களுக்கு 2 லட்சம் ரூபாய் முதல் 3 லட்சம் ரூபாய் வரையில் மானியம் வழங்குவது என்றும்- திரைப்படத் துறைக்குப் பல சலுகைகள் வழங்கப் படுமென தெரிவிக்கப்பட்டு; அந்தச் சலுகைகள் படிப்படி யாக விரிவாகக் கிடைக்கவும் கழக ஆட்சியில்தான் வழி காணப்பட்டது.



ஆளுநர் அலெக்சாண்டர், பிரதமர் ராஜீவ்காந்தி,
முதல்வர் கலைஞர், பா.ரா.

11-6-1989 அன்று திருச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்ற என்னை, செய்தியாளர்கள் சந்தித்தபோது "பிரதமர் ராஜீவ் காந்திக்கும் உங்களுக்கும் உறவுமுறை இப்போது எப்படியிருக்கிறது?" என்று கேட்டனர். அதற்கு நான் பதில் அளிக்கும் போது, "அவர் காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையிலும், நான் தி.மு.க. தலைவர் என்ற முறையிலும் எங்களிடையே அரசியல் ரீதியான உறவு இல்லை எனினும்; அவர் இந்தியப் பிரதமர் என்ற முறையிலும், நான் ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சர் என்ற முறையிலும் எங்கள் உறவு நன்றாகவே இருக்கிறது. இடையில் இந்த உறவைக் கெடுக்க தமிழ்நாட்டில் உள்ள ஒருசில அரசியல்வாதிகள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ராஜீவ் காந்தியைச் சுற்றி இருப்பவர்களைப் பயன்படுத்திக் கொண்டு தி.மு.க. அரசின் மீது சேறு வாரி இறைக்கும் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்" என்று கூறினேன்.

பின்னர் நான்கு நாட்கள் கழித்து பிரதமர் ராஜீவ் அவர்கள் ஆந்திராவிலிருந்து பீகார் செல்லும் வழியில் 15-6-1989 அன்று சென்னை விமான நிலையத்துக்கு வந்தார். விமான நிலையத்தில் ஆளுநர் அலெக்சாண்டர் அவர்களும், நானும், அமைச்சர்களும், முரசொலி மாறனும் வரவேற்றோம்.

விமானநிலையத்திலேயே ராஜீவும், நானும், மாறனும் தனியாகச் சென்று சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். இலங்கைப் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தையில் இடையில் தொய்வு ஏற்பட்டுவிட்டதையும், டெல்லிக்கு வந்ததும் தன்னை மாறன் சந்திக்க வேண்டுமென்றும் ராஜீவ் கூறினார்.

தி.மு. கழக அரசினைப் பாராட்டி 9-7-1989 அன்று "கல்கி" வார இதழ் ஒரு நீண்ட தலையங்கம் எழுதியிருந்தது. எவ்வளவுதான் கருத்து வேறுபாடுகள் இருப்பினும்; அவற்றைக் கண்ணியமாகச் சுட்டிக் காட்டுவதிலும்- அதே போலப் பாராட்டும் பண்பிலும் எப்போதுமே என்னைக் கவர்ந்த வார ஏடுகளில் கல்கியும், ஆனந்த விகடனும் முக்கியமானவைகளாகும்.

"கிருஷ்ணா திட்டம், எம்.ஜி.ஆர். ஆரம்பித்த திட்ட மாயிற்றே, அதை ஏன் நாம் தொடர வேண்டும்? முன்பு நாம் தொடங்கிய வீராணம் திட்டத்தை அ.தி.மு.க. அரசு "அம்போ" என்று விட்டுவிடவில்லையா? என்று முதல்வர் நினைக்கவில்லை. மாறாக, ஆந்திர முதல்வரைச் சந்தித்துப் பேசி, இருபதே நிமிஷங்களில் ஒரு நல்ல முடிவுக்கு வந்துள் ளார். யாருக்குமே புரியாத காரணங்களுக்காக எம்.ஜி.ஆர். முன்பு நிறுத்தி வைத்திருந்த தவணைத் தொகைகளையும் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். அடுத்தாற்போல் நடக்க வேண்டிய காரியங்களுக்கு ஒரு திட்டம் வகுத்துத் திரும்பியுள்ளார்.

இலவசங்கள் என்பது தற்காலிகமாகத்தான் இருக்க முடியும்; அது என்றென்றும் நீடித்தால் சமுதாயத்துக்குத் தீங்குதான் ஏற்படும்; மெய்யான முன்னேற்றம் என்பது மக்கள், தாங்களே தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளக்கூடிய முறையில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் என்ற அர்த்தமுள்ள சொற்களைக் கூறியிருக்கிறார் முதல்வர். சொல்லைச் செயலாக்கும் நோக்கில் தமிழகத்தைத் தொழில் மயமாக்குவார் என்று நம்புகிறோம்."

இவ்வாறு எழுதப்பட்டுள்ள "கல்கி" தலையங்கத்தில், ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அரசுடைமை ஆக்கியதையும், எம்.ஜி.ஆர். பெயரால் மருத்துவப் பல்கலைக் கழகம் திறப்புவிழா நடத்தியதையும்; பெருந்தன்மைக்கு உதாரணங்கள் என்று குறிப்பிட்டுவிட்டு: "நாங்கள் எங்களை விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதுவதாக நினைத்து விட வேண்டாம்; விமர்சனங்களை வரவேற்கவே செய்கிறோம் என்று பத்திரிகையாளர் கூட்டத்தில் முதல்வர் பேசியிருப்பது அவர் மனம் பக்குவப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்துகிறது" என்று பாராட்டியுள்ளதுடன்; முத்தாய்ப்பாக, "அரசியல்வாதி என்ற நிலையிலிருந்து அரசியல் ஞானி நிலைக்கு முயற்சி செய்து கொண்டிருப்பதை முதல்வர் சொல்லாலும் செயலாலும் நிரூபித்து வருகிறார்"

என முடிப்பது மாத்திரமல்ல, எனக்கு எச்சரிக்கையாக "சரிந்து விடாமல் அவர் முன்னேற வாழ்த்தும் போதே, இந்த மலைப் பாதையில் வழுக்குப் பாறைகள் மிகுதி என்றும் உஷார்படுத்தி வைக்கிறோம்" என்றும் எழுதியது.

அந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டதைப் போலவே 1-7-1989 அன்று ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியும், அதன் ஆராய்ச்சி நிறுவனமும் அதனைச் சார்ந்த மருத்துவமனையும் தமிழக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு; ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி என்ற பெயரே தொடருமென்றும் அறிவிக்கப்பட்டு; அதே வளாகத்திற்குள் "தாமரை" என்ற ஒரு தன்னாட்சி பெற்ற உயர்மட்ட மருத்துவ அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொடக்க விழாவும் 12-7-1989 அன்று நடைபெற்றது.

கல்கி போன்ற ஏடுகளும், மற்றும் பலரும் பாராட்டத்தக்க வகையில் அரசுடைமையாக்கப்பட்ட ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி பற்றி இந்த இடத்திலே ஒரு முக்கிய செய்தியைக் கூறியாக வேண்டும்.

1991-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு அ.தி.மு.க. வந்த நிலையில்; ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியின் அறக் கட்டளையினர் அக்கல்லூரி அரசுடைமையாக்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

வேடிக்கை என்னவென்றால்; தி.மு.க. ஆட்சியில் அந்தக் கல்லூரியை அரசுடைமை ஆக்க முனைந்தபோது கல்லூரி யின் அறக்கட்டளையினரே அவர்கள் குழுவில் ஒப்புதல் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு வழங்கியதுடன்; அரசுடைமையாக்கிய விழாவிலும் கலந்துகொண்டு வாழ்த்தி விட்டு; பிறகு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும்; அரசுடைமை ஆக்கியதை எதிர்த்து வழக்கு தொடர்ந்ததுதான்!

உயர்நீதிமன்றத் தீர்ப்பில், ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அரசுடைமையாக்கப்பட்டது செல்லாது என அறிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க. அரசு, அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்லும் என்று அனைவருமே எதிர்பார்த்தனர். ஆனால் அரசு உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, உயர்நீதி மன்ற தீர்ப்புப்படி அந்த மருத்துவக் கல்லூரியை அந்தத் தனியார் அறக்கட்டளைக்கே விட்டுக் கொடுத்து விட்டது.

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை உருவாக்கி நடத்திய போதே, அதற்கான நிலம் கையகப்படுத்துதல்- அது அரசு நிலமா? தனியார் நிலமா? போன்ற பிரச்சினைகள் பலவாறாக இருந்ததையெல்லாம் எடுத்து விளக்கித்தான் அந்தக் கல்லூரி அமைப்புக் குழுவினரிடம் கலந்து பேசி, அவர்களே தி.மு.க. அரசு எடுத்துவைத்த நியாயத்தை உணர்ந்து, அவர்களது குழுவில் ஒப்புதல் தீர்மானமே நிறைவேற்றுகிறார்கள்.

பின்னர் கழக ஆட்சி மாறியதும், நீதிமன்றத்துக்குப் போகிறார்கள். சென்னை நீதிமன்றத்தில் அவர்களுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைத்ததும்; அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டிய அ.தி.மு.க. அரசு, அதற்கு மாறாக அவசர அவசர மாக அமைச்சரவையைக் கூட்டி, அந்தக் கல்லூரியை அந்தத் தனியார் அறக்கட்டளையிடமே ஒப்படைத்து விடுகிறது.

இதன் மர்மம் என்ன? அதனை ஆராய்ந்து பயனில்லை! எப்படியோ அந்த ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியும் அதன் தொடர்புடைய மருத்துவமனையும் இப்போதும் திறமையானவர்களால் நடத்தப்படுகிறது எனினும்; அது அரசுடைமையாக்கப்பட்டதற்கும் பின்னர் தனியுடைமை யானதற்கும் இடையே உள்ள மர்மக்கதையின் முடிச்சை அவிழ்த்து உண்மை உணரும் உரிமையை வாசகர்களுக்கே விட்டு விடுகிறேன்.

10 "நடந்தாய் வாழி காவேரி!"

நான் பிறந்த வருடமான 1924க்கும் காவிரிப் பிரச்சினைக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. அப்போதுதான் மைசூர் ராஜ்யமாக இருந்த கர்நாடக மாநிலத்துக்கும், சென்னை ராஜதானியாக இருந்த தமிழ்நாட்டுக்கும் காவிரி சம்பந்தமான நதிநீர்ப் பங்கீட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும் ஐம்பது ஆண்டுக்குப் பிறகு காவிரியில் வரக்கூடிய உபரி நீரை இரு மாநிலங்களும் எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பது பற்றி கலந்து பேசி அதனை முறைப்படுத்திக் கொள்வதற்கான அடிப்படையில் முடிவெடுப்பது என்றும், ஒருவேளை அதில் பிரச்சினை ஏற்படின் மத்திய அரசை நாடியோ, நடுவர் தீர்ப்பை நாடியோ, உரிய முடிவெடுக்கக் கூடிய வழிவகை காண்பது பற்றி தீர்மானித்திட ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1974-ஆம் ஆண்டு ஆய்வு செய்யலாம் என்பதும்தான் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தமாகும்.

இடைப்பட்ட ஐம்பதாண்டு காலமும் பெரும்பகுதி பிரச்சினைகள் எதுவும் அதிகமின்றி நிலைமை இருந்ததற்கு மாறாக; 1974-க்கு முன்பே கர்நாடக மாநில அரசினர், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தமே 1974-ஆம் ஆண்டு முடிந்து விடுகிற ஒப்பந்தமென்று வாதிடத் தலைப்பட்டு; அதற்கு முன்னதாகவே 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப் பிரிவுகளுக்கு மாறாக 1968-ஆம் ஆண்டு ஹேமவதி, ஹேரங்கி அணைகளைக் கட்டத் தொடங்கிவிட்டனர்.

அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இருந்த கழக அரசு, தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன்;

மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமென்றும் கோரியது.

மத்திய அரசு செய்த ஏற்பாட்டின்படி 19-8-1968 அன்றும் 20-8-1968 அன்றும் டெல்லியில் காவிரித் தொடர்புடைய மாநில அரசுப் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது. அந்தப் பேச்சு வார்த்தையை மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே.எல். ராவ் அவர்கள் முன்னிலை வகித்து நடத்தினார். கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் பொதுப்பணித் துறைக்கும் அமைச்சர் என்ற முறையில் கலந்துகொண்டார். நான், தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையில் சட்ட அமைச்சர் மாதவனுடன் சென்று கலந்துகொண்டேன். முக்கியமாக 1892, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் மீறப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் வாதமாக எடுத்து வைக்கப்பட்டது. முடிவு எதுவும் தோன்றவில்லை.

பின்னர் 1969-ல் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு 1970 பிப்ரவரி 9-ஆம் நாள், மீண்டும் கே.எல். ராவ் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதிலும் மகிழ்ச்சியடையக் கூடிய முடிவு எதுவும் ஏற்படவில்லை.

தமிழக மக்கள், தங்களின் அன்னையாக - அருள்பாலிக்கும் தெய்வமாக- அன்பு மருமகளாக ஆண்டாண்டு காலமாக ஏற்றுப் போற்றி வரும் காவிரியைப் பிரிந்து விட நேரிடுமோ என்ற கவலையில் ஆழ்ந்தனர். அந்தக் கவலை இன்னும் முழுமையாகத் தீர்ந்திடாத நிலையிலேயே நான் இதனை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

காவிரியின் மீது எத்துணை அன்பும், பக்தியும், மரியாதையும் தமிழ் மக்கள் கொண்டுள்ளனர் என்பதற்கு நமது பழைய இலக்கியங்கள் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. ஆண்டு தோறும் ஆடிப்பெருக்கின் போது ஆடவரும், பெண்டிரும் கொண்டாடி மகிழும் விழாக்கள் சான்றாக விளங்குகின்றன. இவற்றைச் சுட்டிக்காட்டும்பொழுது 1975-ஆம் ஆண்டு; தமிழக அரசின் சார்பில் காவிரிப்பூம்பட்டினத்தை புதிய

பூம்புகாராக உருவாக்கிப் பெருவிழா கொண்டாடிய நாளில் நடைபெற்ற கவியரங்கில் நான் பாடிய நீண்ட கவிதையில் காவிரி பற்றிக் குறிப்பிட்ட பகுதி நினைவுக்கு வருகிறது.

"குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் "அணை" என்றான் – அவன்
கையணையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து – தன்
கற்புநெறி காப்பதற்குத் தஞ்சைக்குத் தாவி வந்தாள்
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழ மன்னன்
பூம்புகாரின் கடல் அலையைக் கணவனாய் ஆக்கிக் காத்தான்
பிறந்த வீட்டை மறந்திடாமல் – என்றும்
புகுந்த வீட்டு வளமும் பெருக வாழ்வதுதான்
பெண்மணிக்குப் பெருமையென்றால் – நம்
கண்மணியாம் காவிரிக்கும் அது பொருத்தம்தானே?"

"நடந்தாய் வாழி காவேரி" என்று இளங்கோவடிகள் சிலப் பதிகாரம் யாத்துத் தந்த இலக்கிய காலத்துக்கு முன்பிருந்தே எத்தனையோ நூற்றாண்டுகளாக;

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்து"

தமிழ் மங்கையர், மறவர், மழலையர் என இந்த மண்ணின் மைந்தர் களித்திடக் களித்திட, சதங்கை கட்டி ஆறுகளில் வாய்க்கால்களில் ஓடைகளில் சங்கீத ஒலியெழுப்பி வந்து கொண்டிருக்கும்; காவேரி காய்ந்து போனால் கருகிப் போகுமே கழனியை நம்பியுள்ள உழவர் வாழ்வும் - அந்த உழவர்களை நம்பியுள்ள அனைத்து மாந்தரின் வாழ்வும் - என்ற கவலை, ஆட்சியிலிருந்தாலும் இல்லாவிடினும் எனக்கு என்றுமே உண்டு. ஏனெனில் இந்த உலகிற்கு நான் வந்து முதலில் எழுப்பிய குரல், காவிரிக்கரை ஓரத்திலேதான்!

காவிரியை நம்பியுள்ள கோடிக்கணக்கான மக்களால் அந்தப் பிரச்சினை தமிழகத்தின் வாழ்வுப் பிரச்சினையாகவே கருதப்பட்டது.



காவிரி ஆற்று நீரில் சிறுவர்கள் குதித்து விளையாடும் காட்சி.


தேசிய உணர்வு - ஒருமைப்பாடு - ஒரே நாடு - இந்த அடிப் படைகளில் மட்டுமல்லாமல் பழைய ஆயக் கட்டுகளின் உரிமை என்ற சட்ட விதிமுறைகளின் படியும் காவிரிப் பிரச் சினையில் தமிழகத்தின் குரல் அழுத்தம் திருத்தமான நியாயத்தின் அடிப்படையில் எழுந்ததேயாகும்.

திரும்பத் திரும்ப நமது வலியுறுத்தலினால் 1970 ஏப்ரல் 17, மே 16, அக்டோபர் 12, மற்றும் அக்டோபர் 27 ஆகிய நாட்களில் மாநில முதலமைச்சர்கள் மட்டத்தில் நடத்திய பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை.

எனவே 1971 ஜூலை 8-ஆம் நாள் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று கழக அரசு சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. தொடர்ந்து ஆகஸ்ட் திங்களில் நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசிற்கு ஆணை வழங்கக் கோரி உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. கர்நாடக அரசு, புதிய அணை கட்டும் வேலைகளைத் தொடராமல் தடுக்கவும், நடுவர் மன்றத்திற்கு பிரச்சினையை விடவும் தஞ்சை விவசாயிகள் சார்பில் முரசொலி மாறன் ஒரு வழக்கு தொடுத்தார். 21-5-1972 அன்று தமிழகத்திற்கு வருகை தந்த பிரதமர் இந்திரா காந்தி, வழக்கு இல்லாமலே பேச்சு வார்த்தை மூலமே சுமுகத் தீர்வு காணலாம் என்று உறுதி கூறியதின் பேரில், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி வழக்கை, தற்காலிகமாகத் திரும்பப் பெறுவதென முடிவெடுக்கப்பட்டது. அதன் பிறகு 29-5-72, 29-4-73, 9-10-73, ஆகிய நாட்களில் மத்ய பாசன அமைச்சர்கள் கே.எல். ராவ் முன்னிலையிலும், 27-6-74 அன்று கே.சி. பந்த்

முன்னிலையிலும், 29-11-1974, மற்றும் 15-2-75 ஆகிய நாட்களில் பாபு ஜெகஜீவன்ராம் முன்னிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. எனினும் மத்திய அரசால் தயாரிக்கப்பட்ட வரைவு ஒப்பந்தம் தமிழகத்தின் பாசனத் தைப் பாதுகாக்கும் அளவுக்கு மேட்டூரில் தேவைப்படும் நீர் கிடைப்பதற்கான உத்தரவாதம் அளிக்காததால் இரவு முழுதும் விடிய விடியப் பேசியும் இந்த ஒப்பந்தம் ஏற்கப்பட வில்லை.

பேச்சுவார்த்தைகள் பலனளிக்காததால் அனைத்துக் கட்சிகளைக் கலந்தாலோசித்து தமிழக அரசு மத்திய அரசினை நடுவர் மன்றம் அமைக்குமாறு கோரி 1975 மே திங்களில் கடிதம் எழுதியது. 25-8-1976 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சியில் மத்திய அரசால் மீண்டும் ஒரு வரைவு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். தலைமையில் இருந்த அ.தி.மு.க. அரசும் அந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. தொடர்ந்து 5-8-78, 3-9-78, 9-10-78, 18-9-80, 27-12-80, 13-8-81 ஆகிய நாட்களில் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் முன்னிலையிலும், 14-10-81 மற்றும் 15-10-81 ஆகிய நாட்களில் தமிழக, கர்நாடக மாநில அரசுகளின் இடையேயும் 5-4-83 அன்று மத்திய அமைச்சர் ராம் நிவாஸ் மிர்தா அவர்கள் முன்னிலையில் இரண்டு மாநில முதலமைச்சர்களும், 5-1-84 அன்று பெங்களூரில்



1975ல் டில்லியில் நடைபெற்ற காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்த கூட்டத்தில் கேரள முதல்வர் அச்சுதமேனன், கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ், மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம், தமிழக முதல்வர் கலைஞர்.

இரண்டு மாநில முதல் அமைச்சர்களும், 5-11-1985 அன்று அதிகாரிகள் மட்டத்திலும், பேச்சுவார்த்தை நடைபெற்றது.


23-11-85 அன்று சென்னையில் தமிழக, கர்நாடக மாநில முதல் அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதும் பயன் எதுவும் ஏற்படாததால், வேறு வழியின்றி, நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று தமிழகத்தின் சார்பில் கோரப்பட்டது. 16-6-1986 அன்று மத்திய அமைச்சர் பி. சங்கரானந்த் முன்னிலையில் மாநில முதல் அமைச்சர் களிடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. 6-7-1986 அன்று நடுவர் மன்றம் அமைக்கக் கோரி மத்திய அரசுக் குக் கடிதம் அனுப்பப்பட்டது. மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்ற மத்திய அரசின் விருப்பத்திற்கு தமிழக அரசு இணங்கவில்லை. தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமை பாதுகாப்புச் சங்கம் தொடுத்திருந்த வழக்கில் உச்சநீதிமன்றம் மீண்டும் ஒரு முறை பேச்சுவார்த்தை நடத்த உத்தரவிட்டது. இதை யொட்டி 19-9-1988 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பலனளிக்காததால், நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசிற்கு ஆணை வழங்கும் பொருட்டு உச்சநீதிமன்றத்தில் 25-9-1988 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டது. 18-10-1988 அன்று பிரதமருக்கும் கடிதம் எழுதப்பட்டது.

1989-இல் கழக அரசு மூன்றாவது முறையாகப் பொறுப் பேற்றவுடன் இதற்கு முடிவு காண முற்பட்டபோது கர்நாடக அரசு கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. எனினும் கர்நாடக மாநில ஆளுந ரோடு 8-8-1989 அன்று பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதால் அப்போது சுமுகமான முடிவு காண முடியாவிட்டால் உடனடியாக நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் 27-7-1989 அன்று தலைமைச் செயலகத்தில் நடை பெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

8-ந்தேதி பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று கடிதம் மூலம் கவர்னர் ஒப்புக்கொண்ட நிலையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றிய போதிலும், திடீரென்று கர்நாடக கவர்னர் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசோடு பேச்சுவார்த்தை நடத்தினால் தான் பயனுள்ளதாக இருக்குமென்று கடிதம் மூலமும் ஏடுகள் மூலமும் தெரிவித்து விட்டார். இதற்கிடையே நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய முன்னணி வெற்றிபெற்று திரு. வி.பி. சிங் பிரதமராக 2-12-1989 அன்று பொறுப்பேற்றுக் கொள்கிறார். அவர் பிரதமர் பொறுப் பேற்ற பிறகு காவிரிப் பிரச்சினையில் ஏற்பட்ட திருப்பங்கள் காரணமாக அவற்றைத் தொடர்ந்து 1999 வரையிலான சில முக்கிய முன்னேற்றங்களை இந்த அத்தியாயத்திலேயே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

அரசின் சார்பில் பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கு; நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கடிதம் எழுதி னேன். அதனையொட்டி டெல்லியில் மத்திய நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கூட்டியிருந்த காவேரி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல்வர்கள் கூட்டத்தில் நான் உரையாற்றும் போது 1968-ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற கூட்டத் திலே நான் பொதுப் பணித்துறை அமைச்சராகவும், வீரேந்திர பட்டீல் முதல் அமைச்சராகவும் இருந்து தொடங்கிய பேச்சுவார்த்தை 22 ஆண்டுகளுக்குப் பிறகும் அதே பிரச்சினைக்காக 24 கூட்டங் கள் நடைபெற்று முடிந்த பிறகு 25-வது தடவையாகப் பேச்சுவார்த்தை நான் முதல்வ ராகவும், வீரேந்திர பட்டீல் அவர்கள் முதல்வராகவும் இருந்து நடைபெற்றுக் கொண்டுள்ளது. இந்தக் காலகட்டத் தில் மத்தியிலே நீர்ப்பாசனத் துறை அமைச்சர்களாக இருந்த டாக்டர் கே.எல். ராவ், கே.சி. பந்த், ஜெகஜீவன்ராம், ராவ் பிரேந்திரசிங், ராம்நிவாஸ் மிர்தா, பி. சங்கரானந்த் ஆகியோ ரால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியவில்லை. 1970-ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு விட வேண்டுமென்று தி.மு.க. அரசினால் விடுத்த கோரிக்கை



காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்து முதல்வர் கலைஞர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்.

1975-ஆம் ஆண்டு தி.மு.க. அரசினால் புதுப்பிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். அரசினால் 1986-ஆம் ஆண்டும் ஆளுநரால் குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1988-ஆம் ஆண்டும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் அந்தக் கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை. தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தையில் முடிவு ஏற்படாவிட்டால் உடனடியாக இதனை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்ப வேண்டுமென்று குறிப்பிட்டேன். அதற்குப் பிறகும் பேச்சு வார்த்தையிலே முடிவு வராததால் பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் வி.பி. சிங் அவர்களைச் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றினை அளிக்க முடிவு செய்யப்பட்டது. அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த மனுவினை அளிக்க சேர்ந்து வருவதாக முதலில் ஒப்புக் கொண்ட போதிலும், கடைசி நேரத்தில் வர மறுத்து அவர்கள் தனியாகச் சென்று ஒரு மனுவினை பிரதமரிடம் அளித்தார்கள். ஆனால் அவர்கள் பிரதமரிடம் அளித்த மனுவின் முதல் வாக்கியமே கர்நாடகாவின் வாதத்தை வலுப்படுத்துவது போல 1924-ஆம் ஆண்டின் காவேரி ஒப்பந்தம் '1974-ஆம் ஆண்டோடு முடிந்து விட்டது என்பதாகும். அதனை ஏடுகளில் படித்து விட்டு தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துத் தரப்பினரும், பத்திரிகைகளும் அ.தி.மு.க.வைக் கண்டித்தனர்.


தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயச் சங்கத்தின் சார்பில் திரு. ரெங்கநாதன் உச்சநீதிமன்றத்தில் தொடுத் திருந்த வழக்கு விசாரணை வேகமாக நடைபெற்றுக் கொண் டிருந்தது. உச்ச நீதிமன்றம் மத்திய அரசின் கருத்தினை உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டது. உடனே பிரதமர் வி.பி. சிங் என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு மத்திய அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் என்ன தெரிவிக்கலாம் என்று கேட்டார். இனிமேல் நாங்கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இல்லை, இதைத் தெளிவாக்கி விடுங்கள், அப்போதுதான் எங்களுக்கு நடுவர் மன்றம் கிடைக்குமென்றேன். அதனையொட்டி உடனடியாக 24-4-1990 அன்று சட்டப் பேரவையில் தீர்மானத்தையும் நிறைவேற்றி பிரதமருக்கு அனுப்பி வைத் தோம். அது மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இனி பேச்சு வார்த்தை இல்லை யென்றால் நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிடுகிறோம் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

நடுவர் மன்றம் அமைந்த பிறகு, இந்தப் பிரச்சினையை முழுவதும் விசாரித்து தீர்ப்பு சொல்வதற்கு நீண்ட நாளாகும் என்பதால் ஒரு இடைக்காலத் தீர்ப்பு வழங்குங்கள் என்று கழக அரசின் சார்பில் 28-7-1990 அன்று வேண்டுகோள் விடுத்தோம். 5-1-1991 அன்று நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்க எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றது. நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்று தீர்ப்பு அளியுங்கள் என்று உச்சநீதிமன்றத்திடம் 10-1-1991 அன்று கழக ஆட்சியிலே ஒரு வழக்கு தொடர்ந்து "அதிகாரம் உண்டு" என்று 26-4-1991 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நடுவர் மன்றம் அளித்த இடைக்கால ஆணைதான் ஆண்டு ஒன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தமிழகத்திற் குத் தர வேண்டும் என்பதாகும். இந்த ஆணைப்படி கர்நாடக அரசு ஆண்டுதோறும் தமிழகத்திற்குத் தண்ணீர் வழங்க மறுத்த நிலையிலேதான் இடைக்கால ஆணையை நிறை

வேற்றுவதைப் பற்றிக் கண்காணிப்பதற்காக ஒரு ஆணையம் அமைக்க வேண்டுமென்று கோரி பிரதமர் வாஜ்பாய் அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து வைத்து 9 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி அதிலும் தற்போது வெற்றி கிடைத்துள்ளது. அதற்கான ஒப்பந்தம் 1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் வாரத்தில் ஏற்பட்டபோது தமிழகத் திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள், தமிழ், ஆங்கில நாளேடுகள், வார இதழ்கள் அனைத்தும் அந்த ஒப்பந்தத்தை வரவேற்றுப் பாராட்டியிருந்தன. ஆனால் ஜெயலலிதா மட்டும் தங்களுக்கு உடன்பாடான ஒப்பந்தம் அல்ல, நிராகரிக்கிறோம் என்று அறிக்கை விடுத்தார். இந்த இடைக்கால ஆணையை நிராகரிக்க வேண்டுமென்று கர்நாடக மாநில சட்டப் பேரவை 1991-ஆம் ஆண்டிலேயே தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் தற்போது 1998-இல் பிரதமர் முன்னிலையிலே ஏற்பட்ட ஆணையம் அமைக்கும் ஒப்பந்தத்தின்படி கர்நாடக மாநிலம் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையான 205 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டது.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காவிரி பிரச்சினைக்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற போது அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி தி.மு. கழகம் கலந்து கொண்டது. ஆனால் தி.மு.கழக ஆட்சியில் 1989-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டபோது அ.தி.மு.க. கலந்து கொள்ளவில்லை. கலந்து கொள்ளாதது மாத்திரமல்ல, தி.மு.கழகத்தைக் கடுமையாக விமர்சித்து ஜெயலலிதா அறிக்கையும் விடுத்தார். அதுபோலவே 1991-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அ.தி.மு.க. அரசு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டியபோது தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பே அனுப்ப வில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், மாநிலங் களவை உறுப்பினராக இருந்த நல்லசிவன் அவர்களுக்கு முதலில் அந்தக் கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பிவிட்டு



மேட்டூர் அணை

பிறகு அதனைத் திரும்பப் பெற்றுக் கொண்ட அநாகரீகமும் நடை பெற்றது.

எப்படியோ நீண்ட கால இன்னல்களைச் சந்தித்து; 1998-இல் காவிரி ஆணையம் ஒன்று பிரதமர் தலைமையில் அமைக்கப்பட்டாலும் கூட; நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரையில் தமிழகம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டிய நிலைதான் இன்று வரையில் இருக்கிறது.

இரு மாநில மக்களும் மகிழத்தக்க அந்த இறுதித் தீர்ப்பு வந்த பின்னர்தான் "நடந்தாய் வாழி காவேரி" என்ற சிலப் பதிகாரத்தின் கவிதை வரிகளை நம்மால் உரக்க இசைக்க முடியும். உளமார இசைக்க முடியும்.

11

முஜிபூர் தோற்றமும், முடிவும்

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியையும், மருத்துவ மனையையும் தி.மு.க. ஆட்சியில் அரசாங்கம் எடுத்துக் கொண்டது பற்றியும், அ.தி.மு.க. ஆட்சியில் அது மீண்டும் தனியார் வசமானதைப் பற்றியும் ஒன்பதாவது அத்தியாயத்தில் விளக்கியிருந்தேன். அந்த மருத்துவமனையிலேதான் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் தற்காலிக மாகத் தொடங்குவதாக இருந்தேன். உயிரோடு இருப்பவர் களின் பெயர்களை எந்தவொரு அரசு கட்டிடத்திற்கும் சூட்டக் கூடாது என்பது எம்.ஜி.ஆர். அரசின் கொள்கை. ஆனால் அவருடைய ஆட்சியிலேயே மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டது. அதன் தொடக்க விழா நடைபெறும் சமயத்தில் எம்.ஜி.ஆர். மறைந்து விட்டார். அதன் பிறகு ஜானகி அம்மையார் ஆட்சியிலும், ஆளுநர் ஆட்சியிலும் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு நல்ல இடம் கூட ஒதுக்கப்படவில்லை. தரமணி என்ற இடத்திலே ஒரு சிறிய வாடகை வீட்டில் அது அனாதையாக இயங்கி வந்தது.

அதுமட்டுமல்ல; அந்தப் பெயரேகூட மறந்து போய் விட்டது. உதாரணமாக, 24-6-1989 அன்று காலையில் சென்னை பிரசிடெண்ட் ஓட்டலில் உள்ள மண்டபத்தில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியின் சார்பில் தீப்புண் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை சீராக்க அறுவை சிகிச்சைத் துறையின் 15-வது ஆண்டு விழா நடைபெற்றது. அந்த விழாவில் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி, அமைச்சர்

டாக்டர் பொன்முடி, டாக்டர்கள் கலா நிதி, மாதங்கி, லலிதா காமேஸ்வரன், லலிதா அனந்தசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அந்த விழாவில் எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் மருத்துவப் பல்கலைக் கழகம், மருத்துவப் பல்கலைக்கழகம் என்றே குறிப்பிட்டுப் பேசினார்கள். அதைக் கவனித்த நான் பேசும்போது, "இங்கே பேசிய அத்தனை பேரும் மருத்துவப் பல்கலைக் கழகம் என்று குறிப்பிட்டார்களே அல்லாமல், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் என்று யாருமே குறிப்பிடவில்லை. எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் என்று அந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் உட்பட யாருமே குறிப்பிடவில்லை. ஒருவேளை துணை வேந்தருக்கு அப்படிச் சொன்னால் முதல் அமைச்சர் கருணாநிதிக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்று பயம் வந்திருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் அப்படி எண்ணக் கூடியவன் அல்ல நான். அதனால்தான் சட்டமன்றத்திலே எம்.ஜி.ஆர். அவர்களின் அன்னையார் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் பெயர் மாற்றப் படுமா என்று ஒரு உறுப்பினர் கேட்டபோது - என் தாயின் பெயர் மாற்றப்பட்டது அந்தக் காலம், அத்தகைய குறுகிய நோக்கம் இந்த அரசிற்குக் கிடையாது என்று நான் பதில் கூறியதை எண்ணிப் பார்த்து தைரியமாக துணை வேந்தர் போன்றவர்கள் அவர் எந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருக்கிறார் என்பதை தைரியமாகச் சொல்லலாம். நான் இங்கே பார்த்தேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் மருத்துவப் பல்கலைக் கழகம் என்றார், உணவமைச்சரும் மருத்துவப் பல்கலைக் கழகம் என்றார். பேசிய அத்தனை பேருமே- கலாநிதி உட்பட மருத்துவப் பல்கலைக் கழகம் என்று மட்டுமேதான் சொன்னார்கள். இங்கு நான் கூறிக் கொள்கிறேன், "டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம்" மிக விரைவில் நல்ல உயர்ந்த மாட மாளிகை போன்ற கட்டிடங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கக்கூடிய அளவிற்கு அமையும்" என அறிவித்தேன்.


நான் அறிவித்தவாறு 31-8-1989 அன்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவும், பல்கலைக் கழகக் கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது. அந்த விழாவிற்கு தமிழக ஆளுநர் அலெக்ஸாண்டர் தலைமை வகித்தார். குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் பல்கலைக் கழகத்தினைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். பல்கலைக் கழகக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி நான் உரையாற்றினேன். அந்த விழாவிலே நான் உரையாற்றும் போது, "40 ஆண்டுக் காலம் கலைத்துறை, அரசியல் துறை ஆகிய இரண்டு துறைகளிலும் என்னோடு தோளோடு தோள் நின்ற எனது அருமை நண்பர், மறைந்த முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் தொடங்கப்பட்டு- ஆனால் அதிகாரபூர்வமாக இதுவரையில் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெறாமல் இருந்து இன்று நடைபெறுகிறது. "முகம் நக நட்பது நட்பன்று நெஞ்சத் தகம் நக நட்பது நட்பு" என்ற வள்ளுவரின் குறள் மொழிப்படி நட்பின் இலக்கணத்தை இதயத்தில் பதித்து இன்று தமிழக அரசின் சார்பில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழா நடைபெறுகிறது" என்று கூறித்தான் என்னுடைய உரையைத் தொடங்கினேன். அந்தப் பல்கலைக் கழகத்திற்கான கட்டிட வடிவமைப்பைக்கூட நானேதான் வரைந்து கொடுத்தேன்.

எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற அடுத்த ஆண்டே கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தால் அந்தப் பணிகள் செல்வி ஜெயலலிதா ஆட்சியில் விரைவாக நடைபெறவில்லை. மீண்டும் நான்காவது முறையாக 1996-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கட்டிடப் பணிகளைத் துரிதப்படுத்தி 31-7-1998 அன்று குடியரசுத் துணைத் தலைவராக இருந்த திரு.கிருஷ்ணகாந்த் அவர்களை அழைத்து ஆறு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டன. கட்டிட முகப்பில் அமைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையினை நான் திறந்து வைத்து

உரையாற்றினேன். ஆளுநர் திருமதி பாத்திமா பீபி நிகழ்ச் சிக்குத் தலைமை தாங்க, விழாவில் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி, மத்திய அரசின் இன்றைய தொழில் அமைச்சர் முரசொலி மாறன், ஆர். எம். வீரப்பன், எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

4-8-1989 அன்று எத்திராஜ் மகளிர் கல்லூரி நிறுவனர் வி.எல். எத்திராஜ் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்ட நான், அந்தக் கல்லூரி இருக்கின்ற சாலைக்கு எத்திராஜ் சாலை என்று பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தேன். அன்றைய தினமே தமிழகத்திலே உள்ள பெரிய தொழிலதிபர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திற்கு அழைத்து தமிழகத்திலே தொழில் வளம் பெருகவும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவும், புதிய பல தொழிற்சாலைகளை அமைக்கவும் ஆலோசனை நடத்தினேன். அரசின் சார்பில் தொழில் அதிபர்கள் தொழில் தொடங்கத் தேவையான அனைத்து உதவி களும் தாமதமில்லாமல் கிடைக்குமென்றும் உறுதி அளித் தேன். தேர்தல் நிதி வாங்குவதற்காக மட்டுமே இதுவரை தங்களை அமைச்சர்கள் சந்தித்திருப்பதாகவும், அப்போது தான் முதல் முறையாகத் தொழில் வளத்தைப் பெருக்குவதற் காக அரசு அழைத்திருப்பதாகவும் அந்தக் கூட்டத்தில் தொழிலதிபர்கள் தெரிவித்தது இன்னமும் நினைவிலே உள்ளது.

6-8-1989 அன்று சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்களின் 125-வது படமான "ராஜாதி ராஜா" திரைப்பட வெற்றி விழாவிலே கலந்துகொண்டு அதிலே சிறப்பாக நடித்த ரஜினிகாந்த் அவர்களுக்கும் மற்ற கலைஞர்களுக்கும் நினை வுப் பரிசுகளை வழங்கினேன். ரஜினி தனது நன்றியுரையில், எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையிலே கட்சியையும் உடன் பிறப்புகளையும் நான் காப்பாற்றி விட்டதாகவும், தமிழகத் தையும் இந்தத் தலைமுறையையும் என்னால்தான் காப்பாற்ற முடியுமென்றும் கூறினார். நான் உரையாற்றும்போது, "ரஜினி எவ்வளவு எளிய நிலையிலேயிருந்து உயர்ந்திருக்கிறார்



டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துவக்க விழாவில் (இடமிருந்து வலம்) ஆளுநர் அலெக்ஸாண்டர், குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன், தமிழக முதல்வர் கலைஞர்.

என்பதை எண்ணி யெண்ணி நான் பூரித்துப் போனதுண்டு. எளிய நிலையிலே இருந்து உயர்ந்தவர்கள் சில நேரங் களில் ஆணவம் பிடித்து அலைவார்கள். அடங்கா பிடாரித்தனமாக இருப் பார்கள். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசு வார்கள். இவைகளுக்கெல் லாம் நேர்மாறாக படத் திலே தான் ரஜினியின் ஆர்ப்பாட்டங்கள் அதிகமே தவிர-வாழ்க்கையிலே ஒரு அடக்கமான மனிதராக ரஜினி இருப்பதை நான் ஏதோ உபச்சாரத்திற்காகச் சொல்கின்ற வார்த்தையெனக் கருத வேண்டாம். நான் பல முறை சாலையிலே அவர் காரிலே செல்கின்ற நேரத்தில் அவரே எதிரே காரை ஓட்டிக் கொண்டு வருவதைப் பார்த்திருக் கிறேன். அப்போதுகூட காரை நிறுத்தி விட்டு அவர் வணக்கம் செய்கின்ற பாங்கும் அதிலே இருக்கின்ற பணிவும் மரியாதையும் என்னை மிகவும் கவர்ந்தது உண்டு. அவர் தன்னை ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக் கொள்வதில்லை. ஒரு கட்சியின்பால் ஆதரவு காட்டுபவர் என்று சொல்லிக் கொள்வதில்லை. சொல்லிக் கொள்வ தில்லை என்றாலும்கூட அவருடைய உள்ளத்தில் இந்த நாட்டிற்கு, சமுதாயத்திற்குத் தேவையான சில கருத்துக் களைப் பதிய வைத்திருப்பது அவருடைய உரிமை. ஆனால் வெளிப்படையாக யாருடைய மனதையும் புண்படுத்தாமல் ஒரு நடிகர் என்கின்ற முறையில் நடு நிலையோடு இன்றைக்குத் திரைவானிலே அவர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். எந்த வம்புக்கும் போகாதவர். வந்த வம்பை விடாதவர். எனவே திரைவானத்தில் என்றைக்கு அவர் தோன்றினாரோ அதுமுதல் இதுவரையில் ஒரு நிலையான இடத்தை அவர் பெற்றிருக்கிறார். திறமையான நடிகர், ஆற்றல் வாய்ந்த நடிகர்,

இன்றைக்கு தமிழ்நாட்டிலே வளரும் பிள்ளைகள் எல்லாம் ரஜினியை தங்கள் உள்ளத்திலே பதிய வைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்கின்ற அளவிற்கு தமிழ்நாட்டு மக்க ளுடைய உள்ளத்திலே இடம் பெற்று விட்ட நடிகர்" என்று கூறிப் பாராட்டினேன்.

இந்தச் சிறப்பான விழா நடைபெற்றதற்கு மறுநாளே அருமைத் தம்பி கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய "எல்லா நதியிலும் என் ஓடம்" என்ற அரியதொரு மொழி பெயர்ப்புத் தொகுப்பு நூலினை வெளியிடும் விழாவிலே கலந்து கொண் டேன். நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் இல்லா விட்டாலும் அவர் எழுதிய நூலினைத் தொடர்ந்து வெளியிடும் வாய்ப்பு எனக்கு மட்டுமே உரியதாக இருந்து வருகின்றது. அந்த நூலுக்கு அணிந்துரை அளிக்கும் வாய்ப் பினையும் நான் பெற்றிருந்தேன்.

பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சிப் பிடியில் இருந்து கிழக்கு பாகிஸ்தான்- தற்போதைய வங்காள தேசம் விடுவிக்கப்பட விடுதலைப் போர் நடத்தியவர் ஷேக் முஜிபூர் ரகுமான் அவர்கள். வங்காள தேசத்தின் தந்தை என்றுதான் இவரை அழைப்பார்கள். அவருடைய போராட்டத்திற்கு அப்போது இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் ஆதரவு அளித்ததோடு மட்டுமல்லாமல், இந்திய ராணுவத்தையும் அனுப்பி கிழக்கு பாகிஸ்தானை விடுவித்து டிசம்பர் 1971-இல் புதிய வங்கதேசம் உருவாக உதவி செய்தார். முஜிபூர் உண்மையான ஜனநாயகவாதி. மக்கள் இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி தேர்தல் முறையிலே ஒரு நாட்டைத் தோற்றுவித்தவர் இவர். ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த இவரை யாராலும் மக்களிடமிருந்து பிரிக்க முடியவில்லை. வெளிநாடு சென்று படிக்காதவராக இருந்த போதிலும், படித்த மக்களும், படிக்காத மக்களும் இவரை விரும்பினர். மாணவனாக இருந்தபோதே ஒரு சாதாரண தொண்டராகத் தன் அரசியல் வாழ்வைத் தொடங்கியவர்தான் இவர். பல முறை சிறை சென்றவர். 1954-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய முன்னணி அரசிலே அமைச்சராக இருந்த



முதல்வர் கலைஞர் அவர்களுடன் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்.

போதிலும், அந்த அரசு கலைக்கப்பட்ட போது மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டார். 1955-ஆம் ஆண்டு மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று, 56-இல் அவாமி லீக் கட்சி ஆட்சி அமைத்தபோது, அதிலே ஒரு அமைச்சரானார். 1958-இல் அயூப்கான் ராணுவப் புரட்சி நடத்தியபோது முஜிபூர் ரகுமான் மீண்டும் கைது செய்யப்பட்டு பல வழக்குகள் அவர் மீது போடப்பட்டன. 14 மாத சிறை வாசத்திற்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்ட போதிலும், 1962 பிப்ரவரியில் மீண்டும் இவர் கைது செய்யப்பட்டார். தன்னுடைய இளமைக் காலம் முழுவதையும் சிறையிலேதான் கழித்தார். 7-3-1971 அன்று 20 லட்சம் மக்கள் இவரது முன்னால் திரண்டு, சுதந்திரம் வேண்டி தங்கள் தலைவருக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்கள்முன் முஜிபூர் ரகுமான் சுதந்திரமே நமது கோரிக்கை என்று முழங்கினார். 25-3-1971 அன்று பாகிஸ்தான் ராணுவம் ஷேக் முஜிபூர் அவர்களைக் கைது செய்து மேற்கு பாகிஸ்தானுக்குக் கொண்டு போய் தனிமைச் சிறையிலே அடைத்தது. பங்களா தேசத்தில் உள்ள நூற்றுக் கணக்கானவர்களைக் கொலை செய்ததோடு பெண்கள்

கற்பழிக்கப்பட்டார்கள். உலக நாடுகள் கொடுத்த வலியுறுத்தல் காரணமாக பங்களா தேஷ் விடுதலைக்கு பாகிஸ்தான் ஒத்துக்கொண்டது. 10-1-1972 அன்று சிறையிலிருந்து விடுதலையான முஜிபூர் ரகுமான் சுதந்திரம் பெற்ற தனது சொந்த நாட்டிற்குத் திரும்பினார். வங்காள தேசத்தின் அதிபராக முஜிபூர் ரகுமான் சுமார் மூன்றரை ஆண்டுகள் ஆட்சி செய்தார். அதற்குப் பிறகு முஜிபூருக்கு எதிராக ஓய்வு பெற்ற ராணுவத் தளபதிகள் பரூக், ரஷீத், பஜ்லூல் ஹீடா ஆகியோர் சுதந்திராக் கட்சியை உருவாக்கிப் போராடி வந்தனர்.

1975-ஆம் ஆண்டு அந்தக் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகளால் முஜிபூர் ரகுமான் அவர்களும் அவருடைய மனைவி பாத்திமா பேகம் உட்பட அவருடைய குடும்பத்தினர் 23 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்தத் தாக்குதலில் முஜிபூர் ரகுமானின் மகள் ஹசினா பேகம் மேற்கு ஜெர்மனியில் அப்போது இருந்த காரணத்தினால் உயிர் தப்பினார். பெற்றோரை இழந்த பிறகு தந்தை முஜிபூர் ரகுமானின் அவாமி லீக் கட்சியின் தலைவர் பொறுப்பை ஹசினா ஏற்று நடத்தி வருகிறார். 11-8-1989 அன்று இரவு ஹசினா வீட்டில் தங்கியிருந்தபோது நள்ளிரவு 1 மணி அளவில் சில தீவிரவாதிகள் ஆட்டோ ரிக்ஷாவில் ஹசினா வீட்டிற்குச் சென்றனர். வீட்டிற்கு வெளியே இருந்தபடியே வெடிகுண்டுகளை வீசினர். இயந்திரத் துப்பாக்கியால் சுட்டனர். உடனே ஹசினா வீட்டில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டனர். அதற்குள் தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர். இந்தத் தாக்குதலில் இருந்து ஹசினா அதிருஷ்டவசமாக உயிர் தப்பினார். அவரைத் தாக்கிய தீவிரவாதிகள் தப்பியோடும்போது அவர்களின் தலைவர்கள் பரூக், ரஷீத் ஆகியோருக்கு ஆதரவாகக் கோஷம் போட்டுச் சென்றனர். ஹசினாவைச் சுட்டுக் கொல்ல முயற்சி நடந்ததைக் கண்டித்து அவாமி லீக் கட்சியின் மாணவர் பிரிவினர் டாக்காவில் போராட்டம் நடத்தினார்கள். அந்த நாட்டின் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த ஹசினா 1996-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே வெற்றி

பெற்று அந்த நாட்டின் அதிபராக ஐந்தாண்டுகள் பதவி வகித்து 2001-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே தோல்வியைத் தழுவினார்.

"வங்கபந்து ஷேக் முஜிபூர் ரகுமான் அவர்களையும், அவரது மகள் ஹசினாவையும் நினைவு கூர்ந்திடும் நேரத்தில் மாவீரன் பூட்டோ அவர்களைப் பற்றியும் ஒருசில வரிகள் எழுதாமல் விட மனம் வரவில்லை. பூட்டோ 1958-ஆம் ஆண்டு தனது 30-வது வயதில் பாகிஸ்தான் நாட்டின் அமைச்சரவையிலே இடம் பெற்று 1963-இல் அந்நாட்டின் வெளி விவகாரத் துறை அமைச்சரானார். 1967-ஆம் ஆண்டு அரசிலிருந்து விலகி பாகிஸ்தான் மக்கள் கட்சி என்றொரு புதுக் கட்சியைத் தோற்றுவித்தார். 1970-இல் நடைபெற்ற தேர்தலில் மேற்கு பாகிஸ்தானில் பூட்டோவின் கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றபோதிலும், கிழக்கு பாகிஸ்தானில் முஜிபூர் ரகுமான் தலைமையிலே இருந்த அவாமி லீக் கட்சி ஒட்டுமொத்தமாகப் பெரும் பான்மையான இடங்களிலே வெற்றி பெற்றது. கிழக்கு பாகிஸ்தானுக்கு சுயாட்சி வேண்டுமென்று முஜிபூர் ரகுமான் வைத்த கோரிக்கையை பூட்டோ ஏற்க மறுத்ததால் உள்நாட்டுப் போர் அங்கே தொடங்கியது. இந்தியாவின் குறுக்கீடு காரணமாக பாகிஸ்தான் தோல்வி அடைந்து கிழக்கு பாகிஸ்தானை இழந்தபோது, 1971 டிசம்பரில் பூட்டோ பாகிஸ்தான் அதிபரானார். 1974-ஆம் ஆண்டு கிழக்கு பாகிஸ்தான் என்ற பங்களாதேசத்தை பூட்டோ ஏற்றுக்கொண்டார். 1977-இல் பூட்டோ மீண்டும் தேர்ந் தெடுக்கப்பட்ட போதிலும், ஜியா உல் ஹக் செய்த ராணுவப் புரட்சியிலே பூட்டோ பதவியிலிருந்து தூக்கி யெறியப்பட்ட தோடு, சிறைப்படுத்தப்பட்டு, கொலைக் குற்றமும் சாட்டப் பட்டு 1979-ஆம் ஆண்டில் பல வெளிநாடுகளின் எதிர்ப்பிற் கிடையே பூட்டோ கொல்லப்பட்டார்.

அந்த நேரத்தில் "மாவீரன் மடிந்தான்" என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி :-

"நடந்து விடக்கூடாது என்று நாடுகள் பல கோரிக்கை விடுத்துத் தடுக்க நினைத்த அந்தக் காரியம் நடந்தே விட்டது.

பாகிஸ்தான் நிலப்பரப்பைக் கட்டியாண்ட புகழ்மிக்க மனிதன் பூட்டோ தூக்கில் தொங்கவிடப்பட்டு அவன் உடலைப் புதைகுழிக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். சர்வாதிகாரம் பேசியது பின்னணியிலிருந்து! அதற்கேற்ப நீதியின் உதடுகள் அசைந்தன! விளைவு, இஸ்லாமிய சமுதாயத்தின் ஏற்றமிகு விளக்கு ஒன்று அணைக்கப்பட்டு விட்டது. அவன் கடைசி வரையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கருணை மனு போட முடியாது என மறுத்து விட்டான். ஆனால் அவனுக்காகப் போடப்பட்ட கருணை மனுக்கள் அத்தனையும் எதேச்சாதிகாரத்தின் காலடியில் விழுந்து கசங்கிக் கிழிந்து உருத் தெரியாமல் போய்விட்டன.

ஒருவகையில் அந்த மனிதனுக்கு நிம்மதிதான்! "இதோ! அதோ!" என்று நாள்தோறும் அவனைச் சித்ரவதை செய்து கொண்டிருந்தார்கள். இனி அவனுக்கு எந்தப் பிரச்சினை பற்றியும் கவலையில்லை. மிரட்டல்கள் அவன் அடக்கம் செய்யப்படும் இடத்திற்குச் சென்று அவன் உள்ளத்தை உலுக்க முடியாது.



'எல்லா நதியிலும் என் ஓடம்' வெளியீட்டு விழாவின் போது முதல்வர் கலைஞர், கவியரசு வைரமுத்து, ஏ.வி.எம். சரவணன், பாரதிராஜா.

ஆட்சியாளர்கள் அதிகார வர்க்கத்தையும், ரதகஜ துரக பதாதிகளையும் வைத்துக் கொண்டு யாரையும் பழி தீர்த்துக் கொள்ள முடியும் என்பதற்கு பாகிஸ்தானில் பூட்டோவிற்குக் கிடைத்த பரிசே சான்று!

பூட்டோ தலை சிறந்த இராஜ தந்திரி! அற்புதமான நிர்வாகி! அவன் இதயத்தில் ஊறிய இரக்க உணர்வு; முஜிபூர் ரகுமானை மரணப் படுகுழியிலிருந்து காப்பாற்றிப் "பங்களாதேஷின்" அதிபராகவே ஆக்கியது. அந்தக் கருணை மிகுந்த செயலுக்குக் கைமாறாகக் கூட பூட்டோவுக்குக் கருணை காட்டப்படாதது- நெஞ்சு வெடிக்கும் வேதனைச் செய்தியாகும்.



முஜிபூர் ரகுமான் குடும்பத்துடன்

மனிதச் சோலையில் எத்தனையோ பூக்கள் மலர்கின்றன! அவற்றில் பல மணம் வீசாத அழகு மலர்களாகத் திகழ்கின்றன! அத்தர் தரும் ரோஜாவும் அரிய மணம் பரப்பும் மல்லிகை முல்லையும் மயக்கும் மனோரஞ்சிதமும் புவியெனும் பூஞ் சோலையில் குலுங்குகின்றன! அந்த மலர்களில் வாசமிகு மலராக விளங்கிய மனிதர்தான் பூட்டோ! இன்று அந்த மலரைக் கசக்கி எறிந்து விட்டார்கள். அந்த மலர் தானாக வாடி உதிர்ந்திருந்தால் இத்துணை அதிர்ச்சி ஏற்பட்டிருக்காது. படிப்படியாக வளர்ந்து, உயர்ந்து பாகிஸ்தான் மக்களால் மட்டுமின்றி- பல்வேறு நாட்டு மக்களாலும் பாராட்டப் பெற்ற அந்தக் கீர்த்தி மிக்க மனிதன்; கடந்த இரண்டொரு ஆண்டுகளாகப்பட்ட வேதனை கொஞ்ச மல்ல!

அயூப்கானும், யாகியாகானும் இந்தியா- பாகிஸ்தானுக் கிடையே நல்லுறவை வளர்க்க நாட்டம் கொள்ளவில்லை. அந்த நிலையில் மாற்றம் வேண்டுமென பூட்டோ விரும்பிய துண்டு. பூட்டோவுக்குத் தூக்கு மேடையைத் தந்தவர்

களுக்குக் கூட இந்தியா- பாகிஸ்தான் நல்லுறவில் விருப்பம் இருக்கலாம், ஏற்படலாம். கடைசி தடவையாக மனைவி மக்கள் தங்கள் குடும்பத்துத் தலைவனைச் சந்தித்து மூன்று மணி நேரம் உரையாடினார்களாம். சாவூருக்குச் செல்ல விடை தாருங்கள் என்று அவன் கேட்டிருப்பான். விழிகளை நீர்வீழ்ச்சிகளாக்கிக் கொண்டு அவன் வீட்டு விளக்குகள் திரும்பியிருக்கின்றன. அந்தச் சந்திப்பில் எந்தவகையான உணர்ச்சிகள் கொந்தளித்தன என்று யாரால் வர்ணிக்க முடியும்? எத்தனையோ பேர் மரண தண்ட னைக்கு ஆட் படுகிறார்கள். தூக்குக் கயிற்றில் தொங்குகிறார்கள். அந்த உயிர்களில் ஒன்றாகப் பூட்டோவின் உயிரையும் கருதுகிற சமத்துவ முழக்கம் இப்போது எடுபடாது! அண்டத்தில் கோடானு கோடி கோள்கள் இருக்கின்றன. எண்ணி மாளாத அளவுக்கு நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவற்றில் சில கோள்களைத்தானே, சில நட்சத்திரங்களைத்தானே உலகம் அறிந்திருக்கிறது. அப்படி உலகறிந்த ஒரு மனிதனுக்கு இப்படி ஒரு முடிவா? கேள்விக்குறி இதயத்தைப் பிழிந் தெடுக்கிறது. பூட்டோ என்றைக்கும் வாழுகின்ற புகழ்மிக்க மனிதர்களிலே ஒருவராகி விட்டார். தூக்கு மேடை அவர் உறுதியைக் குலைக்கவில்லை! சிறைக் கொடுமைகள் அவர் உடலைத்தான் இளைக்க வைத்ததே தவிர உள்ளத்தைக் களைக்க வைக்கவில்லை! குறை இல்லாத மனிதர் என்று கூற முடியாவிடினும், கம்பீரமாக நின்று கருணை கேட்காமலே மடிந்துவிட்ட அந்த மாவீரனின் செயலைப் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது”

பஞ்சாயத்து ராஜ் சட்டம் பற்றி விவாதிப்பதற்காக பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 5-5-89 அன்று மாநாடு ஒன்றினைக் கூட்டியிருப்பதாகவும் அதிலே கலந்து கொள்ள வேண்டுமென்றும் எனக்கு எழுதியிருந்தார். மே 5-ந் தேதி யன்று சென்னையில் சட்டமன்றப் பொன் விழா சிறப்பாக நடைபெறவிருப்பதாகவும், எனவே பிறிதொரு நாளில் அந்தக் கூட்டத்தினைத் தள்ளி வைத்து நடத்தலாம் என்றும் பிரதமரைக் கேட்டுக் கொண்டு கடிதம் எழுதியிருந்தேன்.



முஜிபூர் ரகுமான் குடும்பத்துடன் உணவருந்துகிறார்.


தேதியைத் தள்ளிவைக்க அவர்களால் இயலாத காரணத்தினால் தமிழக அரசின் சார்பில் அந்த மாநாட்டிலே கலந்து கொள்ள வருவாய்த்துறை அமைச்சராக இருந்த நாஞ்சி லாரை அனுப்பி வைத்தேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு வேண்டிய அனைத்து அதிக அதிகாரங்களையும் வழங்க வேண்டும் என்பதில் மற்ற எந்த அரசுக்கும் நாங்கள் இரண்டாவதாக இருக்கவில்லை. உள்ளாட்சி அமைப்புகளை அதிக அதிகாரங்கள் கொண்ட வைகளாக இருக்கச் செய்ய வேண்டும் என்பதில் அனைத்து மாநில அரசுகளுக்கும் ஒருமித்த உடன்பாடு இருக்கிறது. இதை மேலும் விரிவாக்க வேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம். மாநில அரசுகள் அதை சட்டத்தின் மூலம் செயற்படுத்த வேண்டும் என்பதும் எங்கள் விருப்பம். கிராம நிர்வாக அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட வைகள் மாநில அரசின் வரம்பிற்குள்தான் இருக்க வேண்டும். சட்டரீதியாக மத்திய அரசு இதில் தலையிட முடியாது. மாநில அதிகாரங்களில் மத்திய அரசு இதுபோன்ற விஷயங்களில் நேரடிக் கொள்கை என்று கூறி தலையிடக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், "எங்கள் அரசு பொறுப்புக்கு வந்து மூன்று மாதக் காலத்திற்குள் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், உறுப்பினர்கள் பதவிக் காலம் 3 ஆண்டுதான் என்று குறைக்கப்பட்டிருந்ததை 5 ஆண்டு காலமாக நீடித்துக் கொடுத்திருக்கிறோம். அதேபோல நகர் மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் பதவிக் காலமும் ஐந்தாண்டுகளாக நீடிக்கப்பட்டுள்ளது என்றும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி 15-5-1989 அன்று நாடாளுமன்றத்தில் பஞ்சாயத்து ராஜ் பற்றிய 64-வது சட்டத் திருத்தத்தை முன் மொழிந்தார். மக்கள் அவையிலே அவர்களுக்கிருந்த பெரும்



பூட்டோ

பான்மை காரணமாக ஒரே நாளில் நிறை வேறிவிட்டது. ஆனால் மாநிலங்கள் அவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவர்களுக்குக் கிடை யாது. நாடாளுமன்றத்தில் இந்த மசோதா மீதான விவாதம் வந்தபோது நாடாளு மன்றக் கழகக் குழுத் தலைவர் முரசொலி மாறன் கலந்துகொண்டு, மக்களுக்கே அதிக அதிகாரம் தருவதாகக் கூறிக் கொண்டு மிட்டா மிராசுகளிட மும், சாதித் தலைவர்களிடமும் அதிகாரத்தைத் தருவதா என்றும், பெருந்தலைவர் காமராஜர் உருவாக்கிய பஞ்சாயத்து ராஜ்யத்தில் உள்ள இரண்டு அடுக்கு முறையே நீடிக்கலாம் என்றும், இல்லாவிட்டால் குழப்பங்கள் பல உருவாகும் என்றும் விளக்கினார். இரண்டு அடுக்கு முறையை வைத்துக் கொண்டு அதில் சில சீர்திருத்தங்களைச் செய்தால் போதும் என்பதே கழகத்தின் கருத்து என திட்ட வட்டமாகக் கூறினார். மாநிலங்கள் அவையில் மசோதா நிறைவேறுவதற்குப் போதுமான உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால், விவாதத்திற்குப் பிறகு வாக்கெடுப்பு நடத்தினால் மாநிலங்களவையில் மசோதா தோற்றுவிடும் என்பதால் அன்றையதினம் மசோதாவின் மீது வாக்கெடுப்பு நடத்தி நிறைவேற்ற முன்வரவில்லை. அதைப்பற்றி மத்திய பாராளுமன்ற விவகார ராஜாங்க அமைச்சர் ஜெக்கப் அவர்களிடம் கேட்ட போது, பஞ்சாயத்து ராஜ் சட்டம் அடுத்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்றும், இப்போதுள்ள சூழ்நிலையில் அரசு கொண்டு வரும் தீர்மானம் எதுவும் தோல்வி அடைவதை அவர்கள் விரும்ப வில்லை என்றும் கூறினார்கள். பிறகு அடுத்து அக்டோபரில் நடைபெற்ற மாநிலங்களவைக் கூட்டத்தில் இந்த மசோதா வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு தோல்வியடைந்தது. ராஜீவ் காந்தி காலத்திலே அந்த மசோதா தோல்வியடைந்த போதிலும், பிறகு 1993-ஆம் ஆண்டு நரசிம்ம ராவ் பிரதமராக இருந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டது. இன்றைக்கும் பஞ்சாயத்து ராஜ் பற்றிய தி.மு.கழகத்தின் கருத்து அப்படியே



காமராஜர்

இருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயம் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதைத் தவிர மற்றவைகளில் காமராஜர் காலத்து முறையே இருக்க வேண்டுமென்பதுதான் என்றைக்கும் தி.மு.கழகத்தின் கருத்தாகும். மாவட்டங்களின் அளவில் முன்பு இருந்தது போன்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறும் "மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள்" இருக்கலாம். இந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து காமராஜர் விரும்பிய ஈரடுக்கு முறை பஞ்சாயத்து ராஜ் தேவையான திருத்தங்கள் சிலவற்றுடன் அமைவதுதான் பெருந்தலைவர் காமராஜருக்கு உண்மையான நினைவுச்சின்னமாக இருக்க முடியும்.

12

அரசு அலுவலர் பாடிய ஆனந்தப் பள்ளு!

அரசு நிலத்தையே அமைச்சர்கள் அபகரிக்கலாம் என்ற அநீதி; நீதியாகி விடுகிற நிலைமைகளையெல்லாம் இந்த நாடு காணுகிற துர்ப்பாக்கியமான சூழ்நிலையில் பதவிப் பொறுப்புக்கு வருவது; மக்களுக்குப் பணியாற்றிடக் கிடைத்த ஒரு வாய்ப்பு என்று கருதிக்கொண்டு, தூய்மையுடன் தொண்டாற்ற வேண்டுமேயல்லாது, அதைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை வளப்படுத்திக் கொள்ளும் செயலில் யார் ஈடுபட்டாலும் அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த முற்படுவேனே தவிர, ஒரு துளியும் ஊக்கப்படுத்திட மாட்டேன் என்று கழகப் பொதுக் குழுக் கூட்டங்களிலும், சட்டமன்றக் கழக உறுப்பினர்களின் கூட்டங்களிலும் நான் அடிக்கடி கூறி வந்தபோதுதான், தென்ஆற்காடு மாவட்டம் வானூர் தொகுதியின் கழகச் சட்டமன்ற உறுப்பினராக 1989-ல் இருந்த மாரிமுத்து அவர்கள், அரசு புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியிருப்பதாக ஒரு குற்றச்சாட்டு ஜூனியர் விகடன் வார இதழிலே வெளிவந்திருந்தது. அதை நான் படித்ததும் உடனடியாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தொடர்பு கொண்டு அந்தச் செய்தி உண்மைதானா என்று விசாரிக்கச் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தச் செய்தி உண்மைதான் என்று கூறியதும், கழக ஆட்சியில் ஒரு சிறு தவறும் நடைபெறக் கூடாது என்பதில் கண்டிப்புடன் இருந்த நான், உடனடியாக அந்தச் சட்டப்பேரவை உறுப்பினருக்கு, அரசுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட வீட்டினை ஏன் இடிக்கக்கூடாது என்று காரணம் கோரும்

அறிக்கையை அனுப்பச் சொன்னேன். அந்த நோட்டீசுக்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர் எனக்கெழுதிய பதிலில், "நெடுஞ்சாலையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் சேரியின் மையத்தில் குடியிருக்கும் என்னை கழகத்தவர் களும், பல சமூகப் பெரியவர்களும், அரசு அதிகாரிகளும், பொதுமக்களும் சிரமமும், கூச்சமும் இன்றி சந்திக்கவும், சுலபமாகத் தொடர்பு கொள்ளவும் நான் பல ஆண்டுகளுக்கு முன்பே சாலையோரத்தில் உள்ள குளம் புறம்போக்கில் கையகப்படுத்தி வைத்திருந்த இடத்தில் பல சிரமங்களுக்கு இடையில் சிறிய குடியிருப்பை அரைகுறையாகக் கட்ட முடியாத நிலையில் வைத்துள்ளேன். மிகச் சாதாரணமான என்னை சட்டமன்ற உறுப்பினராக நாட்டுக்கு அறிமுகம் செய்து, இந்த நிலைக்கு ஆளாக்கிய தங்களின் பெயருக்கும், புகழுக்கும், அரசுக்கும், இயக்கத்துக்கும் இந்த வீடு களங்கம் ஏற்படுத்தும் என தாங்கள் கருதினால் அவ்வீட்டை அரசுக்கோ அல்லது ஊராட்சி மன்றத்துக்கோ தானமாக ஒப்படைத்து விடுகிறேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று எழுதியிருந்தார்.

தவறை உணர்ந்து புறம்போக்கு நிலத்தையும் அதில் அவர் கட்டியுள்ள வீட்டையும் அரசு உபயோகத்திற்கு எவ்வித நஷ்டமும் ஈடும் இன்றி தந்துவிட முன்வந்ததையேற்று, அந்த வீட் டினை அரசு எடுத்துக் கொள்ள ஆணை பிறப்பித்ததோடு, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் அரசு இடத்தைத் திருப்பிக் கொடுக்க வந்ததற்காக அவரையும் பாராட்டியதோடு, கழகத்தினர் யாரும் அத்தகைய செயலிலே ஈடுபடக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்தேன்.


இந்த நடவடிக்கை குறித்து 17-9-1989 தேதியிட்ட ஆனந்த விகடன் இதழ் "தனது கட்சிக்காரராயிற்றே என்று முதல்வர் இந்தச் செய்தியைப் பற்றி அலட்சியமாக இருந்துவிட வில்லை. செய்தி உண்மை என்று அறிந்ததும் தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தார். வேறு வழியின்றி எம்.எல்.ஏ., அந்த வீட்டை அரசிடமே ஒப்படைத்துவிட்டார். இந்த விஷயத்தைச் சுட்டிக் காட்டி ஆட்சிக்கு நற்பெயர்

தேடித் தருவதில் அக்கறையுடன் இருக்க வேண்டும் என்று தன் கழகத்தினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் முதல்வர்.

உள்நோக்கம் ஏதுமின்றி, ஒரு பொறுப்போடு உண்மைச் சம்பவங்களைச் செய்தியாக பத்திரிகைகள் வெளியிடும் போது அரசு தீர விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுப்பது என்பது மிகவும் பாராட்டத்தக்க உயர்வான செயலாகும். ஊழல் புகார்களைப் பத்திரிகைகள் சொன்னால், பதிலுக்கு அந்தப் பத்திரிகைகளை மிரட்டுவதும் அவற்றின் மீது கட்சி சாயம் பூசுவதும்தான் இன்று அரசியலில் நடந்து வருகிறது. இப்படிப்பட்ட அரசியல்வாதிகளிடையே தமிழக முதல்வர் கடமையை உணர்ந்து செயல்பட்டிருப்பதை ஓர் ஆரோக்கிய மான திருப்புமுனை என்றே சொல்ல வேண்டும்" என்று பாராட்டி எழுதியிருந்தது.

அதே ஆண்டில்தான் ஸ்வீடன் நாட்டில் இருந்து போபர்ஸ் பீரங்கி வாங்கியதில் ஊழல் நடந்துள்ளதாக மத்திய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையில் கூறப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பிரதமர் ராஜீவ்காந்தி பதவி விலக வேண்டுமென்று தேசிய முன்னணி வலியுறுத்தியது. அதையொட்டி 30-8-89 அன்று இந்தியா முழுவதும் முழு அடைப்பு (பாரத் பந்த்) நடத்திட முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டிலும் முழு அடைப்பு நடத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் 16-8-1989 அன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் தலைவர்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிலும் பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதென்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முழு அடைப்பு போராட்டத்தை எப்படியாவது முறியடிப்பது என்று அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் கூட்டணி மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் ஆலோ சனைக் கூட்டம் அ.தி.மு.க. தலைமை நிலையத்தில்



பனகல் பூங்கா கூட்டத்தில் உரையாற்ற வந்த தலைவர்கள், தங்களுக்கெதிரே முப்புறமும் நிறைந்து நீண்டு அமர்ந்திருந்த லட்சோப லட்சம் மக்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கையசைத்த காட்சி.

நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், வேலை நிறுத்தத்திற்குக் கண்டனம் தெரிவித்ததோடு, பொதுமக்கள் வேலை நிறுத்தத் திற்கு யாரும் ஆதரவு தரக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

முதலமைச்சர் என்ற முறையில் செய்தியாளர்கள் முழு வேலை நிறுத்தம் பற்றி என்னிடம் கேட்ட போது, திராவிட முன்னேற்றக் கழகம் முழு அடைப்பில் மற்ற தோழமைக் கட்சிகளோடு கலந்து கொள்ளும். சட்டம், ஒழுங்கு, அமைதிக்குக் குந்தகம் ஏற்படாமல் தி.மு.க. அரசாங்கம் கவனித்துக் கொள்ளும் என்று கூறினேன். 26-8-1989 அன்று சென்னை பனகல் பூங்காவில் தேசிய முன்னணி சார்பில் முழு வேலை நிறுத்தம் பற்றி விளக்கிட மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், என்.டி. ராமராவ், வி.பி. சிங், ஜோதிபாசு, தேவிலால், ராமகிருஷ்ண ஹெக்டே, ராஜேஸ்வர ராவ், உபேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினோம்.

அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் மற்றும் அவர்களுடைய தோழமைக் கட்சிகள் எல்லாம் இணைந்து அந்த முழு வேலை நிறுத்தத்தைத் தடுக்க படாத பாடுபட்ட போதிலும்

"பாரத் பந்த்" மிகச் சிறப்பான முறையில் எந்தவிதமான சட்டம் ஒழுங்கிற்கும் பாதகம் வராமல் நடைபெற்றது. அனைத்துத் தரப்பு மக்களும் அந்த முழு வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக ஆக்கித் தந்தார்கள் என்பதுதான் உண்மை.

வேலை நிறுத்தம் குறித்து 1-9-89 தேதிய இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் செய்தியாளர் என். கணபதி எழுதிய கட்டுரையில், "எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்த ஆகஸ்ட் 30-ஆம் தேதி முழு அடைப்பு காங்கிரசல்லாத கட்சிகள் ஆளும் பிற மாநிலங்கள் போலன்றி தமிழ்நாட்டில் மிக அமைதியாக நடந்து முடிந்தது. அது முதலமைச்சர் கருணாநிதியின் நிர்வாகத் திறமையை மீண்டும் உறுதி செய்வதாக இருந்தது. தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு. கழகத்தின் தலைவர் என்ற வகையில் முழு அடைப்பை வெற்றிகரமாக நடத்துவது மட்டுமல்ல, அதே நேரத்தில் அந்த முழு அடைப்பை அமைதியான வகையில் நடத்துவது மாகிய பொறுப்புமிக்க பணி கருணாநிதிக்கு இருந்தது. ஏதாவது பெருமளவில் வன்முறைகள் நடந்திருந்தால் அது அவர் தொடர்ந்து பதவியில் நீடிக்கலாமா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் விதியாகவே மாறியிருக்கும். மிகுந்த கவனத்துடனும் மிக்க நிதானத்துடனும் செயல்பட்டு, கட்சித் தலைமை, ஆட்சித் தலைமை ஆகிய இரு பொறுப்புகளி லுமே கருணாநிதி பெரும் சாதனை படைத்துவிட்டார்" என்று குறிப்பிட்டிருந்தார்.

தி.மு.கழகத்தின் ஆதரவோடு வெற்றிகரமாக நடைபெற்ற அந்த முழு வேலை நிறுத்தம் பற்றி 31-8-89 அன்று செய்தியாளர்களைச் சந்தித்த ஜெயலலிதா; தமிழக மக்கள், தி.மு.க. ஆட்சி மீது நம்பிக்கை இழந்து விட்டதால், தமிழகச் சட்டப் பேரவையைக் கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியைத் தமிழகத்தில் அமல்படுத்தவேண்டுமென்று பிரதமருக்கு தான் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார். அரசியல் சட்டத்தின் 355-வது பிரிவின் கீழ் மாநிலங்களை உள்நாட்டுக் கலவரங்களிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு

மத்திய அரசுக்கு உள்ளது என்றும், அரசியல் சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் மாநில அரசுகளைச் செயல்படச் செய்யும் பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது என்றும் செய்தியாளர்களிடம் அவர் கூறியது என்றென்றும் நினைவில் நிற்கக் கூடியதாகும்.

அத்துடன் அப்போது சென்னைக்கு வந்திருந்த குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமனை ஜெயலலிதா சந்திக்கவிருப்பதாகத் தெரிவித்து, அதற்கு ஓர் காரணமும் கூறினார். அதாவது 1987-ஆம் ஆண்டு "எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக"த் தொடக்க விழாவிற்கு குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் வரவிருந்ததாகவும், அப்போது அ.தி.மு.க. சார்பில் ஒரு நினைவுப் பரிசு வழங்கத் தயார் செய்து வைத்திருந்ததாகவும், அந்த நேரம் எம்.ஜி.ஆர். இறந்துவிட்டதால் அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை என்றும், இருந்தாலும் தற்போது அந்த நினைவுப் பரிசினை குடியரசுத்தலைவரிடம் வழங்குவதற்காகச் சந்திக்கப் போவதாகவும் தெரிவித்தார். அவ்வாறே செப்டம்பர் 1-ந்தேதி காலையில் ஆர்.வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்து அந்த நினைவுப் பரிசினை அளித்தார். அந்தப் பரிசளிப்பு சந்திப்பே;



ஜனநாயகப் பாதுகாப்புப் பேரணி முடிவில் நடைபெற்ற மாபெரும் கண்டனக் கூட்டத்தின் ஒரு பகுதி.

கழக ஆட்சியைக் கலைக்கவேண்டுமென்ற பரிந்துரையை வற்புறுத்துவதற்காகத்தான்!

ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்ற சிபாரிசுகள், மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சாமல் தி.மு.க. தனது போர்க் குணத்தை விட்டுவிடாமல்தான் ஆட்சியை நடத்தி வந்தது. மாநில ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோமே என்பதற்காக மத்திய அரசின் ஜனநாயக விரோதப் பிரகடனங்களையோ, நடவடிக்கைகளையோ தி.மு.க. ஏற்றுக் கொண்டதில்லை என்பதற்கு உதாரணமாகத்தான் 1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை (எமர்ஜன்சி)யை எதிர்த்து ஆட்சியை இழந்த நிகழ்ச்சியும் 500-க்கு மேற்பட்ட கழகத்தினர் அடக்குமுறைக்கு ஆளான நிகழ்ச்சியுமாகும்.

அதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சி மூன்றாவது முறையாக அமைந்த பிறகு மத்திய அரசின் நிர்வாகப் பொறுப்பிலே உள்ள தொலைக்காட்சி, வானொலி போன்றவை தமிழக அரசின் நிகழ்ச்சிகளை ஒலி, ஒளி பரப்பாமல் இருட்டடிப்பு செய்வதில் முனைந்து செயல்பட்டன. தமிழகத்திலே மாத்திரமல்லாமல் அகில இந்திய அளவில் எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சிகள் ஒலி, ஒளி பரப்பப்படுவதில்லை என்று பரவலாகப் புகார் எழுந்தது.

17-6-1989 அன்று கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று என்னுடைய தலைமையிலே நடைபெற்று, அதிலே தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் போக்குக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கழகம் அறிவித்த இந்தப் போராட்டத்திற்கு தமிழகத்திலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம், முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவு தெரிவித்தன. 26-6-1989 அன்று சென்னை மாநகரிலே மிகப் பிரம்மாண்டமான அளவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்று கண்டனப்

பொதுக் கூட்டமும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், கழகத்தின் முன்னணித் தலைவர்களும், எதிர்க்கட்சியினரும் உரையாற்றியதோடு, மத்திய அரசுக்குக் கண்டனத்தைத் தெரிவிப்பதற்கு அடையாளமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் அந்த மேடையிலேயே உடைத்து நொறுக்கப்பட்டன.

1989-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கான கழகத் தேர்தல் அறிக்கையில் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையாக மாநில அரசு அலுவலர்களின் ஊதியத்தைச் சமப்படுத்த வேண்டும் என்பது எங்கள் கொள்கை என்றும், ஊதியக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து இந்தக் கொள்கையை நிறைவேற்ற வழி வகை செய்வோம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1988-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையை உடனடியாகப் பெற்று அதன் பரிந்துரைகளை முன் தேதியிட்டு 1-6-1988 முதலே ஊதிய உயர்வு வழங்கப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன். அதன்படி 16-5-1989 அன்று ஐந்தாவது ஊதியக் குழுவின் அறிக்கையினைப் பெற்று, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் 11.3 இலட்சம் அரசு அலுவலர்களுக்குப் பயனளிக்கக் கூடிய அறிவிப்பினை 8-6-1989 அன்று அறிவித்தேன்.

32 பிரிவு அலுவலர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியமும், 8 பிரிவு அலுவலர்களுக்கு மத்திய அரசு ஊதியத்தைவிட அதிகமாகவும் அளிக்க ஒப்புக்கொண்டதோடு, அலுவலர்களுக்குத் திருமண முன்பணம் உயர்வு, ஊனமுற்றோருக்கு ஊர்திப்படி, 2 லட்சம் ஓய்வூதியதாருக்கு ஓய்வூதியம் உயர்வு, குடும்ப ஓய்வூதியம் உயர்வு போன்ற சலுகைகளும் வழங்கப்பட்டன.

அந்த ஆண்டில் பயங்கரமான நிதி நெருக்கடி இருந்த போதிலும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 400 கோடி செலவினை அரசு ஏற்றுக் கொண்டது. அரசின் இந்த

மகத்தான அறிவிப்பினை தலைமைச் செயலக ஊழியர் சங்கம், தலைமைச் செயலக அரசு அலுவலர் கூட்டமைப்பு, குடிநீர் வாரிய தலைமைச் செயலக அலுவலர் சங்கம், தகவல் சுற்றுலாத் துறை அதிகாரிகள் சங்கம், அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலர்கள் நலச்சங்கம், மாநகராட்சிப் பணியாளர் சங்கக் கூட்டமைப்பு, தமிழ்நாடு தமிழ் ஆசிரியர் பேரவை, அரசு அலுவலர் முன்னேற்றக் கழகம், தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர் முன்னேற்றச் சங்கம், குடிநீர் வடிகால் வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம், பட்டதாரி ஆசிரியர் கழகம், பெரியார் மாவட்ட அரசு அலுவலர் ஒன்றியம், மாநில ஓய்வூதியர் சங்கம், அனைத்து மாநில ஓய்வூதிய சங்க ஒன்றியம், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை ஆய்வாளர்கள் மன்றம், துப்புரவுப் பணி மேற்பார்வை யாளர் சங்கம், தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம், அச்சுத் துறை அமைச்சுப் பணியாளர் சங்கம், வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை அலுவலர் மன்றம், ஆசிரியர் மன்றம், தமிழ்நாடு அரசு உதவி மருத்துவர் சங்கம், தமிழ்நாடு திட்டக்குழு அலுவலர் நலச் சங்கம், தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுத்



அரசு அலுவலர் ஒன்றிய பாராட்டு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அலுவலர்கள் மாலை அணிவித்தபோது எடுத்த படம்.

துறை நடுநிலை அலுவலர் சங்கம், உடற்கல்வி இயக்குநர் கழகம் ஆகியவை நன்றி தெரிவித்து பாராட்டுக்களைக் குவித்தன.

இதனை அறிவித்த மறுநாள் சேலம் மாவட்டத்தில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த என்னிடம் செய்தியாளர் ஒருவர் அரசு அலுவலர்களுக்கு அதிக ஊதிய உயர்வு கொடுத்ததால் 400 கோடி ரூபாய் செலவாகுமே, என்ன செய்யப் போகிறீர்கள், கஜானா காலி என்று வேறு சொல்லியிருந்தீர்களே? என்று கேள்வி கேட்டார். அதற்கு நான் பதில் கூறும் போது, "கஜானா காலி என்று சொல்லிவிட்டு ஓடிவிடவில்லை. சமாளிப்போம் என்று தன்னம்பிக்கையோடுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். 200 கோடி ரூபாய்க்கு மேல் கூடுதல் வருமானம் ஐ.எம்.எப்.எஸ். மூலம் கிடைக்கும். ஏற்கனவே இருந்த ஆட்சியில் ஐ.எம்.எப்.எஸ். சில்லறைக் கடைகளைக் கொடுத்த வகையில் 4 கோடி ரூபாய்தான் அரசுக்கு ஆண்டு வருமானம் கிடைத்தது. நாங்கள் அதனை மாற்றி ஏல முறையைக் கடைப்பிடித்ததால் சுமார் 40 கோடி ரூபாய் அளவுக்கு அந்தச் சில்லறைக் கடைகள் மூலமே வருமானம் கிடைத்திருக்கிறது. டாமின் என்ற கனிமக் கல் நிறுவனம் ஊழல்களின் காரணமாக பல கோடி ரூபாய் இழப்புக்கு ஆளாகி இருந்தது. அதுகுறித்து ஆளுநர் ஆட்சியிலே நடவடிக்கை மேற் கொண்ட போதிலும், இப்பொழுது அதன் தொடர் நடவடிக்கையாக அந்தத் தவறுகளுக்குக் காரணமாக இருந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுத்ததோடு டாமின் நிறுவனத்தின் நிர்வாகத்தையும் செம்மைப் படுத்தியிருக் கிறோம். டாமினில் மீதியுள்ள கல்லை தனியார்களுக்கு டெண்டர் விடுவதின் மூலம் அரசுக்குக் கணிசமான வருமானம் வரும் என்றும் எதிர்பார்க்கிறோம். அதே போல மற்றும் பல்வேறு துறைகளில் நிர்வாக மேம்பாடு செய்வதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்குத் திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன" என்று குறிப்பிட்டேன்.

பொதுவாக அரசு அலுவலர்க்கு ஊதிய உயர்வு, பல்வேறு சலுகைகள், ஊக்கத்தொகை போன்றவை வழங்கப்படுவது; வளர்ச்சித் திட்டங்களுக்கு மேலாகச் செலவாகி விடுகிறது என்ற ஒரு கருத்து சில பத்திரிகையாளர்களாலும், அரசியல் வாதிகளாலும் பரப்பப்பட்டு மக்கள் குழப்பத்திற்கு ஆளாவதைத் தடுக்கும் வகையில், சட்டமன்றத்திலும் அரசு நிகழ்ச்சிகளிலும் நான் உரையாற்றும்போது,

"அரசு அலுவலர்க்கு ஆசிரியர் உட்பட அனைவர்க்கும் தருகிற ஊதியம் என்பதும், திட்டச் செலவுக்குள்தான் அடங்குகிறது. அவர்கள் வேலை பார்க்காமல் திட்டங்கள் நிறைவேறாது என்பதால்; திட்டச் செலவையும் அலுவலர்க் கான ஊதியச் செலவையும் பிரித்துப் பார்த்துப் பேசுவது சரியல்ல"

என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

"சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இந்தப் பாரினிலே,
எத்தனை தோழர்கள் ரத்தம்
சொரிந்தனரோ உங்கள் வேரினிலே!"

எனும் புரட்சிக் கவிஞரின் கவிதையை நெஞ்சில் பதித்திருக்கும் எனக்கு பாடுபடும் மக்களின் மீதுள்ள பரிவும்- அவர்களால் சமுதாயத்துக்குக் கிடைக்கும் பயனும் மறக்கக் கூடியவை களா?

1989-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மாநிலங்கள் அவைக்கான தேர்தல் ஆறு உறுப்பினர்களைத் தேர்ந் தெடுப்பதற்காக நடைபெற்றபோது தி.மு. கழகத்தின் சார்பில் முரசொலி மாறன், விடுதலை விரும்பி, ஜெ.எஸ். ராஜூ, ஜி. வெங்கட்ராமன் ஆகியோர் நிறுத்தப்பட்டனர். திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளின் ஆதர வினைப் பெற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும், தமிழ் மாநிலச் செயலாளருமான திரு. ஏ. நல்லசிவன் அவர்களும் நிறுத்தப் பட்டார். இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பில் எஸ்.கே.டி.



சென்னை அனல்மின் நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் (இடமிருந்து வலம்) ஆளுநர் அலெக்சாண்டர், குடியரசுத் தலைவர் ஆர்.வி., முதல்வர் கலைஞர், அமைச்சர் நேரு.

ராமச்சந்திரன் அவர்களும் வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தார். அந்தத் தேர்தலில் தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையும், வேட்பு மனு தாக்கல் செய்தவர்களின் எண்ணிக்கையும் சமமாக இருந்ததால் வேட்பு மனு தாக்கல் செய்த ஆறு பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக அறிவிக்கப்பட்டார்கள். இந்தத் தேர்தலுக்குப் பிறகு மாநிலங்களவையில் தி.மு.கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழாகவும், அ.தி.மு.க.வின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 லிருந்து குறைந்து ஆறாகவும் ஆகியது.

1989-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் தேதி இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் என்னுடைய தலைமையில் வடசென்னை பகுதியில் எண்ணூர் தீவில் சென்னை அனல் மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆளுநர் அலெக்சாண்டர் அந்தப் பகுதியிலே அமைந்த குடியிருப்புப் பகுதிக்கு அடிக்கல் நாட்டினார். மாநிலத் தொகுப்பின் மின் உற்பத்தித் திறனை விரைந்து அதிகரிக்க வேண்டிய இன்றியமையாமையைக் கருத்திற் கொண்டு சென்னை அனல் மின் திட்டம் தீட்டப்பட்டது. ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட ஐந்து

பிரிவுகளை நிறுவுவதற்கான திட்ட அறிக்கை மத்திய மின் ஆணைக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டு, மூன்று பிரிவுகளுக்குத் தேவையான நிலக்கரி மட்டுமே வழங்குவதற்கு ஒப்புதல் பெறப்பட்டிருந்ததால் இத்திட்டத்தினை இரண்டு கட்டங் களாக- அதாவது முதற் கட்டத்தில் மூன்று பிரிவுகளும் பின்னர் எதிர்காலத்தில் இரண்டாவது கட்டமாக இரண்டு பிரிவுகளும் நிறுவலாம் என்று மத்திய மின் ஆணைக் குழுமம் ஆலோசனை வழங்கியது. அதற்கேற்ப முதற்கட்டத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளை அமைக்கும் வகையில் திட்ட அறிக்கை மாற்றப் பட்டு மத்திய மின் குழுமத்தின் பரிந்துரை பெறப்பட்டு 721 கோடி ரூபாய் செலவில் அதனை அமைக்க திட்டக் குழுவின் அனுமதியையும் பெற்று அதற்கான அடிக்கல் நாட்டு விழா கழக ஆட்சியில் நடைபெற்றது.

இதற்காக ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டபோது தனிப்பட்ட சில நிலவுடைமையாளர்கள் நீதிமன்றத்தின் துணையோடு அந்த அனல் மின் நிலையம் அமைவதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் நிலத்தைத் தர மறுத்தார்கள். அதிகாரிகள் எல்லாம் என்ன செய்வதென்று தெரியாமல் திட்டத்திற்கான பணியிலே தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அந்த நிலச் சொந்தக்காரர்களை நேரில் வரச் சொல்லி, அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே பெற்றிருந்த இடைக்காலத் தடையைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். உடனே அந்த நில உடைமையாளர்களான வி.ஜி.பன்னீர் தாஸ் அவர்களின் சகோதரர்கள் வி.ஜி.சந்தோஷம் அவர் களும் செல்வராஜ் அவர்களும் அந்தப் பகுதியிலே ஒரு அதிசய உலகத்தை உருவாக்க வேண்டும் என்பது அவர் களுடைய அண்ணன் கண்ட கனவு என்று அவர்களுடைய அண்ணன், மறைந்த பன்னீர் தாஸைப் பற்றிக் குறிப்பிட்டார் கள். நான் அப்போது அவர்களிடம் "உங்கள் அண்ணன் கண்ட கனவு வொண்டர்லான்ட் (அதிசய உலகம்); ஆனால் எங்கள் அண்ணன் கண்ட கனவு இந்தத் தமிழகத்தை வளமாக வாழ வைக்க வேண்டும் என்பதாகும்; அதற்காக

உங்கள் அண்ணன் கண்ட கனவை விட்டுக் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். பிறகு அவர்களும் தாமாகவே முன் வந்து அந்த இடத்தை விட்டுக் கொடுக்க முன் வந்தார்கள். நான் அதற்காக அந்த அடிக்கல் நாட்டு விழாவின் போது நன்றி தெரிவித்துக் கொண்டேன். இவ்வாறு தொடங்கப்பட்ட வட சென்னை அனல் மின் நிலையம் இன்றைய தினம் கழக அரசின் சாதனைப் பட்டியலில் ஒரு மைல் கல்லாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

13 சாதி மத பேதமற்ற சமுதாய அமைப்பு

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

-என்பது திருக்குறள்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றால்; எல்லா உயிர்களும் ஒன்றுதான், அதில் உயர்வு, தாழ்வே கிடையாது என்கிறார் வள்ளுவர். பிறப்பால் எல்லோரும் ஒன்றுதான். ஆனால் அவர்கள் எப்போது வேறுபடுகிறார்கள் என்றால் அவர்கள் செய்கின்ற தொழிலைப் பொறுத்து அவரவர்களுடைய சிறப்புகள் வேறுபடுகின்றன. இன்றைக்குக்கூட குறளுக்குப் பொருள் கூறுகிற சிலர் செய்தொழில் என்பது அவரவர் ஈடுபட்டிருக்கிற தொழில்கள்; ஒருவர் கொல்லராக, ஒருவர் தச்சராக, ஒருவர் ஆசிரியராக, ஒருவர் மருத்துவராக, ஒருவர் சங்கீத வித்வானாக - அப்படிப்பட்ட தொழில்களைச் செய்கிறவர்கள் என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பார்; எனவே அந்தத் தொழிலைப் பொறுத்துத்தான் வேற்றுமை என்று எண்ணிக்கொண்டு பொருள் உரைப்பார்கள்.

ஒரு தொழிலுக்கும் இன்னொரு தொழிலுக்கும் உள்ள வேறுபாட்டை அல்ல; குறிப்பிட்ட ஒரு தொழிலிலேயே யார் தனித்தன்மை பெற்றிருக்கிறார்களோ- தனிச் சிறப்பு பெற்றிருக்கிறார்களோ அதை வைத்துத்தான் செய்தொழிலில் சிறப்பு ஒவ்வாமல் போகக் கூடும் என்பதை வள்ளுவர் குறிப்பிட்டு, அந்த வேற்றுமையைப் பற்றி மட்டுமே விளக்குகிறார். உதாரணமாக சங்கீதம் பாடுவதும் ஒரு தொழில்தான்.

சில சங்கீத வித்வான்களின் பாட்டை காதுகொடுத்துக் கேட்கவே முடிவதில்லை. அதேசமயம், இன்னொரு வித்வான் பெரிய அவையிலே அமர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ரசிக்கக்கூடிய அளவுக்கு இசையைப் பொழிவார். இருவரும் சங்கீத வித்வான்கள்தான். ஆனால் அந்தத் தொழிலுக்குள்ளே இருக்கிற சிறப்பு வேறுபட்டு அவர்கள் இருவரையும் பிரித்துக் காட்டுகிறது. அந்தப் பிரிவைத் தவிர அவர்களுக்கிடையே வேறு எந்தப் பிரிவும் இல்லை என்பதுதான் வள்ளுவரின் கருத்து. இதனைப் புரிய வைத்த இயக்கம்தான் சாதி மதப் பித்து கூடாது என்று சாடிய சுயமரியாதை இயக்கமாகும். அந்த இயக்கத்தில் என்னை ஒப்படைத்துக் கொண்டவன் என்ற முறையில் சாதி மதப் பித்து சமுதாயத்தை நோயுறச் செய்யும் ஒருவகையான கிருமி என்பதை அறிந்து அந்தக் கிருமியைப் பரவ விடாமல் தடுக்க வேண்டுமென்பதில் இளமைக்கால முதலே ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளேன்.

பெரியோர் முதல் பேரப்பிள்ளைகள் பேத்திகள் வரையில் காதல் திருமணம் அதுவும் பெரும்பாலும் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள்தான் என்ற பெருமை, என் குடும்பத்திற்கு உண்டு.

1944-ஆம் ஆண்டுக்கு முன்பே நான் எழுதிய "தூக்கு மேடை" நாடகத்தில் சாதி மத வேறுபாட்டை ஒழிக்கும் இளைஞனாக நடித்து, "சாதி சாதி என்று பேசுகிறீர்களே; பாதிக்குதே பசி என்றுரைத்து வீதியிலே புரளும் வடக்கு மலைப் பரதேசிக்கு உங்கள் சாதி சாதித்த நீதி என்ன? வேதியர்க்கு வெண்பட்டும் வெண் பொங்கலும் அளித்த சாதி அவர்கள் வைத்திடும் மீதியையாவது நாதியற்றவர்க்கு அளிக்க நினைத்ததா? பேதியும் பீதியும் சேரிக்கென்றே விடுத்தது உமது சாதியல்லவா? போதிமரத்துப் புத்தன் புலம்பியதும், ஆதிமகனாம் வள்ளுவன் அலறியதும் சாதி ஒழிய வேண்டுமென்றுதானே!"

என்ற வசனம் பேசிய காலத்தையும்- இந்த அத்தியாயத்தை எழுதும் 2001-வது ஆண்டையும் எண்ணிப் பார்க்கும்போது;

இப்போது கழக அரசு பெரியார் நினைவு சமத்துவபுரங்களை தமிழ்நாட்டில் 130-க்கு மேற்பட்ட இடங்களில் அமைத்து ஒவ்வொன்றிலும் சகல சமூகத்தினரையும் குடியமர்த்தியுள்ள இந்தக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ முடிகிறது என்றாலும் அந்த மகிழ்ச்சி இன்னமும் முழுமை அடைய வில்லை.


ஆம், ஏறத்தாழ அறுபதாண்டு இடைவெளியிருந்தும்கூட, சாதி மதம் போன்றவற்றால் உருவான ஏற்றத் தாழ்வு முற்றாக முடிவுறவில்லையே என்ற கவலையினால்தான்;

"விவேகமெனும் வெள்ளி முளைத்து, சாதி மதப் பித்து எனும் சனி தொலைந்தால்தான்; சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்" என்று நான் எழுதிய கருத்து- சமத்துவபுர முகப்புகளில் கழக அரசின் சார்பில் எழுதப்பட்டது.

இந்த 2001-ஆம் ஆண்டு நவம்பர் மாதவாக்கில் பிரசித்தி பெற்ற ஆங்கில ஏடுகளில் ஒன்றான 'இந்துஸ்தான் டைம்ஸ்'க்காக என்னிடம் சுமார் ஒரு மணி நேரம் சிறப்புப் பேட்டி எடுத்தார்கள். அதில் கடைசியாகக் கேட்கப்பட்ட கேள்வி; "உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய இலட்சிய வெற்றி எதுவாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?" என்பதாகும்.

அதற்கு நான் அளித்த பதிலில்; "ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சு கேட்க வந்து குழுமியிருப்போர் அனைவரும் தமிழர் களாக இருக்கிறார்கள். ஆனால் கூட்டம் முடிந்து கலைந்து செல்லும்போது தனித்தனி சாதிகளாகக் கலைந்து செல் கிறார்கள். அந்த நிலை மாறி, தமிழர்களாகவே கூட்டத்தில் அமர்ந்து, எழுந்து செல்லும்போதும் தமிழர்களாகவே கலைந்து செல்லும் காலம் வந்தால் அதுதான் நான் எதிர் பார்க்கும் இலட்சிய வெற்றி என்பதாகும்" எனக் குறிப் பிட்டேன்.

1944-ஆம் ஆண்டு என் திருமணத்திற்குப் பிறகு சிதம்பரத் தில் மாமனார் வீட்டுக்கு முதல் இரவுக்காகச் சென்ற போது



போடியில் கலவரப் பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர்– பெருந்திரளாகக் கூடிய மக்களிடையே ஆறுதல் கூறியும், பாதுகாப்புக்கு உறுதியளித்தும் உரையாற்றுகிறார் முதல்வர் கலைஞர்.

ஊருக்குள் நான் நுழையக் கூடாது என்று 144 தடை விதிக்கப்பட்டது.

காரணம்; அப்போது சிதம்பரத்தில் நடைபெற இருந்த "வர்ணாஸ்ரம" மாநாட்டைக் கண்டித்து நான் வெளியிட்ட "முரசொலி" துண்டு அறிக்கையில் எழுதியிருந்ததுதான். அப்போது எனக்கு வயது 20தான்!

"ஒரே இரத்தம்" என்று நான் தீட்டிய புத்தகம், திரைப்பட மாகக் கூட வெளி வந்தது.

"அந்தக் காலத்தில் மன்னர் ஆட்சிகளில் புலியும் மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்ததாக வர்ணிப்பார்கள். ஆனால் இந்தக் காலத்தில் புலியும் மானும் கூட வேண்டாம்; மானும் மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் அருந்த முடிகிறதா?"

என்பது அந்தப் படத்தில் சாதிக் கொடுமையைக் கண்டிக்கும் ஓர் உரையாடலாகும்.

இவ்வாறு சாதி சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயம் காண வேண்டுமென்ற ஆவலை உயிரணுக்களில் சுமந்து கொண்டு அத்துடன் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்து அதனை நடை முறைப்படுத்த செயல்பட்டுக் கொண்டிருந்த போதுதான், அதாவது 1989-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில் சாதிக் கலவரத்துக்கான தீப்பொறி கிளம்பி, சுற்று வட்டாரப் பகுதிகளில் அந்தக் கலவரத் தீ, 11 உயிர்களைப் பலி வாங்கிய சோக நிகழ்ச்சி நடைபெற்றது.

தாழ்த்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோரல்லாதார்க்கும் இடையில் ஏற்பட்ட அந்தக் கலவரம் மூன்று நாட்கள் நீடித்தது. கோவை, ஈரோடு மாவட்டங்களில் சுற்றுப் பயணத்தில் இருந்த நான், சென்னையில் 21-9-1989 அன்று நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு, கலவரப் பகுதிகளுக்குச் சென்றேன். போடி, தேனி, கண்டமனூர் பகுதிகளுக்கு அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, கோ.சி. மணி, பொன். முத்துராமலிங்கம், நேரு, தங்கவேலு மற்றும் கழக முன்னோடிகளான தென்னரசு, தா.கிருட்டிணன், நீலநாராயணன், சி.டி. தண்டபாணி, வைகோ, கம்பம் ராமகிருஷ்ணன், மூக்கையா, அதியமான், ஆசையன், செல்வராஜ், எஸ்.ஏ.எம். உசேன் மற்றும் அதிகாரிகள் உடன் வந்தனர். உடனடியாக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்தப் பகுதிகளில் அமைதி திரும்பியது. நிவாரணச் செலவுகளுக்காக 25 லட்ச ரூபாய் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டது.

1989-ஆம் ஆண்டு, தமிழகத்தில் மதுரை வட்டாரத்தில் 11 உயிர்களைப் பலி கொண்ட சாதிக் கலவரம் நடைபெற்ற ஆண்டு மாத்திரமல்ல; அதே ஆண்டில் உலகின் பல பகுதிகளில் நம் உள்ளத்தை ரணமாக்கக் கூடிய துயர நிகழ்ச்சிகள் எத்தனையோ நடைபெற்றிருக்கின்றன. எடுத்துக்காட்டாக சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

அந்த ஆண்டு ஏப்ரல் 15-ஆம் நாள் இங்கிலாந்து ஷெபீல்ட் நகரத்துக் கால்பந்து மைதானத்தில் பந்தாட்டம் காண வந்த ரசிகர்கள் கூட்ட நெரிசலின் காரணமாக 95 பேர் மூச்சுத் திணறி மாண்டனர்.

மது அருந்தக் கூடாது என்று போராடிய மகாத்மா காந்தி பிறந்த குஜராத் மாநிலத்தில் பரோடாவில் விஷச் சாராயம் அருந்திய 5 பெண்கள் உட்பட 325 பேர் பலியான கொடுமை நடைபெற்றது.

பெங்களூரிலிருந்து டெல்லிக்குச் சென்று கொண்டிருந்த கர்நாடக எக்ஸ்பிரஸ் ஏப்ரல் 18 அன்று லலித் பூர் அருகே கவிழ்ந்ததில் 100 பேர் உயிரிழந்தனர்.

ஹிராயின் மற்றும் கஞ்சா எனும் போதைப் பொருள் களைக் கடத்தியதாகக் கைது செய்யப்பட்ட 65 பேர் அதே மாதத்தில் ஈரானில் தூக்கிலிடப்பட்டனர்.

அஸ்ஸாம் மாநிலத்தில் கோல்காட் எனும் மாவட்டத்தில் ராஜ புகாரி கிராமத்தில் நாகாலந்து தீவிரவாதிகள் புகுந்து 30 பேரைக் கொலை செய்தனர்.

இலங்கையில் இரு இடங்களில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் 52 பேர் மாண்டனர்.

வங்கதேசத்தில் அதே ஆண்டு மே திங்கள் 27 அன்று வீசிய கடும் புயலால் 200 பேர் பிணமாயினர்.

காஷ்மீர் ஸ்ரீநகர் அருகே ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 41 பேர் இறந்தனர்.

சென்னை பக்கிங்காம் கால்வாயில் பேருந்து விழுந்த தினால் 30 பயணிகள் மரணமுற்றனர்.

அதே ஆண்டு லக்னோவில் பேருந்து ஒன்று மின்கம்பியில் உராய்ந்ததினால் 30 பயணிகள் கருகிச் செத்தனர்.

ஆம்ஸ்டர்டாமிலிருந்து பரமாரியோவுக்குச் சென்று கொண்டிருந்த விமானம் விழுந்து நொறுங்கி 120 பயணிகள் பலியாயினர்.

பிலிப்பைன்சில் மிட்டநோவா தீவில் தங்கச் சுரங்கம் சரிந்ததில் சுமார் 1000 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவில் இரண்டு ரயில்கள் திடீரெனத் தீப்பற்றியதால் 1500 பேர் கருகிப் போயினர்.


இத்தனை சோகங்களையும் உள்ளடக்கிய ஆண்டாகத் திகழ்ந்த 1989-ஆம் ஆண்டு இனிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஆண்டாகவும் இருந்துள்ளது.

அவற்றில் ஒரு நிகழ்ச்சியாக "இதயம் பேசுகிறது" பத்திரிகையின் ஆசிரியர் மணியன் அமெரிக்கா பற்றி எழுதிய நூல் ஒன்றின் வெளியீட்டு விழா அமைந்தது. எழுத்தாளர் திரு. வாசவன் தலைமையில் நடைபெற்ற விழாவில் அந்த நூலை

நான் வெளியிட்டேன். அந்த விழாவில் ஜி. வெங்கடேஸ்வரன், எழுத்தாளர்கள் இந்துமதி, விக்ரமன், எம். கோபால கிருஷ்ணன், எஸ். நல்ல பெருமாள், அவ்வை நடராஜன், ஜி. உமாபதி, டாக்டர் வேங்கட சுப்பிரமணியம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு மணியன் அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

திரு.மணியன் எழுதி வெளிவந்துள்ள பயணக் கட்டுரைப் புத்தகங்களைப் பற்றியெல்லாம் நான் விரிவாகப் பேசிய தோடு, சுற்றுலா நோக்கத்தையும் ஓரளவு மனத்திற் கொண்டு தான் இராமாயணமும், சிலப்பதிகாரமும் எழுதப்பட்டிருக்கக் கூடுமோ என்று நினைக்க வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டேன்.

இதிகாசமான இராமாயணம் வடக்கே அயோத்தியிலே தொடங்கி, தண்டகாரண்யம், கிஷ்கிந்தை, ராமேசுவரம், வேதாரண்யம், இலங்கை எனத் தொடர்கிறது. சிலப்பதிகார இலக்கியமோ சோழ நாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்திலே தொடங்கி, திருவரங்கம் வழியாகச் சென்று, பாண்டிய நாடான மதுரையம்பதிக்கும் சென்று, அத்துடன் நில்லாமல்




சென்னையில் நடைபெற்ற மனிதநேயச் சங்கிலியில் முதல்வர் கலைஞர் அவர்களுடன் டி.ஆர்.பாலு, பூவராகன் மற்றும் ப.மாணிக்கம்.

கற்பரசி கண்ணகிக்குச் சிலையெடுக்கக் கல் கொண்டு வர சேரன் செங்குட்டுவன் வடபுலம் வரையில் சென்று கனகவிசயரை இமயச்சாரலில் வென்று திரும்பியது வரையில் தொடர்கிறது. எனவே, நூலாசிரியர்களின் மூல நோக்கம் எதுவாக இருப்பினும், சுற்றுலாவுக்குத் தேவையானவை களும் அவர்களை அறிந்தோ அறியாமலோ இடம் பெற்றிருக்கின்றன இந்த நூல்களில் என்று சுட்டிக் காட்டினேன்.

கழக அரசு பொறுப்பேற்ற அதே ஆண்டில் தமிழகத்தில் உணவுப் பொருள்கள் விநியோகத்திற்குச் சங்கடம் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியிருந்தது. மத்திய அரசு அதற்கு முன்பு வரை மாதந்தோறும் 80 ஆயிரம் டன் அரிசி வழங்கி வந்ததை, 40 ஆயிரம் டன்னாக உடனடியாகக் குறைத்து விட்டது. அதைப் போலவே பாமாயில், சர்க்கரை ஆகிய வற்றையும் தமிழகத்தின் தேவைக்கேற்ப அனுப்ப மத்திய அரசு தயாராக இல்லை. தமிழக அரசின் சார்பில் நேரில் சந்தித்தும், கடிதம் மூலமாகவும் மத்திய அரசுக்கு இது பற்றி பலமுறை கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அவைகளை மத்திய அரசு காதில் போட்டுக் கொள்ளாத நிலையில் தமிழகத்திலிருந்து பிரதமருக்கு நூற்றுக்கணக்கான தந்தி களை அனுப்புமாறு நான் கேட்டுக்கொண்டதை அடுத்து ஏராளமான தந்திகள் அனுப்பப்பட்டன.

தமிழகத்தின் உணவு நிலை இந்த அளவிற்கு இருந்த போது, திரு. மூப்பனார் அவர்கள் இந்து இதழுக்கு அளித்த ஒரு பேட்டியில் - முதல் அமைச்சர் கருணாநிதி பொது மக்களைப் பாதிக்கும் அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்றவை பண்டிகை காலத்தில் போதுமான அளவிற்கு நியாயமான விலையில் கிடைக்க தனது தனிப்பட்ட கவனத் தைச் செலுத்திட வேண்டும். மாநில அரசே அதற்குரிய பரிகாரங்களைக் கண்டறியுமானால் மத்திய அரசின் முழு ஒத்துழைப்புக்கு எங்களால் உறுதி கூற முடியும் என்று கூறியிருந்தார்.



திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் துவக்க விழாவில் முதல்வர் கலைஞருடன் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, பொன்முடி, வீரபாண்டி ஆறுமுகம்.

அதுபற்றி நான் எழுதும்போது, "தமிழ்நாடு சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சித் தலைவராக விளங்குபவரும், கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருப்பினும் கண்ணியமும் கனிவுமிக்க அரசியல் தலைவர்களில் ஒருவராக இருக்கக் கூடியவருமான திரு.மூப்பனார் அவர்கள் கூறியதாக இந்து இதழில் ஒரு செய்தி படித்தேன். மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவதில் மாநில அரசின் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்க நான் தயாராக இல்லை. திரு. மூப்பனார் அவர்கள் கூறியிருப்பதைப் போல நானே இந்தப் பிரச்சினையில் தனி கவனம் செலுத்தி நாள் தோறும் உணவு அமைச்சர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இன்னும் இதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென திரு. மூப்பனார் கூறியுள்ளாரே, அந்தத் தனி கவனம் பிப்ரவரி திங்களிலேயே பிரதமரைச் சந்தித்து நிலையை விளக்கியதி லிருந்தே ஆரம்பமாகி விட்டது. சங்கடங்களை விளக்கி ஆறு மாத காலமாக மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தும்

பயனற்றுப் போனபிறகு தான் தந்திகள் கொடுக்கப்பட்டன. அந்தத் தந்திகளுக்கும் பதில் எதுவும் கிடைக்காத நிலையில் தான் அக்டோபர் 7-ந்தேதி அன்று மாநிலம் முழுவதும் மனிதச் சங்கிலி நடத்துவதென்று தி.மு.கழகம் முடிவெடுத்து அறிவித்துள்ளது என்று குறிப்பிட்டேன்.

6-ஆம் தேதியன்று மத்திய உணவு அமைச்சர், நண்பர் திரு. சுக்ராம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்தார். தமிழகத்திற்கு ஏற்கனவே வழங்கப்படும் 40 ஆயிரம் டன்னுக்கு மேலாக கூடுதலாக நவம்பர் முதல் 5 ஆயிரம் டன்னும், டிசம்பரில் மேலும் 10 ஆயிரம் டன்னும் தருவதாகக் கூறினார். அது போதுமானதல்ல என்றும், அக்டோபரில் 10 ஆயிரம் டன்னும், நவம்பர் முதல் 20 ஆயிரம் டன்னும் அதிகமாகத் தர வேண்டுமென்று மத்திய அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறினேன். என்னைச் சந்திப்ப தற்கு முன்னால் தமிழக உணவமைச்சர் ஆர்க்காடு வீராசாமி யோடும், அதிகாரிகளோடும் ஒரு மணி நேரம் மத்திய அமைச்சர் உணவு நிலை குறித்து விவாதித்தார்.

செய்தியாளர்கள் அதைப்பற்றிப் பிறகு என்னிடம் கேட்ட போது, மத்திய அமைச்சர் இங்கே வந்து நிலைமைகளை விசாரித்த வகையில் மகிழ்ச்சிதான் என்றும், தருவதாகக் கூறுகிற அரிசியின் அளவுதான் போதுமானதாக இல்லை யென்றும் கூறினேன்.

அக்டோபர் 7-ந் தேதியன்று தி.மு.க. அறிவித்ததைப் போல மனிதச் சங்கிலி தமிழகம் முழுதும் நடைபெற்றது. சென்னை யில் குறளகம் அருகிலிருந்து மனிதச் சங்கிலி தொடங்கி, கிண்டி வரை நீண்டிருந்தது. அதில் தி.மு.க., சி.பி.எம்., சி.பி.ஐ., ஜனதா தளம், முஸ்லீம் லீக், தமிழக முன்னேற்ற முன்னணி, திராவிடர் கழகம், பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டிருந்தன.

குறளகம் அருகில் நான், சி.பி.ஐ., தமிழ் மாநிலக் குழுச் செயலாளர் ப.மாணிக்கம், ஜனதா தளம் சார்பில் பூவராகன், கலிவரதன் ஆகியோர் கலந்து கொண்டோம். பிறகு நான் ஒரு

ஜீப்பில் ஏறி மனிதச் சங்கிலியைப் பார்வையிட்டேன். ஏ. நல்லசிவன், எம்.பி., கி. வீரமணி, அப்துல் லத்தீப், ராஜ சேகரன், வன்னிய அடிகளார் மற்றும் அமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்டனர்.

மனிதச் சங்கிலியைத் தொடர்ந்து அக்டோபர் 18, 19, 20, 21, 22 ஆகிய ஐந்து நாட்களும் தமிழகம் முழுவதும் கழகச் சார்பில் எழுச்சிநாள் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென முடிவெடுத்து, அவ்வாறே ஆயிரக்கணக்கான கழகக் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

1989-ஆம் ஆண்டு பெரியார் மாவட்டம் என்று அழைக்கப் பட்டு வந்த ஈரோடு மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு "தீரன் சின்னமலை மாளிகை" என்று அங்கே நடைபெற்ற அரசு நலத்திட்ட விழாவிலே அறிவித்தேன். அதைப் போலவே மானாமதுரை யில் நடைபெற்ற அரசு விழாவிலே சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உள்ள இடத்திற்கு மருது பாண்டியன் நகர் என்றும், அங்கே கட்டப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு பன்னீர் செல்வம் மாளிகை என்றும், ராமனாதபுரம் மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு சேதுபதி நகர் என்றும், கலெக்டர் அலுவலகக் கட்டிடத் திற்கு சிங்கார வேலர் மாளிகை என்றும் பெயர் சூட்டினேன்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலு வலகத்திற்கு "ராஜகம்பீரன் மாளிகை" என்றும், அலுவலக வளாகத்திற்கு "இரா. தர்மலிங்கம் வளாகம்" என்றும் 30-9-1989 அன்று நடைபெற்ற திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத் துவக்க விழாவின்போது பெயர் சூட்டினேன்.

அன்று மாலையில் வேலூரில் நடைபெற்ற விழாவில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு ஈ.வெ.ரா. மணியம்மையார் வளாகம் என்றும், ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு சி.பி. சிற்றரசு மாளிகை என்றும், புதிய

பேருந்து நிலையத்திற்கு ஜனாப் உபயதுல்லா பேருந்து நிலையம் என்றும் பெயர் சூட்டப்பட்டது.

இந்த இரண்டு விழாக்களிலும் எனக்குப் பரிசாக வழங்கப் பட்ட இரண்டு இலட்ச ரூபாய் மதிப்புள்ள தங்கச் செங்கோல், ஒரு மணி மாலை, இரண்டு மூன்று மோதிரங்கள் போன்ற பொருட்களை முதல் அமைச்சர் நிவாரண நிதியிலே சேர்ப்பதற்காக தலைமைச் செயலாளர் எம்.எம். ராஜேந்திரன் அவர்களிடம் 2-10-1989 அன்று வழங்கினேன்.

அவைகளை மாத்திரமல்ல, என்னுடைய பிறந்த நாளில் திருச்சியில் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் முன்னின்று 60 பவுன் கொண்ட ஒரு பவுன் மாலையை எனக்கு அணிவித்தார். அதை கட்சி நிதிக்காகக் கொடுத்துவிட்டேன். அதைப் போலவே மதுரையில் கழகச் சார்பில் பி.டி.ஆர். பழனிவேல் ராஜனும், பொன். முத்துராமலிங்கமும் முன்னின்று 60 பவுன் கொண்ட ஒரு மாலையை எனக்கு அணிவித்தார்கள். அதையும் கட்சி நிதிக்காகக் கொடுத்து விட்டேன்.

கோவையில் கழகச் சார்பில் கண்ணப்பன் அவர்கள் முன்னின்று 60 பவுன் கொண்ட ஒரு மாலையை எனக்கு அணிவித்தார்கள். அதையும் கட்சி நிதிக்காகக் கொடுத்து விட்டேன்.

காமராஜர் மாவட்டம், விருதுநகரில் 8-10-1989 அன்று நடை பெற்ற அரசு விழாவில், 51 கோடி ரூபாய்க்கான நலத்திட்டங்களை ஏழையெளிய மக்களுக்கு வழங்கி, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு குமார சாமி ராஜா பெயரையும், அலுவலகக் கட்டிடத்திற்கு ஏ.வி.பி. ஆசைத் தம்பி பெயரையும் சூட்டி னேன். விழாவிற்குச் சென்ற நான் விழா முடிந்தபிறகு நேராகக் காமராஜரின் இல்லத்திற் குச் சென்று அவருடைய தங்கை திருமதி நாகம்மையாரைச் சந்தித்தேன். அந்த அம்மையார் என்னைக் கண்டதும் "ராஜா, நீ நூறாண்டு வாழ வேண்டும்" என்று கூறி வாழ்த்தினார். மாவட்ட நிகழ்ச்சியின்போது முதலமைச்சர் நிவாரண



அரசு நலவாழ்வுத் திட்ட உதவி வழங்கு விழாவில் முதல்வர் கலைஞருடன் (இடமிருந்து வலமாக) டி.ஆர்.பாலு, பரிதி இளம்வழுதி, பேராசிரியர், தலைமைச் செயலாளர் எம்.எம்.ராஜேந்திரன்.

நிதிக்காக ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்ததில் இருந்து பத்தாயிரம் ரூபாயை அந்த அம்மையாரிடம் வழங்கினேன்.

அடுத்து திருத்தங்கலில் நடைபெற்ற கழக நிகழ்ச்சியில் தம்பி தங்கபாண்டியன் முன்னின்று நடத்திய அந்த விழாவில் 1 லட்சத்து 40 ஆயிரம் மதிப்புள்ள 55 பவுன் சங்கிலி ஒன்றினை எனக்கு வழங்கியபோது அதனையும் தலைமைக் கழகத்தில் ஒப்படைப்பதாகக் கூறி அவ்வாறே ஒப்படைத்தேன்.

மதுரை மாவட்ட சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 10-10-89 அன்று சென்னை திரும்பினேன். வந்ததும் வராதது மாக மீனவச் சமுதாயத்திலே பிறந்து ராயபுரம் தொகுதியில்



முன்னாள் முதல்வர் குமாரசாமி ராஜா மற்றும் ஏ.வி.பி.ஆசைத்தம்பி படங்களைத் திறந்து வைக்கிறார் முதல்வர் கலைஞர்.

வெற்றிபெற்ற பொன்னுரங்கம் மறைவு, பெரணமல்லூர் தொகுதியில் வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர் எட்டியப்பன் மறைவு, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தத்துவமேதை என்ற அடைமொழிக்குச் சொந்தக்காரருமான டி.கே. சீனிவாசன் அவர்களின் மறைவு ஆகிய மூன்று செய்திகளும் அடுத்தடுத்த நாட்களில் வந்து என்னைச் சோர்வடையச் செய்தன. என்னுடன் அளவற்ற அன்புடனும் அதே நேரம் அடிக்கடி ஊடல் கொண்டும், எதற்கும் அஞ்சாமல் எண்ணியதை எண்ணியவாறு எடுத்துக்கூறும் என் இனிய நண்பர் டி.கே.எஸ். இன்றில்லையெனினும் அவரது மகன்கள் டி.கே.எஸ். இளங்கோவன், டி.கே.எஸ். வில்லாளன் இருவரையும் பார்க்கும் போதெல்லாம் டி.கே. சீனிவாசனின் நினைவு என் நெஞ்சில் அலை பாயாது இருப்பதில்லை.

14 இராஜராஜ சோழன் விருது

1989-ஆம் ஆண்டின் உலகச் சிறப்புகளில் இடம்பெறத் தக்க நிகழ்ச்சிகளில் ஒன்றை கர்னல் பஜாஜ் என்ற ஓர் இந்தியரும், மற்றொன்றை கலிபோர்னியாவைச் சேர்ந்த விக்டோரியா மார்டன் என்ற ஒரு யுவதியும் நடத்திக் காட்டினர்.

கர்னல் பஜாஜ் உலகின் தென்முனையான அண்டார்டி காவை நடந்தே சென்று அடைந்தார். இத்தகைய கால்நடைப் பயணம் மேற்கொண்டு தென் முனையை அடைந்தவர்கள் உலகத்தில் 22 பேர்; அவர்களில் ஒருவர்தான் பஜாஜ் எனும் இந்தியர்.

அதே அண்டார்டிகா வரையில் 1200 கிலோ மீட்டர் தொலைவு பனித் தரையில் சறுக்கிக் கொண்டு விக்டோரியா மார்டனும் அந்தப் பெண்மணியின் தலைமையில் 10 பேர் கொண்ட குழுவினரும்; அந்த நெடுந்தூரத்தைக் கடந்து சென்று இதுவரை எவருடைய காலடித் தடமும் படாத பாதையில் வெற்றி முகட்டை எட்டியதும் அந்த ஆண்டின் சிறப்புக்குரிய செய்தியாகும்.

இந்த ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 81வது பிறந்தநாள் கழக அமைப்புகளின் சார்பாகக் கொண்டாடப் பட்டது மட்டுமின்றி என் தலைமையிலான கழக அரசும் பங்கேற்றது என்பதற்கு அடையாளமாக அண்ணா பிறந்தநாளையொட்டி; ஆயுள் தண்டனை பெற்ற 285 கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 12 ஆண்டுகள் சிறைவாசம்

அனுபவித்த அந்தக் கைதிகளின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு அவர்களை விடுதலை செய்த நிகழ்ச்சியாகும் அது.

அந்தப் பிறந்தநாளையொட்டி அரசின் சார்பில் காவல்துறை, தீயணைப்புத் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் துறை ஆகியவற்றில் பணியாற்றுபவர்களுக்கு அண்ணா விருது வழங்கும் விழாவும், கழகத்தின் சார்பில் முப்பெரும் விழாவும் கொண்டாடப்பட்டது. கழக விழாவில், பெரியார் விருது: காரைக்குடி ராம சுப்பையா அவர்களுக்கும், அண்ணா விருது: புலவர் கோவிந்தன் அவர்களுக்கும், கலைஞர் விருது: இசைமுரசு நாகூர் அனீபா அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வங்காளப் பஞ்சத்தை அடுத்து வேளாண்மையில் தனிக்கவனம் செலுத்த வேண்டு மென்ற முனைப்புடன் கால்நடை மருத்துவ அறிவியல் உள்ளிட்ட ஒரு வேளாண்மைப் பள்ளி சென்னை சைதாப் பேட்டையில் நிறுவப்பட்டது. 1883-ஆம் ஆண்டு இந்திய கால்நடைக் கொள்ளை நோய் ஆய்வுக் குழுவின் பரிந்துரை களின்படி சென்னை வேப்பேரியில் தனியாக ஒரு கால்நடை மருத்துவப் பள்ளி 1903-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வேளாண்மைப் பள்ளி 1905-ஆம் ஆண்டு கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டது. இங்கிலாந்திலுள்ள அரசினர் கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள டாக்டர் மேஜர்கன் என்னும் கால்நடை மருத்துவ நிபுணர் தென் ஆப்பிரிக்காவில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை நிறுவியிருந்தார். சென்னையில் கால்நடை மருத்துவக் கல்லூரியை நிறுவும் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. ஜி.எம்.வி.சி. பட்டப் படிப்பு வகுப்பிற்கு 20 மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக இங்கிலாந்தில் உள்ள அரசினர் கால்நடை மருத்துவக் கல்லூரியின் தகுதிக்கு ஈடாக சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி 1-10-1903-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயர்தரக் கல்வி அங்கீகரிக்கப்பட்டு சென்னைப் பல்கலைக் கழகத் துடன் இணைக்கப் பெற்றது. இவ்வாறு இந்தியாவிலேயே

பி.வி.எஸ்ஸி. என்னும் பட்டப் படிப்பை வழங்கும் முதல் கால்நடை மருத்துவக் கல்லூரியாகச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி விளங்கியது.

இத்தகைய புகழுக்குரிய சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி இருந்த இடத்திலே ஆசியாவிலேயே முதல் கால் நடைப் பல்கலைக் கழகம் தி.மு.கழக ஆட்சியிலே அறிவிக்கப் பட்டு, தொடக்க விழா 20-9-89 அன்று நடைபெற்றது. அதற்காக 2 கோடியே 56 இலட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடமும் கழக ஆட்சியிலே அமைக்கப்பட்டு 1998-ஆம் ஆண்டு என்னால் திறந்து வைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மூன்றாவது முறை பொறுப்பேற்றபோது எப்படி முதன் முதலாக கால்நடைப் பல்கலைக் கழகத்தைத் துவக்கினோமோ, அதைப் போலத் தான் நான் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்ற காலத்திலே கோவையிலே வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் துவக்கினேன். அந்தப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்குக் காரணமே 1969-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் நான் மேற்கொண்ட பஞ்சாப் மாநிலப் பயணம் தான். அதைப்பற்றி விரிவாக நெஞ்சுக்கு நீதி இரண்டாவது பாகத்தில் எழுதியிருக்கிறேன். அந்தப் பயணத்தின்போது ஒரு நாள் பஞ்சாப்பில் உள்ள தொழில் நகரமான லூதியானா விற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கேயுள்ள விவசாயப் பல்கலைக் கழகத்தில் நாற்பது இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மனையியல் கல்லூரி கட்டடத்தை நான்தான் அப்போது திறந்து வைத்தேன். அந்த விவசாயப் பல்கலைக் கழகத்தை நான் பார்வையிட்டதன் விளைவுதான் தமிழகத்திலே கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்கப்படுவதற்கான முதல் காரணமாகும்.

இந்தியத் திருநாட்டு விடுதலைக்காகவும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட மறைந்த கவிஞர் பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் அவருக்கு மாதம் 100 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கிட 1970-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் ஆணை பிறப்பித்திருந்தேன்.

அவர் மறையும் வரையில் அந்த ஓய்வூதியத்தைப் பெற்று வந்தார். 1989-இல் மீண்டும் கழக அரசு ஏற்பட்ட போது நெல்லையப்பரின் மகள் 60 வயதான திருமதி பூங்கோதை அம்மாள் தனது கணவர் 68 வயதான நிலையில் கண்பார்வை இழந்து வாத நோய் ஏற்பட்டு மிகுந்த நலிவுற்ற நிலையில் இருப்பதாகவும், தனது தந்தையாருக்கு அளித்ததைப் போலவே தனக்கும் ஓய்வூதியம் அளிக்க வேண்டுமென்றும் கோரிக்கை மனு ஒன்றினை என்னிடம் அளித்தார். அதனைப் பெற்றுக் கொண்டு, அந்த அம்மையாரின் ஆயுட்காலம் வரை மாதம் 500 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்க அக்டோபர் 89-இல் ஆணையிட்டேன்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் தமிழில் சிறந்த படைப்பிலக்கியங்களை எழுதுபவர்களுக்கு "இராஜ ராஜன்" விருதினை வழங்கி வருகின்றது. அந்த வகையில் 1989-ஆம் ஆண்டு நான் எழுதிய வரலாற்றுப் புதினமான "தென் பாண்டிச் சிங்கம்" சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இராஜராஜன் விருது வழங்கப்பட்டது. விருது தேர்வுக் குழு உறுப்பினர்களான தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ச. அகத்தியலிங்கம், பாரதி தாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ். முத்துக் குமரன், அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் எஸ்.வி. சிட்டிபாபு, நீதிபதி ஜனார்த்தனம், அகில இந்திய வானொலி முன்னாள் இயக்குநர் கோ. செல்வம், அவ்வை நடராஜன் ஆகியோர் என்னைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதற்கான பரிசளிப்பு விழா 25-5-1990 அன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழக ஆளுநராக அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் பதவியேற்ற சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராக அப்போது இருந்தவரும், ஆற்றல் வாய்ந்தவரும், அரசியலில் நேர்மையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருபவரும், சரியென்று தனக்குப்பட்டதை யார் எதிர்த்த போதிலும் தயங்காமல்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத் திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர், ஆளுநர் அலெக்ஸாண்டர், அவரது துணைவியார், அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, கே.பி.கந்தசாமி, சந்திரசேகரன்.

எடுத்துக் கூறுகின்ற துணிவு பெற்றவரும், ஆங்கிலத்தில் தலைசிறந்த புலமை பெற்றவருமான திரு. சங்கர் தயாள் சர்மா அவர்கள் அந்த விழாவிலே கலந்து கொண்டு இராஜராஜன் விருதினையும், படைப்பிலக்கியப் பரிசாக ஒரு இலட்சம் ரூபாயையும், முத்தமிழ் அறிஞர் என்ற சிறப்பினையும் எனக்கு வழங்கினார். கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர், நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, இந்திரா காந்தி பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி, அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமதி இராதா தியாகராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

குடியரசுத் துணைத் தலைவர் திருமிகு சங்கர் தயாள் சர்மா அவர்கள் என்னைப் பாராட்டி அந்த விழாவிலே பேசும்போது, "இருபதாம் நூற்றாண்டின் மகத்தான மனிதர்களான அண்ணா அவர்களையும், காமராஜர் அவர்களையும் முதலமைச்சர்களாகப் பெற்ற பெருமையும் அதிர்ஷ்டமும் இந்த மாநிலத்திற்கு உண்டு. தமிழகத்தின் முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள்

அறிவாற்றல் நிறைந்தவர், எழுத்துலக அறிஞர். அவர் கவிதைகள் எழுதியிருக்கிறார், நாடகங்கள் தீட்டி யிருக்கிறார். அவரது உரைநடையும் சொல்லாட்சித் திறனும் எண்ணற்ற மக்களுக்கு கருத்துக்களை எடுத்துச் சொல்லும் கருவி என்பதை அனைவரும் அறிவீர். மிகச் சிறந்த நாடகக் கதாசிரியராக, திரைக்கதை வசன கர்த்தாவாக, பெரும் புகழ் பெற்றிருக்கின்ற டாக்டர் கருணாநிதி அவர்கள் வரலாற்றுப் புதினங்களைப் படைத்திருக்கிறார். அவர் தமிழ் இலக்கியத்தின் சிரஞ்சீவி. இன்றைய விருதுக்குரிய அவரது படைப்பான "தென்பாண்டிச் சிங்கம்" தென் தமிழ்நாட்டின் தமிழர்கள் போற்றும் வீரத்தையும் மானத்தையும் கற்பையும் ஒழுக்கத்தையும் போற்றிவந்ததை விவரிக்கும் நூலாகும். கருணாநிதியின் இன்னொரு வரலாற்றுப் புதினமான ரோமாபுரிப் பாண்டியன், ரோமாபுரிக்கும் தமிழகத்திற்கும் இடையிலே நிலவிய வணிக, கலாச்சார வரலாற்றுத் தொடர்புகளைப் பின்னணியாகக் கொண்ட நூலாகும். மற்றொரு நூலான பொன்னர் சங்கர் தமிழ்நாட்டில் சேலம், பெரியார் மாவட்டப் பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு முன்பு அங்கு நிலவிய மரபுகளையும் கலாச்சாரங்களையும் விவரிப்ப தாகும்.

உரைநடை, கவிதை, நுண்ணிய கலைகள், நாடகத் துறை அனைத்திலும் சிறந்து விளங்கும் கலைஞர் கருணாநிதியை முத்தமிழ் அறிஞர் என்று பட்டம் சூட்டி அழைக்கலாம். மிகச் சிறந்த அரசனும், தேர்ந்த அறிவாளனுமான இராஜ ராஜ சோழன் விருது கருணாநிதி அவர்களுக்கு வழங்குவது மிகவும் பொருத்தமாகும்" என்று உணர்ச்சி மிக்கதோர் உரையாற்றினார்.

உரையாற்றியதோடு மட்டுமல்லாது, தனது உரையை அவர் முடிக்கையில் "இந்த அற்புதமான நாவலை வழங்கிய தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு ஒரு பரிசினை என் சார்பில் வழங்கிட விரும்புகிறேன்" என்று கூறி அன்பின் அடையாளமாக அழகிய பேனா ஒன்றை வழங்கினார்.

நான் நன்றி கூறிப் பேசும்போது; "இங்கே வழங்கப்பட்ட விருதுடன் ஒரு லட்சத்து ஒரு ரூபாய்க்கான காசோலை ஒன்று என்னிடத்திலே தரப்பட்டிருக்கின்றது. அந்தக் காசோலை தமிழுக்கே பயன்பட வேண்டுமென்று நான் கருதுகின்றேன். என்னைப் பெரியாரின் கைகளிலே ஒப்படைத்து பேரறிஞர் அண்ணாவின் நிழலிலே வளரச் செய்து, உங்களையெல்லாம் என்னுடைய உடன்பிறப்புகளாக ஆக்கிய பெருமைக்குரியவர்கள் என்னுடைய தாய் அஞ்சுகம் அம்மையாரும், தந்தை முத்து வேலரும் ஆவர். எனவே அவர்கள் நினைவாக இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'அன்னை அஞ்சுகம் முத்துவேலர் அறக்கட்டளை' என்ற பெயரில் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று துணை வேந்தரையும், இணை வேந்தரையும் கேட்டுக் கொண்டு இந்த ஒரு லட்சத்து ஒரு ரூபாயையும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் திரும்ப அளிக்கிறேன். இந்தத் தொகையைக் கொண்டு அதன் மூலம் கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு,



மாமன்னர் இராஜராஜன் விருதினை குடியரசுத் துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா முதல்வர் கலைஞருக்கு வழங்குகிறார். உடன் ஆளுநர் பர்னாலா, அமைச்சர் பேராசிரியர், வைகோ எம்.பி. ஆகியோர்.


அரிய இலக்கியங்களைப் படைத்துப் புகழ்பெற்ற டாக்டர் கால்டு வெல், மறைமலை அடிகளார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், கா.சு.பிள்ளை, தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆகியோரின் படைப்புகள் தொடர்பாக ஆய்வுரைகள் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தப்பட வேண்டுமென்றும், அந்த ஆய்வுரைகள் ஆண்டுதோறும் தமிழ்ப் பல்கலைக் கழகத் தால் நூல் வடிவில் வெளியிடப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்" என்று என் விருப்பத்தை வெளி யிட்டேன்.

என்னுடைய நீண்ட நாள் நண்பர்களில் ஒருவராக இருந்த வரும், மிகப் பெரிய சுயமரியாதை வீரரும், சிறந்த கவிஞரும், என்னோடு இணைந்து தந்தை பெரியார் அவர்களின் ஈரோடு அலுவலகத்தில் பணியாற்றியவருமான கவிஞர் கருணானந்தம் அவர்கள் நீண்டநாள் நோய்வாய்ப்பட்ட நிலையிலிருந்து 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ந்தேதி மறைந்து விட்டார் என்ற செய்தி கடலூர் சுற்றுப் பயணத்தில் இருந்த எனக்குக் கிடைத்தது.

கலைஞானி கமலஹாசன் நடித்து வெளிவந்த அபூர்வ சகோதரர்கள் படத்தின் வெள்ளி விழாவும் அதில் பங்கேற்ற நடிகர், நடிகையர், மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக் கும் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சியும் 15-10-89 அன்று வள்ளுவர் கோட்டத்தில் என்னுடைய தலைமையில் நடை பெற்றது. அந்த விழாவில் நடிகர் திலகம் சிவாஜி, ஆந்திர நடிகர் நாகேஸ்வர ராவ், கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் கேரள நடிகர் மது ஆகியோர் கலந்து கொண்டனர். "அபூர்வ சகோதரர்கள்" படம் வெளியிடுவதற்கு முன்பே கமல ஹாசன் என்னை அழைத்து அந்தப் படத்தினைத் திரையிட்டுக் காட்டினார். அப்பொழுதே நான் அந்தப் படம் மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்து அவருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். வெள்ளி விழாவில் அந்தப் படத்திலே பங்கேற்ற கலைஞர்களுக் கெல்லாம் பரிசுகளை வழங்கி பாராட்டி உரையாற்றினேன்.

அந்த விழாவில் நடிகர் கமலஹாசன் 50 ஆயிரத்திற்கான காசோலையை முதலமைச்சர் நிவாரண நிதிக்காக வழங்கினார்.

19-10-1989 அன்று நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களின் அஞ்சல்தலை வெளியீட்டு விழா நடைபெற்றது. நாமக்கல் கவிஞர் அவர்கள் உத்தமர் காந்தி அடிகளுடைய அறவழிப்பாதையைத் தன்னுடைய பாதையாக ஏற்றுக் கொண்டு, இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு வீரர்களை உசுப்பி விடவும், களத்தில் நின்ற தளபதிகளை ஊக்கப்படுத்தவும், அவருடைய பாடல்களை முரசுகளாக ஆக்கியவர். அத்தகைய முரசு முழக்கத்தால் கவிச் சக்கரவர்த்தி பாரதியாருடைய பாராட்டையும் பெற்று தமிழ்நாட்டு விடுதலை வீரர்கள் அத்தனை பேருடைய வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும் உரியவராகத் திகழ்ந்தவர். அவர் இந்திய விடுதலைப் போராட்டத்திற் காகச் சிறைப்பட்ட நேரத் திலே சிறையிலிருந்து எழு திய புதினம்தான்மலைக்கள்ளன். அந்த மலைக் கள்ளன் படத்திற்கு கோவை பட்சி ராஜா ஸ்டுடியோவைச் சேர்ந்த நண்பர் ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் தயாரிப் பாளராக இருந்து, அதனைத் தயாரித்தபோது அதற்கு திரைக்கதை வசனம் எழுது கின்ற பொறுப்பு என்னிடத் திலே ஒப்படைக்கப்பட்டது. நாமக்கல்லாருடைய கதை-என்னுடைய வசனம்-அருமை நண்பர் எம்.ஜி.ஆர். கதாநாயகன் மூன்றும் இணைந்து அந்தப் படம் உருவாயிற்று.



வள்ளுவர் கோட்டத்தில் நடந்த அபூர்வ சகோதரர்கள் வெள்ளி விழாவில் மேடையில் அப்புவாகத் தோன்றிய கமலுக்கு முதல்வர் கலைஞர் பரிசு வழங்கிப் பாராட்டினார்.

ஸ்ரீராமுலு நாயுடு என்னைச் சந்தித்து இதற்கு வசனம் எழுத வேண்டும் என்று கேட்டபோது, "நாமக்கல் ராம லிங்கம் பிள்ளை காங்கிரஸ் கவிஞராயிற்றே; கதைக்குரிய அவரிடம் நான் வசனம் எழுதலாமா என்று கேளுங்க" என்றேன். கதைக்கு உரியவர் இதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறார், நீங்கள்தான் எழுத வேண்டுமென்று சொன்ன பிறகு, மலைக்கள்ளன் படத்திற்கு நான் உரையாடல் எழுதினேன். அந்தப் படம் தென்னகத்திலே மாத்திரமில்லா மல் வடபுலத்திலே உள்ள மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு திரையுலகத்திலே ஒரு பெரும் புரட்சியை உருவாக்கியது.

69-ஆம் ஆண்டில் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில்- நாமக்கல்லார், பல தொல்லைகளுக்கு குடும்பத்தோடு ஆளாகியிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் அரசின் சார்பில் மாதந்தோறும் ஒரு மானியத் தொகை அவருக்கு அனுப்புவது என்று தீர்மானித்து அதையும் 1967 முதல் முன்தேதியிட்டு வழங்க ஆணை பிறப்பித்தேன்.

அவர் மறைவதற்கு முன்பு என்னைப் பற்றி அவர் கைப்பட எழுதிய கவிதை ஒன்றினை அவருடைய மருமகன் அனு மந்தன் அவரது மறைவிற்குப் பிறகு கொண்டு வந்து தந்தார். அது வருமாறு :-

"இணையேதுமில்லா இலக்கணச் சிறப்பும்
ஈடெங்கு மில்லா இலக்கியம் குறளும்
அன்பும் பண்பும் அறமும் புகட்டும்
கதைகள் நிறைந்த காவியம் பலவும்
உடையது என்று உயர்ந்தோர் போற்றக்
கணக்கிட முடியா காலம் வாழ்ந்தும்
கன்னித் தமிழ் என இன்னும் திகழும்
என்றும் உள்ளநம் தென்றமிழ் அதனில்
வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாளில்
கற்றவர் நடத்திய கவியரங் கங்களில்
தலைமை தாங்கித் தலைவர் உரையெனக்
கலைஞர் டாக்டர் கருணா நிதியவர்

உரைத்த கவிகளின் தொகுப்பை ஊன்றிப்
படித்து மகிழ்ந்து பாராட்டு கின்றேன்
கனியின் ரசமும் தேனும் கலந்துள
இன்சுவை போன்ற இனிய கருத்துடன்
நடுவில் பலமுறை நகைச்சுவை கூட்டி
குற்றம் கடியும் கொள்கை துலங்க
இடையிடையே அதை இடித்துக் கூறிக்
கசப் பில்லாமல் கண்டனம் செய்யும்
காட்சிகள் சிலவும் காணத் தக்கதாய்
பதங்களைப் பிரித்துப் பொருளை மாற்றும்
வித்தையும் ஆங்காங்கு விரவியதாகக்
கல்வி யறிவும் கற்பனைத் திறனும்
நிரம்பிய தென்று நிச்சயம் மதிக்கலாம்
கலைஞரெனப் புகழ் பெற்றக் கருணாநிதியார்
கவிஞ ரென்றும் புகழ் பெறக் கண்டு மகிழ்வோம்.
கலைத் திறனோடு கவித் திறன் பெருகிச்
சீரும் சிறப்பும் செல்வமும் செழிக்கப்
பல்லாண்டு வாழப் பரமனைப் பணிந்து
மனமார வாழ்த்தி மங்கலம் பாடுவோம்

என்று எழுதியிருந்தார்.

அப்படிப்பட்ட தமிழ்க் கவிஞர், நாமக்கல்லாரின் அஞ்சல் தலை வெளியீட்டு விழா நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய நான் அவருக்கும் எனக்குமிருந்த நீண்ட நாள் தொடர்புகளைப் பற்றியெல்லாம் விளக்கிய தோடு தலைமைச் செயலகத்திலே கழக ஆட்சியிலே கட்டப் பட்டு, அதுவரை பெயர் வைக்கப்படாமல் இருந்த பத்து மாடிக் கட்டிடத்திற்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என்று பெயர் சூட்டப்படும் என்று அறிவித்து அவ்வாறே சூட்டப் பட்டு இன்றைக்கும் தலைமைச் செயலகத்திலே அந்தக் கட்டிடம் வானுயர நின்று கொண்டிருக்கின்றது.


17-10-1989 அன்று இந்தியாவின் தலைமை தேர்தல் கமிஷனர் திரு. ஆர்.வி.எஸ்.பெரி சாஸ்திரி ஒன்பதாவது மக்களவைக்கான பொதுத் தேர்தல் நவம்பர் மாதம் 22 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெறும் என்று

அறிவித்தார். மக்களவைத் தேர்தலுடன் ஆந்திரா, கர்நாடகம், உ.பி., சிக்கிம், கோவா ஆகிய மாநிலங்களின் சட்டசபைக் கான தேர்தலும் நடைபெறும் என்றும் தெரிவித்தார்கள்.

அதன் காரணமாக; காமன்வெல்த் நாடுகளின் தலைவர் கள் கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதமர் ராஜீவ் காந்தி கோலாலம்பூர் புறப்படுவதாக இருந்த சுற்றுப்பயணம் ரத்து செய்யப்பட்டது.

தேர்தல் பற்றி விவாதிக்க தேசிய முன்னணியின் தலைமைக் குழுக் கூட்டம் 20-10-1989 அன்று காலையில் புதுடெல்லியில் ஆந்திர பவனில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ், வி.பி. சிங், அரியானா முதல்வர் தேவிலால், அஸ்ஸாம் முதல்வர் மொகந்தா, எஸ். உன்னிகிருஷ்ணன், பிஜு பட்நாயக், அஜித் சிங், முரசொலி மாறன், எம்.பி., பி. உபேந்திரா, ஜார்ஜ் பெர்னாண்டஸ், மது தண்டவதே, டாக்டர் கலாநிதி, மப்டி மகமது சையத், ராம கிருஷ்ண ஹெக்டே, சந்திரபாபு நாயுடு, ஜெயபால் ரெட்டி, ஆரிப் மகமது கான், சத்தியநாராயண ரெட்டி, மாதவ ரெட்டி, ஐ.கே. குஜ்ரால், தினேஷ் கோஸ்வாமி ஆகியோரும் கலந்து கொண்டோம். தேர்தல் அறிக்கை நீண்ட விவாதம் நடைபெற்று இறுதியாக்கப்பட்டது. தேசிய முன்னணியில் ஜனதா தளம், தி.மு.க., தெலுங்கு தேசம், அசாம் கண பரிஷத், சோஷலிஸ்ட் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கிடையே முதலாவதாகத் தொகுதிப் பகிர்வு தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டு- பின்னர் அந்த உடன்பாடு தேசிய முன்னணியில் நேரடியாகப் பங்கு பெறாத பா.ஜ.க., சி.பி.எம்., சி.பி.ஐ. போன்ற கட்சிகளையும் சேர்க்கும் வியூகத்துடன் விரிவுபடுத்தப் பட்டது.

தற்போது தி.மு.கழகம் பா.ஜ.க.வோடு உறவு கொண் டிருப்பது குறித்து மதவாத அணி, மதச்சார்பற்ற அணி என்றெல்லாம் பேசுபவர்களைக் காணும்போது அப்போது தேசிய முன்னணியின் சார்பில் வி.பி. சிங் தலைமையில் ஆட்சி அமைந்த போது அந்த ஆட்சியை பா.ஜ.க.வும்



நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் சிறப்பு அஞ்சல் தலையின் முதல் தொகுப்பை முதல்வர் கலைஞரிடமிருந்து கவிஞரின் மருமகன் அனுமந்தன் பெற்றுக் கொள்கிறார்.

ஆதரித்தது, இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆதரித்தன என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல, ஏற்கனவே 1967-ஆம் ஆண்டு எல்லா மாநிலங்களிலும் பொதுத் தேர்தல் முடிந்த பிறகு பஞ்சாப், உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய 3 மாநிலங்களிலும் அகாலி தளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது. ஜனசங்கத்திற்கும், பா.ஜ.க.விற்கும் பெரிய வித்தியாசமில்லை. ஜனசங்கத்தின் பரிணாம வளர்ச்சிதான் பா.ஜ.க. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அப்போது அரசில் அங்கம் வகிக்கா விட்டாலும், சில நிபந்தனைகளோடு கூடிய ஆதரவை வெளியிலிருந்து இந்த அரசுகளுக்குத் தர ஒப்புக் கொண்டது. 1977-இல் நடைபெற்ற தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதா கட்சியின் அரசு அமைந்தது. அந்த அரசிலே இடம் பெற்றிருந்த தலைவர்கள் வாஜ்பய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோராகும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு கொடுத்தது. அதைத் தொடர்ந்து, 1989-90-இல் வி.பி. சிங்

தலைமையில் மத்தியிலே ஆட்சி அமைவதற்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளும், பாரதிய ஜனதா கட்சியும் வெளியிலே இருந்து ஆதரவு வழங்கின.



புதுடில்லியில் கூடிய தேசிய முன்னணியின் தலைமைக் குழுக் கூட்டத்தில் (இடமிருந்து வலம்) தேவிலால், முதல்வர் கலைஞர், என்.டி.ராமாராவ், வி.பி.சிங், மொகந்தா.

15 தேர்தல் முடிவுகளில், தெற்கும்-வடக்கும்

நாடாளுமன்றத்தின் 9-வது பொதுத்தேர்தலில் களம் புகும் கழக வேட்பாளர்களின் முதல் பட்டியலை 26-10-89 அன்று வெளியிட்டேன். தோழமைக் கட்சிகளாக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம், முஸ்லீம் லீக், தமிழக முன்னேற்ற முன்னணி, பார்வர்ட் பிளாக் ஆகிய கட்சிகளுடன் முரசொலிமாறன்; எம்.பி., வைகோ, எம்.பி., செ.குப்புசாமி ஆகியோரைக் கொண்ட கழகக்குழு தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த் தையிலே ஈடுபட்டது. தி.மு. கழகச் சார்பில் போட்டியிட 29 தொகுதிகளும், ஜனதா தளக் கட்சியின் சார்பில் போட்டி யிடுவதற்கு நாகர்கோவில், கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு தொகுதிகளும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகப்பட்டினம், பொள்ளாச்சி ஆகிய இரண்டு தொகுதி களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கோவை, திருச்சி, திண்டுக்கல், தென்காசி ஆகிய நான்கு தொகுதிகளும் முஸ்லீம் லீக் கட்சி சார்பில் வேலூர் தொகுதியும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அ.தி.மு.க. கூட்டணியில் அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, பார்வர்டு பிளாக் கட்சி, குடியரசுக் கட்சி, இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி உட்பட 14 கட்சி கள் சேர்ந்து போட்டியிட்டன. இதில் இந்திரா காங்கிரஸ் 25 இடங்களிலும், அ.தி.மு.க. 11 இடங்களிலும், முஸ்லீம் லீக் (சமது) 1 தொகுதியிலும், ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி 1 தொகுதியிலுமாகப் போட்டியிட்டன.

இதற்கிடையில் சட்டப் பேரவையில் குறுகிய காலத் தொடர் கூட்டம் சில நாட்கள் நடைபெற்றது. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் 1987-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ந் தேதி முதல் 23-ந் தேதி வரையில் வன்னியர் சங்கத்தினரால் நடைபெற்ற இடஒதுக்கீடு கிளர்ச்சி காரணமாகவும், பின்னர் 1988-ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சியில் ஜனவரி 18-ந் தேதி அன்று நடைபெற்ற வன்னியர் ஆதிதிராவிடர் மோதலின் காரணமாகவும் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று நான் முன்னரே அறிவித்தவாறு அதற்கான அரசாணையைப் பிறப்பித்தேன். அதன் காரண மாக மொத்தம் 1077 வன்னியர்களும் 422 ஆதிதிராவிடர் களும் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.


1987-ஆம் ஆண்டு இடஒதுக்கீடு குறித்து வன்னியர் சங்கச் சார்பில் நடைபெற்ற கிளர்ச்சி என்பது மிகவும் பிற் படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, குறிப்பாக வன்னியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று கோரி வன்னியர் சங்கத்தின் சார்பில் 17-9-1987 முதல் சாலை மறியல் போராட் டம் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டதாகும். அதற்கு முன்பாக 15-ஆம் தேதியே சென்னை அண்ணா அறிவாலயத்தின் திறப்பு விழாவையும் முப்பெரும் விழாவையும் நடத்திடக் கழகத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த எம்.ஜி.ஆர். செப்டம்பர் 15ந்தேதியன்று சென்னை திரும்பக் கூடும் என்று நிதி அமைச்சராக இருந்த நாவலர் கூறி, அந்தச் செய்தி ஏடுகளில் வந்த காரணத்தினால், அந்த நாளில் கழக நிகழ்ச்சியை வைத்துக் கொண்டால் சரி வராது என்பதற்காக 16-9-1987 அன்று கழக விழாக்கள் நடைபெறுமென்று அறிவித்ததோடு, அதற்கேற்ப வெளி மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் விரைவாக ஊர் திரும்பிட வேண்டுமென்ப தற்காக அன்றைய முப்பெரும் விழா நிகழ்ச்சிகளும் அண்ணா அறிவாலயத் திறப்பு விழாவும் விரைவாக முடிக்கப்பட்டன. எனினும் வன்னியர் சங்கத்தினர் காலை 6 மணியிலிருந்து சாலை மறியலைத் தொடங்குவதாக அறிவித்

திருந்த நிலையில் காவல்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்று முன் கூட்டியே வன்னிய சங்கத்தினரைக் கைது செய்த காரணத்தினால் அவர்கள் நள்ளிரவு 12 மணிக்கே போராட்டத்தைத் தொடங்கி விட்டனர். அதைப் பற்றி காவல்துறை முன்னெச்சரிக்கை செய்யாததாலும், கழக விழாவிற்கு வந்துவிட்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்த கழகத்தினர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நடந்த சாலை மறியலைத் தாண்டி தங்கள் சொந்த ஊர்களுக்கும் திரும்ப முடியாத அளவுக்கு போக்குவரத்து பிரச்சினை ஏற்பட்டது. சென்னை முப்பெரும் விழா நிகழ்ச்சிக்காக வந்திருந்த மதுரை ஆதினகர்த்தர் அவர்கள் சாலைமறியல் போராட்டத்தின் காரணமாக தனது பயணத்தைத் தொடர முடியாமல் வளவனூர் என்ற கிராமத்தில் தங்க நேரிட்டது. சாலையிலே தங்கள் குடும்பத்தினருடன் பல்லாயிரக்கணக்கான கழகத் தினர் குடிநீருக்குக் கூட வழியில்லாமல் காத்திருந்தனர். முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஊரில் இல்லாத நிலையில், நிதி அமைச்சர் நாவலரோடு தொடர்பு கொள்ள முயற்சித்து முடியாத நிலையில், தமிழக ஆளுநரைத் தொடர்பு கொண்டு கழகத்தின் சார்பில் நிலைமைகள் விவரிக்கப்பட்டன. 17-ந் தேதியன்று ஒரு நாள் மட்டும் நான்கு இடங்களில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கோலியனூரில் 6 பேரும், பனையபுரத்தில் 2 பேரும், பாப்பனப் பட்டியில் ஒருவரும், சேந்தூரில் ஒருவருமாக 10 பேரும், வன்னியம்பாடி கிராமத்தில் வீடுகளுக்குத் தீ வைப்புச் சம்பவத்தில் 3 பேருமாக 13 பேர் மாண்டனர். அந்தக் கிளர்ச்சியில் மொத்தம் 25க்கு மேற்பட் டோர் உயிர்த்தியாகம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தக் குடும்பங்களுக்கெல்லாம் தி.மு.க. ஆட்சியில் குடும்ப நிதியும்; மாதாந்திர ஓய்வூதியமும் முறைப்படி வழங்கப்பட் டதை ஏற்கனவே வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போய், கழகத்தினர் ஊர் செல்ல முடியாமல் திண்டிவனம், விழுப்புரம் சாலையில் பல்லாயிரக்கணக்கில் பல மணி நேரம் காத்திருந்த நிலையில் 17ந்தேதி இரவு 9.30 மணி அளவில் காவல்துறை உயர்

அதிகாரி ஸ்ரீபால், ஐ.பி.எஸ்., அவர்களோடு தொடர்பு கொண்டு, விழுப்புரம்-திண்டிவனம் சாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஊர் திரும்ப முடியாமல் நிறுத்தப்பட்டிருந்ததையும், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணவின்றி சாலைகளில் தவித்துக் கொண்டிருப் பதையும் எடுத்துக் கூறி, காவல்துறையினரை உடனடியாக அந்த இடத்திற்கு அனுப்பி அமைதியை நிலைநாட்டுகிறீர் களா அல்லது நானே அந்த இடத்திற்குச் செல்லட்டுமா என்று கேட்டேன். அன்று நள்ளிரவில் என் பயண ஏற்பாடும் தொடங்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகுதான் காவல் துறையினர் எங்களைத் தடுத்து நிறுத்திவிட்டு அங்கே சென்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி கழகத்தினர் ஊர் திரும்புவதற்கான வழிவகையினைக் கண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அ.தி.மு.க. அரசு, முன்கூட்டியே அழைத்துப் பேசியிருந்தால் அந்தப் போராட் டமே நடைபெற்றிருக்காது. அப்போது நடைபெற்ற போராட்டத்தில் கைது செய்யப்பட்ட வன்னியர் சங்கத்தினர்



நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் முரசொலி மாறன், கழகத் தேர்தல் அறிக்கையை தலைவர் கலைஞர் அவர்களிடம் அளிக்கிறார்.

மீதான வழக்குகளைத்தான் 1989-இல் கழக ஆட்சி யில் திரும்பப் பெற்றோம்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் பதவியில் இருக்கும் போது இறந்து விட்டால் அவரது குடும்பத்தினருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்றும், அதுவும் கழக அரசு 1989-இல் பதவியேற்ற நாளிலிருந்தே நடைமுறைப்படுத் தப்படும் என்றும் 2-11-1989 அன்று அறிவித்தேன். அதைத் தொடர்ந்து அதே நாளில் நாடாளுமன்ற பொதுத்தேர்தலை யொட்டி கழகத்தின் தேர்தல் அறிக்கையை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டேன். தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருந்த முக்கிய பகுதிகளையும் இதிலே எடுத்துக் கூறியிருந்தோம். தி.மு.க., தேசிய முன்னணியில் அகில இந்திய அளவில் இடம் பெற்றுள்ளது என் றால் அதற்குக் காரணம் நமது அடிப்படைக் கொள்கையான கூட்டாட்சிக் கொள் கையை அது ஒப்புக் கொண்டிருக்கிறது என்றும்; அத்தகைய ஓர் அகில இந்திய அமைப்பின் மூலமே அந்தக் கொள்கையை நாடு தழுவிய அளவில் நிறைவேற்ற முடியும் என்றும் கழகத் தேர்தல் அறிக்கையின் துவக்கத்திலேயே குறிப்பிட் டிருந்தோம்.

தேர்தல் களத்தில் தேர்தல் நேரத்தில் இந்திரா காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட அந்த நேரத்திலும், 3-11-1989 அன்று சென்னையில் நடைபெற்ற சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவராக அப்போது விளங்கிய திரு. மூப்பனார் அவர்களின் இல்லத் திருமண நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினேன். அரசியல் வேறுபாடுகளைக் கடந்து இதுபோன்ற சமூக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிற பண்பாடு; பல மாநிலங்களில் இருந்து வருகிறது. எனினும் நமது தமிழகம் மட்டும், அதில் விதிவிலக் காக இருப்பது, இன்றளவும் நீடிப்பது கவலை யளிக்கக் கூடிய ஒன்றாகும்.

10-11-89 அன்று பஞ்சாப் மாநிலத்தில் பாட்டியாலா நகரில் உள்ள ஒரு கல்லூரி விடுதியில் அதிகாலை நேரத்தில்

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலால் 19 மாணவர்கள் உயிரிழந்தனர்.

பிரதமர் ராஜீவ்காந்தி சென்னை, கோவை, மதுரை, திருச்சி உட்பட முக்கிய நகரங்களில் தி.மு.க. அணிக்கு எதிரான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போதுதான் இலங்கைப் பிரச்சினையில் தீர்வு காண முதல்வர் கருணாநிதி ஒத்துழைத்ததாகக் கூறி நன்றி தெரிவித்துப் பேசியதுமாகும்.

என்னைப் பொறுத்தவரையில் தேர்தல் சுற்றுப்பயணத்தை நவம்பரில் முதல் வாரத்தில் தொடங்கி மூன்று வாரங்கள் தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்தேன். இடையில் நவம்பர் 11ந்தேதியன்று கழகத்தின் வீரவேங்கை, சுயமரியாதைச் சுடர், தென் ஆர்க்காடு மாவட்டத் தளகர்த்தர், அருமை நண்பர் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மறைந்து விட்டார் என்ற செய்தி கரூரில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த எனக்குக் கிடைத்தது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் தென் ஆர்க்காடு சுற்றுப் பயணத்திலே என்னுடன் கலந்து கொண்டு எனக்கு விடை கொடுத்து தஞ்சை மாவட்டத்திற்கு அனுப்பி வைத்த அவரது திடீர் மறைவு என்னைப் பெரிதும் நிலைகுலையச் செய்தது. உடனடியாகக் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரை எம்.ஆர்.கே. அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ளக் கேட்டுக் கொண்டு என் தேர்தல் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தேன். எம்.ஆர்.கே. அவர்களின் மறைவிற்கு அடுத்த வாரமே வட ஆர்க்காடு மாவட்டக் கழகத்தின் செயலாளராக அரும் பணியாற்றிய- அமைதியின் உருவமும் அரிமா நெஞ்சமும் படைத்த பாபு ஜனார்த்தனம் அவர்களையும் இழக்க நேரிட்டது!


தொடர் சுற்றுப் பயணத்திற்கிடையே நவம்பர் 14-ந் தேதி பண்டித நேரு அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை யொட்டி சென்னைக்குத் திரும்பினேன். அரசு சார்பில் எடுக்கப்பட்ட இந்த விழா வள்ளுவர் கோட்டத்தில் ஆளுநர் அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்றது. அந்நாள்

தலைமைச் செயலாளரும் இந்நாள் நான் இதை எழுதும் போது ஒரிசா ஆளுநராக இருப்பவருமான எம்.எம். ராஜேந் திரன் வரவேற்புரையாற்றினார். மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் சி.சுப்ரமணியம், பெரியவர் செங்கல்வராயன், அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், ஆ.ஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். விழா முடிவில் நான் எழுதிய சங்கத் தமிழ் நாட்டிய நாடகம் நடை பெற்றது.

நான் ஏற்கனவே எழுதியிருந்தவாறு; கழகம் இந்த முறை ஆட்சிப் பொறுப்பேற்றதும், எம்.ஜி.ஆர். உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவர் பலருக்கு நிழலாக இருந்தார் என்பதை நினைவூட்டும் வண்ணம் குடை போன்று வடி வமைத்து உருவாக்கத் திட்டமிட்டு; அவ்வாறே அந்த இடம் எழிலுற அமைக்கப்பட்டு, அதற்கான திறப்பு விழா 15-11-1989 அன்று நடைபெறுமென அறிவிக்கப்பட் டிருந்தது. தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பே இந்தத் தேதி அறிவிக்கப் பட்டிருந்த போதிலும், அ.தி.மு.க. வழக்கறிஞர் ஒருவர் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு எம்.ஜி.ஆர். நினைவிடத் தைத் திறக்கக் கூடாதென்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கே.எஸ். பக்தவத்சலம் அவர்கள் எம்.ஜி.ஆர். நினைவிடத் தைத் திறக்க தடை கிடையாதென்று, தீர்ப்பு கூறிவிட்டார்.

அதனடிப்படையில் 15-11-89 அன்று 33 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நினைவிடத்தின் திறப்புவிழா நடைபெற்றது. எனக்கும் எம்.ஜி.ஆருக்கும் இருந்த 40 ஆண்டு கால நட்பின் சின்னம்தான் இந்த நினை விடம் என்று அந்த விழாவில் பேசும்போது நான் குறிப்பிட் டேன். மேலும் அந்த விழாவிலே நான் பேசும்போது காந்தியடிகளுடைய கொள்கைகளை அண்ணா அவர்கள் விமர்சித்தவர் என்றாலும், காந்தியடிகளிடம் கொண்ட அன்பையோ மதிப்பையோ என்றைக்கும் அவர் குறைத்துக் கொண்டவரல்ல; அண்ணா அவர்கள் ஆட்சியில் இல்லாத நேரத்தில் வேலூரில் காந்தியடிகளின் சிலையைத் திறந்து வைக்க நகர்மன்றச் சார்பில் அழைத்த போது, அந்தச்

சிலையைத் திறக்கக் கூடாது என்று ஒரு சாரார் எதிர்ப்புத் தெரிவித்ததை மீறி அண்ணா, காந்தியடிகளின் சிலையைத் திறந்து வைத்த போது, கள்ளமார்க்கெட்காரர்கள், கொள்ளை இலாபக்காரர்கள் எல்லாம், காந்தியின் சிலையைத் திறந்து வைக்கும்போது இந்த அண்ணாதுரை என்ன பாவம் செய்தான் என்று கேட்டதையும், அதே போல தந்தை பெரியார் காந்தியடிகளுக்கும் அவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சுயமரியாதை இயக்கம் கண்டு, நீதிக்கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று, திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்து, காந்தியடிகளைக் கடுமையாக விமர்சித்தபோதிலும், காந்தியடிகள் கொல்லப் பட்டவுடன் இந்தத் தேசத்திற்கு "காந்தி நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்று கூறியதையும் நினைவூட்டினேன். மூதறிஞர் ராஜாஜி மறைந்த போது தள்ளாத வயதிலே தந்தை பெரியார் கண்ணீர் விட்டு அழுததை எடுத்துக் கூறினேன். எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த நேரத்தில் பேரவைக்கு அருகிருந்த ஒரு மண்டபத்திலே அவரோடு நான் பேசிக் கொண்டிருந்தபோது, நான் அவரை "சி.எம்." என்று குறிப் பிட்ட நேரத்தில் அவர் என் வாயைப்பொத்தி, உங்களுக்கு நான் என்றைக்கும் எம்.ஜி.ஆர். தான், அப்படித்தான் நீங்கள் அழைக்க வேண்டுமென்று கூறியதையும் சுட்டிக்காட்



மூப்பனார் இல்லத் திருமண விழாவில் முதல்வர் கலைஞருடன் மூப்பனார்.

டினேன். அவர் உடல்நலம் கெட்டிருந்த நேரத்தில் நான் தொடர்ந்து முரசொலியில் என் இனிய நண்பரே என்றழைத்து "உங்களுக்காகப் பிரார்த்தனை செய்கிறேன்" என்று எழுதிய கடிதங்களையெல்லாம் அந்த நிகழ்ச்சியில் நினைவு படுத்திப் பேசினேன்.

எம்.ஜி.ஆர். நினைவிடத்தைத் திறந்து வைக்க அ.தி.மு.க. சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதைக் கண்டித்து அந்த விழாவிலே பி.எச்.பாண்டியன் பேசும்போது, "அரசியலில் என்னதான் நல்லது செய்தாலும் அதைக் கொச்சைப்படுத்து கிற நிலை தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ளது வருந்தத் தக்கது என்றும், ஒரே ஒருவர் மட்டும் இந்த விழாவை எதிர்க்கிறார், அவருடைய பெயரைச் சொல்லக் கூட நான் விரும்பவில்லை, நான் சபாநாயகராக இருந்தவன் என்ற முறையில் சில உண்மைகள் எனக்குத் தெரியும், புரட்சித் தலை வரைப் பதவியிலிருந்து இறக்க மூன்று முறை முயற்சித்தார், அவரே இப்போது இந்த ஆட்சியைக் கலைக்க முயற்சிக் கிறார், இப்படி ஒரு பிழைப்பு தேவையா?" என்றும் பேசியது அன்றைக்கு எல்லா ஏடுகளிலும் இடம் பெற்றது.

அன்று மாலையில் தமிழக அரசு சார்பில் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்றது. சிறந்த தமிழ்ப் படங்களுக்கு தமிழக அரசு சார்பில் விருதுகள் வழங்கும் திட்டம் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டு இடையிலே சில ஆண்டுகள் நடைபெறா மல் நின்றிருந்தது, மீண்டும் தொடரும் என்று 89-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நான் தெரிவித்ததற் கிணங்க 1988-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படங் களுக்கான விருதுகள் வழங்கும் விழாதான் 15-11-1989 அன்று நடைபெற்றது. நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்கள் தலைமை யிலே அமைக்கப்பட்ட குழு அந்தத் திரைப்படங்களை யெல்லாம் பார்வையிட்டு விருதுக்குரியவர்களைத் தேர்ந் தெடுத்து தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தது. அந்தப் பரிந்துரைகளை அப்படியே ஏற்று அதற்கான விழா

வள்ளுவர் கோட்டத்தின் முகப்பிலே அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் நடைபெற்றது.

குறிப்பாக நான் அந்த ஆண்டுதான் அறிவித்திருந்த எம்.ஜி.ஆர். விருதினை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும், சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்களும் பெற்றனர். ராஜா சாண்டோ விருது இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு) அவர்களுக்கும், கலைவாணர் விருது வி.கே. ராம சாமி, மனோரமா ஆகியோருக்கும் வழங்கப்பட்டது. சிறந்த நடிகர் விருது புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அவர்களுக்கும், சிறந்த நடிகை விருது சரிதாவிற்கும், சிறப்புப் பரிசுக்கு உரிய சிறந்த நடிகர் விருது கார்த்திக்கிற்கும், சிறப்புப் பரிசுக்குரிய நடிகை விருது கலையரசி ராதிகாவிற்கும் வழங்கப்பட்டது. விழாவில் இசைஞானி இளைய ராஜா, வி.கே. ராமசாமி, மனோரமா, விஜயகாந்த், ரஜினிகாந்த் ஆகியோர் உரையாற்றினர். விழா நிகழ்ச்சிகளையெல்லாம் கலைஞானி கமல ஹாசன் தொகுத்து வழங்கினார்.

அந்த விழாவிலே உரையாற்றிய ரஜினிகாந்த், "நான் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறேன். ஆனால் இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டபோது மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. என்ன காரணம் என்று யோசித்தபோது, நான் மதிக்கின்ற மாமனிதர் எம்.ஜி.ஆர். பெயரால் அமைந்த விருது, நான் நேசிக்கிற மிகப் பெரிய மனிதரான முதல்வர் கலைஞர் அவர்களுடைய கையால் பெறுகிறேன். இதற்கெல்லாம் முதல்வர் கலைஞர் அவர்கள் என் மேல் வைத்திருக்கின்ற அன்பு, பாசம் இவைதான் காரணம் என்று கருதுகிறேன். வரப் போகிற



நேரு நூற்றாண்டு விழாவில் முதல்வர் கலைஞருடன் (இடமிருந்து வலம்) தலைமைச் செயலர் எம். எம். ராஜேந்திரன், ஆளுநர் அலெக்சாண்டர், ஆளுநரின் துணைவியார் மற்றும் டி.ஆர்.பாலு, எம்.பி., அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி.

தேர்தலிலே கலைஞர் அவர்களுடைய கட்சி வெற்றி பெற வாழ்த் துகிறேன்" என்று குறிப்பிட்டார்.

நடிகர் திலகம் சிவாஜி பேசும் போது, "எந்தவொரு அரசியல் தலைவரும் தாங்கள் பதவியிலே இருக்கும் பொழுது தங்களோடு எதிர்த்து நின்ற இன்னொரு அரசியல் வாதியின் பெயரிலே பரிசு கொடுத்ததில்லை என்பதுதான் சரித்திரம். ஆனால் அதற்கு மாறாக இன்று கலைஞர் செய்திருக்கிறார் என்பதும் ஒரு சரித்திரம். இந்தச் சரித்திரம் நீண்டுகொண்டே போகட்டும். கலைஞர் அவர்களே, நீங்கள் தமிழகக் கலைஞர்களைப் பாராட்டிப் பரிசளித்திருக்கிறீர் கள். அவர்களிடமிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள் என்பதை கலையுலகம் நன்றாக அறியும். உங்கள் ஆசையை நிறைவேற்றும், நீங்கள் வாழ்க வாழ்க என்று வாழ்த்தும். அருமைக் கலைஞர் அவர்களே, உங்களுடைய ஆட்சி ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி நீங்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலையுலகத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்" என்றார்.

நான் அந்த விழாவில் விருது பெற்றவர்கள் அனைவரை யும் பாராட்டி, வாழ்த்தியதோடு, குறைந்த செலவில் தரமான தமிழ்ப் படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக, 12 பிரதிகளுக்குக் குறையாமலும் 30 பிரதிகளுக்கு மேற்படாமலும் தயாரிக்கப்படும் தரமான தமிழ்ப் படங்களுக்கு 2 லட்சம் ரூபாய் முதல் 3 லட்சம் ரூபாய் வரை அரசு மானியமாக வழங்க முடிவெடுத்திருக்கின்றது என்ற அறிவிப்பினைச் செய்தேன். அது 1996-க்குப் பிறகு மீண்டும் தி.மு.கழக ஆட்சி ஏற்பட்ட போது 5 லட்சம் ரூபாய் என்று உயர்த்தப் பட்டது.

தமிழகத்தின் தலைநகரத்தில் இந்த மூன்று விழாக்களை யும் முடித்துக் கொண்டு மீண்டும் என்னுடைய தேர்தல் சுற்றுப்பயணத்தை 16-ந் தேதி முதல் தொடங்கி 22-ந் தேதி வரை விடிய விடிய நடத்தினேன். அப்பொழுதெல்லாம் தேர்தல் பிரச்சாரத்துக்குக் கால நிர்ணயம் கிடையாது. 22-ந் தேதிதான் 221 நாடாளுமன்றத் தொகுதிகளில் முதற்கட்ட

வாக்குப் பதிவு நடைபெற்றது. ராஜீவ் காந்தி போட்டியிட்ட அமேதி தொகுதியில் உச்சகட்ட கலவரம் ஏற்பட்டு, ஜனதா தள வேட்பாளர் ராஜ்மோகன் காந்தி பயங்கரமாகத் தாக்கப்பட்டார். அங்கே தேர்தல் பணியிலே ஈடுபட் டிருந்த உத்தரப்பிரதேச ஜனதாதள தலைவர் சஞ்சய் சிங் காங்கிரசா ரால் சுடப்பட்டார். அதைப்போலவே ஆந்திராவிலும் தெலுங்கு தேசத் தொண்டர் ஒருவரை காங்கிரஸ் வேட் பாளர் சுட்டுக் கொன்றார். தேர்தல் அதிகாரியே தேர்தல் கமிஷன் விதிமுறைகள் அமேதி தொகுதியில் மீறப்பட்டதாக அறிவித்தார்.

வாக்கு எண்ணிக்கை முடிவில் மொத்தம் தேர்தல் நடைபெற்ற 525 நாடாளுமன்றத் தொகுதிகளில், தேசிய முன்னணி மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் சார்பில் ஜனதா தளம் 141, பாரதீய ஜனதா சார்பில் 88, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 32, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 12, தெலுங்கு தேசம் 2, காங்கிரஸ் எஸ்.1, என 276 இடங்களிலும், இந்திரா காங்கிரஸ் மற்றும் தோழமைக் கட்சிகள் சார்பில் இந்திரா காங்கிரஸ் 192, அ.தி.மு.க. 11 மற்றும் தேசிய மாநாடு கட்சி 3, என 206 இடங்களிலும், இதரக் கட்சிகள், சுயேச்சை கள் என 43 இடங்களிலும் வெற்றி பெற்றன. தமிழகத்திலே ஒரு இடத்தைத் தவிர எஞ்சிய அனைத்து இடங்களிலும் இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணியே வெற்றி பெற்றது. தமிழகத்தைப் போலவே ஆந்திராவிலும் ஆளுங்கட்சியான தெலுங்கு தேசத்தை இந்திரா காங்கிரஸ் பெருமளவில் தோற் கடித்தது. ஜனதா தளத்திற்கு ஆந்திராவில் 2 இடங்களும், கர்நாடகத்தில் ஒரு இடமும் மட்டுமே கிடைத்தது. மொத்தத் தில் வட இந்தியாவில் காங்கிரஸ் பலத்த தோல்வியைத் தழுவி, தென்னிந்தியாவில் நல்ல வெற்றியை ஈட்டியது. பெரும்பான்மையான மத்திய அமைச்சர்கள்- இந்திரா காங் கிரசைச் சேர்ந்தவர்கள்- பூடாசிங் உட்பட பலர் தோல்வி யடைந்தனர். வி.பி.சிங் பதேபூர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

இரண்டு அணிகளுக்குமே பெரும்பான்மை கிடைக்காத நிலை. எந்தக் கட்சி அமைச்சரவை அமைப்பது என்பதில்

குழப்பம் ஏற்பட்டது. 28-11-89 அன்று நடைபெற்ற தேசிய முன்னணி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள டெல்லிக்குச் சென்றேன்.

டெல்லியில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள் தமிழகம் போன்ற தென் மாவட்டங்களின் தோல்விக்குக் காரணம் கேட்டபோது, காங்கிரசால்தான் மத்தியில் நிலையான ஆட்சியை அமைக்க முடியும் என்ற முழு நம்பிக்கை தென் மாநில மக்களுக்கு இருந்திருக்கிறது என்று கூறினேன்.

தேர்தலில் வெற்றி தோல்விகளை, ஒரு கட்சியின் கொள்கை கோட்பாடு, அதன் தொலைநோக்குத் திட்டங்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ் நாட்டு மக்கள் வாக்களிப்பது என்றில்லாமல்- தேர்தல் நேரத்து சூடான பிரச்சினைகளில் மட்டுமே தங்கள் மனதைப் பறிகொடுத்து வாக்களிப்பதை வாடிக்கையாக்கிக் கொண்டுள்ளதை தமிழக அரசியலை நெருங்கி உணர்ந்தவர்கள் நினைவிற் கொண்டே யுள்ளனர்.

எம்.ஜி.ஆர். நினைவிடத்தை முதல்வர் கலைஞர் திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் கண்ணப்பன், பொன்.முத்துராமலிங்கம், துரைமுருகன் மற்றும் பி.எச்.பாண்டியன், டி.ஆர்.பாலு, எம்.பி., ஆலடி அருணா, கணேசன் ஆகியோர்.

நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் அகில இந்திய அளவில் தேசிய முன்னணி தோன்றினாலும் கூட மத்தியில் காங்கிரசல்லாத ஓர் ஆட்சி இரண்டாவது முறையும் வருவதை குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள், சிறப்பாக தென்னகத்து மக்கள் விரும்பவில்லை. 1977-ல் பெரும் வெற்றி பெற்று மொரார்ஜி தலைமையில் மத்தியில் அமைந்த காங்கிரசல்லாத அரசு மக்களின் கேலிக்குள்ளாகிற திட்டங் களை அறிவித்தும், புதுவையைத் தமிழகத்துடன் இணைப் பது போன்ற மக்கள் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் அறிவிப்பு களைச் செய்தும், ஆட்சியின் முக்கிய தலைவர்களே ஒற்றுமையின்றிச் செயல்பட்டும் சிதறிய நெல்லிக்காய் மூட்டை ஆயினர் என்பதைக் கண்டு அலுத்துவிட்ட காரணத் தால், தமிழ்நாட்டு மக்கள், மத்தியில் மீண்டும் காங்கிரசே வரட்டுமென்று 1989-லும் முடிவு செய்துவிட்டனர். அந்தக் காற்றுத்தான் தென்னக மாநிலங்களில் வீசியது.



திரைப்படக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில், முதல்வர் கலைஞர் அவர்களுடன் கைகுலுக்கிறார் கமல், அருகில் ரஜினி.

ஆனால் வட பகுதி மாநிலங்களில் வி.பி. சிங் போன்ற தலைவர்கள், தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட பகுதிகளில் பெற்றிருந்த செல்வாக்கு காரணமாக; அந்தத் தனித்தனி செல்வாக்குகள் ஒன்றாக இணைந்து தேசிய முன்னணி ஓரளவு அதிக இடங்களில் வெற்றிபெற முடிந்தது என்பதே உண்மையாகும்.

16 பிணக்கு தீர்ந்து பிரதமரானார் வி. பி. சிங்

ஆட்சி அமைப்பதற்குரிய அளவுக்குப் பெரும்பான்மை யான இடங்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறாத காரணத் தாலும் கூட்டணி அரசு அமைக்கிற விதமாக ஒத்துழைக்க வேறு கட்சிகள் காங்கிரசுடன் நெருங்கி வராமையினாலும் ராஜீவ் காந்தி அவர்கள், தனது கட்சியின் தோல்வியை ஒப்புக் கொண்டு, இந்தியப் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு, அவரது கட்சியினரால் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேசிய முன்னணித் தலைவர்கள் கூட்டத்தில் மத்தியில் தேசிய முன்னணி அமைச்சரவை அமைப்பதென்றும், குடியரசுத் தலைவரைச் சந்தித்து அமைச்சரவை அமைக்கத் தங்களை அழைக்குமாறு கேட்டுக் கொள்வதென்றும் முடிவெடுக்கப் பட்டது.

அரசு அமைத்திட தேசிய முன்னணிக்கு ஆதரவு தெரி வித்து இடதுசாரிக் கட்சிகள் குடியரசுத் தலைவரிடம் கடிதம் கொடுத்தன. அதைத் தொடர்ந்து பாரதிய ஜனதா கட்சியும் ஆதரவு தருவதாக முடிவெடுத்து அத்வானி அவர்கள் கையெழுத்திட்ட கடிதத்தை தேசிய முன்னணிக்கு அனுப்பி வைத்தது.

தேசிய முன்னணித் தலைவர்களையும் ஆதரவு தருவதாக உறுதியளித்த தலைவர்களையும் நானும், என்.டி. இராமராவ் அவர்களும், முரசொலி மாறனும், உபேந்திராவும் சென்று தனித்தனியே சந்தித்துப் பேசி, பிரதமர் பொறுப்புக்கு

யாரைத் தேர்வு செய்யலாம் என்பது பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். 30-11-89 அன்று நாங்கள் மேற்கு வங்க முதல் அமைச்சர் ஜோதிபாசு அவர்களையும், அடுத்து முன்னாள் குடியரசுத் தலைவர் ஜெயில் சிங் அவர்களையும் சந்தித்து உரையாடினோம். மத்தியில் தேசிய முன்னணி அரசு அமைந்திட முயற்சி மேற்கொண்டவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன் என்பதை 1-12-89 தேதியிட்ட "தினமணி" ஏடு முதல் பக்கச் செய்தியாக; "பிரதமர் தேர்வு-கருணாநிதி சமரச முயற்சி - இந்தியப் பிரதமர் பதவிக்கு யார் தேர்வு செய்யப்பட வேண்டுமென்பது தொடர்பாக டெல்லியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி சமரச முயற்சி களை மேற்கொண்டுள்ளார். இதன்தொடர்பாக சந்திர சேகர், வி.பி. சிங், தேவிலால் ஆகியோருடன் கருணாநிதி பேச்சுவார்த்தை நடத்தினார்" என்று குறிப்பிட்டிருந்தது.

அந்த 1-12-1989 அன்றையதினம் மாலையில் டெல்லி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் மது தண்டவதே அவர்கள் தலைமையில் தேசிய முன்னணியின் கூட்டம் நடைபெற்றது. நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் தேசிய முன்னணியின் தலைவர்களும் இந்தியாவுக்கு யார் பிரதமர் என்பதைத் தீர்மானிப்பதற்காகக் கூடியிருந்தனர்.

பிரதமர் யார் என்பதில் சந்திரசேகர் போன்றவர்களுக்கும் தேவிலால் போன்றவர்களுக்குமிடையே சிறு பிணக்கு இருந்ததைத் தீர்த்து வைக்க நானும் ராமராவும் எடுத்த முயற்சிகளுக்கு அந்த நாளில்தான் நல்ல முடிவை எதிர்பார்த் தோம்.

அந்த நாள் இந்திய வரலாற்றில் மட்டுமல்ல; உலக வரலாற் றில் கூட ஒரு பெரும் பிணக்கைத் தீர்த்த நாள்தான்! போப் இரண்டாம் ஜான் பாலும், ரஷ்ய அதிபர் கோர்பசேவும் ரோம் நகரில் சந்தித்துப் பேசி; வாடிகனுக்கும், ரஷ்யாவுக்குமிடையே எழுபது ஆண்டுகளாக இருந்த பிணக்கு தீர்க்கப்பட்டதும் இந்த நாளில்தான்!

தேசிய முன்னணியில் இருந்த பிணக்குகளை நன்குணர்ந்த வி.பி. சிங் அவர்கள் அந்தக் கூட்டத்தில் எழுந்து தலைமைப் பதவிக்கு- அதாவது பிரதமர் பதவிக்கு தேவிலால் அவர்களின் பெயரை முன் மொழிந்தார். அதை மூத்த தலைவர்களில் ஒருவரான சந்திரசேகர் வழி மொழிந்தார்.

வி.பி.சிங்தான் பிரதமராகத் தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்த்தோர்க்குப் பெரும் ஏமாற்றம் - அந்த ஏமாற்றம் சிறிது நேரம் கூட நீடிக்கவில்லை. காரணம்; உடனடியாக தேவிலால் அவர்கள் எழுந்து; "நான் இந்தக் குடும்பத்தில் மூத்த அண்ணனாக இருக்கவே விரும்புகிறேன். எனவே இந்தப் பொறுப்புக்கு வி.பி. சிங்கின் பெயரை முன் மொழி கிறேன்" என்றார். அதனை ஜனதாதளக் கட்சி பொதுச் செயலாளர் அஜித்சிங் வழி மொழிந்தார்.

வி.பி. சிங் அவர்களைப் பாராட்டி வாழ்த்திப் பேசும் கட்டம் வந்தது. அவரை வாழ்த்தி நான் மட்டும் பேசினால் போதுமென்று அனைவரும் வலியுறுத்தவே; நானும் அதனையேற்று-

"சிலர் எதிர்பார்த்தது போல சிக்கலோ பிணக்குகளோ ஏதுமின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வி.பி.சிங் அவர்களை வாழ்த்துகிறேன். தேசிய முன்னணியின் தொடக்க விழா சென்னையில்தான் நடைபெற்றது. தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன்; அது தேசிய முன்னணிக்குக் கிடைத்த வெற்றியெனக் கூறி மகிழ்ந்தோம். தேசிய முன்னணிக்கு தெற்கே ஆதரவில்லை எனச் சிலர் கூறுகிறார்கள். நானும், ராமராவும், ஹெக்டேயும், நாயனாரும் தென்னகப் பிரதிநிதிகளாகத்தான் இங்கேயிருந்து வாழ்த்துகிறோம். நாட்டு நலனுக்காக நாம் ஒன்று சேர்ந்தோம். தொடர்ந்து நாட்டுக்காகச் செயல்படுவோம்" என்று சுருக்கமாகவே வாழ்த்தினேன்.


பிரதமர் பொறுப்புக்கான நாடாளுமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் செய்தியாளர்களுக்கு அளித்த முதல் பேட்டியிலேயே தேசிய முன்னணி தொடக்க

விழாவை சென்னையில் நடத்தி; அந்த முன்னணியின் ஆட்சி அமைகிற அளவுக்குப் பாடுபட்ட கருணாநிதி, என்.டி. ராமராவ், மற்ற தலைவர்கள் தனது நன்றிக்குரியவர்கள் என்று வி.பி. சிங் கூறினார்.

குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களை ஜனாதிபதி மாளிகையில் நாங்களனைவரும் சந்தித்து; மறு நாள் 2-12-89 அன்று வி.பி. சிங் பதவியேற்பது என்று உறுதி செய்தோம்.

அவ்வாறே அன்றையதினம் வி.பி. சிங் சுதந்திர இந்தியா வின் ஏழாவது பிரதமராகப் பதவியேற்றார். துணைப் பிரதம ராக தேவிலால் பதவியேற்றார்.

பிரதமர் பதவியேற்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை அவர் காங்கிரசிலே இருந்தவர். பெரிய இடங்களில் அமர்ந்திருப்போர் பதவியைப் பயன்படுத்தி ஊழல் செய் வதையும், லஞ்சப்பணத்தை ரகசிய கணக்குகளில் குவிப்பதை யும் எதிர்த்து காங்கிரசிலிருந்து வெளியேறியவர் வி.பி. சிங். எனவே, அக்கட்சியிலிருந்து வெளியேறிய நாளில் இருந்தே ஊழலுக்கும் லஞ்சத்துக்கும் முடிவு கட்டுவதே என்



தேசிய முன்னணித் தலைவர்களான வி.பி.சிங், என்.டி.ராமராவ், முதல்வர் கலைஞர், அசாம் முதல்வர் மொகந்தா.

லட்சியம்; அத்தகைய லட்சியத்துடன் மக்களுக்கு நல்லாட்சி வழங்குவேன் என்று அவர் சூளுரைத்தார்.

1950களில் ஆச்சார்ய வினோபா பாவே பூதான இயக்கம் நடத்திய போது வி.பி. சிங் தனது நிலங்களை வினோபாவிடம் தானமாகத் தந்தார். வினோபா மனம் நெகிழ்ந்து உங்களுக் கென்று கொஞ்சம் நிலத்தை வைத்துக் கொண்டு பாக்கியைத் தந்தால் போதும் என்று ஒரு பகுதி நிலத்தை வி.பி. சிங்கிடமே திருப்பித் தந்தார். வினோபா திருப்பித் தந்த நிலத்தையும் வி.பி. சிங் தனது சொந்தத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக கல்வி நிறுவனம் ஒன்றிற்கு எழுதி வைத்து விட்டார். உத்தரப் பிரதேசத்து மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகி, படிப்படி யாக அரசியலில் அவர் உயர்ந்து கொண்டே போய் உத்திரப் பிரதேச முதல்வரானார். அப்போது உத்தரப் பிரதேசத்தில் கொள்ளைக்காரர்களின் வன்முறை தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. கொள்ளைக் கூட்டத்தை அடியோடு ஒழிப்பேன் என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார் வி.பி. சிங். வாக்குறுதியை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. அவரது குடும்பமே கொள்ளையர்களின் வன்முறைக்கு இலக் கானது. வி.பி. சிங்கின் சகோதரர் கொள்ளைக்காரர்களால் கொல்லப்பட்டார். கொள்ளையர்களை என்னால் அடக்க முடியவில்லை, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இயலாத நிலையில் முதல்வர் பதவியிலிருந்து விலகுகிறேன் என்று அறிவித்து பதவியைத் துறந்தார். ஆனால் அவர் இந்திய மக்கள் அனைவரது உள்ளத்திலும் இடம்பெற்று 2-12-1989 அன்று பிரதமராகப் பொறுப்பேற்றார்.

4-12-1989 அன்று சென்னையில் கழகத்தின் தலைமைச் செயற்குழு கூடியது. செயற்குழு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே டெல்லியிலிருந்து அவசரச் செய்தி ஒன்று வந்தது. அது நாங்கள் மகிழத்தக்க செய்தியாக இருந்தது. அதாவது கழக அரசு 1989-இல் அமைந்த நாளிலிருந்து தமிழகத்தில் உணவு நிலை மோசமாக இருந்ததை எடுத்துக் கூறி மத்திய தொகுப்பிலிருந்து தரப்படும் அரிசியின் அள வைக் கூட்டித் தரவேண்டுமென்று இந்திரா காங்கிரஸ்

அரசிடம் பலமுறை கோரிக்கை வைத்தும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. மாதந்தோறும் வழங்கப்படும் 40 ஆயிரம் டன் அரிசியின் அளவை அதிகப்படுத்தித் தர வேண்டு மென்று சட்டப்பேரவை உறுப்பினர் பி.எச். பாண்டியன் உச்சநீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார். அதன்பிறகே வெறும் 10 ஆயிரம் டன் அரிசி மட்டும் கூடுதலாக அதுவும் ஒரேயொரு மாதத்திற்குத்தான் வழங்க முடியும் என்று காங்கிரஸ் அரசு தெரிவித்து விட்டது. இந்தத் தகவலையும், தமிழகத்தின் அரிசிப் பற்றாக்குறையையும் 3-12-89 அன்று தமிழகம் வந்திருந்த புதிய துணைப் பிரதமர் தேவிலால் அவர்களை ராஜ்பவனில் நான் சந்தித்து விளக்கியதுடன், அந்த மாதத்திற்கு மத்திய அரசு வழங்கும் 40 ஆயிரம் டன் அரிசி நீங்கலாக மேலும் 50 ஆயிரம் டன் அரிசியை தமிழகத் திற்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந் தேன். அந்தக் கோரிக்கையை டெல்லி சென்றதும் உடனடி யாக நிறைவேற்றி தமிழகத்திற்கு 90 ஆயிரம் டன் அரிசி அந்த மாதத்தில் வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்து, அந்தத் தகவலைத்தான் செயற்குழு நடைபெற்றுக் கொண்டிருந்த போதே அவசரச் செய்தியாக அவர் தெரிவித்திருந்தார். துணைப் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட தேவிலால் அவர்கள் பிறப்பித்த முதல் ஆணையே தமிழகத் திற்குக் கூடுதலாக அரிசி வழங்குவதற்கான ஆணைதான்.

மத்திய அமைச்சரவையிலே தி.மு.கழகம் இடம் பெறுவது பற்றி முடிவெடுக்க எனக்கும் பொதுச் செயலாளருக்கும் செயற்குழு அதிகாரம் அளித்தது. செயற்குழு எங்களுக்கு அதிகாரம் அளித்த அன்றையதினம் மாலையிலேயே வி.பி. சிங் அவர்களிடமிருந்து எனக்கு தொலைபேசி வந்து விட்டது. உடனடியாக முரசொலி மாறனை டெல்லிக்கு அனுப்பி வைக்கச் சொன்னார். கழகம் தமிழகத்திலே வெற்றி பெறாத நிலையில் அதனை ஏற்றுக் கொள்ள முரசொலி மாறன் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் வி.பி. சிங் அவர்கள் தமிழகத்திற்கு பிரதிநிதித்துவம் அளித்தே தீர வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். அதன் காரணமாக 5-12-1989 அன்று டெல்லியில் பதவியேற்ற புதிய அமைச்சரவைப்



புதிய பிரதமராகப் பதவி ஏற்கும் வி.பி.சிங் அவர்களுக்கு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கிறார்.

பட்டியலில் முரசொலி மாறனும் இடம் பெற்றார். மற்றும் மது தண்டவதே, ஜார்ஜ் பெர்னாண்டஸ், அஜித் சிங், சரத் யாதவ், முப்தி மகமது சையத், அருண் நேரு, ஆரிப் முகமது கான், ராம்விலாஸ் பஸ்வான், நீலமணி ரவுத் திரே, ஐ. கே. குஜ்ரால், எம். எஸ். குருபாதசாமி, உபேந்திரா, உன்னி கிருஷ்ணன், தினேஷ் கோஸ்வாமி ஆகியோரும் அமைச்சரவை முதல் பட்டியலிலே இடம் பெற்றார்கள். இணை அமைச்சர்களாக மேனகா காந்தியும், மனுபாய்பட்டேல் கோட்டேடியாவும் இடம் பெற்றனர். பட்டியலில் காபினட் அமைச்சராக நாதுராம் மித்ராவும், இணை அமைச்சராக யுஸ்வந்த் சின்காவும் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் 5-12-89 அன்று பதவியேற்கவில்லை. அமைச்சரவையில் ஜனதா தளத்தைச் சேர்ந்த 13 பேரும், தி.மு.க., தெலுங்கு தேசம், அசாம் கண பரிஷத், காங்கிரஸ் (எஸ்) ஆகிய கட்சிகள் சார்பில் தலா ஒருவரும் இடம் பெற்றனர். நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற முரசொலிமாறன் பொறுப்பில் மத்திய பொதுப்பணித் துறை, அச்சகத் துறை, அரசினர் குடியிருப்புகள், தேசிய கட்டுமானப் பணி நிறுவனம், நில மேம்பாட்டுத் துறை, டெல்லி பெருநகர வளர்ச்சி ஆணையம், வீட்டு வசதி மற்றும் குடியிருப்பு போன்ற துறைகள் இடம் பெற்றன.

நாடாளுமன்றத் தேர்தலோடு இணைந்து ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், உத்தரப்பிரதேசம், கோவா, சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தலும் நடைபெற்றது தெரிந்ததே. ஆந்திரப் பிரதேசத்தில் என்.டி.ஆர். தலைமையிலான தெலுங்கு தேசம் நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே, சட்டமன்றத் தேர்தலிலும் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்து, இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை

யான இடங்களில் வெற்றி பெற்றது. சட்டமன்றத்திற்கு இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட என்டி.ராமராவ் ஒரு தொகுதியில் வெற்றி பெற்று, மற்றொரு தொகுதியில் தோற்றுவிட்டார். இந்திரா காங்கிரஸ் சட்டப் பேரவைக் கட்சித் தலைவராக திரு. சென்னாரெட்டி 1-12-89 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சி அமைத்தார். கர்நாடகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த ஜனதா கட்சி தோல்வியைச் சந்தித்து, இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மையான இடங்களிலே வெற்றி பெற்று, என்னுடைய நீண்டநாள் நண்பர் வீரேந்திர பட்டீல் தலைமையிலே ஆட்சி அமைந்தது. உத்தரப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்து, ஜனதா தளக் கூட்டணி வெற்றி பெற்ற போதிலும் யார் முதல்வர் என்பதில் கடும் போட்டி நிலவியது. முலாயம் சிங் யாதவ் அவர்களும், அஜித்சிங் அவர்களும் பிடிவாதமாக இருந்த நிலையில் மது தண்டவதே, முப்தி மகமது சையத், சிமன்பாய் படேல் ஆகியோர் முன்னிலையில் ரகசிய வாக்கெடுப்பு நடைபெற்று, முலாயம் சிங் யாதவ் சட்டப் பேரவை ஜனதா தளத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5-12-89 அன்று உத்தரப் பிரதேச முதல்வராகப் பதவியேற்றார்.

தமிழ்நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து திடீரென்று 30-12-89 அன்று விலகிக் கொண்டு அந்தப் பதவியிலே அந்தக் கட்சியின் துணைத் தலைவராக இருந்த திருநாவுக்கரசையோ, அவருக்கு அடுத்த இடத்தில் இருந்த கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனையோ நியமிக்காமல் எஸ்.ஆர். ராதாவைத் தேர்ந்தெடுத்திருப்பதாக ஜெயலலிதா அறிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து ஜெயலலிதா விலகிக் கொண்ட போதிலும் சட்டப்பேரவை உறுப்பினர் பதவியிலே தொடர்ந்து நீடித்தார்.

அகாலி தள (மான் பிரிவு) தலைவரும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிம்ரஞ்சித் சிங் மான் 2-12-89 அன்று விடுதலை செய்யப்பட்டார். அவர் மீது இந்திரா காந்தி கொலை சதி வழக்கு உட்பட எல்லா வழக்குகளும் திரும்பப் பெறப்பட்டதை அடுத்து, பாகல்பூர்

மத்திய சிறையிலிருந்து அவரும், வேறு நான்கு பேரும் விடுதலையானார்கள். 1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து சிறை வைக்கப்பட்டிருந்த மான் 2-12-89 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவர் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதாக அரசு வழக்கறிஞர் மனுதாக்கல் செய்தார். அதனையேற்றுக் கொண்டு நீதிபதி அவர்களை விடுவிப்பதாகத் தெரிவித்தார்.

அதைப் போலவே, தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு நிதம்பூர் ஓய்வு விடுதியில் காவலில் வைக்கப்பட்டிருந்த சிரோமணி குருத்வார பிரபந்தக் கமிட்டித் தலைவர் ஜி.எஸ். தோரா அவர்களும் 2-12-89 அன்று விடுவிக்கப்பட்டார். முன்னாள் பஞ்சாப் முதல்வரும், ஐக்கிய அகாலி தள (பாதல்) தலைவருமான பிரகாஷ் சிங் பாதல் அவர்களும் டேராடூன் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் 1-12-1989 அன்று அதிபர் திருமதி அகீனோவின் அரசைக் கவிழ்க்க ராணுவப் புரட்சி நடத்திட செய்த முயற்சியை அமெரிக்க ராணுவத்தின் உதவியுடன் அரசுப் படையினர் முறியடித்தனர். அகீனோவின் வேண்டுகோளுக்கிணங்க அரசுப் படைகளுக்கு உதவ அமெரிக்க ராணுவம் வந்தது. அந்த நாட்டின் தலைநகர் மணிலாவில் கலகப் படை யினருக்கும் அரசுப் படையினருக்கும் கடுமையான சண்டைகள் நடந்து, பின்னர் கலகப் படையினர் ஒடுக்கப்பட்டனர். அதிபர் மாளிகை மீதே கலகப் படையினர் விமானம் மூலம் குண்டுகளை வீசியபோதிலும் அகீனோ உயிர் தப்பினார். திருமதி அகீனோவிற்கு இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்தது. உடனடியாகக் கலகப் படையினர் ஒடுக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையிலே ஆங்காங்கு துப்பாக்கிச் சண்டை நீடித்தது. 1986-ஆம்



மத்திய அமைச்சராக முரசொலி மாறன் பதவியேற்கிறார்.

ஆண்டு சர்வாதிகாரி மார்க்கோஸ் செய்த தேர்தல் தில்லு முல்லுகளை எதிர்த்து பல லட்சம் மக்கள் வீதிகளில் ஆர்ப் பாட்டம் நடத்தியதன் விளைவாகத்தான் திருமதி அகீனோ ஆட்சிக்கு வந்தார். ஆனால் அகீனோவை அதிபர் பதவியி லிருந்து நீக்க வேண்டுமென்று மார்க்கோசின் கும்பல் கலகம் விளைவித்த காரணத்தால் அகீனோ; நாட்டில் நெருக்கடி நிலையை அமல் செய்தார். அவரைப் பொறுத்தவரையில் 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தக் கலவரம் ஆறாவது முயற்சியாகும். 1987-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஐந்தா வது அதிரடிப் புரட்சியை நடத்திய கர்னல் கிரிகாரியோ உசைன் அப்பொழுது பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட் டிருந்தார். 1989-ஆம் ஆண்டு ஏப்ரலில் அவர் சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார். அவர்தான் இந்த ஆறாவது புரட்சிக்கும் காரணம் என்று ஒரு தரப்பினரும், மார்க்கோ சிடம் தளபதியாகப் பதவி வகித்த ஜெனரல் பேபியன் வெர் என்பவர்தான் காரணம் என்று மற்றொரு தரப்பினரும் கூறினார்கள். ஒரு வார காலத்திற்கு இந்தப் புரட்சி தொடர்ந்த போதிலும் பின்னர் எதுவும் செய்ய முடியாமல் கலகப்படை யினர் அடங்கிவிட்டனர்.


பல்லாண்டு காலமாக கிழக்கு ஜெர்மனியையும், மேற்கு ஜெர்மனியையும் பிரித்து வந்த பெர்லின் சுவரை இடிக்கும் பணி 1989-ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது. கம்யூனிச நாடான கிழக்கு ஜெர்மனியிலிருந்து இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் மேற்கு ஜெர்மனிக்குச் சென்றனர்.

கிழக்கு ஜெர்மனியின் முன்னாள் அதிபரான எரிச் ஹொனேக்கர் டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் திடீரெனக் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவரது ஆட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கைது செய்யப் பட்டனர். அப்போது நடைபெற்ற ஆட்சிக் காலத்தில் பதவி களைத் துஷ்பிரயோகம் செய்து லஞ்ச ஊழலில் திளைத்த வர்கள் என்று கூறி, அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று பொதுமக்கள் உறுதியுடன் கிளர்ச்சி நடத்தியதையடுத்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பல ஆண்டுக் காலமாக கிழக்கு ஜெர்மனியில் ஆட்சி புரிந்து வந்த இவர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்தி வந்தது பலூன் போல வெடித்த பிறகு பொதுமக்கள் கிளர்ந்து எழுந்தனர். கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய குழுவும், பொலிட் பீரோவும் கூண்டோடு பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 26 பேர் கொண்ட தற்காலிகக் குழு ஒன்று இவர்களிடமிருந்து அதிகாரத்தை மேற்கொண்டது. இவர்கள் மீது நடக்கும் விசாரணையில் ஒத்துழைத்து ஆதாரங்களைக் கொடுத்து உதவுமாறு இந்த ஆட்சிக் குழு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆதாரங்களை அகற்றிச் சென்று அழித்துவிடாமல் கண்காணித்து வருமாறு எல்லா அரசாங்க அலுவலகங்களுக்கும் புதிய பிரதமர் ஹேன்ஸ் மேட்ரா ஆணை பிறப்பித்தார்.

இந்தக் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடை பெற்ற மற்றொரு நாடான செக்கோஸ்லோவியாவிலும் அந்த ஆட்சிக்கு மாணவர்களே முடிவு கண்டனர். 1939-ஆம் ஆண்டு நாஜிகளால் கொல்லப்பட்ட மாணவர்கள் நினை வாக செக்கோஸ்லோவிய மாணவர்கள் நடத்திய அமைதி ஊர்வலம் ஒன்றின் மீது அந்த நாட்டுப் போலீசார் மிருகத் தனமாகத் தாக்கியதையடுத்து மாணவர் சமூகம் கொதித் தெழுந்தது. மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இந்தக் கிளர்ச்சியே அந்த நாட்டில் நடந்த அமைதிப் புரட்சிக்குத் தொடக்கமாக அமைந்தது. கம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகளைக் கொண்ட கூட்டணி அரசு அங்கே உருவாவதற்கு வழி வகுத்துக் கொடுத்தது.

அதன் விளைவாக பிராகாவின் பழைய நகர் பகுதியில் இருந்த நாடகக் கலை அகாடெமி, மாணவர்களின் புரட்சிக்கான தலைமையிடமாக மாறியது. தொடங்கப்பட்ட 72 மணி நேரத்தில் இந்தக் கிளர்ச்சி மின்னல் வேகத்தில் மக்களிடம் பரவியது. அவர்கள் இதற்காகவே காத்திருந் தவர்கள் போல வீதியிலே இறங்கி விட்டனர். இடைநிலைப் பள்ளிச் சிறுவர்கள் கூட இந்தக் கிளர்ச்சியில் மும்முரமாக



பிலிப்பைன்ஸ் அதிபர் திருமதி அகீனோ

ஈடுபட்ட செயல் மற்றவர் களின் ஆதரவையும் பெற உதவியது. மாணவர்களுக்கு உணவு விடுதிகள் இலவச மாகவே உணவு வழங்கின. ஓய்வு பெற்ற முதியவர்கள் கூட தங்கள் வீடுகளில் தயாரித்த உணவுப் பொருட் களை வழங்கிட முன்வந்த னர். நாட்டின் பல பகுதி களுக்கும் தொலைபேசியில் தகவல் தந்ததன் விளை வாகப் போராட்டம் பல பகுதிகளுக்கும் காட்டுத் தீ போலப் பரவியது. மாணவர்களின் இந்தப் போராட்டத்தால் அந்த நாட்டில் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு அப்போது முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

17 ஈழப்போராளிகளுடன் சந்திப்பும்; எதிர்பாராத படுகொலையும்!

பாதகச் செயல்களின் பட்டியலில் ஒன்றாக இடம் பெற்றிருப்பது கடத்தல்!

அதைத் தொழிலாக நடத்தி, கஞ்சா, அபின் மற்றும் தங்கம், வெள்ளி, வைரம் என்றெல்லாம் கடத்தல் செய்து கோடீஸ்வரர் ஆனவர்கள் உண்டு. இன்னமும் இருக்கிறார்கள். கடத்தல் லாரி பிடிபட்டது, கடத்தல்காரர்கள் கைது என்றெல்லாம் செய்திகள் கூட வரலாம். அதற்காக போலீஸ் இலாகாவை அவசரப்பட்டு புகழ்ந்து விட முடியாது.

காரணம், கடத்தல் தொழில் பொதுவாகவே எல்லோருடைய ஒத்துழைப்பும் பெற்று நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. சுய நலமும் சூதும் வாதும் நிறைந்த ஒரு சிலர் போலீஸ் இலாகாவிலே எந்தக் காலத்திலும் இருக்கத் தான் செய்கிறார்கள். அவர்கள் முதலிலேயே பேசி வைத்துக் கொண்டு கடத்தல் முதலாளிகளிடம் பெறவேண்டிய கையூட்டுகளைப் பெற்றுக் கொண்டு, இருபது லாரிகளில் கடத்தல் பொருள் போகிறதென்றால்; சாஸ்திரத்துக்கு இரண்டு லாரிகளைப் பிடித்து வழக்குப் பதிவு செய்து; பிறகு மெல்ல மெல்ல அந்த சூட்டைத் தணித்து விடுவார்கள். கடத்தல் லாரிகள் பிடிபட்டன என்ற செய்திக்குப் பிறகு, அது சம்பந்தமான வழக்கு என்ன ஆயிற்று என்பது நாட்டுக்குத் தெரியாமலே மங்கி மறைந்து விடும்.

தீவிரவாதிகளை விடுவிப்பதற்காகவும்-பொன்னையோ, பொருளையோ கப்பமாகக் கட்டினால்தான் முடியும் என்று

விதிக்கின்ற நிபந்தனைகளுக்காகவோ - ஆட்களையே கடத்தி விடும் அநியாயங்களும் நடப்பதுண்டு. அப்படியொரு திடீர்ச் சம்பவம் வி.பி. சிங் அவர்கள் பதவியேற்ற ஒரு வாரத்திற்குள் நடைபெற்று விட்டது.

மத்திய அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த முப்தி மகமது சையத் அவர்களின் 20 வயது மகள் டாக்டர் ரூபியா முப்தியை 8-12-89 அன்று காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்தி விட்டனர்.

டாக்டர் ரூபியா பயணம் செய்த மினி பஸ் ஒன்றை ஸ்ரீநகர் அருகே துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் சுற்றி வளைத்துக் கடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கடத்தல்காரர்களின் கையில் விலை உயர்ந்த ஒரு பொருள் சிக்கியிருந்தால், அதனைத் திரும்பப் பெறக் கையாளுகிற அணுகுமுறைக்கும், பொருளுக்குப் பதிலாக ஒரு மனித உயிரே சிக்கியிருந்தால் அதனைத் திரும்பப் பெறக் கையாள வேண்டிய முறைக்கும் பெரிய வித்தியாசமே இருக்கிறது. வேலியின் முள்ளில் விழுந்துவிட்ட துணியை எடுப்பதில் காட்டுகிற லாவகம், இதிலும் காட்டப்பட்டாக வேண்டும். அப்படித்தான் நாட்டில் பல கடத்தல் சம்பவங்கள் தொடர்பான அணுகுமுறைகள் கடைப் பிடிக்கப்பட்டுள்ளன.

மத்திய உள்துறை அமைச்சரின் மகளைக் கடத்திய கும்பலுடன் மத்திய, மாநில அரசு அதிகாரிகள் மூன்றாம் நபர்கள் மூலமாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு பேசினார்கள். அப்படிப் பேசித்தான் ஆக வேண்டும், அதைத்தவிர இதுபோன்ற சூழ்நிலைகளில் வேறு வழி இல்லை.

உதாரணமாக 1994 டிசம்பர் மாத வாக்கில் சந்தனக் கடத்தல் வீரப்பன் கோஷ்டியினர் காவல்துறை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்றபோது; "வீரப்பன் விதித்த நிபந்தனைப்படி வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தப்பட்டிருப்பதாக" அன்றைய அ.தி.மு.க. அரசின் சார்பில் கோவை மாவட்ட கலெக்டர் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டியிருந்தது. வீரப்ப

னுடைய தூதுவர் துப்பாக்கியுடன் வந்து போகக் கூட அனுமதிக்கப்பட்டது. இதைப்பற்றியெல்லாம் நிருபர்கள் கேள்வி எழுப்பிய போது; அப்போது தலைமைச் செயலாள ராக இருந்த அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் "நாம் ஒரு அடிப்படை விஷயத்தை, மறந்து விடக் கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். போலீஸ் அதிகாரிகளை மீட்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது" என்று விளக்கமளித்தார்.

கடத்தல் சம்பவங்களும், அதையொட்டி கடத்தல்காரர்கள் விதிக்கும் நிபந்தனைகளும் காலம் காலமாக இருந்தே வருகிறது.

இதைப்போலவே மத்திய அமைச்சரின் புதல்வி டாக்டர் ரூபியாவைக் கடத்தியவர்களும் நிபந்தனை விதித்தனர். என்ன நிபந்தனை அது?

"சி.ஐ.டி. அதிகாரி ஒருவரைக் கொலை செய்ததாக திகார் சிறையிலே தூக்கில் இடப்பட்ட மக்பூர்பட்டின் சகோதர ரான குலாம் நபி, ஹமீத் ஷேக் உட்பட ஐந்து கொடிய பயங்கரவாதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அப்போதுதான் ரூபியாவை விட முடியும்."


இந்தக் கோரிக்கையைக் கேள்விப்பட்டவுடன் அமெரிக் காவில் சிகிச்சை பெற்று வந்த காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கள் நாடு திரும்பினார். தொடர்ந்து ஐந்து நாட்கள் அந்தக் கடத்தல்காரர்களுடன் பேச்சு நடத்தியபின்; அவர்கள் நிபந்தனைப்படி அந்த ஐந்து பயங்கரவாதிகளும் விடுதலை செய்யப்பட்டு; அதைத் தொடர்ந்து ரூபியாவும் விடுவிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி காஷ்மீர் பகுதியில் பரபரப்பாக நடந்தபோது நான் டெல்லியில் உள்துறை அமைச்சர் முப்தி மகமதுவைச் சந்தித்து அவருக்கு ஆறுதல் கூறினேன்.

அந்தச் சமயம், இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜய ரத்னே அவர்கள் டெல்லி வந்து இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக பிரதமர் வி.பி. சிங் அவர்களைச் சந்தித்துப்

பேசிவிட்டுச் சென்றதின் தொடர்ச்சியாக பிரதமர் அவர்கள் என்னிடம் இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதித்தார். ராஜீவ் பிரதமராக இருந்தபோது இலங்கைப் பிரச்சினையில் நானும் அவரும் கலந்து பேசியதையும் அப்போது எடுக்கப்பட்ட முயற்சிகள் பாதியிலேயே நின்றுவிட்டதையும் விவரமாக எடுத்துரைத்தேன்.

பின்னர் பிரதமர் வி.பி. சிங் அவர்களின் விருப்பப்படி, வெளியுறவுத் துறை அமைச்சர் குஜ்ரால் அவர்களுடனும்; கொழும்பு இந்தியத் தூதுவர் மல்கோத்ரா மற்றும் உயர் அதிகாரிகளுடனும் விவாதித்தேன். அந்தக் கலந்துரையாட லின் அடிப்படையில்; நான் சென்னை திரும்பியதும் 15 மற்றும் 16-12-89 ஆகிய நாட்களில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான ஆண்டன் பால சிங்கம், யோகி ஆகியோர் என்னைச் சந்தித்து ஒரு மணி நேரத்துக்கு மேலாக உரை யாடினர். அந்தச் சந்திப்பு பற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அமைதி யான ஒரு நல்ல முடிவு காண்பதற்கு ஜனநாயக ரீதியான வழியைப் பற்றிப் பூர்வாங்க மாகப் பேசியிருப்பதாகவும் மற்ற குழுவினருடனும் விரை வில் பேச இருப்பதாகவும் தெரிவித்தேன்.

அந்தப் பேச்சுவார்த்தை விபரம் குறித்து பிரதமரிட மும், வெளியுறவுத் துறை அமைச்சரிடமும் விளக்கிட 20-12-89 அன்று டெல்லி சென்றிருந்தேன். மற்ற போராளிகளிடமும் பேசு மாறு அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டனர். ஜன நாயக முறையில் ஒரு தீர்வு காண வேண்டுமென்பதே எங்கள் நோக்கமாக இருந் தது.



மத்திய உள்துறை அமைச்சர் முஃப்தி மகமது சையத் தீவிரவாதிகளிடமிருந்து விடுதலை செய்யப்பட்ட தனது மகள் டாக்டர் ரூபியாவுடன்.

1989-ஆம் ஆண்டின் இறுதி நாளன்று தமிழீழத் தலைவர்கள் பலர் குறிப்பாக வழக்கறிஞர் சந்திரஹாசன், க.சச்சிதானந்தன், ஈழவேந்தன், வெ.பேரம்பலம், எஸ்.சிவசுப்ரமணியம், எஸ்.சிவானந்தம், சு.சிவநாயகன், ர.பத்மநாபன், தஅருணாசலம், ஞான கணேசன், பி.ஆனந்தராஜா, நீதுவான் சிவானந்தன் ஆகியோர் என்னை இல்லத்தில் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் விவாதித்தனர். 4-1-1990 அன்று மாலையில் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே அவர்கள் என்னை இல்லத்தில் சந்தித்து தமிழ்ப் போராளிகளிடையே அமைதி நிலவுவதற்காக நான் எடுத்து வந்த முயற்சிகளையெல்லாம் பாராட்டினார். இலங்கை அமைச்சருடன் ஆலோசகர் பிராட்மேன் வீராகூன் மற்றும் ராணுவத் துறைச் செயலாளர் செபாலா அட்டிகலா ஆகியோரும் வந்திருந்தனர். 7-1-90 அன்று ஈழத் தமிழ்ப் போராளிகளில் ஒரு குழுவினரான ஈராஸ் பிரிவைச் சேர்ந்த பாலகுமார், சங்கர், முகிலன் ஆகியோர் என்னைச் சந்தித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். ஜனவரி 8ஆம் தேதியன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் மல்கோத்ரா அவர்களும் என்னைச் சந்தித்தார். ஜனவரி 8 மற்றும் 9 ஆகிய நாட்களில் இலங்கை வட கிழக்கு மாகாண முதல் அமைச்சர், ஈ.பி.ஆர்.எல்.எப். பிரிவைச் சேர்ந்த வரதராஜ பெருமாள் என்னைச் சந்தித்தார். அவருடன் யோகசங்கரி, சந்தன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

அகில உலகப் புகழ் பெற்ற கார்ட்டூனிஸ்ட் சங்கர் என்கிற கே. சங்கர் பிள்ளை 26-12-89 அன்று தனது 87வது வயதில் டெல்லியில் காலமானார். பத்திரிகைத் துறையில் கார்ட்டூன்கள் வருவதற்கே காரணமாக இருந்தவர் இவர்தான். ஏராளமான பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் அவரது இல்லத்திற்குச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர். இந்தியாவில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் அதிகரிப்பதற்கே இவர்தான் முக்கியமான காரணமாகும். இந்தியாவில் கேலிச்சித்திரத் துறைக்கு ஒரு மதிப்பையும்

பெருமையையும் ஏற்படுத்திக் கொடுத்தவரே இந்த சங்கர் அவர்கள்தான். ஓய்வு நேரத்தில் கார்ட்டூன்கள் வரைந்து பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்த இவரை இந்துஸ்தான் டைம்ஸ் ஆசிரியர்தான் அழைப்பு விடுத்து அந்தப் பத்திரிகை யின் முழுநேர கேலிச் சித்திர ஓவியராக ஆக்கினார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளைக் கேலி செய்யும் ஏராளமான கார்ட் டூன்களை வரைந்தார். 1948-ஆம் ஆண்டு இவர் துவக்கிய சங்கர்ஸ் வீக்லி என்ற வார இதழ் முழுக்க முழுக்க கார்ட் டூனிஸ்ட் இதழாகவே விளங்கியது. இவரது கார்ட்டூன்களை பண்டித நேரு அவர்களே பலமுறை பாராட்டியிருக்கிறார். இவரது மறைவு குறித்து இந்தியாவில் உள்ள அனைத்து ஏடுகளும் அஞ்சலி செலுத்தி எழுதியிருந்தன.

89-ஆம் ஆண்டின் இறுதியில் விடுதலைப்புலிகளைச் சந்தித்து முதற்கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியதைத் தொடர்ந்து 90-ஆம் ஆண்டு பிப்ரவரி 16, 17 ஆகிய நாட்களில் மீண்டும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பாலசிங்கம், யோகி ஆகியோர் என்னைச் சந்தித்தனர். அப்போது மத்திய அரசின் பிரதிநிதியாக மத்திய அமைச்சர் முரசொலி



இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னே முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து உரையாடுகிறார்.

மாறனும் உடனிருந்தார். 17-2-90 அன்று டெலோ, பிளாட், ஈராஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., ஆகிய ஈழப் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகள் என்னுடைய இல்லத் தில் என்னைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். டெலோ இயக்கத்தின் சார்பில் கருணாகரன், ஸ்ரீகந்தா ஆகியோரும், பிளாட் இயக்கத்தின் சார்பில் கனகராஜா, விசு ஆகியோரும், ஈராஸ் இயக்கத்தின் சார்பில் பஷீர், பாலகுமார் ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் சார்பில் சோமு, சாந்தன் ஆகியோரும், ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தின் சார்பில் ராஜன், ஜெயகாந்தன் ஆகியோரும் என் இல்லத்திற்கு வந்து 9.45 முதல் 11.45 வரை விவாதித்தார்கள். இதில் ஈராஸ் இயக்கத்தின் பிரதிநிதிகள் தனியாகவும், மற்ற குழுவினர் தனியாகவும் சந்தித்தார்கள். மத்திய அமைச்சர் முரசொலி மாறனும் உடன் இருந்தார்.

இந்தச் சந்திப்புகள் குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது, போராளிகளுக்கிடையே மோதுதல் ஏற்படாமல் இருப்பதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறேன். இதுவரை பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றது. சுமுகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்கிறேன் என்று கூறினேன். 18-ஆம் தேதியன்றும் அனைத்துப் போராளிக் குழுவினருடனும் தொடர்ந்து பேசினேன். அந்தப் பேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகள் ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கு சில நிபந்தனை களுடன் ஒப்புக் கொண்டார்கள். ஈழத்தில் ஜனநாயக அடிப்படையில் அமைதியும் பாதுகாப்பும் தொடர்ந்து நிலவ வேண்டும் என்பதே என் நோக்கமும், வி.பி. சிங் அவர்களின் நோக்கமும் ஆகும் என்று அவர்களிடம் தெரிவித்தேன்.

சென்னையில் இந்த அளவிற்கு நான் முயற்சிகளை மேற் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் 19-2-90 அன்று ராம னாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அருகிலே உள்ள சோதனைச் சாவடியில் மூன்று கார்களை நிறுத்திய போது கார்களில் இருந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் தமிழ்நாடு சிறப்பு போலீஸ் காவலர் ஒருவரும், வேறொரு

வரும் மாண்டனர். கார்களில் வந்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் எனக் கூறப்பட்டது.


எந்தப் போராளிக் குழுவாக இருந்தாலும் ஆயுதங்களோடு தமிழ்நாட்டிற்குள் யார் வந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் ஆயுதங்களோடு நுழைவதற்கு வழிவகைகளை யார் செய்து கொடுத்தாலும், அவர்கள் ஒரு சில அதிகாரிகளாக இருந்தாலும் அல்லது அரசியல்வாதி களாக இருந்தாலும் அவர்கள் மக்களுக்கு அடையாளம் காட்டப்படுவதோடு, தமிழ்நாட்டை ஒரு வன்முறைக் களமாக ஆக்குவதற்குத் துளியும் இடம் தர இயலாது என்று என் கருத்தைத் தெரிவித்தேன்.

பிப்ரவரி திங்கள் 22-ந்தேதியன்று மீண்டும் ஈழப் போராளி களின் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., பிளாட், டெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தனர். விடுதலைப் புலிகள் இயக்கம் எங்களிடம் பேசும்போது அவர்கள் ஜனநாயக வழிக்கு வருவதற்கேற்ப வரதராஜ பெருமாள் தலைமையிலே உள்ள வடகிழக்கு மாகாண கவுன்சில் கலைக்கப்பட வேண்டும், அல்லது அவர் களே பதவி விலகி மறு தேர்தலுக்குத் தயாராக வேண்டும் என்ற கருத்தைக் கூறியதால், அதுபற்றி நான் மற்றக் குழுவினரிடம் பேசினேன். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். சார்பில் மொத்தம் உள்ள வட கிழக்கு மாகாண சபை 71 இடங்களில், விடுதலைப் புலிகளின் உறுப் பினர்களை நியமித்துக் கொள்வதற்கு நீங்கள் சொல்கிற எண் ணிக்கை அளவு இடங்களைத் தருகிறோம், தேர்தல் என்று வந்தால் மீண்டும் மோதுதல் ஏற்படும், எனவே தேர்தல் வேண்டாம் என்று என்னிடம் கூறினார்கள். அதை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் நான் தெரிவித்தேன். அதற்கு அவர்கள், இடங்களைப் பேரம்பேசி நியமன உறுப்பினர்கள் என்ற அளவில் பெற்றுக் கொண்டால், பதவிக்காகத்தான் நாங்கள் இயக்கம் நடத்துவதாக எங்கள்மீது பழி வந்து சேரும். எனவே ஈழத் தமிழ் மக்களின் ஆதரவு எங்கள் பக்கம் இருப்பதை நிரூபிக்க தேர்தல்தான்

சிறந்த ஜனநாயக முறை என்று தெரிவித்தார்கள். இரு தரப்பு பேச்சுவார்த்தை மூலம் வெளிப்பட்ட கருத்துக்களை மத்திய அமைச்சர் முரசொலி மாறன் மூலமாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடமும் பிரதமரிடமும் தெரிவிக்கச் செய்தேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நான் மேற்கொண்ட முயற்சி பற்றி பத்திரிகையாளர் டி.எஸ். சுப்பிரமணியம் இந்து 3-3-90 இதழில் ஒரு நீண்ட கட்டுரை எழுதும்போது, திரு. கருணாநிதி அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வீண் போகவில்லை என்றும், டிசம்பரில் முதல்வர் பல்வேறு கோஷ்டிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிய போது அவற்றுக்கிடையே காணப்பட்ட அளவுக்குப் பகைமை உணர்வு இல்லை என்றும், பெருமளவுக்குக் குறைந் திருக்கின்றது என்றும், தமிழ்ப் போராளி இளைஞர்கள் பெருமளவில் பலியாவது தவிர்க்கப்பட்டிருக்கின்றது என்றும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளச் செய்து, அதன் மூலம் பொதுக் கருத்தை உருவாக்குவது என்பதுதான் திரு. கருணாநிதி கடைப்பிடித்த வெட்டவெளிச்சமான ராஜதந்திர அணுகுமுறையென்றும் குறிப்பிட்டிருந்தார்.

27-3-90 அன்று விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் கூறும்போது, தமிழக முதல்வரிடம் உறுதிமொழி அளித்துள்ளதைப்போல அவர்கள் யாரையும் தாக்க மாட்டோம் என்றும், மற்ற போராளிக் குழுக்கள் ஆயுதங்களைக் கீழே போட்டால் அவர்களுக்கு முழுப் பாது காப்பு கொடுப்போம் என்றும், தாங்கள் ஆயுதம் வைத்திருப்பது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவே என்றும், மற்ற போராளிக் குழுக்கள் மீது தங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்றும் கூறினார்.



முதல்வர் கலைஞர் அவர்களுடன் பத்மநாபா (ஈ.பி.ஆர்.எல்.எம்.), சிறீ.சபா ரத்னம் (டெலோ), பாலகுமார் (ஈ.ராஸ்).

அதற்குப் பிறகு ஒரு முறை பாலசிங்கம் அவர்கள் தொலை பேசியிலே என்னைத் தொடர்பு கொண்டு நேரில் சந்திக்க வேண்டுமென்று கேட்டபோது மத்திய அரசுடன் கலந்து கொண்டு சந்திப்பதாகக் கூறினேன். ஆனால் பிறகு அவரிட மிருந்து எந்தத் தொடர்பும் வரவில்லை.


18, 19-6-1990 ஆகிய நாட்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நான் டெல்லி சென்றிருந்த போது, 18-ந்தேதி முதல் நாள் கூட்டம் முடிந்ததும் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் என்னை அவரது அலுவலகத்திற்கு அழைத்து மாலை 6.10 முதல் 7 மணி வரை உரையாடினார். அப்போது மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறனும் உடன் வந்திருந்தார். ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி விரிவாக அன்று விவாதித்த பிறகு மறுநாள் மாலையிலும் தொடர்ந்து அதைப்பற்றி இந்தியாவின் முக்கியத் தலைவர்களையெல் லாம் அவரது இல்லத்திற்கு அழைப்பதாகவும், அந்தக் கூட்டத்திலும் விரிவாக விவாதிக்கலாம் என்றும் பிரதமர் கூறினார். அதன்படியே 19-6-90 அன்று மாலையில் பிரதமர் இல்லத்தில் ஈழத் தமிழர் பிரச்சினைக்காகவே கூட்டப்பட் டிருந்த கூட்டத்திற்கு வந்திருந்த மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு, கேரள முதலமைச்சர் ஈ.கே. நாயனார், ஒரிசா முதலமைச்சர் பிஜு பட்நாயக், ராஜஸ்தான் முதலமைச்சர் செகாவத், பீகார் முதலமைச்சர் லல்லு பிரசாத், அஸ்ஸாம் முதல் அமைச்சர் மகந்தா, அரியானா முதல் அமைச்சர் குப்தா, இமாசலப் பிரதேச முதலமைச்சர் சாந்தகுமார், சிக்கிம் முதல் அமைச்சர் பண்டாரி, புதுவை முதல் அமைச்சர் டி.ராமச்சந்திரன், மற்றும் மத்திய அமைச்சர்கள் அருண்நேரு, முப்தி மகமது சையத், முரசொலி மாறன், குருபாதசாமி, தினேஷ் கோசுவாமி, உபேந்திரா, உன்னி கிருஷ்ணன் மற்றும் அகில இந்தியத் தலைவர்களான வாஜ்பாய், அத்வானி, ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத், இந்திரஜித் குப்தா, பரூக்கி, ஜஸ்வந்த் சிங், சிட்டபாசு, சாமர் முகர்ஜி, டாக்டர் நகேந்திர சக்கரியா ஆகியோரிடம் ஈழப்பிரச்சினை குறித்து கடந்த கால நிலைமைகளையும், தற்போதுள்ள

நிலைமைகளையும் நான் விளக்கினேன். அந்தக் கூட்டத்திலே இலங்கையில் நடைபெறும் போர் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டது. விமானங்கள் மூலம் வீசப்படும் குண்டு வீச்சுக்களாலும், விஷவாயு வீசுவதாலும் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்தும் அவதிப்படுவது குறித்தும் வேதனை தெரிவிக்கப்பட்டதுடன், காயம்பட்டு வருகிறவர்களுக்கு நிவாரண உதவி செய்ய வேண்டுமென்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தை முடித்து விட்டு டெல்லி தமிழ்நாடு இல்லத்திற்கு நான் வருவதற்கும், சென்னையிலிருந்து ஒரு கொடுமையான செய்தி வருவதற்கும் சரியாக இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் பத்மநாபா மற்றும் அந்த இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் 14 பேர் கோடம்பாக்கத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்த போது விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் திடீரென நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அனைவரும் கொல்லப்பட்டதாக எனக்கு சென்னையிலிருந்து உள்துறை செயலாளர் மூலம் செய்தி வந்தது.

ஒரிசாவில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அன்றுதான் சென்னை திரும்பியதாகவும், அன்றைக்கே அந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும் எனக்குக் கூறப்பட்டது. 20-ஆம் தேதி மாலையில் சென்னை திரும்பிய நான் விமான நிலையத்திலேயே செய்தியாளர்களைச் சந்தித்துவிட்டு, அங்கிருந்து நேராக அரசினர் பொது மருத்துவமனைக்குச் சென்று, துப்பாக்கிச் சூட்டில் மறைந்த பத்மநாபா மற்றும் போராளிகளின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி விட்டு, காயமடைந்து மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினேன்.

வேட்டையாடப்படுகிற ஈழத் தமிழ் இனத்தைக் காப்பாற்றுகின்ற கேடயங்களாகத் தோன்றிக் காத்திடும் கடமையாற்றிக் கொண்டிருந்த போராளிக் குழுக்கள்; அந்தக்




இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் மல்கோத்ரா முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து உரையாடுகிறார்.

கடமையிலே தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமிழ் இனத்தைக் காப்பாற்ற முனையாமல்; ஒவ்வொரு குழுவினரும் மற்றொரு குழுவினரைக் குத்திச் சாய்க்கும் கொடுவாளாகத் தம்மை ஆக்கிக்கொண்டு தங்களுக்குள் போரிட்டுச் சாகிற இந்தக் கொடிய நிகழ்ச்சிகளுக்கு ஒரு முடிவு ஏற்பட்டால்தான்; ஈழத் தமிழர்களின் சுதந்திரக் கனவு பலிப்பதற்கு வழியுண்டு எனத் தெரிந்திருந்தும் சகோதர யுத்தம் நின்றபாடில்லை என்பதற்கு பத்மநாபா படுகொலை இன்னொரு எடுத்துக்காட்டாக ஆயிற்று.

என் செய்வது; சின்னஞ்சிறு பிராயத்தில், இறுகக் கட்டப்பட்ட சுள்ளிக்கட்டையை இரண்டாக உடைப்பதென்றால் முடியாது; அதே கட்டிலிருந்து ஒவ்வொரு சுள்ளியாக எடுத்துச் சுலபமாக உடைத்து விடலாம் என்று ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுத்ததையும்; நான்கு எருதுகள் ஒன்றாக இருந்த வரையில் சிங்கம் அவற்றின் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை; ஆனால் அவை நான்கும் தனித்தனியே பிரிந்தபோது சிங்கம், ஒவ்வொன்றாக அடித்துக் கொன்று போட்டது என்று கதை கேட்டதையும்- நினைவுபடுத்திக் கொள்கிற நெஞ்சம்; அந்தப் போராளிக் குழுக்களில் எப்படியோ அமையாமல் போய், அதுவே அவர்களின் லட்சிய வெற்றிக்குத் தடைக் கல்லாகவும் ஆயிற்று.

அடுத்தடுத்து போராளிக் குழுக்களின் தலைவர்கள், போராளிகளுக்குத் தொடக்க காலத்தில் ஆதரவளித்த நாடாளு மன்ற பொறுப்புகள் போன்ற பல்வேறு பதவிகளில் இருந்த முதுபெரும் தமிழர்கள், வழக்கறிஞர்கள், "நாங்கள்



முதல்வர் கலைஞர் அவர்களை இலங்கை வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜபெருமாள் சந்தித்து உரையாடுகிறார்.

புதைக்கப்படவில்லை; ஈழத் தமிழர் விடுதலைக்காக விதைக்கப்படுகிறோம்" என்று முரசு கொட்டிப் போர் முனையில் உயிர் தரக் கிளம்பிய வீர இளைஞர்கள்; இவர்கள் எல்லாம் சகோதர யுத்தத்தில் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிற செயல்களை அவ்வப்போது வேதனையுடன் எடுத்துக் காட்டி, "வேண்டாம் இந்த விபரீதம்!" என்று எச்சரித்து வந்த எனக்கு என்னுடன் நெருங்கிப் பழகிய போராளிக் குழுக்களின் தலைவர்களில் ஒருவரான பத்மநாபா கொலையுண்டது என்னை மெத்தவும் சோர்வடையவே செய்து விட்டது.

தமிழர்களிடம் விரிவடைந்த இதுபோன்ற ஒற்றுமையின்மையை இலங்கை ராணுவம் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, 1990-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அப்பாவித் தமிழர்களை வேட்டையாடுகிறது என்ற செய்தி, மீண்டும் அன்றாட நிகழ்ச்சிகளாக வெளி வரத் தொடங்கியது.

என் செய்வது; பக்கத்திலே மிக அருகிலே ஒரு தீவில் தமிழினப் படுகொலை தொடர்வதைத் தமிழகம் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்க முடியுமா? தானாடாவிடினும் தன் தசையாடும் என்பதற்கேற்ப 12-7-1990 அன்று நடைபெற்ற தி.மு.க. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் 20-7-1990 அன்று ஈழத் தமிழர்களுக்காக ஒரு நாள் முழு அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டு; அதற்கு தமிழ்நாட்டு மக்கள் பேராதரவு தந்து ஈழத் தமிழகத்தில் அமைதி ஏற்பட வேண்டுமென்ற தமது ஆழமான உணர்வை வெளிப்படுத்தினர்.

18

அன்று சொன்னதும்; இன்று சொல்வதும்!

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழகத்தில் நடை பெற்ற முழு அடைப்பு, வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து, மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சரும் நாடாளு மன்ற கழகக்குழுத் தலைவருமான முரசொலிமாறன் தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, தா.கிருட்டிணன், மிசா கணேசன், ஜெ.எஸ்.ராசு, முகமது சகி, ஜி. வெங்கட்ராமன், நாமக்கல் வீரப்பன் ஆகியோர் 23-8-90 அன்று பிரதமரைச் சந்தித்து மத்திய அரசு காலந்தாழ்த்தாமல் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர்.

அதுகுறித்து செய்தியாளர்களிடம் பிரதமர் வி.பி. சிங் கூறும் போது இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்குமிடையே எந்தவித கருத்து மாறுபாடும் கிடையாது என்றும், இலங்கைப் போராளிகளுக்கு தமிழகத் தில் தளம் அமைக்க அனுமதி கிடையாதென்றும், தமிழக முதல் அமைச்சர் இதைத் தடுக்கவே நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பு குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது என்றும், அவர்களைப் பாதுகாக்க அரசு சார்பில் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

தட்பவெப்பங்களுக்கேற்ப மனிதனாகட்டும் மற்றும் உயிரினங்களாகட்டும் தங்களின் இருப்பிடங்களை மாற்றிக் கொள்வது இயல்பு. இதில் மனிதனல்லாத ஏனைய உயிரினங்

களுக்கு அந்த இருப்பிட மாற்றம் இயற்கையாகவே அமைந்து விடும். மனிதன் அத்தகைய மாற்றத்தை அவனே சிரமப்பட்டு உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் அரசியல் ரீதியான தட்பவெப்பங்கள் மாறும் போது ஓர் அதிபுத்திசாலியான அரசியல்வாதி, மனிதரல் லாத ஏனைய உயிரினங்களைவிட, மிக விரைவாகத் தன் இருப்பிடத்தை மட்டுமல்ல, இதயத்தையே கூட மாற்றிக் கொள்ளும் விசித்திரத்தைக் காண முடியும்.

இந்த அத்தியாயத்தை நான் எழுதும்போது, அதாவது 2001 முடிந்து 2002 ஆம் ஆண்டு தொடங்கியுள்ள கால கட்டத்தில் செல்வி ஜெயலலிதாவும் அவரது ஆதரவு ஏடுகளான சில ஏடுகளும் விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ்த் தீவிரவாதி களை தி.மு.கழகமும் அதன் தலைவரான நானும்தான் ஊக்கப் படுத்துகிறோம்- வன்முறைக்குத் தூண்டி விடுகிறோம்- அவர் களுக்கு ஆதரவு தருகிறோம் என்றெல்லாம் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்பு செல்வி ஜெயலலிதா இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மேற்கொண்ட நிலை என்ன?

பிரச்சினையை எப்படி அணுக வேண்டும் என்பதைவிட, எழுந்துள்ள பிரச்சினையைப் பயன்படுத்தி எதிர்வரிசையில் உள்ள தனக்குப் பிடிக்காதவர்களை எப்படிக் குறை கூறுவது என்பதற்கே தனது மொத்த ராஜதந்திரத்தையும்- தனக்கு அரிய வாய்ப்பாகக் கிடைத்த பிரச்சார சாதனங்களையும் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்புதான் பத்மநாபா படுகொலை சென்னையில் நடந்திருக்கிறது. விடுதலைப் புலிகளில் ஒரு சிலர்தான் அந்தக் கொலைக்குக் காரணம் என்று அவர்களைத் தேடும் படலம் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. ஈழப் போராளிகளுக்குத் தமிழ் மக்கள் அளித்து வந்த பேராதரவில் இந்த நிகழ்ச்சியின் காரணமாக ஒரு தொய்வு ஏற்பட்டு விடுகிறது. கோடம்பாக்கத்தில் அன்று

நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் அளிக்க முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து முதற் கட்டமாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கிட ஆணை பிறப்பித்தேன். அந்தக் கொடூரமான நிகழ்ச்சி தமிழ் மக்கள் நெஞ்சை விட்டு மறையாத சூழலிலேயே இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டுக்கு 4-10-1990 அன்று செல்வி ஜெயலலிதா சிறப்புப் பேட்டியொன்று அளித்து, அது வெளி வருகிறது.

"சிங்கள ராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள ராணுவத்தை எதிர்த்து தீரத்துடன் போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ் நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதி தீரமான செயல். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்துவிடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தி மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சரின் நாற்காலியைப் பாதுகாத்துக் கொள்வதற்கே அர்ப்பணிக்கப் பட்டு வருகிறது. கருணாநிதியின் மனோபாவம் இவ்வாறிருந்தால் இதற்கு மாறாக வேறு விதமாக செயல்படுவதை வி.பி. சிங்கிடம் நாம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கைத் தமிழர்களின் கதி பற்றி வி.பி. சிங் எந்தவிதக் கவலையும் படுவதாகத் தெரியவில்லை. மாறியுள்ள சூழ் நிலையில் ஒரே மருந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஒட்டு மொத்தமாக ஆதரிப்பதுதான். தனது அதிகாரத்திற்கு உட்பட்ட இயன்ற அனைத்து உதவிகளையும் முதலமைச்சர்

வழங்க வேண்டும். மத்திய அரசு இந்திய - இலங்கை ஒப்பந்தத் தின் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்ட விதிகளின்படி சமாதானத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும். அல்லது விடு தலைப் புலிகளை இந்திய அரசு நூற்றுக்கு நூறு ஆதரிக்க வேண்டும்."

செய்தியாளர் :- விடுதலைப் புலிகள் இயக்கம் அமைதி ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது. ஆனால் நீங்கள் இன்னமும் விடுதலைப் புலிகளை ஆதரிக்க வேண்டும் என்று கூறுகிறீர்களே?

ஜெயலலிதா :- நம்முடைய முக்கிய நோக்கம் என்ன? தமிழ் இனம் அழிக்கப்பட்டு விடக்கூடாது. இலங்கையில் வாழும் தமிழர்கள் இனப் படுகொலையிலிருந்தும் பூண்டோடு ஒழிக்கப்படுவதிலிருந்தும், பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் தவறுகளைச் செய் துள்ளனர். ஆனால் நாம் விடுதலைப் புலிகளை ஆதரிக்கா விடில் அது இலங்கையில் தமிழ் இனத்திற்கு அழிவை ஏற்படுத்தும். அதை நாம் அந்த நோக்கோடு பார்க்க வேண்டும்.

கேள்வி:- எம்.ஜி.ஆர். செய்த அளவுக்கு இல்லாவிட்டா லும், கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யவில் லையா?

ஜெயலலிதா:- அதற்கான எந்தத் தடயத்தையும் நான் காணவில்லை.

8-10-1990 தேதியிட்ட "இந்து" இதழிலே ஜெய லலிதா விடுதலைப் புலி களைப் பற்றி ராஜீவ் காந்தி அவர்கள் கலந்து கொண்ட



ருமேனியா சர்வாதிகாரி நிக்கோலே செளசெஸ்கு

கூட்டத்திலேயே குறிப்பிட்ட வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு:-

"இலங்கையில் தமிழர்களைக் காப்பாற்ற எதுவும் செய்யாததற்காக ஜெயலலிதா மத்திய அரசையும் மாநில அரசையும் குற்றஞ்சாட்டினார். இலங்கை அரசுக்கு எதிரான தற்போதைய போராட்டத்தில் விடுதலைப் புலிகள் தோல்வி அடைந்தால் அத்தீவில் உள்ள தமிழினம் முழுவதுமே அழிந்து விடும் என்று ஜெயலலிதா எச்சரித்தார்."

இப்படிச் சொன்னவர்தான் நான் விடுதலைப் புலிகளையும், வன்முறைச் செயல்களையும் தமிழ் நாட்டில் ஊக்கப் படுத்துகிறவன் என்று இன்று வரையில் குற்றம் சாட்டி வருகிறார்.

அடுத்து, நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்ததின் தொடர்ச்சியாக பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத், ஒரிசா ஆகிய மாநிலங்களில் இருந்த இந்திரா காங்கிரஸ் கட்சி முதல் அமைச்சர்கள் மூன்று மாதங்களில் அங்கே மாநில சட்டமன்றங்களின் தேர்தல்கள் நடக்கவிருப்பதையொட்டி, மாற்றப்பட்டார்கள். ஆனால் அதைப்பற்றி 11-12-89 அன்று தலையங்கம் எழுதிய தினமணி, "நாட்டை 21ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி வந்த ராஜீவ் காந்தி அவர்கள் இப்போது 17வது நூற்றாண்டு மனப்பான்மை உள்ளவர்களை நம்பி அவர்களை மீண்டும் முதல் அமைச்சர் பதவியில் அமர்த்தியிருப்பது அவருடைய பரிதாபகரமான நிலையைக் காட்டுகிறது" என்று குறிப்பிட்டது.

இந்திய அரசியலில் இந்த மாற்றம் ஏற்பட்ட போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நிலை குறித்து சற்று கவனிக்கலாம்.

1989ஆம் ஆண்டில் குறிப்பாக ஆகஸ்ட் திங்களிலிருந்தே டிசம்பர் திங்கள் முடிவதற்குள் சூறாவளிக் காற்றில் உதிர்ந்த இலைகள் அடித்துச் செல்லப்படுவது போல கிழக்கு ஐரோப்பாவில் அப்போது வீசிய ஜனநாயகப் புயலில்

நாற்பதாண்டுகளாக அங்கே நிலைபெற்றிருந்த பல கம்யூனிஸ்ட் அரசுகள் கவிழ்ந்தன. போலந்து, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, செக்கோஸ்லோவேக்கியா ஆகிய நாடுகளின் வரிசையில் ருமேனியாவிலும் புரட்சி ஏற்பட்டது. டிமிஸோயாரா என்பது ருமேனியாவில் உள்ள ஒரு முக்கிய நகரம். ருமேனியாவின் சர்வாதிகாரி நிக்கோலே சௌசெஸ்கு, அங்கே வாழும் சிறுபான்மை ஹங்கேரியர் களை அடியோடு அழிக்கத் திட்டமிட்டு அவர்களை யெல்லாம் படுகொலை செய்து வந்ததை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கினார் ரெவரெண்ட் டோக்ஸ் என்பவர். எனவே அவரைச் சிறைபிடிக்க அவரிருந்த தேவாலயத்தை நோக்கி 17-12-89 அன்று சௌசெஸ்குவின் பாதுகாப்புப் படை விரைந்தது. ஆனால் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் அவரைக் கைது செய்ய அனுமதிக்காமல் தேவாலயத்தைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். இதனால் எரிச்சல் அடைந்த சௌசெஸ்குவின் மனைவி எலினா அந்த அப்பாவிப் பொதுமக்களையெல்லாம் சுட்டு வீழ்த்துமாறு உத்தரவிட்டார். உடனே இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட டாங்கிகள் பொதுமக்கள் மீது குண்டு களைப் பொழிந்த வண்ணம் முன்னேற ஆரம்பித்தது. அதன் விளைவாக 20 ஆயிரம் பேர் அந்த இடத்திலேயே உயிரிழந் தனர். புல்டோஸர்களின் உதவியுடன் பெரிய குழிகளை வெட்டி இறந்த உடல்களைப் புதைத்தனர். மறுநாள் 18ந்தேதியன்று, சுட்டுக் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக் கானவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக 30 இளைஞர் கள் கையில் மெழுகுவர்த்தியுடன் அந்தத் தேவாலயத்திற்கு வந்தபோது, அவர்கள் மீது பாதுகாப்புப்படை துப்பாக்கி யால் சுட அதில் 15 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 12 பேர் படுகாயமடைந்தனர். 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதற்கு 40 ஆண்டுகளுக்கு முன் கம்யூனிஸ்ட் அரசுகள் திடீரெனத் தோன்றியதற்கும், 89-ஆம் ஆண்டுவாக்கில் அவை வீழ்ச்சியுற்றதற்கும் சோவியத் ரஷ்யாதான் காரணம் என்று அப்போது பரவலாகப் பேசப் பட்டது. 1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் வெடித்த புரட்சியில்



பனாமா சர்வாதிகாரி நொரீகா

கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்டுகள் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஜெர்மனி கைப்பற்றியிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளை விடுவித்த ரஷ்யாவின் செஞ்சேனை அங்கெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டது. தொடர்ந்து ரஷ்ய படை பலத்தின் ஆதரவினால்தான் அந்த ஆட்சிகள் நீடித்தன. 1956இல் ஹங்கேரியிலும், 1968இல் செக்கோஸ்லோவேக்கியாவிலும் மக்கள் புரட்சி எழுந்த போது கூட சோவியத் படைகள்தான் அவற்றை முறியடித்தன.

கிழக்கு ஐரோப்பாவில் ஜனநாயகப் புயல் வீசும்போது ருமேனியா மட்டும் அதிலிருந்து எப்படித் தப்ப முடியும்? மக்களின் சுதந்திர வேட்கைக்கு அணை போட முடியாது என்பதை சௌசெஸ்கு உணரவில்லை. அவரும் அவருடைய குடும்பத்தினரும் நாட்டில் எதேச்சாதிகாரம் நடத்தினார்கள். கட்சிப் பதவிகளிலும், அரசுப் பதவிகளிலும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த 40 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். 1965ஆம் ஆண்டு மார்ச் 22ந்தேதி ருமேனியாவின் ஆட்சிப் பொறுப்பை சௌசெஸ்கு ஏற்றதும், அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள தனது உறவினர்களையெல்லாம் முக்கியப் பொறுப்புகளில் அமர்த்தினார். இவரது மனைவி எலினா ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர். மேலும் அவர் துணைப் பிரதமராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். சௌசெஸ்குவின் சகோதரர் இலியி

ராணுவ ஜெனரலாகவும், துணைப் பாதுகாப்பு அமைச்சராக வும் பதவி வகித்தார். மற்றொரு சகோதரரான நிக்கோலே அந்துருத் என்பவர் துணை உள்துறை அமைச்சர். மேலும் போலீஸ் ஜெனரல் பதவியையும் இவர் வகித்தார். ருமேனி யாவின் பொருளாதாரத்திற்குத் திட்டமிடும் பொறுப்பை வகித்த அதிகாரி சௌசெஸ்குவின் மற்றொரு சகோதரர். கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகை ஆசிரியரும் அவரது சகோதரர்தான். சௌசெஸ்குவின் மைத்துனர் வாசிலி பார்பு லெஸ்கு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக நியமிக்கப் பட்டிருந்தார். எலினாவின் சகோதரர் பெட் ரெஸ்கு தொழிற் சங்கத் தலைவராக இருந்தார். சௌசெஸ்குவின் மகன் நிகு டிரான்ஸில்வானியாவின் தென் பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி செயலர். மருமகள் பொலியனா பயனீர் நேஷனல் கவுன்ஸி லின் தலைவி. சௌசெஸ்குவின் மற்றொரு மகன் வாலென் டின் அணு ஆராய்ச்சியாளர்களில் முதலிடம் தரப்பட்டார். மகள் ஜோயா எலினா கணித நிலையத்திற்குப் பொறுப் பாளர்.


19ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மன்னனான நெப்போலி யன் ஸ்பெயினிலிருந்து ரஷ்யா வரை, தான் கைப்பற்றிய இடங்களை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் ஆள வேண்டும் எனக் கனவு கண்டான். கம்யூனிஸத்தின் தந்தை என்று வர்ணிக்கப்படும் காரல் மார்க்ஸ் ஐரோப்பாவில் தொழிலாளர் புரட்சி ஏற்படக்கூடும் என்று முன்கூட்டியே கணித்தார். மார்க்ஸின் வாரிசு என்று கருதப்படும் கோர்பசேவ், ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்த ஐரோப்பிய நாடுகள் தங்களுக்கென்று தனியான கொள்கைகளை வகுத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். அதாவது கிழக்கு ஐரோப்பிய நாடுகள் புதிய அரசுகளை அமைத்து பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைத்து ரஷ்யாவுடன் எத்தகைய உறவுகளை வைத்திருப்பது என்பது குறித்து சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். அதன் விளைவாகத்தான் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் எழுச்சி ஏற்பட்டதாக அப்போதைய ஏடுகள் எல்லாம் எழுதின. இந்த நிலையில் 89ஆம் ஆண்டு டிசம்பர்

திங்களில் அதிபர் சௌசெஸ்குவின் ஆட்சி கவிழ்ந்தது. அதிபரும் அவரது துணைவியாரும் நாட்டை விட்டுத் தப்பியோடி விட்டனர். இதன் மூலம் கிழக்கு ஐரோப்பாவில் தீவிர கம்யூனிஸ்ட் ஆட்சியின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

கிறிஸ்துமஸ் தினமான 25-12-89 அன்று ருமேனியாவில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட அதிபர் சௌசெஸ்குவுக்கும் அவரது மனைவிக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அவர்கள் மீது பயங்கர குற்றச்சாட்டுகள் குறித்து ரகசிய விசாரணை நடந்த பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் ருமேனியா வானொலி அறிவித்தது. "ஓ! எவ்வளவு அற்புதமான செய்தி. கிறிஸ்துவின் எதிரி, கிறிஸ்துமஸ் தினத்தன்று மடிந்தார்" என்று அந்தச் செய்தியாளர் அறிவித்தார். ருமேனிய கலவரத் தில் 80 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், 3 லட்சம் பேர் வரை காயமடைந்திருக்கலாம் என்றும் ஹங்கேரி நாட்டு வானொலி அறிவித்த போதிலும், சௌசெஸ்குவின் ஆட்சியில் சுகாதார அமைச்சராக இருந்த விக்டர் சியோபனு அவ்வளவு பேர் இருக்காதென்று மறுத்தார். ருமேனியாவில் அயன் இலியஸ்கு தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது. இடைக்கால அரசு தனது புத்தாண்டு அறிவிப்பாக அந்த நாட்டிலே தூக்குத் தண்டனையை அடியோடு ரத்து செய்தது. சர்வாதிகாரி சௌசெஸ்குவிற்கு வழங்கப்பட்ட மரண தண்டனைதான் கடைசி என்றும் அறிவிக்கப்பட்டது.

ருமேனியாவில் ஒரு சர்வாதிகாரி; தனது முடிவைச் சந்தித்த அதே கால கட்டத்தில் மற்றொரு சர்வாதிகாரிக்கு ஏற்பட்ட முடிவு குறித்தும் பார்க்கலாம். மத்திய அமெரிக்கா வில் உள்ள ஒரு சிறிய நாடு பனாமா. அந்த நாட்டின் அதிபராக அந்தக் காலகட்டத்தில் இருந்தவர் அதிபர் ஜெனரல் நொரீகா. அந்த நாட்டில் 89ஆம் ஆண்டு மே திங்களில் ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்ற போது வெற்றி பெற்ற க்வில்லெர்மோ எந்தராவை அதிபர் பதவி ஏற்க முடியாமல், ராணுவத்தின் உதவியுடன் நொரீகா

சர்வாதிகார ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். மேலும் நொரீகா போதைப் பொருள்களைக் கடத்துவதிலும், அவற்றை அமெரிக்காவில் பெருமளவில் விற்பதிலும் ஈடுபட்டு அதன் காரணமாக அவர் மீது அமெரிக்காவில் பல வழக்குகள் பதிவாகியிருந்தன.



கைதி நொரீகா

20-12-89 அன்று அமெரிக்க அதிரடிப்படை பனாமாவிற்குள் நுழைந்தது. அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் (இன்றைய அமெரிக்க ஜனாதிபதியின் தந்தை) சர்வாதிகாரி நொரீகாவைப் பதவி நீக்கம் செய்து விட்டதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் எந்தரா புதிய அதிபராகப் பதவியில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் அறிவித்தார். ஜெனரல் நொரீகா தலைமறைவாகி விட்டார். 22ந்தேதியன்று நொரீகாவின் அதிரடிப்படை ஓட்டலில் தங்கியிருந்த 64 அமெரிக்கர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டபோதிலும் மறுநாளே அமெரிக்காவின் அதிரடிப்படை திரும்பவும் அவர்களை விடுவித்தது. நொரீகா பனாமா நகரிலுள்ள வாடிகன் பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டு அரசியல் தஞ்சம் அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டு தஞ்சம் தந்தனர். அவருக்குத் தஞ்சம் தரக் கூடாதென்று அமெரிக்கா கூறிய போதிலும் வாடிகன் பிரதிநிதிகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளை அமெரிக்காக் கண்டத்திலே உள்ள நாடுகளும் ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஐ. நா. சபையே அமெரிக்காவின் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்தது. பனாமா நாட்டில் அமெரிக்கா தொடுத்த இந்தப் போரின் காரணமாக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள் என்று செய்திகள் அப்போது வெளிவந்தன. வாடிகன் தூதரகத்தில்

தஞ்சம் புகுந்திருந்த நொரீகாவைக் கைது செய்ய அமெரிக்க துருப்புக்கள் தூதுவரகத்தைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு வெடி முழக்கங்களைச் செய்து மிரட்டிக் கொண்டிருந்தன. நொரீகா வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருந்த பணம் கைப் பற்றப்பட்டது. பனாமா மக்கள் பெரும் பேரணி ஒன்றை நடத்தி வாடிகன் தூதுவரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். நொரீகாவை அன்னாசிப்பழத் தலைவர் என வர்ணித்து முழக்கம் எழுப்பினர். அமெரிக்கத் துருப்புகள் மட்டும் இடை புகுந்து தடுத்திராவிட்டால் அந்த மக்கள் வெள்ளம் வாடிகன் தூதுவரகத்தில் நுழைந்து நொரீகாவை நொறுக்கி எறிந்திருக் கும். நொரீகா மீது அவ்வளவு வெறுப்பு! 1988லும் 1987லும் நொரீகாவை எதிர்த்து நடந்த இருபெரும் மக்கள் ஆர்ப் பாட்டங்களில் 15 ஆயிரம் பனாமா மக்களைக் கொன்று குவித்து மக்கள் எழுச்சியை ஒடுக்கி விட்டார் நொரீகா. இந்த ஆத்திரம் அவர்களுக்கு!

பனாமாவின் புதிய அரசின் துணைத் தலைவர், வாடிகன் தூதுவருக்கு எழு திய கடிதத்தில் நொரீகாவைத் தங்களிடம் ஒப்படைக்கும் படி கேட்டுக் கொண்டார். அதிலே அவர் ஆலோசனை யாகக் கூறும்போது, அவர் கள் கொள்கைப்படி நொரீ காவை அவர்களாகவே ஒப் படைக்க வேண்டுமென் றும், நொரீகாவை மட்டும் அங்கே விட்டுவிட்டு அங்கே யுள்ள அலுவலர்களை வெளியே வந்து விடும்படியும், அமெரிக்கப்படை உள்ளே நுழைந்து அவர்களாகக் கைது செய்து கொண்டு போகட்டும் என்றும்



வாடிகன் தூதரகத்தில் நொரீகா தப்பிச் செல்லாமல் ராணுவத்தினர் பாதுகாக்கின்றனர்.

தெரிவித்திருந்தார். அதற்குப் பிறகு 11 நாட்கள் அங்கிருந்த நொரீகா பிறகு தன் மனைவிக்குப் போன் செய்து ராணுவ உடையைக் கொண்டு வரச் செய்து, அதனை அணிந்து கொண்டு வாடிகன் தூதுவரோடு சென்று அமெரிக்க ராணுவத்திடம் தாமாகச் சரணடைந்தார். 4-1-1990 அன்று அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் செய்தியாளர்களிடம் கூறும்போது ஜெனரல் நொரீகா கைது செய்யப்பட்டு அமெரிக்காவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளார் என்று அறிவித்தார். அவர் மீது போதைப் பொருள் கடத்தி விற்றது குறித்த வழக்கு முறையாக நடைபெறுமென்றும் அமெரிக்க அதிபர் தெரிவித்தார். சரண் அடைந்த சர்வாதிகாரி நொரீகா மியாமி நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டு கைதி எண். 41586 என்ற குறிப்புடன் மியாமி சிறையிலே அடைக்கப் பட்டார்.

19 தலைமைக் கவிதை; தணல் கவிதையானது!

12-5-1989 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு நிறைவேற்றிய தீர்மானம் பற்றி எட்டாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

26-5-90 அன்று தஞ்சை மாநகரில் நடைபெற்ற சமூக நீதி மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஜெயில் சிங் கூறும்போது "தமிழ்நாட்டு மக்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள், கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால் திறமைக்கும், வேகத்திற்கும், அன்புக்கும், அருளுக்கும், நல்ல நிர்வாகத் திறமைக்கும், பிரச்சினைகளை அணுகுவதற்குமுரிய ஒரு மகத்தான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு தலைவர் காலத்திலே வாழ்கின்றார்கள். அந்த அருந் தலைவருடைய பெயர்தான் கலைஞர் கருணாநிதி! கருணை எங்கே இருக்க முடியும்? யாரிடத்தில் அருள் இருக்கிறதோ, யாரிடத்தில் மனிதாபிமானம் இருக்கிறதோ அவர்களிடம் தான் கருணை குடி கொண்டிருக்கும். இங்கேயிருப்பது சாதாரண கடல் அல்ல. கருணைக் கடலே தலைவராக இருக்கிறார். கருணாநிதி அவர்கள் இன்றைக்கு கருணைக் கடலாகக் காட்சி அளிக்கின்றார். இந்தப் பெருந்தலைவ ரிடத்தில் நான் இப்போது ஒரு கோரிக்கை வைக்கிறேன். கலைஞர் கருணாநிதியின் ஆட்சிதான் டெல்லியிலே நடக் கின்றது. தேசிய முன்னணியின் ஒரு அங்கம் கலைஞர் கருணாநிதி. தயவுசெய்து மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, அதை சட்டமாக ஏற்படுத்து

வதற்கு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். அதைக் குறிப்பிட்டு நான் என்னுடைய உரையிலே கூறும்போது, டெல்லி செல்லும் போதெல்லாம் மண்டல் கமிஷன் பரிந் துரைகளைப் பற்றி நினைவூட்டிக் கொண்டிருப்பதாகவும், அதை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடை பெற்றுக் கொண்டிருப்பதாகவும், ஜெயில்சிங் அவர்களின் அன்புக் கட்டளையையேற்று அவரோடு இணைந்து விரைவில் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேறப் பாடுபடுவேன் என்றும் தெரிவித்தேன்.

அந்த முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்பதற்கு அடை யாளமாக 30-ஆம் தேதி நடைபெற்ற தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசிய பிரதமர் வி.பி.சிங், மண்டல் கமிஷன் பரிந்துரை உட்பட தேர்தல் அறிக்கையிலே அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தை யும் அரசு நிறைவேற்றியே தீரும் என்று அறிவித்தார்.

5-2-90 அன்று நான் டெல்லி சென்றிருந்தபோது துணைப் பிரதமராக இருந்த தேவிலால் அவர்களைச் சந்தித்து மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஆராய அமைக்கப் பட்டுள்ள அமைச்சரவை துணைக் குழுவிற்குத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டதற்குப் பாராட்டு தெரிவித்ததோடு, சீக்கிரம் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி அகில இந்திய அளவில் யார் யார் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று நிர்ணயிப்பது கஷ்டமாக இருக்கக்கூடும் என்பதால், ஒவ்வொரு மாநிலத்திலும் பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்பதற்காக வைத்திருக்கும் பட்டியலை அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் யோசனை தெரிவித்தேன். அவரும் அது நல்ல கருத்து; ஏற்றுக்கொள்ளலாம் என்றார். தொடர்ந்து அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, 1926-ஆம் ஆண் டிலேயே இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்தது திராவிட இயக்கம்தான் என்றும், அந்த இயக்கம் நடத்திய போராட்டத்தின் காரணமாகத்தான் நேரு அவர்கள்

அரசியல் சட்டத்திலே 1952-ஆம் ஆண்டு திருத்தம் செய்ய முன்வந்தார்கள் என்றும், எனவே, இடஒதுக்கீட்டு முறையின் முன்னோடிகள் திராவிட இயக்கத்தினர்தான் என்றும், எனவே, இந்தப் பிரச்சினையில் தேவிலால் அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் எழுமேயானால் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடம் விளக்கம் கேட் டால் அதற்கு உதவிடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தேன்.

இதில் மேலும் ஒன்றை நினைவு படுத்தவேண்டும். 12-6-1990 அன்று பிரதமர் வி.பி. சிங் அவர்கள் அனைத்து மாநில முதல் அமைச்சர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், பத்தாண்டு காலமாக மண்டல் கமிஷன் பரிந்துரை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது பற்றியும், தேசிய முன்னணி அரசு அந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும், எனவே மாநில அரசுகள் அந்த அறிக்கை மீதான தங்கள் கருத்துக்களை அந்த மாதத்திற்குள் தெரிவிப்பது அவசியம் என்பதையும் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதத்திற்குக் கழக அரசின் சார்பில் அந்த மாத இறுதியிலேயே பதில் எழுதப்பட்டது. அதைப் பற்றிக் கூட பிரதமர் அவர்கள் பேசும் போது, மத்திய அரசின் சார்பில் எழுதப்பட்ட கடிதத்திற்கு உடனடியாக பதில் எழுதிய மாநிலம் தமிழ்நாடு என்று பாராட்டிக் கூறியிருந்தார்.


1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாள் நாடாளு மன்றத்தின் இரண்டு அவைகளிலும் மண்டல் கமிஷன் பரிந் துரைகளின் அடிப்படையில் மத்திய அரசு நிறுவனங்களி லும், பொதுத் துறை நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை பிரதமர் வி.பி. சிங் வெளியிட்டார். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துவதில் முதல் கட்டமாக, மாநிலப் பட்டியல் களிலும், மண்டல் கமிஷன் அறிக்கையிலும் பொதுவாகக் கூறப்பட்ட வகுப்புகள் அடிப்படையாக வைக்கப்படும் என்றும், தங்களது நீண்டகால அனுபவங்களின் அடிப்படை

யில் மாநிலங்கள் தயாரித்து வைத்துள்ள சமுதாய ரீதியிலும், கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலை அடிப்படையாக ஏற்கக் காரணம் மண்டல் கமிஷன் பரிந் துரைகளைச் சிரமமின்றி அதே நேரத்தில் விரைவாக அமல்படுத்துவதற்காகத்தான் என்றும் பிரதமர் கூறினார்.

இதனை வரவேற்று நான் வெளியிட்ட அறிக்கையில், "சுமார் பத்தாண்டு காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளை பிற்படுத்தப்பட்ட மக்கள் நாடு தழுவிய அளவில் இயக்கங்கள் நடத்திய பிறகும், நிறைவேற்றுவதற்குத் தயக்கம் காட்டிய இ. காங்கிரஸ் ஆட்சியின் அலட்சியப் போக்கிற்கு முடிவு கட்டி, வி.பி. சிங் அவர்களின் தலைமையிலான தேசிய முன்னணி அரசு, தேர்தல் அறிக்கையில் அளித்த உறுதிமொழியை நிறை வேற்றும் வகையில் இன்றைய தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கதும், மகிழ்ச்சிக்குரியதுமாகும். அண்மையில் தமிழக சட்டப்பேரவையில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு, நிறைவேற்றப்பட்ட கழக அரசின் தீர்மானத் திற்கும், நாடு முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் ஏகோபித்த கோரிக்கைக்கும் கிடைத்துள்ள பெரும் வெற்றியாகும் இது. பிரதமர் வி.பி.சிங் அவர்களையும் மத்திய அரசையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டி வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டேன்.

இது தவிர பிரதமர் அவர்களுக்கும் தனியாகப் பாராட்டி நீண்டதோர் தந்தி ஒன்றினை அனுப்பி வைத்தேன்.

மண்டல் கமிஷன் என்று அமைக்கப் படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன் பாக- சரியாகச் சொல்ல வேண்டுமே யானால் 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ஆம் நாள் அலகாபாத் நகரில்




ஜெயில்சிங்

நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்தேன். அந்தக் கூட்டத்தில் நான் உரையாற்றும் போதே, "மத்திய அரசு வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. அந்த இட ஒதுக்கீட்டைப் பிற்படுத்தப்பட்டோருக்கும் அமல்படுத்த மத்திய அரசு முன்வந்து அதற்காவன செய்ய வேண்டுமென்று இந்த மாநாட்டின் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்" என்று வலியுறுத்தினேன். அந்தக் கருத்துத்தான் 7-8-1990 அன்று- அதாவது 17 ஆண்டுகளுக்குப் பிறகு நடைமுறைக்கு வந்தது.

இது குறித்த விவாதம் மாநிலங்களவையில் நடைபெற்ற போது பிரதமர் வி.பி. சிங், "டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், டாக்டர் ராம் மனோகர் லோகியா ஆகியோர் கண்ட கனவை நனவாக்க அரசு எடுத்த துணிச்சலான நடவடிக்கைதான் மண்டல் கமிஷன் பரிந்துரை மீது எடுக்கப்பட்ட முடிவாகும்" என்றார். "இந்த நாட்டில் சமூக நீதிக்குப் போராடிய மாபெரும் தலைவர் பெரியார் இராமசாமியினுடைய எண்ணங்களை நனவாக்குகின்ற மண்டல் கமிஷனுடைய அறிக்கை" என்றார் பிரதமர்.

மண்டல் குழு பரிந்துரைகளை மத்திய அரசு நிறை வேற்றியமைக்காக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளும் தீர்மானம் 20-8-1990 அன்று சட்டப்பேரவையில் கழக அரசின் சார்பில் நிறை வேற்றப்பட்டது. நான் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தின் மீது பேசிய அனைத்துக் கட்சியினரும் ஆதரித்தே உரையாற்றினர். தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வட மாநிலங்களில் ஆங்காங்கு உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மாணவர்களைத் தூண்டிவிட்டுக் கிளர்ச்சியில் ஈடுபடச் செய்தனர். பீகாரில் தொடங்கப்பட்ட இந்தக் கிளர்ச்சி வட மாநிலங்களில் பரவியது. கிளர்ச்சிக்காரர்கள் வன்முறைச் செயல்களில்



முதல்வர் கலைஞர் அவர்கள் துணைப்பிரதமர் தேவிலாலைச் சந்தித்துப் பேசுகிறார். அருகில் மத்திய அமைச்சர் முரசொலி மாறன்.

ஈடுபட்டனர். கிளர்ச்சியை இந்திரா காங்கிரசும் அதன் மாணவர் பிரிவும் தான் தூண்டி விடுகின்றன என்று பீகார் முதல்வர் லல்லு பிரசாத் தெரிவித்தார். கிளர்ச்சி டெல்லியிலும், குஜராத்திலும், ராஜஸ்தானிலும், உத்தரப் பிரதேசத்திலும், ஆந்திராவிலும், ஒரிசாவிலும் ஆங்காங்கு பரவியது. "அநீதியான கிளர்ச்சி" என்ற தலைப்பில் 18-8-1990 அன்று தினமணி எழுதிய தலையங்கத்தில் "மண்டல் கமிஷன் பற்றிய முன்னறிவிப்பை பிரதமர் வி.பி. சிங் வெளியிட்டது முதல் கடந்த பத்து நாட்களாக வட மாநிலங்களில் உயர் சாதிகளைச் சேர்ந்த மாணவர்கள் புதிய இடஒதுக்கீட்டு முறையை எதிர்த்து வன்முறைக் கிளர்ச்சியை நடத்தி வருகிறார்கள். இத்தகைய கிளர்ச்சிகளில் வழக்கமாக நடப்பது போல ரயில்கள் தடுத்து நிறுத்தப்பட்டும், பஸ்கள், தபால்பெட்டிகள், அரசு அலுவலகங்கள், வாகனங்கள் முதலியன தீக்கிரையாக்கப்பட்டும் வருகின்றன. இதுவரை பீகாரில் மூவர் உயிரிழந்துள்ளனர். நம்நாட்டின் பெரு நகர்களிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகைகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு மத்திய அரசு காலம் தாழ்த்தி வழங்கியுள்ள இடஒதுக்கீட்டின் சலுகையை எதிர்த்து எழுதி வருவது ஏமாற்றத்தை அளிக்கிறது" என்று எழுதியது.

ஆகஸ்ட் 24-ந் தேதியன்று டெல்லியில் இட ஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சிக்காரர்கள் நாடாளுமன்றத்தைச் சுற்றி வளைக்க முயற்சித்தபோது போலீஸ் தடியடி நடத்தி

கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கலைத்தனர். தொடர்ந்து 27-ந்தேதி டெல்லியில் பந்த் கடைப்பிடிக்கப் பட்டது. டெல்லியிலும், ஒரிசாவிலும் இட ஒதுக்கீடு கிளர்ச்சியில் வன்முறையில் ஈடுபட்ட ஏழு பேர் மாண்டனர். பீகாரிலும் 9 பேர் மாண்டனர். இமாசலப் பிரதேசத்தில் 3 பேர் மாண்டனர். உத்தரப் பிரதேசத்தில் 4 பேர் பலியானார்கள்.

அரசின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் செப்டம்பர் 3-ந்தேதி டெல்லியில் நடைபெற்று அந்தக் கூட்டத்தில் அரசு நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. இடஒதுக்கீட்டைக் கண்டித்து டெல்லியில் தேசபந்து குப்தா கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் தீக்குளிக்க முயன்றனர். இவர் களில் ஒருவருக்குக் கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டன.

மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்துவதற்கு இடைக் காலத் தடை விதிக்கக்கோரி டெல்லி உயர்நீதி மன்றத்தில் 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் இடைக்காலத்தடை விதிக்கமுடியாது என்று 21-9-90-இல் தீர்ப்பு கூறப்பட்டது. "மண்டல் கமிஷனை எதிர்ப்பவர்களு டன் பேரம் பேசி அவர்களுக்குச் சலுகை காட்டுவதைவிட உரிமை பறிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட இன மக்களின் நலனைக் காப்பதற்காக உறுதி யாக நின்று பிரதமர் பதவியி லிருந்து விலகுவேன்" என்று வி.பி. சிங் 26-9-90 அன்று தெரிவித் தார்.

தீக்குளிக்க விரும்பவில்லை என்று சொன்ன மாணவர்கள் மீது மற்றவர்கள் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்த நிகழ்ச்சியும் நடைபெற்றது. டெல்லியில் 7-வது வகுப்பு படித்து வந்த பிரவீண் கௌர் என்ற மாணவி, தான் தீக்குளிக்க விரும்பவில்லை என்று கூறியபிறகும், வேறு சில மாண வர்கள், அவர்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்ததாக அந்த மாணவி மரண வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு அலுவலகங் களிலும் மத்திய அரசு தொடர்புடைய நிறுவனங்களிலும்

வேலை வாய்ப்புகளில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்ற உரிமை வழங்கப் படுவதை எதிர்த்து நடத்தப்பட்ட நாடு தழுவிய உயர் வகுப்பார் கிளர்ச்சி கண்டு கொதித்துப் போன நான் அதேநேரம் செப்டம்பர் திங்களில் சென்னை கலை வாணர் அரங்கில் என் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் தலைமைக் கவிதையாக நான் பாடியது தனல் கவிதையாகவே ஆயிற்று.




டாக்டர் அம்பேத்கர்

மண்டல் குழு பரிந்துரையை
மைய அரசு ஏற்றமைக்கு
மகத்தான வெற்றி விழா!
மனிதாபிமானி வி.பி. சிங்கிற்கு
மனமார்ந்த நன்றியினைத்
தெரிவிக்கும் திருவிழா!
எனத் தொடங்கி;
அறிவார் கல்வியில்
அரசுப் பணிகளில்
பதுக்கிய இடமெல்லாம்
தம்மதே என்று
வதக்கியே பிறரது
வாழ்வினைப் பறித்த
ஓர் பிரிவு மக்களிடம்
போர் புரியத் தயங்கியதால்
செதுக்கிய சிலைகளாய்ச்
செயலற்றுக் கிடந்தோம் அன்று!
நடக்கும் இருளை
நகர்த்தும் பகல் போல்
நாளும் வந்தது
கோளும் தொலைந்தது!
ஒதுக்கியே தீர்வது
ஒடுக்கப்பட்டோருக்கு
இட ஒதுக்கீடு என;
எதிர்நீச்சல் போட்டு

எழுந்து நின்றது;
திராவிட இயக்கம்!
தென்னக மயக்கம்
தீர்க்க முனைந்தது!
தேடக்கிடைக்காத தெள்ளமுதாய்
தேமதுரக் கீத இசையாய்
தேன்பாகும் தினைமாவும் இணைந்ததொரு
தெவிட்டாத சுவை விருந்தாய்
திக்கற்ற மக்களுக்கு
திசை காட்டும் நிலவொளியாய்
வாய்த்திட்ட நற்பேறு
வாராது வந்த மாமணி
வகுப்புவாரி விகிதாசாரம் – பிற்பட்டோர்
வாழ்வுக்கு ஒரு வரப்பிரசாதம்!
வந்ததைத் தொலைப்போமோ ? வஞ்சக
வலைதனில் வீழ்வோமோ ?
வெந்ததைத் தின்று– வாயில்
வந்ததை உளறும் மனிதர்
தகுதி, திறமை என எழுதிப் பேசி;
நயமாக நஞ்சைக் கலக்கின்றார்,
நாட்டு மக்கள் உள்ளத்தைக் குழப்புகின்றார்.
“அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவாருண்டோ ?”
எனப் பாவேந்தன்
கேட்டதைத்தான்
நானும் கேட்கின்றேன்!
ஆண்டவன் படைப்பில்
அனைவரும் சமம் எனில்
அவன், உயர்ஜாதிக்கு மட்டும்
தங்கத்தால் மூளை செய்து
தலைக்குள்ளே வைத்தானா ?
மற்ற சாதிக்கெல்லாம்
மண்டைக்குள் இருப்பதென்ன ?
களிமண்ணா ? சுண்ணாம்பா ?
கங்கையைப் போல்
வடமொழியில் கவிதை தந்த
வால்மீகி, வியாசனெல்லாம்
பிரமதேவன் கால் பெற்ற பிள்ளைகளே!

வள்ளுவன் யார்? கம்பன் யார்?
இளங்கோவடிகள், ஒட்டக்கூத்தன்
இவரெல்லாம் யார்? யார்?
பிரமன் தலையில்
பிறந்ததில்லை இவர்கள்!
ஆனாலும் தமிழ் மொழியின் இமயங்கள்!
நாற்பத்து மூன்று ஆண்டுகளாய்
நாம் பெற்ற சுதந்திரத்தில்
தகுதிக்கும் திறமைக்கும்
தரப்பட்ட வாய்ப்புகளால்
கிழித்ததென்ன?
தைத்ததென்ன?
கிழித்துத் தைத்ததுதான் என்ன? என்ன? என்ன?
எதற்காகத் திறமை
அது தேவையா என்று – நாம்
என்றுமே கேட்டதில்லை!
ஆனால்
ஏகலைவன் வித்தை கற்க
எந்த சாத்திரமும் அனுமதிக்கவில்லை! அவன்
வில்லில் விஜயனையும் வெல்வான் என்று கட்டை
விரலைக் காணிக்கையாகப் பெற்றதென்ன நியாயம்?
தவம் செய்தான் சம்பூகச் சூத்திரன்
தகுதி அவனுக்கேது எனச் சீறி – அவன்
தலை வெட்டிச் சாய்த்த கதை
தன்மான உணர்வுக்குச் சவாலன்றோ?
கட்டை விரலோ, தலையோ
காணிக்கையாக – இந்நாளில் எவரும் கேட்டால்
பட்டை உரியும் – சுடுகாட்டில் அவர் கட்டை வேகும்!
"என்ன இது; என்றைக்குமில்லாத வெப்பம்
தலைமைக் கவிதையிலே?"
எனக் கேட்கத் தோன்றுகிறதா?
பிறகென்ன?
முதலுக்கே மோசம் வந்த பின்னர்
முயலாக ஆமையாகக் கிடத்தல் நன்றோ?
ஆயிரம் அடி பள்ளத்தில் விழுந்தவனை
கைதூக்கிக் கரையேற்றும் நேரத்தில்
கனமான பாறையொன்றை அவன் தலையில்



தந்தை பெரியார்

உருட்டி விட எத்தனிக்கும்
உலுத்தர்களைக் கண்டால்
ஓடஓட விரட்டத்தான் வேண்டும்!
ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்;
ஆனது ஆகட்டுமே – இந்த
ஆட்சிதான் போகட்டுமே!
மகுடமின்றி வாழமுடியா மனிதர்களா
நாம்?
சிசுவாகப் பிறக்கும்போதே –
சிம்மாசனத்துடனா பிறந்தோம்;
சீதை வில்லுடன் பிறந்தது போல்?
கொற்றக் குடையா? கொள்கையா?
எது வேண்டும் எனில்; கொள்கையை
விற்றுப் பிழைக்க வேறு நபர் பார் என்போம்!
ஆட்சி; வரும்! போகும்! நிலையல்ல!
அய்யா அண்ணா வகுத்த கொள்கை;
போகாது! வாழும் நிலையாக! எனவே
ஆட்சியில் இருப்பினும்
இல்லாதிருப்பினும்
தன்மானம் உயிரென மதிப்போம்
இனமானம் என்றுமே காப்போம்



மண்டல் கமிஷன் வெற்றிக்கு பாராட்டு தெரிவித்து முதல்வர் கலைஞர் அவர்களுக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் மாலை அணிவிக்கிறார். உடன் அமைச்சர்கள் மு.கண்ணப்பன், துரைமுருகன் மற்றும் டி.ஆர்.பாலு, எம்.பி., கோ.அய்யாவு, சோ.கி.மூர்த்தி.

என்ற தலைமைக் கவிதையின் இந்தப் பகுதிகளைக் கேட்டு; "என்ன இது ஆட்சியில் இருந்து கொண்டு, இவ்வளவு ஆத்திரமாக ஒரு கவிதை?" என்றனர். "ஆமாம்; அதைத்தான் கவிதையிலேயே சுட்டிக் காட்டியிருக்கிறேனே; ஆட்சி; வரும்; போகும்! அது பற்றிக் கவலை இல்லை" என்று பதில் அளித்தேன்.

20 விபத்துகளும்- வேதனை அரசியலும்!

சிலை வைப்பதென்பது உலக முழுதும் உள்ள நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் ஒரு நிலையெனினும்; அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் சிலை வைப்பது ஒரு பொழுது போக்குத் திருவிழா போலவே ஆகிவிட்டது என்பதில் எனக்கு மிகுந்த வேதனை எப்போதும் உண்டு.

வரலாற்றை நினைவூட்டும் சிலைகள், இலக்கியச் சிறப்பை எடுத்துக்காட்டும் சிலைகள், நாட்டுக்கு- சமுதாயத்துக்குப் பாடுபட்ட தியாகச் செம்மல்களின் சிலைகள், இனத்துக்கு, மொழிக்குப் பெருமையளிக்கத்தக்க சிலைகள் போன்ற வற்றை முக்கியமான இடங்களில் நிறுவுவது ஏதோ திராவிட இயக்கத்தார் மட்டுமே செய்யக்கூடிய காரியம் என்று சிலர் எழுதும்போதும் பேசும்போதும் எனக்குத் தோன்றுவதெல் லாம் அந்த நண்பர்கள் பல நகரங்களில் அமைக்கப்பட் டுள்ள சிலைகளின் பீடத்தில் பதிக்கப்பட்டுள்ள அடிக் கற்களில் செதுக்கப்பட்டுள்ள அமைத்தவர்கள் பெயர், வருடம், மாதம், தேதிகளைப் பார்த்திருக்க மாட்டார்களோ என்ற சந்தேகம்தான்.

சிலைகளால் சில நேரங்களில் மதப் பூசல் ஏற்படுவதும் - சில நேரங்களில் சாதிச் சண்டை நடப்பதும் - சிலை வைப் பதைச் சிலர் அரசியலாக்குவதால் அமளிகள் நிகழ்வதும் தவிர்க்க முடியாதவைகளாகவே ஆகிவிடுகின்றன.

உலகத் தமிழ் இரண்டாவது மாநாடு 1968-ஆம் ஆண்டு அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற

நேரத்தில் சென்னைக் கடற்கரையில் புதிதாகப் பத்து தமிழ்ச் சான்றோர், ஆன்றோர் சிலைகள் அமைக்கப்பட்டன. அதைப் பார்த்துப் பாராட்டாதவர் இல்லை எனலாம். அவற்றில் ஒன்றுதான் சிலை வைக்கப்பட்ட 33 ஆண்டுகளுக்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா அவர்களின் ஆலோசனைப்படி அகற்றப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டு, அவ்வாறே உரிய இடத்திலிருந்து அகற்றப்பட்ட "கண்ணகி" சிலையாகும்.

நான் இந்த அத்தியாயத்தை எழுதும்போது 2001-ஆம் ஆண்டு அந்தக் கலாச்சாரப் போராட்டம் தமிழகத்தில் அறவழியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நினைவு படுத்திக் கொள்கிறேன்.

அதைக் கலாச்சாரப் போராட்டம் என்று நான் குறிப் பிடுவது ஏதோ கற்பனையல்ல- திராவிடக் கலாச்சாரம்-ஆரியக் கலாச்சாரம் என்பதெல்லாம் வெறும் கற்பனைகள் அல்ல!

இதோ அடால்ப் இட்லர்; ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தின் தூதுவனாக நின்று பேசுவதைப் பாருங்கள். இட்லர் எழுதிய "மெயின் காம்ப்" என்ற புத்தகம் உலகத்தில் பிரசித்தி பெற்ற ஒரு சுய வரலாறு - தமிழில் "எனது போராட்டம்" என்று பொருள் கொள்ளலாம்.

அந்தப் புத்தகத்தில் இட்லர், ஒளிவு மறைவின்றி ஒன்றைச் சொல்வதைக் கூர்ந்து கவனித்தால்; நாம் ஏதோ "கலாச்சாரம்" என்று கதை கட்டுகிறோம் என்று எவரும் கூற முடியாது.

"இன்று நாம் காணுகின்ற கலாச்சாரம், விஞ்ஞானம், தொழில், திறமை, சிற்பம் இவை அனைத்தும் ஆரியர்களின் சிருஷ்டி சக்தியில் தோன்றியவைகளேயாகும். ஆரியனின் ஒளி பொருந்திய நெற்றியில் இருந்தே எந்தக் காலத்திலும் ஞானம் பிரகாசித்து அந்தகார இருளை அகற்றி வருகிறது. கலாச்சாரப் படைப்பாளிகள்- கலாச்சாரப் பாதுகாவலர்கள்-கலாச்சாரத்தை அழிப்போர் என மூன்று வகையாகப்

பிரித்தால் அந்த மானிட வர்க்கத்தில் ஆரியர்கள்தான் முதல் வகை இடத்தை வகிப்பார்கள். கலாச்சார மாளிகைக்கு அடித்தளம் அமைத்து சுவர்களையும் உருவாக்கியவர்கள் ஆரியர்கள்தான்."

இது இட்லரால் எழுதப்பட்ட "மெயின் காம்ப்" நூலில் கோடிட்டுக் காட்டப்படக்கூடிய ஆரிய கலாச்சாரப் பெருமை. அந்தக் கலாச்சாரம் மீண்டும் ஒரு படையெடுப்பை இப்போது திராவிடக் கலாச்சாரத்தின் மீது தொடங்கி யுள்ளது என்பதற்குச் சான்றுதான்; கண்ணகி சிலையை அகற்றியுள்ள செயல் என்பது என் வாதம்.

அண்ணா முதல்வராக இருந்த போதும், பின்னர் நான் அந்தப் பொறுப்பை 1969-ல், 1971-ல், 1989-ல், 1996-ல் என நான்கு முறை ஏற்று நடத்தியபோதும், சிலைகள் அமைப்ப தையோ, சிலைகள் இருப்பதையோ நான் பிரச்சினையாக ஆக்கியதில்லை. குறிப்பாக அண்ணா இருந்தபோது சைதை யைச் சேர்ந்த பவளவண்ணன் என்ற கலையார்வமிக்க நண்பர் - கழக ஆர்வலர் - அன்றைய ஜெமினி ஸ்டுடியோ முன்பு என் சிலை அமைத்திட பீடம் ஒன்று கட்டி முடித்து விட்டார்.

வெளி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் சென்றிருந்த நான், சென்னை வந்ததும் செய்தி அறிந்து, உடனடியாக அந்த பீடத்தை இடித்தெறியக் கூறிவிட்டு; எனக்குச் சிலை வேண்டாம் என்று அறிக்கையும் விடுத்து, சிலையைத் திறப்பதாக இருந்த அண்ணா அவர்களிடம் என் சிலை வேண்டாமென்பதற்கான விளக்கத்தையும் அளித்தேன்.

பின்னர் சில ஆண்டுகள் கழித்து தந்தை பெரியார் அவர்கள் பெரியார் திடலில் நடைபெற்ற ஒரு விழாவில்; அண்ணா சாலையில் எனக்குச் சிலை வைப்பதாக அறிவித்தார். நான் அதை அந்த விழாவிலேயே மறுத்துச் சொன்னேன். ஆனால் பெரியார் என் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், சிலை வைத்திட முயற்சிகளை மேற்கொள்ளு மாறு அன்னை மணியம்மையாருக்கும், வீரமணி அவர்களுக்கும் ஆணை பிறப்பித்தார்.

சிலை முழுமையாகத் தயாராகி அமைப்பதற்குள் பெரியார் மறைந்து விடவே; மணியம்மையாரும், வீரமணியும் குன்றக்குடி அடிகளார் அவர்களை வைத்து அண்ணா சாலையில் என் சிலையைத் திறந்து வைக்கச் செய்தார்கள். அந்த விழாவில் கலந்து கொள்ளாமல் நான் வெளியூர் சென்று விட்டேன்.

பின்னர் 1987-ல் அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். மறைந்த நாளில்; அ.தி.மு.க.வைச் சேர்ந்த சிலரின் தூண்டுதலால் அந்தச் சிலை உடைக்கப்பட்டு விட்டது. பிறகு அதனை வைத்திட நான் ஒப்புக் கொள்ளவே இல்லை.

இந்தச் சிலைகள் விவகாரத்தில் என் சிலைக்கு மறுப்புத் தெரிவித்திருப்பேனேயல்லாமல்; அ.தி.மு.க. கட்சியினரைப் போல சிலை வைப்பதில் என் ஆட்சியில் என்றைக்கும் விவகாரம் செய்ததில்லை நான்!

குறிப்பாக எம்.ஜி.ஆர். சிலையை ஆர்.எம்.வி. அவர்களின் எம்.ஜி.ஆர். கழகமோ, திருநாவுக்கரசு அவர்களின் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வோ அமைப்பதற்கு ஜெயலலிதா ஆட்சியில் அனுமதி மறுக்கப்பட்டு அந்த எம்.ஜி.ஆர். சிலைகள்கூட கடத்தப்பட்ட கதைகள் எல்லாம் உண்டு.

ஆனால் 1990-ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அ.தி.மு.க. சார்பில் நண்பர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் 9-1-1990 அன்று எழுதிய கடிதத்தில், சென்னையில் அ.தி.மு.க. சார்பில் எம்.ஜி.ஆர். சிலை அமைத்திட அண்ணா சாலையில் இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு அதில் ஒரு இடத்தை ஒதுக்கி அனுமதி தருமாறு கேட்டிருந்தார். அதனை உடனடியாக ஏற்று அவர் கோரிய இரண்டு இடங்களில் ஒன்றில் எம்.ஜி. ஆர். சிலை அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கினேன். அந்தச் சிலையை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தலைமையில் ராஜீவ் காந்தி அவர்கள் திறந்து வைத்தார் என்பது மட்டும் குறிப்பிடத்தக்கது அல்ல; இதில் எல்லாம் நான் அரசியல் கண்ணோட்டம் கொண்டிருந்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



மத்திய அமைச்சர் உன்னிகிருஷ்ணனிடமிருந்து எம்.ஜி.ஆர். சிறப்பு தபால் தலையை முதல்வர் கலைஞர் அவர்கள் பெற்றுக்கொள்கிறார். உடன் தமிழக அமைச்சர்கள் மற்றும் டி.ஆர்.பாலு எம்.பி.

2000-ஆம் ஆண்டில் கூட செல்வி ஜெயலலிதா தி.மு.க. ஆட்சிக்கு சிலை விவகாரத்தில் ஓர் அறை கூவல் விடுத்ததுண்டு. அதாவது 'திண்டுக்கல்லில் எம்.ஜி.ஆர். சிலை அமைத்து அதனை ஜெயலலிதா திறந்து வைக்க அனுமதி கேட்டுக் கடிதம் அனுப்பினார்கள். அக் கடிதம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, ஆவன செய்திட அனுப்பப்பட்டது. அனுமதி தருவதற்குச்சிறிது தாமதமானதும்; "சிலையைத் தாங்கள் கேட்ட இடத்திலேயே வைத்திட போராட்டம் நடத்துவோம்" என்று ஜெயலலிதா அவசரப் பட்டு அறிக்கை விடுத்தார்.

நான் உடனே, மாவட்ட ஆட்சியரிடம் தொடர்பு கொண்டு, அவர்கள் கேட்ட இடத்தை அனுமதிக்குமாறு கூறி; அவ்வாறே வழங்கி, அங்கே எம்.ஜி.ஆர். சிலையும் அமைக்கப்பட்டது.

இந்தப் பெருந்தன்மையை செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசு; எப்போதாவது எதிர்க்கட்சிகளிடம் காட்டியதுண்டா என்பதை நடுநிலையாளர்கள் இன்றில்லாவிடினும் என்றாவது சிந்திக்கத் தவற மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவுக்கு மறுநாள் திருவள்ளுவர் திருநாள் என்று தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்டவாறு அந்த நாளில் வள்ளுவர் விருதும் மற்றும் தமிழ்ச் சான்றோர் விருதுகளும் வழங்கப்பட்டதை யொட்டி 15-1-1990 அன்று திருவள்ளுவர் திருநாளில் பெரும் புலவர் வ.சுப. மாணிக்கம் அவர்களும், கோபி பேராசிரியர்

ஆனந்தன் அவர்களும் விருது பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கிடையே பெரும் புலவர் வ.சுப. மாணிக்கம் தமிழர்கள் அதிர்ச்சியடையக் கூடிய நிலையில் திடீரென மாரடைப்பால் மறைந்தார். அவரது குடும்பத்தார் விழாவுக்கு வந்திருந்து விருதினைப் பெற்றுக் கொண்டார்கள். அந்த விழாவில் சிறந்த நூலாசிரியர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சியும் இணைந்து நடைபெற்றது. அதன்படி என்னுடைய அன்புச் சகோதரர், நான் "அரங்கு" என்று பாசத்தோடு அழைக்கும் என் பள்ளித் தோழர்- என் ஊர்க்காரர், என் உணர்வோடு கலந்தவர் இராம. அரங் கண்ணல், எழுத்தாளர் சங்கத் தலைவர் வாசவன், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், திலகவதி, யோகநாதன், கவிஞர் நீலமணி, துரைமாவிறையன், மனசை ப.கீரன் ஆகியோர் பரிசு பெற்றவர்களில் முக்கியமானவர்கள். அந்த விழாவில் வள்ளுவர் கோட்டம் உள்ள சாலைக்கு வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை என்று பெயர் சூட்டியும் அறிவிப்பு செய்தேன்.

17-1-90 அன்று அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் அஞ்சல் தலை வெளியீட்டு விழா நடைபெற்றது. மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் கே.பி. உன்னி கிருஷ்ணன் அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டார். எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் இருந்த நீண்டகாலத் தொடர்புகளையெல்லாம் நினைவூட்டியதோடு தேசியம், ஒருமைப்பாடு ஆகியவற்றில் அனைத்து மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படத்தக்க விதத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் பெயரில் வடபுலத்தில் நினைவுச் சின்னங்களை அமைக்க வேண்டுமென்று மத்திய அமைச்சரை அந்த விழாவில் நான் கேட்டுக் கொண்டேன்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களிலும் மத்தியிலும், பெரும்பான்மையான மாநிலங்களிலும் காங்கிரஸ் அரசு அமைய முடியாத சூழ்நிலையில் மாநிலங்களில் கவர்னர்களாகப் பணியாற்றியவர்கள் தாங்களாகவே பதவி

விலகல் கடிதங்களை அனுப்பி வைக்கும்படி குடியரசுத் தலைவரால் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அந்த வகையில் அரியானா ஆளுநராக இருந்த எச்.ஏ. பராரி, ஆந்திர ஆளுநர் குமுத் பென் ஜோஷி, கர்நாடக ஆளுநர் பி.வெங்கட சுப்பையா ஆகியோர் 16-1-90 அன்று தங்கள் பதவி விலகல் கடிதங்களை அனுப்பி வைத்தனர். இவர்களைத் தொடர்ந்து தமிழ்நாடு ஆளுநர் பி.சி.அலெக்சாண்டர் உட்பட பல மாநிலங்களின் ஆளுநர்களும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை அனுப்பி வைத்தனர். இதில் முதற் கட்டமாக காஷ்மீர் மாநில ஆளுநராக இருந்த கே.வி. கிருஷ்ணா ராவின் பதவி விலகலைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டு, ஜக்மோகன் அவர்களை கவர்னராக நியமித்தார். 1-2-90 அன்று மேலும் 16 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களைக் குடியரசுத் தலைவர் அறிவித்தார். குறிப்பாக முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் அவர்கள் மராட்டிய மாநில ஆளுநராகவும், கிருஷ்ணகாந்த் அவர்கள் ஆந்திர மாநில ஆளுநராகவும், திருமதி சந்திரவதி புதுவை மாநில ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் இந்தப் பட்டியலில் தமிழக ஆளுநரின் பெயர் குறிப் பிடப்பட வில்லை. அதற்குப் பிறகு மூன்று மாதங்கள் கழித்து பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தமிழக ஆளுநராகக் குடியரசுத் தலைவ ரால் 22-5-90 அன்று நியமிக்கப்பட்டார். ஆளுநர் அலெக் ஸாண்டர் அவர்கள் கழக அரசு பொறுப் பிற்கு வருவதற்கு முன்பே இருந்த ஆட்சிக் காலத்தில் நியமிக்கப் பட்டவர் என்றபோதி லும் அவர் கழக அரசி டம் நடந்து கொண்ட பண்பைப் பாராட்டி, அவர் இங்கிருந்து செல் வதற்கு முன்பாகத் தேநீர்



ஆளுநர் அலெக்சாண்டருக்கு மாலை அணிவித்து முதல்வர் கலைஞர் அவர்கள் வழியனுப்பி வைக்கிறார்.

விருந்து ஒன்றினை அவசர அவசரமாக ஏற்பாடு செய்தேன். அவரையும், அவரது துணைவியாரையும் அழைத்து தேநீர் விருந்து அளித்ததோடு, திருவாரூர் தேர் போன்று செய்யப் பட்ட அரியதொரு பரிசினை அவருக்கு வழங்கினேன். அந்தப் பிரிவு உபசார விழாவில் நான் பேசியது இன்னமும் என் நினைவிலே இருக்கிறது.

"இந்த நாளை எந்த நாள் என்று வர்ணிப்பது? வர்ணித்துப் பழக்கப்பட்ட எனக்கே சிரமத்தைத் தருகிறது. வானத்தி லிருந்து மழைத்துளிகளும் விழுந்து கொண்டிருக்கும். சூரிய வெளிச்சமும் இருந்து கொண்டிருக்கும். அதனை ஊமை வெயில் என்பார்கள். மழையினால் குளிர்ச்சி ஏற்படாது. அதே நேரத்தில் அதற்கு மாறாக ஒரு புழுக்கம் இருக்கும். நாம் சோலையிலே அமர்ந்து விருந்துண்ட நேரத்தில்கூட புழுக்கம் இருந்தது. அந்தப் புறப் புழுக்கத்தைவிட நம்முடைய அகத்திலே ஏற்பட்ட புழுக்கம் அதிகமாக இருந்த காரணத் தினால் புறப் புழுக்கத்தை நம்மால் தாங்கிக்கொள்ள இயலவில்லை" என்று என் பேச்சைத் தொடங்கி, அலெக்சாண்டர் அவர்களின் தனிச் சிறப்புகளையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டினேன். அவரை ஒரு ஆளுநராக மாத்திரம் நான் பார்த்ததில்லை, என்னுடைய மூத்த சகோதர ராகவே கருதினேன் என்று குறிப்பிட்டபோது அவரே கலங்கிவிட்டார். "சரித்திர கால அலெக்சாண்டர் நாடு களைக் கவர்ந்தார், இந்த அலெக்சாண்டரோ நம்முடைய இதயங்களையெல்லாம் கவர்ந்தார்" என்று கூறி உரையை நிறைவு செய்தேன்.

அலெக்சாண்டர் நன்றி தெரிவித்து ஆற்றிய உரையில், "எனக்கு மரியாதை தெரிவிப்பதற்காக ஒரு பெரிய நிகழ்ச் சியை இங்கே ஏற்பாடு செய்துள்ள முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச் சராகக் கலைஞர் அவர்களைப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்கு முன்புவரை அவருக்கும் எனக்கும் எந்தவித பரிச்சயமும் கிடையாது. ஆனால் நிச்சயமாக அவர் ஒரு பெரிய செல்வாக்கு மிக்க கட்சியின் தலைவர் என்பதை நான்

அறிவேன். அவருக்கு என்னைப் பற்றிய தவறான எண்ணங் கள்- இந்தக் கவர்னர் பல ஆண்டுக் காலம் இந்திரா காந்தியிடமும், ராஜீவ் காந்தியிடமும் பணி புரிந்தவன் என்பதால் சற்று எச்சரிக்கையோடு கவனிக்கப்பட வேண்டி யவர் என்றுகூட எண்ணியிருக்கலாம். இதுபற்றி நான் விளக்கம் அளிப்பதற்கு முன்பாக அவர் ஒரு தலைசிறந்த, பண்பட்ட நிர்வாகி என்பதால் அவரே என்னைப்பற்றிப் புரிந்து கொள்ளட்டும் என்று இருந்தேன். ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து கொண்டு நானும் அவரும் பழகினோம். நான் அவரிடமிருந்து தொடர்ச்சியாக நிபந்தனையற்ற ஆதரவு, ஒத்துழைப்பு, உதவி ஆகியவைகளைப் பெற முடிந்தது. எந்த நேரத்திலும், எந்த விஷயத்திலும் எங்களிடையே ஒரு முழுமையான நேர்மையான உறவே நிலவி வந்தது" என்று கூறினார்.


விழா நடத்தியதோடு விட்டு விடாமல் அவரை வழி யனுப்பி வைப்பதற்காக சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கே சென்றோம். நானும் அமைச்சர்களும் வண்டி புறப்படுகிற வரை காத்திருந்தோம். புகை வண்டி 12 நிமிடம் தாமதமாகச் செல்லும் என்று தெரிந்து அலெக்சாண்டர் புகைவண்டியி லிருந்து இறங்கி நான் நிற்கும் இடத்திற்கே வந்து "இந்த 12 நிமிடங்களையும் உங்களோடு கழிக்கலாம் என்று வந்தேன்" என்று கூறியபோது நானும் அவரும் உணர்ச்சிவயப்பட்டு விட்டோம். ஆளுநருடன் ஒரு முதலமைச்சரின் உறவு எப்படி இருந்தது என்பதை விளக்குவதற்காகத்தான் இதனைக் குறிப்பிட்டேன்.

இவரது உறவு இப்படியிருந்ததென்றால், இவருடைய இடத்திற்கு வந்த ஆளுநர் பர்னாலா அவர்களும் இவருக்கு எந்தவிதத்திலும் மாறுபட்டவர் அல்ல என்பதைப் பின்னர் நிரூபித்துக் காட்டினார். 24-5-90 அன்று பர்னாலா அவர்கள் ராஜாஜி மண்டபத்தில் தமிழக ஆளுநராகப் பதவியேற்றார்.

இந்திய தேர்தல் அதிகாரி ஆர்.வி.எஸ். பெரிசாஸ்திரி அவர் கள் ஜனவரி 18-ந்தேதி வெளியிட்ட பத்திரிகைச் செய்தியில் அடுத்த கட்டமாக அருணாசலப் பிரதேசம், பீகார், குஜராத்,

இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மராட்டியம், ஒரிசா, ராஜஸ்தான் ஆகிய எட்டு மாநிலச் சட்டப் பேரவை களுக்கும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் பிப்ரவரி 27-ஆம் தேதியன்று தேர்தல் நடைபெறுமென்று அறிவித் தார்.

27-2-90 அன்று நடைபெற்ற புதுவை மாநிலத் தேர்தலில் தி.மு. கழகம் 9 இடங்களிலும், அதன் தோழமைக் கட்சி களான ஜனதா தளம் 4 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 2 இடத்திலும் வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சி 11 இடங்களிலும், அ.தி.மு.க. 13 இடங்களில் போட்டியிட்டு 3 இடங்களிலும் வெற்றிபெற்றன. சுயேச்சையாக வெற்றி பெற்ற ஒருவரும் கழகக் கூட்டணியை ஆதரிப்பதாகத் தெரிவித்து விட்டார். 1-3-90 அன்று சென்னை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற்ற புதுவை மாநில சட்ட மன்றக் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் டி. ராமச்சந்திரன் போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ப.மாணிக்கம், ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் எச்.வி. ஹண்டே ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர் களை வாழ்த்திப் பேசினர். புதுவை மாநிலத்தின் தி.மு.கழக முதல்வராக டி.ராமச்சந்திரன் பதவியேற்ற விழாவில் நானும் சென்று கலந்து கொண்டேன். அமைச்சரவையில் ஆர்.வி. ஜானகிராமன், வி.பெத்த பெருமாள், என். மணிமாறன், பி.ராஜவேலு, ஆர்.கமலக் கண்ணன் ஆகியோர் இடம்பெற்றனர்.



புதிய ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவை முதல்வர் கலைஞர் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்கிறார்.

சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகளிலிருந்து இந்திரா காங்கிரஸ் கட்சி மராட்டிய மாநிலம் ஒன்றைத் தவிர மற்ற மாநிலங் களில் படுதோல்வி அடைந்ததைப் புரிந்து

கொள்ளலாம். குஜராத் மாநிலத்தில் ஜனதா தளமும், பா.ஜ.க.வும் சேர்ந்து சிமன்பாய்படேல் அவர்கள் தலைமையில் கூட்டணி அரசு அமைத்தது. ராஜஸ்தான் மாநிலத்தில் பா.ஜ.க. அமைச்சரவை பைரோன்சிங் ஷெகாவத் தலைமையில் ஆட்சி அமைத்தது. ஒரிசா மாநிலத்தில் ஜனதாதள ஆட்சி என்னுடைய நண்பர் பிஜு பட்நாயக் அவர்கள் தலைமையில் அமைந்தது. இமாசலப் பிரதேசத்தில் பா.ஜ.க. தலைவர் சாந்தகுமார் தலைமையிலே கூட்டணி ஆட்சி அமைந்தது. மராட்டியத்தில் இ.காங்கிரஸ் ஆட்சி சரத்பவார் தலைமையிலே அமைந்தது. அவருடைய சொந்தச் செல்வாக்கினால்தான் அந்த மாநிலத்தில் மட்டும் அந்தக் கட்சியால் வெற்றிபெற முடிந்தது. மத்தியப் பிரதேசத் தில் பா.ஜ.க. அமைச்சரவை சுந்தர்லால் பத்வா தலைமையில் அமைந்தது. பீகார் மாநிலத்தில் ஜனதா தளம் பா.ஜ.க. ஆதரவுடன் லல்லு பிரசாத்யாதவ் தலைமையில் ஆட்சி அமைத்தது.

ஆனால் இந்தத் தோல்வியை மறைக்க ஜெயலலிதா முன்கூட்டியே கையில் எடுத்துக் கொண்ட ஆயுதம் என்ன தெரியுமோ? லாரியைக் கொண்டு அவருடைய காரின் மீது மோதி அவரைக் கொலை செய்ய முயன்றதாக ஒரு பழியைத் தூக்கிப் போட்டார். 24-2-90 அன்று விடியற்காலை சுமார் 4.30 மணி அளவில் மீனம்பாக்கம் அருகில் திரிசூலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த லாரி ஒன்று தாம்பரம் பக்கத்திலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த ஜெயலலிதாவின் கார் மீது மோதி அவரைக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றதாக அவரால் கூறப்பட்டது. புலன் விசாரணை செய்த போலீசார் இது தற்செயலாக நடைபெற்ற விபத்து என்றும், லாரி டிரைவர் மீது முறையாக நீதிமன்றத் தின் முன்னால் வழக்குத் தொடுக்கப்பட்டு, டிரைவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் அவருக்கு தண்டனை யும் வழங்கப்பட்டுவிட்டது.

ஜெயலலிதா இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசியல் ஆதாயத்திற்காகக் கூறுவது அதுதான் முதல் தடவையா என்றால் கிடையாது. எம்.ஜி. ஆர். மறைந்த பிறகு மட்டும்

ஜெயலலிதா தன் மீது பல கொலை முயற்சிகள் நடைபெற்றதாகக் கூறியிருக்கிறார்.

9-4-88 தேதியிட்ட 'மக்கள் குரல்' ஏட்டில் ஒரு செய்தி! அதற்குத் தலைப்பே, "இன்னொரு கொலை முயற்சி - திருச்சிக்கு அருகில் நள்ளிரவில் சம்பவம்! ஜெயலலிதா கார் மீது பஸ் மோதல், டிரைவர் கைது!". இந்தச் செய்தியினை ஜெயலலிதா செய்தியாளர்களிடம் கூறியபோது அந்தச் செய்தியாளர், அது விபத்துதானே என்கிறார். அதற்கு ஜெயலலிதா, ஆமாம், ஆனால் தனியாருக்குச் சொந்தமான ஒரு ஆம்னி பஸ் அது. அந்தப் பேருந்தின் உரிமையாளர், தனது அரசியல் விரோதி, ஆர்.எம். வீரப்பனின் நெருங்கிய நண்பர் என்று பதிலளித்தார்.

10-4-1988 தேதியிட்ட மாலை முரசு இதழில் "திருச்சியில் மூப்பனார் நடத்திய கூட்டத்தை விட எனக்கு அதிகமான அளவு கூட்டம் கூடியதால் பொறாமை கொண்ட மூப்பனார் திட்டமிட்டு போலீசாரைத் தூண்டிவிட்டு எங்கள் தொண்டர்களைத் தடியால் காயப்படுத்தியிருக்கிறார் என்று ஜெயலலிதா சொன்னார்" என்று செய்தி வெளியிடப் பட்டிருந்தது.

16-5-1988 தேதியிட்ட மாலை முரசு இதழில் எம்.ஜி.ஆர். அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது ஜெயலலிதா அவரைப் பார்க்கச் சென்றதாகவும், அப் போது ஜானகி அம்மையார் இவரைத் தாக்கும்படி ஜேப்பி யாரையும், அடியாட்களையும் ஏவி விட்டதாகவும், திராவ கத்தை வீசி இவரைக் கொலை செய்ய ஜானகி அம்மையார் சொன்னதாகவும் ஒரு கொலைக் குற்றச்சாட்டை ஜெயலலிதா சொல்லி அது வெளி வந்திருந்தது.


பிரபல ஆங்கில வார இதழ், இல்லஸ்ட்ரேடட் வீக்லி, மே 1, 1988 தேதிய இதழுக்கு ஜெயலலிதாவே ஒரு பேட்டி யளித்திருக்கிறார். எம்.ஜி.ஆர். படுகொலை செய்யப்பட்டார் என்று ஜெயலலிதா சொன்னதை அந்த இதழின் அட்டைப் படத்திலேயே வெளியிட்டு, ஜெயலலிதாவின் பேட்டி அந்தப்



புதுவை சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்களுடன் பொருளாளர் சாதிக்பாட்சா, பேராசிரியர் அன்பழகன், டாக்டர் எச்.வி.ஹண்டே மற்றும் ப.மாணிக்கம்.

பத்திரிகையிலே வந்தது. அதில் பத்திரிகையாளர், எம்.ஜி.ஆர். விஷம் வைத்துக் கொல்லப்பட்டதாகச் சொல்கிறீர்களே, என்று கேள்வியைத் தொடங்கியதுதான் தாமதம், உடனே ஜெயலலிதா, "ஆமாம், இது அடிப்படையற்ற குற்றச்சாட்டு அல்ல. உண்மையானது. ஆதாரம் இருப்பதால்தான் விசாரணை வைக்கப்பட வேண்டுமென்று கேட்கிறோம். எம்.ஜி.ஆரின் மரணம் பற்றி ஆராய கவர்னர் அரசு விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும். எக் காரணம் கொண்டும் இந்த கவர்னர் விசாரணைக் கமிஷன் நியமிக்கத் தவறுவாரேயானால், சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் விசாரணைக் கமிஷன் நியமிப்போம்" என்று பதிலளித்தார்.

மீனம்பாக்கம் லாரி விபத்து சம்பவம் குறித்து சட்டமன்றத்திலும் அ.தி.மு.க.வினர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து அதற்காக வேறு மாநில நீதிபதியைக் கொண்டு அல்லது உச்சநீதி மன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள். யாரை வேண்டுமென்றாலும் வைத்து விசாரணை வைக்கத் தயாராக இருப்பதாக நான் அவையிலேயே பதில் அளித்தேன். ஆனால் அதற்குப் பிறகும் அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்கள்.



புதுவை சட்டமன்றக் கட்சித் தலைவர் தெ.ராமச்சந்திரன், தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாலை அணிவிக்கிறார்.

25-3-1990 தேதிய இந்து இதழ் "ஒரு சாதாரண சாலை விபத்தை கொலை முயற்சியெனக்கூறி அதைப் பெரிது படுத்தி அதில் அரசியல் ஆதாயம் தேட முயற்சித்த எதிர்க் கட்சிகளின் திட்டங்களைத் தன்னுடைய சாதுர்யத்தால் முதல்வர் கருணாநிதி முறியடித்துள்ளார்" என்று எழுதியது.

21 வெள்ளை இருட்டில் கறுப்பு விடியல்!

புத்தகங்கள் வெளியிடுவது; இன்றையதினம் பல்வேறு பதிப்பகத்தினர் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பொலிவு கூட்டிப் பெருமை தேடிக் கொள்கிற ஒன்றாக மாறியிருக்கிறது. பளபளப்பான அட்டை- கண்ணைக் கவரும் அட்டைப்படம்- வழவழப்பான தாள்- விளக்க ஓவியங்கள் - முத்துப்போல் அச்சுக்கோப்பு- இப்படி எல்லா வகையிலும் எழிலார்ந்த புத்தகப் பதிப்புகளைக் காண முடிகிறது.

ஆனால் திராவிட இயக்கத் துவக்க காலத்தில் கை பட்டால் கிழிந்து விடக்கூடிய நிலையில்தான்; அழகற்ற வடிவத்தில் பெரியாரின் நூலாயினும், அண்ணாவின் நூலாயினும் வெளிவந்து கொண்டிருந்தன.

அந்த நிலையை மாற்றி அமைத்து எங்களாலும் எழில் கூட்டி, புத்தகங்களை வெளியிட முடியும் என அறைகூவல் விடுவது போல திருச்சியில் "திராவிடப் பண்ணை" என்ற ஒரு புத்தகப் பதிப்பகம் தோன்றியது. வெற்று முழக்கமாக இல்லாமல் அண்ணா எழுதிய பல நூல்களையும், இயக்க எழுத்தாளர்களின் புத்தகங்களையும் மற்ற பதிப்பகங்களை வெற்றி கொள்கிற அளவுக்கு வெளியிட்டவர் என் இனிய நண்பர் முத்துகிருஷ்ணன் என்றாலும்; அவரை எல்லோரும் "பண்ணை" என்றே அழைப்போம், அண்ணா உட்பட!

எங்களிடம் உண்மையிலேயே பண்ணைக்காரர்கள் இல்லாத குறையை "பண்ணை" என்று அவரை அழைப்பதின் மூலம் போக்கிக் கொண்டோம் என்றே சொல்லலாம்.

உலகில் தோன்றிய மாபெரும் இயக்கங்கள் பலவும் இருட்டு குகைகளில், இருண்ட வீடுகளில், கையெழுத்துப் பிரதிகள் நூற்றுக்கணக்கில் எடுத்து; தம் கருத்துக்களைப் பரப்பியது போலவே; இங்கே திராவிட இயக்கத்தின் நூல்களாயினும், ஏடுகளாயினும் மிக ரகசியமாக அச்சிடப்பட்டு; நூற்றுக் கணக்கானவர் மத்தியிலே விநியோகிக்கப் பெற்று - இறுதியாகத்தான் ஒரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து "திருச்சி திராவிடப் பண்ணைகள்" போன்ற திருப்புமுனைகள் தோன்றின என்பது நமது பிரச்சார வரலாற்றில் முக்கிய கட்டமாகும்.

திருச்சி மாவட்டத்தில் என் உயிருக்குயிரான இரண்டு முத்துகிருஷ்ணன்கள் உண்டு - இன்னொருவர் குளித்தலையில் 1957ல் பொதுத் தேர்தலில் கழக வேட்பாளராக நான் முதன் முதலில் போட்டியிட்ட போது தமிழ்ச்சுடர் இளமுருகு பொற்செல்வியுடன் இணைந்து பாடுபட்டு என் வெற்றிக்காக உழைத்த குளித்தலை முத்துகிருஷ்ணன். அந்த இரண்டு முத்து கிருஷ்ணன்களும் இளமுருகும் இன்றில்லை; ஆனால் என் இதயத்தில் என்றுமிருப்பார்கள்.

வாழ்க்கை என்பதில் துன்பமும் மகிழ்ச்சியும் மாறி மாறி வந்தால்தான் அது வாழ்க்கையாகிறது. வாழ்க்கை எப்போதுமே மகிழ்ச்சியாகவே இருக்க வேண்டுமென்றால்; துன்பத்தையும் மகிழ்ச்சியாக எடுத்துக் கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்றாக வேண்டும்.

நெருங்கிய நண்பர்களை இழந்த துயரத்தை மாற்றக்கூடிய அளவுக்கு; என்னைப்போல் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தொடர்ச்சியாக வேறு பல நிகழ்ச்சிகள் அணிவகுத்திடுவது இயல்பு!

அப்படியொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சிக்கு நான் அழைக்கப்பட்டேன். கழக உடன்பிறப்புகள், முன்னோடிகள்

இல்லங்களில் நடைபெறுகிற திருமண நிகழ்ச்சிகளில் எப்படி நான் உற்சாகத்துடன் கலந்து கொள்வேனோ அதைப் போன்ற ஒரு இனிய நிகழ்ச்சிக்கு மதுரைக்குச் சென்றேன்.

அதுதான் 31-1-1990 அன்று நடைபெற்ற புரட்சிக் கலைஞர் விஜயகாந்த்தின் திருமண நிகழ்ச்சி. இயக்கப் பணிகள் குவிந்து கிடந்த நிலையிலும், விஜயகாந்த் அழைப்பையேற்று மதுரை சென்று அவரது மணவிழாவுக்குத் தலைமை வகித்து நடத்தினேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவராக இருந்த திரு. மூப்பனார் அவர்கள் அந்த மணவிழாவுக்கு முன்னிலை வகித்தார்.

மணவிழாவில் நான் பேசும் போது; "விஜயகாந்த்துக்கும், காங்கிரஸ்காரரான திரைப்படத் தயாரிப்பாளர் இப்ராகிம் ராவுத்தருக்கும் உள்ள நட்பு ராஜா தேசிங்குக்கும் மகமத் கானுக்கும் உள்ள நட்பினைப் போன்றது" என்று தெரிவித்தேன். "திருமணத்திற்கு நான் வரவேண்டுமென்பது விஜயகாந்தின் விருப்பம். அதே நேரத்தில் நண்பர் இப்ராகிம் என்ன கருதுவாரோ என்பதற்காக, பஞ்சாங்கத்தில் கிழக்கே சூலம் என்று போட்டிருக்கையில், கொஞ்சம் வெல்லத்தைச் சாப்பிட்டு விட்டுச் சென்றால் சூலம் ஒன்றும் செய்யாது என்பார்களே அதைப்போல விஜயகாந்த் என்னை அழைக்க விரும்பியது கிழக்கே செல்ல விரும்பியது போன்றதாகும். அவருக்கு ஏற்பட்ட பயம்தான் சூலம், அதற்கு அவர் சாப்பிடும் வெல்லம்தான் இந்த விழாவிலே மூப்பனார் கலந்து கொண்டது" என்று நான் கூறியதை விஜயகாந்த் ஞாபகத்தில் வைத்திருப்பார் என்றே நம்புகிறேன்.

90-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3-ந்தேதியன்று பிரதமர் வி.பி. சிங் தமிழகத்திற்கு வருகை தந்தது குறித்தும், சென்னை கடற்கரை காந்தி சிலை அருகில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு பொதுக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டது குறித்தும் இரண்டாவது அத்தியாயத்தில் விவரமாக எழுதியிருக் கிறேன். 3-ஆம் தேதியன்று சென்னையிலே பிரதமருடன்



நடிகர் விஜயகாந்த் – பிரேமலதா திருமணத்தை மாலை எடுத்துக் கொடுத்து நடத்தி வைக்கிறார் முதல்வர் கலைஞர். அருகில் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் உள்ளார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு, மறுநாள் காலையில் அமைச்சர்கள் வீராசாமி, துரைமுருகன், பொன்முடி ஆகியோருடன் ஹைதராபாத் நகருக்குப் புறப் பட்டுச் சென்று முதலமைச்சர் சென்னா ரெட்டி அவர் களைச் சந்தித்து கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை விரைவில் முடிப்பதற்கான ஏற்பாடு களைச் செய்யும்படி கேட்டுக் கொண்டுவிட்டு, அங்கிருந்து நேராக 5ந் தேதி டெல்லி சென்று அன்று நடைபெற்ற திட்டக் குழு கூட்டத்திலே கலந்துகொண்டேன். ஹைதரா பாத்தில் ஆந்திர முதல்வர் சென்னாரெட்டி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது, "நானும், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் நீண்டகால நண்பர்களாக இருப்பதால் எங்களுக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்தவிதமான சங்கடமும் கிடையாது" என்று தெரிவித்தார்.

7-2-90 அன்று தமிழக அரசு அலுவலர்களின் பல்வேறு சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள் எல்லாம் என்னைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, அரசு அலுவலர்களின் கோரிக்கைகள் குறித்து விவாதித்தனர். அன்றையதினம்தான் தமிழக அரசு அலுவலர்களுக்கு இனி வாரத்தில் ஐந்து நாட்கள்தான் பணி நாட்கள் என்று அறிவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆறாவது மாநில மாநாடு திருச்சி மாநகரில் 9, 10, 11-2-1990 ஆகிய நாட்களில் திருச்சி அண்ணா நகரில், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி பந்தலில், து.ப. அழகமுத்து அரங்கில் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. பொதுச் செயலாளர் பேராசிரியர் மாநாட் டினைத் திறந்து வைத்தார். முதல்நாள் 9-ந்தேதியன்று

பிரமாண்டமான பேரணியும், 10-ஆம் தேதியன்று இளைஞர் அணி சம தர்ம சமுதாய மாநாடும், 11-ஆம் தேதியன்று அரசியல் மாநாடும் நடை பெற்றது. திருச்சி என். செல்வராஜ் வரவேற்புக் குழுத்தலைவராகவும், திருச்சி கே.என்.நேரு, மற்றும் புதுக்கோட்டை பெரியண்ணன் ஆகியோர் மாநாட்டுச் செயலாளர்களாகவும், சட்டமன்ற உறுப்பினராக இருந்த மலர்மன்னன் மாநாட்டுப் பொருளாளராகவும், கரூர் கே.வி.ராமசாமி மாநாட்டு நிதிக் குழுத்தலைவராகவும், காட்டூர் மகாலிங்கம் தொண்டர் படைத்தலைவராகவும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர். பிப்ரவரி 9-ந்தேதியன்று அண்ணா அவர்கள் எழுதிய சிவாஜி கண்ட இந்துராஜ்யம் நாடகமும், 10-ந்தேதியன்று நான் எழுதிய மணிமகுடம் நாடகமும் நடைபெற்றது. மாநாட்டின் முதல் நாளன்று கழகப் பொதுக் குழு கூட்டமும் நடைபெற்று பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டிலே நிறைவேற்றுவதற்காக ஆராயப்பட்டு இறுதியாக்கப்பட்டன. மாநாட்டு ஊர்வலத்தைப் பற்றி அன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு எழுதும் போது, திருச்சி நகரின் வரலாற்றிலேயே அதுவரை கண்டிராத ஊர்வலம் என்றும், அதை ஒரு ஜன சமுத்திரம் என்று வர்ணித்தால் அது சற்றும் மிகையல்ல என்றும் எழுதி யிருந்தது.

மாநாட்டின் மொத்த வரவு 42 லட்சம் ரூபாய் என்பதும் அதிலே செலவுபோக மிச்சமானது 23 லட்சம் ரூபாய் என்பதும் நினைவிற் கொள்ளக் கூடிய செய்தியாகும்.

திருச்சியில் நடைபெற்ற மாநாட்டின் நிறைவு நாளன்று தான் தென்ஆப்பிரிக்காவில் கறுப்பு இன மக்களின் விடு தலைக்காகப் போராடி முப்பதாண்டுகள் சிறைத் தண்டனை பெற்று, 27 ஆண்டுகள் சிறையில் அடைபட்டுக் கிடந்த நெல்சன் மண்டேலா தனது 71-வது வயதில் விடுதலை யானார். அவர் விடுதலையானது குறித்து ஒரு தீர்மானத்தை நானே எழுதி முன்மொழிந்ததோடு அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் மாநாட்டில் கூடியிருந்த லட்சக்கணக் கான மக்களை எழுந்து நின்று இரண்டு நிமிடம் கையொலி

செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவ்வாறே எல்லோரும் கையொலி செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த நிலையில் 27 ஆண்டு சிறைவாசத்துக்குப் பின் (1962 முதல் 1990 வரை) நெல்சன் மண்டேலா விடுதலையானதும் கேப் டவுன் சிட்டி ஹால் எதிரே ஒரு பால்கனியில் இருந்து கொண்டு உரையாற்றினார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த உரையைக் கேட்க ஆயிரக் கணக்கானோர் அங்கே கூடியிருந்தனர். அவர்கள் மண்டேலாவைக் காண பல மணி நேரம் அங்கே காத்துக் கிடந்தனர். மண்டேலா அன்று பேசும்போது, இனவெறி ஆட்சியுடன் தொடர்பு ஏதும் வைத்துக் கொள்ளாது, அதை ஒதுக்கி வைக்குமாறு சர்வதேச நாடுகளைக் கேட்டுக் கொண்டார். அதிபர் டி.கிளார்க் கண்ணியமானவர், மெஜாரிட்டி கறுப்பர். மக்களின் கோரிக்கைக்கு வேறு எந்த அதிபரும் அந்த அளவுக்குச் செவி சாய்த்ததில்லை என்றார். பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாகத் தன்னை மட்டும் விடுவித்தால் போதாது, நெருக்கடி நிலைப் பிரகடனத்தை விலக்கிக் கொள்ளுதல், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல் போன்ற பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் என்றார்.



தமிழ்நாட்டுக்கு வருகை தந்த பிரதமர் வி.பி.சிங் அவர்களை முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்ற காட்சி... ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் உடனுள்ளார்.

தனது சிறை வாழ்க்கை பற்றிக் குறிப்பிடுகையில் நீண்ட தனிமையான வீணான ஆண்டுகள் என்று வர்ணித்தார். அவர் சிறையிலே இருந்தபோது கறுப்பர்களின் தாயகம் ஒன்றில் ஒதுங்கி வாழ முன்வந்தாலோ, விடுதலைப் போரைக்

கைவிடுவதாக உறுதி அளித்தாலோ அவரை விடுதலை செய்யத் தயார் என்று தென்னாப்பிரிக்க அரசு பல முறை கூறியது. ஆனால் அவர் அதை மறுத்துவிட்டார். அரசு இன ஒதுக்கலுக்கு முற்றுப் புள்ளி வைத்து தனது இயக்கமான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடையை நீக்க வேண்டுமென்பதை நிரந்தர கோரிக்கையாகத் தெரிவித்தார். தென்னாப்பிரிக்க அரசின் அதிபராக எப்.டபிள்யூ. டிகிளார்க் வந்த பிறகுதான் 2-2-90 அன்று ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை நீக்கப்படுகிறது என்றும், மண்டேலா விரைவில் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுவார் என்றும் அறிவித்தார்.

18-7-1918இல் பிறந்த நெல்சன் மண்டேலா, படிக்கும் போதே மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். பிறகு தனது பட்டப் படிப்பை தபால் மூலமாகப் படித்தார். குத்துச் சண்டையில் வல்லவரான மண்டேலா சிறு வயதிலேயே ஒரு தங்கச் சுரங்கத்தின் பாதுகாவலராகவும், வக்கீல் குமாஸ்தா வாகவும் பணிபுரிந்தார். தனது 26-வது வயதில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் இளைஞர் பிரிவை மண்டேலா தோற்று வித்தார். 48-இல் அதன் செயலாளராகவும், 50-இல் அதன் தலைவராகவும், 52-இல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் தொண்டர்படைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அதே ஆண்டில் ஜோகன்ஸ்பர்க் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். இந்தத் தொழிலைத் தொடங் கிய முதல் கறுப்பர் இவர்தான். 53-இல் மண்டேலாவிற்கு அரசு தடை உத்தரவு பிறப்பித்ததோடு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரசிலிருந்து விலக வேண்டுமென்றும் வலியுறுத்தியது. 1958-இல் முதல் மனைவி எவுலைனை விவாகரத்து செய்து விட்டு, வின்னி நாம்சாமோ என்ற பொதுநல பெண் ஊழியரை மண்டேலா மணந்தார். அரசு துரோக வழக்கு நடந்து கொண்டிருந்தபோதுதான் மண்டேலாவிற்கு வின்னி யுடன் பழக்கம் ஏற்பட்டது. திருமணம் முடிந்தபோது அதைப்பற்றி வின்னி கூறும்போது, "அவரை மணந்து கொண்டபோதே எனக்குத் தெரியும், எனது மக்களின்

போராட்டத்தை, அவர்களின் விடுதலையை மணந்து கொள்கிறேன்" என்றார். 60-இல் மார்ச் 21-இல் போராட்டத்தில் ஈடுபட்ட 69 கறுப்பர்கள் போலீசாரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வன்முறையில் குதித்தது. மண்டேலா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படாமல் தோல்வியடைந்தது. ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் ராணுவப் பிரிவை 1961-ஆம் ஆண்டு உருவாக்கி அதன் தளபதியாக அவர் இருந்தார். ஆப்பிரிக்க நாடு முழுவதும் சுற்றி தேசிய காங்கிரசின் நோக்கங்களை விளக்கினார். 11-1-62 அன்று எத்தியோப்பியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட மாநாட்டில் திடீரென மண்டேலா தோன்றினார். 1962-ஆம் ஆண்டு அவர் தென்னாப்பிரிக்கா திரும்பியதும் கைது செய்யப்பட்டு, சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேறியதாகவும், வேலை நிறுத்தம் மூலம் சட்டத்தை மீறும்படி தொழிலாளர்களைத் தூண்டியதாகவும் வழக்குப் போடப்பட்டது. இதில் ஐந்தாண்டு காலம் அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் சிறையிலே இருந்தபோது ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் அலுவலகம் சோதனையிடப்பட்டு பல தஸ்தாவேஜ்கள் கைப்பற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மண்டேலா மற்றும் 8 பேர் மீது சதித் திட்ட வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. 20-4-64 அன்று மண்டேலா "ஜனநாயகத் தத்துவத்தைக் காப்பாற்றிட உயிர் விடவும் தயார்" என்ற அறிக்கையை வெளியிட்டார். 1968, 1969 ஆகிய ஆண்டுகளில் மண்டேலா தனது தாயாரையும், அதைத் தொடர்ந்து மகனைக் கார் விபத்திலும் இழக்க நேரிட்ட போதும், அவர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. அவர் சிறையில் இருந்த போதே அவருடைய



தி.மு.கழக 6–வது மாநில மாநாட்டை கலைஞர் தலைமையில் பொதுச் செயலாளர் பேராசிரியர் திறந்து வைக்கிறார்.

மனைவி 16-5-1977 அன்று ஆப்பிரிக்க இனவெறி அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். 1980-இல் மண்டேலா விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற முழக்கம் உலக அளவில் எழுந்தது. 1984இல் வின்னி மண்டேலாவிற்குக் கணவரைச் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டது.

பலத்த பாதுகாப்பு நிறைந்த ரோபன் தீவுச் சிறையில் மண்டேலா இருந்தபோது அவருக்கு மிகவும் மோசமான உணவு தரப்பட்டது. பத்திரிகைகளையோ புத்தகங்களையோ படிக்க அவர் அனுமதிக்கப்படவில்லை. கடினமான வேலைகளில் அவர் ஈடுபடுத்தப்பட்டார். கல் உடைப்பது, கடற்பாசிகளைச் சேகரிப்பது ஆகியவை இதில் அடங்கும். ஆயினும் இவற்றை விடக் கொடுமையானது, தன் மனைவி வின்னிக்கு இழைக்கப்படும் இன்னல்கள்தான் என்று அடிக்கடி அவர் எழுதி வந்தார்.

மனைவியைச் சந்திக்க அனுமதி வழங்கப்பட்ட பிறகு கூட மாதத்திற்கு 40 நிமிட நேரமே சந்திக்க முடியும், கடிதம் எழுதினால் கூட 500 வார்த்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்றெல்லாம் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. 1984-ஆம் ஆண்டு மே மாதம்தான் மண்டேலாவும் அவரது மனைவியும் தழுவிக் கொள்ள சிறையில் முதன்முறையாக அனுமதிக்கப்பட்டது. 18-7-1988 அன்று அவருடைய பிறந்த நாள். அவர் பிறந்த நாளன்று மனைவியுடன் கழிக்க ஆறு மணி நேரம் அவருக்கு அனுமதி தரப்பட்டது.

மண்டேலாவைக் காணச் செல்லும்போது எப்படியிருக்கும் என்பதை வின்னி, "அவரைப் பார்க்கப் போவதென்றால் குதூகலமாக இருக்கும். வெட்டுண்ட பனிக்கட்டி போல் எட்டிக்குதித்து மனம் சில்லிட்டுத் துள்ளும். பார்த்து விட்டுத் திரும்பி வரும் போது வேதனை கலந்து வெறுமை வேலியாக நீளும். மறு முறை பார்க்கும் நாளை நினைத்து நினைத்து ஏங்குகிறேன். துன்பத்தில் நனைந்து, நனைந்து சோகம் சொட்டச் சொட்ட நிற்கிறேன். ஒரே ஒரு நம்பிக்கை! என்றாவது ஒரு நாள் அவர் வரத்தான் போகிறார். இரவு கரையத்தான் போகிறது. பொழுது புலரத் தான் போகிறது

என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் வாழ்ந்து கொண் டிருக்கிறேன்" என்று உணர்ச்சி பீறிடக் குறிப்பிட்டுள்ளார்.

சிறையிலிருந்து வெளிவந்த ஓராண்டிற்குப் பிறகு 1991-இல் மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவராக ஆனார். 1992-ஆம் ஆண்டு வின்னி மண்டேலா மீது கடத்தல் மற்றும் ஒரு தாக்குதல் நிகழ்ச்சியில் உடந்தையாக இருந்தார் என்பதற்காகக் குற்றம் சுமத்தப்பட்டு தண்டிக்கப்பட்ட பிறகு, மண்டேலா தனது மனைவியை விவாகரத்து செய்து விடுகிறார். 1993-இல் இவருக்கும் இவரை விடுதலை செய்த அந்நாட்டின் தலைவர் கிளார்க்கிற்கும் நோபல் பரிசு இணைந்து அளிக்கப்பட்டது. 1994-ஆம் ஆண்டு ஆப்பிரிக்கா வின் தலைநகரான ஜோகன்ஸ்பர்க் நகரில் 350 ஆண்டு களாகப் பறந்து கொண்டிருந்த வெள்ளை இன ஆதிக்கத் தாரின் கொடி இறக்கப்பட்டு; புதிய கொடி ஏற்றப்பட்டது. வெள்ளையர் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு கறுப்பு இன மக்களுக்குள்ளேயே மூட்டி விடப்பட்ட கலக உணர்வுகளும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, பெரும்பாலான கறுப்பு இன மக்களின் அரசு ஒன்றைத்



திருச்சி 6–வது மாநில மாநாட்டுப் பந்தலில் நடந்த கழகப் பொதுக்குழுவில் தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார், அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி ஆகியோர் உடன் உள்ளனர்.

தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. ஆப்பிரிக்கா வின் சரித்திரத்திலே முதன்முதலாக அனைத்து இன மக்களும் வாக்களிக்கும் உரிமையுடன் ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் சுமார் 12 லட்சம் பேர் இந்திய வம்சாவளியினரும், தென்னாப்பிரிக்க கறுப்பு இன மக்களுடன் சேர்ந்து வாக்களித்தார்கள். மொத்தம் 400 இடங்களில் மண்டேலா தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் 252 இடங்களைப் பெற்றது. அந்தத் தேர்தலில் நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தென்னாப்பிரிக்க மக்களின் விடுதலையைப் பற்றி நான் "வெள்ளை இருட்டில் கறுப்பு விடியல்" என்று அப்போது குறிப்பிட்டேன். அதற்குப் பிறகும் அவருடைய வாழ்க்கைப் பாதை மகிழ்ச்சியாக இல்லை. ஏழையெளிய மக்கள் அனைவருக்கும் தங்குவதற்கு வீடு கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அதற்கான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டார். டிசம்பர் 97-இல் தேசிய காங்கிரசின் தலைவர் பதவியிலிருந்து விலகியதோடு, 99-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவரது தேசிய காங்கிரஸ் பெற்ற மகத்தான வெற்றிக்குப் பிறகு நாட்டின் அதிபர் பதவியிலிருந்து அவரே விலகிக் கொண்டார். வின்னியை விவாகரத்து செய்ததற்குப் பிறகு மொசாம்பிக் நாட்டின் மறைந்த முன்னாள் அதிபருடைய மனைவியை மண்டேலா திருமணம் செய்து கொண்டு, தற்போது உலகம் முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலைவர்களைச் சந்திப்பதும், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுமாக உள்ளார். 30-4-1994 அன்று முரசொலியில் நான் எழுதிய கடிதத்தில் தென்னாப்பிரிக்க விடுதலை குறித்து எழுதும் போது, "ஆதிக்கபுரியாக இருந்த சேற்றுக் குட்டையில்; அன்றலர்ந்த செந்தாமரையாக ஜனநாயகம் மணம் பரப்பி நிற்கிறது- நம் மனம் மகிழ்கிறது - தகுதியும் திறமையும் அதிகார பலமும் இருந்தால்; அவற்றைத் திரட்டி உருட்டி அங்குசமாக்கி, யானையை அடக்கி ஆளலாம் என்பதுபோல தென்னாப்பிரிக்காவின் பெரும்பான்மை கறுப்பு இன

மக்களை ஆட்டிப்படைத்த அங்குசம் தூக்கி எறியப்பட்டு விட்டது" என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்தியச் சரித்திரத்தில் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் அல்லாத ஒரு அரசு மத்தியிலே பொறுப்பேற்று மூன்று மாதங்கள்கூட முழுமையடையவில்லை. மார்ச் 16-ந் தேதியன்று துணைப் பிரதமர் தேவிலால் அவர்கள் திடீரெனத் தனது பதவி விலகல் கடிதத்தை பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றும், அதனைத் திரும்பப் பெறச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்தன. பதவி விலகலுக்கான காரணத்தை அவர் நேரடியாகக் கூறாவிட்டாலும், தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் குறிப்பாக அவரது மகன் அரியானா முதல்வர் சௌதாலாவிற்கும் எதிராக அஜீத்சிங் உள்ளிட்ட மூத்த ஜனதா தளத் தலைவர்கள் மேற்கொண் டுள்ள அவதூறுப் பிரச்சாரம்தான் காரணம் என்று கூறப் பட்டது. தகவல் எனக்குக் கிடைத்ததும் பிரதமரிடமிருக்கும், துணைப் பிரதமரிடமிருக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். தேவிலால் தனது விலகலுக்கான காரணங்களையெல்லாம் பட்டியலிட்டு எழுதி பிரதமருக்கு அனுப்பியிருப்பதாகக் கூறினார். 18-ஆம் தேதி காலையிலும் நான் தேவிலால் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிதிநிலை அறிக்கை பேரவையில் விவாதத்தில் இருப்பதால் நேரில் வர இயலவில்லை என்றும், மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளைக் காப்பாற்ற விட்டுக் கொடுத்துப் போகவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். பிரதமரிடமும் தொலைபேசியில் பேசினேன். அதற்கு வி.பி.சிங் தான் தேவிலால் அவர்களுக்கு அன்றைய தினம் பதில் எழுதவிருப்பதாகத் தெரிவித்தார். அதன்படியே பிரதமர் வி.பி.சிங் எழுதிய பதில் கடிதத்தில், ஜனதா தளத்தை உருவாக்கிய முக்கியமானவர்களில் தேவிலால் அவர்களும் ஒருவர் என்றும், அந்தக் கட்சி தேர்தலில் வெற்றி பெற அவர் ஆற்றிய பணியும் மகத்தானது என்றும், கடமையாற்றுவ திலிருந்து விலகிச் சென்றால் மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்றும், அவரது பதவி விலகல் கடிதத்தைத் தாம் ஏற்கப்



சிறையில் இருந்து விடுதலையான நெல்சன் மண்டேலா அவரது மனைவி வின்னி மண்டேலாவுடன்.

போவதில்லை என்றும், பதவி விலகலை வலியுறுத்தக் கூடாதென்றும் உருக்கமாகத் தெரிவித்திருந்தார். ஜனதா தளத்தின் மூத்த தலைவர்கள் அந்தக் கடிதத்துடன் சென்று தேவிலால் அவர்களைச் சந்தித்துச் சமாதானப்படுத் தினர். அதன் விளைவாக 18-3-90 அன்று தேவிலால் அவர்கள் தனது பதவி விலகல் கடிதத்தை வலியுறுத்த வில்லை என்றும், தான் எழுப்பிய பிரச்சினைகள் குறித்து நேரில் பேசித் தீர்த்துக் கொள்வோம் என்றும் செய்தியாளர் களிடம் தெரிவித்தார். எப்படியோ எழுந்த பிரச்சினை மூன்று நாட்களில் தீர்ந்தது என்றாலும், உருவான நல்ல சூழல், குறைப்பிரசவமாகவே முடிந்தது என்பதுதான் உண்மை!

22 அமைப்பு ரீதியாக உருவாகாத அரசியல் கட்சிகள்!

அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சி, பாரதிய ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைத் தவிர மற்ற கட்சிகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் நீண்டகால வரலாறுகளைக் கொண்ட அமைப்பு ரீதியாக இயங்கிடும் கட்சிகள் அல்ல என்பது என் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து மக்கள் மத்தியில் இடம்பெற்ற அகில இந்தியக் கட்சி காங்கிரஸ் என்றால்; அமைப்பு ரீதியாக வளர்ந்த அந்தக் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள்; காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தபோதே அல்லது சுதந்திரப்போரில் ஈடுபட்டிருந்த போதே கம்யூனிஸ்டுகளாக, சோஷலிஸ்டுகளாக இருந்து ஒரு கால கட்டத்தில் கம்யூனிஸ்டு கட்சி என்றும்- சோஷலிஸ்டு கட்சி என்றும் இந்தியாவில் பல மாநிலங்களில் கொடி உயர்த்தி, சில மாநிலங்களில் ஆட்சி மன்றங்களிலும் இடம் பெற்றவர்கள்.

சிறுபான்மை சமுதாயமான இஸ்லாமியர்களின் பாதுகாப்புக்காக, உரிமைகளுக்கு வாதாடுவதற்காக இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும் - சுதந்திரப் போராட்டத்தில் இணைந்திருந்தவர்களால் ஜனசங்கமும்; அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக பாரதிய ஜனதாவும் தோன்றிய நிலையில்; பெரிதும் அமைப்பு ரீதியாக இயங்கக்கூடிய வாய்ப்பும், ஆட்சி மன்றங்களில் இடம் பெறக்கூடிய வாய்ப்பும்- ஏன்;

மத்திய ஆட்சியிலேயே அமரக் கூடிய வாய்ப்பும் பெற்றதாக அக்கட்சி வளர்ந்துள்ளது.

"அகில இந்திய" என்ற அடைமொழியுடன் உருவான மற்ற கட்சிகளில் சில; மாநிலக் கட்சிகளாக மட்டுமே இன்றளவும் இயங்குகின்றன. உதாரணம் "அகில இந்திய அ.தி.மு.க." என்பது ஒரு மாநிலக் கட்சிக்குப் பெயராக இருப்பதுதான்!

தி.மு.க., தெலுங்கு தேசம், அகாலி தளம் போன்ற மாநிலக் கட்சிகள், அகில இந்தியக் கட்சிகளுடன் அணி சேர்ந்து இந்திய அரசியல் விவகாரங்களில் பங்கு கொள்கின்றன. சில அகில இந்தியக் கட்சிகள் எனப் பெயர் கொண்டவை, மக்களிடத்தில் தொடர்ந்து நெருக்கம் ஏற்படுத்திக் கொள்ளாமல்; அவர்களது பிரச்சினைகளைத் தொலைவிலிருந்து மட்டுமே கவனித்துக் கொண்டிருந்துவிட்டு, பொதுத் தேர்தல் அறிவிப்பு வருகிற நேரத்தில் மட்டுமே அரசியல் அரங்கத்தில் காட்சி கொடுப்பதை வாடிக்கையாக்கிக் கொண்டுள்ளன.

அணி அமைக்கவோ, ஆட்சி அமைக்கவோ பற்றாக்குறையாக இருக்கும் ஓரிரு இடங்களை நிறைவு செய்கிற வாய்ப்புகளை மாத்திரம் பயன்படுத்திக்கொண்டு அந்த நேரத்துக்கு முக்கியத்துவம் பெற்றுவிடுகிற கட்சிகளால்; நிலையான அமைப்பு முறையோ கொள்கை உறுதியோ கடைப்பிடிக்க முடிவதில்லை.

இந்த அடித்தள பலமற்ற காரணத்தால் எப்போதும் குழப்பங்களும், மன வேறுபாடுகளும் மலிந்து உறுதியற்றதும் நிலையற்றதுமான அரசியல் அணிகளையே சமீப காலமாகச் சந்திக்க வேண்டியுள்ளது.

இவற்றின் அடித்தளத்தைப் பலப்படுத்தி அமைப்பு ரீதியாக இயங்க வேண்டுமென்ற எண்ணம் திரு. வி.பி. சிங்கிற்கும் என் போன்றோர்க்கும் உண்டு எனினும்;

அது நினைத்த வண்ணம் நிறைவேறவில்லை. அதன் விளைவுகளில் ஒன்றாகத்தான் தேசிய முன்னணியிலும்; ஆட்சி அமைத்த சில மாதங்களிலேயே சிக்கல் தோன்றியது!

கடந்த அத்தியாயத்தில் நான் குறிப்பிட்டிருந்தது போல அரியானா மாநிலத்தில் சௌதாலாவை மையமாகக் கொண்டு கிளம்பிய சச்சரவு; முற்றுப்புள்ளியை 'கமா'வாக மாற்றிக் கொண்டு தொடரத் தொடங்கியது. புகைந்து கொண்டேயிருந்த எரிமலை, திடீரென வெடித்ததுபோல அரியானாவில் ஏற்பட்ட அரசியல் அமளி, பல கிளைகளாக வெடித்து; துணைப் பிரதமர் தேவிலால் அவர்கள், 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் மத்திய அமைச்சர்கள் பலரைப் பற்றி, கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறியிருந்தார்.


தேவிலால்

அதற்கான ஆதாரங்களைத் தெரிவிக்குமாறு பிரதமர் வி.பி. சிங் கேட்டுங் கூட, தேவிலால் எதுவும் தெரிவிக்காமல் மௌனமாகவே இருக்கவே, வேறு வழியில்லாமல் ஆகஸ்ட் 1-ந் தேதியன்று அவரை அமைச்சரவையிலிருந்து விலக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

உடனடியாக டெல்லிக்குச் செல்ல வேண்டுமென்று என்.டி. ராமராவ் என்னிடம் தொலைபேசியில் கூறிய தோடு, மறுநாள் காலையில் ஐதராபாத் வழியாகச் செல்லும் விமானத்தில் வருமாறும், அவர் ஐதராபாத்தில் அந்த விமானத்தில் என்னுடன் சேர்ந்து டெல்லிக்கு வருவதாகவும், விமானத்திலேயே பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டு செல்லலாம் என்றும் கூறினார். நானும் அவரும் அவ்வாறே 2-ந்தேதி காலையில் டெல்லி சென்றடைந்தோம். பிரதமர் எங்களோடு பேசுவதற்காகக் காத்திருக்கிறார் என்று வந்த தகவலின் பேரில் உடனடியாக பிரதமர் இல்லத்திற்கு விரைந்து சென்று பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டோம். அந்தப் பேச்சு வார்த்தைகளின் போது முரசொலி மாறன், எஸ்.ஆர். பொம்மை, அஜீத்சிங், ஜார்ஜ் பெர்னாண்டஸ், உன்னிகிருஷ்ணன், உபேந்திரா, தினேஷ் கோஸ்வாமி

ஆகியோரும் கலந்து கொண்டார்கள். பேச்சு வார்த்தை 12 மணி வரை நீடித்தும் முடிவு ஒன்றும் காணப்படவில்லை. பின்னர் தமிழ்நாடு இல்லத்திற்குத் திரும்பிவந்த நான், என்.டி.ஆர்., மகந்தா, உன்னிகிருஷ்ணன், தினேஷ் கோஸ்வாமி ஆகியோர் தொடர்ந்து விவாதித்து இறுதியாக ஒரு கூட்டறிக்கை விடுவதென்று முடிவெடுத்தோம். அதில், அமைச்சரவை அமைப்பது பிரதமருடைய தனி சிறப்புரிமை. அது குறித்து யாரும் கேள்வி கேட்க முடியாது. தான் எடுத்த நடவடிக்கை பற்றி பிரதமர் அறிக்கை விடுத்துள்ளார். கவலை தரத்தக்க பெரும் பின்விளைவுகளை உருவாக்கும் பிரச்சினைகள் பலவற்றை தேசம் எதிர்நோக்கியுள்ளது. தேசிய முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியாக வேண்டும். இந்நிலையில் தேசிய முன்னணி அரசின் தலைவரான பிரதமர் வி.பி.சிங் தனது பணிகளை நிறைவேற்ற அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டியது நமது கடமையாகும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

2-8-90 அன்று காலையில் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் இல்லத்தில் தேசிய முன்னணியின் தலைமைக் குழு கூட்டம் 9.30 மணி முதல் 10.30 மணிவரை நடைபெற்றது. தொடர்ந்து தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடை பெற்றது. அந்தக் கூட்டத்தில் வி.பி. சிங் அவர்கள் மீது நம்பிக்கை தெரிவித்து அஜீத் சிங் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. வி.பி.சிங் மீது நம்பிக்கை இல்லை என்று யாரும் கூறாத நேரத்தில் அந்தத் தீர்மானமே அவசியமில்லை என்று தேவிலால் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். கூட்டத்திற்குப்பின் வி.பி. சிங் தேவிலால் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றார். இருவரும் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டனர். தேவிலால் துணைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து அந்தப் பதவியில் புதிதாக எவரையும் நியமிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று பிரதமர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த நேரத்தில்தான் ஜப்பான் நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்று, ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சிக்கு மெஜாரிட்டி கிடைத்தது. மொத்தம் 512 இடங்கள் கொண்ட ஜப்பான் மக்களவையில் 275 இடங்களில் லிபரல் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது. ஆனாலும் கடந்த தேர்தலில் 295 இடங்களைப் பெற்றிருந்ததற்கு மாறாக 275 இடங்களில்தான் அது வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சிக் காலத்தில் இந்தக் கட்சி மீது பல்வேறு ஊழல் புகார்கள் கூறப்பட்ட நிலையில் இந்த அளவிற்குப் பெற்ற வெற்றியே பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. ஆனால் எதிர்க் கட்சியான "ஜப்பான் சோஷலிஸ்ட்" கடந்த தேர்தலில் 83 இடங்களை மட்டும் பெற்றிருந்ததற்கு மாறாக இந்தத் தேர்தலில் 136 இடங்களில் வெற்றி பெற்றது.

90-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழகத்திலிருந்து மாநிலங்கள் அவைக்கு ஆறு பேரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது. அதில் கழகத்தின் சார்பில் ஐந்து பேர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. கழக வேட்பாளர்களாக வைகோ, தா.கிருஷ்ணன், முகமது சகி, மிசா. கணேசன், நாமக்கல் வீரப்பன் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். அ.தி.மு.க சார்பில் நண்பர் செ. மாதவன் வேட்புமனு தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கல் செய்தவர்களின் எண்ணிக்கையும், தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையும் சமமாக இருந்ததால் வேட்புமனு தாக்கல் செய்த ஆறு பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதே ஆண்டு மே திங்களில் 11-ந்தேதியன்று மதியம் சாப்பிடுவதற்காக அமர்ந்தேன். கழகத்தின் கொள்கை விளக்க அணிச் செயலாளர் அருமை உடன்பிறப்பு செ.கந்தப்பன் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், மரணத்துடன் போராடுகிறார் என்றும் தொலை பேசியில் செய்தி வந்தது. கையை உதறிவிட்டு உடனே மருத்துவமனைக்கு விரைந்தேன். அதற்குள் அந்தக் கழகத் தளபதியின் உயிர் பறந்து விட்டது! அதே பொதுமருத்துவ


மனையில் அதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் இலவச இருதய அறுவை சிகிச்சைப் பிரிவுக்கான தொடக்க விழா நடைபெற்றது. அந்த விழாவில் நான் கலந்து கொண்டபோது எனக்கு எதிரே முன்வரிசையில் கந்தப்பன் அமர்ந்து பேச்சுக் களையும், நிகழ்ச்சிகளையும் கையொலி செய்து பாராட்டிக் கொண்டிருந்தார். அப்போதே நான் விழா முடிந்ததும் அவரிடம் சென்று ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் அதெல்லாம் ஒன்றுமில்லை என்று கூறிச் சிரித்தவாறு என்னை வழியனுப்பி வைத்தார். 1962-இல் திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத்தேர்தலில் கந்தப்பன் தான் நிற்க வேண்டும், அதற்கு நீதான் அவரைத் தயார் படுத்த வேண்டுமென்று அண்ணா எனக்கு ஆணையிட்டார். கந்தப்ப னைக் கடற்கரை மணலில் மூன்று நாட்கள் உட்கார வைத்து அவரைத் தேர்தலில் நிற்பதற்காகச் சம்மதிக்க வைக்க நான் எடுத்த முயற்சி வெற்றி பெற்றது. கல்லூரி ஒன்றில் பேராசிரிய ராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கந்தப்பன் கழக வேட் பாளராக ஆனார். ஆனால் அவர் நிற்பதற்காக அத்துணை முயற்சி எடுத்த நானும், எனக்கு ஆணையிட்ட அண்ணாவும், மற்றும் நமது பேராசிரியர் போன்ற கழகத் தலைவர்களும் அந்த நேரத்தில் விலைவாசி உயர்வு கண்டனப் போராட்டத் தில் ஈடுபட்டு சிறைச்சாலையில் அடைபட்டிருந்தோம். பணபலம், படைபலம், அதிகார பலம், அந்தஸ்து பலம் படைத்த நாடாளுமன்ற உறுப்பினர் குமாரமங்கலம் ஜமீன் தார் சுப்பராயன் கவர்னராக நியமிக்கப்பட்ட காரணத்தால் நடைபெற்ற அந்த இடைத்தேர்தலில் செங்கோடக் கவுண்டர் என்ற சீமானை எதிர்த்து கந்தப்பன் டெபாசிட் வாங்குவாரா என்று மாற்றார் முகாமிலிருந்து கேலியும் கிண்டலும்! எனினும் அந்தக் கடுமை யான போட்டியில் கந்தப்பன் மிகக் குறுகிய வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என்ற செய்தி சிறையிலே இருந்த எங்களுக்கு நள்ளிரவில் கழக அமைப்புச் செயலாளர் திரு. என்.வி. நடராசன் அனுப்பிய தந்தியின் மூலம் தெரிந்தது.

அந்தச் செய்தி கேட்டு அன்றைக்கு மகிழ்ச்சியடைந்த நாங்கள், அந்த கந்தப்பன் மறந்துவிட்ட இந்தச் செய்தி கேட்டுப் புலம்பினோம். ஆழ்ந்த அரசியல் ஞானம், அப்பழுக் கற்ற கொள்கை உறுதி, கழகம் காப்பதில் கடமை உணர்வு, கழக அலுவலகத்திற்கு அன்றாடம் வருகை தந்து பணி யாற்றிடும் பாங்கு, தேர்தல் சுற்றுப்பயணம் நான் செல்லும் போதெல்லாம் என்னுடன் வந்து உதவிடும் தன்மை, என்னை அண்ணே என்று அழைக்கும்போது காட்டும் வற்றாத பாசம்- இவையெல்லாம் கந்தப்பனுக்குள்ள அடையாளங் களாகும். பெரும் இழப்பு!

தர்மபுரி மாவட்டத்தில் கழக ஆட்சியிலே அமைந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று பெயர் சூட்டினேன். ஆனால் பிறகு 1991-ல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.வினர் "பெருந்தன்மையோடு" (?) அந்த நண்பருடைய பெயரை எடுத்து விட்டார்கள்.

என்னுடைய 67-வது பிறந்த நாள் விழா வழக்கம் போல கழகத் தோழர்களினால் சிறப்பாக நடத்தப்பட்டது. அந்த ஆண்டு அதில் ஒரு சிறப்பாக யாரும் எதிர்பாராத விதமாக மத்திய நிதி அமைச்சர் மது தண்டவதே அவர்கள் வேறொரு விழாவிற்காகச் சென்னைக்கு வந்தவர், நேராகக் கலை வாணர் அரங்கத்திற்கே அவராகவே வந்துவிட்டார். விழாவில் அவர் உரையாற்றும்போது;

"கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு முக்கியமான கட் டத்தை உங்களில் பலரும் இளைஞர் களும் மறந்திருக்கலாம். 1975-ஆம் ஆண்டு நெருக்கடிநிலை பிரகடனம் செய்யப்பட்டது. எங்களில் பலர் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட் டோம். விடுதலைப் போராட்ட வீரர் கள் பலர் தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்கள். ஜெயப்பிரகாஷ் நாராயணனும் சிறையில் அடைக்கப்



செ.கந்தப்பன்


பட்டுக் கிடந்தார். நாடெங்கும் பாலைவனமாக இருந்த நேரத்தில் மனதுக்கு இதம் தருகின்ற பசும் சோலையாகக் கலைஞருடைய ஆட்சி காணப்பட்டது. நெருக்கடிநிலை பிரகடனம் செய்யப்பட்டபோது கலைஞர் முதலமைச்சராக இருந்தார். அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி எதிர்ப்பைக் கைவிட்டு மத்திய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு தருமாறு கோரினார்கள். அப்பொழுது கலைஞர் ஒருவர் தான், நெருக்கடி நிலையை ரத்து செய்துவிட்டு தேசத் தலைவர்களை விடுதலை செய்தால்தான் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைத் தர முடியுமென்று துணிச்சலோடு சொன்னார். நெருக்கடி நிலையை எதிர்த்த அன்றைய முதலமைச்சர் கலைஞர் ஆட்சி அதிகாரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. 1977-ஆம் ஆண்டு ஜனதா ஆட்சி அமைந்தபோது அந்த ஆட்சியை அமைப்பதற்கு அடித் தளமாக இருந்த நிலம்தான் தமிழ்நாடு. கலைஞர் தி.மு. கழகத்தின் தலைவர் மட்டுமல்ல, முதலமைச்சர் மட்டுமல்ல, அவர் தேசிய முன்னணியின் தலைவர். அவர் நூறாண்டு வாழ வாழ்த்துகிறேன்" எனக் குறிப்பிட்டது என்றைக்கும் என் நெஞ்சில் நீங்கா இடம் பெறத்தக்கதாகும்.

கழக அரசினால் அரசு அலுவலர்களுக்கான முக்கியமான கோரிக்கை ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதாவது அரசுப் பணியாளர்கள் ஒரு இடத்தில் பணிபுரியும்போது மூன் றாண்டு காலப் பணி முடிவதற்குள்ளாக அவர்களை அந்த இடத்திலிருந்து மாற்றக் கூடாது என்றும், அதே நேரத்தில் அரசுப் பணியாளர்கள் ஒரே இடத்தில் மூன்றாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியவும் அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்து அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கு விதி விலக்கு யாருக்காவது தர வேண்டுமேயானால், அரசாங்கத் தின் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் முன் உத்தரவைப் பெற்றாக வேண்டும். அரசு அலுவலர்கள் மத்தியில் இந்த ஆணை பெரும் வரவேற்பை அந்தக் காலத்தில் பெற்றது.

22-6-1990 அன்று ஈரான் நாட்டில் பயங்கர பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. கிராமங்கள், நகரங்கள் அழிந்தன. தெருக்களில் பிணங்கள் குவியல் குவியல்களாகக் கிடக்கின்றன என்று செய்திகள் வந்தன. மொத்தத்தில் 25 ஆயிரம் பேர் பலியானார்கள் என்று கூறப்பட்டது. உலகக்கோப்பை கால்பந்துப் போட்டியை ஈரான் மக்கள் தொலைக்காட்சியில் ரசித்துப் பார்த்துக் கொண் டிருந்தபோதுதான் அந்த பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

"அக்ரகாரத்து அதிசய மனிதர்" என்று அண்ணா அவர்களால் புகழ்ந்து எழுதப்பட்ட 'வ.ரா.' அவர்களின் நூற்றாண்டு விழா 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17-ந்தேதி கழக அரசினால் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்பே ஜூன் திங்களில் வ.ரா. அவர்களின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், தன்னுடைய வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு மற்றொரு சிறிய பகுதியில் தான் வசித்து வருவதாகவும், தனது கணவர் 1930-இல் நடந்த உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு திருச்சி சிறையில் ஓராண்டு காலம் இருந்தவர் என்றும், அதற்காக எந்தவிதமான மானியமோ, ஓய்வூதியமோ பெறவில்லை என்றும், திருச்சியிலிருந்து அவரை அலிபுரம், பெல்லாரி சிறைகளுக்கு மாற்றினார்கள் என்றும், அதுபற்றிய விவரம் அவர் கைப்பட எழுதிய "ரிக்கார்டு" தன்னிடம் உள்ளதாகவும், தான் தியாகி பென்ஷனுக்காக மட்டும் இதனை எழுதவில்லை என்றும், எந்த உதவி செய்தாலும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்கள். அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடனேயே ஆசிரியர் திரு.சாவி அவர்களிடம் சொல்லி அவரை அழைத்து வரச் செய்து ஜூலை திங்கள் முதலே புவனேஸ்வரி அம்மையாருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கிட ஆணை பிறப்பித்தேன்.

மேலும் அரசின் சார்பில் ஆகஸ்ட் 17-ந்தேதியன்று "வ.ரா." அவர்களின் நூற்றாண்டு விழா கலைவாணர் அரங்கிலே



மது தண்டவதே

சிறப்பாக நடைபெற்றது. கல்வி அமைச்சர் பேராசிரியர் விழாவிற்குத் தலைமை வகித்தார். நானும் அமைச்சர் களும், ஆன்றோர்களும், சான்றோர் களும் விழாவிலே கலந்து கொண்டு "வ.ரா." அவர்களின் சிறப்புகளை எடுத் துரைத்தோம். "வ.ரா." அவர்களின் குடும்பத்தினரும் அந்த விழாவிலே பங்கேற்றனர். அரசின் சார்பில் அவர் கள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந்தியாவின் துணைப் பிரதமராக இருந்தவரும், வாழ் நாள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே பணியாற்றிய வரும், இந்திய அரசில் பல்வேறு பொறுப்புக்களில் இருந்து உழைத்தவரும் பாபுஜி என்று அன்பொழுக அனைவராலும் அழைக்கப்பட்டவரும், என்னிடம் ஆழ்ந்த அன்பு கொண்ட வருமான பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா 28-6-1990 அன்று சென்னையில் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. என்னுடைய தலைமையிலே நடைபெற்ற அந்த விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட் ராமன் அவர்கள் பாபுஜி அவர்களின் சிலையினைத் திறந்து வைத்தார்கள். அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், பாபுஜியின் அன்பு மகள் மீரா குமார் அவர்களும் அந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப் பித்தார்கள். அந்த விழாவிலே நான் உரையாற்றும்போது, நெருக்கடிநிலை நேரத்தில் சில சிக்கல்களுக்கு நான் ஆளான நேரத்தில் அவர் கிண்டி ராஜ்பவனத்தில் தங்கியிருந்தபோது நேரில் சென்று அவரைச் சந்தித்ததைப் பற்றியும், அப்போது அவரிடம் உங்களுடைய அறிவுரை என்ன என்று நான் கேட்டபோது "Karunanidhi, Keep the Gun powder dry" என்று அவர் கூறியதை, அதாவது துப்பாக்கி மருந்தைப் பாதுகாத்து வை என்று தெரிவித்ததையெல்லாம் நினைவுகூர்ந்து

பேசினேன். அவருடைய வாழ்க்கை வரலாற்றினையெல்லாம் தொகுத்துச் சொன்னேன்.

சென்னை ஓட்டல்கள் சங்கப் பொன்விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று என்னிடம் வலியுறுத்தி 30-6-90 அன்று கலந்து கொள்வதாக ஒப்புக் கொண்டிருந்தேன். விழா ஏற்பாடுகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. விழாவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அழைப்பிதழ் கொடுக்க வந்த அந்தச் சங்கத்தின் முன்னோடிகள் சிலர் என்னிடம் விடை பெற்றுச் செல்வதற்கு முன் தயங்கித் தயங்கி நின்றார்கள். என்ன என்று கேட்டேன். சொல்வதற்கு மிகுந்த கூச்சப் பட்டுக் கொண்டு, விற்பனை வரி செலுத்துவதில் அவர்களுக்குள்ள சிரமத்தை எடுத்துக் கூறினார்கள். அதிகாரிகளிடம் கலந்து கொண்டு விழாவிலே தெரிவிப்பதாகக் கூறினேன். தாங்கள் இந்தச் சலுகையைப் பெறுவதற்காக ஓட்டல் அதிபர்களிடம் கணிசமான ஒரு தொகையை வசூலித்து வைத்திருப்பதாகவும், 50 லட்சம் ரூபாய் அளவிற்குத் தேறும் என்றும், அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். எனக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை; விழாவிற்கு நான் வருவதாக இல்லை, நீங்கள் வெளியே போகலாம் என்று சீறினேன். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து விட்டதாகவும், சலுகை தராவிட்டால் கூடப் பரவாயில்லை, விழாவிற்கு அவசியம் வர வேண்டுமென்றும் வேண்டினார்கள். அப்படியானால் வசூலித்த தொகையை அவரவர்களிடம் விழாவிற்கு முன்பாகவே கொடுத்துவிட வேண்டுமென்றேன். அது இயலாத காரியம், ஒழுங்காகப் போய்ச் சேராது, இடையிலே உள்ளவர்கள் சாப்பிட்டு விட்டுப் போய்விடுவார்கள் என்றார்கள். பிறகு, வசூலித்த தொகையை என்ன செய்வதென்று யோசித்து, இறுதியாக அந்தத் தொகையை விழா நிகழ்ச்சியின் போதே முதல் அமைச்சர் நிவாரண நிதிக்கு என்று கூறிக் கொடுத்து விடுங்கள் எனக் கூறினேன். பின்னர் அவர்கள் விழாவிலேயே அந்தத் தொகையினை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அளித்தார்கள். நானும் அதிகாரிகளோடு கலந்துபேசி அவர்கள் வைத்த கோரிக்கையைப்



வ.ரா.வின் துணைவியாருக்கு முதல்வர் கலைஞர்
முதல் மாத உதவித்தொகை ரூபாய் ஆயிரம் வழங்குகிறார்.
உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷீலா ராணி சுங்கத்.

பரிசீலித்து உணவு விடுதிகளில் 5 சதவிகிதம் விற்பனை வரி என்பதற்கான வரம்பு 15 இலட்சம் ரூபாய் என்பதை 18 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தேன்.

3-7-90 அன்று ஹஜ் யாத்திரைக்காக சவூதி அரேபியாவிற் குச் சென்ற யாத்ரீகர்கள் மெக்காவிலிருந்து மெதினா செல்லும் வழியில் உள்ள சிறிய மலைக்குகை வழியாகச் சென்றபோது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 1400 பேர் பலியானார்கள். இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சவூதி அரேபியா உள்ளிட்ட ஆசிய பிராந்தியங்களைச் சேர்ந்தவர்கள். மேலும் நெரிசலில் சிக்கி ஆயிரக்கணக்கான வர்கள் காயமடைந்தார்கள்.

12-7-90 அன்று யு.என்.ஐ. செய்தி நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்பட்ட செய்தியில், தமிழகச் சட்டப் பேரவை அ.தி.மு.க. கட்சியின் துணைத் தலைவராக இருந்த எஸ். திருநாவுக்கரசு, அந்தக் கட்சியின் கொறடாவாக இருந்த கே.கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த குழந்தை வேலு, நடிகர் ராமராஜன்,

இளைஞர் அணித் தலைவராக இருந்த ஜே.சி.டி. பிரபாகரன், நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த கருப்பசாமி பாண்டியன உள்ளிட்ட பலரை ஜெயலலிதா கட்சியிலிருந்து நீக்கியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகஸ்ட் 1-ந்தேதியன்று திருநாவுக்கரசு அவர்கள் நடத்திய பொதுக்குழுவில் ஜெயலலிதாவை அ.தி.மு.க. விலிருந்து நீக்கிவிட்டதாகத் தெரிவித்தார்.

23 அயோத்தியா காண்டமும் அத்வானி இரத யாத்திரையும்!

தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து அண்ணா அவர்கள் 1949-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய காலந்தொட்டு; இதனை ஒரு உண்மையான ஜனநாயக அமைப்பாக இயங்குவதற்கான வழிவகைகள், அதற்கான சட்ட திட்டங்கள், கொள்கை கோட்பாடுகள் வகுக்கப்பெற்று இந்நாள் வரையில் அந்த நெறிமுறைக்கு ஊசி முனை அளவு கூட ஊனம் ஏற்படாத நிலையே இருந்து வருகிறது.

ஆனால் தன்னுடைய செல்வாக்கு, புகழ், கலையுலகக் கவர்ச்சி இவற்றை மட்டுமே மையமாகக் கொண்டு, அதன் காரணமாக வெற்றி பல பெற்ற அருமை நண்பர் எம்.ஜி. ஆர். அவர்கள்; அவர் உருவாக்கிய கட்சிக்கு அமைப்பு முறை பற்றியோ- ஜனநாயக முறை பற்றியோ - எந்தக் கவலையும் கொள்ளாமல் அனைத்துமே அவர் கருத்துப்படி நியமன முறை என்ற அளவில் கட்சி நிர்வாகப் பொறுப்புகளில் இடமளித்த காரணத்தால் அடி மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையில் அமைப்பு ரீதியான அடிப்படையில் அந்தக் கட்சி வளரவில்லை. அதன் வளர்ச்சியும் வெற்றிகளும் எம்.ஜி. ஆர். அவர்களைப் பொறுத்தே இருந்தது.

எனவே அவரது மறைவுக்குப் பிறகு அவரது துணைவியார் ஜானகி அம்மையார் தலைமையில் ஓர் அணியும், ஜெயலலிதா தலைமையில் ஓர் அணியும் என்ற அளவில் கட்சி இரண்டாகப் பிரிந்தது. ஒருவருக்கொருவர் வாரி

யிறைத்த வசைபுராணங்கள், கொலைக் குற்றச்சாட்டுகள், ஊழல் புகார்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

1989 தேர்தலில் வீரமணி அவர்களாலும், நடிகர் திலகம் சிவாஜி அவர்களாலும் பல தொகுதிகளில் ஆதரிக்கப்பட்ட போதுகூட ஜானகி அணி பெருந் தோல்வியடைந்து வீழ்ச்சி யுற்றதால் ஜெயலலிதாவின் கை ஓங்கிற்று.

ஆனால் அந்தக் கட்சிக்குள்ளும் புயல் கிளம்பி, திருநாவுக் கரசு தரப்பினரை விலக்கி விட்டதாக ஜெயலலிதாவும் - ஜெயலலிதா தரப்பினரை விலக்கி விட்டதாக திருநாவுக் கரசும் அறிவித்து; அவர்களுடைய கட்சி அலுவலகத்தி லேயே 12-8-1990 அன்று இரு குழுவினரும் மோதிக்கொண்டு பலர் காயமடைந்து; இரு தரப்பிலும் 43 பேர் கைதாகிப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

பின்னர் ஜானகி அவர்கள் ஜெயலலிதாவுடன் சமரசம் செய்து கொண்டு, கட்சித் தேர்தல் சின்னம், தலைமை அலுவலகக் கட்டிடம் ஆகியவற்றை ஜெயலலிதா அணிக்கு விட்டுக் கொடுத்தார். அதன்பிறகு ஜானகி அம்மையாரை ஜெயலலிதா ஏறெடுத்தும் பார்க்கவில்லை!

இதற்கிடையே அவர்களுக்குள் மோதுதல் ஏற்பட தி.மு.க. ஆட்சிதான் காரணம் என்று கூறி, ஜெயலலிதா அவரது வீட்டு வாசலிலேயே 13-8-90 அன்று சாகும் வரையில் உண்ணாவிரதம் என அறிவித்து அவ்வாறே தொடங்கினார். அதற்குப் போட்டியாக திருநாவுக்கரசு அவர்களும் உண்ணாவிரதம் தொடங்கினார். அந்தக் கலவரத்தின்போது ஜெயலலிதா எழுதிய சில கடிதங்களை திருநாவுக்கரசு, பத்திரிகைகளில் வெளியிட்டார்.

கட்சி அலுவலகப் பிரச்சினையை நீதிமன்றத்தில் தீர்த்துக் கொள்ளலாம் என்று ராஜீவ் காந்தி அறிவுரை சொன்ன தாகக் கூறி மறுநாள் 14-8-90 அன்று ஜெயலலிதா தனது உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டார்.


இந்த நிகழ்வுகளுக்கு முன்பு 29-7-90 அன்று சேலம் சீரகாபாடியில் உள்ள கிருபானந்த வாரியார் பொறியியல்

கல்லூரி வளாகத்தில் அவர் பெயரால் கட்டப்பட்டிருந்த மணி மண்டபத்தினையும் வாரியார் சிலையையும் நான் திறந்து வைத்தேன். விழாவில் கிருபானந்த வாரியாரும் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் பேசும்போது, "இந்த நாட்டிலே திருக்குறள் படித்தால் ஒழுக்கம் இருக்கும். இந்த உலகத்தில் பெருமை கலை உணர்வினால் வருகிறது. அதற்கு உதாரணம் கலைஞர். அவர் தன் வாழ்நாளில் கலைக்காகவே வாழ்ந்து, கலைக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். அவரை வாழ்த்துவதெல்லாம் கலையை வாழ்த்துவதாகும். அவருடைய கலை உள்ளத்தை உலகம் பாராட்டுகிறது. அவருடைய உள்ளம் கலை நிறைந்த உள்ளம். அவர் வந்து இந்தச் சிலையைத் திறந்து வைத்து இந்தக் கல்லூரியையும் பார்வையிட்டிருக்கிறார். அவர் பார்வை பட்டாலே எதுவும் ஒரு படி உயரும். கலைஞர் அவர்கள் நீண்டகாலம் இருந்து இந்தத் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் நல்ல உடல்நலத்தோடு பல்லாண்டு பல்லாண்டு இருந்து தொண்டு செய்வார். உங்கள் எல்லோருடைய சார்பாக நெஞ்சார நினைத்து, வாயார வாழ்த்தி, தமிழ்க்கடல் கலைஞர் அவர்களுக்குக் கலைச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தையும் சூட்டுகிறேன்" என்று உளமாறப் பாராட்டினார்.

நான் அந்த விழாவிலே உரையாற்றும்போது, "வாரியார் அன்று தொட்டு இன்று வரையில் எந்தவொரு கொள்கையிலே, அது எனக்கு முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத கொள்கையாக இருக்கலாம், ஆனால் அவர் ஏற்றுக்கொண்ட கொள்கையில் பிடிவாதமாக உறுதியாக இருந்து கனிவாக மற்றவர்களுடைய உள்ளத்தில் தன்னுடைய கருத்துக்களைப் பதிய வைக்க வேண்டும் என்கின்ற ஆழ்ந்த அக்கறை படைத்தவர். அவர் சொல்கின்ற கருத்துக்கள் அனைத்தும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தாலும் அவர் அதை எப்படிச் சொல்கிறார் என்பதற்காக அதைக் கேட்கும் அவா உடையவனாக இருந்திருக்கிறேன். அவர் தமிழுக்காக ஆற்றியிருக்கின்ற தொண்டுகளை நாம் மறந்திட இயலாது. அந்தத் தமிழ்த் தொண்டின் சின்னமாகத்தான் இங்கே இந்தக் கல்லூரி எழுந்து நிற்கின்றது. ஆட்சியிலே இருப்பது என்பது

முள் கிரீடம் சூட்டிக்கொண்டு உலவுவதைப் போலத்தான்! ஆனாலுங்கூட கிருபானந்த வாரியார் போன்ற பெரியவர்களின் வாழ்த்து, பாராட்டு, அவர்களுடைய உள்ளத்திலிருந்து பொழிகின்ற கருணை, அன்பு ஆகியவைகளால் எங்களுக்கு ஏற்படுகின்ற காயங்களை நாங்கள் ஆற்றிக் கொள்கிறோம்" என்று தெரிவித்தேன்.

90-ஆம் ஆண்டு ஆகஸ்ட் இரண்டாம் நாள் உலக அரசியல் போக்கையே மாற்றும் சம்பவம் நடைபெற்றது. பெட்ரோல் ஏற்றுமதி மூலம் வளம் கொழித்த குவைத் நாடு அன்று தன்னுடைய பக்கத்து நாடான ஈராக்கினால் ஆக்கிரமிக்கப்பட்டது. குவைத்தின் அமீர் ஜாபர் அல் அஹ்மத் அல்சபா அவர்கள் சவுதி அரேபியாவிற்குத் தப்பி ஓடினார். ஈராக் அதிபர் சதாம் உசேனை குவைத் நாட்டை விட்டு வெளியேறும்படி உலக நாடுகள் விடுத்த வேண்டுகோளை நிராகரித்தது மட்டுமல்லாமல், குவைத்தை ஈராக்கின் 19-வது மாநிலமாக அறிவித்தார். ஆகஸ்ட் 6-ந் தேதி ஐ.நா. பாதுகாப்புக் குழு ஈராக் நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்தது. ஈராக் மற்றும் குவைத்தில் தயாராகும் எண்ணெய் ஏற்றுமதி தடை செய்யப்பட்டது. மேலை நாட்டு வங்கிகளில் ஈராக், குவைத் நாடுகளின் முதலீடுகள் முடக்கி வைக்கப்பட்டன.



கிருபானந்த வாரியார் திருவுருவச் சிலையை முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்கிறார். உடன் வாரியார் மற்றும் பலர்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஷ் அவர்கள் சதாம் உசேனைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கை களையும் எடுத்தார். ஐ.நா.வின் பொருளாதாரத் தடையைச் செயல்படுத்த அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை ஒன்று சவுதி அரேபியாவிற்கு அந்த நாட்டின் வேண்டுகோளின்படி அனுப்பப்பட்டது. உலக நாடுகள் அமெரிக்கா, ரஷ்யா உட்பட அனைத்தும் சதாம் உசேனுக் கெதிராக ஒன்றுபட்டபோது எகிப்து, சிரியா, ஜோர்டான் நாட்டு மக்களால் அரபு மக்களின் காவலனாக சதாம் உசேன் புகழப்பட்டார். ஈராக்கிற்குத் தேவையான பணத் தேவை யைச் சந்திக்க குவைத்தின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்று வது ஒன்றே வழி என்பது சதாம் உசேனின் கணிப்பு. அரபு நாடுகளுக்குத் தலைமை தாங்கும் ஆசை ஈராக்கிற்கு நீண்ட காலம் உண்டு. 1991 ஜனவரி 15க்குள் ஈராக், குவைத்தை விட்டு வெளியேறவில்லை என்றால் பன்னாட்டுப் படைகளின் ராணுவ நடவடிக்கை மூலம் ஈராக்கை வெளியேற்ற ஐ.நா. பாதுகாப்புச் சபை அனுமதி அளித்தது.

குவைத் ஆக்கிரமிக்கப்பட்டதால் ஒன்றரை லட்சம் இந்தியர்கள் தாயகம் திரும்பினர். இந்தியர்களை வெளி யேற்றி இந்தியாவுக்கு அழைத்துவர ஐம்பது கோடி ரூபாய் செலவானது. ஏர் இந்தியா விமானம் ஆகஸ்ட் 14 முதல் அக்டோபர் 11 வரை 461 விமானப் பயணம் மூலம் 1,16,084 பேரை இந்தியாவுக்குக் கொண்டு வந்தது. ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்குப் பத்தாயிரம் டன் உணவுப் பொருளை அனுப்ப அனுமதிக்கப்பட்ட முதல் நாடும் இந்தியாதான். ஜனவரி 17ந்தேதி காலை பன்னாட்டுப் படையினர் ஈராக்கின் முக்கிய ராணுவ நிலையங்களைத் தாக்கி அழித்தனர். 18-ஆம் தேதியன்று ஈராக்கின் ஏவுகணைகள் இஸ்ரேல் நாட்டை நோக்கி வீசப்பட்டன. இஸ்ரேல் தொடர்ந்து தாக்கப்பட்ட தால் அமெரிக்காவின் பேட்ரியாட் ஏவுகணை இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டது. 22-ந்தேதி குவைத் எண்ணெய்க் கிணறு கள் தகர்க்கப்பட்டன. 25-ந்தேதி குவைத் தீவு அமெரிக்கப் படையால் கைப்பற்றப்பட்டது. 27-ந்தேதி ஈராக்கின் போர் விமானங்களை ஈரான் முடக்கியது. 7-2-91 அன்று அமெரிக்க


வீரர்கள் குவைத் கடற்கரையில் இறங்கி தாக்குதல் தொடுத்தனர். தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத ஈராக், தோல்வியைத் தழுவி, குவைத் நாட்டினை விடுவித்தது. இவ்வாறு நீடித்த இந்தப் போர் 91-ஆம் ஆண்டு மார்ச் 3ந்தேதி வரை நீடித்தது. இந்தப் போரில் தீப் பிடித்து எரிந்த எண்ணெய்க் கிணறுகள் அணைவதற்கு வெகு காலம் பிடித்தது.

6-8-90 அன்று பாகிஸ்தான் நாடாளுமன்றத்தைத் திடீரென்று அதிபர் இஸ்ஹாக்கான் கலைத்து 20 மாத காலம் ஆட்சியில் இருந்த பிரதமர் திருமதி பேநசீர் புட்டோவின் தலைமையிலான அமைச்சரவையைப் பதவி இழக்கச் செய்ததோடு, நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி நடக்குமென்றும், அதுவரை இடைக்காலப் பிரதமராக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த குலாம் முஸ்தபா ஜதோயை நியமிப்பதாகவும் அறிவித்தார். பேநசீர் புட்டோவின் ஆட்சியில் ஊழலும் அரசியல் செயல்திறமையின்மையும் பெருகிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். 1988-ஆம் ஆண்டு டிசம்பர் 2ந்தேதி பிரதமராகப் பதவியேற்ற பேநசீர் புட்டோ முஸ்லீம் நாடு ஒன்றின் முதல் பெண் பிரதமராவார். 11 ஆண்டு கால ராணுவ ஆட்சிக்குப் பிறகு பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை மலரச் செய்தவர் என்றும் அவர் புகழப்பட்டார். ஆனால் அவர்மீதிருந்த நல்ல எண்ணம் படிப்படியாகக் குறைந்தது. அவரது ஆட்சியில் பல ஊழல் புகார்கள் எழுப்பப்பட்டன. அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீதே புகார்கள் கூறப்பட்டன. ராணுவத்துடனும் பேநசீர் புட்டோ அரசு சுமுகமான உறவு கொண்டிருக்கவில்லை. தொடர்ந்து மொத்தமுள்ள நான்கு மாகாண சட்டமன்றங்களும் கலைக்கப்பட்டன.

அக்டோபர் திங்களில் நடைபெற்ற தேர்தலில் பேநசீர் புட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி பெரும் தோல்வி கண்டது. வாக்குப் பதிவுக்கு முன்பு அவருடைய கூட்டங்களுக்குத் திரண்ட மக்கள் எண்ணிக்கையையும் ஆதரவையும்

கண்டு பெரும்பாலான அரசியல் விமர்சகர்கள் பேநசீரே மீண்டும் வெற்றி பெற்று ஆட்சிக்கு வருவார் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக 207 முஸ்லீம் தொகுதிகளில் பேநசீரின் கட்சிக்கு 45 இடங்களே கிடைத்தன. ராணுவத்தின் ஆதரவுள்ள இஸ்லாமிய ஜனநாயகக் கூட்டணி 105 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய பெரும்பான்மை பலத்தைப் பெற்றது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆந்திர முதலமைச்சர் சென்னா ரெட்டி அவர்களுக்கு தெலுங்கு திரைப்படத் தொழில் துறையின் சார்பில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் 12-9-1990 அன்று பாராட்டு விழா நடை பெற்றது. அந்த விழாவில் நானும் கலந்துகொண்டு சென்னா ரெட்டி அவர்களைப் பாராட்டி வாழ்த்தினேன். அந்த விழாவிலே சென்னா ரெட்டி பேசும் போது, "இந்தியாவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலைஞரைப் போலச் செயல்பட்டால் நாடு நன்றாக இருக்கும், தேசிய ஒருமைப் பாடு வளரும்" என்று குறிப்பிட்டார்.



பிரதமர் வி.பி. சிங்கிற்கு முதல்வர் கலைஞர் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்குகிறார். உடன் பேராசிரியர், அமைச்சர் முரசொலி மாறன் மற்றும் டி.ஆர். பாலு எம்.பி.

1990-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கழகம் ஆண்டு தோறும் கொண்டாடும் முப்பெரும் விழாவிற்குப் பதிலாக பெரியார்-அண்ணா-கழகம் பிறந்த முப்பெரும் விழா, அண்ணல் அம்பேத்கரின் நூற்றாண்டு விழா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா, தென்னகத்தின் விடிவெள்ளி திராவிட இயக்க வைரவிழா, சமூக நீதிக்கு வழி கண்ட மண்டல் கமிஷன் வெற்றிவிழா ஆகிய விழாக்களும் ஒருங்கிணைக்கப்பட்டு பேரணி, இசை நிகழ்ச்சி, கருத்தரங்கம், பட்டிமன்றம், கவியரங்கம், பொதுக் கூட்டம் ஆகியவை ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அண்ணா அவர்களின் நினைவிடம் அருகில் 25 லட்சம் ரூபாய் செலவில் அரசின் சார்பில் கட்டப்பட்டுள்ள அருங் காட்சியகத்தின் திறப்பு விழாவும் செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவிற்கு வந்த அண்ணாவின் துணைவியார் இராணி அம்மையாருக்குப் பொன்னாடை அணிவித்து வரவேற்றேன். விழாவுக்கான பேரணிப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் வி.பி.சிங் அவர்களும், தேசிய முன்னணித் தலைவர்களும், சில மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்த விழாவிற்கு அடுத்த வாரம் கழக அரசின் சார்பில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் 22-9-1990 அன்று சென்னையிலே நடைபெற்றது. டெல்லியில் முதல் அமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில், தேசிய ஒருமைப்பாடு குழுக் கூட்டங்களை டெல்லியிலேயே எப்போதும் நடத்துவதற்குப் பதிலாக மாநிலத் தலைநகரங்களிலும் நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் வெளியிட்டேன். அந்தக் கருத்தை பிரதமர் வி.பி. சிங் உடனடியாக ஏற்றுக் கொண்டு சென்னையில் நடத்துகிறீர்களா என்று கேட்டார். நானும் ஒப்புக்கொண்டேன். அதற்கேற்ப தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. டெல்லிக்கு வெளியே இந்தக் குழுவின் கூட்டம் நடைபெற்றது அதுவே முதல் முறையாகும். பிரதமர் தலைமையில் மாநில முதல் அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்தில் கலந்து

கொள்வார்கள். தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப் பட்டிருந்தன.

22-9-90 அன்று நாமக்கல் கவிஞர் மாளிகையில் சரியாக 10.30 மணிக்கு தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம் பிரதமர் வி.பி.சிங் தலைமையில் தொடங்கியது. முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ்காந்தி அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். மேலும் தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் என்.டி. ராமராவ், மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு, பஞ்சாப் கவர்னர் வீரேந்திர சிங், உத்தரப் பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதவ், கேரள முதல்வர் நாயனார், ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக், பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், அரியானா முதல்வர் உக்கம் சிங், மகாராஷ்டிர முதல்வர் சரத்பவார், புதுவை முதல்வர் டி. ராமச்சந்திரன், சிக்கிம் முதல்வர், மிஜோரம் முதல்வர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத், அகாலி தளத்தைச் சேர்ந்த சுர்ஜித் சிங் அரோரா, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஆகியோர் வந்திருந்தனர்.

அன்று காலை 8 மணி அளவில் மாநாடு நடக்குமிடத்திற்கு அருகில் ஒரு வெடிகுண்டு காவல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு, பரபரப்பானதும், பதற்றம் நிறைந்ததுமான செய்தியாகி; உடனடியாக அந்த வெடிகுண்டு செயலற்ற தாக்கப்பட்டது.

மாநாட்டில் நான் வரவேற்புரை ஆற்றினேன். அப்போது, "நமது அரசு மதச்சார்பின்மை கொள்கையில் உறுதியான பற்று கொண்டுள்ளதாகும். பல சமயத்தினரும், பல இனத்தவரும், பல மொழியினரும் கொண்டது நம்முடைய நாடு. இத்தகைய ஜனநாயக நாட்டில் சிறுபான்மையினரின் உணர்வுகளையும் நலன்களையும் பெரும்பான்மையினர் மதித்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருவர் என்ற உறுதியை, நம்பிக்கையை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். சிறுபான்மையினருக்கு அச்ச



பேரறிஞர் அண்ணா அவர்களது உருவப்படத்தை பிரதமர் வி.பி.சிங் திறந்து வைக்கிறார். உடன் முதல்வர் கலைஞர், அமைச்சர் முரசொலி மாறன் மற்றும் டி.ஆர்.பாலு எம்.பி., வைகோ எம்.பி.

உணர்வு ஏற்படாதபடி பார்த்துக் கொள்வதில் பெரும் பான்மையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அவர் களது உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய நடவடிக்கை களைத் தவிர்க்க வேண்டும்" என்று கூறினேன்.

மாநாடு காலையிலே மூன்றரை மணி நேரமும், மாலை யிலே ஐந்தரை மணி நேரமும் நடைபெற்றது. மாநாட்டிற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் வி.பி. சிங் தமிழக அரசின் ஏற்பாடுகளுக்கெல்லாம் நன்றி தெரிவித்ததோடு, மாநாட்டிலே ராம ஜென்ம பூமி பிரச்சினை குறித்து மிகவும் விளக்கமாகப் பேசப்பட்டதென்றும், ராம ஜென்ம பூமி பிரச்சினை குறித்து ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாகவும் கூறினார். நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகம் வருமாறு:-

"அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கான இடத் தைத் தேர்வு செய்வது குறித்த பிரச்சினையை அனைவரும் ஒத்துக் கொள்ளுமாறு பேசி முடிவெடுக்கப்படும். இது சம்பந்தமாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தி அனைத்துத் தரப்பினரும் ஒருமித்து ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும். இது சம்பந்தமான வழக்கை விரைவில் முடித்து வைக்குமாறு நீதிமன்றத்தை

அரசு கேட்டுக் கொள்ளும். நீதிமன்றத்தின் தீர்ப்பினை அனைவரும் மதிக்கத்தக்க வகையில் அரசு செயல்படும்." மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர், மாநில முதல் அமைச்சர்கள், கட்சிகளின் தலைவர்கள், சில மாநில ஆளுநர்கள் உரையாற்றினர். ராஜீவ் காந்தி ராம ஜென்ம பூமி கிளர்ச்சி குறித்து மட்டும் சில நிமிடங்கள் பேசினார்.

இந்தியாவின் ஒற்றுமையை வலுப்படுத்தி, தேசிய வாதத்தை வளர்க்கும் நோக்குடன் ரத யாத்திரை மேற் கொள்ளப் போவதாக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி அவர்கள் அறிவித்து, 25-9-90 அன்று அயோத்தியை நோக்கி, பத்தாயிரம் கிலோ மீட்டர் தொலை விலான ரதயாத்திரையை குஜராத் மாநிலத்தில் உள்ள சோமநாதபுரத்திலிருந்து தொடங்கினார். தீனதயாள் உபாத்தியாய பிறந்த தினமான 25ந்தேதி இந்த ரத யாத்திரை தொடங்கியது. நாடு சுதந்திரம் அடைந்தவுடன் மத்திய அரசு சோமநாதர் கோயிலைக் கட்ட சர்தார் பட்டேல் உடனடி நடவடிக்கை எடுத்ததைப்போல ராம ஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினையிலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்தும் வகையில் அந்த இடம் தேர்ந் தெடுக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

இந்தியாவில் மேற்குக்கரைப் பகுதியில் உள்ள இந்தக் கோவிலை கஜினி முகமது 17 முறை இடித்துத் தரைமட்ட மாக்கினார். இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான பாபு ராஜேந்திர பிரசாத் 1951-ஆம் ஆண்டு சோமநாதர் கோவிலில் ஜோதிர்லிங்க பிரதிஷ்டை நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். தினமும் 300 கி.மீ. பயணம் என்ற முறையில் கணக்கிட்டு அக்டோபர் 29-ந்தேதி அயோத்தி சென்றடைவதென்றும், அக்டோபர் 30-ஆம் தேதி அயோத்தியில் ராமர் கோவில் கட்டும் பணியைத் தொடங்குவதென்றும் திட்டமிடப் பட்டது. மற்ற மதத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலோ, மத உணர்வுகளைத் தூண்டும் வகையிலோ கோஷம் எழுப்ப வேண்டாமென்று அத்வானி வேண்டு கோள் விடுத்தார். தேசிய ஒற்றுமை, கலாச்சாரப்

பாரம்பரியம், மத அமைதி ஆகியவற்றைப் பலப்படுத்துவதே ரத யாத்திரையின் முக்கிய குறிக்கோள் என்றும் அவர் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங் கூறும் போது, ராமர் கோயில் கட்டுவதை நான் ஒரு போதும் எதிர்க்கவில்லை. மசூதியை இடித்து விட்டு அந்த இடத்தில் கோயில் கட்டும் திட்டத்தைத்தான் எதிர்க்கிறேன். மதப் பிரச்சினை ஒன்றை அரசியல் ஆக்குவதை நான் விரும்ப வில்லை என்றார். அக்டோபர் 5-ந்தேதியன்று மாநிலங் களவையிலேயே ஆளுங்கட்சி உறுப்பினர்கள், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாரதிய ஜனதா கட்சி நடத்தி வரும் ரத யாத்திரை நாட்டின் பல்வேறு இடங்களில் வகுப்புக் கலவரத்துக்குத் தூண்டுகோலாக அமைகிறது; அதன் எதிரொலியாக நாட்டின் பல இடங்களில் கலவரம் ஏற்பட்டுள்ளது. எனவே பா.ஜ.க. தனது ரத யாத்திரையை உடனடியாகக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்தினர். பா.ஜ.க. சார்பில் அதற்குப் பதிலளித்த சிக்கந்தர்பக்த், அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்டுவது வகுப்புக் கலவரத்துக்கு வழி வகுக்காது என்றார்.


ராம ஜென்ம பூமி பிரச்சினையில் பிரச்சினைக்குள்ளான இடத்தில் உள்ள அமைப்புகள் அனைத்தையும் எந்த வகையிலும் பாதுகாப்பது என்ற அரசின் முடிவிற்கு தேசிய முன்னணியின் ஆட்சி மன்றக் குழு 12-10-90 அன்று கூடி ஆதரவு தெரிவித்தது. மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க மத்திய அரசு பல்வேறு முஸ்லீம் தலைவர்களுடைய ஆலோசனை களையும் கேட்டறிந்தது. இதற்கிடையே அத்வானி அவர்கள், ரத யாத்திரையைத் தடுத்தால் இதுவரை இந்திய வரலாறு கண்டிராதபடி மிகப் பெரிய அளவில் சத்தியாக் கிரகப் போராட்டம் நடைபெறும் என்றார்.

மேலும் அயோத்தியில் ராமர் கோவில் கட்ட அனுமதி அளிக்காவிட்டாலோ, ரத யாத்திரையைத் தடுத்தாலோ தேசிய முன்னணி அரசுக்கு அளித்து வரும் ஆதரவைத் திரும்பப் பெறப் போவதாக பா.ஜ.க. வின் தேசிய செயற்குழுக்

கூட்டத்தில் 17-10-90 அன்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அன்றிரவே ஜனதா தளத்தின் அரசியல் விவகாரக் குழு கூடி மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை பா.ஜ.க. திரும்பப் பெற்றுக் கொண்டால் ஏற்படக் கூடிய விளைவு களைச் சந்திக்க தேசிய முன்னணி அரசு தயாராக இருப்ப தாக அறிவித்தது. இதற்கிடையில் பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் அத்வானியைச் சந்தித்து தங்கள் மாநில வழியாக ரத யாத்திரை மேற்கொள்ள வேண்டாமென்றும், மாநிலத்தின் பல பகுதிகளில் பதற்றநிலை இருப்பதால் அங்கே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் கூடும் என்றும் கேட்டுக் கொண்டதற்கு அத்வானி ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். மத்திய அரசின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் 18-10-90 அன்று நடைபெற்றது. பா.ஜ.க.வும், இந்திரா காங்கிரசும் அந்தக் கூட்டத்திற்கு வராமல் புறக்கணித்து விட்டன.

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் 89ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ந்தேதி பிறப்பித்த கட்டளைப்படி நடப்போம் என்று கையெழுத்திட்டு உறுதி கூறிய விசுவ இந்து பரிஷத் தலைவர்கள் அதன்படி நடக்க வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இரத யாத்திரையைக் கைவிடுமாறு மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அத்வானியை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்ட தையும் அத்வானி ஏற்க மறுத்து விட்டார். 19-10-90 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் ராம ஜென்ம பூமி இடத்தை அரசு ஆர்ஜிதம் செய்வதற்கான அவசரச் சட்டத்தைப் பிறப் பித்தார். உள்ளே வரும்போது பெரும் கலவரம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட



பிரதமர் வி.பி.சிங்கை ஆளுநர் பர்னாலா, முதல்வர் கலைஞர், மத்திய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோர் வரவேற்கின்றனர். உடன் மத்திய அமைச்சர்கள்.

பீகார் மாநிலத்திற்குள் ரத யாத்திரை அமைதியாக நுழைந்தது.

மத்திய அரசின் சார்பில் ராம ஜென்ம பூமி- பாபர் மசூதி பிரச்சினை தொடர்பான வழக்கை அலகாபாத் உயர்நீதி மன்றத்திலிருந்து உச்சநீதிமன்றத்திற்கு மாற்றுவது என்றும், பிரச்சினைக்குரிய இடத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்வது என்றும், அந்தப் பகுதியை ஒட்டியுள்ள வேறு இடத்தை ராமர் கோயில் கட்டுவதற்காக சமிதியிடம் ஒப்படைப்பது என்றும் மூன்று அம்சத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. இந்த மூன்று அம்சத் திட்டத்தை நான் வரவேற்று, அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொண்டேன்.

24 மண்டலும்; அயோத்தியும் கவிழ்த்த மத்திய ஆட்சி

மதப் பற்றே இல்லையென்று தம்மைப் பற்றிக் கூறிக் கொண்டு அந்த முடிவில் வாயளவில் இல்லாது செயலிலும் உறுதியாக இருப்போர், மிகக் குறைந்த சதவிகிதத்தினரே இருக்கக் கூடும்.

ஆனால்; இருக்கின்ற மதங்களுக்கிடையே போட்டி, புகைச்சல், வேறுபாட்டுணர்வுகள் இல்லாமல்; ஒருவேளை அந்த உணர்வுகள் இருப்பினும் அவற்றைப் போக்கிக் கொண்டு, மதங்களுக்கிடையே நல்லிணக்கம் காண்பதே சாத்தியமான பணியாகும்.

அதனால்தான் நான் அண்மைக்காலமாக "மதச் சார்பற்ற" என்ற வாசகம்; "மதச் சார்பற்ற அரசு" என்பதற்கு மட்டுமே பொருந்தும் என்றும் - கட்சிகளின் கூட்டணியில் எப்படியும் மதச் சார்புடையவர்களிருப்பதால் அத்தகைய அணியை "மதச் சார்பற்ற அணி" எனச் சொல்லாமல் "மத நல்லிணக்க அணி" என்று கூறுவதே பொருந்தும் என்று விளக்கி வருகிறேன்.


தனது ஆட்சியின்கீழ் இருக்கிற நாட்டில் அல்லது அந்த நாட்டில் உள்ள ஒரு மாநிலத்தில் மதங்களிடையே ஏற்றத் தாழ்வு பார்க்காமல், எல்லா மதத்தையும் சமமாகப் பாவித்து, அவற்றிடையே எழும் பிரச்சினைகள் நல்லதாயினும் கெட்ட தாயினும் அரசைப் பொறுத்தவரையில் மதச்சார்பற்ற நிலையையே கடைப்பிடிக்க வேண்டும்.

அரசு, மதச் சார்பற்ற அரசு! அரசியலில் உருவாகும் அணிகள், மத நல்லிணக்க அணிகள்!

இந்தியப் பிரதமராக வீற்றிருந்த வி.பி. சிங் அவர்களைப் பொறுத்தவரையில்; மத நல்லிணக்கத்தை உருவாக்குவதிலும்; அதே சமயம் மதச் சார்பற்ற நிலையை நிர்வாகத்தில் கடைப் பிடிப்பதிலும் தேசிய முன்னணி அரசு, உறுதியாக இருக்கிறது என்பதை தனது ஒவ்வொரு நடவடிக்கை மூலமும் மெய்ப்பித்துக் காட்டினார் என்பதே என் மனத்திற்கு மிகுந்த ஆறுதல் அளித்த விஷயமாகும்.

அத்வானி அவர்களின் இரத யாத்திரையால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து சென்னையில் நடைபெற்ற தேசிய அளவிலான அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் விவாதித் திருந்தோம் எனினும்; நிலைமையின் வெம்மை கருதி உடனடியாக பிரதமர் அவர்கள் 22-10-90 அன்று முதலமைச் சர்கள் கூட்டத்தைக் கூட்டிக் கலந்து பேசினார். பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொண்டிருக்கும்போதே; பீகார் மாநிலத்தில் இரத யாத்திரையில் வந்து கொண்டிருந்த அத்வானி அவர்கள் சமஸ்தி பூர் எனுமிடத்தில் கைது செய்யப்பட்ட செய்தி கிடைத்தது.

அச்செய்தி வந்தவுடன் பாரதிய ஜனதா கட்சியினர் கூடிப் பேசி முடிவெடுத்து, தேசிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்தனர். 86 உறுப்பினர்களைக் கொண்ட அக்கட்சியின் ஆதரவு இல்லாத நிலையில் வி.பி. சிங் அமைச்சரவை பெரும்பான்மை இழந்தது. ஆயினும் தான் பதவி விலகப்போவதில்லை என்றும், பெரும்பான்மை இருக்கிறதா இல்லையா என்பதை மக்களவை கூடும்போது நிரூபிக்கப்போவதாகவும் குடியரசுத் தலைவரிடம் வி.பி. சிங் தெரிவித்தார். குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அட்டர்னி ஜெனரல் சோலி சோராப் ஜியை அழைத்து அவருடன் ஆலோசனை நடத்தினார். அத்வானி கைதுக்கு நாட்டின் பல பகுதிகளிலே எதிர்ப்பு ஏற்பட்டு, வன்முறைச் சம்பவங்களும் நடைபெற்றன. குஜராத்தில் கலவரங்கள் அதிகமாகி நான்கு பேர் கொலை



வி.பி.சிங்

செய்யப்பட்டனர். வி.பி. சிங்குக்குப் பதிலாக இன்னொரு தலைவரை நாடாளுமன்ற ஜனதாதளம் தேர்ந் தெடுத்தால் அவருக்கு ஆதரவு அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று பா.ஜ.க. அறிவித்தது. வி.பி.சிங் பிரதம ரான நாளிலிருந்தே அவரைக் கடுமை யாக விமர்சித்து வந்த சந்திரசேகரின் ஆதரவாளர்கள் வி.பி.சிங்குக்குப் பதிலாக வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக் கலாம் என்று கூறினர். சந்திரசேகரும் சூசகமாக கட்சி கேட்டுக் கொண்டால் பிரதமர் பதவி ஏற்கத் தயார் என்றார்.

செய்தியாளர்கள் இது குறித்து என்னுடைய கருத்தைக் கேட்டபோது, "இதிகாச காலத்து ராமனுக்கு ஒரு கோயில் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை யாரும் மறுக்க முடியாது. மறுக்கவில்லை. அதற்காக வரலாற்றுக் காலத்து பாபர் மசூதியை இடிக்க வேண்டும் என்பதை நாட்டின் ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும் அக்கறையுள்ள எவரும் ஏற்றுக்கொள்ள இயலாது. பாபர் மசூதியை அகற்றி விட்டு அங்கே ராமர் ஆலயம் அமைப்பேன் என்று சபதம் செய்து அதற்காக ஒரு ரத யாத்திரை என்றால் மதச் சார்பற்ற அரசு அதனை எத்தனை நாளைக்கு அனுமதிக்க முடியும்? ராம ஜன்ம பூமி- பாபர் மசூதி பிரச்சினையிலிருந்து நாட்டைக் காக்க ஆட்சியையும் இழக்கத் தயாராக உள்ளேன் என்று பிரதமர் வி.பி. சிங் உறுதிபடக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதும், வரவேற்கத் தக்கதுமாகும்" என்று கூறினேன்.

ராம ஜன்ம பூமியை அரசு ஏற்கும் என்று சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசினால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு திரும்பப் பெறப்பட்டது. தேசிய முன்னணி அரசின் பெரும்பான்மை பலத்தை நவம்பர் 7 ஆம் தேதி மக்களவையில் நிரூபிக்க வி.பி.சிங் அவர்களுக்கு குடியரசுத் தலைவர் அனுமதித்து, வி.பி.சிங் அவர்களும்

அதற்கு இணக்கம் தெரிவித்தார். அத்வானி கைதானதைத் தொடர்ந்து பா.ஜ.க. சார்பில் "பந்த்" 24ந்தேதியன்று நடத்தப் பட்டபோது பல மாநிலங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் 25க்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுவுக்கு வி.பி.சிங்தான் தலைவர் என்றும், அதில் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் தேவிலால் அறிவித்தார். நெருக்கடி காரணமாக ஜனதா தளம் பிளவு படாது என்றார் சந்திரசேகர். அரசு கவிழ்வதற்கான எந்தக் காரியத்தையும் தான் செய்யப்போவதில்லை என்றும், ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால்தான் வி.பி. சிங் அரசு தப்ப முடியுமென்றும் அவர் கூறினார்.

"மத்தியில் எந்தக் கட்சி ஆட்சி நடத்துவது என்பதையோ, அல்லது மறு தேர்தல் நடத்துவதா என்பதையோ நாடாளு மன்றத்தின் முடிவுக்கு விட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பத்து ஆண்டுக் காலமாக இ.காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த மண்டல் கமிஷன் பரிந்துரை களை அமல்செய்ய முன்வந்ததும் வி.பி.சிங்கை எதிர்ப்பதற்கு ஒரு காரணம்" என்று செய்தியாளர்களிடம் நான் தெரிவித் தேன்.

இதன் தொடர் விளைவாக குஜராத் மாநிலத்தில் ஜனதா தள தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகித்த பா.ஜ.க. அமைச்சர்களின் பதவி விலகல் கடிதங்களை யெல்லாம் முதல் அமைச்சர் சிமன்பாய் படேல் கேட்டுப் பெற்றார். மேலும் நவம்பர் 1ந்தேதியன்று தனது அமைச்சர வையின் பெரும்பான்மையை சட்டமன்றத்திலே நிரூபித்துக் காட்டுவதாக ஆளுநரிடமும் தெரிவித்தார். அதைப் போலவே ராஜஸ்தானில் பா.ஜ.க. தலைமையிலான அமைச் சரவையில் இடம் பெற்றிருந்த ஜனதா தள அமைச்சர்கள் பத்து பேரும் முதல்வர் ஷெகாவத் அவர்களிடம் தங்கள் பதவி விலகல் கடிதங்களைக் கொடுத்தனர்.

அயோத்திக்குச் சென்று 30-10-90 அன்று கரசேவையை தொடங்குவதாக அறிவித்திருந்த பா.ஜ.க. தலைவர் திரு. வாஜ்பய் அவர்கள் அயோத்தி செல்லும் வழியில் லக்னோ விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய ராம ஜன்ம பூமி - பாபர் மசூதி வளாகத்துக்குள் 30ஆம் தேதியன்று போலீசாரின் தடைகளைத் தகர்த்து உள்ளே புகுந்த கரசேவகர்கள் பாபர் மசூதியை இடித்துச் சேதப்படுத்தினர். கரசேவகர்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந் தனர். மசூதியின் கருவறையைச் சுற்றியுள்ள சுற்றுச்சுவரிலும் கரசேவகர்கள் கடப்பாரைகளால் தாக்கினர். இதனால் அந்தச் சுவரில் ஆங்காங்கே பெரும் துவாரங்கள் ஏற்பட்டன. இதன்பிறகு மசூதியின் விமானப் பகுதிகளில் காவிக் கொடி களை ஏற்றிவிட்டு கரசேவகர்கள் அந்தப் பகுதியிலிருந்து தப்பி விட்டனர். உத்தரப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு இடங்களில் போலீசாருக்கும் கரசேவகர்களுக்கும் இடையே நடந்த மோதல் காரணமாக 14 நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டது. அயோத்தியில் பாபர் மசூதி கரசேவகர்களால் எந்தவிதப் பாதிப்புக்கும் ஆளாகவில்லை, கரசேவை நடைபெறவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் முப்தி மகமது சையத் அவர்கள் தெரிவித்தார்கள்.


வி.பி. சிங்கைத் தவிர வேறு யாராவது தலைவர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தேசிய முன்னணி அரசுக்கு இந்திரா காங்கிரஸ் ஆதரவு தருமென்றும், அதிலும் தேவிலால் ஆட்சிக்கு வந்தால் போபர்ஸ் பீரங்கி பேர விவகாரம் குப்பைக் கூடைக்குள் போடப்படும் என்றும் பரவலாக அப்போது பேசப்பட்டது. சந்திரசேகர் அவர்களோ இந்திரா காங்கிரஸ் ஆதரவைப் பெறுவதில் தவறில்லை என்றார். மத்திய அமைச்சர்களான அருண்நேரு, ஆரிப் மகமதுகான் மற்றும் ஒரு காலத்தில் பிரதமருக்கு மிகவும் நெருக்கமானவராகத் திகழ்ந்த ராஜ்மங்கள் பாண்டே ஆகியோர் உள்ளிட்ட ஜனமோர்ச்சாவின் ஆறு நிறுவன உறுப்பினர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் வி.பி.

சிங்கிற்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தனர். நவம்பர் 2ந்தேதியன்று ராம ஜன்ம பூமியில் நுழைய சுமார் 5000 பேர் முயற்சி செய்தனர். அப்போது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 15 கரசேவகர்கள் உயிரிழந்தனர்.

4-11-90 அன்று செய்தியாளர்களிடம் பேசிய தேவிலால் பெரும்பான்மை கட்சி உறுப்பினர்களின் விருப்பத்திற் கிணங்க 5ந்தேதியன்று வி.பி.சிங் பிரதமர் பதவியிலிருந்து விலகாவிட்டால், ஜனதாதளத்தின் சார்பில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவாரென்று தெரிவித்தார். மேலும் இவர் கூறும்போது, இடைத்தேர்தல் வேண்டியதில்லை என்ற கருத்தை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே இந்திரா காங்கிரஸ் ஆதரவை தேசிய முன்னணி புறக்கணிக்காது என்றார். இந்தச் செய்தியாளர்கள் கூட்டத்தில் சந்திரசேகரும் கலந்து கொண்டு தேவிலால் அவர்களின் கருத்துக்களை ஆதரித்தார். பதவியில் நீடிப்பதற்காக தேசிய முன்னணி அரசு இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவை ஏற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வி.பி.சிங் அறிவித்தார்.

"நெஞ்சுக்கு நீதி" தொடரில் கடந்த 22ஆம் அத்தியாயத்தில் நான் குறிப்பிட்டிருந்ததைப் போலவே; அமைப்பு ரீதியான அடித்தளம் அமைக்காமல் அந்தந்த வட்டாரத்தில் தங்களுக் கெனப் பரவியுள்ள செல்வாக்கையும், பெரும்பான்மை சமூகத்தினரின் பக்க பலத்தையும் மட்டும் வைத்துக்கொண்டு இயங்கிய அரசியல் கட்சிகளிடையே திடமான- தெளிவான- கொள்கை கோட்பாடுகளுடனான உறுதியோ ஒற்றுமையோ நீடித்திருப்பது என்பது முயற் கொம்பே என்பதை இந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டின.

அதனால்தான் பெரும் பதவிகளில் அமர்ந்தோர்கூட, தமது விருப்பம் போல் நிறத்தை மாற்றிக் கொள்கிற நிலைமைக்கு ஆளாயினர்.



வாஜ்பய்

இவர்களுக்கிடையே திரு. வி.பி. சிங் தனித்து நின்றது பாராட்டத்தக்க அனுபவமாக என் போன்றார்க்கு இருந்தது.

இதற்கிடையே நவம்பர் 4ந்தேதியன்று பீகாரில் காவலில் வைக்கப்பட்டிருந்த பா.ஜ.க. தலைவர் அத்வானி விடுதலை செய்யப்பட்டார். டெல்லியில் நடைபெறும் பா.ஜ.க. நாடாளு மன்றக் குழுக் கூட்டத்திலும், 7ந்தேதியன்று நடைபெறவுள்ள மக்கள் அவைக் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு வசதியாக அவரை டெல்லிக்கு அழைத்துச் செல்லுமாறு பாட்னா உயர்நீதி மன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

5-11-90 அன்று ஜனதா தளம் இரண்டாக உடைந்தது. சந்திரசேகர் தரப்பில் 68 நாடாளுமன்ற உறுப்பினர்களும், வி.பி.சிங் தரப்பில் 83 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஜனதா தளம் உடைந்த காரணத்தினால் வி.பி. சிங் அரசு வீழ்வது உறுதியாயிற்று. சந்திரசேகர் இந்திரா காங்கிரஸ் துணையோடு மாற்று அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார். தேவிலால் வீட்டில் நடந்த கூட்டத்தில் ஜனதா தளத்தின் அதிருப்தியாளர்கள் ஒன்று கூடி, சந்திரசேகரை வி.பி.சிங்கிற்குப் பதிலாக ஜனதா தள தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். வி.பி.சிங்கை ஜனதா தளக் கட்சியிலிருந்தே நீக்கி விட்டதாக தேவிலால் அறிவித்தார். இந்த முடிவினை இ.காங்கிரஸ் கட்சி வரவேற்பதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் வி.என்.காட்கில் டெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வி.பி. சிங் ஆதரவாளர்கள் அவர் மீது நம்பிக்கை தெரி வித்ததோடு, தேவையான முடிவுகளை எடுக்க அவருக்கு அதிகாரமளித்தனர். கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி சந்திரசேகர் ஜனதா தள நாடாளுமன்றக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இதற்கு ஆதரவளித்தவர் களில் அஜீத் சிங், ஜார்ஜ் பெர்னாண்டஸ், அருண் நேரு, ஐ.கே.குஜ்ரால், முப்தி மகமது சையத், சரத்யாதவ், வி.சி.சுக்லா ஆகியோர் முக்கியமானவர்களாகும். சந்திரசேகர் இ.காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி அவர்களை அவரது

இல்லத்திற்குச் சென்று சந்தித்து ஒரு மணி நேரம் பேசி இணைந்து செயல்படுவது என்று முடிவெடுத்தனர். ஜனதா தளத்திலிருந்து பிரிந்து சென்று சட்ட விரோதமாகச் செயல் படும் குழுவினரை ஆட்சி அமைக்க குடியரசுத் தலைவர் அழைக்கக் கூடாதென்றார் வி.பி. சிங்.

நவம்பர் 7ந்தேதி நாடாளுமன்றத்தில் மக்களவையில் வி.பி. சிங் அவர்கள் தனது அமைச்சரவையின் மீது கொண்டுவந்த நம்பிக்கைத் தீர்மானம் தோல்வி அடைந்தது. தீர்மானத்திற்கு ஆதரவாக 142 வாக்குகளும், எதிர்ப்பாக 346 வாக்குகளும் கிடைத்தன. இந்திரா காங்கிரஸ் கட்சி சந்திரசேகருக்கு ஆதரவு அளித்ததையொட்டி, காங்கிரசின் தோழமைக் கட்சியான அ.தி.மு.க.வும் அந்தத் தீர்மானத்தின் போது வி.பி.சிங் கொண்டு வந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்திற்கு எதிர்ப்பாக வாக்களித்தது. அயோத்தி கரசேவைக்கும், மண்டல் கமிஷனுக்கு எதிரான கிளர்ச்சிக்கும் அ.தி.மு.க.வின் மறைமுக ஆதரவு உண்டு என்பதை வி.பி. சிங்கிற்கு எதிராக வாக்களித்து நிரூபித்துக் கொண்டது அந்தக் கட்சி!

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நம்பிக்கைத் தீர்மானம் மீதான விவாதம் சுமார் 11 மணி நேரம் நடந்து இரவு 10-25 மணிக்குத்தான் வாக்கெடுப்பு நடைபெற்றது. தீர்மானத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அறிவிக்கப் பட்டது. உடனே அத்வானி எழுந்து வி.பி.சிங்கிடம் சென்று கைகுலுக்கினார். சந்திரசேகரும் வி.பி.சிங்கின் கரங்களைக் குலுக்கினார். அவைத்தலைவர் அவையை மறுதேதி குறிப் பிடாமல் ஒத்திவைத்தார். நாடாளுமன்றக் கட்டடத்தில் அமைச்சரவையின் கூட்டத்தை வி.பி.சிங் நடத்தி, தனது அமைச்சரவையின் ராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

அரசின் முழுத் தோல்விக்கு வி.பி. சிங்தான் பொறுப்பு என்று ராஜீவ்காந்தி அவர்களும், நாட்டை அழிவின் விளிம் புக்குக் கொண்டு சென்றவர் வி.பி.சிங் என்று தேவிலால் அவர் களும், இந்திரா காங்கிரஸ் ஆதரவை ஏற்பதில் தவறில்லை என்று சந்திரசேகர் அவர்களும், ஜனதா தளத்தை உடைத்துக்

கொண்டு சென்ற ஒரு கூட்டத்திற்கு ஆட்சி அதிகாரத்தை அளிக்க முன்வரும் செயல் ஆரோக்கியமற்ற முன்னுதாரணத் தையும் மரபையும் உண்டாக்குமென்று வி.பி. சிங் அவர் களும், அத்வானி அவர்கள் கைது செய்யப்பட்டதால்தான் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை பா.ஜ.க. திரும்பப் பெற்றுக் கொண்டதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சோமநாத் சாட்டர்ஜி அவர்களும் கருத்து தெரிவித்தார்கள்.

ஆட்சிக் கலைப்பு பற்றி என்னிடம் கருத்து கேட்டதற்கு, வி.பி.சிங் ஆகஸ்ட் 7ந்தேதி மண்டல் குழு பரிந்துரையை நிறை வேற்றப் போவதாக பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதற்கான விலையை நவம்பர் 7 அன்று பாராளுமன்றத்தில் கொடுத்து விட்டார். எலியாக உயிர் வாழ்வதைவிட புலியாகச் சாவதே பெருமை என்று எண்ணுகிறவன் நான். எனவே அவரது கொள்கை உறுதியைப் பாராட்டுகிறேன் என்று தெரிவித்தேன்.

1979இல் ஜனதா கட்சி மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது பிரதமர் மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமராக இருந்த சரண்சிங்கைப் பதவி நீக்கினார். அதன் விளைவு, சரண்சிங்கினால் மொரார்ஜி அரசு கவிழ்க்கப் பட்டது. துணைப் பிரதமராக இருந்த தேவிலால் அவர்களை வி.பி. சிங் நீக்கினார். ஜனதா தளத்தில் பிளவு ஏற்பட்டு வி.பி. சிங்கின் ஆட்சி கவிழ்க்கப் பட்டது.

நவம்பர் 1ந்தேதி குஜராத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் சிமன்பாய் படேல் தலைமையிலான ஜனதா தள அரசு இந்திரா காங்கிரஸ் ஆதரவோடு வெற்றி பெற்றது. நவம்பர் 8ந்தேதி ராஜஸ்தானில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் ஷெகாவத் தலைமையிலான பா.ஜ.க. அரசு ஜனதா தளக் கட்சியிலிருந்து விலகி தனி அமைப்பாக இருந்தவர்களின் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றது.

வி.பி. சிங் பதவி விலகலை ஏற்றுக் கொண்ட குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி, பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி,

இடதுசாரி முன்னணி தலைவர் சோமநாத் சாட்டர்ஜி ஆகியோரை அழைத்துப் பேசியபோது அவர்கள் யாரும் ஆட்சி அமைக்க முன்வரவில்லை. சந்திரசேகர் ஆட்சி அமைத்தால் அதற்கு காங்கிரஸ் கட்சி வெளியிலிருந்து ஆதரவு அளிக்கும் என்று ராஜீவ் காந்தி தெரிவித்ததின் பேரிலும், புதிய அரசு அமைக்க தான் தயார் என்றும் 280 மக்களவை உறுப்பினர்களின் ஆதரவு தனக்கிருப்பதாக சந்திரசேகர் கூறியதின் பேரிலும், குடியரசுத் தலைவர் புதிய அரசை அமைக்கும்படி ஜனதா தள (சோஷலிஸ்ட்) தலைவர் சந்திரசேகரை அழைத்தார். அவரது ஆட்சிக்கு உள்ள பெரும் பான்மையை நவம்பர் 20ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ நிரூபிக்க வேண்டுமென்றும் குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

10-11-90 அன்று காலையில் இந்தியாவின் எட்டாவது பிரதமராக சந்திரசேகர் பதவியேற்றார். அவருடன் துணைப் பிரதமராக தேவிலால் பதவி ஏற்றுக் கொண்டார். வேறு யாரும் அன்றைய தினம் பதவியேற்கவில்லை. பதவியேற்பு நிகழ்ச்சி பத்து நிமிடங்களில் முடிந்தது. மத்திய அரசில் பொறுப்பில் இருந்த ஜனதா தளம் உடைந்ததைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களிலே இருந்த ஜனதா தளமும் இரு கூறாகப் பிரிந்தது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் முலாயம் சிங் தலைமையிலான அமைச்சரவையிலிருந்து ஐந்து அமைச்சர்கள் பதவி விலகினர். சந்திரசேகர் தலைமை யிலான ஜனதா தளத்தைச் சேர்ந்தவர்கள் முலாயம் சிங் யாதவ் அரசுக்கு ஆதரவு கொடுத்தனர்.

அயோத்தியில் ராம ஜன்ம பூமி கோவிலைக் கட்டுவதற் கான இரண்டாவது கட்ட கரசேவை டிசம்பர் 6ஆம் தேதியன்று தொடங்கப்படும் என்றும், அது சத்தியாக்கிரகப் போராட்ட மாக நடக்கும் என்றும் விசுவ இந்து பரிஷத்தின் பொதுச் செயலாளர் அசோக் சிங்கால் 12-11-90 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

புதிய பிரதமர் சந்திரசேகரிடம் செய்தியாளர் மும்பையில் ராஜீவ் காந்தி மீதான போபர்ஸ் பீரங்கி பேர ஊழலைப்

பற்றிக் கேள்வி கேட்டபோது, அதைப் பற்றி விசாரணை செய்ய வேண்டியது ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் வேலை தானே தவிர, அது ஒரு பிரதமர் செய்ய வேண்டிய காரியம் இல்லை என்று கூறினார். அவரது ஆட்சி எப்படி இருக்கும் என்பதற்கு இது ஒன்றே சான்றாக அப்போது அமைந்தது.

நவம்பர் 16ந்தேதியன்று நாடாளுமன்ற மக்களவை கூடியபோது சந்திரசேகரின் நம்பிக்கை கோரும் தீர்மானத் திற்கு ஆதரவாக 269 வாக்குகளும், எதிராக 204 வாக்குகளும் கிடைத்தன. 15 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை. அ.தி.மு.க.வும் அந்தத் தீர்மானத்தின்போது சந்திர சேகருக்கு ஆதரவாக வாக்களித்தது. நவம்பர் 21-ந்தேதியன்று 32 அமைச்சர்கள் மத்திய அமைச்சர்களாகப் பதவியேற்றனர். பதவியேற்பு விழா நிகழ்ச்சிக்கு பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதின் காரணமாகக் கலவரம் ஏற்பட்டது.

00/10375

டிசம்பர் 6-ந் தேதி முதல் ராமர் கோவில் கட்டும் வேலை தொடர்ந்து நடைபெறும் என்றும் முந்தைய தேர்தலில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி இந்திரா காங்கிர சுடன் சந்திரசேகர் கூட்டு சேர்ந்திருப்பது சந்தர்ப்ப வாதக் கூட்டணி என்றும் அது ஒருபோதும் நிலைக்காது என்றும் அத்வானி தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டங்கள் அவ்வப்போது நடை பெறுவதும் அதில் அரசு சம்பந்தப்பட்ட பல முடிவுகள் எடுக்கப்படுவதும் வாடிக்கைதான். அதிலும் குறிப்பாகக் கழக ஆட்சியில் அமைச்சரவைக் கூட்டம் அடிக்கடி நடைபெறும். 27-10-1990 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் ஒன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவாகும். அதுதான் தமிழகம் முழுவதும் உள்ள சுமார் 13 லட்சம் விவசாயிகளுக்குப் பயனளிக்கக் கூடிய பம்ப்செட்டுக்கான இலவச மின்சாரம் வழங்கும் திட்டமாகும். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் தரப்படாத இந்தச் சலுகை கழக ஆட்சியிலேதான் தரப் பட்டது. இந்தச் சலுகையை அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க.

ANNA CENTENARY LIBRARY

ஆட்சி நிறுத்துவதாக அறிவித்தபோது தி.மு.கழகம் அதற் கெதிராகப் போராட்டம் நடத்தத் தொடங்கியவுடன்; அந்த முடிவை அ.தி.மு.க. ஆட்சியினர் மாற்றிக் கொண்டனர்.

பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாணவருக்கு- அவர் எந்தச் சமூகத்தைச் சேர்ந்த மாணவராக இருந்தாலும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் பட்டப் படிப்புகளில் சேர நுழைவுத் தேர்வு எழுதும்போது அவருக்குக் கூடுதலாக ஐந்து மதிப்பெண்கள் வழங்க கழக ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனை எதிர்த்து ஒரு சிலர் சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருந்தனர். இந்த வழக்கினை நீதிபதிகள் பி.எஸ். மிஸ்ரா, கே.எஸ். பக்தவத்சலம் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் விசாரித்து- அரசின் ஆணை சரியானது தான் என்று நீதிபதி பக்தவத்சலம் அவர்களும், அரசின் ஆணை அரசியல் சாசனத்துக்கு முரணானது என்று நீதிபதி மிஸ்ரா அவர்களும் தீர்ப்பு கூறியதால், இந்த வழக்கு மற்றொரு நீதிபதியின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. நீதிபதி எஸ்.நயினார் சுந்தரம் இந்த வழக்கை விசாரித்து அரசின் ஆணை அரசியல் சாசனத்திற்கு முரணாக உள்ளது என்று கூறியதின் பேரில் பட்டதாரிகள் இல்லாத குடும்பங் களைச் சேர்ந்தவர்களின் வீட்டுப் பிள்ளைகளின் நல்வாழ் விற்காகக் கழக அரசு எடுத்த நடவடிக்கை பலனில்லாமல் போய்விட்டது.

25 ஆட்சிக் கலைப்புக்கான ஆரம்ப வேலைகள்!

சிறுபான்மை சமுதாயத்திற்கும் பெரும்பான்மை சமுதாயத்திற்குமிடையே கசப்பு, காழ்ப்பு, கலவரம் உருவாகி மதப்பூசல் பரவிடாமல் தடுப்பதற்காகவும்- சமூக உரிமைகளையும், நல்வாய்ப்புகளையும் நெருங்க முடியாமல் பிற்படுத்தப்பட்டுக் கிடக்கும் சமுதாயத்தின் பல பிரிவு மக்களைக் கைதூக்கி விடுவதற்கும் பாடுபட்டு; அதனாலேயே ஒரு நாட்டின் பிரதமர் பதவியை இழந்துவிட்ட வி.பி. சிங் அவர்களை அடுத்து, அந்தப் பதவிக்கு வந்த சந்திரசேகர் அவர்கள், தனது அமைச்சரவை மீது நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீது நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே; தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஏதாவது ஒரு வகையில்; எப்படியாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து; "நாயை அடித்துக் கொல்வதற்கு அதற்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று காரணம் சொல்" என்ற பழமொழிக்கேற்ப தன்னையறியாமலே தன்னுள்ளத்தைத் திறந்து காட்டிவிட்டார் என்றே கூறலாம்.

தேசிய முன்னணியில் இடம் பெற்றிருந்ததும்; அந்த முன்னணியை ஆரம்பித்த "குற்றம்" (?) புரிந்ததும்-தி.மு.க. என்பதால் அந்தக் கழக ஆட்சியின் மீது; வடக்கேயுள்ள சில கட்சிகளுக்கு ஒரு கண்! அத்துடன் தமிழ்நாட்டில் உள்ள அ.தி.மு.க.வும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை விரைவில் கலைக்க வேண்டும் என்ற உறுதிமொழியைப் பெற்றுக் கொண்டுதான் சந்திரசேகர் அவர்களை ஆதரித்தது என்ற உண்மையும் அரசியல் உலகு அறிந்த ஒன்றேயாகும்!

அதனால்தான், தன் மீது நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீது சந்திரசேகர் பேசியபோது; "பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு வலியுறுத்தப்படும். நடவடிக்கை எடுக்கத் தவறினால், மத்திய அரசின் அடுத்த நடவடிக்கை தொடரும்" என்று எச்சரித்தார். அந்தப் பேச்சுக்குத் தூபம் போடுவது போல நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் தமிழகக் கழக அரசின் மீது அடாவடித்தனமான பொய்களை இட்டுக்கட்டிக் கூறினர்.

"சந்திரசேகர்" என்ற அந்தப் பெயருக்குரியவரை என் இளமைக் காலத்தில் மானசீகமாக மிகவும் நேசித்தவன் நான்!

காங்கிரஸ் இயக்கத்தில் புது ரத்தம் பாய்ச்சிடப் புறப்பட்ட இளந்துருக்கியர்களில் சந்திரசேகர், மோகன் தாரியா, கிருஷ்ணகாந்த், ராம்தன் போன்றவர்கள் முக்கியமானவர்கள். பதவி, பவிசுகளைத் துச்சமாகக் கருதி நேர்மைக்கு மதிப் பளித்து தியாக மணிகளாகத் திகழ்ந்த இளந்துருக்கியர்களில் ஒருவரான சந்திரசேகர், தனக்குக் கிடைத்த பதவியைத் தக்க வைத்துக் கொள்ள இப்படிக்கூட நடந்து கொள்வாரா என்று வியப்புற்றேன். இருப்பினும் நடப்பது நடக்கட்டும்; மிசாக் கொடுமையையும், நெருக்கடிகாலக்கொடுமையையும் எதிர்கொண்ட கழகமும், கழக ஆட்சியும் அதற்கு மேல் என்ன கொடுமையைக் காணப் போகிறது; அப்படிக் காண நேரிட்டாலும் அதையும் சந்திக்கத்தானே வேண்டுமென்று திட நெஞ்சத்துடனேயே இருந்தேன். தி.மு.க. என்ற ஒரு சமுதாய முற்போக்கு இயக்கத்திற்கு எதிராக "அந்த இளந் துருக்கியர் தலைவர்" மாறிவிட்டாரே என்பதற்காகக்கூட அல்ல- இளம் வயதில் துடிப்பும் துள்ளலுமாக இருந்து, தியாக முத்திரைகள் பதிக்க வேண்டுமென்று ஆர்வங் கொண்டிருந்து பொது வாழ்வின் பொற்பதக்கமாக ஒளி விடுகிறவர்கள்; காலப்போக்கில் சந்தர்ப்பவாதிகளாக மாறிவிடுவது போல் இவரும் மாறிவிட்டாரே என்று வருந்தினேன்! வேதனைப்பட்டேன்!

எனது ஆருயிர் இளவல் என்று என்னால் அன்பு பொங்கிட அழைக்கப்பட்ட தமிழக அரசின் வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் 1990 நவம்பர் 18 அன்று டெல்லி சென்றபோது பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

நீண்டகாலம் நாடாளுமன்றத்தில் இருந்தவர் என்ற முறையில் சந்திரசேகர் போன்றவர்களிடம் நெருங்கிப் பழகி நட்புணர்வுடன் பேசும் வாய்ப்பு பெற்ற அவரிடம் பிரதமர் சந்திரசேகர் மனம் திறந்து உரையாடியிருக்கிறார். "தமிழ் நாட்டில் முறைப்படி அமைந்துள்ள கழக அரசைக் கலைக்க வேண்டுமென தி.மு.க.வின் அரசியல் எதிரிகள் செய்யும் விஷமப் பிரச்சாரத்திற்குச் செவி சாய்க்க வேண்டாம்" என்று பிரதமரிடம் நாஞ்சிலார் கூறி யிருக்கிறார்.

அதைத் தொடர்ந்து, 26-11-90 அன்று செய்தியாளர்கள், பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்து - "தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகக் கூறி, கழக அரசைக் கலைக்கப் போகிறீர்களா?" என்று கேட்டதற்கு "அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற் கொள்ளப்படமாட்டாது" என்று அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருக்கலாகாது என்பது "இளந்துருக்கி"யராக இருந்தபோது இதயத்தில் பதிந்திருந்தது எனினும்; பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் நெருக்கடி வந்தபோது அது நீர் மேல் எழுத்தாகிவிட்டதற்கு யார் என்ன செய்ய முடியும்?

பிரதமர் சந்திரசேகருக்கு ஜெயலலிதா மூலம் தரப்பட்ட நெருக்கடி, நாளுக்கு நாள் அவரை இறுக்கிக் கொண்டே இருந்தது என்பதை அவரது முகத்தைப் பார்த்தே என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இரண்டொரு முறை நான் டெல்லி சென்று பிரதமர் என்ற முறையில் மரியாதை சந்திப்பு நடைபெற்ற போதும், தமிழ்நாட்டுத் தேவைகளுக்காகக் கோரிக்கை வைத்த சந்தர்ப்பத்திலும்; எப்போதும் கலகலப்



புதுடெல்லியில் பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்து சால்வை அணிவிக்கிறார் நாஞ்சிலார்.

பாகப் பேசுகிற அவரது இயற்கை சுபாவத்தையும் நட்புணர்வையும் காண இயலவில்லை. ஏதோ வெளியிட முடியாத ஒன்று அவர் மனத்தை உறுத்திக் கொண்டிருப்பதை அவரது முகம் கண்ணாடி போல் காட்டிற்று.

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தங்களுக்குள் மோதிக் கொள்வதற்கோ அல்லது அவர்கள் ஈடுபடும் வன்முறைச் செயல்களுக்கோ, தமிழகத்தைக் களமாக்கிக் கொள்ள முடியாது என வெளிப்படையாகவே அறிவித்து, அந்த அறிவிப்பை அரசு சார்பில் நடைமுறைப்படுத்தி வந்ததின் தொடர்ச்சியாக நவம்பர் 30ஆம் நாள் திருச்சி தில்லைநகரில் மறைந்திருந்த விடுதலைப் புலிகள் 10 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கும் தொடரப்பட்டது.

தமிழகத்தில் எப்படி தேசிய முன்னணியின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான தி.மு.க.வின் ஆட்சி நடைபெற்றதோ; அதைப் போலவே அஸ்ஸாம் மாநிலத்தில் தேசிய முன்னணியில் இடம் பெற்ற அஸ்ஸாம் கண பரிஷத் கட்சி நடத்திய ஆட்சியினை 356-வது பிரிவைப் பயன்படுத்தி மத்திய அரசினர் அஸ்ஸாம் மாநில ஆளுநரிடமிருந்து அறிக்கையைப் பெற்று அதன் அடிப்படையில் 28-11-90 அன்று கலைத்தார்கள்.

இந்தியாவில் ஜனநாயகம் குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டிருந்த இந்த நிலையில் பிரிட்டிஷ் பிரதமராக 11 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய மார்கரெட் தாட்சர் நவம்பர் இறுதியில் பதவி விலகுவதாக அறிவித்தார். பிரிட்டனில் அப்போது ஆளுங்கட்சியாகப் பொறுப்பிலே இருந்தது கன்சர்வேடிவ் கட்சியாகும். அந்தக் கட்சியின் தலைமைப் பதவிக்கு 90-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் போட்டியேற்பட்டபோது,

தாட்சருக்கு 204 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மைக்கேல் ஹைசல் டைனுக்கு 152 வாக்குகளும் கிடைத்தன. ஆயினும் அந்தக் கட்சியின் விதிமுறைகளின்படி தாட்சர் அவரை எதிர்த்தவரை விட 15 சதவிகிதம் வாக்குகள் அதிகம் பெற முடியாததால் இரண்டாவது வாக்குப் பதிவு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதாவது இரண்டாவது வாக்குப்பதிவு நடத்தப்படாமல் இருந்திருக்க வேண்டுமென்றால், தாட்சர் ஹைசல் டைனை 56 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்திருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில்தான் தாட்சர் 22-ந்தேதி காலையில் பிரிட்டிஷ் அரசியைச் சந்தித்து தனது பதவி விலகல் கடிதத்தை அளித்தார். கட்சியின் இரண்டாவது கட்ட வாக்குப் பதிவில் கலந்துகொள்ளப் போவதாக அறிவித்த 24மணி நேரத்திற்குள் அவர் இந்த முடிவினை அறிவித்தார். போட்டியிட வாய்ப்பிருந்தும் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்.

மார்கரெட் தாட்சர் தனது பதவிக் காலத்தில் தொழில், வாணிபம் போன்ற துறைகள் அரசின் நேரடி நிர்வாகத்தில் இருக்கக் கூடாது என்ற கன்சர்வேடிவ் கட்சியின் கொள்கையை உறுதியாகச் செயல்படுத்தி, பல முக்கியமான பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் துறைக்கு மாற்றி விட்டார். தொழில் துறையில் நிர்வாகத் திறன், உற்பத்தி, லாபம் முதலியவை பெருக வேண்டுமென்றால் அத்துறை அரசின் பிடியில் இருக்கக் கூடாது என்பது அவருடைய கொள்கையாகும். பிரதமர் தாட்சர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். அர்ஜெண்டினா நாட்டின்மீது போர் தொடுத்து ஃபால்க்லந்து தீவுகளில் பிரிட்டிஷ் ஆட்சியை மீண்டும் அவரது ஆட்சிக் காலத்தில் நிலை நிறுத்தினார். வட அயர்லாந்தில் பயங்கரவாதத்தை உறுதியுடன் சமாளித்து வந்தார். ஈராக் அதிபர் சதாம் உசேன் குவைத் நாட்டை ஆக்கிரமித்தபோது அமெரிக்காவிற்குத் துணையாகப் படைகளை அனுப்ப முன்வந்த முதல் நாடு தாட்சரின் பிரிட்டன்தான். இவ்வளவு உறுதியும், நிர்வாகத் திறமையும் தாட்சருக்கு இருந்தும், பிரிட்டிஷ் மக்களுக்கு இவரிடம் அதிருப்தி ஏற்பட இரண்டு காரணங்கள் உண்டு. ஒவ்வொரு

குடிமகனும் செலுத்த வேண்டிய தலைவரி என்ற புதிய வரியை தாட்சர் அரசு விதித்ததை பிரிட்டிஷ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அடுத்து ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்புடன் பிரிட்டன் தன்னை முற்றிலும் இணைத்துக் கொள்வதை தாட்சர் தீவிரமாக எதிர்த்தார். இதையும் பிரிட்டிஷ் மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இரண்டாம் உலகப் போரில் பிரிட்டன் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில். ஆனால் வெற்றி நிச்சயம் என்று தெரிந்தபிறகு அந்த நாட்டு மக்கள் சமாதான காலத்தில் தங்களுக்கு வேறு குணங்களைப் படைத்த தலைவர் வேண்டுமென்று கருதியதால் சர்ச்சில் மீண்டும் பிரதமராகும் வாய்ப்பை இழக்க வேண்டிவந்தது. அதைப் போலவே ஐரோப்பாவுடன் இணைந்து செயல்படத் தக்க ஒரு பிரதமர் தங்களுக்குத் தேவை என்று அந்த நாட்டு மக்கள் கருதினார்கள்! அந்தக் கருத்து கன்சர்வேடிவ் கட்சியில் எதிரொலித்தது.


எனவே தாட்சர் பதவி விலகலைத் தொடர்ந்து இரண்டாவது சுற்றுத் தேர்தல் அந்தக் கட்சியிலே நடைபெற்றபோது, ஜான் மேஜர் 183 வாக்குகளையும், ஹைஸல்டைன் 131 வாக்குகளையும், டக்ளஸ் 56 வாக்குகளையும் பெற்றனர். யாருமே 50 சதவிகித வாக்குகளைப் பெறவில்லை. ஜான் மேஜர் இரண்டு வாக்குகள் குறைவாகப் பெற்றார். எனினும் மற்ற இருவரும் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாகக் கூறி ஜான் மேஜரை ஆதரிப்பதாகக் கூறியதால், மூன்றாவது சுற்று வாக்குப் பதிவு ரத்து செய்யப்பட்டு, ஜான் மேஜர் பிரிட்டிஷ் பிரதமரானார்.

நவம்பர் திங்கள் கடைசி நாளன்று அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க., ஜனதா தளம், இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் கொண்ட கூட்டம் நடைபெற்றது. டிசம்பர் 7-ந் தேதி முதல் 9-ஆம் தேதி வரை தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்ய வரும் முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதெனவும், பல கூட்ட நிகழ்ச்சி

களை இந்தக் கட்சிகளின் சார்பில் நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

புதிய பிரதமர் சந்திரசேகரை, முதல்வர் என்ற முறையில் மரியாதை நிமித்தம் சந்திப்பதற்காக டிசம்பர் 2-ந் தேதி டெல்லி சென்று இறங்கியதும் ராமனாதபுரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரும், ராமனாதபுரம் நகர் மன்றத் தலைவருமான எம்.எஸ்.கே. ராஜேந்திரன் தனது 41-வது வயதிலே மாரடைப்பு காரணமாகத் திடீரென்று மறைந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தது. அவரது சகோதரரும், அந்தப் பகுதியிலே கழகத்தை வளர்த்த மாவீரருமான எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் அவர்களும் இதே இளம் வயதில்தான் மாண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

டிசம்பர் 3-ந்தேதி காலையில் பிரதமர் சந்திரசேகர் அவர்களைச் சந்தித்தேன். பிரதமரும் நானும் இலங்கைப் பிரச்சினையைப் பற்றிப் பேசினோம். 1983-ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகளையும், 89-இல் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு எடுத்த நடவடிக்கைகளையும் பிரதமரிடம் விளக்கினேன். தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பேசினோம். பிறகு 11 மணி அளவில் அடுத்த நாள் பிறந்தநாள் காணவிருந்த குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களையும் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தேன். துணைப் பிரதமர் தேவிலால் அவர்களையும் சந்தித்தேன். பின்னர் டெல்லி 'தமிழ்நாடு' இல்லத்தில் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து; தி.மு.க. அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிப்பதாக அ.தி.மு.க. கூறுவது பற்றி விளக்கம் கேட்டார்கள். "1983 முதல் 1987 வரை போராளிகளின் பல்வேறு குழுக்களுக்கு தமிழ்நாட்டில்



சென்னை வந்த பிரதமர் சந்திரசேகர் அவர்களை முதல்வர் கலைஞர் வரவேற்கிறார்.

31 பயிற்சி முகாம்கள் இருந்தது உண்மை. அவை இப்போது இல்லை. நான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல் படுவதாகக் குற்றம் சாட்டுகிற அ.தி.மு.க.வினர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம். 13-10-90 நாளிட்ட அ.தி.மு.க. அதிகாரபூர்வமான ஏட்டில் ஜெயலலிதா தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் - "இலங்கையில் தமிழ் இனம் அழிகிறது, போரிடும் விடுதலைப் புலிகளுக்கு தமிழர்கள் ஆதரவு வேண்டும். கருணாநிதி மௌனம் சாதிப்பது ஏன்?" - என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அது மட்டுமல்ல, அ.தி.மு.க. அரசு 1987-இல் எல்.டி.டி.ஈ.யைச் சேர்ந்தவர்களுக்கு 30-4-87 அன்று ஒரே நாளில் 3 கோடி ரூபாய் கொடுத்து அதற்கான ரசீதும் பெறப்பட்டுள்ளது. பரமகுரு சாமி என்பவர் கையெழுத்துப் போட்டு ரசீது கொடுத்துள்ளார். அதே நாளில் எல்.டி.டி.ஈ.யைச் சேர்ந்த மாதவன் என்பவருக்கு 1 கோடி ரூபாய் தரப்பட்டுள்ளது. போராளிகளுக்குக் கொடுக்கப்பட்ட 4 கோடி ரூபாய் முழுவதும் ஆயுதங்கள் வாங்கவே பயன்படுத்தப்பட்டிருக் கின்றது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு விடுதலைப் புலிகளை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் வைத்தோம். ஆனால் அவர்களில் 9 பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்திற்கான ஆலோசனைக் குழு விடுதலை செய்து உத்தரவிட்டது. அதே நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, பிளாட் ஆகிய குழுக்களைச் சேர்ந்த 18 பேரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் வைத்தோம்." இப்படி இலங்கைப் போராளிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையெல்லாம் விளக்கமாகக் கூறினேன். 4-ந்தேதி காலையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்காந்த் சகாய் மற்றும் உள்துறை செயலா ளர்கள் என்னைச் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கு மேல் விரிவாகப் பேசினர். இதற்குப்பின் அவர் செய்தியாளரிடம் கூறும்போது, "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமான நிலையில் இல்லை. எனவே நான் உடனடியாகத் தமிழகம் செல்லும் திட்டம் இல்லை" என்றார்.

தமிழகத்தில் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொள் வதற்காக வி.பி.சிங் அவர்களும், எஸ்.ஆர். பொம்மை அவர்களும் டிசம்பர் 7-ந் தேதி இரவு சென்னை வந்தார்கள். விமான நிலையத்திலும் வருகிற வழியிலும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்து நேராக அண்ணா அறிவாலயும் வந்து செய்தியா ளர்களை வி.பி.சிங் சந்தித்தார். அப்போது வி.பி.சிங் கூறியதாவது:-

"தேசிய முன்னணிக்கு கருணாநிதி அவர்கள் உறுதியான ஆதரவு அளித்து வருகிறார். குறிப்பாக நாட்டு ஒற்றுமை, மதச்சார்பின்மை, சமூகநீதி போன்ற கொள்கைகளில் அவர் அழுத்தமான பற்று வைத்துள்ளார். யார் யார் எந்தக் கொள்கைகளைச் சார்ந்திருக்கிறார்கள் என்ற கேள்வி எழுந்த போது கருணாநிதி அவர்கள் மதச்சார்பின்மை, சமூக நீதி ஆகியவற்றின் பக்கம்தான் தாம் இருப்பதாக மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார். எவையெவைகளுக்காக தேசிய முன்னணி போராடி வருகிறதோ- போராடி வருவது மாத்திரமல்ல, எவையெவைகளுக்காகத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோமோ அவற்றின் பக்கம்தான் கருணாநிதி நின்றார்" என்று கூறிய வி.பி.சிங், சட்டம் ஒழுங்கு தமிழகத் திலே கெட்டுவிட்டதாக பிரச்சாரம் செய்யப்படுகிறதே என்று கேட்கப்பட்ட கேள்விக்கு "தமிழ்நாட்டு மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கருணாநிதி ஆட்சியி லிருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசை அகற்ற எடுக்கப்படும் எந்த முயற்சியையும் தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்திய நாட்டு மக்களே பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று எச்சரிக்கிறேன். தமிழக அரசைக் கலைக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்று பிரதமர் உறுதி அளித் ததாக நான் கேள்விப்பட் டேன். பிரதமர் தனது



சென்னை வந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களை வரவேற்கிறார் முதல்வர் கலைஞர்.

உறுதிமொழியைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்" என்றார்.

டிசம்பர் 8-ந்தேதி காலையில் 9 மணி அளவில் சென்னையிலிருந்து எங்கள் சுற்றுப் பயணம் தொடங்கியது. திருச்சியைச் சென்றடைய இரவு 10 மணி ஆகியது. தாம்பரம், செங்கற்பட்டு, திண்டிவனம், விழுப்புரம் என்று வழியில் உள்ள ஊர்களில் எல்லாம் மக்கள் கடலைத் தாண்டித்தான் நாங்கள் செல்ல வேண்டியிருந்தது. 11.30 மணிக்கு விழுப்புரத்திற்கு வரவேண்டிய நாங்கள் 3.30 மணிக்குத்தான் வந்தோம். இந்தச் சுற்றுப் பயணத்தில் எஸ்.ஆர்.பொம்மை, முரசொலி மாறன், துரைமுருகன், வைகோ ஆகியோர் உடன்வந்தனர். கழகத் தோழர்கள் ஒவ்வொரு ஊரிலும் மிகப் பிரமாண்டமான முறையில் கூட்டங்களை ஏற்பாடு செய்து வி.பி.சிங் அவர்களுக்கு வரவேற்பளித்தனர். அதைப்பற்றி வி.பி.சிங் குறிப்பிடும்போது; "கலைஞர் தன்னுடைய ஆட்சியைப் பற்றிக் கவலைப்படாமல் என்னோடு சேர்ந்து எனக்குத் துணையாக இருக்கிறார். அதற்காக அவருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காலம் மாறினாலும் தான் மட்டும் மாறாமல் இருக்கிற ஒரு தலைவர் உண்டென்றால் அது இங்கே இருக்கிற கலைஞர் அவர்கள்தான். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள என்னுடைய கட்சியைச் சேர்ந்த முதல்வர்களே என்னை விட்டு ஓடிய நேரத்திலும் கூட உறுதியோடு எனக்கு உறுதுணையாக இருப்பவர் கலைஞர்" என்று கூறினார். முதல் நாள் இரவு 10 மணிக்கென்று அறிவிக்கப்பட்ட மதுரை கூட்டத்திற்கு விடியற் காலை 4.30 மணிக்குத்தான் சென்றடைந்தோம்.

9-ந்தேதியன்று காலை 10 மணிக்கு மதுரையிலிருந்து எங்கள் சுற்றுப்பயணம் தொடங்கியது. விருதுநகர், கோவில் பட்டி, கங்கை கொண்டான், கயத்தாறு, திருநெல்வேலி, நாகர்கோவில் வரை பல நிகழ்ச்சிகளில் லட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து உரையாற்றினோம்.

தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று காங்கிரசார் கூறிக் கொண்டிருந்த நேரத்தில் அந்தக் காங்கிரஸ்


கட்சி அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த ஆந்திரா விலே என்ன நிலை என்றால்; அங்கே ஏற்பட்ட மூன்றுநாள் கலவரத்தில் 100க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். ஐதராபாத் நகரமே ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கண்டதும் சுடுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. முதலமைச்சரைக் கண்டித்து அமைச்சர் பதவி விலகினார். பிறகு முதலமைச்சராக இருந்த சென்னாரெட்டி அவர்களும் ராஜீவ்காந்தி கண்டிப்பாகக் கூறியதின் பேரில் பதவி விலகினார். புதிய முதல்வரைத் தேர்ந்தெடுக்க அந்தக் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட்டம்கூடி ஜனார்த்தன ரெட்டி முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைப் போலவே உத்திரப்பிரதேச மாநிலம் அலிகார் நகரில் வகுப்புக் கலவரம் ஏற்பட்டு அதன் காரணமாக 50 பேர் உயிரிழந்தனர். 11-12-90 அன்று நடைபெற்ற ஒரே நாள் கலவரத்தில் மட்டும் 6 பேர் உயிரிழந்தனர்.

திபேத் நாட்டின் சமயத் தலைவர் தலாய்லாமா அவர்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் சுற்றுப் பயணம் மேற் கொண்ட நிலையில் 90-ஆம் ஆண்டு டிசம்பரில் (13-12-1990) தமிழகத்திற்கு வந்திருந்தார். அவருக்கு பாரதிய வித்யா பவனில் சென்னை நிர்வாகக் கவுன்சில் சார்பில் கீழ்ப்பாக்கத் தில் உள்ள ராஜாஜி வித்யாஷ்ரமத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்டு அவருக்கு தமிழக அரசின் சார்பில் நினைவுப் பரிசினை வழங்கினேன். விழாவிற்கு நீதிபதி எம்.எம். இஸ்மாயில் தலைமை வகித்தார். தலாய்லாமா அவர்கள் விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர். இளம் பருவத்திலேயே அந்த மதத்தின் மரபின்படி- அந்த நாட்டின் மரபின்படி பதவிப் பொறுப்பையேற்று பதவியேற்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு அதிகாரம் செலுத்துகின்ற வாய்ப்பைப் பெற்றபோது மூண் டெழுந்த அமளியின் காரணமாக அவர் இந்தியாவிற்கு வர நேர்ந்தது. 1989-ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டபோது அவருக்கு அளிக்கப்பட்ட பெரும் தொகையைத் தொழு நோயாளிகளின் நல்வாழ்விற்காக அவர் வழங்கிவிட்டார். கழக ஆட்சியின்போது தொழு நோயாளி

களுக்காக ஒரு மறுவாழ்வுத் திட்டத்தையே அறிமுகப் படுத்திய என்னை; அவர் தொழுநோயாளிகளுக்காகச் செய்த இந்தப் பேருதவி பெரிதும் கவர்ந்தது.

தலாய்லாமா கலந்துகொண்ட அந்த விழாவில் நான் பேசும் போது, "சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு தலாய்லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இந்தியாவில் அவர் தஞ்சம் புகுந்தார் என்பது வரலாறு. ஆனால் நாளடைவில் அவர் இந்திய மக்களின் நெஞ்சம் புகுந்தார் என்பதுதான் உண்மை நிலை" என்றுதான் தொடங்கினேன்.

வங்காள தேசத்தின் அதிபராக எர்ஷாத் ஒன்பதாண்டு காலமாக நீடித்து வந்த நிலையில் அவரது ஆட்சியை எதிர்த் துப் பல ஆண்டுகளாக எதிர்க்கட்சிகள் நடத்தி வந்த போராட்டம் 90-ஆம் ஆண்டு இறுதியில் தீவிரம் அடைந்தது. இந்தப் போராட்டத்தை அடக்க எர்ஷாத் நாடு முழுவதும் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார். அப்படியிருந்தும் எதிர்ப்பு அலை ஓயவில்லை. 22 எதிர்க்கட்சிகள் இணைந்து காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தன. இதற்கு மேலும் எர்ஷாத் சமாளிக்க முடியாமல் தேர்தல் நடத்துவதற்குத் தயாரென்றும், தேர்தலுக்கு 15 நாட்களுக்கு முன்பு அதிபர் பதவியை விட்டு தான் விலகு வதாகவும் அறிவித்தார். ஆனால் எதிர்க்கட்சிகள் அதை ஏற்றுக் கொள்ளாமல், எர்ஷாத் உடனடியாகப் பதவி விலகவேண்டுமென்று வலியுறுத்தின. எதிர்க்கட்சிகளில் முக்கியமானவை வங்காள தேசத்தின் விடுதலைக்காகப் பாடுபட்ட முஜிபுர் ரகிமானின் மகள் ஹசினா தலைமையி லான அவாமி லீக் கட்சி, முன் னாள் ஜனாதிபதி ஜியாவுர் ரகுமானின் மனைவி கலீதா ஜியாவின் தலைமையிலான வங்காள தேசியக் கட்சி ஆகி யவை ஆகும். எர்ஷாத்தின் வீட்டைச்சுற்றி ராணுவப் பாதுகாப்பு போடப்



திருச்சி பொதுக்கூட்டத்தில் முதல்வர் கலைஞர் உரையாற்றுகிறார்.

பட்டது. வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல அவர் செய்த முயற்சியும் தடுக்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு ராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய எர்ஷாத் 90-ஆம் ஆண்டு டிசம்பரில் பொறுப்பினை இழந்தார். வங்காள தேசத்தின் இடைக்கால அரசாங்கத்துக்குத் தலைமை தாங்க புதிய ஜனாதிபதியாக நீதிபதி சகாபுதீன் இருப்பாரென்று வங்காள தேச எதிர்க்கட்சிக் கூட்டணி அறிவித்தது. ஊழல் புகார் காரணமாக எர்ஷாத்தும், அவர் மனைவியும், எட்டு வயது மகனும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள்.

26 மையம் கொள்கிறது புயல்!

வானிலை அறிக்கையில் வங்கக் கடலிலோ அல்லது இந்துமாக் கடலிலோ சுமார் நூறு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக; காற்றழுத்த மண்டிலம் உருவாகி புயல் மையம் கொண்டிருக்கிறது என்றும்; அது மேலும் வலுப்பெற்று கடற்கரையை இத்தனை மணி நேரத்திற்குள் கடக்கலாமென்றும்; அதனால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படக்கூடுமென்றும் தெரிவிக்கப்படுவது போல, தமிழ் நாட்டில் ஜனநாயக ரீதியில் அமைந்த ஆட்சிக்கு அரசியல் சட்ட 356-வது பிரிவு; புயலாக மாறித் தாக்கும் அபாயம் எந்த நேரத்திலும் எதிர்பார்க்கப்பட்ட செய்தியாக அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களும் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நாங்களும் சரியாகவே உணர்ந்திருந்தோம்.

காரணம் அதற்கான வேகமான முயற்சியில் ஜெயலலிதா மிகத் தீவிரமாக இறங்கியிருந்தார்! "இல்லை" என்று டெல்லியின் குரல் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருந்தாலும்; அது "உண்டு" என்பதற்கான உண்மையைத்தான் எதிரொலிப்பதாக என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அப்படியொரு "எதிர்பார்ப்பு" என் நெஞ்சில் சுமையாக இல்லாமல் அன்னத்தின் தூவி போல மிக லேசாகவே இருந்த காரணத்தால்; என் வழக்கமான பணிகளை நிறுத்தாமல் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்தவாறு மகிழ்ச்சியுடன் இருந்தேன். அந்த நிலையில்தான் 1990 டிசம்பர் 29-ஆம் நாள் இராமநாதபுரம் கீழக்கரையில்

நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கலந்து கொண்டேன். விழா மேடையிலே அமர்ந்திருந்த போதே அருகிலிருந்த நண்பர்கள் ஆட்சிக் கலைப்பு குறித்து ஐய வினாக்களை எழுப்பிய வண்ணமிருந்தனர். அப்போது மேடையில் அமர்ந்துகொண்டே, இதோ இந்தப் புதுக் கவிதையை எழுதி; என்னுரையின் இறுதியில் அந்தக் கூட்டத்தில் படித்துக் காட்டினேன்.

“காலை முதல் அரசு அலுவல் புரிந்து
களைப்பாற வேண்டி கடற்கரைக்குச் சென்றேன்
கனிவுடனே என் தோளைத் தொட்டு
கவலையுடன் நண்பன் கேட்டான்
கலைப்பார்களோ ? என்று!
கவலைப்படாதே நண்பா!
கலைத்தாலும் மீண்டும்
கருவாவோம் !
திருவாவோம்
என்று சொன்னேன்.
சிரித்துக் கொண்டே நண்பன்
கடல் மண்ணைக் கையால் அள்ளி
கடலின் அலை மீது போட்டான்
நண்பா! புரிகிறதா ?
நீள் கடல்தான் நாம்
நின் கைமண்ணே கலைப்புச் செய்தி
எனச் சொன்னேன்!
நெகிழ்ந்து போனான் நண்பன்!”

இந்த மாநாட்டிலே கலந்து கொண்டு விட்டு அன்றிரவு மதுரையிலே வந்து நான் தங்கியபோதுதான் அப்போது அ.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த காளிமுத்து, தன் குடும்பத்தினரோடு வந்து என்னைச் சந்தித்து கழகத்திலே தன்னை இணைத்துக் கொண்டார். அப்போதும், அதற்குப் பிறகும் அவர் அ.தி.மு.க. பற்றியும், அக்கட்சியின் தலைவி ஜெயலலிதா பற்றியும் வெளியிட்ட அறிக்கைகள், பேச்சுக் கள் அவற்றையெல்லாம் மீண்டும் ஒருமுறை இப்போது

குறிப்பிடா விட்டாலும் அவற்றை நினைத்துப் பார்த்து சிரித்துக்கொள்கிறேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழா வினைச் சிறப்பாக நடத்திய கழக அரசின் சார்பில் பாவேந் தரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்படும் என்று நான் அறிவித்ததற்கிணங்க பாவேந்தர் அவர்களின் மகன் திரு. மன்னர் மன்னன், மகள்கள் திருமதி சரசுவதி, திருமதி வசந்தா ஆகியோரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு இலட்ச ரூபாயும், மறைந்த திருமதி ரமணி அம்மை யார் அவர்களின் பிள்ளைகள் அனைவர்க்கும் இரண்டு இலட்ச ரூபாயும் பரிவுத் தொகையாக அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. பாவேந்தரின் நூல்களை உரிமை பெற்று பதிப்பித்து வந்த பதிப்பகங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாயும் அளித்து அந்த உரிமைகளை தமிழக அரசு பெற்றது.

பாவேந்தர் நூல்களை நாட்டுடைமை ஆக்கியமைக்காக இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் எனக்கொரு பாராட்டு விழா 31-12-90 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்த விழாவிலே பேசிய முத்தமிழ்க் காவலர் அண்ணன் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்ட சில பகுதிகள் வருமாறு:-

"தகுதி உடையவர்கள், தகுதி உடையவருக்கு இங்கே பாராட்டு விழா நடத்துகிறார்கள். கலைஞர் அவர்களை, அவ ருடைய தமிழ்த் தொண்டை, மற்றவர்களை விட ஐம்ப தாண்டு காலமாக நான் நன்கறிந்து வருகிறேன். சோதனை மிகுந்த காலங்களில் எதிர்க்கட்சியிலிருந்து, வேதனைகளைத் தாங்கிக் கொண்டு தமிழுக்கு அவர் செய்த தொண்டு ஏராளம். தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக வருதல் வேண்டும் என்று கனவு கண்டவர் பாரதிதாசன். அவருடைய நூல்களை அரசுடைமையாக்கி ஐந்து கோடி தமிழ் மக்களுடைய நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சி கொள்ளச் செய்திருக்கிறார். தமிழ்நாட்டில் தமிழ்ப் பெயர்கள் தமிழிலே இல்லை என்று சொன்ன கவிஞரின்

ஏக்கத்தைப் போக்க தெருக்கள் எல்லாம் தமிழ் மணக்கச் செய்துள்ளார். நல்ல தமிழ்ப் பெயர்களை ஊர்களுக்குச் சூட்டி தமிழுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் கலைஞர். இந்த நாட்டுக்காக, மொழிக்காக, மக்களுக்காக, இந்தச் சமுதாயத்திற்காக அவர் பணியாற்றி வருகின்ற இந்த நேரத்தில் எழுத்தாளர்கள் பாராட்டுகிறார்கள் என்றால் அவர்கள் பாராட்டாமல் வேறு யார் பாராட்டுவது? எதிர்க் கட்சியாக இருந்து செயல்படுபவர்கள் திரும்பவும் ஆட்சிக்கு வர வேண்டுமென்று விரும்பினால், கலைஞர் எதிர்க்கட்சியாக இருந்தபோது செய்த தொண்டுகளை எல்லாம் எண்ணிப் பார்த்து அதைப் பின்பற்றி நடக்க வேண்டும். அன்பழகனோடு சேர்த்து பத்து பேரை எம்.எல்.ஏ. பதவிகளைப் பறித்துக்கொண்டு சட்டசபையிலிருந்து அப்போது வெளியேற்றினார்கள். அப்போது கலைஞர் பொறுமையாக நடந்துகொண்டவிதம் கண்டு உலகமே வியப்படைந்தது."

முத்தமிழ்க் காவலரின் இந்தப் பாராட்டு; என் பணியில் புதிய உற்சாகத்தை வழங்கியது.

ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித்தரும் மகத்தான திட்டம் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது. 91-ஆம் ஆண்டு ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் நற்பணிப் பயணம் என்ற பெயரால் 272 கிராமங்களில் கட்டப்பட்டிருந்த 4,635 காங்கிரீட் வீடுகளை ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அவ்வாறே செங்கற்பட்டு, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். இரண்டு நாட்களில் நான் மேற்கொண்ட நற்பணிப் பயணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அந்த வீடுகளுக்கான உரிமைகளைப் பெற்றார்கள்.

உத்தரப்பிரதேசம், லட்சுமணபுரியில் பிரதமர் சந்திரசேகர் அளித்த பேட்டியில் மத்திய அரசுக்கு தமிழக அரசு "டிக்டேட்" செய்கிறது என்றும், முக்கிய பிரச்சினைகள் குறித்து மத்திய அரசு கூறுகிற ஆலோசனைகளை தமிழக அரசு கேட்க வேண்டுமென்றும் கூறியிருந்தார். அதுபற்றி



உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் முதல்வர் கலைஞர் உரையாற்றுகிறார். உடன் அப்துல் சமது, எஸ்.எஸ்.தென்னரசு மற்றும் பலர்.

செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, "நியாயமான வேண்டுகோளை உரிய முறையில் கேட்டுத்தான் கழக அரசு மத்திய அரசை அணுகி இருக்கிறதே அல்லாமல், மத்திய அரசுக்கு எதையும் டிக்டேட் செய்யவில்லை. இப்போதுள்ள மத்திய அரசு, மாநில அரசுக்கு எந்த அறிவுரை கூறி, அதை மாநில அரசு ஏற்கவில்லை என்று பிரதமர் எதையும் குறிப்பாகச் சுட்டிக் காட்டவில்லை. சமீபத்தில் இலங்கைப் போராளிகளைப் பொறுத்தவரையில் மாநில அரசும், மத்திய அரசும் கலந்து பேசித்தான், அந்த அடிப்படையில்தான் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை விமான நிலையங்களுக்கு காமராஜர், அண்ணா பெயர் வைக்கக்கூட முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கிடம் 'ரிக்வஸ்ட்' தான் வைத்தோமே தவிர 'டிக்டேட்' செய்தது கிடையாது. நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் மத்திய அரசிடம் மாநில அரசுகள் வலியுறுத்துகிற உரிமைக் குரலை 'டிக்டேட்' பண்ணுவதாக அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது" என்று கூறினேன்.

மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத் காந்த் சகாயும், நானும் முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ

ரெட்டி அவர்களும் 17-12-90 அன்றையதினம் கலந்து கொண்ட ஜி.கே. ரெட்டி தேசிய நினைவு விருது வழங்கும் விழா சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றபோது, மத்திய அமைச்சரையும் வைத்துக் கொண்டு சஞ்சீவ ரெட்டி பேசும்போது, "நம்நாடு எங்கோ போய்க் கொண்டிருக் கின்றது. காஷ்மீர் போய் விட்டது, பஞ்சாப் போய் விட்டது, அஸ்ஸாம் போய்க் கொண்டிருக்கிறது. ஐதராபாத்தில்கூட நூற்றுக்கணக்கில் சாவு ஏற்பட்டு அதுவும் வட மாநிலங் களோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவையனைத்தும் உண்மையல்ல. இங்கே எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாத அமைதியைத் தமிழ்நாட்டில்தான் பார்க்க முடிகிறது. வீணாக சட்டம் கெட்டுவிட்டது, அமைதி கெட்டு விட்டது என்று பொய்யாகப் பிரச்சாரம் செய்வது நாட்டு நலனுக்கு நல்லதல்ல" என்று கூறினார்.

டிசம்பர் 25-ந்தேதியன்று சென்னைக்கு சங்கராச்சாரியா ரைச் சந்திப்பதற்காக வந்த பிரதமர் சந்திரசேகர் அவர்களை ஆளுநர் பர்னாலா, நான், பேரவைத் தலைவர், அமைச்சர்கள், அதிகாரிகள் வரவேற்றோம். விமானநிலையத்திற்கு ஜெயலலிதாவும் அவரது கட்சி முன்னணியினரும், காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் வந்திருந்து பிரதமரை வரவேற்றனர். காஞ்சிபுரத்தில் பிரதமரிடம் செய்தியாளர்கள், தமிழக அரசு ஜனவரி மாதத்திற்குள் கலைக்கப்பட்டு விடுமென்று ஒரே வதந்தியாக இருக்கிறதே என்று கேட்டபோது, "யார் இந்த வதந்தியைக் கிளப்பினார்களோ எனக்குத் தெரியாது. நான் பொதுவாக எச்சரிக்கை செய்வதில்லை. எங்கேயாவது



காங்கிரீட் வீடுகளை ஆதிதிராவிட மக்களுக்கு முதல்வர் கலைஞர் வழங்குகிறார். உடன் அமைச்சர்கள் கோ.சி.மணி, துரைமுருகன், க.சுந்தரம், பொன்முடி.

நாட்டில் குழப்பமோ, சட்டம் ஒழுங்கோ பாதிக்கப் பட்டால் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். வேறு ஒன்றும் இல்லை" என்று கூறினார். அன்று மாலையில் பிரதமர் சந்திரசேகருக்கு ஜெயலலிதா வீட்டில் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. பிரதமரை வழி யனுப்ப விமான நிலையத்திற்கு வந்த ஜெயலலிதா அங்கே யுள்ள செய்தியாளர்களிடம், மத்தியில் சந்திரசேகர் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு கொடுப்பதாகவும், தமிழக சட்டம், ஒழுங்கு நிலைமை மற்றும் அரசியல் நிலவரம் குறித்து பிரதமரிடம் விரிவாக எடுத்துக் கூறியிருப்பதாகவும், ஏற்கனவே பல முறை தமிழக அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியதைப் போலவே இந்த முறையும் வற்புறுத்தியதாகவும் கூறினார். அதற்கடுத்தநாள் சென்னையில் ராஜ்பவனில் தங்கியிருந்த குடியரசுத்தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்களை ஜெயலலிதாவும் அவ ருடைய கட்சியினரும் சென்று சந்தித்தார்கள். அவரிடமும், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை, இலங்கைப் போராளிகளைக் கைது செய்வதாக முதல்வர் கூறுவது வெறும் கண்துடைப்பு என்றெல்லாம் என்மீதும் அரசின் மீதும் புகார்களைக் கூறினார். அதற்கு மறுநாள் 27-ந் தேதியன்று ஜெயலலிதா ஆளுநர் பர்னாலா அவர்களைச் சந்தித்து தமிழக அரசைப் பற்றிப் புகார் கூறினார். 29-ந்தேதி டெல்லி சென்று ஜெயலலிதா காலையிலே ராஜீவ்காந்தி அவர்களையும் இரவு 7 மணி அளவில் பிரதமர் சந்திரசேகர் அவர்களையும் சந்தித்து கழக அரசின் மீது புகார் மனுவைக் கொடுத்தார். மறுநாள் மாலையில் ஜெயலலிதா குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமனைச் சந்தித்து புகார் மனு கொடுத்தார். அந்தப் புகார் மனுக்களில் விடுதலைப் புலிகளின் செயல்களுக்கு தி.மு.க. அரசு உடந்தையாக இருப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் இதே ஜெயலலிதாதான் இதற்கு மூன்று மாதங் களுக்கு முன்பு கழக அரசு, விடுதலைப் புலிகளுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று குறை கூறி நிறைய உதவி செய்ய வேண்டுமென்பதாக ஆங்கில ஏடுகளுக்குச் சிறப்புப்

பேட்டியளித்தார்! என் செய்வது; நாடகமே உலகம்! அதனால் இப்படி அரசியலிலும் இரட்டை வேடம் தாங்கினார் அவர்!

ஜெயலலிதா அடுத்தடுத்து பிரதமரையும், குடியரசுத் தலை வரையும், ஆளுநரையும் சந்தித்து புகார் மனு கொடுத்ததும், பிரதமர்; ஜெயலலிதா வீட்டிற்கே சென்று தேனீர் விருந்தில் கலந்து கொண்டதும், செய்தியாளர்களிடம் கூறும்போது, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது, ஆட்சிக் கலைப்பு இப்போது இல்லை என்பது போல சாதுர்யமாக பிரதமர் சந்திரசேகர் தெரிவித்ததையெல்லாம் நம்பாமல் மக்களிடையே ஆட்சிக் கலைப்பு நடைபெற்று விடுமோ என்ற சந்தேகம் பரவலாகத் தோன்றியது. பத்திரிகை களும் அவ்வாறு செய்திகளை வெளியிடத் தொடங்கி யிருந்தன. புயல், கரையைக் கடக்கும் தேதிதான் தெரியாமல் இருந்தது.

3-1-91 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதிய தலையங்கத்தில் "தனது கடமைகளை ஒரு மாநில அரசு சரிவர நிறை வேற்ற முடியாத ஒரு சூழல் ஏற்பட்டால் 356-வது சட்டப் பிரிவைப் பயன்படுத்தலாம் என அரசியல் சட்டத்திலே கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அதுபோன்ற ஒரு நிலைமை இல்லை என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு மிரட்டல் ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவதோ, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறுவதோ ஒரு அரசை நீக்க சரியான காரணங்களாக இருக்க முடியாது. எனவே ஒரு மாநில அரசுக்கு இதுபோன்ற மிரட்டல்களை விடுக்கும் போக்கிலிருந்து மத்திய அரசிலே இருப்பவர்கள் தங்களை விலக்கிக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் இருவிதமான பொருள்கள் தரும் விதத்தில் அறிக்கைகள் தருவதை பிரதமர் கைவிட வேண்டும்" என்று எழுதியது.

8-1-91 அன்று டைம்ஸ் ஆப் இந்தியா எழுதிய தலையங்கத் தில் "தமிழக அரசு இலங்கைத் தீவிரவாதிகளுக்கு எதிராக மனப்பூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்

கின்றது. இந்த உண்மையைத் தவிர 1200 தீவிரவாதிகள் முடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது கெடுபிடி அதிகமாக்கப் பட்டிருக்கிறது. முடக்கி வைக்கப் பட்டிருக்கிற தீவிரவாதிகள் பலரை மத்திய அரசைக் கலந்து கொண்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கத் தயாராக இருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கிறார். இந்த நடவடிக்கைகள் கருணாநிதியை விமர்சனம் செய்வோ ரைத் திருப்திப்படுத்துவதாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் நாட்டு நலனைப் பாதுகாப்பதை விட வெறும் அரசியல் பண்ணுவதில் அதிக அக்கறை காட்டுவதாக இருக்கிறார்கள்" என்று எழுதியது.


இந்து ஏடு வெளியிட்ட செய்தியில், "தமிழ்நாடு அரசுக் கும், அசாம் மாநில அரசுக்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்னணிக் கும் தொடர்புகள் உண்டு என்று கூறப்படுவது காற்றிலே உருவாக்கப்படும் வெறும் கற்பனையே தவிர வேறல்ல. மத்தியிலே உள்ள ஆளும் கட்சிக்கும், அதிலும் குறிப்பாக பின் இருக்கையிலே இருந்து ஆளும் கட்சியை இயக்கி வரும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் ஏற்பட்டுள்ள அரசியல் நிர்ப் பந்தங்கள் காரணமாகவே இந்தப் பரவலான யூகங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட சந்தேகங்களாகும்" என்று குறிப்பிட்டது.

10-1-91 தேதிய 'ஸ்டேட்ஸ்மென்' எழுதும்போது, "தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமென்று கூப்பாடு போட்டு தொண்டை வறண்டு போன அ.தி.மு.க.-காங்கிரஸ் குள்ள நரிகள் புதிதாக உல்பா, உல்பா என்று அலறத் தொடங்கி யிருக்கின்றன. இந்த அலறலாவது ஆட்சிக் கவிழ்ப்புக்கு வழி கோலிவிடாதா என்பது அவர்களின் நப்பாசை. இந்த அலறலுக்குச் செவி சாய்ப்பதா வேண்டாமா என்று தீர்மானிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார் பிரதமர் சந்திரசேகர். காரணம், அவரது நிலைமை அப்படி. தி.மு.க. அரசைக் கலைத்தால், அவரது மனச்சாட்சி உறுத்தும். கலைக்காவிட்டால் மத்திய அரசுக்கு முட்டுக் கொடுத்து

வரும் அ.தி.மு.க. வும் இ. காங்கிரசும் அவரை உறுத்தும்" என்று குறிப்பிட்டது.

6-1-91 அன்று கழகத்தின் பொதுக்குழு கூடி அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில் அரசியல் காழ்ப்புணர்வு கொண்டோரின் திட்டமிட்ட சதியை, தீய பிரச்சாரத்தை முறியடிக்க தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளின் சார்பாக மாநிலம் முழுவதும் தீவிர பிரச்சார இயக்கத்தை நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாட்டில் உல்பா முகாம்கள் இருப்பதாக பிரதமர் சந்திரசேகர் 10-1-91 அன்று நாடாளுமன்ற மக்கள் அவையில் கூறினார். மறுநாள் மாநிலங்களவையில் முரசொலி மாறன் பேசும்போது, தமிழ்நாட்டில் உல்பா முகாம்கள் இருப்பதாகக் கூறும் பிரதமர் அதை நிரூபிக்கத் தயாரா என்று அறைகூவல் விடுத்துக் கேட்டார். மேலும் மத்திய அரசு கொடுத்த தகவல்கள் தமிழக முதல்வர் மூலமாக யாழ்ப்பாணத்திலுள்ள எல்.டி.டி.இ. தலைமையகத்துக்கு அனுப்பி வருவதாக சந்திரசேகர் சொன்ன குற்றச்சாட்டு பற்றிக் குறிப்பிட்டு, இதற்கு முன்னால் எந்தவொரு பிரதமரும் ஒரு முதல் அமைச்சர் மீது இவ்வளவு கடுமையான குற்றச்சாட்டைச் சொன்னதில்லை என்றார் முரசொலி மாறன். தமிழ்நாடு முதல்வரின் தொலைபேசி பேச்சுக்களை ஒட்டுக் கேட்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்றும் மாறன் அப்போது கேட்டார். பிரதமர் சந்திரசேகர் அன்றையதினம் மாநிலங்களவையில் "எந்தவொரு மாநிலத்திலும் அரசியல் சட்டம் 356-வது பிரிவைப் பயன்படுத்திக் குடியரசுத் தலைவரின் ஆட்சியைப் பிரகடனம் செய்ய அரசாங்கம் விரும்பவில்லை" என்று உறுதியளித்தார். மேலும் எதிர்க்கட்சித் தலைவர்கள்



கா. காளிமுத்து தலைவர் கலைஞருக்கு மாலை அணிவித்து கழகத்தில் இணைகிறார். உடன் பொன். முத்துராமலிங்கம், டி. ஆர். பாலு.

கூட்டத்திலும் தமிழ்நாடு அரசைக் கவிழ்க்கும் எண்ணம் இல்லை என்று பிரதமர் சந்திரசேகர் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தி.மு. கழக அரசு கவிழ்க்கப்பட்டால் சந்திரசேகர் தலைமையிலான மத்திய அரசை எதிர்த்து தேசிய முன்னணியும் அதன் தோழமைக் கட்சிகளும் நாடு தழுவிய அளவில் கிளர்ச்சிகள் நடத்தும் என்று செய்தியாளர்கள் கூட்டத்தில் ஜனதா தளக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயபால் ரெட்டி கூறினார்.

ஆட்சிக் கவிழ்ப்பு பிரச்சாரத்தை முறியடிக்க மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவதற்காக சென்னை தம்புச் செட்டித் தெருவில் ஜனவரி 21ஆம் நாள் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முரசொலி மாறன் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் நானும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஹர்கிஷன்சிங் சுர்ஜித், ஏ. நல்லசிவன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ப. மாணிக்கம் ஆகியோரும் கலந்து கொண்டோம்.

ஜனவரி 23-ந்தேதியன்று தமிழகச் சட்டப் பேரவையிலே அ.தி.மு.க. வினரால் பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் தாக்கப்பட்ட வேதனையான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அ.தி.மு.க.விலிருந்து விலகி வந்த திருநாவுக்கரசு அணியை அவையிலே எந்தப் பெயரில் அழைப்பது என்பது குறித்து பேரவைத் தலைவர் தனது தீர்ப்பை அளித்தவுடன், அந்தத் தீர்ப்பின் மீது அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் எஸ்.ஆர்.ராதா குறுக்கிட்டுப் பேச முனைந்தார். அப்போது பேரவைத் தலைவர் எழுந்து "அ.தி.மு.க. வினரால் கொடுக்கப் பட்ட கோரிக்கையை ஏற்று கட்சித்தாவல் தடைச் சட்டத்தின்படி அந்த மூன்று பேருக்கும் இடம் மாற்றம் செய்யப்பட்டது. அவர்கள் எந்தக்கட்சியையும் சாராதவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. என்னுடைய கருத் தெல்லாம் ஒரு கணவன் தன்னுடைய மனைவி துரோகம் செய்கிறாள் என்று கருதி, வீட்டை விட்டுத் துரத்தி, அதுவும் போதாமல் நீதிமன்றம் சென்று விவாகரத்தும் வாங்கிய பிறகு,



பொதுக்குழுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் உரையாற்றுகிறார். உடன் பொதுச் செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்.

கணவன் எதற்காக மனைவியைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்" என்றார். உடனே எஸ்.ஆர்.ராதா எழுந்து, கணவனுக்கு மனைவி துரோகம் செய்துவிட்டாள் என்ற அருமையான கருத்தை அவைத் தலைவர் குறிப்பிட்டார் என்றார். உடனே நான் குறுக்கிட்டு, அவைத் தலைவர் மிகுந்த எச்சரிக்கையோடு அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். துரோகம் செய்தாள் என்று "கருதி" என்று தான் குறிப்பிட்டாரே தவிர, துரோகம் செய்ததாகக் கூறவில்லை. சந்தேகப்படுகிற கணவன்கள் சிலர் எங்கும் இருக்கலாம் என்றேன். தொடர்ந்து பி.எச். பாண்டியன் எழுந்து ஆளுங்கட்சிக்கு ஆதரவாக ஏதோ கூறுவதற்கு முயற்சித்தவுடன், எஸ்.ஆர். ராதா குறுக்கிட்டு, "அண்ணாவைத் தெரியாதவர்கள், பெரியாரைத் தெரியாதவர்களை எல்லாம் இங்கே பேச அனுமதிக்கிறீர்களே" என்றார். அதற்கு பி.எச். பாண்டியன், "ஜெயலலிதாவிற்கு பெரியாரைத் தெரியுமா? அண்ணாவைத் தெரியுமா? நான் தமிழன், எனக்கு எல்லோரையும் தெரியும், பெரியாரையும் தெரியும்" என்றார். பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் இரு சாராரையும் அமைதிப்படுத்திவிட்டு தனது தீர்ப்பின் மீது யாருக்கும் பேச அனுமதி கிடையாதென்றார். உடனே அ.தி.மு.க.வினர் எழுந்து சபாநாயகர் ஒழிக என்று முழக்கமிட்டனர். பேரவைத் தலைவரின் இருக்கை அருகே வந்து அவருடைய துண்டைப் பிடித்து இழுத்தனர். கையைப் பிடித்து இழுத்துத் தாக்கினர். உடனே பேரவைப் பாதுகாவலர்கள் அங்கே நுழைந்து வன்முறையில் ஈடுபட்டவர்களையெல்லாம் பேரவைத் தலைவரின் ஆணையின் பேரில் வெளியேற்றினார்கள். அ.தி.மு.க.வினரின் இந்த அநாகரீகச் செயலை, இந்திரா காங்கிரஸ் உட்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் கண்டித்தன.

27 காந்தி மறைந்த நாளில் ஜனநாயகத்துக்குக் கல்லறை!

இந்த அத்தியாயத்தைப் படிப்பவர்களுக்கு ஒரே ஆச்சரியமாக இருக்கும். ஆரம்பமே; அடேடே, இப்படிக்கூட நடக்குமா என்று நினைத்திடத் தோன்றும். இந்திய நாட்டில் மத்தியில் உள்ள அரசு என்பது, மாநில அரசுகளைத் தன்னுடைய அடிமைகளாகக் கருதாமல், தோளொடு தோள் சேர்ந்து துணை நிற்கும் தோழனாகக் கருத வேண்டும் என்பதுதான் மாநில சுயாட்சியின் அடிப்படைத் தத்துவம்.

ஆனால் மத்திய அரசின் "லகானை"ப் பிடிக்கும் பிரதமர்களின் தனிப்பட்ட குணநலன்களைப் பொருத்துத்தான் அந்த நிலை அமையும் என்பதற்கு ஏற்கனவே சில எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன.

குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தியும், பிரதமர் வி.பி. சிங்கும் தமிழ்நாடு அரசைக் கலந்து ஆலோசித்தனர் தோழமை உணர்வுடன்! இருவரின் அணுகுமுறை அப்படியே ஒத்திராவிடினும்; இடைக்காலப் பிரதமராக வந்த சந்திரசேகர்கூட அந்த முறையைப் பின்பற்றி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்மாநில அரசைக் கலந்து பேசி முடிவெடுக்க விரும்புகிறார் என நான் கேள்விப்பட்ட மாத்திரத்தில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

அதுபற்றிய விபரத்தை இதோ கூறிவிடுகிறேன். ஆப்பிள் பழத்தையும் கத்தியையும் காட்டி "நண்பா! இந்தப் பழத்தை இரு துண்டுகளாக நறுக்கி உனக்கு ஒரு துண்டு - எனக்கு ஒரு துண்டு" என நண்பனாக நடிப்பவன் சொல்லும்போது;

அதை நம்புகிறவன் நாவில் அவனை அறியாமல் உமிழ்நீர் ஊறிவிடுமல்லவா! அதனால் ஆமோதித்துத் தலையசைத்த வாறு அவன் தோளில் கை போடுவான்; அப்போது அந்த நண்பன் ஆப்பிளை நறுக்காமல் அந்தக் கத்தியால்- தோளில் கை போட்டவனின் தொண்டைக் குழியில் குத்திச் சாய்த்து விடுவான்!

அதுபோல டெல்லியிலிருந்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.சுக்லா அவர்கள் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு; அவர் இலங்கை அரசுடன் தமிழர் பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்த கொழும்பு செல்வதாகவும், அதற்கு முன்பு என்னிடம் கலந்து பேசிட வேண்டு மென்றும், அதற்காக 28ந்தேதி (ஜனவரி 1991) சென்னை வருவதாகவும் தெரிவித்தார்.


எனக்கு அதே தேதியில் மதுரையில் ஏற்கனவே ஒப்புக் கொண்ட ஒரு நிகழ்ச்சி இருந்தபடியால் சென்னை சந்திப்பை 29ந்தேதி வைத்துக் கொள்ளலாம் என்று கூறினேன். ஆனால் சுக்லா அவர்கள்; 28ந்தேதி மதுரைக்கே வந்து என்னைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு அவ்வாறு மதுரைக்குக் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தார். மதுரையில் என்னுடனும் முரசொலி மாறனுடனும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசினார். அவருடன் வெளியுறவுத் துறைச் செயலாளர் துபேயும் வந்திருந்தார். எங்களுடன் பேசியது திருப்தியாக இருந்ததாகவும், இலங்கைப் பயணத் துக்கு மிகவும் பயன்படுமளவில் இருந்ததாகவும் திரு.சுக்லா, மதுரைச் செய்தியாளர்களிடம் கூறிவிட்டு, கொழும்புக்குப் பயணமானார்.

அவர் சென்ற பின்னர், செய்தியாளர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு "என்ன சார்; சென்ட்ரல் கவர்ன்மெண்ட், உங் களிடம் ரொம்ப கார்டியலாக இருக்கிறதே! ஈழப் பிரச் சினைக்கே உங்களிடம் யோசனை கேட்டுவிட்டு கொழும்புக்குப் போகிறார்களே! அதனால் எங்களுக்கு நம்பிக்கையிருக்கு சார்! ஆட்சியைக் கலைக்கிறது என்பதெல்லாம் சும்மா வதந்தி சார்!" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

அருமை நண்பன், ஆப்பிள் பழத்துடனும் கத்தியுடனும் வந்திருக்கிறான் என்பது எனக்கும் தெரியாது, செய்தியாளர் களுக்கும் தெரியாது!

அதைப் போலவே அடுத்த நாள் 29ந்தேதி டெல்லியி லிருந்து தமிழக ஆளுநர் திரு. பர்னாலா அவர்களுக்கு அழைப்பு வந்து, அவர் ஜனவரி 30ந் தேதி டெல்லி போய்ச் சேர்ந்தார். அன்று பகல் முழுவதும் பர்னாலா அவர்களிடம் கழக அரசுக்கு எதிரான முறையில் அறிக்கை தரும்படி வலியுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாகவும், ஆனால் அவர் உண்மைக்கு மாறாக அறிக்கை தர முடியாது என்று மறுத்து வருவதாகவும் டெல்லியிலிருந்து எனக்குத் தகவல்கள் வந்து கொண்டிருந்தன. மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத் காந்த் சகாய் அவர்கள், டெல்லி தமிழ்நாடு மாளிகையில் ஆளுநரைச் சந்தித்து அறிக்கை தர வற்புறுத்தினார். அதற்கும் ஆளுநர் ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு "ரா" மற்றும் "ஐ.பி." ஆகிய அமைப்புகளின் மூத்த அதிகாரிகள் சென்று ஆளுநரைச் சந்தித்துப் பேசினார்கள். பயனில்லை, அந்தப் பஞ்சாப் சிங்கம் மறுத்து விட்டது.

இதற்கிடையே மத்திய அரசு இப்படியொரு முடிவினை எடுத்து விடுமோ என்று ஐயுற்று முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தலைமையில் தேசிய முன்ன ணியின் பிரதிநிதிகள் அடங் கிய குழு ஒன்று குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட் ராமன் அவர்களைச் சந்தித்து, ஜனநாயக விரோதமாக நடவடிக்கை எடுக்காதீர்கள் எனக் கேட்டுக் கொண்ட தையும் நிராகரித்து விட்டு, அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின்படி குடி யரசுத் தலைவர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி



மதுரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வி.சி.சுக்லாவுடன் விவாதிக்கிறார் முதல்வர் கலைஞர். உடன் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் உள்ளார்.

கழக ஆட்சியைக் கலைத்து ஆணை பிறப்பித்தார். தமிழகச் சட்டப் பேரவையும் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் செல்வாக்கு அதிகரிக்க கழக அரசு அனுமதித்து விட்டதாகக் காரணம் கூறி இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. தமிழகச் சட்டமன்றத்திலே மொத்தம் 234 இடங்களில் தி.மு.கழகம் 142 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும் அத்தகைய பெரும்பான்மை அரசைக் கலைத்தார்கள். பிப்ரவரி 2-ந் தேதியன்று தமிழகச் சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவிருந்த நிலையில் அவசர அவசரமாக ஜனவரி 30-ந்தேதி இரவு ஆட்சி கலைக்கப் பட்டது. இந்திய நாட்டின் தந்தை உத்தமர் காந்தியடிகளை கோட்சே எனும் கொடியவன் சுட்டுக் கொன்ற நாள் ஜனவரி 30தான்! அதே நாளில் இந்தியாவின் ஜனநாயகத்தை காங்கிரசின் தலைவர்களும், அ.தி.மு.க.வினரும் பிரதமர் சந்திரசேகரும், குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனும் சேர்ந்து கூட்டுச் சதி நடத்தி கொன்று குவித்தார்கள். இதற் கான அறிவிப்பு வந்த நேரத்தில் அதே மாலை வேளையில் பெரியார் திடலில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு நான் உரையாற்றிக் கொண் டிருந்தேன். கலைப்புச் செய்தி வரப்போகிறது என்று தெரிந்தே அந்த நிகழ்ச்சிக்கு வந்துள்ளதாகத் தெரிவித்து விட்டுத்தான் உரையாற்றினேன்.

இந்தச் செய்தி கிடைத்ததும் தமிழகமே கொந்தளித்தது. மக்கள் வீட்டை விட்டுக் கிளம்பி தெருவிலேதான் நின்றார் கள். போக்குவரத்து வாகனங்கள் அனைத்தும் தடுத்து நிறுத் தப்பட்டன. கடைகள் மற்றும் தொழிலகங்கள் அனைத்தும் அடைக்கப்பட்டன. பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப் பட்டன. அண்ணா அறிவாலயத்திற்குள் உள்ளே செல்ல முடியாத அளவிற்கு வெள்ளம்போல் மக்கள் கூடிவிட்டனர். வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் தொடர்ந்து தொலை பேசியின் மூலம் எங்களைத் தொடர்பு கொண்டு ஜனநாயகப்


படுகொலையைக் கண்டித்தார்கள். இந்தியா முழுவதும் பிப்ரவரி 6ந் தேதி முழு அடைப்பு நடத்துவதென்று டெல்லியில் கூடிய தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகள் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. ஆளுநர் பரிந்துரை இல்லாமலேயே இந்த ஜனநாயகப் படுகொலை செய்யப் பட்டதை அகில இந்தியத் தலைவர்கள் எல்லாம் கண்டித் தார்கள். தமிழகத்தில் பிப்ரவரி 3-ந் தேதியன்று அனைத்துக் கட்சிகள் சார்பில் விளக்கப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது. என்னிடம் செய்தி யாளர்கள் உடனடியாகக் கருத்து கேட்டபோது;

"ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பாற்றத் தவறியுள்ள சந்திரசேகர் அவர்கள் என்னுடைய தலைமையில் இருந்த ஆட்சியைக் கலைத்ததின் மூலம் தன்னுடைய ஆட்சியைத் தற்காலிகமாகக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இதற்கு நாங்கள் அவருக்குப் பயன்பட்டிருக்கிறோம் என்பதில் எனக்கு ஒரு வகையில் திருப்திதான்" எனப் பதில் அளித்தேன்.

மேற்குவங்க முதல் அமைச்சர் ஜோதிபாசு அவர்கள் தமிழகத்தில் ஆட்சிக் கவிழ்ப்பை முறைகேடாக நடத்திய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் தனது பதவியை விட்டு விலக வேண்டும் என்றும், வன்முறை, கலவரம் ஏற்பட்டுள்ள மாநிலங்களை விட்டுவிட்டு அமைதி தவழ்ந்த தமிழக ஆட்சியைக் கலைத்தது, கண்டிக்கத்தக்கது என்றும் கூறினார்.

திருச்சி சுண்ணாம்புக்காரத் தெருவைச் சேர்ந்த முருகேசன் என்பவரும், உப்பிலியாபுரத்தைச் சேர்ந்த வரதராஜன் என்பவரும் இந்தச் செய்தி கிடைத்ததும் தீக்குளித்து மாண்டனர். உதகமண்டலத்திற்கு அருகில் வேலுச்சாமி என்பவர் டிராக்டர் முன் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

ஓர் ஆட்சியைக் கலைக்க அரசியல் சட்டத்தில் ஆளுந ருடைய அறிக்கை அல்லது வேறு விதத்தில் (Report of the



சுர்ஜித் சிங் பர்னாலா

Governor or otherwise) என்று இருக்கிறது. ஆளுநர் அறிக்கை கொடுக்க மறுத்த காரணத்தினால் "வேறு விதத்தில்" என்பதைப் பயன்படுத்தி ஆட்சியைக் கலைத்தார்கள். ஆளுநர் இல்லாவிட்டால் கூட 'வேறு விதத்தில்' என்பதைப் பயன்படுத்தலாம். ஆனால் ஆளுநர் டெல்லிக்கே வரவழைக்கப்பட்டு அவர் அங்கே இருக்கின்ற நேரத்தில் அவருடைய அறிக்கையைப் பெற முடியாமல் "வேறு விதத்தில்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் கலைப்பதற்குப் போதுமான காரணங்கள் இல்லை என்பதுதானே உண்மை!

ஆட்சிக் கலைப்பை எதிர்த்து அண்ணா சாலையில் மறியலில் ஈடுபட்ட மகளிரைக் காவல் துறையினர் தாக்கிய போது அதைத் தடுக்க நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அங்கே சென்று காவல் துறையினரைக் கேட்டதற்காக, அவரையும் கழுத்திலே குத்தி அவர் மயக்கமடைந்து கீழே விழுந்த நேரத்தில் காவல் துறையினர் சுற்றி நின்று கொண்டு அவரை லத்தியால் அடித்தனர். அவருடைய முதுகிலே பாளம் பாளமாக அந்த லத்தி காயங்கள் ஏற்பட்டு ராயப் பேட்டை மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார்.

டெல்லியிலிருந்து திரும்பிய ஆளுநர் பர்னாலா அவர் களைச் செய்தியாளர்கள் சந்தித்தபோது அறிக்கை எதுவும் கொடுத்தீர்களா என்று கேட்டதற்கு இல்லை என்று மறுத்த தோடு, அறிக்கை இல்லாவிட்டால் "வேறு வகையில்" என்று இருக்கின்ற பிரிவைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று கூறினார்.

1-2-91 தேதிய இந்து இதழில் வந்த தலையங்கத்தின் சுருக்கம் வருமாறு :-

"தமிழகத்தில் தி.மு.கழக ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்டிருப்பது, இந்திய அரசியல் சட்ட செயல்பாட்டின் வரலாற்றிலேயே ஈடு

இணையற்ற அட்டூழியமாகும். இந்த மாநிலம் அமைதியாக இருக்கும் இந்தத் தருணத்தில், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நிலையான ஆட்சியை நடத்தி வரும் நேரத்தில், அரசியல் சட்டப் பிரிவுகளின்படி நிர்வாகத்தை நடத்தி வர முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறி இந்த அமைச்சரவையைக் கலைத் திருப்பது கடுமையான நெருக்கடிகளையும், அசாதாரணமான நிலைமைகளையும் சமாளிப்பதற்காக மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூச்சநாச்சமின்றி துஷ்பிரயோகம் செய்திருப்பதாகும். ஜனநாயகத்தைக் கொச்சைப்படுத்தும் இந்த இழிவான செயலில் அ.தி.மு.க. மற்றும் இ.காங்கிரசுக்கு சந்திரசேகரின் அரசு கைக்கருவியாக ஆகிவிட்டிருக்கிறது. தி.மு. கழக அரசைக் கழுவில் ஏற்றுவதற்கு எல்.டி.டி.இ. தொடர்பு ஒரு சாக்காகப் பயன்படுத்தப்பட்டபோதிலும் எல்.டி.டி.இ. உறவு என்பது இதற்கு முன்னால் இ. காங்கிரசும், அ.தி.மு.க.வும் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஏற்பட்டதேயாகும்.”

அதே 1-ஆம் தேதிய தினமணி இதழ் தலையங்கத்தில், “பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான மத்திய அரசு இந்த அடாத செயலைச் செய்யத் துணிந்ததற்கு உண்மையான காரணம் என்ன என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். சந்திரசேகர் தாம் சார்ந்திருந்த கட்சியை உடைத்துவிட்டு எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரசிடம் சரணடைந்து, பிரதமர் பதவியை எட்டிப் பிடித்தபோது பேசப்பட்ட பேரங்களில் தமிழகத்தில் தி.மு.க. அரசைக் கலைத்து விடுவதும் ஒன்றாகும். அந்தப் பேரம் இப்பொழுது செயல்படுத்தப் பட்டுள்ளது” என்று குறிப்பிட்டிருந்தது.


1-2-91 அன்று நான் விடுத்த நீண்ட அறிக்கையில்; நடை பெற்ற ஜனநாயகப் படுகொலைக்குப் பிராயச்சித்தம் தேடிட குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் தனது பதவியை விட்டு விலக வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆளுநரிடம் அறிக்கை பெறாமல் சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து சந்திரசேகரின் கைப்பாவையாக குடியரசுத்

தலைவர் செயல்பட்டிருக்கிறார் என்றும் செய்தியாளர் களிடம் விளக்கினேன்.

செய்தியாளர்கள் "சட்டம் ஒழுங்கு பிரச்சினையைத்தான் முக்கியமான காரணமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சுட்டிக் காட்டியபோது;

"ஜனவரி மாதம் 11-ஆம் தேதி பிரதமர் எனக்கு எழுதிய கடிதத்தின் இரண்டாவது பாராவே சட்டம் ஒழுங்கு பிரச்சினை பற்றியதுதான். அதில் இந்தியாவிலே சட்டம் ஒழுங்கு மிகவும் சீர் குலைந்துள்ள மாநிலங்கள் என்று பிரதமரின் கடிதத்திலே குறிப்பிட்டிருப்பது பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், அஸ்ஸாம் ஆகிய மூன்று மாநிலங்களைத்தான். அந்தக் கடிதத்திலே தமிழ்நாட்டைப் பற்றி எந்த வார்த்தை யும் இல்லை. அதேபோல குடியரசுத் தலைவர் ஜனவரி 26-ஆம் தேதி குடியரசு நாளன்று விடுத்த செய்தியிலும் பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் மாநிலங்களில்தான் சட்டம் ஒழுங்கு கெட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறாரே தவிர தமிழ் நாட்டைப் பற்றி அந்த உரையிலே எதுவும் சொல்லவில்லை. 26-ந் தேதியிலிருந்து 30-ஆம் தேதிக்குள் சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டிலே அப்படி என்ன கெட்டு விட்டது?" என்று ஒரு கேள்வியையே செய்தியாளர்களின் கேள்விக்கு நான் பதிலாகத் தந்தேன்.

தொடர்ந்து செய்தியாளர்கள் 1980-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைக்கச் சொல்லி நீங்கள் கேட்டதாகக் கூறப்படும் புகார் குறித்து என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டதற்கு, "நாங்கள் அப்படிக் கேட்கவில்லை. 1977-ல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததும், ஒன்பது பத்து மாநில அரசுகளை ஒட்டுமொத்தமாகக் கலைத்தார்கள். அதே முறையில் இந்திரா காந்தி அம்மையாரும் 1980-ல் ஒன்பது மாநிலங்களை ஒட்டுமொத்தமாகக் கலைத்தார்கள். அந்த ஒன்பதில் ஒரு மாநிலமாக தமிழ்நாட்டையும் கலைத் தார்கள். நாங்கள் எந்தவிதமான நெருக்கடியும் எம்.ஜி.ஆர். அரசைக் கலைக்க வேண்டுமென்று கொடுக்கவில்லை; தி.மு.



ஆர். வெங்கட்ராமன்

கழகம் எந்தத் தீர்மானமும் அவ்வாறு நிறைவேற்றவில்லை'' என்று கூறினேன்.

2-2-91 அன்று டெல்லியில் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்புக் குழு கூடி தி.மு. கழக அரசைக் கலைத்ததை எதிர்த்து, பிப்ரவரி 6-ந்தேதி இந்தியா முழுவதும் முழு அடைப்பு மற்றும் பொது வேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

3-2-91 அன்று பனகல் பூங்காவில் என்னுடைய தலைமையில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வி.பி. சிங், என்.டி. ராமராவ், நம்பூதிரிபாத், முரசொலி மாறன், உபேந்திரா, ப. மாணிக்கம், நல்லசிவன், இரா.செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர். 6ந் தேதி பொது வேலை நிறுத்தத்தையொட்டி 50 ஆயிரத்திற்கு மேற் பட்டவர்கள் தமிழகம் எங்கும் கைது செய்யப்பட்டனர்.

தமிழக கழக அரசு கலைக்கப்பட்டதைக் கண்டித்து தமிழகம், மேற்கு வங்கம், கேரளா, பீகார், ஆந்திரா, கோவா, புதுவை மற்றும் பல மாநிலங்களில் 6ந்தேதியன்று முழு அடைப்பு பெரு வெற்றி பெற்றது.

பிரதமர் சந்திரசேகர் இல்லத்திற்கு முன்பு தேசிய முன்னணித் தலைவர்கள், மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் கழக அரசை டிஸ்மிஸ் செய்ததைக் கண்டித்து பிப்ரவரி 5-ந் தேதியன்று ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப் பாட்டத்திற்குப் பிறகு அந்த இடத்திலேயே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மூத்த தலைவர்கள் உரையாற்றினர். பெங்களூரில் ஆளுநர் மாளிகைக்கு முன்னால் திரு. ராம கிருஷ்ண ஹெக்டே அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தி 5000 பேர் கைதாகினர்.

இதற்கிடையே பிப்ரவரி 5ந்தேதியன்று டெல்லி சென்று ஜெயலலிதா பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்தார்.

டெல்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தமிழக சட்டப் பேரவைக்கு நடைபெறவுள்ள தேர்தலில் அ.தி.மு.க. 168 இடங்களிலும், இ.காங்கிரஸ் கட்சி 66 இடங்களிலும் போட்டியிடுவதென்று உடன்பாடு ஏற்பட்டது.

பிப்ரவரி 10-ஆம் தேதி பீகார் சட்டமன்றத்தில் அந்த மாநில ஆளுநர் முகமது யூனுஸ் உரையாற்றும்போது, "தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்டிருப்பது ஜனநாயக நெறிகள் துச்சமாக மதிக்கப்படுகின்றன என்பதற்கான எடுத்துக்காட்டாகும்" என்று கூறியதோடு, "தமிழக சட்டப் பேரவையில் தி.மு. கழக அரசுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்த போதிலும், ஆளுநர் பர்னாலா பரிந்துரை செய்யாத போதிலும் ஆட்சி கலைக்கப்பட்டது" என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார். இதன்விளைவாக பீகார் மாநில ஆளுநர் பதவியிலிருந்து முகமது யூனுஸ் சலீம் உடனடியாக நீக்கப் படுவதாகக் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட் ராமன் 13-2-91 அன்று அறிவித்தார். அவருக்குப் பதிலாக மற்றொருவர் நியமிக்கப்படும் வரை உத்தரப் பிரதேச ஆளுநர் பி.சத்ய நாராயண ரெட்டி கூடுதலாகப் பொறுப்பு வகிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

தமிழக அரசைக் கலைப்பதற்கு பரிந்துரை தருமாறு தமிழக ஆளுநர் பர்னாலா அவர்களை வலியுறுத்தியபோது கடைசி வரை அதற்கு மறுப்பு தெரிவித்த அவரை தமிழகத்திலிருந்து பீகார் மாநிலத்திற்கு ஆளுநராக மாற்றுவதற்கான முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டபோது, ஆளுநர் பர்னாலா அவர்களே தானாக முன்வந்து 13ஆம் தேதியன்று தனது பதவியிலிருந்து விலகினார். அதைப்பற்றி நான் செய்தியாளர்களிடம் "தமிழக ஆளுநர் பர்னாலா பதவி விலக வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டிருக்குமேயானால் ஜனநாயகத்திற்கு விழுந்த இரண்டாவது பலத்த அடி என்றே அதைச் சொல்ல வேண்டும். மத்திய உள்துறை இணை அமைச்சர் தமிழக கவர்னரை மாற்றுவதாக இல்லை என்று செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். இப்போது அவர் வேறொரு



டி. ஆர். பாலு

மாநிலத்திற்கு மாற்றப்பட்டார் என்றும், அதனை ஏற்றுக் கொள்ளாமல் பர்னாலா பதவி விலகி விட்டார் என்றும் செய்தி கிடைத்திருக்கிறது. ஆளுநர் பதவியே தேவையில்லை என்பது எங்களுடைய வாதம். அப்படி அந்தப் பதவிப் பொறுப்பிற்கு வருகின்றவர்கள் நேர்மையாகவும் இருக்கக் கூடாது என்பது சந்திரசேகரின் மைனாரிட்டி அரசின் வாதமாக இருக்கிறது என்பதை எண்ணி நான் மிகுந்த கவலைப்படுகிறேன்" என்று கூறினேன்.

குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் பர்னாலா அவர்களின் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக் கொண்டு, அவருக்குப் பதிலாக பீஷ்ம நாராயண் சிங் அவர்களைத் தமிழக ஆளுநராக நியமித்தார்.

மும்பை நகரில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. குர்ரி சாலையிலுள்ள மகாராஷ்டிரா உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் ஜனதா தளம், காம்கார் அகாதிக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் கலந்து கொண்டன. கூட்டத்தில் கலந்து கொண்ட காம்கார் அகாதிக் கட்சியின் தலைவரும், பிரபல தொழிற்சங்கவாதியுமான தத்தா சாமந்த் கூறும்போது, "தனது பதவியைக் காப் பாற்றிக் கொள்வதற்காக தமிழ்நாட்டில் தி.மு. கழக அரசைக் கவிழ்த்து ஜனநாயகப் படுகொலை செய்துவிட்டார் சந்திர சேகர். ஜெயப்பிரகாஷின் சீடரும், சோஷ லிஸ்டுமான ஒருவர் இப்படி நடந்து கொண்டது வெட்கித் தலைகுனிய வைப்ப தாக இருக்கிறது. அ.தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கூட்டுறவை நிலைப்படுத்திக் கொள்வதற்காகக் கொடுத்த நெருக்குதலே இந்த ஜனநாயகப் படுகொலைக்குக் காரணம். தமிழகத்தில்



வைரமுத்து

இலங்கைப் போராளிகள் பெருக யார் காரணம்? எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், அவர் தந்த ஆதரவு காரணமாகவே தமிழகத்தில் போராளிக் குழுக்கள் பெருகின" என்றார்.

கழக அரசு கலைக்கப்பட்ட செய்தி கேட்டதும், கவிப் பேரரசு வைரமுத்து அவர்கள் 'குங்குமம்' இதழில் ஒரு கவிதை வாயிலாகத் தனது குமுறலை வெளிப்படுத்தி யிருந்தார்.

"அடியே அனார்கலி!
உனக்குப் பிறகு
இந்த நாட்டில்
உயிரோடு புதைக்கப்பட்டது
ஜனநாயகம் தானடி!"

இதைப் படித்ததும் நான் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "ஆட்சி கலைத்ததால் லாபம்தான்" என்றேன். "என்ன சொல்றீங்க" என்றார். "ஒரு அருமையான கவிதை கிடைத்ததல்லவா"- எனது இந்தப் பதிலைக் கேட்டதும் அவரிடமிருந்து பதில் இல்லை. எனது பதிலே அவரைக் கண்கலங்க வைத்து விட்டது. மௌனமாகி விட்டார்.

28 கலைக்கும் சர்க்கார்; நிலைக்கும் சர்க்காரா?

பத்மநாபா என்ற இ.பி.ஆர்.எல்.எப். தலைவரையும், அவருடன் 13 விடுதலைப் போராளிகளையும் எல்.டி.டி.ஈ. எனப்படும் விடுதலைப் புலிகளில் சிலர் சென்னையில் படுகொலை செய்தபிறகும்கூட சில மாதங்கள் கழித்து விடுதலைப் புலிகள் இப்போது புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. எனவே அவர்களுக்கு தமிழக தி.மு.க. அரசும், தமிழ் மக்களும் ஆதரவளித்திட வேண்டுமென்றும் அவர்கள் இலங்கையில் தனித் தமிழ் ஈழம் அமைத்திட இந்திய அரசுகூட பங்களா தேஷில் எடுத்தது போன்ற ராணுவ நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை என்றும், விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். செய்துள்ள உதவிகளைப் பார்க்கும்போது கருணாநிதி எதுவும் உதவி செய்ததற்கான அறிகுறியே காணப்பட வில்லை என்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து பத்திரி கைகளில் முறையே 4-10-1990 தேதியிலும், 8-10-1990 தேதியிலும் கழக அரசைக் குறை சொல்லிவிடுதலைப் புலிகளை ஆதரித்து சிறப்பு தனிப்பேட்டி அளித்த ஜெய லலிதா முன்னுக்குப்பின் முரணாக தி.மு.க. ஆட்சி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது என்றும் தேச விரோதமாக நடக்கிறது என்றும் விடுத்த அறிக்கைகளையும் ஒரு வகையில் சாக்காக வைத்துக் கொண்டு பிரதமர் சந்திரசேகர் அவர்கள்; தனது மனச்சாட்சிக்கு விரோதமாக, தமிழகத்தில் கழக ஆட்சியைக் கலைத்து விட்டார்.

நாடு முழுதும் அவரது செயலையும், குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வி. அவர்களின் ஜனநாயக விரோத மனப்பான்மையையும் கண்டித்துக் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து, பிப்ரவரி 13 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தேசிய முன்னணி தலைமைக் குழுவின் கூட்டத்தில் கண்டனத் தீர்மானமொன்றும் நிறை வேற்றப்பட்டது. அக்கூட்டத்தில் நானும், என்டி. இராமராவ், வி.பி.சிங், அஜீத் சிங், பஸ்வான், பொம்மை, மகந்தா, சரத் சந்திர சின்ஹா, குஜ்ரால், ஜெயபால் ரெட்டி, ஹெக்டே, உன்னிகிருஷ்ணன், பேராசிரியர் அன்பழகனார், உபேந்திரா, முரசொலி மாறன் ஆகியோரும் கலந்து கொண்டோம்.

சந்திரசேகரின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்த போது என் நினைவுக்கு வந்த பழைய நிகழ்ச்சியொன்று நிழலாடியது.

ஆச்சார்ய நரேந்திர தேவா சோஷலிஸ்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர். இந்தியாவில் மலர்ந்த சோஷலிச இயக்கத்தின் பிதாமகராகக் கருதப்பட்டவர் இவர். ஜெயப் பிரகாஷ் நாராயண், அசோக்மேத்தா போன்ற தலைவர் களுக்கே வழிகாட்டியாகவும், ஞானாசிரியராகவும் திகழ்ந்தவர். சந்திரசேகரும் ஆச்சாரிய நரேந்திர தேவாவைத் தலைவராக ஏற்றுக்கொண்டு சோஷலிஸ்ட் இயக்கத்திலே நுழைந்தவர். நரேந்திர தேவாவைத் தனது குரு என்றுதான் சந்திரசேகர் சொல்லிக் கொண்டிருப்பார். இந்த சோஷ லிஸ்ட் தலைவர் நரேந்திரதேவா அவர்கள் உடல்நலம் குன்றி தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை டி.பி. சானடோரியத்தில் காசநோய்க்காக சிகிச்சை பெற்று வந்தார். அப்போது அவர் ஈரோடு நகரில் உள்ள ஒரு பயணியர் விடுதியில் தங்கியிருந்தபோது இயற்கை எய்தினார். அவர் மறைந்து பல ஆண்டுகளாகின்றன. 1989 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டபோது, சென்னைக்கு வந்த சந்திரசேகர் - அப்போது அவர் பிரதமர் அல்ல - என்னைச் சந்தித்தார். ஆச்சார்ய நரேந்திர தேவா தங்கியிருந்த பயணியர் விடுதியை நினைவுச் சின்னமாக ஆக்க வேண்டு

மென்று என்னிடம் தெரிவித்தார். அதனை நான் ஏற்றுக் கொண்டு ஆச்சார்ய நரேந்திர தேவா தங்கியிருந்த விடுதியை அவர் பெயரால் நினைவில்லமாக ஆக்கி உடனே ஆணை பிறப்பித்தேன். அந்த ஆச்சார்யாவின் சீடர் செய்த காரியம் தான் இந்த ஜனநாயகப் படுகொலை!

ஆட்சி கலைக்கப்பட்டது குறித்து கழகத்தின் சார்பில் ஒரு நீண்ட விளக்க அறிக்கை பிப்ரவரி 21ஆம் தேதி வெளியிடப் பட்டது. மேலும் தமிழ்நாட்டில் கழக ஆட்சியிலே பல்வேறு குழுக்களைச் சேர்ந்த ஈழப் போராளிகள் கைது செய்யப் பட்டது பற்றியும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பற்றியும், ராமனாதபுரம் மாவட்டம், தர்காவ லசை கிராமத்தில் ஒரு போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர் களால் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்கள் பதுக்கப்பட்டிருந்ததைக் கழக அரசு கண்டுபிடித்துக் கைப்பற்றியது பற்றியும் விபரங்கள் தெரி விக்கப்பட்டன.

கழக அரசு கலைக்கப்பட்ட ஒருசில நாட்களுக்குள்ளா கவே சந்திரசேகரும், ராஜீவ்காந்தியும் குடியரசுத் தலைவரை அடிக்கடி தனித்தனியாகச் சந்தித்து ஒருவரைப் பற்றி ஒருவர் புகார் கூறத் தொடங்கினர். பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி டெல்லியில் இளைஞர் அமைப்பு ஒன்று நடத்திய ரத்ததான முகாமில் கலந்துகொண்டு பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர், கடந்த எட்டு மாத காலமாக மத்திய அரசாங்கம் இயங்கவே இல்லை என்றார். பிரதமர் சந்திரசேகர் விமானம் மூலம் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சுற்றுப் பயணங் களைப் பார்த்தால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருப்பதாக நம்பவே முடியாது என்று அந்த விழாவில் கேலி செய்தார்.

இந்துஸ்தான் டைம்ஸ், ஸ்டேட்ஸ்மென் போன்ற ஏடுகளில் 20-2-91 அன்று வெளியிடப்பட்ட ஒரு செய்தியில் இந்தியன் ஏர்லைன்ஸ் அலுவலகங்களில் செவ்வாய்க்கிழமை தோறும் அனைத்து அலுவல்களும் இந்தியில்தான் நடை பெற வேண்டுமென்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்ப தாகச் செய்தி வந்தது. அதைப்பற்றிய செய்தியை வெளியிடும்

போது, தமிழகத்திற்குள் இந்தி நுழைந்து விடக்கூடாது என்று முழு மூச்சாக எதிர்த்து வந்த கருணாநிதி தலைமை யிலான தி.மு.கழக ஆட்சி கலைக்கப்பட்ட மூன்று வார காலத்திற்குள்ளாகவே தமிழகத்திற்குள் இந்தி நுழைந்து விட்டது என்று குறிப்பிட்டிருந்தனர். இந்தச் செய்தி வந்தவுடனே 22-ஆம் தேதி சென்னையில் என் தலைமையில் பெரியார் சிலையிலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு, இந்தியன் ஏர்லைன்ஸ் அலுவலக வாசலில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளி யான சில மணி நேரங்களிலேயே இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் தான் பிறப்பித்த உத்தரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

ஆண்டுதோறும் நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றுகின்ற வழக்கத் தின்படி 21-2-91 அன்று ஆர். வெங்கட்ராமன் வந்தபோது, தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் தமிழ்நாட்டில் தி.மு.கழக அரசு கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தன. அகாலி தளமும் அந்தப் புறக்கணிப்பில் தன்னை இணைத்துக் கொண்டது. பா.ஜ.க. அந்த ஆண்டு முழு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படாததைக் கண்டித்து குடியரசுத் தலைவர் உரையைப் புறக்கணித்தது.

ராஜீவ் காந்தி அவர்களின் வீட்டிற்கு எதிரே உளவு வேலை பார்த்ததாக அரியானாவைச் சேர்ந்த இரண்டு போலீஸ்காரர்கள் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் மார்ச் 4ந்தேதியன்று கடும் விவாதம் நடைபெற்றது. அதையொட்டி காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அந்த விவாதத்திலே கழகத்தின் சார்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முரசொலிமாறன் "பிரதமர் சந்திரசேகர் காங்கிரசுக்காக எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார். ராஜீவ்காந்தி வீட்டுமுன் அரியானா போலீஸ்காரர்கள் உலவினார்கள் என்பதற்காக காங்கிரஸ் கட்சி அரியானா அரசை டிஸ்மிஸ்

செய் என்று சொன்னால் பிரதமர் உடனடியாக அரியானா அரசை டிஸ்மிஸ் செய்துவிடக் கூடும். இந்திய மக்கள் தற்போது என்ன பேசிக் கொள்கிறார்கள்? காங்கிரஸ் தலைவர்கள் பிரதமர் சந்திரசேகரைப் பார்த்து, "நீங்கள் உடனடியாக உங்கள் தாடியை எடுத்துவிட வேண்டு மென்றால், சந்திரசேகர் உடனே அதைச் செய்து விடுவார்" என்று பேசிக்கொள்கிறார்கள். பிரதமர் அவர்களே, உங்களுடைய நீண்ட நாள் ஆசை நிறைவேறிவிட்டது. நீங்கள் பிரதமராக இருந்துவிட்டீர்கள். வரலாற்றில் உம்மைப் பற்றி ஒரு சின்ன அடிக் குறிப்புதான் இருக்குமே தவிர, ஒரு வரிகூட வராது. நான் சந்திரசேகரைக் கேட்டுக் கொள் கிறேன். Please Get Out! எவ்வளவு நாள் இந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?" என்று கூறிய போது, அவைத் தலைவர் 'கெட் அவுட்' என்று சொல்வது சரியல்ல என்றார். தொடர்ந்து மாறன் பேசும்போது, "நாடாளுமன்ற மொழியிலே நான் கூறியதற்குப் பொருள், நீங்கள் பதவி விலகுங்கள் என்பதுதான். ஏனென்றால் அவருடைய மனச்சாட்சிக்குப் பிடிக்காத விஷயங்களை எல்லாம் செய்யச் சொல்கிறார்கள். எனவே அவர் பதவி விலகி மக்களைச் சந்திப்பதுதான் நல்லது" என்றார்.




சந்திரசேகர்

சந்திரசேகரின் அடுத்த "ஜன நாயக"ப் பலியாக புதுவையில் தி.மு.கழக ஆட்சியைக் கவிழ்த்து எப்படியாவது காங்கிரஸ் ஆட்சியை அமைத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு டி.ராமச்சந்திரன் தலைமையில் இருந்த அமைச்சர வையை ஏற்கனவே கலைத்துவிட்டு, சட்டப் பேரவையை மட்டும் கலைக்காமல் வைத்திருந்தவர்கள், தங்களால் ஆட்சி அமைக்க இய லாது என்று உறுதியாகத் தெரிந்த தும் பேரவையையும் மார்ச் திங்கள் முதல் வாரத்தில் கலைத்து விட்டார் கள்.

"கலைக்கும் சர்க்கார்; நிலைக்கும் சர்க்காரா?" என்ற தலைப்பில் 6-3-91 அன்று முரசொலியில்; உடன்பிறப்புக் கடிதத்தில் மாநில சர்க்கார்களையெல்லாம் சந்திரசேகரின் மத்திய சர்க்கார் தொடர்ந்து கலைத்துக் கொண்டிருக் கின்றதே, அந்த மத்திய சர்க்கார் மட்டும் நிலைக்கும் சர்க்காரா என்று கேட்டு எழுதியிருந்தேன். அதற்கு அன்று மாலையே எனக்கு விடை கிடைத்தது. சந்திரசேகரின் அரசு மொத்தம் 117 நாட்களே பதவியிலே இருந்தது. ராஜீவ் காந்தி வீட்டு வாசலில் ஒற்றர்கள் உளவு பார்த்தார்கள் என்று காரணம் கூறப்பட்டு திடீர் திருப்பம் ஏற்பட்டது. நாடாளு மன்றத்தின் இரண்டு அவைகளிலிருந்தும் இந்திரா காங்கிர சார் வெளிநடப்பு செய்தனர். சபையை நடத்திட தேவையான கோரம் இல்லாததால் மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது. இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசரமாகக் கூடி தொடர்ந்து மக்களவையைப் புறக்கணிப் பது என்று முடிவெடுத்தனர். இதைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனை இந்திரா காங்கிரசின் மூத்த தலைவர் நரசிம்மராவ் சந்தித்தார். அன்று நாடாளுமன்ற மக்கள் அவையில் இடைக்கால வரவு செலவுக்கான அனுமதி கோரும் தீர்மானத்திற்கான வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். இதற்கு இந்திரா காங்கிரஸ் ஆதரவு இருந்தால் தான் தீர்மானம் வெற்றி பெற முடியும். ஆனால் இந்திரா காங்கிரஸ் சபைக்கு வர மறுத்துவிட்ட காரணத்தால் தீர்மானம் தோற்றுவிடும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் தீர்மானத்தை நிறைவேற்ற ஆதரவு தர முன்வந்தனர். ஆனால் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை அவையிலே கொண்டு வரும் போது அதைத் தோற்கடித்து விடவும் வியூகம் வகுத்தனர். ராஜீவ் காந்தி அவசர அவசரமாக இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். இதற்கிடையில் மக்கள் அவை கூடியது. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் அவையில் கொண்டுவரப்பட்டு விவாதம்



என். டி. ஆர்.

தொடங்கியது. அந்த நேரத்தில்தான் பிரதமர் சந்திரசேகர் விவாதத்தில் குறுக்கிட்டு தான் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாகத் திடீரென அறிவித்துவிட்டு அவையிலிருந்து வெளியேறினார். பிறகு சந்திரசேகர் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனைச் சந்தித்திட குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்ததோடு பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்துமாறு கேட்டுக் கொண்டார். கடிதத்தைப் பெற்றுக் கொண்ட குடியரசுத் தலைவர் பதவி விலகலை ஏற்றுக் கொள்வதாக அதிகாரபூர்வமாக அறிவித்தார். புதிய ஏற்பாடு செய்கிறவரை சந்திரசேகரைப் பிரதமர் பதவியில் நீடிக்குமாறு குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

சந்திரசேகர் மக்கள் அவையில் தனது பதவி விலகலை அறிவித்த சில மணித் துளிகளில் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி அவசர அவசரமாகக் குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று 40 நிமிடங்கள் அவருடன் ரகசிய ஆலோசனை நடத்தினார்.

சந்திரசேகர் பதவி விலகல் செய்தி கிடைத்ததும் நான் விடுத்த அறிக்கையில் "தன்னுடைய ஆட்சியைத் தற்காலிகமாகக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்னுடைய தலைமையிலிருந்த கழக ஆட்சியை சந்திரசேகர் கலைத்துவிட்டார் என்று ஜனவரி 30-ந்தேதி தெரிவித்தேன். 'தற்காலிகமாக' என்று நான் குறிப்பிட்டபோது ஒரு ஆறு ஏழு மாத காலமாவது ஓடும் என்றுதான் கருதினேன். ஆனால் கழக ஆட்சிக் கலைப்புக்குப் பிறகு பாவம் முப்பத்தி நான்கே நாட்கள்தான் அந்தப் 'பதவிப் பிராப்தம்' அவருக்கு இருந்திருக்கிறது. இந்த முப்பத்தி நான்கு நாள் பதவி நீடிப்புக்காக மூன்றாண்டு காலம் நீடித்திருக்க வேண்டிய கழக ஆட்சியையும், அஸ்ஸாம், புதுவை ஆட்சிகளையும் கலைத்த சந்திரசேக

ருக்கு சரியான முடிவுதான் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் நடமாடுவதாகக்கூறி கழக ஆட்சியை சந்திரசேகர் கலைத்தார். ராஜீவ் காந்தி வீட்டுக்கு எதிரே ஒற்றர்கள் நடமாடுவதாகக் காரணம் காட்டி சந்திரசேகர் ஆட்சியைக் கவிழ்த்து விட்டனர்" என்று குறிப்பிட்டிருந் தேன்.


குடியரசுத் தலைவர் உரை படிக்கப்பட்டு அந்த உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் இந்திய நாட்டு வரலாற்றிலேயே முதல் முறையாக நாதியற்றுக் கிடக்க வேண்டிய நிலைமை அப்போதுதான் ஏற்பட்டது. அதைப் போலவே இடைக் கால பட்ஜெட் நிறைவேறினால்தான் அரசின் நிர்வாகமே நடைபெற இயலும் என்ற நிலையிலே சந்திரசேகர் பதவி விலகினார். 11-3-91 அன்று எதிர்க்கட்சிகளின் முழு ஆதரவோடு மக்களவையில் நிதிநிலை மசோதா எந்தவித மான விவாதமும் இன்றி நிறைவேறியது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை எப்படியாவது பிரதமராகக் கொண்டு வருவதற் கான பெருமுயற்சி டெல்லியிலே நடைபெற்றது. சந்திரசேகர் தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டு, பாராளுமன்றத் தைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்த வேண்டுமென்று கடிதம் கொடுத்து, ஒரு வாரத்திற்கு மேலாகியும் குடியரசுத் தலைவர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் காலத்தை நீடித்தது அனைவருக்கும் சந்தேகத்தை ஏற்படுத் தியது. குடியரசுத் தலைவராக திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் இருந்தபோது, சரண்சிங் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு கடிதம் கொடுத்தபோது, அவர் உடனடியாக நடவடிக்கை எடுத்ததையும், வெங்கட்ராமன் ஒரு வாரத்திற்கு மேலானபிறகும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததையும் ஒப்பிட்டு நினைத்தபோது, பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிலேயே இப்படியொரு நிலையா என்று தான் எண்ணத் தோன்றியது. ஆனால் குடியரசுத் தலைவர் நினைத்தவாறு எதுவும் செய்ய இயலாததால், சந்திரசேகர் 6ந்தேதியன்று கொடுத்த கடிதத்தில் செய்திருந்த

பரிந்துரையையேற்று, 13-3-1991 அன்று ஒன்பதாவது மக்கள் அவை கலைக்கப்பட்டது. ஒன்பதாவது மக்கள் அவை ஐந் தாண்டு காலத்திற்கு எனத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் 466 நாட்களுடன் முடிந்து விட்டது.

இதற்கிடையே மார்ச் 8ந்தேதி டெல்லியில் நடைபெற்ற தேசிய முன்னணியின் தலைமைக் குழு கூட்டத்திற்கு நான் செல்ல இயலாத நிலையில் அதைப்பற்றி வி.பி. சிங் அவர் களுக்குத் தந்தி மூலம் தகவல் தெரிவித்தபோது, குடியரசுத் தலைவரை நாடாளுமன்றத்தின் முன் வரவழைத்து கண்டனம் செய்வது (இம்பீச்மென்ட்) பற்றியும் தலைமைக்குழு பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருந்தேன். உடனே குடியர சுத் தலைவர் உயர்ந்த இடத்தில் இருப்பவராயிற்றே, அவரை கருணாநிதி இப்படி கண்டிக்கலாமா என்று மாற்று முகாமினர் அறிக்கை விடுத்தனர். அதற்கு நான் விளக்கம் அளிக்கும்போது, 1982ஆம் ஆண்டு ஜெயில்சிங் குடியரசுத் தலைவராக ஆனபோது துக்ளக் இதழில் இரண்டு கழுதை களின் படத்தைப்போட்டு, அடுத்த குடியரசுத் தலைவர் நாம்தான் என்று கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்ததே- அது குடியரசுத் தலைவர் பதவியின் கௌரவத்தை உயர்த்தும் செயலா? அப்போது என்ன செய்தீர்கள்? என்று கேட்டேன். ஆனால் என் கேள்விகளுக்கு யாரும் பதில் கூறவில்லை.

தேசிய முன்னணி சார்பில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத் தொடக்க விழா மார்ச் 18-ஆம் தேதியன்று பீகார் மாநில தலைநகரான பாட்னாவில் (பாடலிபுத்திரம்) நடை பெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள 17-ஆம் தேதி மாலையில் சென்னையிலிருந்து புறப்பட்டேன். என்னுடன் நாடாளுமன்ற உறுப்பினர் வைகோவும் வந்தார். பாட்னா காந்தி மைதானத்தில் 5 லட்சம் பேர் திரண்ட அந்தக் கூட்டத்தில் நானும், வி.பி.சிங்கும், என்.டி.ஆரும், பொம்மையும் மற்றும் தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டோம். நான் அந்தக் கூட்டத் தில் என்னுடைய உரையை இவ்வாறு தொடங்கினேன்.




கலைஞர் கலந்து கொண்ட பாட்னா மாநாட்டில் மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதி.

"எனது உரையைத் துவங்கும் முன் நான் என்னை அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். என் பெயர் கருணாநிதி! நான் ஒரு தேச விரோதி! நான் வெளிநாடு களுக்குத் தகவல்களைத் தந்தேன். எனவே இந்த நாட்டில் நான் ஒரு அபாயகரமான பேர் வழி! இந்தப் பட்டங்களை யெல்லாம் லோக மான்ய பால கங்காதர திலகர், மற்றும் பல தியாகிகளுடன் பல ஆண்டுகளை அந்தமான் சிறையில் கழித்த விடுதலைப் போராட்ட வீரர்கள், மிகச் சிறந்த தேச பக்தர்கள் எனக்குச் சூட்டியவை என்று நினைக்கிறீர்களா? அவர்கள் யார் என்று உங்களுக்கே தெரியும்! அவர்கள் என்னை தேச விரோதி என்று அழைக்கிறார்கள். பொது மக்கள் பிரச்சினைக்காக- மொழிப் பிரச்சினைக்காக - இருபதுக்கு மேற்பட்ட முறை நான் சிறைத் தண்டனையை அனுபவித்திருக்கிறேன். ஆனால் திரைப்படங்களிலும், வீடியோ படங்களிலும் மட்டுமே சிறைச்சாலையைப் பார்த்தவர்கள் என்னை தேச விரோதி என்கிறார்கள். இதில் பரிதாபம், சந்திரசேகரும் இதற்குத் தலையாட்டியதுதான்."

இப்படித் தொடங்கிய என் பேச்சு நீண்டது! நான் பேசிய போது அந்த மக்கள் வெள்ளம் கையொலி செய்து வரவேற்று அன்பைப் பொழிந்தது. நான் பேச்சை முடித்துக் கொண்டு அமர்ந்ததும் மேடையிலே இருந்த தலைவர்கள் எல்லாம் என்னை நெருங்கி கைகளைக் குலுக்கி வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொண்டார்கள். வி.பி.சிங் என் கைகளைப் பிடித்துக் கொண்டு "இதற்காகத்தான் உங்களை நான் அடிக்கடி வடபுலத்திற்கு அழைக்கிறேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் உங்கள்மீது எவ்வளவு மதிப்பும் மரியாதையும் அன்பும் வைத்திருக்கிறார்கள் பார்த்தீர்கள் அல்லவா?" என்று மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார். ஜெயப் பிரகாஷ் நாராயண் முழுப்புரட்சிக்கு அறைகூவல் விடுத்துப் பேசியது அந்த மைதானத்தில்தான் என்றும், அதற்குப் பிறகு இவ்வளவு பெரிய கூட்டம் அப்போதுதான் கூடியதாகவும் லல்லு பிரசாத் குறிப்பிட்டார்.

அதற்கடுத்தநாள் பாட்னாவிலிருந்து வெளிவந்த அனைத்து ஏடுகளும் அந்தக் கூட்டத்தில் தலைசிறந்த உரை தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியின் உரைதான் என்று கட்டம் கட்டி வெளியிட்டிருந்தன. 19-3-1991 தேதிய டைம்ஸ் ஆப் இந்தியா - STEALING SHOW : The man to steal the show today was the ousted DMK Chief Minister of Tamil Nadu, Mr. M. Karunanidhi, who despite communicating with an interpreter, held the attention of the audience and received a standing ovation at the end of his speech - என்று தனது செய்தியைத் தொடங்கி என்னுடைய முழுப் பேச்சையும் வெளியிட்டிருந்தது. அதே நாளிட்ட இந்து இதழ், ஆங்கிலத்தில் பேசினாலும்கூட அந்தக் கூட்டத் தைக் கவர்ந்து கொள்ளை கொண்டுவிட்டவர் கருணாநிதி தான் என்றும், இந்தியன் எக்ஸ்பிரஸ், "அந்தப் பெருங் கூட்டத்தின் கதாநாயகனாக வி.பி.சிங் திகழ்ந்தார் என் றால், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியோ அந்தக் கூட் டத்தையே கவர்ந்து விட் டார். அந்தக் கூட்டத்தினர் மிகுந்த உற்சாகத்தோடு அவரது பேச்சை ஆவலுடன் கேட்டனர். அவர் பேசிய ஆங்கில மொழி அந்த மக்க ளுக்குத் தெரியாது என்றா



பாட்னாவில் நடைபெற்ற தேசிய முன்னணி பேரணியில் தலைவர்களுடன் கலைஞர்.

லும் திரு.ராஜ்மோகன் காந்தி அவர் பேச்சை இந்தியில் அற்புதமாக மொழி பெயர்த்தார்" என்றும் குறிப்பிட்டிருந்தன. அந்தப் பயணம் குறித்து முரசொலியில் "கங்கைக்கரையில் காவிரித் தென்றல்! வடபுலம் வியக்க; வந்தவர் மலைக்க, பாடலிபுத்திரம் வென்ற கலைஞர்" என்ற தலைப்பிலே ஒரு பயணக் கட்டுரையை வைகோ எழுதியிருந்தார்.

29 இளந்தலைவர் ராஜீவுக்கு இழைக்கப்பட்ட கொடுமை!

பாட்னா பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பியதும் பொதுத் தேர்தல் பணிகளில் முழு மூச்சாக ஈடுபட்டு வேட்பாளர் தேர்வுக்காகவும் தொகுதிப் பங்கீடு களுக்காகவும்; தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சியினர் நூற்றுக்கணக்கானவர்களை ஒவ்வொரு நாளும் அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தோம்.

30-3-91 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகத் தலைவர்களில் முக்கியமானவரும், என்னிடம் நட்புணர்வுடன் உரிமை எடுத்துக்கொண்டு பேசக்கூடியவரு மான நண்பர் பி. ராமமூர்த்தி அவர்களின் நினைவகத் திறப்பு விழாவிலே கலந்து கொண்டேன். மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் அந்த விழாவிலே கலந்துகொண்டு நினைவகத்தைத் திறந்து வைத்தார். விழாவில் நான் பேசும்போது, இளவயதிலேயே ராமமூர்த்தி எந்த அளவிற்கு சுயமரியாதைக்காரராக, நாத்திகராக இருந்தார் என்பதையும், இப்போதும் அதே கொள்கை உறுதியுடன் இருப்பதையும், தந்தை பெரியார் தலைமையிலே அவர் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டதையும் நினைவூட்டியதோடு அவர் வாழ்க்கைச் சரித்திரத்திலிருந்து தீரமும் தியாகமும் நிறைந்த பல பகுதிகளையும் குறிப்பிட்டுக் காட்டினேன்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு புறப்படுவதற்கு முன்பு மக்களவைத் தேர்தலோடு மேற்குவங்க சட்டப் பேரவைக்கும் தேர்தல் நடத்தலாம்

என்று அவரது அமைச்சரவையிலே முடிவு செய்து, மேலும் பத்து மாத காலத்திற்கு ஆட்சியிலே இருக்கலாம் என்ற நிலையிருந்த போதிலும் சட்டப் பேரவையைக் கலைக்கு மாறு ஆளுநர் எஸ். நூருல்ஹஸன் அவர்களுக்குப் பரிந்துரை செய்துவிட்டுத்தான் சென்னைக்கு வந்திருந்தார். இந்தப் பரிந் துரையை ஏற்று ஆளுநர் மேற்கு வங்க சட்டப்பேரவையைக் கலைத்தார். அரசியல் சாசன 174வது பிரிவின்கீழ், இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்கு வங்க அரசைப் போலவே கேரள மாநிலத்திலும் மேலும் சுமார் ஓராண்டு காலத்திற்கு ஆட்சியிலே நீடிக்க லாம் என்ற நிலையில் திரு. நாயனார் தலைமையில் இருந்த கேரள மாநில அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று மாநில ஆளுநர் சட்டப் பேரவையைக் கலைத்ததோடு, மக்களவைத் தேர்தலோடு சேர்ந்து சட்டப்பேரவை தேர்தலையும் நடத்துவதற்கு வழி வகுத்தார்.

அரியானாவில் என்ன நிலை தெரியுமா? நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்றாகிவிட்டது. தேவிலால் அவர்களின் மூத்த மகன் சௌதாலாவின் நெருங்கிய நண்பர் ஒருவர் தலைமையிலே இருந்தது அந்த மாநில அரசு. சௌதாலாவின் நண்பரான சந்திரசேகர் பிரதமர் பதவியிலிருந்து விலகியதும், திடீரென்று முதல்வரை விலகச் செய்துவிட்டு தானே மூன்றாவது முறையாக சௌதாலாவே முதலமைச்சராக ஆனார். சந்திரசேகர் பிரதமர் பொறுப்பிலே இருக்கும் போதே மாநிலச் சட்டப் பேரவையின் தேர்தலை நடத்தி னால்தான் நன்மையாக இருக்குமென்று சட்டப்பேரவை யைக் கலைத்து விட்டு புதிய தேர்தல் நடத்த ஆளுநருக்குப் பரிந்துரை செய்தார். ஆனால் இவருடன் மனக் கசப்பு கொண்டு சில அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர் களும் விலகிய காரணத்தால் சௌதாலாவின் அமைச்சரவை பெரும்பான்மை பலத்தை இழந்தது. சட்ட மன்றத்தைக் கலைக்க சௌதாலா செய்த பரிந்துரையைப் பற்றி முடிவு செய்வதற்கு முன்பு ஏப்ரல் 3ஆம் தேதிக்குள் சட்டமன்றத் தைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்குமாறு சௌதாலா

விற்கு ஆளுநர் தனிக்லால் மண்டல் ஆணையிட்டார். ஆனால் சௌதாலா, சட்டமன்றத்தைக் கலைக்க தான் பரிந்துரை செய்தபிறகு சட்டப் பேரவையிலே பலப் பரீட்சை நடத்தத் தேவையில்லை என்றார். ஆனால் மாநில ஆளுநர், அரியானாவில் சட்டமன்றத்தைக் கலைக்கவும், சௌதாலா அரசை நீக்கிவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியைத் தொடர்ந்திடவும் பரிந்துரை செய்தார். அந்தப் பரிந்துரையை குடியரசுத் தலைவரும் ஏற்றுக் கொண்டார்.

அரியானாவில் இது நிலை என்றால் குஜராத் நிலை மேலும் விசித்திரம்! 1990ஆம் ஆண்டு இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பு அலை நாடெங்கும் வீசியபோது, வி.பி.சிங் அவர்களுடன் சேர்ந்து குஜராத்தில் வெற்றி பெற்று, பாரதீய ஜனதா கட்சியுடன் அங்கே கூட்டணி ஆட்சி அமைத்தவர் சிமன்பாய் படேல். வி.பி.சிங் அவர்களின் ஆட்சி கவிழ்ந்ததும், சிமன்பாய் படேல் அவரைக் கைவிட்டுவிட்டு, சந்திர சேகரின் ஜனதா தள (சோஷலிஸ்ட்) கட்சியோடு சேர்ந்து கொண்டார். இதற்கிடையில் பா.ஜ.க. கட்சியோடு இவருக்கு உறவு முறிந்தது. கூட்டணியிலிருந்து அந்தக் கட்சி விலகி விட்டது. உடனே பா.ஜ.க. உறுப்பினர்கள் இருவருக்குப் பணத்தாசை காட்டி சட்டமன்றத்திலிருந்து விலக வைத்து, அந்தக் கட்சியின் பலத்தை பேரவையிலே குறைத்தார். இந்திரா காங்கிரஸ் தயவுடன்தான் பதவியில் நீடிக்க முடியு மென்ற நிலைமை ஏற்பட்டவுடன் அந்தக் கட்சியுடன் உறவு கொள்ள முடிவு செய்து, சந்திரசேகரைக் கைவிட்டுவிட்டு, ராஜீவ் காந்தியுடன் சேர்ந்து கொள்வதற்காக மாநில தனிக்கட்சி ஒன்றை ஜனதா தளம் (குஜராத்) என்ற பெயரில் தொடங்குவதற்கு முடிவு செய்தார். அமைப்பு ரீதியற்ற கொள்கை உறுதியில்லாத தனிப்பட்ட ஆசா பாசங்களி னால் உருவாகும் கட்சிகளின் நிலைக்கு இது மற்றொரு உதாரணம்!

இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமான உத்தரப்பிர தேசத்திலும் ஆட்சி ஆட்டம் கண்டது. மத்தியில் வி.பி. சிங் தலைமையிலான ஆட்சி இடையில் முடிவுற்று சந்திரசேகர்

பிரதமராக ஆனபிறகு, உ.பி.யின் முதல்வராக இருந்த முலாயம் சிங் யாதவ் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவோடு ஆட்சியிலே தொடர்ந்து நீடித்து வந்தார். ஆனால் ஏப்ரல் திங்கள் முதல் வாரத்தில், மாநில அரசின் சில முடிவுகளை இ. காங்கிரஸ் ஆதரிக்க மறுத்ததோடு அரசுக்கு அளித்து வந்த ஆதரவையும் விலக்கிக் கொள்வதாக அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளியான சிறிது நேரத்தில் அந்த மாநில ஆளுநர் சட்டப் பேரவையைக் கலைத்து விட்ட தாகவும், இடைக்கால முதல்வராக நீடிக்கும்படி முலாயம்சிங் யாதவைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும், மக்களவைத் தேர்தலோடு சட்டப் பேரவைக்கான தேர்தலையும் இணைத்து நடத்திட தலைமைத் தேர்தல் கமிஷனரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன.

அந்த மாநிலத்தில் இந்த நேரத்தில் நடைபெற்ற ஒரு கொடூரமான சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அந்த மாநிலத்தில் மதுரா மாவட்டத்தில் மெஹ்ரானா கிராமத்தில் மார்ச் இறுதி வாரத்தில் இரண்டு இளைஞர் களையும் ஒரு பெண்ணையும் பொதுமக்கள் முன்னிலையில்



பி.இராமமூர்த்தி நினைவகத்தை ஜோதிபாசு திறந்து வைக்கிறார். அருகில் தலைவர் கலைஞர், நடிகர் திலகம் மற்றும் தலைவர்கள்.

சித்திரவதை செய்து தூக்கிலிட்ட கொடுமைதான் அது. ஜாட் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண், அவருடைய இனத்தை விட தாழ்ந்த குலமாகக் கருதப்படும் யாதவ் குலத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனைக் காதலித்ததற்காக அந்த இருவருக்கும், அதற்கு உதவியாக இருந்த நண்பனுக்கும்தான் இந்த மரண தண்டனையை ஊர்ப் பஞ்சாயத்து நிறைவேற்றியது. அது மாத்திரமல்ல, இந்த மூவரின் குடும்பத்தினரே இந்தத் தண்டனையை நிறைவேற்ற உடந்தையாக இருந்து இந்த மாபாதகச் செயலை நிறைவேற்றினார்கள். இது தொடர்பாக அந்த ஊரைச் சேர்ந்த 34 பேர் மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்தார்கள்.


சோவியத் ஒன்றியத்திலிருந்து ஜார்ஜியா பிரிந்து செல்ல லாமா, சுதந்திரமான நாடாக ஜார்ஜியா இயங்கலாமா என் பதற்கான வாக்கெடுப்பு 91ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் நடைபெற்றது. இதில் 95 சதவிகித மக்கள் சுதந்திரத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். அதை அடுத்து சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் (மாநிலங்களில்) ஒன்றான ஜார்ஜியாவின் நாடாளுமன்றம் 9-4-91 அன்று கூடி சுதந்திரப் பிரகடனம் செய்தது. லாத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகியவற்றைத் தொடர்ந்து சுதந்திரப் பிரகட னம் செய்த நான்காவது குடியரசு ஜார்ஜியாவாகும்.

ஏப்ரல் திங்களில் என்னைப் பெரும் சோகத்தில் ஆழ்த்திய நிகழ்ச்சிகளில் ஒன்றாக, தென்மாவட்டங்களில் கழகம் வலிவுடன் வளர பெரிதும் காரணமானவரும், கழகத்தின் மூத்த தளபதிகளில் ஒருவராக இருந்து அந்த மாவட்டங் களில் கழகத்தை வழி நடத்திச்சென்ற ஆற்றலாளரும், என்னுடைய தூண்டுதலால் அரசியலில் நுழைந்து அண்ணா அவர்களால் அரவணைக்கப் பட்டு சிறுகதை மன்னன், சின்ன மருது, தி.மு. கழகத்தின் சிறைப்பறவை என்றெல்லாம் அழைக்கப்பட்டு வந்தவரும், கழகத்தின் அமைப்புச் செயலாளருமான அருமை நண்பர் எஸ்.எஸ். தென்னரசு 13-4-91 அன்று மதியம் 2 மணி அளவில் இயற்கை எய்தினார். அன்று முதல்நாள் காலையில்தான் தனியார் மருத்துவமனை

யிலே சிகிச்சை பெற்று வந்த அவரை நேரில் சென்று பார்த்து வந்தேன். சிகிச்சைக்குப் பிறகு தேறி வருவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் 12 மணி அளவில் உடல்நிலை மோசமடைந் திருக்கிறது என்று தொலைபேசி வந்ததும், அறிவாலயத் திலிருந்து அவசர அவசரமாக மருத்துவமனைக்கு விரைந் தேன். என் வருகைக்காகத்தான் காத்திருந்தவரைப்போல, மருத்துவர்கள் எவ்வளவோ முயற்சித்தும் பலன் அளிக்காமல் மறைந்து விட்டார். வரலாற்றுப் புதினங்களைப் படைப் பதிலே வல்லவர். குறிப்பாக மயிலாடும்பாறை, தங்கச்சி மடம், செம்மாதுளை, சுமங்கலியின் சுயசரிதம், ஆனந்த பைரவி, சந்தனத் தேவன், நகமும் சதையும், பெண்ணில்லாத ஊரிலே ஆகிய நூல்கள் எல்லாம் இவர் படைத்தவை. "சேது நாட்டுச் செல்லக்கிளி" என்ற பெயரில் ஒரு சரித்திர நவீனத்தை ஆனந்த விகடன் வார இதழில் தொடர்கதையாக எழுதி வந்தார். அந்தத் தொடர் அந்த வாரம்தான் முடிவுற்றது. அவருக்கு "எங்கள் சேது நாட்டு செல்லக்கிளி எங்கே" என்ற தலைப்பில் நான் எழுதிய இரங்கல் செய்தியில் சில துளிகள்!

"கோட்டியூர் தந்த கொள்கைக் கோமேதகம் - முகவை மாவட்டக் கழகத்தின் முடிசூடா மன்னன்- தென் மாவட்டங் களில் சின்ன மருதுவாகத் திகழ்ந்த கழகச் சிங்கம் - தென்னரசு மறைந்து விட்டார். நோய்நொடியில் வீழ்ந்து கிடந்து அல்ல! நொடியில் உயிர் பறிக்கும் மாரடைப்பு அவரை நம்மிட மிருந்து பிரித்து விட்டது. சிங்காரச் சிற்றூர் திருக்கோட்டி யூரில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சிந்தாமணி என்ற இயற்பெயருடன் என்னிடம் கவிஞர் கண்ணதாசனால் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த இளைஞன் தென்னரசாகப் பெயர் பூண்டு, தி.மு.கழகமெனும் மரகத மண்டபத்தின் மணித்தூணாக விளங்கினார். முரசொலிக் குடும்பத்துக்கும் அவர் உறுப்பினர். முரசொலிக்கின்ற திராவிட இயக்கத்துக்கும் அவர் தளபதி."

ஒவ்வொரு நாளும் நான் என் வீட்டிலிருந்து கீழே இறங்கு கின்ற இடத்தில் தென்னரசு முன்னின்று நடத்திய ராமனாத புரம் மாவட்ட தி.மு.க. ஐந்தாவது மாநாட்டிலே எடுக்கப்



எஸ். எஸ். தென்னரசு

பட்ட புகைப்படத்தில் அவர் என் னோடு இருக்கும் காட்சியைப் பார்த் துக் கொண்டேதான் இன்றைக்கும் வெளியே வருகிறேன். எங்கள் வீட்டில் எத்தனையோ புகைப் படங்கள் இடம் மாறும்! ஆனால் தென்னரசின் படம் என்றைக்கும் அதே இடத்தில் இருக்கும்!

பத்தாவது மக்களவைக்கான தேர்தல்கள் மே மாதம் 20, 23, 26 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்றும், அந்தத் தேர் தலுடன் கேரளா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், மேற்கு·வங்கம், அரியானா ஆகிய ஐந்து மாநில சட்டப் பேரவை களுக்கும், புதுவை சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடைபெறும் என்றும் இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் 12-4-91 அன்று அறிவித்தார். தமிழ்நாட்டில் மே மாதம் 26ஆம் தேதியன்று வாக்குப் பதிவு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் தோழமைக் கட்சிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று; திராவிட முன்னேற்றக் கழகம் 29 நாடாளுமன்றத் தொகுதி களிலும், 171 சட்டப் பேரவை தொகுதிகளிலும்; தமிழ்நாடு ஜனதா தளம் கட்சி 5 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 15 சட்டப் பேரவை தொகுதிகளிலும்; மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி 3 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 22 சட்டப் பேரவை தொகுதிகளிலும்; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 2 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 10 சட்டப் பேரவை தொகுதிகளிலும்; திருநாவுக்கரசர் தலைமையிலான அ.தி. மு.க. 9 சட்டப் பேரவை தொகுதிகளிலும்; இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 4 சட்டப் பேரவை தொகுதிகளிலும்; அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி 1 சட்டமன்றத் தொகுதியி லும்; அ.தி.மு.க. (ஜானகி அணி) ஒரு சட்டப் பேரவை தொகுதியிலும்; ஷெட்யூல்டு இன விடுதலை இயக்கம் ஒரு



தலைவர் கலைஞர் அவர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்கிறார்.

தொகுதியிலும் என்று பகிர்ந்துகொண்டு போட்டியிடுவதென்று முடிவெடுக்கப்பட்டது.

17-4-1991 அன்று கழகம் போட்டியிடும் தொகுதிகளுக்கான முதல் பட்டியலை அண்ணா அறிவாலயத்தில் வெளியிட்டேன். அந்தப் பட்டியலில் துறைமுகம் தொகுதியில் நானும், சேப்பாக்கம் தொகுதியில் பொதுச்செயலாளர் பேராசிரியரும், திருவல்லிக்கேணி தொகுதியில் நாஞ்சிலாரும், புரசைவாக்கம் தொகுதியில் ஆற்காடு வீராசாமியும் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது. கழகம் போட்டியிட்ட மற்ற தொகுதிகளின் வேட்பாளர்கள் பட்டியல் தொடர்ந்து வெளியிடப்பட்டது. என்னுடைய தேர்தல் சுற்றுப் பயணம் 1-5-91 முதல் ஒரு நாள் கூட ஓய்வின்றி நடைபெற்றது.

24-4-91 அன்று என்னுடைய வேட்பு மனுவைத் தாக்கல் செய்தேன். அன்று மாலையில் கழகத்தின் தேர்தல் அறிக்கையையும் வெளியிட்டேன். அனைத்துக் கட்சிகளும் கடுமையாகத் தேர்தல் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டன. அனைத்து ஏடுகளும், கருத்துக் கணிப்புகளும், கழக அணி மாபெரும் வெற்றி பெறுமென்று செய்திகளையும் வெளியிட்டன. மேலும் நான் செல்லும் இடங்களில் எல்லாம் இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்து என்னை வரவேற்றனர். முதற்கட்ட வாக்குப் பதிவு மே 20ந்தேதியன்று வடமாநிலங்களில் நடைபெற்றது. உத்தரப் பிரதேசத்தில் பயங்கரவன்முறை ஏற்பட்டு 30 பேர் பலியானார்கள். பீகாரில் தேர்தல் அதிகாரியே சுட்டுக் கொல்லப்பட்டார். ஆந்திராவில் போலீஸ் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி அவர்கள் மே 21ந்தேதியன்று

இரவு திருப்பெரும்புதூர் பொதுக் கூட்டத்திற்காகக் காரிலே வந்து இறங்கி மேடையை நோக்கிச் சென்றபோது, மனித குண்டு ஒன்று அவரை நெருங்கி வெடித்தபோது ராஜீவ் காந்தி அவர்களும் வேறு சிலரும் அந்த இடத்திலேயே பலியானார்கள். விபத்து நடந்த மேடைக்கு அருகே இருந்த மூப்பனாரும், ஜெயந்தி நடராசனும் ஓடிவந்து தலைவர் எங்கே, தலைவர் எங்கே என்று தேடியபோதுதான் ஒரு உடலில் இருந்த கால் ஷூவை மூப்பனார் அடையாளம் கண்டு அந்த உடலின் முகத்தைத் திருப்பி அதுதான் ராஜீவ் காந்தி என்று தெரிந்து கொண்டு கதற ஆரம்பித்தார். அந்த இடத்தை நோக்கி வந்த செய்தியாளர்களும் அருகே வந்து அதுதான் ராஜீவ் காந்தி என்பதை உறுதி செய்தனர்.

நினைத்துப் பார்க்கக்கூட முடியாத கொடுமை நிகழ்ந்து விட்டது. தாய்நாட்டிற்காக அனைத்தையும் தியாகம் செய்து, நான்கு தலைமுறைகளாக சீரிய தொண்டாற்றி வந்த ஒரு பெருங் குடும்பத்தின் வழித்தோன்றல்; வெறியர்களின் மனித வெடி குண்டுக்கு இரையானார். 1948இல் அண்ணல் உத்தமர் காந்தியும், 1984இல் அன்னை இந்திரா காந்தியும் படுகொலை செய்யப்பட்டபோது அனுபவித்த வேதனையை நாடு மீண்டும் அனுபவித்தது. இந்தக் கொடிய சம்பவத்தில் ராஜீவ் காந்தியைத் தவிர 9 காவல்துறை அதிகாரிகளும், பொது மக்கள் ஏழு பேரும், மனித குண்டாக வந்த தாணுவும் சேர்ந்து 17 பேர் பலியானார்கள்.

நான் விடுத்த இரங்கல் செய்தியில், "ஒரு நீண்ட எதிர் காலத்திற்குரியவரும், இந்திய அரசியலில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றிருந்தவருமான ராஜீவ் காந்திக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமையான முடிவு யாராலும் தாங்கிக் கொள்ள முடியாததாகும். ஒரு ஜனநாயக நாட்டில் இத்தகைய வன்முறை நடவடிக்கைகள் அந்த நாட்டிற்கே இழிவு சேர்ப்பதாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும் காங்கிரஸ் இயக்கத்தின் நண்பர்களுக்கும் தி.மு.கழகச் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்திருந்தேன். உலக முழுதுமுள்ள தலைவர்கள்,

பல நாட்டு அதிபர்கள் அனுதாபச் செய்திகளை வானொலி யும், தொலைக்காட்சிகளும் அறிவித்தவண்ணம் இருந்தன.

இடி விழுந்தாற்போல அதிர்ச்சியூட்டும் இச்செய்தி உடனடியாக டெல்லிக்கு அவரது குடும்பத்திற்குத் தெரிவிக்கப் பட்டு 22ந்தேதி காலையில் திருமதி சோனியாகாந்தியும், அவரது குடும்பத்தினரும் சென்னை வந்து சேர்ந்தனர்.

அந்தத் தேர்தலில் ராஜீவ் காந்தி; தி.மு. கழக அணியின் எதிர் அணியில் போட்டியிட்ட காரணத்தினால், ராஜீவ் காந்தியின் மறைவினால் வேதனைக்காளான அந்தக் கட்சித் தொண்டர்களைத் தூண்டிவிட்டு அ.தி.மு.க.வினரும், சமூக விரோதிகளும் அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழகத்தினர் வீடுகளிலும், அலுவலகங்களிலும் புகுந்து கொள்ளை அடித்தனர். பல இடங்களுக்குத் தீ வைத்தனர். கழகத்தினருக்குச் சொந்தமான கார்கள், இரு சக்கர வண்டிகள் எல்லாம் கொளுத்தப்பட்டன. வீடுகளுக்குள் புகுந்து அங்கேயிருந்தவர்களைத் தாக்கி கொள்ளை அடிக்கப்பட்டது. முரசொலி அலுவலகத்தில் பெரும் பாலான பகுதிகள் கொளுத்தப்பட்டன. நீண்ட காலத்து முரசொலி கோப்புகள் எல்லாம் தீயில் கருகிச் சாம்பலாயின. அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்கள் கொளுத்தப்பட்டன. அப்போது முரசொலி அலுவலகத் தைக் கவனித்துக் கொண்டிருந்த கலாநிதி மாறன் செய்தி யைக் கேள்விப்பட்டு என்னுடைய உதவியாளரின் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு முரசொலி அலுவலகத்திற்குச் சென்றபோது அவரால் உள்ளேயே நுழைய முடியவில்லை என்பதோடு, அவர் சென்ற ஸ்கூட்டர் அவர் கண் முன்னா லேயே கொளுத்தப்பட்டது. முரசொலி இதழைத் தொடர்ந்து அச்சிட்டு வழங்க முடியாத அளவிற்கு அங்குள்ள இயந்திரங்கள் நாசமாக்கப்பட்டன. மாவட்டங்களி லிருந்து கழக முன்னணியினர் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு தங்கள் உடைமைகளுக்கு நாசம் விளை விப்பதாகத் தொடர்ந்து முறையிட்டார்கள். மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடான தீக்கதிர் அலுவலகத்

திற்கும் பெருத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஏட்டின் மேலாளரான ஆர். ராமராஜ் கத்தியால் குத்தப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆந்திராவில் என்.டி. ராமராவ் அவர்களுக்குச் சொந்தமான திரையரங்கம் முழுவதுமாகத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் இறந்தனர்.

அறந்தாங்கி அருகில் ஐவுளி ஆலை ஒன்றின் விருந்தினர் விடுதியில் திருநாவுக்கரசு தங்கியிருந்தபோது கும்பல் ஒன்று அங்கே நுழைந்து கிடங்குக்குத் தீ வைத்தது. ஜெயலலிதா போட்டியிட்ட இரு தொகுதிகளில் ஒன்றான காங்கேயம் தொகுதியில் தி.மு.கழகத் தொண்டர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். மாநில முழுதும் பல பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டதோடு இரண்டு கழகத் தொண்டர்கள் கொலை செய்யப்பட்டார்கள். டெல்லியில் பஸ்வான் வீட்டிற்குத் தீ வைக்கப் பட்டது.

பத்திரிகைகள் எல்லாம் நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையில் தேர்தலைத் தொடர்ந்து நடத்துவது என்பது முடியாத காரியம் என்றும், அடுத்த கட்ட வாக்குப் பதிவு களைச் சில வாரங்களுக்கு ஒத்திவைத்து நடத்துவதுதான் சரியாக இருக்கும் என்றும் கருத்து தெரிவித்தன. அந்தக் கருத்தினை ஏற்று தேர்தல் ஆணையர் சேஷன் அவர்கள் இரண்டாவது, மூன்றாவது கட்ட வாக்குப் பதிவினை ஜூன் 12, 15 ஆகிய நாட்களுக்கு ஒத்திவைத்து அறிவித்தார்.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டது பற்றி ஆராய உச்சநீதிமன்ற நீதிபதி ஜெ.எஸ். வர்மா தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை மத்திய அரசு நியமித்தது. இந்தப் படுகொலை பற்றி புலனாய்வு மேற்கொள்வதற்கான விசேஷக் குழு ஒன்றையும் அரசு நியமித்தது. மேலும் மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) மூலமும் விசாரணை நடத்த மத்திய அரசு உத்தரவு பிறப்பித்தது.

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா நகரிலிருந்து வெளி யாகும் இந்தியா வெஸ்ட் என்ற பத்திரிகையின் அலுவலகத்



கழக வேட்பாளர்களின் பட்டியலை கலைஞர் வெளியிடுகிறார். அருகில் பேராசிரியர், நாஞ்சிலார், முரசொலி மாறன் எம்.பி. மற்றும் பலர்.

திற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஒருவர்; தன்னை விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதி என்றும், ராஜீவ் படுகொலைக்கு விடுதலைப்புலிகள் அமைப் பினைச் சேர்ந்தவர்கள்தான் காரணம் என்றும் தெரிவித்த தாகச் செய்திகள் முதலில் வெளியாகின.

சிறப்புப் புலனாய்வுக் குழு மூலம் காவல்துறைத் தலைவர் திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற புலனாய்வில் 91 ஆம் ஆண்டு ஜூன் 11ந்தேதி முதல் குற்றவாளியாக எஸ். பாக்கியநாதன் மற்றும் அவரது தாயார் பத்மா ஆகியோரைக் கைது செய்தது. 41 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதில் சிவராசன் உள்ளிட்ட 12 பேர் இறந்துவிட்டனர். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட மூன்று பேர் கண்டு பிடிக்கப்படவில்லை. மீதி 26 பேர்மீது வழக்கு நடைபெற்றது. 605 நாட்கள் வழக்கு நடைபெற்றது. 288 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். குற்றஞ்சாட்டப் பட்ட 26 பேருக்கும் நீதிபதி நவநீதம் தூக்குத் தண்டனை விதித்து 28-1-1998 அன்று தீர்ப்பளித்தார். தண் டனை பெற்றோர், தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துகொண்டனர். 99 ஆம் ஆண்டு மே திங்களில் உச்சநீதிமன்றம் தூக்குத்தண்டனை விதிக்கப் பட்ட 26 பேரில் 19 பேரை விடுதலை செய்தும் 4 பேருக்கு அளிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை உறுதி செய்தும், 3 பேருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைத்தும், தீர்ப்பளித்தது. அந்த ஆண்டு ஜூன் திங்கள் 9 ஆம் தேதி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் குடியரசுத் தலைவருக்குக் கொடுத்த கருணை மனு காரணமாக அந்தத் தண்டனை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

30 இரண்டாவது முறையாகப் பதவி துறந்தேன்!

ராஜீவ் காந்தி 21-5-91 இரவு படுகொலைக்கு ஆளானார் என்றால்; அன்று காலையில்தான் சென்னை தலைமைச் செயலகத்தில் அரசு செயலாளர்களையும், தலைமைச் செயலாளர், மற்றும் ஆலோசகர்களையும் வைத்துக்கொண்டு, ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் செய்தியாளர்களிடம் பேசியபோது- "தமிழ்நாட்டில் கவர்னர் ஆட்சி ஏற்பட்ட பிறகு கடந்த மூன்று மாதங்களாக சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் சீர்பட்டிருக்கிறது. இலங்கைப் போராளிகளின் தீவிரவாத நடவடிக்கைகள் வெகுவாகத் தடுக்கப்பட்டு விட்டது" என்று கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமல்ல, தி.மு. கழகம் 1989-இல் ஆட்சிக்கு வந்த பிறகு 15-6-89 அன்று பிரதமர் ராஜீவ் காந்தி திருப்பதி யிலிருந்து பாட்னா செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் 15 நிமிடங்கள் தங்கிச் சென்றார். பிறகு 5-11-89 அன்று பாராளு மன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்காக கிருஷ்ண கிரி, கோவை, திருச்சி பொதுக்கூட்டங்களில் ராஜீவ் காந்தி கலந்து கொண்டு பேசினார். பிறகு 8-11-89 அன்று சென்னை கடற்கரையில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ராஜீவ்காந்தி கலந்து கொண்டார். அவர் பிரதமர் பொறுப் பிலிருந்து எதிர்க்கட்சித் தலைவராக ஆனபிறகும் இங்கே தி.மு.கழக ஆட்சி நடைபெற்ற 24-1-90 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் ராஜீவ் கலந்து கொண்டார். பிறகு 25-2-90 அன்று புதுவையில் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் செல்லும் வழியில் ராஜீவ்

காந்தி சென்னை நகருக்கு வந்து சென்றார். 7-6-90 அன்று காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் பிறந்த நாள் நிகழ்ச்சியில் ராஜீவ் காந்தி கலந்து கொண்டார். 7-10-90 அன்று சென்னைக்கு வந்த ராஜீவ் காந்திக்கு விமான நிலையத்திற்கு அருகில் பாட்டாளி மக்கள் கட்சியினர் கறுப்புக்கொடி காட்ட முயற்சித்தனர். அசம்பாவிதம் எதுவும் ஏற்படவில்லை. 22-9-90 அன்று சென்னையில் தி.மு. கழக அரசு முன்நின்று நடத்திய தேசிய ஒருமைப்பாடு குழுக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி கலந்து கொண்டார். இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தபோது ராஜீவ் காந்தி, பிரதமராக இருந்தபோதும்; எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும்; பத்திரமாக வரவேற்று, அக்கறையுடன் பாதுகாத்து, டெல்லிக்கு அனுப்பி வைத்தோம். ஆனால் ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கின் மேற்பார்வையில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சியில்தான் ராஜீவ் காந்தி படுகொலை நிகழ்ந்து விட்டது.

அவரது மறைவுக்குப்பின் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக திருமதி சோனியா காந்தி அவர்களையே நியமிக்க வேண்டுமென்று பலரும் கோரிக்கை விடுத்தபோதும் அவர் அந்தப் பதவியை ஏற்க முன்வரவில்லை. பின்னர் அந்தக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் 29-5-91 அன்று கூடி பி.வி. நரசிம்மராவ் அவர்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது.

ராஜீவ் காந்திக்கு இரங்கல் தெரிவிக்கவும், அவரது மறைவையொட்டி தமிழ்நாட்டில் நடைபெற்ற வன்முறை நிகழ்ச்சிகளுக்குக் கண்டனம் தெரிவிக்கவும் 25-5-91 அன்று தேசிய முன்னணி, இடதுசாரி மற்றும் தோழமைக் கட்சிகள் இணைந்து மாபெரும் அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தின. வன்முறைச் சம்பவங்கள் மீது விசாரணைக் கமிஷன் ஒன்றினை அமைக்க வேண்டுமென்று தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கை முரசொலி மாறன், எம்.பி. நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார். 5ஆம் தேதியன்று அண்ணா அறிவாலயத்தில் கூடிய அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ராஜீவ் காந்திக்கு சரியான பாதுகாப்பு அளிக்கத் தவறி,


காவல்துறை கடமை செய்யத் தவற விட்டு - சட்டம்- ஒழுங்கு காத்திடும் இயந்திரத்தை இயங்காமல் செய்து தமிழ்நாட்டில் காட்டாட்சி நடைபெற அனுமதி அளித்த தமிழக ஆளுநர் மற்றும் அவரது ஆலோசகர்களே முழுப் பொறுப்பு, அவர்கள் பதவியில் நீடித்தால் தேர்தல் ஒழுங்காக நடைபெறாது, எனவே நடைபெற்ற கலவரங்களுக்கு ஆளுநரே பொறுப்பு ஏற்று பதவி விலகிட வேண்டுமென்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. மேலும் 29-5-91 அன்று சென்னையில் துறைமுகம் தொகுதியில் என்னுடைய தலைமையில் கழகத் தோழர்கள் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர். தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத் தோழர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். அதைப்போலவே ஆந்திராவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து என்.டி. ராமராவ் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதம் நடைபெற்றது. ராஜீவ் காந்தியின் திடீர் மறைவு காரணமாக எனக்கு அந்த ஆண்டு பிறந்த நாள் விழா தேவையில்லை என்றும், யாரும் நேரில் வர வேண்டா மென்றும் அறிக்கை விடுத்தேன். தொடர்ந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன்.

ஜூன் 15-ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் வாக்குப் பதிவு நடைபெற்றது. ராஜீவ் காந்தி படுகொலை காரணமாக ஏற்பட்ட அனுதாப அலையிலே அ.தி.மு.க.- இ-காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. கழக வேட்பாளர்கள் நின்ற தொகுதிகளிலேயே துறைமுகம் தொகுதியில் நின்ற நான் ஒருவன் மட்டுமே சட்டப்பேரவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டேன். புதுவையிலும் இ-காங்கிரஸ் கூட்டணி பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது.

தி.மு.க. பெருந்தோல்வி அடைந்ததையொட்டி கழக உடன் பிறப்புகள் மூன்று பேர் தங்கள் உயிரை மாய்த்துக் கொண் டனர். சென்னையைச் சேர்ந்த செல்வராஜ் என்ற உடன் பிறப்பு தனது நாட்குறிப்பில் "எனது தலைவனின் பொது வாழ்வுக்கு இந்தத் தேர்தல் முடிவு சாவுமணி அடித்து விட்டது. இதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இது கோழைத்தனமான முடிவுதான் என்றாலும் என் நிலையில் உள்ள எவரும் இதைத்தான் செய்வார்கள்" என்று எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். உடனடியாக நான் அதுபற்றி விடுத்த அறிக்கையில், சாவு ஒன்றுதான் என் பொதுவாழ்வுக்கு முடிவு கட்ட முடியுமே தவிர, அதுவரையில் எந்தவொரு முடிவும் என் பொது வாழ்வுப் பணியை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்பதை என் உடன்பிறப்புகள் உணர்ந்துகொண்டு இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்குத் தேவையான நல்லுயிரை மாய்த்துக் கொள்ளாமல் கடமையாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் 511 இடங்களுக்கு, இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 224 உறுப்பினர்களும், அதன் தோழமைக் கட்சிகளுக்கு 16 உறுப்பினர்களும் உள்ள நிலையில் அறுதிப்பெரும்பான்மை பெற மேலும் 16 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில் தனிப் பெரும் கட்சியான இந்திரா காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்கு பாரதீய ஜனதா கட்சியோ, தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் கூட்டணியோ எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் ஜூன் 20-ஆம் தேதி நாடாளுமன்ற இ.காங்கிரஸ் கட்சித் தலைவராக பி.வி. நரசிம்மராவ் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் குடியரசுத் தலைவரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். மக்களவையில் பெரும்பான்மையை நான்கு வாரத்திற்குள் நிரூபிக்குமாறு குடியரசுத் தலைவர் தெரிவித்தார். இந்தப் பதவிக்குப் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட மகாராஷ்டிர முதல்வர் சரத்பவார் போட்டியிலிருந்து விலகிக் கொண்டதோடு, நரசிம்மராவ் அவர்களை அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்குமாறு தானே



வன்முறை நிகழ்ச்சிகளைக் கண்டித்து நடந்த அமைதி ஊர்வலத்தில் தலைவர் கலைஞரும் லட்சக்கணக்கான மக்களும்.

ஒரு வேண்டுகோள் அறிக்கையையும் விடுத்தார். தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நரசிம்மராவ் சோனியா காந்தி யைச் சந்தித்தார்.

அதற்கடுத்த நாள் 21-ந்தேதியன்று நரசிம்மராவ் தலைமை யில் காங்கிரஸ் அமைச்சரவை மத்தியில் பதவியேற்றது. 57 அமைச்சர்களின் பெயர்ப் பட்டியல் அறிவிக்கப்பட்ட போதிலும் 53 பேர் மட்டுமே அன்று பதவியேற்றனர். தமிழகத்தைச் சேர்ந்த நான்கு பேரும், புதுவையைச் சேர்ந்த ஒருவரும் இணை அமைச்சர்களாக இடம் பெற்றனர். சில நாட்களுக்குப் பிறகு சரத்பவார் மத்திய அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றார். தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை 24-ந் தேதி யன்று பதவியேற்றது. துறைமுகம் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நான் விலகிக் கொள்வதாக அறிவித்துவிட்டேன். அப்போது நான் விடுத்த அறிக்கை வருமாறு :-

"நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காக தி.மு. கழகத்தின் ஆட்சி 1976-ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட பிறகு 1989 வரையில் தி.மு.கழகம் எதிர்க்கட்சி நிலையிலிருந்து பல்வேறு அடக்குமுறைகள், சோதனைகள், வேதனைகள், மிசாக் காலக் கொடுமைகள் அனைத்தையும் சந்தித்து 1989ல் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றது. கழக ஆட்சியின் இரண்டாண்டு காலத்தில் தேர்தல் வாக் குறுதிகளை எண்பது சதவிகிதத்திற்கு மேலாக நிறைவேற்றி யுள்ளது. மகளிர் நல சிறப்புத் திட்டங்கள், தொழிலாளர் நல்வாழ்வு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் முன்னேற்றத்திற்காக வகுக்கப்பெற்ற கொள்கைகள், ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள், விவசாயிகள் கைவினைஞர்கள் கடன் ரத்து, விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கான இலவச மின்சாரம், அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கை நிறைவேற்றம், கல்வித் துறையில் எல்லாப் பிரிவு மாணவ மாணவிகட்கும் ஊக்கமூட்டும் சலுகைகள், தொழில்துறையில் கணிசமான

வளர்ச்சி, சமூகநலத் திட்டங்களே அன்னியில் பல்வேறு தொலைநோக்கு வளர்ச்சித் திட்டங்கள் என ஒரு சாதனைச் சரித்திரத்தையே படைத்த காலமாக அந்த இரண்டு ஆண்டுக் கால ஆட்சி விளங்கியபோதுதான்; வீண் பழியொன்றைச் சுமத்தி கழக ஆட்சியைக் கலைத்தனர். அந்தச் செயல் நியாயமா? எனக் கேட்டு தி.மு. கழகமும் அதன் கூட்டணிக் கட்சிகளும் தேர்தலைச் சந்திக்க முன் வந்தபோது மக்களின் அமோகமான ஆதரவு கழக அணியின் பக்கம் பெருவாரி யாகத் திரண்ட நேரத்தில்தான் ராஜீவ் காந்தி அவர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்ட இடிபோன்ற செய்தி அனைவரையும் அதிர்ச்சியுறச் செய்தது. ராஜீவ் காந்தி அவர்கள் கொடுமையாகக் கொல்லப்பட்டதைக் கண்டித்தது மட்டுமல்ல; அவரது எதிர்பாராத மறைவுக்காக வேதனையும் தெரிவித்துக் கொண்டதில் தி.மு.க. அணியினர் தமது இதயமார்ந்த உணர்வினை வெளிப்படுத்தினர் என்ற போதிலும், அவரது படுகொலைக்குத் துயரமடைவதைக் காட்டிலும் - அதனைக் காட்டி நமது அணியின்மீது வீண் பழி சுமத்தி பொய்ப் பிரச்சாரம் செய்ததில் மாற்றார் வெற்றி பெற்றுவிட்டனர். அதற்கு மக்களும் பலியாகிவிட்டனர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தி.மு. கழகம் என்ற அரசியல் சமுதாய இயக்கம் தமிழ்மொழி காத்திடவும், இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்திடவும், மாநில உரிமைகளை நிலைநாட்டி இந்திய ஒருமைப்பாட்டைக் காத்திடவும்; சகல தரப்பு மக்களின் பாதுகாப்புக்கு அரணாக விளங்கியும்; ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாட்டு மக்களின் அமைதியான வாழ்வில் அக்கறை கொண்டு விழி மூடாமல் காவல் புரியும் சிப்பாயாகவே தனது பணி யினை ஆற்றி வந்திருக்கிறது.

ஆனால் இந்தக் கழகத்தின் இதய சுத்தியை உணர்ந்து பார்த்திட இயலாமல் அனுதாப அலையின் வீச்சில் தமிழ்நாட்டு மக்கள் தங்களின் தீர்ப்பை வழங்கிவிட்டனர். அனுதாபம் அலையாக மட்டுமின்றி புயலாகவே வீசிவிட்ட காரணத்தால் மக்களின் தீர்ப்பு இவ்வண்ணம் அமைந்து விட்டது. எனினும், என் தலைமையில் உள்ள கழகத்திற்குப்

பெருந்தோல்வியைக் கொடுத்திருக்கும்போது, எனக்கு மட்டும் ஒரே ஒரு இடத்தில் வெற்றியைக் கொடுத்திருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

எனது இளம் பருவம் முதல் நான் இரண்டறக்கலந்து பாடுபட்ட திராவிட இயக்கத்தின் வளர்ச்சியிலும்- தாழ்ச்சியிலும் என்னைப் பிரித்துக் காண இயல்வதில்லை. நெருக்கடி நிலையில் - எனது உடன்பிறப்புக்கள் - பல நூறு பேர் சிறையில் அடைக்கப்பட்டு, சொல்லொணாக் கொடுமைக்கு ஆளான போது, நானே- அச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த உணர்வுடன்தான் வெளியில் உலவினேன் - செயற்பட்டேன். எனவே என்னையும் கழகத்தையும் நான் பிரித்துப் பார்த்துக் கொண்டதே இல்லை. அனுதாபப் புயலாலும், வீண் பழியினாலும்தான் உண்மையான பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு என் கழகத்திற்குப் பெரும் தோல்வி ஏற்பட்டிருந்தாலும்கூட அதையும் எனக்கு ஏற்பட்ட தோல்வியாகவே எண்ணி என் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன். பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்றும்போல் என் பொது வாழ்வுப் பயணம் தொடரும். கழக உடன்பிறப்புக்களுடன்- ஊனும் உயிருமாகப் பழகிச் செயற்படும் நான் அவர்களது உணர்வும் எனது உணர்வாகவே இருப்பதை உணர்ந்தே இந்த முடிவினை



தலைவர் கலைஞர் உண்ணாவிரதம் இருக்கிறார். உடன் தலைவர்கள்.


மேற்கொள்கிறேன்" என்று அறிக்கையிலே தெரிவித்தேன். ஈழத் தமிழர்க்காக ஒரு முறை; அடுத்து; இந்த அறிக்கையைத் தொடர்ந்து ஒரு முறை; ஆக இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தேன்.

நடந்து முடிந்த இந்தத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு ஏற்கனவே இருந்ததை விட நல்ல வெற்றி பரவலாகக் கிடைத்தது. மக்களவையில் இந்தக் கட்சிக்கு ஏற்கனவே இருந்த இடங்கள் 85 என்பது, 119 ஆக உயர்ந்தது. நாட்டிலேயே இ. காங்கிரசுக்கு அடுத்ததாக இரண்டாவது பெரிய தேசியக் கட்சியாகவும் மக்களவையில் பிரதான எதிர்க்கட்சியாகவும் பா.ஜ.க. உருவாகியது. ஒன்பதாவது மக்களவைக்கு 7 மாநிலங்களிலிருந்தும் 1 யூனியன் பிரதேசத்திலிருந்தும் பா.ஜ.க. உறுப்பினர்கள் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மாறாக இந்தமுறை 10 மாநிலங்களிலிருந்தும், 2 யூனியன் பிரதேசங்களிலிருந்தும் பா.ஜ.க. உறுப்பினர்கள் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் சட்டப் பேரவைத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்று முதல் முறையாக அந்த மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைத்ததும் அந்தக் கட்சியின் ஒரு சாதனையாகும். குஜராத்தில் 26 மக்களவைத் தொகுதிகளில் 20 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்று அந்த மாநிலத்தில் முக்கியமான கட்சி என்ற பெயரையும் பெற்றது.

மக்களவைத் தேர்தலோடு இணைந்து தமிழ்நாடு உட்பட ஆறு மாநில சட்டப் பேரவைகளுக்கும், ஒரு யூனியன் பிரதேசத்திற்கும் நடைபெற்ற தேர்தலில் மேற்குவங்க மாநிலம் தவிர ஏனைய மாநிலங்களில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, அஸ்ஸாம், கேரளம், அரியானா மற்றும் புதுவை யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் அதுவரை ஆளுங்கட்சிகளாக இருந்தவைகள் வெற்றி வாய்ப்பினை இழந்தன. விதிவிலக்காக மேற்குவங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைமையிலான இடதுசாரி முன்னணி தொடர்ந்து நான்காவது முறையாக ஆட்சியிலே நீடித்தது.

கேரளத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணி தோற்று, இந்திரா காங்கிரஸ் முதல்வராக கருணாகரன் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிப் பொறுப்பேற்றது. உத்தரப்பிரதேசத்தில் அயோத்திப் பிரச்சினையை முன்வைத்து பா.ஜ.க. அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று அந்த மாநிலத்தில் கல்யாண்சிங் தலைமையில் அரசு அமைத்தது. அஸ்ஸாம் மாநிலத்தில் ஆளுங்கட்சியாக இருந்த அஸ்ஸாம் கண பரிஷத் வெற்றி வாய்ப்பினை இழந்து இந்திரா காங்கிரஸ் ஹிதேஸ்வர் சைக்கியா தலைமையில் ஆட்சி அமைத்தது. அரியானா மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று பஜன்லால் தலைமையில் ஆட்சி அமைத்தது. புதுவையில் அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றாலும் அதிக இடங்களைப் பெற்ற இந்திரா காங்கிரஸ் வி. வைத்தியலிங்கம் தலைமையில் தனித்து ஆட்சி அமைத்தது.

தெற்கு ஐரோப்பாவில் ஏட்ரியாடிக் கடலை அடுத்த பால்கன் தீபகற்பத்தில் உள்ள ஒரு சிறிய நாடு யூகோஸ்லேவியா. கடந்த நூற்றாண்டு வரை அந்த நாட்டின் பகுதிகள் ஆஸ்திரிய- ஹங்கேரிய, துருக்கிய சாம்ராஜ்யங்களால் ஆளப்பட்டு வந்தன. முதல் உலகப் போரின் முடிவுக்குப் பிறகு 1918-இல் செர்ப், க்ரோட், ஸ்லோவேன் ஆகிய இனங்களின் மக்கள் ஒன்றிணைந்து யூகோஸ்லேவியா என்ற நாடு உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் இறுதியில் இந்த நாடும் மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் வந்தன. ஆயினும் அதிபர் டிட்டோ தலைமையில் இந்த நாடு சோவியத் ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு தனிப்பட்ட கம்யூனிஸ்டு நாடாகவே இயங்கியது. 1980-இல் டிட்டோ மறைந்த பிறகு அந்த நாட்டில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் சிறுகச் சிறுகத் தளர்ந்து 1990-இல் கம்யூனிஸ்டுகளின் ஒரு கட்சி ஆட்சி முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.



புலவர் கோவிந்தன்

சோவியத் நாட்டின் பல குடியரசுகள் முக்கியமாக மூன்று பால்டிக் நாடுகள், சுதந்திரக் கொடி உயர்த்திய பிறகு யூகோஸ்லேவிய நாட்டிலும் பிரிவினைவாதம் தலையெடுத்துள்ளது. அந்த நாட்டில் செர்பிய இனத்தவர் 38 சதவிகிதம் ஆகும். அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்க க்ரோட் இனத்தவர்களும், ஸ்லோவேன் இனத்தவர்களும் விரும்ப வில்லை. யூகோஸ்லேவியா நாட்டின் இரண்டு குடியரசுகள் க்ரோஷியாவும், ஸ்லோவேனியாவுமாகும். இவை இரண்டும் 1991-ஆம் ஆண்டு ஜூன் 26-ஆம் தேதியன்று தங்களை சுதந்திரக் குடியரசுகள் என்று அறிவித்துக் கொண்டதையடுத்து அங்கே உள்நாட்டுப் போர் மூண்டது. யூகோஸ்லேவிய ராணுவம் ஸ்லோவேனியக் குடியரசின் தலைநகரான லியுப்லியானாவில் நுழைந்து விமான தளங்கள், ஒளி-ஒலி பரப்பு நிலையங்கள் ஆகியவற்றைக் கையகப்படுத்தியது. சோவியத் நாட்டிலிருந்து பால்டிக் குடியரசுகள் விலகுவதை ஆதரிக்கும் அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் யூகோஸ்லேவியாவில் பிரிவினைவாதத்தை ஆதரிக்கவில்லை. ஆகையால் க்ரோஷியா, ஸ்லோவேனியா ஆகிய மாநிலக் குடியரசுகள் அறிவித்துள்ள சுதந்திரத்தை சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் மேலை நாடுகளும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன. நேரு- டிட்டோ காலத்திலிருந்து இந்தியாவிற்கும் யூகோஸ்லேவியாவிற்கும் இருந்துவந்த நேச உறவின் அடிப்படையில் இந்திய அரசும் அந்த நாடு சிதறுண்டு போவதை விரும்பவில்லை. ஜூன் 29-ஆம் தேதியன்று சுதந்திரப் பிரகடனம் செய்த இரண்டு குடியரசுகளும் அவற்றை அமல்படுத்துவதை மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளன. யூகோஸ்லேவிய அரசும் தனது துருப்புகளை முகாம்களுக்குத் திருப்பியனுப்பத் தீர்மானித்தது. ஆனாலும் இரு தரப்பினருக்குமிடையே தொடர்ந்து போர் நீடித்துக்கொண்டே யிருந்தது.

பழுத்த சிந்தனையாளரும், தடம் புரளாத பகுத்தறிவுவாதியும், பல நூல்கள் இயற்றிப் பைந்தமிழுக்குப் பணியாற்றியவரும், பொது வாழ்வில் ஓய்வின்றி உழைத்தவரும், தமிழகச் சட்டப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்று அவையில்

தமிழ் மணம் கமழச்செய்தவரும், இயக்கத்திற்கு வந்த எந்தச் சோதனையிலும் தலைநிமிர்ந்து நின்றவருமான புலவர் கோவிந்தன் 2-7-91 அன்று திடீரென இயற்கை எய்தினார். செய்தி கிடைத்ததும், நானும், பேராசிரியரும், ஆற்காடு வீராசாமியும் திருவத்திபுரம் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தினோம்.

ஜெயலலிதா அரசின் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியது. ஆளுநர் உரையாற்றத் தொடங்கியபோது பா.ம.க. உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் எழுந்து ஒரு அறிக்கையைப் படிக்க முற்பட்டபோது அ.தி.மு.க. உறுப் பினர் தாமரைக்கனி அவரைப் பேரவையிலே தாக்கியது குறித்து அந்தக் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் கால வரையற்ற உண்ணாவிரதத்தினைத் தொடங்கினார். மூன்று நாட்களாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்த டாக்டர் ராமதாஸ் அவர்களை நானும் பொதுச் செயலாளர் பேராசிரியரும் நேரில் சென்று 6-7-91 அன்று நலம் விசாரித்தோம். அவை விதி 17-இன்படி ஆளுநர் உரை நிகழ்த்தும்போது யாரும் குறுக்கிட்டுப் பேசக் கூடாது; எனவே பண்ருட்டி அப்படி விதியை மீறிப் பேசியது ஒழுங்கீனமானது என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். ஆனால் அதற்கு முந்தைய ஆண்டு தமிழக ஆளுநர் பர்னாலா அவர்கள் உரையாற்றியபோது அ.தி.மு.க. உறுப்பினர் களைக் குறுக்கிடச் செய்து அறிக்கை படிக்கச் செய்ததும் ஜெய லலிதாதான்! பண்ருட்டி ராமச்சந்திரனை அடித்ததற்காக அப்போது பேரவைத் தலைவர் எடுத்த நடவடிக்கை என்ன தெரியுமா? பண்ருட்டி ராமச்சந்திரனையும், தாமரைக் கனியையும் அவை நட வடிக்கைகளில் மூன்று நாட்களுக்குக் கலந்து கொள்ளக்கூடாது என்று நீக்கப்பட்டதுதான்! 7-ந் தேதி மாலையில் உண்ணாவிரதம் இருந்த டாக்டர் ராமதாஸ் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

91-ஆம் ஆண்டு ஜூன் இறுதி வாரத்திலும் ஜூலை முதல் வாரத்திலும் இந்தியாவில் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்தன. காஷ்மீரில் ஜூன் 26-ஆம் தேதி இரவு இஸ்ரேல்

நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளைக் கடத்திச்செல்ல காஷ்மீர் தீவிரவாதிகள் முயற்சித்தனர். அப்போது ஆயுதமற்ற இஸ்ரேலியர் தீவிரவாதிகளை எதிர்த்துப் போரிட்டார்கள். அந்த மோதலில் இஸ்ரேலியப் பயணி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு பயணி தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார். தொடர்ந்து 28-ந்தேதி இந்திய எண்ணெய் நிறுவன இயக்குநர் கே.துரைசாமி கடத்திச் செல்லப்பட்டார். பும்போர் என்ற இடத்திலே மண்ணெண் ணெய்க் கிடங்கு ஒன்றைப் புதிதாக நிறுவுவதற்காக மும்பை யிலிருந்து சென்ற அவரைத் தீவிரவாதிகள் துப்பாக்கி முனை யிலே கடத்திச் சென்றார்கள். காஷ்மீர் அரசு உணவு வழங்கு துறை இயக்குநர் மகமது இமாம் கான் 29-ந் தேதி நாசில் உல் இஸ்லாம் என்ற தீவிரவாத அமைப்பால் கடத்திச் செல்லப் பட்டார். இந்தச் சம்பவங்களுக்குச் சில மாதங் களுக்கு முன்பு இரண்டு ஸ்வீடிஷ் பொறியியல் நிபுணர்கள் பயங்கரவாதி களால் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்கள் கதி என்ன வாயிற்று என்றே பிறகு தெரியவில்லை. காஷ்மீரின் தலைமை மதகுரு மகமது பஷீருத்தீன் 29-ந் தேதி காலையில் கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினார்.

சிறையிலே உள்ள தங்களது மூன்று நண்பர்களை உடனடி யாக விடுவிக்காவிட்டால் இந்தியன் ஆயில் அதிகாரி துரை சாமியைக் கொன்றுவிடப் போவதாகத் தீவிரவாதிகளிட மிருந்து செய்தி வந்தது. காஷ்மீர் உணவு விநியோகத் துறை இயக்குநர் எம்.ஐ.கான் இதற்கிடையிலே வீடு திரும்பினார். மற்றவர்களை விடுவிக்கும் பணியில் காஷ்மீர் அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியது. அதில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணி ஜூலை 3-ந் தேதியன்று விடுவிக்கப் பட்டார். 97 நாட்களாக பயங்கரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஸ்வீடன் பொறியாளர்கள் 6-7-91 அன்று விடுவிக்கப்பட்டனர். அதிகாரி துரைசாமி பல தரப்பு பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு ஆகஸ்ட் 20-ஆம் தேதிதான் விடுவிக்கப்பட்டார்.



டாக்டர் ராமதாசை அந்த இடத்தைவிட்டுக் காவல் துறையினர் அகற்றுகின்றனர்.

ஒரு சோவியத் இஞ்சினீயர், 8 ஓ.என். ஜி.சி. அதிகாரிகள் உட்பட 22 மாநில உயர் அதிகாரிகளை அஸ்ஸாமில் உல்ஃபா தீவிரவாதிகள் கடத்தினர். இவர்களில் ஒருவர் மட்டும் அடுத்த நாளே விடுவிக்கப்பட்டார். ஆனால் மற்றவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் சிறையிலே உள்ள 6 தீவிரவாதிகளை ஜூலை 9-ஆம் தேதிக்குள் விடுவிக்கவேண்டுமென்று நிபந்தனை தெரிவித்தனர். கடத்தப்பட்ட சோவியத் சுரங்கப் பொறியாளர் செர்கி கிரி சென்கோ துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு தப்பிவர முயன்றபோது நடந்த மோதலில் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து கடத்தல்காரர்கள் வைத்த நிபந்தனைப்படி சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆறு கொடிய பயங்கரவாதிகள் 9-7-91 அன்று விடுதலை செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து கடத்தப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

31 கச்சத்தீவு பிரச்சினையில் கழகத்தின் நிலை

இந்தியாவில் வெள்ளையர் ஆட்சி நடைபெற்றபோது கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது இங்கிலாந்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. ஹேஸ்டிங்சுக்கு எதிராக நீதிமன்றத்தில் எட்மண்ட் பர்க் ஒன்பது நாட்கள் வாதம் செய்தார். அப்போது ஒருவர் குறுக்கிட்டு எட்மண்ட் பர்க்கைப் பார்த்து, "மிஸ்டர் பர்க்! இந்தியாவில் ஹேஸ்டிங்சைப் பாராட்டி வாரணாசியில் அவருக்குக் கோயிலே கட்டியிருக்கிறார்கள்; தெரியுமா?" என்று ஹேஸ்டிங்சுக்கு ஆதரவாகப் பேசினார்.

உடனே சட்டென்று பர்க் பதில் சொன்னாராம்; "இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை! இந்தியாவில் நல்லது செய்யும் கடவுள்களுக்கு மட்டும் கோயில் கட்டுவதில்லை. அம்மை, காலரா போன்ற கொடிய நோய்களைப் பரப்பும் துஷ்ட தேவதைகளுக்கும் கோயில் கட்டுகிறார்கள்."

அதைப் போலத்தான் இந்திய மக்களும் சரி; குறிப்பாகத் தமிழ் மக்களும் சரி; யாருக்கு வேண்டுமானாலும் ஆதரவு தரலாம் என்ற ஜனநாயகக் கோட்பாட்டுக்கிணங்க - தங்களின் அபிமானத்திற்குரிய கட்சியாகவோ அல்லது அதன் தலைவராகவோ; பர்க் சுட்டிக் காட்டிய பட்டியலில் இடம் பெற்றவர்களை ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

1991-இல் ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும்; அவருடைய கட்சிக்காரர்களால் ஒரு பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டு, அதில் இருவர்

கொலை செய்யப்பட்டு; அந்தப் பழியை யார் மீது போட லாம் என்று திட்டமிட்டு, கழக ஆட்சியில் என் பொறுப்பில் இருந்த உள்துறையின் செயலாளராக இருந்த திரு.நாக ராஜன், ஐ.ஏ.எஸ். மீது அந்தக் குற்றத்தைச் சுமத்தி அவரைச் சிறையில் அடைத்து, அவரைப் பதவியிலிருந்து இடைநீக்கம் செய்து, அவர் ஜாமீனில் வெளி வந்திருந்தபோது மீண்டும் அவரை "தடா" சட்டத்தில் கைது செய்து, அவரிடமிருந்து எனக்கு எதிராக வாக்குமூலம் பெற்றிட செய்த சித்திர வதைகள் எல்லாம் நாடறிந்த உண்மைகளாகும்.

'தடா' சட்டம் கொண்டு வரப்பட்டதற்குச் சொல்லப் பட்ட நோக்கத்திற்கு மாறாக; முதன்முதலாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மீது அந்த 'தடா' சட்டத்தைப் பிரயோகித் தவரும் ஜெயலலிதாதான் என்பதை சற்று நினைத்துப் பார்த்தாலே; 1991 முதல் 1996 வரையில் அவரது ஆட்சி எந்த வகையில் நடந்திருக்குமென்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

வானத்தை வில்லாக வளைக்கப் போகிறேன் என்று தேர்தல் நேரத்தில் சிலர் பேசி, மக்களைக் கவர்வதுண்டு; ஆனால் இந்த அம்மையார் தேர்தல் முடிந்த பிறகும் அப்படிப்பட்ட வாக்குறுதிகளையும் சூளுரைகளையும் அநாயாசமாகப் பொழிந்து கொண்டேயிருந்தார்.


1991 ஆகஸ்ட் 15 சென்னை தலைமைச் செயலகத்திலே தேசியக் கொடியேற்றி உரையாற்றியபோது; "இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்பதற்குப் போராடு வேன்" என்று வீர சபதமே செய்தார். அவரது அந்த சபதத் தைப் பின்பற்றி அவர் கட்சியின் அமைச்சர்கள், பேச்சாளர்கள்; கச்சத்தீவை, தி.மு.க. ஆட்சிதான் இலங்கைக்குத் தாரை வார்த்து விட்டது போல விஷமப் பிரச்சாரம் செய்யத் தொடங்கி விட்டனர்.

இதற்கு மறுப்பும் விளக்கமும் அளிக்க வேண்டிய நிலை கழகத்திற்கு ஏற்பட்ட காரணத்தால்; 1974-ஆம் ஆண்டி லேயே கழகம் ஆட்சியில் இருந்தபோது கழகப் பொதுக்

குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தமிழக மக்களுக்கு நினைவூட்டினேன். அந்தத் தீர்மானம் வருமாறு:-

"இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதுமான கச்சத் தீவின் மீது இலங்கைக்கு அரசுரிமை வழங்கும் வகையில் இந்திய அரசு செய்துள்ள ஒப்பந்தத்தை கழகப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிக்கு எதிராக இந்த ஒப்பந்தம் அமைந்துவிடக் கூடாது என்று தமிழக தி.மு.க. அரசு பலமுறை ஆதாரங்களுடன் மத்திய அரசை அணுகித் தடுத்தும் கூட அதனை அலட்சியப் படுத்திவிட்டு மத்திய அரசு கச்சத்தீவை இலங்கைக்கு அளித்துள்ள செயல் வேதனை தருவதாகும். கச்சத்தீவு பிரச்சினையை முடிந்து விட்ட பிரச்சினையாகக் கருதாமல் மத்திய அரசு மறுபரி சீலனை செய்து அந்தத் தீவின்மீது இந்திய அரசுக்கு அரசுரிமை இருக்குமாறு ஒப்பந்தத்தைத் திருத்த வழிவகை காணவேண்டுமென்று பிரதமர் இந்திராகாந்தியை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது."

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது மட்டுமல்லாமல், 74ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் கழகத்தின் சார்பில் கச்சத் தீவு ஒப்பந்தக் கண்டன நாள் நடத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் கூடாது என்றும் கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதியே என்றும் பல்வேறு ஆதாரங்களுடன் முதல்வர் என்ற முறையில் 6-1-1974 அன்று



இந்திராகாந்தி

பிரதமர் இந்திரா காந்திக்கும் கடிதம் எழுதினேன். இந்திய அரசும் இலங்கை அரசும் 1974-ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை யும், யாத்திரீகர்கள் செல்லும் உரிமை யும், கப்பல் போக்குவரத்துக்கான உரிமையும் பாரம்பரிய பாத்யதையுடன் இந்தியாவுக்கு இருந்தன. அப்படி

இருந்தும் அந்த ஒப்பந்தத்தையே கழக அரசு ஏற்காமல் எதிர்த்தது.

ஆனால் 1976ஆம் ஆண்டு கழக அரசு கலைக்கப்பட்டு ஆளுநர் ஆட்சி இருந்த நேரத்தில் இந்திய அரசு இலங்கை யுடன் செய்து கொண்ட ஒரு உடன்பாட்டின்படி 1974ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இருந்த இந்த உரிமைகளும் பறிபோய் விட்டன.

இந்த உண்மையை வெளிப்படுத்தி 91ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வெளிவந்த "ப்ரண்ட்லைன்'' ஏடு கச்சத்தீவு பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தது. அதில் சில பகுதிகள்- "இந்திய அரசு இலங்கை அரசுடன் கச்சத் தீவுக்கான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பே தமிழகத்தில் இருந்த தி.மு.க. ஆட்சி, அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தது. கருணாநிதி, இந்திரா காந்திக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை அரசு கச்சத் தீவு மீது உரிமை கொண்டாடுவதை இந்திய அரசு ஏற்கக் கூடாது, மறுத்திட வேண்டும் எனக் குறிப்பிட்டார். ஒப்பந்தம் நடைபெற்ற உடனேயே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, தமிழகத்தின் எதிர்ப்பையும் தெரிவித்துக் கொண்டார்.''

உண்மையை அ.தி.மு.க. அரசு அப்படியே மறைத்துவிட்டு கச்சத் தீவை மீட்போம் என்று சொல்லி விட்டு, கழகத்தைக் குறை கூறுவதிலேயே கவனத்தைச் செலுத்தியது. 1991-ஆம் ஆண்டு கோட்டை முகப்பிலே நின்றுகொண்டு கச்சத்தீவை மீட்டே தீருவேன் என்று சபதம் செய்தவர்கள் தொடர்ந்து ஐந்தாண்டு காலம் ஆட்சியிலே இருந்தார்கள். ஆனால் கச்சத்தீவிற்காகச் செய்த சபதம் நிறைவேறவில்லை என்பதும், அதற்காகக் கழகத்தின் மீதும் சேற்றை வாரி வீசியது தான் நடந்தது என்பதும்தான் உண்மை.

நான் பதவி விலகிய துறைமுகம் தொகுதி, எழும்பூர் தொகுதி, காங்கேயம் தொகுதி, முசிறி தொகுதி ஆகியவற்றுக் கான இடைத்தேர்தல் 23-8-1991 அன்று நடைபெற்றது. ஜூன் மாதம் 232 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றபோது

ஒரேயொரு தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றதற்கு மாறாக ஆகஸ்ட் திங்களில் நான்கு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் மூன்று தொகுதிகளில் தி.மு.கழகம் போட்டியிட்டு இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றது.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த இரண்டாவது மாதமே வினோத மான ஒரு ஆணை பிறப்பித்தது. கழக ஆட்சிக் காலத்தில் "சுற்றுலா பஸ்''களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இருக்கை ஒன்றுக்கு 2000 ரூபாய் வரி விதிக்கப்பட்டது. அந்த "சுற்றுலா பஸ்'' முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றார் கள். நீதிமன்றம் இறுதித் தீர்ப்பு வருகிற வரை "சுற்றுலா பஸ்'' அதிபர்கள் இருக்கை ஒன்றுக்கு 1500 ரூபாய் வரியாகக் கட்ட வேண்டுமென்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அ.தி.மு.க. அரசு 30-7-91 அன்று பிறப்பித்த அரசாணை எண்.1203-இன்படி இருக்கை ஒன்றுக்கு 500 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதுமென்று உத்தரவிட்டது. அதிலும் ஒரு வேடிக்கையாக 1991 ஜூலை 30ந்தேதி அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்ட போதிலும், 1991 ஏப்ரல் 1ஆம் தேதியி லிருந்து இந்த உத்தரவு அமலுக்கு வருமென்று அறிவித் தார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலே பழி வாங்கும் படலத்திற்கு இன்னொரு எடுத்துக்காட்டு! 91ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்கள் 7ந்தேதி திடீரென்று ஜெயலலிதா அரசு முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினரும், கழக முன்னணியினரில் ஒருவருமான கே.பி.ராமலிங்கத்தைக் கைது செய்து போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். காரணம் கேட்டபோது 1987ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். மறைந்த போது அவரது உடல் இருந்த பீரங்கி வண்டியின் மீது செருப்புக் காலோடு ஏறிய ஜெயலலிதாவைக் கீழே இறங்குமாறு கே.பி.ராமலிங்கம் கூறியதற்காகப் பழிவாங் கும் நோக்கத்தோடு கைது செய்யப்பட்டது தெரிந்தது. கமிஷனர் அலுவலகத்திலிருந்து நள்ளிரவில் அவரை சிந்தாதிரிப் பேட்டை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஜட்டி யோடு இரவு முழுவதும் சாப்பாடு கூடக் கொடுக்காமல்

லாக்கப் அறையில் பூட்டி வைத்தார்கள். மூன்றரை ஆண்டு களுக்கு முன்பு நடை பெற்ற ஒரு சாதாரண சம்பவத்திற்காக இந்தக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு நாட்களில் செப்டம்பர் 9ந் தேதியன்று பேரவையில் கழக உறுப்பினர் பரிதி இளம்வழுதி அரசைக் குற்றஞ் சாட்டிப் பேசியதற்காகத் தாக்கப் பட்டார். அவரது வேட்டி பறிக்கப்பட்டது. சட்டை கிழிக்கப் பட்டது. மீண்டும் மறுநாள் அதே சட்டப்பேரவையில் ஜெயலலிதா முன்னிலையிலேயே "டேய் வெளியே போடா" என்று பரிதி இளம்வழுதியைப் பார்த்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூறிய தோடு, அந்தக் கூட்டத் தொடர்முடியும் வரை அவரை சட்டப் பேரவையிலிருந்தே வெளியேற்றினார்கள். இதனை அவையிலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டித்தனர்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக வர்மா கமிஷனின் ஆய்வு வரம்பிற்குள் வராத இதர அனைத்து அம்சங்களையும் விசாரிப்பதற்காக மத்திய அரசு மேலும் ஒரு கமிஷனை அமைக்க முடிவு செய்தது. டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எம்.சி. ஜெயின் இந்தக் கமிஷனின் நீதிபதி யாக நியமிக்கப் பட்டார்.

சோவியத் யூனியனின் முன்னேற்றத்திற்காக அதிபர் கோர்பச் சேவ் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் குறித் தெல்லாம் முன் அத்தியாயங்களில் விவரமாகத் தெரிவித் திருக்கிறேன் என்ற போதிலும் 91ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சில அதிரடிச் சம்பவங்கள் நடைபெற்றன.



கே. பி. இராமலிங்கம்

19-8-91 அன்று சோவியத் நாட்டில் நடந்த திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு புரட்சியில் சோவியத் அதிபர் மிகையில் கோர்பச்சேவ் அகற்றப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டதாகவும் ஊர்ஜித மாகாத தகவல்கள் வந்தன. அதுவரை துணை அதிபராக இருந்த கென்னடி

யனயேவ் தற்காலிகமாக அதிபர் பதவியைக் கைப்பற்றினார். அவசர நிலை அறிவிக்கப்பட்டது. நாட்டை நிர்வகிப்பதற்கு எட்டு பேர் கொண்ட ஓர் ஆட்சிக் கவுன்சில் அமைக்கப் பட்டது. மாஸ்கோ நகரத் தெருக்களில் முக்கிய இடங்களில் ராணுவ டாங்க்குகளும் துருப்புகளுடன் கூடிய வாகனங் களும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஆயிரக்கணக்கானவர்கள் கிரெம்ளின் மாளிகைக்கு வெளியே ராணுவ வாகனங்களைச் சூழ்ந்துகொண்டு ஆர்ப்பாட்டம் நடத்துவதாகவும் தகவல்கள் வந்தன.

ஆனால் சோவியத் யூனியனில் 19ந் தேதி ஏற்பட்ட திடீர் புரட்சி மூன்றே நாளில் படுதோல்வி அடைந்தது. திடீர் புரட்சித் தலைவர்களால் பதவிநீக்கம் செய்யப்பட்டு கிரிமி யாவில் காவலில் வைக்கப்பட்டிருந்த அதிபர் கோர்பச்சேவ் 21ந்தேதியன்று காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார். அத்துடன் கோர்பச்சேவை அதிபர் பதவியிலிருந்து நீக்கியது செல்லாது என்று சோவியத் நாடாளுமன்றத்தின் தலைமைக் குழு அறிவித்ததையடுத்து அவர் மீண்டும் சோவியத் யூனியனின் அதிபரானார்.

அதிரடிப் புரட்சி மூலம் கோர்பச் சேவைக் கவிழ்க்க முயன்ற 8 தலைவர்களில் ஒருவரான உள்துறை அமைச்சர் போரிஸ் புகோ உடனடியாகத் தற்கொலை செய்து கொண் டார். புரட்சியில் ஈடுபட்ட சோவியத் முன்னாள் துணை அதிபர் கென்னடி யனயேவ் உட்பட மற்றவர்கள் கைது செய்யப்பட்டனர். திடீர் புரட்சிக்குச் சதித் திட்டம் தீட்டிய வர்கள் மீது கிரிமினல் விசாரணை நடைபெறும் என்று எல்ட்சின் தெரிவித்தார். கோர்பச்சேவ் மீண்டும் அதிபரான தற்கு உலக நாடுகளின் தலைவர்களும், அமெரிக்க அதிபரும், இந்தியாவின் நாடாளு மன்றமும் மகிழ்ச்சியைத் தெரிவித் தனர். ஆனாலும் கூட சோவியத் யூனியனில் ஒரு நிரந்தர, நிலையான அமைதி ஏற்படவில்லை!


ருமேனியா நாட்டின் தூதுவராக டெல்லியில் 91ஆம் ஆண்டு பொறுப்பிலே இருந்த வில் வியு ராடு என்பவர் அக்டோபர் 9ந்தேதி காலையில் தனது இல்லத்திலிருந்து

வசந்த் விகாரிலே உள்ள தூதரகத்துக்குச் சென்றுகொண் டிருந்தபோது சீக்கிய தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட சிலரால் கடத்தப் பட்டார். இந்தியாவில் தூதர் ஒருவர் கடத்தப்பட்டது அதுதான் முதல் முறையாகும்.

காலிஸ்தான் விடுதலைப்படை அனுப்பி வைத்த தூதரின் புகைப்படம் ஒன்றின் மூலம் அந்தப் பயங்கரவாத அமைப்பு தான் ருமேனிய தூதரைக் கடத்தியது என்பது உறுதி யாயிற்று. ஆனால் அந்த அமைப்புடன் இணைந்து மற்ற அமைப்புகளும் சேர்ந்து வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில், ஓய்வுபெற்ற ராணுவ தளபதி வைத்யா கொலை வழக்கு தொடர்பாக புனே நீதிமன்றத்தில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஹெர்ஜிந்தர் சிங் ஜிந்தா, சுக்தேவ்சிங் சுக்கா ஆகியோரையும், லோங்கோவால் கொலை வழக்கு தொடர்பாக விசாரணைக் கைதியாக இருக்கும் நிர்மல்சிங் நிம்மாவையும் விடுதலை செய்ய வேண்டும். விடுதலை செய்யாவிட்டால் தூதர் ராடு கொல்லப்படுவார் என்று தெரிவித்திருந்தது. கடத்தப்பட்ட தூதுவரின் மனைவி கணவரை மீட்டுத் தரும்படி வலியுறுத்தி உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார். இறுதி யாக நவம்பர் 26ந் தேதியன்று எந்தவித நிபந்தனையும் இல்லாமல் இவர் விடுவிக்கப்பட்டார்.

1991ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டின் பிரதமராக இருந்தவர் தொசிகி கைபு. இவர் அரசியல் சீர்திருத்தம் பற்றிய மசோதா குறித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இந்தத் தீர்மானம் ஆளுங்கட்சியினாலேயே (லிபரல் டெமாக்ரடிக் கட்சி) தோற்கடிக்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் மீண்டும் பதவிக்குப் போட்டியிட விரும்பவில்லை என்று கூறிப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அவரது பதவிக் காலம் அக்டோபர் 31ந்தேதி வரை இருந்த போது, அவர் அக்டோபர் 5ந்தேதியன்றே பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார்.

அதே ஆண்டு அக்டோபர் திங்களிலேயே மேகாலயா அமைச்சரவை கவிழக் கூடிய நிலை இந்திய அரசியலிலே



பரிதி இளம்வழுதி

ஏற்பட்டது. மேகாலயத்தில் அப்போது ஐக்கிய பாராளுமன்றக் கட்சித தலைமையிலான கூட்டணி ஆட்சி முதல் அமைச்சர் லிங்டோக் தலைமையிலே 19 மாதங்களாக நடைபெற்று வந்தது. இவர் மீது கட்சியிலே அதிருப்தி தோன்றிய காரணத்தினால் அவர் அவையிலே நம்பிக்கை ஓட்டு பெற நினைத்தார். அதற்கான தீர்மானம் அரசின் சார்பில் அவையிலே கொண்டுவரப்பட்டது. விவாதத்திற்குப் பிறகு வாக்கெடுப்பிற்கு தீர்மானம் விடப்பட்டபோது ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் சரிசமமாக தலா 26 வாக்குகள் கிடைத்தன. இதுபோன்ற நேரங்களில் பேரவையின் தலைவர் தனது வாக்கினைப் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில் பேரவைத் தலைவராக இருந்த பி.ஆர். கிண்டியா நம்பிக்கை தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தார். அதன் காரணமாக அரசின் நம்பிக்கை தீர்மானம் தோல்வியடைந்தது. பேரவைத் தலைவர் நம்பிக்கை தீர்மானம் தோல்வி அடைந்ததாகக் கூறிவிட்டு, அவையை அத்துடன் ஒத்தி வைப்பதாக அறிவித்தார். பேரவைத் தலைவர் இவ்வாறு அறிவித்ததை ஆளுங்கட்சியினர் ஏற்க மறுத்தனர். கடந்த ஆகஸ்ட் திங்களில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட ஆளுங் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை என்று ஒரு காரணத்தைக் கூறி பேரவைத் தலைவர் அவையை விட்டுச் சென்ற பிறகும் தொடர்ந்து பேரவையை நடத்தி, பேரவைத் தலைவரை நீக்குவதாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதை நிறைவேற்றிவிட்டு, புதிய பேரவைத் தலைவர் ஒருவரையும் தேர்ந்தெடுத்தனர். அப்போது ஏற்கனவே வாக்களிக்க அனுமதிக்கப்படாத நான்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் உட்பட 30 சட்டப் பேரவை உறுப் பினர்கள் அவையிலே இருந்தனர். அந்த நேரத்தில் முதலில் பேரவைத் தலைவராக இருந்த பி.ஆர். கிண்டியா பேரவைச் செயலாளருக்கு அனுப்பிய குறிப்பில், பேரவைக்குள் எந்தப்

பணியும் நடக்கக் கூடாது என்று தெரிவித்திருந்தார். சட்ட சபைச் செயலாளர் செய்தியாளர்களிடம் கூறும்போது, பேரவைத் தலைவர் அதிகாரபூர்வமாக அவையை ஒத்திவைத்தபிறகு அவையிலே எடுக்கப்படும் முடிவுகள் செல்லாது என்று தெரிவித்தார்.

இதற்குப் பிறகு அங்கே இந்திரா காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய மேகாலய பாராளுமன்ற முன்னணி; ஆட்சி அமைக்கும் முயற்சியிலே ஈடுபட்டது. அந்த முன்னணியின் தலைவர் ஜே.டி. போர்மன் தலைமையில் 14 சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஆளுநர் மதுகர் டிக்கியைச் சந்தித்து அவர்களை ஆட்சி அமைக்க அழைக்கும்படி கேட்டுக் கொண்டனர். பிரச்சினை பற்றி முழுமையாகப் பரிசீலித்து முடிவினை அறிவிப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

அக்டோபர் 11ஆம் தேதி இந்தியக் குடியரசுத் தலைவர் மேகாலயாவில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கான ஆணையைப் பிறப்பித்தார். ஆனாலும் சட்டசபை கலைக்கப்படவில்லை. அவை செயல்படுவது மட்டும் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆளுநரின் பரிந்துரையின் பேரில்தான் இந்த முடிவு குடியரசுத் தலைவரால் எடுக்கப்பட்டது.

91ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி நள்ளிரவில் வட இந்தியாவில், குறிப்பாக உத்தரப்பிரதேசம், ஜம்மு- காஷ்மீர், இமாசலப் பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங் களிலும், டெல்லி, சண்டிகார் ஆகிய நகரங்களிலும் பூமி அதிர்வு ஏற்பட்டது. இதில் உ.பி.யில் உத்ரகாசி மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்தப் பகுதிக்கு மிக அருகில் இருந்த தேஹ்ரி அணை பெரும் சேதமடைந்து அங்கு மட்டும் 400-க்கு மேற்பட்ட கிராமங்கள் முழுமையாக அழிந்து விட்டன. அங்கே இறந்தவர்கள் மட்டும் 2000-க்கு மேல் இருக்கலாம் என செய்திகள் வந்தன. இந்தப் பூமி அதிர்வு 45 வினாடிகள் நீடித்தன. இமயமலையின் அடிவாரத் தில் இருந்த அல்மாரா மாவட்டமும் பெரிதும் பாதிப்புக்கு

ஆளாகியது. அந்த மாவட்டத்தில் மட்டும் 500-க்கு மேற் பட்ட கிராமங்கள் முழுவதுமாக அழிந்து விட்டன.

அந்தப் பூகம்பத்தின் அளவு 6.1 என்று நில நடுக்கப் பதிவுக் கருவி கூறியது. சார்லஸ் பிரான்ஸிஸ் ரிக்டர் என்ற அமெரிக்க ரால் உருவாக்கப்பட்ட அந்தக் கருவியில் 9 புள்ளிகள் வரை மட்டுமே பூகம்பத்தின் வலிமையை அளக்க முடியும். உலகில் அதுவரை ஏற்பட்டுள்ள பூகம்பங்களில் மிகக் கடுமையான பூகம்பம் 1906ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி அமெரிக்கா வில் உள்ள சான்பிரான்சிஸ்கோவில் ஏற்பட்டது. அப்போது ரிக்டர் கருவியில் பதிவாகிய பூகம்பத்தின் அளவு 8.3. அந்தப் பூகம்பத்தின் விளைவாக 700 பேர் மாண்டனர். ஆனால் 91ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தில் 6.1 அளவுக்கே பூகம்பம் ஏற்பட்ட போதிலும், அங்கே பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. 1556ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ஆம் தேதி சீனாவில் உள்ள ஷென்ஸி பகுதியில் நேர்ந்த பூகம்பத்தில் 8,30,000 பேர் மாண்டனர். உலகில் ஏற்பட்ட பூகம்பங் களிலேயே அதிக அளவில் உயிர்ச் சேதம் ஏற்பட்டது அந்தப் பூகம்பத்தில்தான்.

91ஆம் ஆண்டு இறுதியில் அயோத்தி பிரச்சினை மீண்டும் எழுந்தது. அந்த ஆண்டு நவம்பர் திங்களில் மீண்டும் ராமர் கோவில் கட்டப்போவதாக பாரதீய ஜனதா அரசு ஆதர வோடு விசுவ இந்து பரிஷத் அறிவித்தது. மத்திய அரசின் எதிர்ப்பையும், நீதிமன்ற உத்தரவையும் புறக்கணிக்கும் வகையில் பிரச்சினைக்குரிய இடத்தில் காவிக் கொடிகள் ஏற்றப்பட்டன. இந்தப் பிரச்சினை பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் மாநில முதல் அமைச்சர்களுடனும் ஆலோசனை நடத்துவதற்காக பிரத மர் பி.வி. நரசிம்மராவ் முடிவு செய்து தேசிய ஒருமைப்பாட்டுக் குழு மாநாட்டினை 2-11-91 அன்று டெல்லியில் கூட்டியிருந்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் உறுப்பினர் என்ற முறையில் எனக்கு அழைப்பு வந்திருந்தது. அந்தக் கால கட்டத்தில் மத்திய அமைச்சராக இருந்த கிருஷ்ண குமார் என்பவர் ஒரு கூட்டத்தில்

பேசும்போது தி.மு.கழகத்தை தேச விரோதக் கட்சி என்று கூறியதையொட்டி அவர் அவ்வாறு பேசியதற்குக் கண்டனம் தெரிவித்து அந்த ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் தி.மு.கழகம் கலந்து கொள்வதில்லை என்று முடி வெடுத்தது. அந்தக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்க வேண்டியது பற்றி ஒவ்வொரு கட்சிகளும் தனித்தனியாகக் கூடி முடிவெடுத்தன. குறிப்பாக பா.ஜ.க. தனது கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ராம ஜென்ம பூமி பிரச்சினை பற்றி எந்தவித விவாதத்துக்கும் எதிர்ப்பு தெரிவிப்பது என்று முடிவெடுத்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பார்வர்டு பிளாக், ஆர்.எஸ்.பி. ஆகிய இடதுசாரிக் கட்சிகள் உத்தரப்பிரதேச பாரதீய ஜனதா அரசை டிஸ்மிஸ் செய்யும்படி வற்புறுத்துவது என்று முடிவெடுத்தன. அந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா சென்று கலந்து கொண்டார்.

தனது பேச்சின் முடிவில் "இந்தப் பிரச்சினை மீது லட்சக் கணக்கான மக்கள் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே நிலைமை யைக் கருத்தில் கொண்டு, நாம் முடிவெடுப்பது அவசியம். அப்படி எடுக்கப்படும் முடிவு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். கோவில் கட்டவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உத்தரப்பிரதேச அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த நாட்டு மக்களும், அயோத்தியில் கோவில் கட்டப்பட வேண்டும் என விரும்புகிறார்கள் என் பதை நாம் மறந்து விடக் கூடாது. இதை நமது முஸ்லிம் சகோதரர்கள் புரிந்து கொண்டு உத்தரப் பிரதேச இந்துக் களின் விருப்பத்தை நிறைவேற்ற முன் வர வேண்டும்" என்று செல்வி ஜெய லலிதா குறிப்பிட்டார்.



எல்ட்சின்

32 அவுங்சான் புதல்வி அனுபவித்த கொடுமை

சர்வாதிகாரிகள் பலரைச் சரித்திரம் அடையாளம் காட்டியிருக்கின்றது. அந்த வரிசையில் 1991ஆம் ஆண்டில் முன்னாள் பர்மா, அதாவது மியான்மர் நாடு ஒரு சர்வாதி காரியின் கட்டுப்பாட்டில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தது. அவன் பெயர் ஜெனரல் நீவின். அவனுடைய 27 ஆண்டு கால ராணுவ ஆட்சியில் அந்நாட்டு மக்கள் மிகுந்த வேதனைப் பட்டுக் கொண்டிருந்தனர். அந்த மக்களுக்குத் தலைமை யேற்று அங்கே ராணுவ ஆட்சிக்கு முடிவு கட்ட தியாகத் தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்ட ஒரு குடும்பத்திலிருந்து ஒரு பெண்மணி புறப் பட்டார். பர்மா வெள்ளைக்கார ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைவதற்காகப் போராடிய அவுங்சான் 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது ஆறு அமைச்சர்களுடன் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த அவுங்சானின் மகள்தான் வீராங்கனை சூ கியி. இவர் தந்தையின் பெயரோடு இணைத்து அவுங்சான் சூ கியி என்றே அழைக்கப்பட்டார். இவரது தலைமையில் தேசிய ஜனநாயக இயக்கம் உருவாயிற்று. மியான்மரில் சர்வாதிகார ஆட்சிக்கு விடை கொடுத்துவிட்டு, ஜனநாயக மலர்ச்சிக்கு வழி வகுப்போம் என்று சூ கியி குரல் கொடுத்தபோது, அவரது பேச்சைக் கேட்க மக்கள் கூடிய இடங்களில் எல்லாம் ராணுவத்தின் அச்சுறுத்தல், மிரட்டல், அடக்கு முறை. ஆனால் அனைத்தையும் மீறி அணையுடைத்து எழும் நீத்தம் போல மியான்மர் நாட்டு மக்கள் அரிமாக்களென ஆர்த்தெழுந்து ராணுவ ஆட்சிக்கு அறைகூவல் விடுத்தனர்.

கைது செய்வது, காராக்கிரகத்தில் தள்ளுவது, கடுமையாக நடத்துவது, காட்டுமிராண்டித்தனமாகப் பழிவாங்குவது போன்ற முறைகளால் நீறு பூத்த நெருப்பாக இருக்கும் எதிர்ப்பு உணர்வுகளையும், ஜனநாயக எழுச்சியையும் நசுக்கி விடலாம் எனக் கணக்கிட்ட சர்வாதிகாரத்தனத்தின் மொத்த உருவமான நீவின், தேசிய ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்தவர் களில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்களைப் பல் வேறு குற்றங்கள் சுமத்தி சிறையிலே அடைத்துவிட்டு அவுங்சான் சூ கியியையும் வீட்டுப் பாதுகாப்பில் வைத்தான். 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த அந்தத் தியாக வல்லிக்கு 1991ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதற் கிடையே 90ஆம் ஆண்டு மே மாதம் ஜெனரல் நீவின் மியான்மர் நாட்டுத் தேர்தலை நடத்தினான். சிறைப் பறவைகளாகக் கிடக்கும் தேசிய ஜனநாயக இயக்கத்தினர் தேர்தலில் வெற்றி பெற முடியாது எனக் கணக்கிட்டு நீவின் நடத்திய அந்தத் தேர்தலில் 27 ஆண்டுக்கால ராணுவ ஆட்சியை பர்மிய மக்கள் முடித்து வைக்கும் ஆசையுடன் தேசிய ஜனநாயக இயக்கத்துக்குப் பெரும்பான்மையான ஆதரவை வழங்கினர். எனவே விரைவில் ஜனநாயக முறைப்படி சூ கியி தலைமை யில் ஆட்சி அரும்பி, மலர்ந்து, மணம் வீசும் என எதிர்பார்த் துக் களித்திருந்த மக்கள் பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாயினர். சூ கியி தலைமையிலான இயக்கம் வெற்றி பெற்று 82 சதவிகித வாக்குகளைப் பெற்றும் கூட சிறைக் கதவு திறக்கப்படவே இல்லை. சர்வாதிகாரி ஜெனரல் நீவின் ஆட்சியே தொடர்ந் தது. சூ கியி தனக்குக் கிடைத்த நோபல் பரிசை வாங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை. 91ஆம் ஆண்டு இறுதியில் சூ கியி சிறையில் இருந்தவாறே உண்ணா நோன்பு போராட்டத்தைத் தொடங்கினார். அவருடைய உறவினர்களோ, நண்பர்களோ யாரும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. வீட்டுச் சிறையிலே அந்த வீராங்கனையின் தொலைபேசிகளும் துண்டிக்கப்பட்டே கிடந்தன. அவரது கணவரைக் கூட செய்தியாளர்கள் சந்திக்கக் கூடாதென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் மியான்மரில் நடைபெற்ற

இந்தக் கொடுமை குறித்து உலகத்தின் எந்த நாடும் அப்போது குரல் கொடுக்கவில்லை என்பதைக் குறித்து வருந்தி நான் ஒரு கடிதம் அப்போது முரசொலியில் எழுதி யிருந்தேன். 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 20ஆம் நாள் வீட்டுச் சிறையிலே வைக்கப்பட்ட சூ கியி ஆறு ஆண்டு களுக்குப் பிறகு 1995ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10ஆம் நாள் விடுவிக்கப்பட்டார். நீண்ட காலம் சிறையிலே இருந்த நெல்சன் மண்டேலா விடுதலை பெற்ற பிறகு அந்த நாட்டின் அதிபராக வர முடிந்ததைப் போல சூ கியி ஆறு ஆண்டுகள் சிறை வாசத்திற்குப் பிறகு விடுதலை பெற்றபோதும் பொறுப் புக்கு வரவில்லை. ஓரளவு சுதந்திரம்தான் அவருடைய விடுதலைக்குப் பிறகும் அளிக்கப்பட்டுள்ளது. அவருடைய இயக்கத்தினரைக்கூட தனியாகச் சந்திக்க அவருக்கு அனுமதி கிடையாது. வெளிநாட்டிலே இருந்த அவருடைய குடும்பத்தினர்கூட சந்திக்கவில்லை. குறிப்பாக அவருடைய கணவர் 1998ஆம் ஆண்டு புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட போது சூ கியியைச் சந்திக்க விசா மறுக்கப்பட்டது. பிறகு அவர் லண்டனில் 99ஆம் ஆண்டு இறந்த போது கூட தனது கணவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த கோரிக்கை வைப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக அவர் கோரிக்கை வைக்காததோடு, கணவரைப் பற்றிக் கூறும் போது, "எனக்கு எத்தகைய ஆறுதல் என் கணவரிட மிருந்து தேவைப்பட்டதோ, அதனை முறையாகத் தந்த நல்ல குணம் கொண்ட ஒரு கணவரை அடையக் கூடிய அதிர்ஷ்டம் பெற் றிருந்தேன் என்ற திருப்தி ஒன்றே எனக்குப் போதுமானது" என்றார்.

1991ஆம் ஆண்டு நவம்பர் திங்களில்தான் "குங்குமம்" இதழில் "நெஞ்சுக்கு நீதி" தொடரின் மூன்றாவது பாகத்தை எழுதத் தொடங்கினேன். அப்போது கழகத்திலே இருந்த வைகோ எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அவர் புதுக்கட்சி கண்டபிறகு என் மீது வாரியிறைக்கும் தடித்த வார்த்தைகளை எல்லாம் காணும்போது; நான் அவரது பழைய கடிதங்களைப் படித்துப் பார்த்து மனத்தை ஆற்றிக் கொள்கிறேன். அவற்றில் ஒரு கடிதம்தான் இது:-

"எனது உயிரினும் மேலான தலைவர், ஆருயிர் அண்ணன், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம். தங்கள் நலமே எங்கள் நலம். நவம்பர் முதல் வாரம் இதயத்தைத் துள்ளிக் குதித்திடச் செய்தது - குங்குமம் தந்திடும் புதிய பரவசம்! பூரிப்பு- புத்துணர்ச்சி. திராவிட இயக்கத்தின் தியாக வரலாற்றின் மூன்றாம் பாகம் தொடருகிறது. தமிழகத்தின் வரலாறு எதிரே அணிவகுத்துப் புறப்படுகிறது. போராட்ட வேள்வி நெருப்பின் சுடர்கள் தமிழன்னைக்கு ஆராதனை செய்திடும் காட்சி விழிகளுக்கும் சிந்தைக்கும் விருந்து படைக்கிறது. இரண்டாம் பாகம் தீட்டிட வேண்டும் தாங்கள் என்று கடற்கரை மணலில் யாசித்தேன்- அருட்கொடை ஆயிற்று- அக்காவியம்- நமது பாசறையின் வலிய படைக்கல னாயிற்று. இயற்கைத் தாயின் வளமார்ந்த உள்ளம் வழங் கிட்ட ஆற்றலே தங்களின் எழுதுகோல்- எத்துணை நோன்புற்றாலும் கிடைத்திடற்கரிய வரப் பிரசாதம்.

"என் எழுத்துக்கள் என் கண்ணீரைத் துடைத்து விட்டு என் தோளில் தட்டும்! துயரம் பறக்கும்! ஏங்கும் நெஞ்சம்! வீங்கும் விழிகள்! ஆறுதல் கூற எழுதுகோல்தான் ஓடிவரும்! எழுதும்! எழுந்து கொள்வேன் நான்! பகை நாணும் படைக் கலன்களாய் எழுத்துக்கள் என் பின்னே அணிவகுக்கும்! எழுதிப் படிப்பேன்! புழுதியெனக் காற்றில் மறையும் பகைப்புலம்!"



சூ கியி

உணர்ச்சியால் துடிக்கும் இச் சொற் களை எவரே ஆள முடியும் - தங்களின் ஆளுகைக்கும் ஆணைக்கும் அல் லவோ இத்தகைய வார்த்தைகள் அருவி யென துள்ளிப் பாய்கின்றன. உங்களின் தோளினைத் தட்டிய எழுத்துக்கள் லட்சோபலட்சம் உடன்பிறந்தார் தோள்களையல்லவா தடந்தோள் களாக்குகின்றன. மூன்றாம் பாகத்தைத் தாங்கள் எழுதிட வேண்டும் என்று இரண்டாண்டுகளுக்கு முன்னர்

தங்களை வேண்டினேன். ஆட்சிப் பொறுப்பின் சுமையும், அலுவல் பளுவும் - நேரம் வழங்கவில்லை. இந்த வீர காவியத்தைத் தங்களைத் தவிர்த்து இன்னொரு ஜான்சன் தீட்ட முடியாது - என் போன்றவனின் இயக்கம், கிடைத் துள்ள எளிய ஆற்றல் அனைத்தும் தங்களின் அன்பாலும் பரிவாலும் கிடைக்கப் பெற்றவையே! எந்தத் திசையில் இருப்பினும் ஆதவனை நோக்கியே திரும்பும் தாமரை! பிரம்மன் படைப்பினை புராணம் புகல்கிறது. தங்களால் உருவாக்கப்பட்ட வார்ப்படம்தான் இந்தத் தம்பி. என்றும் தங்கள் புகழ்பாடும் வை. கோபால் சாமி."

எவ்வளவுதான் இப்போது கசப்பு உணர்வை அவர் காட்டி னாலும்; இந்தக் கடிதa வாசகங்கள் என்றைக்கும் எனக்கு தித்திக்கக் கூடியவை அல்லவா!

21-11-1991 அன்று இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பு தமிழகம் முழுதுமுள்ள மக்களின் கவனத்தை ஈர்த்தது எனலாம்.

காவல் துறை என்பது கடமையாற்றும் வீரர்களின் பாசறை- நெஞ்சில் நேர்மை எனும் கேடயம் தாங்கி; பாரபட்சமற்ற தன்மையெனும் படைக்கலனைப் பயன் படுத்தி- சமுதாயக் கேடுகள் போக்கவும் - நாடு காக்கவும்- மனச்சாட்சியுடன் மக்களுக்கிடையே பணியாற்றும் தூய்மை யாளர்களின் பாடி வீடு! அப்படித்தான் அந்தத் துறை இருக்க வேண்டும். ஆனால் உலையில் போடப் பட்ட அரிசியோடு ஒருசில கற்களும் கலந்து மறைந்து சோற்றுக்குள் ஒளிந் திருந்து பற்களைப் பதம் பார்ப்பது போல காவல்துறையில் கடமையாற் றும் நல்லோர் பலருக்கு மத்தியில் பொல்லார் சிலரும் இடம் பெற்று விடுகின்றனர். அத்தகையோர் விளைத் திட்ட வினைகளில் ஒன்றுதான் இராம நாதபுரம் செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்த ஒரு வழக்கு.



சுப்புலட்சுமி ஜெகதீசன்

பாண்டியம்மாள் என்ற பெண்மணியை அவரது கணவர் வேலுச்சாமி, மகன் அர்ச்சுனன், மதுரை வீரன் ஆகிய மூவரும் கொலை செய்ததாக 91ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டனர். அழுகிய நிலையில் கிடந்த ஒரு பெண்ணின் பிணத்தைப் பாண்டியம்மாள் பிணம்தான் எனக் கூறி கைது செய்யப்பட்ட மூவர் மீதும் கொலை வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக் கும் போது திடீரென ஒரு நாள் கொலையுண்டு இறந்து போனதாகக் கூறப்பட்ட பாண்டியம்மாள் நீதிமன்றத்துக்கே வந்து, தான் உயிரோடிருப்பதாகக் கூறினார்.

காணாமற் போயிருந்த பாண்டியம்மாளை அவரது கணவரும் மற்றும் இருவரும் கொலை செய்து விட்டார்கள் என்று போலீசார் வழக்கு ஜோடித்து விட்டதாகவும், அது பொய் வழக்கு என்றும் ஆனந்தவிகடன் ஆசிரியர் திரு. பால சுப்ரமணியம் அவர்கள் உயர்நீதிமன்றத்தில் ஒரு ஹேபியஸ் கார்பஸ் மனுவைத் தாக்கல் செய்தார்.

அரசியல் காரணங்களுக்காக வேண்டாதவர் மீது பயங்கர வழக்குகள் தொடரப்படுவதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைக் கூற வேண்டு மேயானால், கழகச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த மயிலாடு துறை கிட்டப்பா வீட்டுத் தோட்டத்துச் சுவரோரம் ஒரு சிலையைப் போட்டு விட்டு, அவரை சிலை திருடிய வழக்கில் அ.தி.மு.க. அரசு கைது செய்து, அவர் தன்மீது சுமத்தப்பட்ட களங்கத்தினால் மன நிம்மதி இழந்து, பிறகு எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க.விலேயே சேர்ந்து, பிறகு அந்த வழக்கு கேட்பாரற்றுப் போய் - களங்கம் வந்ததே என்ற கவலையில் அவரும் விரைவில் இறந்து போய் - மலர் வளையம் வைத்து அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திட நான் மயிலாடுதுறைக்குச் சென்றதும், அவர் மறைவினால் நடந்த இடைத்தேர்தலில் கழகம் வென்றதும் கடந்த கால வரலாறு!

ஆனந்தவிகடன் பாலு அவர்கள் தாக்கல் செய்த மனுவிலே அப்பாவியான மூன்று பேர் மீது போலீசார் பொய் வழக்கு

போட்டது குறித்து உயர் போலீஸ் அதிகாரிகள் விசாரிக்க வேண்டுமென்றும், அந்த வழக்கில் கைதாகியுள்ள மூவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டுமென்றும், சட்ட விரோதமாக அவர்களைப் பல மாதங்கள் சிறையிலே வைத்திருந்ததற்காகத் தலா மூன்று இலட்ச ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமென்றும் உயர்நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

21-11-91 அன்று தீர்ப்பு வழங்கிய இராமனாதபுரம் செஷன்ஸ் நீதிபதி- "உயிருடன் இருக்கும் ஒரு பெண் கொலை செய்யப்பட்டுவிட்டதாக வழக்கு தாக்கல் செய்யப் பட்டிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது-

வேடிக்கை என்னவென்றால் எதிரிகள் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்து, அதன்படி ஆயுதம் கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டதாகும்.

கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் பெண் இப் போது உயிரோடு இருக்கிறாள். எனவே போலீசார் கவனத் தோடு செயல்பட்டு புலன் விசாரணை நடத்தியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்தக் காலத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது சர்வ சாதாரணமாகப் போய்விட் டது. போலீஸ் சித்திரவதைக்குப் பயந்து, செய்யாத குற்றத் தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிற சூழ்நிலையும் இருப்ப தாகத் தெரிகிறது.

சாட்சியை வைத்துத்தான் தீர்ப்பு கூறப்பட வேண்டியுள் ளது. திறமையான ஒரு போலீஸ் அதிகாரி சாட்சிகளுக்குச் சொல்லிக் கொடுத்து நீதிமன்றம் நம்புகிற அளவில் சாட்சி யத்தை வழங்கினால், அதை நீதிமன்றம் நம்பி செயல்பட வேண்டிய நிலை இருக்கிறது. எனவே போலீஸ் அதிகாரியின் திறமையைப் பொறுத்து ஒருவர் தண்டிக்கப்படவும் அல்லது அவர் விடுதலை செய்யப்படவும் கூடும்" என்று தீர்ப்புக் கூறினார்.

உள்துறைச் செயலாளராகவும் என்னிடம் செயலாளராக வும் இருந்த நாகராஜனைக் காவல்துறையினர் நவம்பர்

20ஆம் தேதி இரவு கைது செய்தது பற்றியும், அதனைக் கண்டித்து நான் கொடுத்த அறிக்கை பற்றியும் கடந்த அத்தி யாயத்தில் சுருக்கமாகக் கூறியிருந்தேன். திருச்சி நீதிமன்றத் தில் அவர் நவம்பர் 21ஆம் தேதி கொடுத்த வாக்குமூலம் அனைத்து ஏடுகளிலும் வெளியாகியிருந்தது. திரு. நாக ராஜன் நீதிபதியிடம் கூறும்போது, மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கைகள் குறித்து, காவல் துறை பொறுப்பை வகிக்கும் செயலாளர் என்ற முறையில் 80 பக்க அறிக்கை ஒன்றை அரசின் வேண்டுகோளுக்கிணங்க தான் தாக்கல் செய்ததாகத் தெரிவித்ததோடு, தற்போதைய அரசியல் விளையாட்டில் தான் ஒரு பகடைக்காயாக ஆக்கப்பட்டிருப்பதாகவும் அந்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார். திருச்சி சிறையிலே அடைக்கப்பட்ட நாகராஜன், சென்னைக்கு 27ஆம் தேதி யன்று தடா வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட முடியாத அளவிற்கு உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டது.

திடீரென்று நவம்பர் 30ஆம் தேதி சனிக்கிழமை, நீதிமன்றம் விடுமுறை என்றபோதிலும், திறக்கப்பட்டு, நாகராஜன் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலம் கொடுக்கும்வரை திருச்சி சிறையிலே இருந்த நாகராஜன், அது முடிந்ததும் நேராகச் சிறைக்கு அழைத்துச் செல்லப் படவில்லை. அங்கிருந்து நேராக திருச்சி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்; அங்கே செய்தியாளர்களை யெல்லாம் சந்திக்க 'தடா' கைதியாக இருந்த அவர் அனுமதிக்கப்பட்டார்; அப்போது என் மீது அடுக்கடுக்கான புகார்களைத் தொடுத்தார். என்னுடைய அரசியல் வரலாற்றில் இதுபோன்ற பல சம்பவங்களைச் சந்தித்தவன் என்ற முறையில் அது அப்போது எனக்கு வேதனையாகத் தெரிய வில்லை. ஆனால் அவர் திருச்சி நீதி மன்றத்திலே அளித்த நீண்ட வாக்குமூலம் காவல்துறையினரால் தட்டச்சு செய்யப் பட்டு, அதிலே காவல்துறை அதிகாரிகளால் பேனாவினால்

திருத்தமும் செய்யப்பட்டு, திருச்சிக்கு அனுப்பப்பட்டது என்பதை ஆதாரபூர்வமாக செய்தியாளர்களிடம் நகல்களுடன் விளக்கிக் காட்டினேன். அதைப்பற்றி விரிவாகவும், சிறையில் இருந்த அந்த அதிகாரிக்கு 15 பக்கம் வாக்குமூலம் தயாரிக்க எப்படி முடிந்தது என்றும், அவர் அந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பு சென்னையிலிருந்து போலீஸ் துறை அதிகாரிகள் இரண்டு பேர் திருச்சிக்கு வந்து நீண்ட நேரம் சிறையிலே சந்தித்துப் பேசியதாகவும், அதற்குப் பிறகு ஐ.பி.எஸ். அந்தஸ்து உள்ள ஒரு அதிகாரி சென்னையிலிருந்து திருச்சி வந்து சிறையிலே அந்த அதிகாரியைச் சந்தித்ததாகவும், சிறையிலே இருந்தபோது மருத்துவமனையிலே அனுமதிக்கப்படாத அந்த அதிகாரி வாக்குமூலம் கொடுத்ததும் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டது மாத்திர மல்லாமல், செய்தியாளர்களை அழைத்து தடா கைதி ஒருவரால் பேட்டி கொடுக்க முடிந்தது பற்றியும் பத்திரிகைகள் வியந்து எழுதின.

திரு. நாகராஜன் கைதானதைத் தொடர்ந்து சில நாட்களுக்குப் பிறகு திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசனையும், அவரது கணவர் ஜெகதீசனையும் தடா சட்டத்தின் கீழ் அ.தி.மு.க. அரசு கைது செய்து மதுரை சிறையிலே அடைத்தது. கோவை மாவட்டத்தில் கழக ஒன்றியச் செயலாளராக இருந்த தளி மாரிமுத்துவையும் அடுத்து கைது செய்தது. அதற்கடுத்த சில நாட்களில் போலீஸ் டி.ஐ.ஜி. யாகக் கழக ஆட்சியில் புலனாய்வுத் துறையில் திறம்படப் பணியாற்றிய நேர்மையான அதிகாரி ஜாபர் அலி, ஐ.பி.எஸ., அவர்களை எந்தவிதமான காரணத்தையும் தெரிவிக்காமல் திடீ ரென்று பணி நீக்கம் செய்தார்கள்.

1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இரண்டாவது வாரத்தில் அப்போது சீனப் பிரதமராக இருந்த லீ பெங் இந்தியாவில் ஆறு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அந்தச் சுற்றுப் பயணம் உலகம் முழுவதுமிருந்த அரசியல் பார்வை யாளர்களின் கவனத்தை ஈர்த்தது. காரணம், இந்தியாவிற்கு சீனப் பிரதமர் ஒருவர் வருகை தருவது சுமார் 30



லீ பெங்

ஆண்டுகளுக்குப்பிறகு அதுதான் முதல் முறையாகும். சீனப் பிரதமராக இருந்த சூ யென் லாயின் வருகைக்குப் பிறகு இந்தியாவிற்கு வந்த சீனப் பிரதமர் லீ பெங் அவர்கள்தான். இவர் சூ யென் லாய் அவர்களின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. 1954ஆம் ஆண்டு சீனாவிற்கு பிரதமர் பண்டித நேரு சென்றதற்குப் பிறகு, 1988இல் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களும் சீனாவிற்குச் சென்றார். 11-12-91 அன்று சீனப் பிரதமர் டெல்லி வந்து சேர்ந்தார். வந்ததுமே, இந்தியத் தலைவர்களுடன் தான் நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தைகள் மூலம் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தொடக்கம் ஒன்று ஏற்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அந்தச் சுற்றுப்பயணத்தின் விளைவாக இரு நாடுகளிடையே 30 ஆண்டுகளாக இருந்து வரும் எல்லைப் பிரச்சினைக்கு விரைவான பரஸ்பரம் ஏற்கக் கூடிய தீர்வு காண இரண்டு நாடுகளும் உறுதி எடுத்துக் கொண்டன. இரு நாடுகளின் சார்பில் கூட்டறிக்கை ஒன்றும் கையெழுத்தாகியது. அதில் வர்த்தகம் உட்பட பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காண இரு தரப்பினரும் கூட்டாக முயற்சி எடுக்க வேண்டும் என்றும், சுகாதாரம், கல்வி, விவசாயம், எரிசக்தி ஆகிய துறைகளில் ஒன்றுபட்டுச் செயல்படுவ தென்றும் குறிப்பிடப்பட்டது.

33 அடக்குமுறை, அராஜகம் அங்கும் இங்கும்!

தமிழகத்துக்குக் கர்நாடகம் ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டும் என காவிரி நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பை 1991ஆம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு, அரசிதழில் வெளியிட்டதைத் தொடர்ந்து கர்நாடகத்தில் வாழும் தமிழர்கள் மீது அங்கே தாக்குதல் நடைபெற்றது. தொடர்ந்து மூன்று நாட்கள் அந்த மாநிலத்தில் துப்பாக்கிச் சூடும் நடந்தது. பெங்களூரிலிருந்த நூற்றுக்கணக்கான தமிழர் குடும்பங்கள் அங்கேயிருக்க அஞ்சிக்கொண்டு வேலூர் போன்ற இடங்களுக்கு வந்து விட்டனர். பெரும்பாலானவர்கள் பெங்களூரில் கட்டுமானப் பணி தொழிலாளர்களாவர். கர்நாடகத்தின் வேறு பகுதி களிலேயிருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் வெளியேறி தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு வந்து விட்டனர். கர்நாட கத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து தி.மு. கழகத்தின் சார்பில் 15-12-91 அன்று கண்டன ஊர்வலம் ஒன்று என்னுடைய தலைமை யில் சென்னையிலே நடைபெற்றது.

கர்நாடகத்தில் வன்முறை தொடர்ந்த காரணத்தினால் அங்கு வாழும் தமிழர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை உடனடியாக ராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவ் அவர்களுக்கு நான் தந்தி அனுப்பி னேன். அதில் "கர்நாடக மாநிலத்தில் பல தமிழர்கள் கொல்லப்படுவதாக தி.மு.க. அலுவலகத்திற்குத் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்

படுகிறார்கள். சொத்துக்கள் நாசப்படுத்தப் படுகின்றன. குழந்தைகளைத் தீயில் தூக்கிப் போடுகிறார்கள் என்றெல் லாம் தகவல்கள் வருகின்றன. தற்போதுள்ள சூழ்நிலையில் அங்கே ராணுவத்தினரை அனுப்புவதின் மூலமாகத்தான் தமிழர்களைக் காப்பாற்ற முடியும்" என்று குறிப்பிட்டிருந் தேன். தொடர்ந்து தமிழர்கள் கர்நாட கத்தில் சித்ரவதைக் காளாயினர். திருக்கணாம்பிகை அருகே ஒரு வீட்டில் 3 தமிழர்கள் பூட்டி வைக்கப்பட்டு உயிரோடு எரிக்கப்பட் டார்கள். தமிழர்களுக்கெதிரான வன்முறைத் தாக்குதல் தொடர்ந்ததைக் கண்டித்து 30-12-91 அன்று தமிழக அரசின் சார்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 2-1-92 அன்று தமிழகம் முழுவதும் இந்தப் பிரச்சினைக்காக 'பந்த்' நடத்துவதென்று முடிவெடுக் கப்பட்டது. 'பந்த்' தமிழகத்திலே முழுவெற்றி பெற்றது. 12-1-1992 அன்று சென்னையில் நடைபெற்ற கழக நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி ஜனவரி 22ஆம் நாளன்று கர்நாடகத் தமிழர் பிரச்சினைக்காக மாநிலம் முழுதும் எல்லா ஊர்களிலும் கறுப்புக் கொடி ஊர்வலங்கள் நடத்துவதென்றும், விலைவாசி உயர்வு, பேருந்து, ரெயில் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து 27ஆம் தேதி அன்று மத்திய மாநில அரசு அலுவ லகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும், தடா சட்ட துஷ்பிரயோகத்தை எதிர்த்து பிப்ரவரி 3 ஆம் தேதி மாலை சென்னையில் ஊர்வலம் ஒன்றை நடத்தி ஆளுநரிடம் முறையீட்டு மனு ஒன்றினை அளிப்பதென்றும் முடிவெடுக் கப்பட்டது. அறிவித்தவாறே மூன்று நிகழ்ச்சிகளும் எழுச்சி யோடும் சிறப்பாகவும் நடைபெற்றன. ஆனால் பிப்ரவரி 3ந் தேதியன்று ஆளுநர் மாளிகை நோக்கிச் சென்ற பேரணி யிலே லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதைப் பொறுக்காத ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊர்வலத் தினர் மீது கற்களை வீசி கலகம் விளைவித்தனர். ஊர்வலம் ஆளுநர் மாளிகையைச் சென்ற டைந்த பிறகு, நானும், கழக முன்னணியினரும் ஆளுநர் மாளிகைக்குள் மனு கொடுப்பதற் காக உள்ளே சென்றிருந்த நேரத்தில் அங்கே திரண்டிருந்த

கழகத் தோழர்கள் மீது- சைதாப்பேட்டை நீதிமன்றத்திற்கு எதிரேயிருந்த பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டன. காவல் துறையினர் தடியடி நடத்தி கூட்டத் தினரை ஓட ஓட விரட்டினர். காவல்துறை தாக்குதல் காரணமாக ஏராளமான கழகத் தோழர்கள் காயமடைந்தனர். ரத்தம் சொட்டச் சொட்ட அவர்கள் மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்டனர். அந்தப் பதற்றமான சூழ்நிலையில் திடீரென்று காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். காலாடிப்பேட்டை சேஷகிரி காலனியைச் சேர்ந்த கிருஷ்ணசாமியின் மகன் ஜெயபாண்டியன் காலில் குண்டு பாய்ந்து அவரது கால் ஒடிந்தது. நெய்வேலி தாண்டவன்குப்பத்தைச் சேர்ந்த ஐயலு என்பவருக்குத் தலையிலே குண்டு பாய்ந்தது. துறைமுகம் அன்னை சத்தியா காலனியைச் சேர்ந்த சாமு வேலுக்கு விலா எலும்பு முறிந்தது. கோவை லிங்கேச கவுண்டர் காலனியைச் சேர்ந்த ராஜாம்பாள் என்பவருக்கு வாய் கிழிந்தது. சென்னை 3வது வட்டத்தைச் சேர்ந்த தனசேகரனுக்கு இரண்டு கால்களிலும் குண்டு பாய்ந்தது. கோவை சுந்தரபாளையம் தங்கவேலு என்பவருக்குத் தொடையில் குண்டு பாய்ந்தது.



கர்நாடக வன்முறைச் சம்பவத்தை எதிர்த்து நடந்த கண்டன ஊர்வலம்.

குண்டடிபட்டு மருத்துவமனையிலே இருந்த தனசேகரன் தீவிர சிகிச்சைக்குப் பின்னரும் பிழைக்காமல் மறைந்து விட்டார்.

கலவரத்திற்குக் காரணம் யார் என்பதைப்பற்றி எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டபோது, "இவ்வளவு பெரிய கூட்டத்திற் குப் போதிய போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. போலீசாரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. ஊர்வலத்தினர் பல்லவன் பணிமனையை நெருங்கிய போது, பணிமனையிலிருந்து சரமாரி கல் வீச்சால் தாக்கப்பட்டனர். அப்போது பணி மனையிலிருந்த தி.மு.க. ஊழியர்களுக்கும் அ.தி.மு.க.வினருக்கு மிடையே கடும் மோதல் ஏற்பட்டது" என்று தெரிவித்திருந்தது. கழகத் தோழர்கள் மீது நடைபெற்ற தாக்குதல் குறித்து நான் முரசொலியிலே அப்போது எழுதிய கடிதத்திற்குத் தலைப்பு - "ஒதியமிலார் அல்ல; உன் வீரம்!" என்பதாகும். அந்தக் கடிதம் வருமாறு :-

உடன் பிறப்பே,

உன்னையேன் உருகி உருகி சென்னைப் பேரணிக்கு அழைத்தேன் என்று என்னையே நான் நொந்து கொள் கிறேன் இப்போது!

பிப்ரவரி 3 பேரணி முடிவுற்று அண்ணா அறிவாலயத்தில் நானும் பேராசிரியரும் சாதிக்கும் நாஞ்சிலாரும் அமர்ந் திருந்த போது; எத்தனை எத்தனை உடன்பிறப்புகள் இரத்தம் சொட்டச் சொட்ட தூக்கி வரப்பட்டனர் - எத்தனை பேர் உடல் முழுதும் உருண்டை உருண்டையாக வீங்கிப்போன ஊமைக் காயங்களுடன் எங்கள் முன் வந்து விழுந்தனர்-

"உங்களுக்கென்ன ஆயிற்று; ஊர்வலம் முடிந்து நெடுநேரம் ஆகிறதே! உங்களை ஏன் அடித்தார்கள்? யார் அடித்தது?" கேட்டோம் அவர்களை!

"ஊர்வலத்தில் தாக்கப்பட்டவர்களையும் துப்பாக்கிக் குண்டுகளால் காயம்பட்டவர்களையும் மருத்துவமனைக்குக் கொண்டு போய் விட்டார்கள். நாங்கள் அமைதியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். மறைமலை அடிகள்

பாலத்தில் போலீசார் வேன்களில் வந்து எங்களை வழி மறித்து "எந்த ஊருடா நீங்க?...யா பசங்களா!" என்று கேட்டுக் கொண்டே தடியடிப் பிரயோகம் செய்தனர். எங்களில் ஒருவர் "ஈரோடு" என்றார். "ஓ! ராமசாமி நாய்க்கன் ஊரா? அப்ப இன்னம் ரெண்டு சேத்து வாங்கிக்க!" என்று அவரைக் கீழே உருட்டி ஒரு போலீஸ் அதிகாரி அடித்தார்!..." "ஏன்ய்யா எங்களை வீணா அடிக்கிறீங்க? நாங்க பேரணிக்கு வந்துட்டு அமைதியாகத்தானே திரும்புறோம்" என்று கேட்டதற்கு "...தடா எதிர்ப்புப் பேரணிக்கு வந்தீங்கள்ளே."

இப்படித்தாண்டா தடால் தடால்னு விழும் - உங்க தலைவனுக்கும் விழும்!" என்று பலங்கொண்ட மட்டும் அடித்தார் கள்" என்று வலியாலும் ஏற்படாத வேதனை அந்த வார்த்தை களால் ஏற்பட்டதே என்று வாடிப்போய் நின்றனர். தம்பிகள் டி.ஆர். பாலுவும் உசேனும் மற்றும் கழக முன்னணி யினரும் துப்பாக்கிச் சூட்டில் காயம்பட்டவர்களை மருத்துவமனைகளில் சேர்த்துவிட்டு, காயமுற்றோர் சிலர் கவலைக்கிடமான நிலையில் உயிருக்குப் போராடிக் கொண் டிருப்பதைத் தெரி வித்தபோது; உடன்பிறப்பே! என் உள்ளம் பட்ட பாட்டை எப்படி எழுத்துக்களில் விளக்க முடியும்!


பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராகப் பணி யாற்றும் சக்கரவர்த்தி என்ற கழக உடன்பிறப்புக்கு உயிர் நிலைக்கு அருகாமையில் துப்பாக்கி ரவை பாய்ந்து பிழைப் பது கேள்விக்குறியாக உள்ளது. கோவை ராசம்மாள் என்ற மூதாட்டி, இந்த மகனின் அழைப்பை ஏற்று சென்னைப் பேரணிக்கு வந்த குற்றம்; முகத்தில் காயமுற்றுள்ளார். ஓடச் சக்தியற்ற உடல்வாகு! அவர் ஓட ஓடப் போலீசாரால் துரத்தப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார்.

மற்றும் தங்கவேலு, சாமுவேல், ஜெயபாண்டியன், தன சேகரன் ஆகியோரையும் மருத்துவமனையில் கண்டோம் - மூவரில் இருவர் பிரக்ஞையற்ற நிலையில்!

தனசேகரன் தேக்கு மரத் தேகம் படைத்த வாலிபன்! அவன் கால்களில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து பெருமளவு

இரத்தம் வெளியேறிவிட்டதால்; இளைஞரணி தம்பி உமாபதி போன்றோர் இரத்தம் கொடுத்துள்ளனர். அந்தக் கட்டுடல் வீரனின் கால்களில் ஒன்று வெட்டப்பட வேண்டுமாம்- அத்துணை சேதம்! தனசேகரன் குடும்பத்தினர் எங்களைச் சூழ்ந்துகொண்டு அழுது புலம்பியதை; அம்மவோ! தாங்கிக் கொள்ள முடியவில்லை!

"தடா" எதிர்ப்புப் பேரணி லட்சோப லட்சம் மக்களைக் கொண்ட மனித வெள்ளமாகக் காட்சி அளித்ததையும் - அமைதியாகவும் கட்டுப்பாட்டு உணர்வுடனும்- அனைவரும் பாராட்ட நடைபெற்றதையும் கேள்விப்பட்டவுடன் ஆளுங்கட்சியினர் அதைக் குந்தகப்படுத்த கற்கள், குண்டாந் தடிகள், துப்பாக்கிக் குண்டுகள் என்ற ரீதியில் போலீஸ் துணையுடன் தாக்கு தலைத் தொடங்கினர். பேரணியைக் கலைத்தனர்- சிதறியோடச் செய்தனர் - ஆளுநர் மாளிகைக்கு முன்னால் நான் பேசுவதற்கு மேடை அமைத்திட அனுமதி பெற்று குறிப்பிட்ட தொலைவுக்கு அப்பால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. மக்கள் அந்த மேடை யருகே வர முடியாமல் போலீசாரால் தாக்கப்பட்டனர். அந்தக் கொடுமையையும் மீறிக் கூட்டம் நடைபெற்றது.



கண்டனப் பேரணி இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் உரையாற்றுகிறார். உடன் முன்னணித் தலைவர்கள்.

ஆனால் ஜெயலலிதா சட்டப் பேரவையில் ஓர் அறிவிப்பைச் செய்துள்ளார்.

தி.மு.க. பேரணி நடத்துவதென்றால் நிபந்தனை ஒப்பந்தத் தில் நான் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டுமாம்!

அண்ணன் குத்தூசி குருசாமி இருந்தால் இப்படி எழுதுவார்:- "முதல் மந்திரியின் இந்த நிபந்தனையைக் கேட்டு அரசியல்வாதிகள் வாயால் கூட சிரிக்க மாட்டார்கள்... யால்தான் சிரிப்பார்கள்" என்று எழுதுவார்!

பெரியார் இருந்தால் "இது என்ன நிபந்தனை! வெங்காய நிபந்தனை" என்று கேட்பார்!

புரட்சிக் கவிஞர் இருந்தால் "தடைக் கற்கள் உண்டெனி னும் தடந்தோள்கள் உண்டெனச் சிரிப்போம்" என்று முழங்கியிருப்பார்!

அண்ணன் தளபதி அழகிரி இருந்தால் "உன் ரதகஜதுரக பதாதிகளை ஒரு கை பார்ப்போம்!" என்பார் வான் நோக்கிக் கைநீட்டி!

அறிஞர் அண்ணா இருந்தால் "இராமலிங்க விலாஸ் பிரியாணி ஓட்டல் என்பது போல என் பெயரை கட்சிக்கு வைத்துக் கொண்டு சர்வாதிகாரக் காட்டுத் தீயைக் கொண்டு ஜனநாயகத்தைப் பொசுக்குவதா?" என வேதனைப் பட்டிருப்பார்.

நாம்; இவர்களின் கருத்துக்களுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுப்போம்!

மும்முனைப் போர் முதல் கட்டம் முடிந்தது - அடுத்த கட்டங்களைப் பற்றி விவாதித்து முடிவெடுப்போம்!

நான் அழைத்தேன்! வந்தாய்! அடிபட்டு நொந்தாய்!

அதற்காக அடுத்த கட்டப் போராட்ட அழைப்புக்கு ஒதுங்கி விடும் "ஒதியமிலார் அல்ல உன் வீரம் என்பது எனக்குத் தெரியும்!"

-இவ்வாறு அந்த உடன்பிறப்பு கடிதத்தில் நான் எழுதியிருந்தேன்.


அப்போது திருச்சி நகருக்கு வருகை தந்திருந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது தடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி வரும் அ.தி.மு.க. அரசைக் கண்டித்து நாடு தழுவிய இயக்கத்தைத் தான் முன்னின்று நடத்தத் தயார் என்று தனது உரையிலே குறிப்பிட்டார். அன்றைய நிலையில் தமிழ்நாடு ஒரு மிகப் பெரிய சிறைச்சாலையாகத்தான் தனக்குக் காட்சி அளிக்கின்றது என்று கூறிய அவர், பொறுப்புணர்வு மிகுந்த ஒரு பதவியில் இருப்பதை ஜெயலலிதா உணர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

திராவிட இயக்கத்திற்கு 75 ஆண்டுகள் நிறைவானதை யொட்டி 91ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21, 22 ஆகிய இரண்டு நாட்கள் பவளவிழா மாநாடு மதுரை மாநகரில் சௌந்தர பாண்டியன் நகரில், பி.டி.ராஜன் பந்தலில், தென்னரசு தோரண வாயிலில் சிவகங்கை ராமச்சந்திரன் அரங்கில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் பேராசிரியர் மாநாட்டுத் திறப்பாளர். பொன். முத்துராமலிங்கம் வரவேற்புக் குழு தலைவர். மாநாட்டினையொட்டி 21ஆம் தேதி நடைபெற்ற ஊர்வலத்தில் 15 லட்சம் பேர் பங்கேற்றனர். தமிழ்நாட்டில் இதற்குமுன் நடைபெற்ற எந்த வொரு மாநாட்டிற்கும் இப்படி மக்கள் கூட்டம் திரண்டதில்லை என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" ஏடு அப்போது வர்ணித்திருந்தது. "ஸ்டேட்ஸ் மென்" இதழோ, லாரி பேருந்துகளில் திரட்டி வரப்பட்ட கூட்டமில்லை, கட்டணம் செலுத்தி மாநாட்டிற்குச் செல்ல அலை மோதிய மக்கள் வெள்ளம் என்று எழுதியது.

பஞ்சாப் மாநிலத்தில் தீவிரவாதிகள் தொடங்கிய வன்முறையைத் தொடர்ந்து 1985ல் பிரகாஷ்சிங் பாதல் தலைமையிலிருந்த அகாலிதள ஆட்சியை பிரதமர் ராஜீவ் காந்தி கலைத்தது முதல் அந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டு ஐந்தாண்டுகள் ஆகியும்

ஜனநாயக முறையிலே தேர்தல் நடத்தப்படவில்லை. அங்கே பாராளுமன்றம் மற்றும் சட்ட மன்றத்துக்குப் பலமுறை தேர்தல் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தீவிரவாதிகள் வன்முறை வெறியாட்டம் காரணமாக தேர்தல் தள்ளி வைக்கப்பட்டு வந்தது. எத்தனை வகையில் முயன்றும் பிரிவினை கோரும் தீவிரவாதிகளின் பயங்கர வாதச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிதான் இந்த நிலையை மாற்ற முடியுமென்று தேசியக் கட்சிகள் அனைத்தும் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இறுதியாக 92ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ஆம் நாளன்று சட்டமன்றத் தேர்தல் நடைபெறுமென்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 91ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தேர்தல் நடத்த முற்பட்ட போது, போட்டியிட்ட வேட்பாளர்கள் 21 பேரை பயங்கர வாதிகள் சுட்டுக் கொன்று விட்டனர். அதன் காரணமாக 17 சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் 4 மக்களவைத் தொகுதி களில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. நரசிம்மராவ் ஆட்சி அதற்குள் அமைக்கப்பட்டு, பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல் முழுவது மாகவே ரத்து செய்யப்பட்டு விட்டது.

பிரிவினைவாதத்தை எதிர்க்கும் தேசியக் கட்சிகள் ஒவ்வொரு தொகுதியிலும் பொதுவான வேட்பாளரை நிறுத்துவது நல்லது என்ற பா.ஜ.க.வின் யோசனையை இந்திரா காங்கிரஸ் வரவேற்றது. ஆனால் கம்யூனிஸ்ட் மற்றும் ஜனதாதளக் கட்சிகள் பா.ஜ.க.வுடன் எந்தவித கூட்டும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் இந்தக் கட்சி களுக்கு அந்த மாநிலத்தில் அப்போது அவ்வளவாகச் செல் வாக்கில்லை. ஆனால் வேட்பு மனு தாக்கல் தொடங்கிய வுடன் பயங்கரவாதிகளின் வன்முறையும் தொடங்கியது. ஹரிபல்சிங் என்பவரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட் பாளராக அறிவித்து, அவர் வேட்பு மனு தாக்கல் செய்ய விருந்த நிலையில் அவரது வீட்டில் பயங்கரவாதிகள் புகுந்து அவரைச் சுட்டுக் கொன்றனர். இந்தத் தேர்தலை அகாலி தளத்தின் நான்கு முக்கிய குழுக்களும், அகில இந்திய சீக்கிய மாணவர் சம்மேளனமும் புறக்கணித்தன. 117 சட்டமன்றத்



கர்நாடகத் தாக்குதலிலிருந்து தப்பி ஓடிவந்த தமிழ்க் குடும்பங்கள்.

தொகுதிகளுக்கு 525 வேட்பாளர்களே களத்தில் நின்றார்கள். 90ஆம் ஆண்டு தேர்தல் ரத்து செய்யப்பட்டபோது போட்டியிட்டவர்களில் நான்கில் ஒரு பகுதியினர்தான் இவர்கள். பஞ்சாப்பில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் மீது பயங்கரவாதிகள் சுட்டதில் பா.ஜ.க. ஆதரவாளர்கள் 5 பேர் கொல்லப்பட்டனர். அதுதவிர ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், 4 பயங்கரவாதிகள் உட்பட மேலும் 8 பேர் உயிரிழந்தனர். தேர்தல் நாளன்று 7 இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றில் சிக்கி மூன்று பேர் இறந்தனர். 30க்கும் அதிகமானவர் காயமடைந்தனர். 24.23 சதவிகித வாக்குப்பதிவே நடந்தது.

அந்தத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும் வெற்றியைப் பெற்றது. மக்களவை உறுப்பினர்கள் மொத்தம் 13 இடங்களில் 12 இடங்களில் இந்திரா காங்கிரசும், ஒரு இடத்தில் பகுஜன சமாஜ கட்சியும் வெற்றி பெற்றது. சட்டமன்றத்திற்கு மொத்தம் 117 இடங்களில் 86 இடங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சியும், பகுஜன சமாஜ கட்சி அடுத்து 9 இடங்களிலும், பா.ஜ.க. 8 இடங்களிலும் ஏனைய கட்சிகள் பிற இடங்களிலும் வெற்றி பெற்றன.

பஞ்சாப் மாநிலத்தில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை சுமார் ஒரு கோடியே 32 லட்சம். அதில் பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை சுமார் 32 இலட்சம்தான். அந்த 32 லட்சத்தில் 11 லட்சத்து 65 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ் 86 இடங்களில் வென்று ஆட்சி அமைத்தது. அதாவது மொத்த வாக்குகளில் 9 சதவிகித வாக்குகள் பெற்ற ஒரு கட்சி பஞ்சாப்பில் ஆட்சி அமைத்தது. இதற்குப் பெய ரும் ஜனநாயகத் தேர்தல்தான்! இந்தத் தேர்தலில் விழுந்த வாக்குகள் கூட, ராணுவப் பாதுகாப்புடன் குத்திப் போட்டுக் கொண்டவை என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் அறிக்கை விடுத்தார்கள்.

பஞ்சாப் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் திரிபுரா மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் - திரிபுரா உப ஜாதி யுவ சமிதி கூட்டணி அரசு கவிழ்ந்தது. அந்தக் கூட்டணியிலேயிருந்த சமிதி உறுப்பினர்கள் விலகிய தன் விளைவாக அந்த நிலை ஏற்பட்டது. 60 உறுப்பினர்கள் கொண்ட சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பலம் இழந்த முதல்வர் சுதீர் ரஞ்சன் மஜூம்தார் தனது பதவி விலகலை ஆளுநரிடம் அளித்து, சட்ட மன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்துமாறு கோரினார். அந்தக் கூட்டணி அரசு



மதுரை பவள விழா மாநாட்டைத் தலைவர் கலைஞர் கொடியேற்றித் துவக்கி வைக்கிறார்.

அந்த மாநிலத்தில் நான்காண்டு காலம் தொடர்ந்து பதவியிலே இருந்தது. 27 உறுப்பினர்களைக் கொண்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசு அமைக்க ஆளுநரிடம் கோரிக்கை வைத்தது. ஆனால் இரண்டே நாட்களில் மீண்டும் சமீர் ரஞ்சன் பர்மன் தலைமையில் இந்திரா காங்கிரசும் திரிபுரா உப ஜாதி யுவ சமிதி கட்சியும் கூட்டணி அரசை அமைத்தார்கள். முன்னாள் முதல்வரும் அந்த விழாவிலே பங்கேற்றார். ஆனால் எதிர்க்கட்சியான மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பதவியேற்பு விழாவைப் புறக்கணித்தனர்.

34 பத்திரிகை சுதந்திரம் பட்டபாடு!


அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்கும்போதெல்லாம் பத்திரிகை உரிமைகளைப் பறிப்பதையும், பத்திரிகையாளர் களைக் கைது செய்வதையும், எதிர்க்கட்சிகள் மீது அடக்கு முறை ஏவுவதையும் தன் கடமையாகக் கொண்டு செயல் பட்டது. அதன் தொடர்ச்சியாக 1991ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பிறகும் 9-9-91ஆம் தேதியன்று பரிதி இளம் வழுதி, எம்.எல்.ஏ., பேரவையிலே ஆற்றிய உரையின் சில பகுதிகள் பேரவைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட தாகவும், அந்தப் பகுதி முரசொலி இதழில் வெளிவந்து விட்டதாகவும் கூறி ஓர் உரிமைப் பிரச்சினை முரசொலி ஆசிரியர் செல்வம் மீது அவையிலே கொண்டு வரப்பட்டது. அதனைப் பேரவைத் தலைவர் உரிமைக் குழுவிற்கு நேரடியாக அனுப்பி வைத்தார். அதற்கு முரசொலி ஆசிரியர் எழுதிய விளக்கத்தில் நிருபர் கொடுத்த தகவலின் அடிப் படையில்தான் அச்செய்தி வெளியிடப்பட்டதாகவும், இருந்தாலும் அதற்கான பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வ தாகவும், நிருபரின் பெயரைக் குறிப்பிடுவது சரியாக இருக்கா தென்றும், தானே நேரடியாக வந்து உரிமைக் குழுவின் முன்பு இந்த விவரங்களைத் தெரிவித்ததையடுத்து பிரச்சினையை அத்துடன் விட்டுவிட்டால் நன்றியுடையவனாக இருப்பேன் என்றும் தெரிவித்திருந்தார். இதற்குப் பிறகும் உரிமைக்குழு முரசொலி ஆசிரியரை அவை முன் வரவழைத்து கண்டனம் தெரிவிக்கலாம் என்று பரிந்துரை செய்தது.

அதைப்போலவே கழக முன்னணி பேச்சாளர்களில் ஒருவ ரான வெற்றிகொண்டான் மீதும் ஒரு உரிமைப் பிரச்சினை அவர் பொதுக்கூட்டத்தில் பேசியது குறித்து கொண்டு வரப்பட்டு அதுவும் உரிமைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. அந்த நிலையில் திடீரென்று கடும் வயிற்றுவலி காரணமாக தியாகராய நகரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையிலே வெற்றி கொண்டான் அறுவை சிகிச்சை செய்துகொண் டிருந்த 10-4-92 அன்று மாலை கடும் காய்ச்சல் இருந்த நிலை யிலும் மருத்துவமனையினரால் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். முழுவதும் குணமாகாத நிலையில் ஏன் இவ்வாறு திடீ ரென்று வெளியே அனுப்பிவிட்டார்கள் என்று யோசித்த வாறு வெற்றிகொண்டான் வெளியே வந்த நிலையில் அங்கே தயாராக இருந்த காவல்துறையினர் கைது செய்து காவல் துறை ஆணையர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இது மாத்திரமல்லாமல் இல்லஸ்ட் ரேட்ட் வீக்லி, தினகரன், கோவை மாலை முரசு ஆகிய ஏடுகளின் மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு, அதன்மீது உரிமைக் குழு செய்த பரிந்துரையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவையிலே அறிவிக்கப்பட்டது.

கமிஷனர் அலுவலகத்திற்கு முன்னால் வெற்றிகொண் டானை விடுதலை செய்யும்படி ஆர்ப்பாட்டம் செய்த ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகத் தோழர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தி கலைத்ததோடு, முக்கியமானவர்கள் 50 பேரைக் கைதும் செய்தனர். நீதிமன்றத்தில் வெற்றி கொண்டான் சார்பாகக் கழக வழக்கறிஞர்கள் ஜாமீன் கோரியபோது நீதிபதி அவர்களே அவரது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக ஜாமீனில் விடுதலை செய்தார்.

இந்தப் பழிவாங்கும் தொடர்கதையின் மற்றொரு அத்தியாயமாகக் கூற வேண்டுமேயானால் 15-2-1992 தேதி யிட்ட மாலை முரசு பத்திரிகையில் வெளிவந்த ஒருவருடைய பேட்டியையும், அதுபற்றிய விவரத்தையும் கூற வேண்டும். அவர்தான் எம்.ஜி.ஆர். அவர்களிடம் விசுவாசமிக்க



தலைவர் கலைஞருடன் வெற்றிகொண்டான்.

அலுவலராக இருந்த முத்து! எம்ஜி.ஆரின் உதவியாளரும், எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்துப் பொறுப்பாளருமான அந்த முத்து அளித்த பேட்டியில் கூறியது வருமாறு :-

"சம்பவத்தன்று நான் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது கதவு தட்டப்பட்டது. திறந்தேன். வெளியே ஒரு இன்ஸ்பெக்டரும், 2 போலீஸ்காரர்களும் நின்று கொண் டிருந்தனர். என்ன விஷயம் என்றேன். ஏ.சி. அய்யா உங்களைப் பார்க்க வேண்டுமென்று அழைத்து வரச் சொன்னார் என்றார்கள். நானும் அதை நம்பி அவர்களுடன் சென்றேன். போலீஸ் நிலையத்தில் மப்டி போலீஸ்காரர் ஒருவர் மட்டுமே இருந்தார். 90 நிமிடங்கள் அங்கேயிருந்தேன். நினைவு இல்லக் கதவைப் பூட்டவில்லை, போய் பூட்டிவிட்டு வந்து விடுகிறேன் என்றேன். உடனே இன்ஸ்பெக்டர் ஜீப்பில் போய் வரலாம் என்றார். நம்பி அதில் ஏறினேன். ஜீப் நேராக சைதாப்பேட்டை கோர்ட்டுக்குச் சென்றது. உடனே நான் அங்கென்ன வேலை என்றேன். உடனே இன்ஸ்பெக்டர் ஒரு பொட்டலத்தை என் கையில் கொடுத்து பிடி என்றார். என்ன இது என்று கேட்டேன். இதுவா? நீ கடத்திவந்த கஞ்சா என்று இன்ஸ்பெக்டர் கூறினார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. எல்லாம் ஜெயலலிதா வேலை என்று நினைத்து

வேதனைப்பட்டேன். எதையோ மனதில் வைத்து என்னை இப்போது பழி தீர்த்துள்ளார். என்னைக் கைது செய்து சிறையில் வைத்ததை எம்.ஜி.ஆர். ஆத்மா கூட ஏற்காது."

இந்த முத்து ஜாமீன் கேட்டு மாஜிஸ்திரேட் செசன்சு கோர்ட்டில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் இவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொண்டார். இதனை விசாரித்த நீதிபதி எஸ்.ஜனார்த்தனம் அளித்த தீர்ப்பில் முத்துவை விடுதலை செய்ததோடு, அவருக்குக் காவல் நீடிப்பு செய்தது சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்தார்.

கழகத்தின் முன்னணி பேச்சாளர்களில் ஒருவரான நன்னிலம் நடராசன் அவர்களும் 18-4-1992 அன்று நள்ளிரவு 2 மணியளவில் அவர் திருமானூர் ஒன்றியம், காமரசவல்லி என்னும் ஊரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசி முடித்த பிறகு கைது செய்யப்பட்டு திருச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும், வெற்றிகொண்டான் மீதோ, நன்னிலம் நடராசன் மீதோ தொடரப்படும் வழக்குகளை நீதிமன்றங் களில் சந்திக்க தி.மு.க. தயாராக இருக்கிறது என்று நான் தெரிவித்தேன். 20-4-1992 அன்று நன்னிலம் நடராசன் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். நக்கீரன் வாரப் பத்தி ரிகையை அச்சிடும் அச்சக உரிமையாளர் கணேசனைப் போலீசார் கைது செய்தனர். போலீஸ் காவலில் சித்திரவதை செய்யப்பட்ட அவர் ஜாமீனில் வெளி வந்து மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வந்தபோதே பயனின்றி இறந்தார்.

தமிழக சட்டசபை வரலாற்றிலேயே முதன்முதலாக இல்லஸ்ட்ரேடட் வீக்லியின் ஆசிரியர் மற்றும் அதன் நிருபர், அதைப்போலவே முரசொலி, தினகரன் ஆகிய வற்றின் ஆசிரியர்களும் கூண்டிலே ஏற்றப்பட்டு தண்டிக்கப் படுவார்கள் என்று பேரவைத் தலைவர் அறிவித்தார். இதனைக் கண்டிக்கும் வகையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் தனது தலையங்கத்தில் பத்திரிகைகளை ஒடுக்கிடும் முயற்சியில் ஜெயலலிதா வெற்றி பெற முடியாது என்று எழுதியது.

டெக்கான் ஹெரால்டு இதழ் தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் ஒடுக்கப்படுகிறது என்றும், தகவல் அறியும் உரிமை மறுக்கப்படுகிறது என்றும் எழுதியது. டைம்ஸ் ஆப் இந்தியா இதழ், எடுத்தேன், கவிழ்த்தேன் என்கிற சர்வாதிகாரப் போக்கு முதல்வர் ஜெயலலிதாவிடம் மலிந்து கிடக்கின்றது, பத்திரிகைகள் அனைத்தும் தன்னிடம் மண்டியிட வேண்டு மென விரும்புகிறார் ஜெயலலிதா என்று எழுதியது. தமிழக சட்டப் பேரவையிலிருந்து முரசொலி செய்தியாளர் மற்றும் கோவை மாலை முரசுக்கு செய்தி கொடுத்த சென்னை தினகரன் செய்தியாளர் ஆகியோரைச் சட்ட சபையிலே செய்தி சேகரித்துக் கொண்டிருக்கும்போதே ஒரு தீர்ப்பின் மூலம் அவைக்கு வரக் கூடாது என்று பேரவைத் தலைவர் அறிவித்தார். அதைத் தொடர்ந்து இரண்டு செய்தியாளர் களும் சட்டப்பேரவையிலிருந்து வெளியேறினர். தமிழக சட்டப் பேரவையில் பத்திரிகையாளரை வெளியேற்றிய நிகழ்ச்சியும் அதுதான் முதல் முறையாகும். பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான தமிழக அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் 22-4-92 அன்று சென்னை குறளகம் முன் ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

உரிமைக்குழு அளித்த தண்டனையை எதிர்த்து முரசொலி மற்றும் கோவை மாலைமுரசின் சார்பில் டெல்லி உச்சநீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டது. பேரவையின் அந்தத் தொடரின் இறுதி நாளான 28-4-92 அன்று இந்து, எக்ஸ்பிரஸ், பி.டி.ஐ., யு.என்.ஐ., இந்தியா டுடே, பிசினஸ் இந்தியா, தினமணி, தினகரன், தீக்கதிர், தினப்புரட்சி, டெக்கான் ஹெரால்டு, மாலைமுரசு, மாலைக்கதிர், ஈவினிங் மெட்ராஸ், அப்சர்வர், டெலிகிராப், சண்டே மெயில் உள்ளிட்ட முப்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் தங்களின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் பேரவைக்குள் சென்று செய்தி சேகரிக்காமல் புறக்கணிப்பு செய்ததோடு, கறுப்புச் சின்னங்களும் அணிந்து கொண்டனர். ஆனால் அன்றையதினம் அவை நடவடிக்கைகளிலே கலந்து

கொண்ட பத்திரிகைகள் எவையெவை தெரியுமா? தினத் தந்தி, தினமலர், விடுதலை ஆகியவையாகும். 8-5-92 அன்று உச்சநீதிமன்றத்தில் உச்சநீதிமன்றம் விதித்த தடை உத்தரவை மீறி இல்லஸ்டிரேட்டட் வீக்லியின் நிருபரைக் கைது செய்ய தமிழக போலீசாரும், அரசு அதிகாரிகளும் முன்வந்தால் நீதி மன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு அவர்கள் ஆளாவார்கள் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எச்சரித்தனர்.

முரசொலி ஆசிரியர் மன்னிப்பு கேட்டுக் கொள்ளத் தயாராக இருந்தால் உரிமை மீறல் பிரச்சினையை விட்டு விடும்படி பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்ள முடியும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தபோது, முரசொலி செல்வம் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்- அவை நடவடிக்கைகளில் எந்தப் பகுதியை அவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார் என்பது தெரிவிக்கப் படாத நிலையில் அதனை வெளியிட்டது அவையின் உரிமையை மீறிவிட்டதாகக் கூறப்படுவதை ஏற்பதற்கில்லை என்றும், எனவே மன்னிப்புக் கேட்கும் பிரச்சினை எழவில்லை என்றும்- தெரிவித்த காரணத்தினால் முரசொலி செல்வத்தின் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது.



21.9.92 அன்று முரசொலி ஆசிரியர் செல்வம் சட்டசபைக் கூண்டில் ஏற்றப்பட்டார்.

அதன் தொடர்ச்சியாக 11-5-92 அன்று மாலையில் முரசொலி ஆசிரியர் செல்வத்தைக் கைது செய்து பேரவைத் தலைவர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். உச்சநீதி மன்றத் தீர்ப்பு பேரவையைக் கட்டுப்படுத்தாது, முரசொலி செல்வம், சுனில், சுந்தர் ஆகிய மூன்று பேர் மீது பிறப்பிக்கப் பட்ட பிடிவாரண்ட் அப் படியே உள்ளது என்று கூறிய பேரவைத் தலைவர் டெல்லி சென்று மக்களவை சபாநாய கருடனும் ஆலோசனை நடத்தி விட்டு சென்னை திரும் பினார். அவர் வந்த அதே விமானத்தில்தான் பத்திரிகை யாளர் சுனில் அவர்களும் திரும்பினார்.



நன்னிலம் நடராஜன்

ஆனால் அவரைக் கைது செய்யாத தமிழக போலீசார் முரசொலி செல்வத்தை மட்டும் கைது செய்து பேரவைத் தலைவரின் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே அவரிடம் மீண்டும் சட்டமன்றம் கூடுகின்ற முதல் நாளில் அவையில் ஆஜராக வேண்டும் என்ற ஒரு நோட் டீசில் கையெழுத்து பெற்றுக்கொண்டு அனுப்பிவிட் டனர்.

அதன் தொடர்ச்சியாக 21-9-92 அன்று அவையின் கண்டனத்தைப் பெறுகின்ற வகையில் அவைக்கு வரும்படி பேரவைத் தலைவர் முரசொலி செல்வத்திற்குக் கடிதம் எழுதினார்.

அ.தி.மு.க. ஆட்சியில் பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படு கின்ற போக்கினைக் கண்டித்தும், முரசொலி ஆசிரியர் முரசொலி செல்வம் அவர்களைச் சட்டமன்றத்தில் கூண்டில் நிறுத்திக் கண்டிக்க இருப்பதைக் கண்டித்தும் 21ந்தேதியைத் துக்க நாளாகக் கருதி அன்று தமிழகம் எங்கும் மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தப்பட வேண்டுமென்று கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்திருந்தார். அதன்படி தமிழகம் எங்கும் 21ஆம் தேதி காலையில் மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தப் பட்டது.

அன்றையதினம் சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும் பேரவைத் தலைவர் மார்ஷலை அழைத்து முரசொலி செல்வம் வந்திருக்கிறாரா? என்று கேட்க அவர் வந்திருப்பதாகத் தெரிவித்தார். அப்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஜி. பழனிச்சாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தம்புசாமி, பா.ம.க. உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன், ஜனதாதள உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ், எம்.ஜி. ஆர். அ.தி.மு.க. உறுப்பினர் திருநாவுக்கரசு ஆகியோர் எழுந்து- இது ஜனநாயக விரோத மானது, தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத செயல், பத்திரிகை ஆசிரியரை அழைத்து கூண்டில் ஏற்றிக் கண்டிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரினர். ஆனால் அவர்களின் கோரிக்கையைப் பேரவைத் தலைவர் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து அவர்கள் வெளி நடப்பு செய்தனர். பேரவைக்கு வந்திருந்த பத்திரிகையாளர் கள் எல்லாம் அன்று கறுப்புச் சின்னம் அணிந்து வந்திருந் தனர். செல்வத்தை அழைத்துவருமாறு மார்ஷலுக்கு பேரவைத் தலைவர் விடுத்த ஆணையின் பேரில் செல்வம் அவைக்கு வந்து அங்கே வைக்கப்பட்டிருந்த கூண்டில் ஏறி நின்று அவைக்கு வணக்கம் தெரிவித்தார். பின்னர் பேரவைத் தலைவர் அவையின் கண்டனத்தைப் படித்தார்! அத்துடன் செல்வத்தை செல்லலாம் என்று கூறியதின் பேரில் செல்வம் வந்து விட்டார்.

அந்த நிகழ்ச்சி பற்றி "கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்!" என்ற தலைப்பில் எழுதிய உடன்பிறப்பு கடிதத்தில் ஒருசில பகுதிகள் வருமாறு :-

"இந்தியாவின் ஆலோசகராக இங்கிலாந்து அரசின் வேண்டுகோளின்பேரில் இலண்டன் மாநகருக்குச் செல்ல அனிபால் எனும் விமானம் ஏறி, நீதிக்கட்சியின் தன்னேரில் லாத் தளபதி சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்கள் பயணம் செய்தபோது அவர் அமர்ந்திருந்த அந்த விமானம் ஓமான் கடலில் வீழ்ந்து, தமிழர்களின் செல்வத்தை- திராவிடர் களின் செல்வத்தை நம்மிட மிருந்து பிரித்துத் தொலைத்தது.

1940ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள்தான் இந்தத் தாங்க முடியாத சோகம் தமிழ் மக்களை நிலைகுலையச் செய்தது. காணாமற் போனதாகச் சொல்லப்பட்ட அனிபால் விமானம்; எங்கேயாவது ஓரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுப் பன்னீர்செல்வம் பத்திரமாக உயிரோடிருக்கிறார் எனச் செய்தி வராதா என்று வானொலிப் பெட்டிகள் இருக்கு மிடங்களில் எல்லாம் செய்தியை எதிர்பார்த்து திரள் திரளாகக் காத்திருந்தவர்களில் நானும் ஒருவன்! தமிழ்நாட்டுச் செல்வம் மட்டும் அல்லவே அவர்; எங்கள் திருவாரூருக்கு அடுத்த பெரும்பண்ணையூரில் பிறந்து வாழ்ந்த செல்வமும் ஆயிற்றே!

1940 மார்ச்சில் பன்னீர்செல்வம் மறைந்த சோக நிழல் இந்த மண்ணில் படிந்திருக்கும்போதுதான் அதே 1940 ஏப்ரல் திங்களில் என் சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான். மறைந் தாலும்; மனத்தில் நிறைந்திருக்கும் பன்னீர் செல்வத்தின் நினைவாக அவனுக்கு நான் பன்னீர்செல்வம் என்று பெயரிட்டேன். அந்தப் பன்னீர்செல்வம்தான் கடந்த 21ஆம் நாள் சட்டப் பேரவைக் கூண்டிலே நிறுத்தப்பட்ட முரசொலி ஆசிரியர் செல்வம்.

செல்வம் பிறந்தபோதே, என் தாயார் என்னைப் பார்த்து, உனக்கு ஒரு பெண் பிறந்தால் அதற்கு செல்வி எனப் பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டுமென்று அன்புக் கட்டளை பிறப்பித்தார்கள். பாட்டியின் ஆசை நிறை வேறியது; ஆனால் அதை அந்த அன்புப் பாட்டியிருந்து பார்க்கவில்லை.

அண்ணா தலைமையில், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, காயிதே மில்லத் ஆகியோர் ஒரே மேடையில் தோன்றி மணமக்களை வாழ்த்தினர்.

அந்த மணக்கோலத்தில் செல்வத்தை நான் பார்த்தபோது கூட எனக்கு அத்தனை மகிழ்ச்சியில்லை!

புதுக்கோட்டை, திருச்சி நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும்போது தாம்பரம் ரயிலடியில் வாங்கிப் படித்த

ஆங்கிலம், தமிழ் நாளேடுகள் அத்தனையிலும் செல்வம் சட்டப்பேரவைக் கூண்டில் சிரிப்பு தவழ நின்று கொண்டிருக்கும் படம் வெளிவந்துள்ளதைப் பார்த்தபோதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.


வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால்; என்னகம் வாடிப் போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்; படத்தில் செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு!

படத்தை அரசாங்க செய்தித் துறையே எடுத்து, அந்தத் துறையே அல்லவா எல்லா ஏடுகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது! இது, மேலும் பூரிப்பு வழங்கும் தகவல் அல்லவா! அந்தப் படத்தை உற்றுப் பார்த்தேன். செல்வம் நிற்கும் கூண்டுக்கு அருகே அறிஞர் அண்ணாவின் படம். நான் முதல்வராக இருந்தபோது பிரதமர் அன்னை இந்திரா காந்தியை அழைத்துத் திறந்து வைக்கப்பட்ட படம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற எழுத்துக்கள் ஒளி விடுகின்றன பார்த்தாயா?

அண்ணா, செல்வத்தை - மிகச் செல்லமாக "செல்வா" என்றுதான் அன்பொழுக அழைத்து முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லுவார்.

அடையாறு மருத்துவமனையில் அண்ணாவுக்கு இறுதியாக ஓர் அறுவை சிகிச்சை அவசியம் தேவை என முடிவு செய்யப்பட்டபோது கூட; அண்ணா அவர்கள் அந்த உடல் நலிவுடனும் "செல்வா எங்கே?" என அழைத்து, செல்வம் அவர் அருகில் சென்றதும் "செல்வா! வீட்டில் உள்ள பிள்ளைகளை அழைத்து வா! நான் பார்க்க வேண்டும்" என்று கூறியதை எப்படி மறக்க முடியும்.

அந்தப் பாசமுள்ள பெருந்தலைவனின் படத்தருகே கூண்டு! அதிலே செல்வம்! மன்றத்தில் ஜனநாயகம் போற்றிய பல தலைவர்களின் படங்கள்!



அறிஞர் அண்ணா

முரசொலி 1942ல் தொடங்கப் பெற்று 1943ல் முதல் ஆண்டு விழா கொண்டாடியபோது வருகை தந்து வாழ்த்தியவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், பேராசிரியர் அன்பழகனார் அவர்களும்! இன்று அந்த முரசொலியைக் கூண்டிலேற்றியது சரியென்று வாதாடுகிறார்; பேரவையில் நாவலர் நெடுஞ்செழியன்! இது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் பழிவாங்கும் செயல் என்று கண்டித்துக் கறுப்புச் சட்டை அணிந்து திருச்சி வீதியிலே மனிதச் சங்கிலி அறப்போருக்குத் தலைமை யேற்று கொளுத்தும் வெயிலில் நிற்கிறார் பேராசிரியர்! என்னே அரசியலின் விசித்திரம்!

"எல்லோரையும் தாங்கிட ஒரு தாயின் வயிறு போதாத காரணத்தால் தனித் தனித் தாய்களின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம்" எனப் பெருமையுடன் கூறிப் பெருமிதம் கொண்ட அண்ணா அவர்கள், இன்றில்லாதது அவர் வரையில் அவருக்குக் கிடைத்த பேறுதானே!

இல்லையா உடன்பிறப்பே! எப்படியோ கூண்டு கண்டேன்; நான் குதூகலம் கொண்டேன்!"

இதுதான் நான் முரசொலியில் எழுதிய கடிதம்.

35

திருவிழாக் கூத்தும்; திராவக வீச்சும்!

இங்கிலாந்து நாட்டில் 9-4-92 அன்று தேர்தல் நடை பெற்றது. இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் அப்போதைய மொத்த எண்ணிக்கை 651. அந்த நாட்டுத் தேர்தலில் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த கன்சர் வேடிவ் கட்சிக்கும், எதிர்க்கட்சியாக இருந்த தொழிலாளர் கட்சிக்கும் இடையேதான் கடும் போட்டி. 4 கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் அந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கன்சர்வேடிவ் கட்சி அந்த நாட்டில் 1979ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆட்சியிலே இருந்து வந்தது. அந்தத் தேர்தலில் அந்தக் கட்சி மீண்டும் வெற்றி பெறுவது கடினம் என்று பரவலாகவே பேசப் பட்டது. பிரதமராக இருந்த ஜான் மேஜர் பிரச்சாரத்திற்குச் சென்ற இடங்களில் எல்லாம் அவருக்கு எதிராகக் குரல் எழுந்தது. முறைப்படி ஜூன் திங்களில் தான் அங்கே தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் பிரதமர் ஜான் மேஜர் அதற்கு முன்பே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். அந்த நாட்டின் பிரதமராக 11 ஆண்டுக் காலம் தொடர்ந்து இருந்து வந்த திருமதி தாட்சர் கட்சியில் ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாகப் பதவி விலகியதால் ஜான் மேஜர் 1990இல் பிரதமராகப் பதவியேற்றார். ஆனால் அதற்குப் பிறகு அந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மாற்றம் காரணமாகத் திரும்ப அவர் வருவாரா என்பது பெரிதும் சந்தேகத்திற் குரியதாக இருந்தது. வெளியிடப்பட்ட 46 கருத்துக் கணிப்பு களில் 40இல் கன்சர்வேடிவ் கட்சி தோற்றுவிடும் என்றுதான்

முடிவுகள் அறிவித்தன. பிரபல தேர்தல் நிபுணர்கள் கூட எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காதென்றும், தனிப்பெரும் கட்சியாகத் தொழிலாளர் கட்சி மட்டுமே விளங்குமென்றும், கன்சர்வேடிவ் கட்சி இரண்டாவது இடத்திற்குத்தான் வருமென்றும் கருத்து தெரிவித்தார்கள்.

எனினும் அனைவரது கணிப்புகளையும் பொய்யாக்கி விட்டு ஆளுங்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்றது. கன்சர்வேடிவ் கட்சி 336 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 271 இடங்களிலும், லிபரல் ஜனநாயகக் கட்சி 20 இடங்களிலும், மற்ற கட்சிகள் 24 இடங்களிலும் வெற்றி பெற்றன. இந்த வெற்றிக்குக் காரணமான பிரதமர் ஜான் மேஜரின் வாழ்க்கை வரலாறு, விசித்திரமானது. அவர் ஒரு சர்க்கஸ் கலைஞருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர். 16வது வயதிலேயே தன் பள்ளிப் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்தார். பிறகு படிப்படியாக உயர்ந்து வங்கி அதிகாரியாக ஆனார். இளமைப் பருவத்திலேயே கன்சர்வேடிவ் கட்சியில் சேர்ந்தார். 1979ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். அதற்குப் பிறகு பத்தாண்டுகளில் அமைச்சராக உயர்ந்தார். திருமதி தாட்சர் அமைச்சரவையிலே ஜான் மேஜர், நிதி அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர் அந்த நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்ற ஜான் மேஜர் இந்தத் தேர்தலிலும் வெற்றி பெற்று பிரதமராகப் பொறுப்பேற்றார். இவரது மனைவி பெயர் நார்மா. இவருடைய மகள் எலிசபெத் கால்நடைகளுக்கான நர்சாகப் பணியாற்றினார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத் அவர்கள் 92ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஒரு விமான விபத்தில் சிக்கி அதிசயமாகத் தப்பிய நிகழ்ச்சி குறிப்பிடத் தக்க ஒன்றாகும். அவர் சென்ற விமானம் புயலில் சிக்கி, பாலைவனத்தில் விழுந்து நொறுங்கியது. விமானத்தில் இருந்த மூன்று விமானிகளும் இறந்தபோதிலும் அராபத் சிறு காயங்களுடன் தப்பினார். அப்போது அவருக்கு வயது 62.

தனது 39வது வயதிலிருந்து அவர் பாலஸ்தீன மக்கள் விடுதலைக்காகப் போராடி வரும் தலைவர். ரம்சான் பண்டிகையை முன்னிட்டு அவர் பல்வேறு இடங்களில் உள்ள பாலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கள் தங்கியிருந்த முகாம்களுக்கெல்லாம் சென்று வாழ்த்துத் தெரிவித்தார். அதன் தொடர்பாகக் கார்ட்டூம் நகரிலிருந்து லிபியா நாட்டின் தெற்கு எல்லைப் பகுதியில் உள்ள முகாமிற்கு ஜெட் விமானத்தில் சென்றார். விமானத்தில் அராபத் உட்பட மொத்தம் 15 பேர் இருந்தனர். 3 பேர் விமானிகள், மற்றவர்கள் அராபத் அவர்களின் பாதுகாவலர்கள். சகாரா பாலைவனத்துக்கு மேலே விமானம் பறந்து கொண்டிருந்த போது பாலைவனப் புயலில் விமானம் சிக்கிக் கொண்டது. அல்சோப்ரா விமான நிலையத்தில் இறங்க அனுமதி கேட்டபோது, அங்கே புயல் வீசுவதால் அல்சாரா சென்று விடுங்கள் என்று விமான தளத்திலிருந்து கூறப்பட்டது. பிறகு தகவல் தொடர்பு எதுவும் இல்லை. அல்சாராவிலும் இறங்க முடியாமல் தவித்த விமானம் பின்னர் எங்கே சென்றது என்று தெரியவில்லை. விமானத்தின் கதி என்ன, அராபத் என்னவானார் என்று அவரை ஆதரிக்கும் நாடுகள் எல்லாம் கவலையில் ஆழ்ந்தன. அராபத்தைக் கண்டுபிடிக்க உதவும் படி அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, எகிப்து நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் அந்த வேண்டுகோளையேற்றுக் கொண்டார். 15 மணி நேரம் தேடிய பின் அமெரிக்க செயற்கைக்கோள் அல்சாரா விலிருந்து 44 மைல் தூரத்தில் விமானம் மோதி நொறுங்கிக் கிடந்ததைக் கண்டு பிடித்தது. யாசர் அராபத் அவர்களும், அவருடைய பாதுகாவலர்களும் ஆச்சரியமாக உயிருடன் மீட்கப்பட்டனர். விமானிகள் மட்டும் இறந்துவிட்டனர். அராபத் உயிருடன் இருக்கிறார் என்ற செய்தி கேட்டு உலகமே தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது.

1992ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் கும்பகோணம் மகாமகத் திருவிழா! எந்த மகாமக விழாவிலும் இல்லாத அளவிற்கு அந்த ஆண்டு கூட்டம் அதிகம். காரணம் , எந்த மகாமக விழாவிற்கும் அத்தனை ஆடம்பரமான அழைப்புகள்

ஆரவாரமாக பக்தர்களுக்கு விடப்பட்டதில்லை. அத்தனை முழுப்பக்க விளம்பரங்கள் அரசின் சார்பிலும், மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுப்பாளராகக் கொண்ட விழாக் குழுவின் சார்பிலும் செய்யப்பட்டதில்லை. அவைகளும் போதாதென்று ஆளுங் கட்சி அமைப்பின் சார்பிலும் விளம்பரமோ விளம்பரம்! ஏடுகளில் முழுப் பக்க விளம்பரங்கள்! அத்தனை ஆர்ப்பாட்ட விளம்பரம் செய்ததும் மகாமகத்துக்காகவா என்றால் அதுதான் இல்லை. அம்மையார் ஜெயலலிதா அந்தக் குளத்துப் படிக்கட்டுகளை மிதிக்க வருகிறார் என்பதற்காகத்தான்! பக்தர்களை மட்டு மல்ல, பத்து லட்சம் உணவுப் பொட்டலங்கள் ஜெயலலிதா வின் சொந்தப் பணத்திலேயே வழங்கப்படும் என்று பிச்சைக் காரர்களுக்கும் அழைப்பு.


மகாமகத்தன்று நடந்தது என்ன? பாவம் தொலைக் காட்சியில் விழா நிகழ்ச்சிகளை விளக்குவதற்காக நியமிக்கப் பட்ட தமிழ் மொழி விரிவுரையாளர்கள் திணறிப் போனார்கள். மகாமகக் குளக்கரையையொட்டி உள்ள கடவுளர்களைப் பற்றி அவர்கள் விளக்க முற்பட்டால், குளத்தைச் சுற்றி மிக உயரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் நூற்றுக்கணக்கான கட் அவுட்களைத்தான் காண நேரிட்டது. அவர்கள் கட் அவுட்களை விமர்சிப்பார்களா? அல்லது கடவுளை விமர்சிப்பார்களா?

விழாவிற்கு காஞ்சி பெரிய சங்கராச்சாரியார் செல்ல வில்லை. நடு சங்கராச்சாரியாரும், இளைய சங்கராச்சாரியா ரும் சென்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் எங்கோ ஒரு படித்துறையில் அம்போ என்று பரிதாபமாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைத் தவிர தஞ்சை மாவட் டத்தைச் சேர்ந்த தர்மபுரம் ஆதினம், திருப்பனந்தாள் ஆதினம், திருவாவடுதுறை ஆதினம் போன்றவர்களைத் தொலைக்காட்சியிலே காட்டவே இல்லை.

கும்பகோணத்தில் உள்ள காசி விசுவநாதர், நாகேஸ்வரர், சோமேஸ்வரர், கவுதமேஸ்வரர், பாணபுரீஸ்வரர், ஏகாம்ப ரேஸ்வரர் போன்ற 11 சிவ ஸ்தல சாமிகளையும், சாரங்க

பாணி, சக்கரபாணி உள்ளிட்ட ஐந்து வைணவ ஸ்தல சாமி களையும் மிஞ்சக்கூடிய அளவிற்கு- குடந்தையிலே உள்ள கோடீஸ்வரர் என்ற கடவுளுக்கு மேலாக புதிய தெய்வம் கோடீஸ்வரி ஜெயலலிதா மகாமகக் குளத்திற்கு எழுந் தருளிய காரணத்தால் அதிகாரிகள் அனைவரும் இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டும், ஆத்திகப் பெரியவர்கள் அந்தணப் பெருமக்கள் கையது கொண்டு வாயது பொத்திக் கொண்டும், அமைச்சர்கள் சிகப்புக் கம்பள சுருக்கங்களைச் சரி செய்து கொண்டும், போலீசார் பூப்பந்தல் முதல்வரின் தலையில் இடிக்காமல் கவனமாகப் பார்த்துக் கொண்டு மிருந்தது தொலைக்காட்சியில் நன்றாகத் தெரிந்தது.

குளத்திற்குள் ஈயம் பித்தளைப் பாத்திரங்களிலும், தகரக் குவளைகளிலும் தண்ணீரை மொண்டு தலையில் ஊற்றிக் கொள்ள பக்தர்கள் தவியாய்த் தவித்தபோது, தனிக்குளிய லறை மேடையில் 21 வெள்ளிக் குடங்களை அலங்கரித்து வைத்து புரோகிதர்கள் அடக்கவொடுக்கமாக மந்திரங்களை ஜெபித்துக் கொண்டிருந்தனர். 21 குடங்களில் இருந்த குளத்து நீரை... புரோகிதர்கள் பயபக்தியுடன் முணுமுணுத்துக் கொண்டே எடுத்து எடுத்துக் கொடுக்க அவற்றை வாங்கி தோழிகள் இருவரும் மாறி மாறி தலையில் ஊற்றிக் கொண்ட மகாத்மியமே மகாமகாமகத் திருவிழாவின் சிறப்புக்குரிய அம்சமாகும்.



ஜான் மேஜர்

அதற்கு முன்பும் மகாமகத் திருவிழா நடைபெற்றதுண்டு. பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருந்தபோது நடை பெற்ற மகாமகத்தின் போது விழாவுக்கு முதல் நாள் அவர் சென்று மக்களுக்கான வசதிகளைப் பற்றி அறிந்து கொண்டு உடனடியாக சென்னை திரும்பிவிட்டார். அண்ணா முதல்வராக இருந்தபோது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த நான் குடந்தை சென்று அந்த நகரைச்

சுற்றி சுற்றுச்சாலை அமைத்துக் கொடுக்கும் பணிகளை மேற்பார்வையிட்டுவிட்டு விழாவிற்கு சில நாட்களுக்கு முன்பே சென்னை திரும்பிவிட்டேன். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதும், மூகாம்பிகை கோவிலுக்குக்கூட ஆடம்பரமின்றி சென்று வணங்கி வந்தாரே தவிர, அவர் காலத்தில் நடந்த மகாமக விழாவிற்கு அவர் சென்று அந்தக் குளத்தைப் படுகளமாக்க நினைத்த தில்லை.

ஆனால் 1992இல் தோழிகள் இருவரும் 21 குடங்களில் தண்ணீரை ஒருவர் மாற்றி ஒருவர் ஊற்றிக் கொண்ட காரணத்தால் தமிழகத்தைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட குடும்பங்களில் மண்பாண்டக் குடங்களை உடைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆம்; 100க்கு மேற்பட்டவர்கள் இடிபாடுகளிலே சிக்கியும் குளத்திலே மூழ்கியும், உணவுப் பொட்டலங்களைப் பெறுவதற்கான போட்டியில் நசுங்கியும், தோழிகள் நீராடிய காட்சியை நேரில் காணத் திரண்ட கூட்டத்தின் எடை தாங்க முடியாமல் சுவர் இடிந்து விழுந்த காரணத்தினாலும் மாண்டு மண்ணோடு மண்ணாய்ப் போனார்கள்.

இந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும், அந்தப் பயங்கர உயிர் இழப்புகளுக்குக் காரணங்களை அறிந்திடவும், பொறுப்பானவர்களைத் தண்டிக்கவும் ஏற்றவகையில் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணைக் கமிஷன் அமைப்பதோடு, இறந்தோர் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு ஒரு அறிக்கை விடுத்தேன். மகாமகத் திரு விழாவில் சாவுக்குக் காரணம் காவல்துறையினர் நடத்திய தடியடிதான் என்றும் நீதி விசாரணை தேவை என்றும் விஸ்வ இந்து பரிஷத் சார்பில் அறிக்கை விடப்பட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் நீதி விசாரணை கோரி தீர்மானம் நிறைவேற்றினார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியாகச் செய்யப்படாததுதான் துயரச் சம்பவத்திற்குக் காரணம் என்று தமிழக ஜனதாதள தலைவர் சிவாஜி

கணேசன் அறிக்கை விடுத்தார். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மகாமகச் சாவுகளுக்கு ஜெயலலிதாவே பொறுப்பு என்று அறிக்கை விடுத்தார். எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் திருநாவுக்கரசு விடுத்த அறிக்கையில் உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை அவசியம் தேவை என்று கேட்டிருந்தார். ஆனால் தமிழக அரசின் சார்பில் விடுத்த அறிக்கையில், உணவுப் பொட்டலத்தைப் பொறுக்க பக்தர்கள் ஓடி மோதிக் கொண்டதுதான் சாவுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. மேலும் இந்து இதழில் "மகா மகமா? அல்லது ஜெயா மகமா?" என்ற தலைப்பில் வெளியிட்ட செய்திக்கும் அரசின் சார்பில் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அனைத்துக் கட்சிகள் சார்பிலும் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை வைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க மறுத்து, தஞ்சாவூர் மாவட்ட கூடுதல் கலெக்டர் விசாரணையே போதும் என்று அரசு முடிவு செய்தது.

அந்தச் சம்பவம் குறித்து அப்போது தலையங்கம் எழுதிய தினமணி அதனை முடிக்கும்போது, "ஆயிரம் கார் பவனி, போகும் பாதையில் நீண்ட நேரத்திற்கு போக்குவரத்து நிறுத்தம், ஊதாரித்தனமான அரசு விழாக்கள், சுய விளம்பரங்கள் எல்லாம் ஜெயலலிதாவின்பால் மக்களுக்கு இருக்கும் அபிமானத்தைக் குறைத்து வருகின்றன என்பதை அவர் உணர்ந்திருக்கிறாரா என்பது தெரியவில்லை. மகாமகத் துயர நிகழ்ச்சி நீங்காத களங்கத்தை ஏற்படுத்திவிட்டது." என்று எழுதியிருந்தது.



யாசர் அராபத்

92ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் துருக்கி நாட்டில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. முதலில் வந்த செய்தியில்

ஆயிரம் பேர் பலியாகி விட்டதாகத் தெரிந்த போதிலும், பிறகு பலியானவர் களின் எண்ணிக்கை 5000 ஆக உயர்ந்தது. சம்பவம் நடந்த எர்ஜின்கான் நகரத்தில் இருந்த கட்டிடங் களில் 25 சதவிகித கட்டிடங்கள் இடிந்து விழுந்துவிட்டன. பூகம்பத்தில் காய மடைந்தவர்களின் எண்ணிக்கையும் ஆயிரக்கணக்கில் இருந்தன. துருக்கியின் அருகில் உள்ள நாடுகளும், அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசு நாடுகளும் உடனடியாகத் தங்களது மீட்புப் படையினரையும் உணவுப் பொருள்களையும் அனுப்பி துருக்கி நாட்டு மக்களுக்கு உதவி புரிந்தனர்.

1992 ஆம் ஆண்டு தமிழக அரசின் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி களில் ஒருவர் திருமதி சந்திரலேகா. இவர் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் பொறுப்பிலே இருந்த போது ஸ்பிக் நிறுவனத்தில் தனியார் பங்குகள் மாற்றிக் கொடுக் கப்பட்ட வகையில் அரசு தனியார் ஒருவருக்குச் சலுகை செய்யும் வகையிலே அரசின் விருப்பத்திற்கிணங்க கோப் பிலே கையெழுத்திட மறுத்த காரணத்தினால் இந்தப் பதவி யிலிருந்து திடீரென்று மாற்றப்பட்டு தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் கமிஷனராக நியமிக்கப்பட்டதாகப் பல ஏடுகளில் அப்போது செய்தி வந்தது. இந்தச் செய்தி வந்த ஒரு சில நாட்களுக்குப் பிறகு அவர் மே திங்கள் 19ந்தேதியன்று காலையில் வீட்டிலிருந்து கிளம்பி காரிலே அலுவலகத் திற்குச் சென்று கொண்டிருந்த போது எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்கு எதிரிலே திடீரென்று ஒருவன் அவரது காரை நெருங்கி அவர் மீது திராவகத்தை வீசினான். அதிலே மிகவும் பாதிக்கப்பட்ட அந்த அதிகாரி உடனடியாக மருத்துவமனை யிலே அனுமதிக்கப்பட்டு நீண்டநாள் சிகிச்சைக்குப் பிறகு தேறினார். அவரது காரின் ஓட்டுநரும் பொதுமக்களும் திராவகம் வீசியவனைத் துரத்திச் சென்று பிடித்த போதும், அவனுடன் வந்த மற்றவர்கள் தப்பிச் சென்று விட்டனர். ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது திராவகம் வீசக் காரணமாக இருந்த வர்களைத் தீவிரமாகக் கண்டித்து, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கத்தின் செயலாளராக இருந்த திரு. மலைச்சாமி, ஐ.ஏ.எஸ். ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். அந்தச் சம்பவம் கொலை

செய்யும் நோக்கத்தோடு நடைபெறவில்லை என்றும், உருவத்தைச் சிதைக்கவே திராவக வீச்சு நடைபெற்றதாகவும் போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது என்று மாநகர போலீஸ் கமிஷனர் பேட்டியின்போது தெரிவித்தார். இது குறித்த வழக்கு தமிழகத்தில் பல ஆண்டுகாலம் நடைபெற்றது. இடையிலே ஒரு முறை முக்கிய கைதி தப்பிச் சென்று மீண்டும் பிடிபட்டு அதற்குப் பிறகும் நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்களே தவிர, அவர்களுக்குப் பின்னாலிருந்து தூண்டிவிட்டவர்கள் தப்பிவிட்டார்கள் என்றுதான் தமிழகத்திலே பரவலாகப் பேசப்பட்டது. உண்மையாக அதற்குக் காரணமானவர்கள் யார் என்பது எல்லோருக்கும், அனைத்து ஏடுகளுக்கும் தெரிந்த போதிலும் ஆதாரபூர்வமாக அது நிரூபிக்கப்பட வில்லை என்பது நீதிக்குப் பின்னால் மறைந்துவிட்ட உண்மை.

அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்த இந்தப் பழிவாங்கும் நடவடிக்கை காரணமாகவும், கழகத் தோழர்கள் ஆங்காங்கு கைது செய்யப்பட்டு வந்ததின் காரணமாகவும் 92ஆம் ஆண்டும் என்னுடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாட வேண்டாமென்றும், என்னைச் சந்திக்க கழகத் தோழர்கள் யாரும் சென்னைக்கு வரவேண்டாமென்றும் அந்த நாளில்



மகாமகத் திருவிழாவில் தோழிகள்.

கழகத் தோழர்கள் ஏழையெளியோர்க்குத் தங்களால் இயன்ற வகையில் உதவிகள் புரிந்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

20-5-1992 அன்று தமிழகம் முழுவதிலும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் 12 மாவட்டங்களில் நடைபெற்று செயலாளர்களும், மாவட்டக் கழகப் பிரதிநிதிகளும் நிர்வாகி களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எஞ்சிய மாவட்டங்களில் அடுத்த நாளான 21ந்தேதி தேர்தல் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து ஜூன் 2ஆம் தேதியன்று சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கத்தில் நடை பெற்ற புதிய பொதுக்குழுவில் தலைவர், பொதுச் செய லாளர், பொருளாளர் ஆகியோருக்கான தேர்தல் போட்டி யின்றி நடைபெற்று, முறையே நானும், பேராசிரியரும், சாதிக்பாட்சா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். துணைப் பொதுச் செயலாளராக நாஞ்சிலார் நியமிக்கப் பட்டார்.

36 துரத்தப்பட்ட நந்தனும்; துணை ஜனாதிபதியாக நாராயணனும்!

1989-90 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கழக ஆட்சியின் போது விவசாயிகளுக்கு மட்டும் செய்யப்பட்ட ஒருசில சாதனைகளைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன். விவசாயிகளின் கடன் ரூபாய் பத்தாயிரம் வரையில் தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ் தேசிய முன்னணி அரசின் உதவியுடன் கழக அரசு கூட்டுறவு வங்கிக் கடன் சுமார் 270 கோடி ரூபாயையும், கிராமிய வங்கி, வணிக வங்கிக் கடன்கள் சுமார் 220 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்ததின் மூலம் 18 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளும் கைவினைஞர்களும் பயனடைந்தனர். மேலும் 90 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து விவசாயத்திற் காகப் பயன்படுத்தப்படும் பம்ப் செட்டுக்கான மின்சாரத்தை இலவசமாக வழங்குவதென்றும் அதனால் 12 லட்சம் சிறிய பெரிய விவசாயிகள் பயன் அடைவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு சுமார் 41 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கும், 1991 ஆம் ஆண்டு மேலும் 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1989 ஏப்ரல் திங்கள் முதல் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

இந்தப் புள்ளி விவரங்களை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் வந்ததும் வராததுமாக விவசாயிகளுக்கு வழங்கி வந்த இலவச மின்சாரத்தைரத்து செய்வதாக அறிவித்தது. அதனைக் கண்டித்து

பல முறை கழகத்தின் சார்பில் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில், அந்த அறிவிப்பை மாற்றி பெரிய விவசாயிகளுக்கு மின் கட்டணம் விதிக்கிறோம் என்ற பெயரால், 1992ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அ.தி.மு.க. அரசு ஒரு குதிரை சக்திக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் கட்டணம் வசூலிக்கப்படுமென்றும், அதனை 6 மாதத்திற்கு ஒருமுறை என்று இரண்டு தவணைகளில் செலுத்தலாம் என்றும், 25 ஆயிரம் ரூபாய் செலுத்தி முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பைப் பெற்றவர்கள் ஒரு குதிரை சக்திக்கு 150 ரூபாய் வீதம் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அறிவித்தது. மின்சார பம்புசெட் வைத்துள்ள சிறு விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 98 ஆயிரம் என்றும், அவர்களைத் தவிர 11.50 லட்சம் பம்பு செட்டுகளை வைத்துள்ள மற்ற விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது.

அரசின் இந்த அறிவிப்பைக் கண்டித்து உடனடியாகக் கழகத்தின் சார்பில் நான் ஒரு அறிக்கை விடுத்தேன். விவசாயிகள் சங்கங்களின் சார்பிலும் போராட்டங்கள் நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். 92ஆம் ஆண்டு ஜூன் 11ந்தேதியன்று அராஜக ஆட்சியைக் கண்டித்து தமிழகம் முழுவதும் விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்தவும், ஜூன் 13ந்தேதியன்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை ரத்து செய்ததைக் கண்டித்து பேரணி நடத்தவும், ஜூன் 16ந் தேதியன்று நாடு தழுவிய அளவில் பொது வேலைநிறுத்தம் நடத்தவும் கழகத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. ஜூன் 11ந்தேதி மதுரையிலே அதற்காக நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் நானும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஏ.நல்லசிவன், ப.மாணிக்கம் ஆகியோரும் கலந்து கொண்டோம். சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுச் செயலாளர் பேராசிரியரும், சங்கரய்யா, நல்லக்கண்ணு ஆகிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

மதுரையிலே நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற நான், தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டு மதுரைச் சிறையிலே இருந்த சுப்புலட்சுமி ஜெகதீசனை யும், அவரது கணவரையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறலாம் என்பதற்காக சென்னையிலிருந்து எனது குடும்பத்தினரை அழைத்துச் சென்றிருந்தேன். ஆனால், அவர்கள் இருவரை யும் நான் சந்திக்கக் கூடாதென்று முதல்நாள் இரவோடு இரவாக அரசு தடை உத்தரவு பிறப்பித்தது. அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு 27-2-1992 அன்று அவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்பட்ட நான் இந்த முறை திடீரென்று அனுமதி மறுக்கப்பட்டேன். இந்த நிகழ்ச்சியையொட்டியும், அப் போது நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட வைகோவின் தம்பி ரவிச்சந்திரனையும், ஜெகதீசனையும் கைவிலங்கிட்டு அழைத்து வந்ததையும் நினைவிற்கொண்டு உச்ச நீதிமன்றத் தில் நடைபெற்ற ஒரு வழக்கிலே வழங்கப்பட்ட தீர்ப்பினை இணைத்து நான் எழுதிய கடிதத்திலே குறிப்பிட்ட அந்தப் பகுதியை இதிலேயும் ஞாபகப்படுத்துவது சரியாக இருக்கு மென்று கருதுகிறேன்.


1980ஆம் ஆண்டு டெல்லி திகார் சிறைச்சாலையிலே சுனில் பத்ரா என்ற ஒரு கைதி அடைபட்டிருந்தான். அவன் கொலை வழக்கிலே சிக்கி ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தான். அந்தக் கைதி சிறையில் இருந்தவாறே உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு கடிதம் எழுதினான். அந்தக் கடிதத்தை உச்ச நீதிமன்றம் அவனது ரிட் மனுவாகவே பாவித்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள், வி.ஆர். கிருஷ்ணய்யர், ஆர்.எஸ். பதக், ஓ. சின்னப்ப ரெட்டி ஆகியோர்தான் அந்த விசாரணையை நடத்தினர். சுனில்பத்ரா அந்தக் கடிதத்திலே எழுதியிருந்தது என்ன தெரியுமா? சிறையிலே நேர்காணலுக்கு விதிக்கப்படும் தடை உள்ளிட்ட பல்வேறு கொடுமைகளைத்தான் அவன் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டுவிட்டு, தனக்குக் கைவிலங்கு பூட்டி அழைத்துச் செல்லப்படுவதாகவும் குறிப் பிட்டிருந் தான். அதனை வெறும் புலம்பல் என்று உச்ச நீதிமன்றம்

எடுத்துக்கொள்ளாமல் அதன்மீது விசாரணையும் நடத்தி தீர்ப்பும் வழங்கியது.

நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் மனித நேயப் பண்பு வளர வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர். நீதிபதி சின்னப்ப ரெட்டி அவர்கள் சமூக நீதிக் காவலர். அவர்களோடு நீதிபதி ஆர்.எஸ். பதக் அவர்களும் இணைந்து அளித்த தீர்ப்பில்- "சிறையில் உள்ளவர்களைப் பார்வையாளர்கள் நேர்காணல் என்பது குடும்பத்தினரும் நண்பர்களும் சந்திப்பதால் கைதிகளுக்கு மன ஆறுதல் ஏற்படும் என்பதற்காக அனுமதிக்கப்பட்டதாகும். மனிதாபி மானம் அற்றவர்கள்தான் இதனை மறுப்பார்கள். அதுமட்டு மல்ல; கைதியின் மனதை மென்மைப்படுத்தி ஒழுங்குறச் செய்யவே தண்டனை வழங்கப்படுகிறதே தவிர, முரட்டுத் தனமாக ஆக்குவதற்காக அல்ல. விலங்கு மாட்டுவது என்பது மனித கௌரவத்தையும் சமூக நீதியையும் அடைய வேண்டுமென்ற குறிக்கோளை அடையவொட்டாமல் தடுத் திடும் காட்டுமிராண்டித்தனமான செயலாகும்" -எனக் குறிப் பிடப்பட்டது. உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் 92ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்த அ.தி.மு.க. நடந்து கொண்ட முறையையும் ஒப்பிட்டுத்தான் அப்போது நான் உடன்பிறப்பு கடிதம் எழுதியிருந்தேன்.

கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல் அவர்களைப் பார்க்க அனுமதி மறுத்ததை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்தேன். அதன்மீது அரசின் ஆணைக்கு இடைக்காலத் தடை விதித்து சிறையில் சென்று அவர்களைப் பார்க்கவும் எனக்கு அனுமதி வழங்கப் பட்டது.

92ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் தேதியன்று தடா சட்டத் தின் கீழ் 18-11-91 அன்று கைது செய்யப்பட்ட வைகோவின் இளவல் வை. ரவியும், 9-1-92 அன்று கைது செய்யப்பட்ட சுப்புலட்சுமி மற்றும் அவரது கணவர் ஜெகதீசனும் உச்ச நீதிமன்றத்திலே ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர்.



முரசொலி மாறன்

ஜூன் 13ஆம் தேதியன்று இலவச மின்சாரத்தை ரத்து செய்ததைக் கண்டித்து கழகத்தின் சார்பில் நடத்தவிருந்த வாகனப் பேரணிக்கு அரசின் சார்பில் அனுமதி மறுக்கப் பட்டது. தடையை மீறி பேரணியில் கலந்து கொள்ள வந்த விவசாயிகளும் கழகத்தினருமாகப் பத்தாயிரம் பேர் தமிழகம் முழுவதும் கைது செய்யப்பட்டனர். அந்த வரிசையில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களையும் கைது செய்து ரிமாண்ட் செய்தார்கள். அவர்கள் கட்சி சார்பில் மறியல்கூட அறிவிக்கவில்லை, வெறும் ஆர்ப்பாட்டம்தான் அறிவித்திருந்தார்கள். ஆனாலும் அந்தக் கட்சியின் தலைவர் கைது செய்யப்படக் காரணம் என்னவென்றால், ஊர்வலமாக அவர்கள் வந்தபோது, விவசாயிகளைத் தூக்கில் போடுவதுபோல இலவச மின்சார ரத்து நடவடிக்கை ஆகிவிட்டது என்பதை விளக்க மின்சார ஒயர்களைக் கயிறு போல கழுத்தில் கட்டிக்கொண்டு ஊர்வலமாக வந்ததை ஜெயலலிதா அரசினால் பொறுத்துக்கொள்ள முடியாத தால்தான் கைது செய்தார்கள். அதனையும் வன்மையாகக் கண்டித்து கழகத்தின் சார்பில் அறிக்கை விடுத்தேன். தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் டாக்டர் சிவசாமி விடுத்த அறிக்கையில், இலவச மின்சாரம் நீடிக்கும் என்று தேர்தலில் வாக்குறுதி அளித்த முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு இலவச மின்சாரத்தை ரத்து செய்து விவசாயிகளுக்குத் துரோகம் இழைத்து விட்டார் என்று தெரிவித்தார். இதைத் தொடர்ந்து ஜூன் 16ந்தேதி தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு ஆதரவுடன் அகில இந்திய அளவில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து நடத்தவிருந்த பொது வேலை நிறுத்தத்தை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தொழிலாளத் தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் கடுமையாக எதிர்ப்பு ஏற்படத் தொடங்கியது. அதனைச் சமாளிக்க முடியாத தமிழக அரசு 18-6-92 அன்றும் 2-6-92 அன்றும் வெளியிட்ட உத்தரவை ரத்து செய்து ஆணை பிறப்பித்தது. எல்லா விவசாய பம்ப் செட்டுகளுக்கும் தொடர்ந்து இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கழகத்தின் சார்பில் அந்த அறிவிப்புக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்ட தோடு, அதற்காகப் போராட் டம் நடத்தி சிறையில் இருந்த தி.மு.க., பா.ம.க. வைச் சேர்ந்தவர்களுக்கும், எதிர்ப்புக் குரல் கொடுத்த மற்றக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொண் டேன்.

இவற்றோடு மற்றும் ஒரு கட்டமாக சிதம்பரம் அண்ணா மலைநகர் காவல்நிலையத்தில் நந்தகோபால் என்ற கைதியின் கண் எதிரிலேயே அவருடைய மனைவி பத்மினியைக் காவல் துறையினர் கற்பழித்த காட்டுமிராண்டித்தனத்தைக் கண் டித்து தமிழகத்திலே பல்வேறு எதிர்க்கட்சிகளும், மகளிர் அமைப்புகளும் போராட்டங்களை நடத்தின. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் 20-6-1992 அன்று தென் ஆற்காடு தெற்கு மாவட்டப் பகுதியில் உள்ள வட்ட ஆட்சி யர் அலுவலகங்களுக்கு முன்னால் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றது.

1992ஆம் ஆண்டு இந்திய நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்த மற்றொரு நிகழ்ச்சி பம்பாய் பங்கு மார்க்கெட் ஊழல். தொழில் நிறுவனங்களின் பங்குகளை (ஷேர்) அன்றாடம் குறைந்த விலைகளில் வாங்கி, பிறகு நிலவரத்தையொட்டி அதிக விலைகளில் விற்று இலாபம் சம்பாதிப்பதுதான் இதன் அடிப்படை. ஒரு சாதாரண பங்குத் தரகராக இருந்த ஹர்ஷத் மேத்தா ஒருசில ஆண்டுகளில் கோடீஸ்வரராக மாறினார். பங்குகளை விலைக்கு வாங்குவதற்குத் தேவை யான பணத்தை அரசு வங்கிகளில் இருந்து தவறான முறை யில் பயன்படுத்திக் கொண்டார். பாரத ஸ்டேட் வங்கி, தேசிய வீட்டு வசதி வங்கி போன்ற அரசு வங்கிகளும் சில



ப. சிதம்பரம்

வெளிநாட்டு வங்கிகளும் மேத்தாவின் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் வரை தந்துள்ளன.

இவரது நடவடிக்கைகளுக்குச் சட்ட விரோதமாக உதவி புரிந்த யுனைடெட் கமர்ஷியல் வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கே. மார்க்கபந்து, பாரத ஸ்டேட் வங்கியின் துணை நிர்வாக இயக்குநர் சி.எல். கெமானி ஆகியோர் விடுப்பில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டனர். தேசிய வீட்டு வசதி வங்கி ஒரு பெரும் தொகையை ஹர்ஷத் மேத்தாவிற்குக் கொடுத்துவிட்டதால், கனரா வங்கி பரஸ்பர நிதிக்குத் தேசிய வீட்டு வசதி வங்கி தரவேண்டிய தொகையைத் தர முடியாமல் போய் விட்டது. அதனால் தேசிய வீட்டு வசதி வங்கிக்கு ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டது. அப்போது அந்த வங்கியின் தலைவராக இருந்த ஃபெர்வானி தனது பதவியை விட்டு விலகினார். இந்தப் பிரச்சினை காரணமாக நாடாளுமன்றத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஹர்ஷத் மேத்தாவை நம்பி அரசு வங்கிகள் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் எப்படி கடன் கொடுத்தன என்று அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் கேள்வி எழுப்பினர். இந்த விவகாரம் குறித்து உண்மை நிலையை விசாரித்தறிய சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. பல மாதங்கள் அந்த விசாரணை நடைபெற்றபிறகு ஹர்ஷத் மேத்தா தண்டிக்கப்பட்டு சிறையிலே இருந்தபோது திடீரென்று நோய்வாய்ப்பட்டு மறைந்தார்.

மாநிலங்களவையில் பங்குச்சந்தை மோசடி குறித்து கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் முரசொலி மாறன் விரிவாகப் பேசியதோடு, 2 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய்க்குக் கணக்கே இல்லை என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்

களைக் கொண்ட கூட்டுக் குழு விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.


இந்தப் பங்குச்சந்தை மோசடியில் பேர்குரோத் என்ற ஒரு நிதி நிறுவனமும் ஈடுபட்டுள்ளது என்று ஒரு புகார் வந்ததின் பேரில் அதன் மீது விசாரணை நடத்தப்பட்டது. அந்த நிறுவனத்திடமிருந்து பங்குகளை வாங்குவதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை மத்திய அமைச்சராக இருந்த திரு.ப.சிதம்பரம் அவர்கள் முதலீடு செய்திருந்த காரணத்தால், அவராக தானே முன்வந்து தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

92ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28, 29 ஆகிய நாட்களில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. சார்பில் மதுரையில் ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் மாநாடு ஒன்றினை நடத்தினர். அந்த மாநாட்டிற்கான பணிகளில் அரசு அதிகாரிகள் எல்லாம் ஈடுபடுத்தப்பட்டார்கள். அரசுப் பணமும் செலவிடப் பட்டது. அ.தி.மு.க. ஆதரவு ஏட்டிலேயே அந்தச் செய்திகள் வந்திருந்தன. மதுரையில் அ.தி.மு.க. மாநாடு நடந்தபின்னர் தி.மு.க.வே இருக்காது என்று அ.தி.மு.க. அமைச்சர்கள் கூட்டங்களில் பேசினார்கள். ஏராளமான கட் அவுட்கள் 100 அடி உயரத்திலும் 150 அடி உயரத்திலும் மதுரை மாநகர் முழுவதும் வைக்கப்பட்டு, இரவும் பகலும் அவற்றைப் பாதுகாக்கக் காவல்துறையினர் நியமிக்கப் பட்டார்கள். இதில் 150 அடி உயர கட் அவுட் விழுந்து அதன் காரணமாக 13 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த மாநாட்டினைப் பற்றி "டைம்ஸ் ஆப் இந்தியா" கருத்து தெரிவிக்கும்போது, "வெற்றி மாநாடு என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வர்ணித்திருக்கிறார். இந்த அபரிமிதமான ஊதாரிச் செலவை யார் எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அது கும்பமேளா அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஜெயலலிதா புகழ்பாடும் விழாவாகும். இந்த மாநாட்டிற்கு ஆகும் செலவு என்ன என்பது அதன் அமைப் பாளர்களுக்குத் தெரியாது. மாநாட்டிற்காக வியாபாரிகளும் தொழில் அதிபர்களும் கசக்கிப் பிழியப்பட்டிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகளின் நிர்ப்பந்தத்திற்கு எளிதாக இரையாகி விடுகிற வியாபாரிகளைக் கட்டாயப்படுத்தி அபரிமிதமாகச் செலவழிக்கச் செய்து இந்த ஆடம்பர மான அ.தி.மு.க. மேளா நடத்தப்படுகிறது. ஜெயலலிதாவின் ராட்சத கட் அவுட் களும், அலங்கார வரவேற்பு வளைவுகளும் மதுரை நகரத் திற்கே திருவிழாக் கோலத்தைத் தரலாம். ஆனால் இவை எல்லாம் பொதுமக்கள் மனதில் ஜெயலலிதாவின் மரியாதை யையோ செல்வாக்கையோ உயர்த்தாது" என்று எழுதி யிருந்தது. இந்தச் செய்திக்கு அந்த ஏடு தந்திருந்த தலைப்பு "தேவதை ஜெயாவுக்கு மதுரையில் திருவிழா" என்பதாகும்.

இதைவிட "ஸ்டேட்ஸ்மென்" ஏடு அந்த மாநாடு பற்றி விளக்கமாக விமர்சித்திருந்தது. "மீனாட்சி அம்மன் திருக்கோவிலையே பின்னுக்குத் தள்ளி விட்டன தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் ராட்சச கட் அவுட்கள். இந்தக் கட் அவுட்களில் பல மீனாட்சி அம்மன் கோவில் கோபுரத்தை விட உயரமாக இருந்தன. அதுமட்டுமல்ல, ஜெய லலிதாவின் உருவம் பதித்த பெரிய பெரிய பலூன்கள் மதுரை நகரத்தின் வானத்தில் ஏராளமாகக் காணப்பட்டன. இந்தப் பலூன்கள் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானிகளுக்கும் பயணிகளுக்கும் பெரும் தொல்லை தருவனவாக இருந்தன. மதுரை நகரத்தின் மக்கள் தொகையில் ஒரு பகுதியினரும், இந்தக் கோவில் நகரத்திற்கு வருகின்ற யாத்திரிகர்களும் சுற்றுலாப் பயணி களும் அ.தி.மு.க. மாநாட்டிற்கு இரண்டு நாட்களுக்குமுன் ஊரை விட்டு ஓடி விட்டனர். தமிழ்நாட்டின் சக்கரவர்த்தி னியாக ஜெயலலிதாவிற்கு முடிசூட்டும் அந்த இரண்டு நாள் விழாவுக்காக மதுரை நகரத்தில் உள்ள அனைத்துத் திருமண மண்டபங்களும் ஓட்டல் அறைகளும் அக்கட்சியினரால் எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்படிப் பல விழாக்களைக் கொண்டாடுகிற வாய்ப் பைப் பெற்றமைக்காகக் கட்சிக்காரர்கள்



சங்கர் தயாள் சர்மா

மிகுந்த நன்றியோடு தங்கள் தலைவிக்கு முடிசூட்டும் இந்த வெற்றி மாநாட்டைக் கொண்டாடுகிறார்கள். ஏனென்றால், முகவரியே இல்லாமல், ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு சாப்பாட்டிற்கே வழி இல்லாமல் இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு லட்சாதிபதிகளாக ஆகியிருக்கிறார்கள். இவர்களில் சிலரின் படங்கள் உள்ளூர் காவல் நிலையங் களில் தேடப்படும் குற்றவாளிகள் என்ற வகையில் இடம் பெற்றிருந்தன. அவர்கள் எல்லாம் இப்போது அமைச்சர் களாகவும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மாறியிருக்கிறார்கள். இதெல்லாம் ஜெயலலிதாவின் கைங்கரி யம், சாதனை. இப்படிப்பட்ட ஒருவர் 99 கிலோ எடையுள்ள வெள்ளிச் சிம்மாசனத்தோடு மதுரைக்கு வந்திருக்கிறார். சிங்கங்கள் பொறிக்கப்பட்டு உயர்ந்த பட்டு மெத்தைகள் தைக்கப்பட்டு சென்னையில் உள்ள பிரபலமான நகை வியாபாரி ஒருவரால் தயாரிக்கப்பட்ட இந்தச் சிம்மாசனத்தின் விலை 12 லட்ச ரூபாய். இதற்குப் பொருத்தமாக ஜெயலலிதா சிம்மாசனத்தில் அமரும்போது 9 அடி வெள்ளிச் செங்கோலை வேறொருவர் கொடுத்தார். இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் நேரம் வரை மகுடம் ஒன்றுதான் காணவில்லை. ஜெயலலிதாவின் முடிசூட்டு விழாவில் வழங்கப்பட்ட அன்பளிப்புகள் ஏராளம். அதில் ஒன்று இரண்டடி உயரம் உள்ள மீனாட்சி அம்மன் சிலை. அது தங்கத்தாலும் வெள்ளியாலும் விலை உயர்ந்த நவரத் தினக் கற்களாலும் செய்யப்பட்டது. 22 காரட் தங்கத்தில் செய்யப்பட்ட 10 கிலோ எடையுள்ள தங்க மீன் ஒன்றும் தரப்பட்டது. அ.தி.மு.க.வின் சின்னமான இரட்டை இலைச் சின்னமும் ஜெயலலிதாவுக்குத் தரப்பட்டது. தங்கத்தால் ஆன இந்த இரட்டை இலைச் சின்னம் 44 பவுனில் செய்யப் பட்டிருந்தது. மாநிலத்திலுள்ள காவல் துறையில் சரிபாதிக்கு மேற்பட்டவர்கள் காவல்துறைத் தலைவர் ஸ்ரீபாலின் நேரடி பார்வையில் கட்சி மாநாட்டுப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்" என்று எழுதியிருந்தது.

மதுரையிலே நடைபெற்ற அந்த மாநாட்டில் பேசும் போதுதான் ஜெயலலிதா, ராஜீவ்காந்தியின் மரணம்தான்

அ.தி.மு.க.வின் மாபெரும் வெற்றிக்குக் காரணம் என்று கூறும் வாதத்தைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறினார். அதே மாநாட்டில் பேசும்போதுதான் டான்சி நிலத்தை வாங்கியது உண்மைதான் என்றும், அதிலே எந்தவிதமான தவறும் கிடையாதென்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமனின் பதவிக் காலம் 92ஆம் ஆண்டு ஜூலைத் திங்களோடு முடிவடைவதையொட்டி அடுத்த குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் தொடங்கிற்று. இந்திரா காங்கிரஸ் கட்சி தனது வேட்பாளரை அறிவிக்காமல், அதுபற்றி முடிவு செய்யும் பொறுப்பை கட்சித் தலைவர் நரசிம்ம ராவ் அவர்களிடம் ஒப்படைத்தது. அதிலே ஒரு பொதுக் கருத்துக்கான பிரதமர் முயன்று பா.ஜ.க. தலைவர்களையும், இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். அந்தப் பேச்சுக்களின் விளைவாக, குடியரசுத் துணைத் தலைவராக இருந்த டாக்டர் சங்கர்தயாள் சர்மாவிற்கு அதிக ஆதரவு தென்பட்டது. குடியரசுத் துணைத்தலைவராக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கே.ஆர்.நாராயணனை நிறுத்தலாம் என்ற பேச்சும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் ஜனதா தளத் தலைவர் வி.பி. சிங், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரைத்தான் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தார். இந்திரா காங்கிரஸ் மற்றும் அவர்கள் கூட்டணி சார்பில் சங்கர் தயாள் சர்மா அவர்களும், தேசிய முன்னணியின் சார்பில் பேராசிரியர் ஜி.ஜி. ஸ்வெல் அவர்களும் போட்டியிட்டார்கள். இடதுசாரிக் கட்சிகளும் சங்கர் தயாள் சர்மா அவர்களையே ஆதரிக்க முடிவு செய்தனர். பாரதிய ஜனதா கட்சியினரும் ஸ்வெல் அவர்களுக்கே ஆதரவளிப்பதென முடி



கே. ஆர். நாராயணன்

வெடுத்தனர். அப்போது தேசிய முன்னணியில் தி.மு.கழகமும் இருந்த காரணத்தால் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஸ்வெல் அவர்களை ஆதரித்தது. ஆயினும் 65 சதவிகித வாக்குகளைப் பெற்று சங்கர் தயாள் சர்மா குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று 25-7-92 அன்று பதவியேற்றார். அவரது வெற்றி பற்றி நான் செய்தியாளர்களிடம் கூறும்போது, திரு. சங்கர் தயாள் சர்மா அவர்கள் நல்லவர், எளிமையானவர். இனிய இயல்புகளைக் கொண்டவர். முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமனைப் போல ஜனநாயக விரோதமாக நடக்க மாட்டார் என்று நம்புகிறேன் என்று கூறினேன். அதற்குக் காரணம் தி.மு.கழக அரசை ஜன நாயகத்திற்கு விரோதமாக 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா விற்கு ஆதரவாகக் கலைத்ததுதான். பதவி போனபிறகு சென்னை மாநகரில் தங்குவதற்காக அவருக்கு அரசு பங்களா ஒன்று அ.தி.மு.க. ஆட்சியிலே ஒதுக்கப்பட்டது. அவருக்குச் சொந்தமான பங்களா சென்னை மாநகரிலே இருக்கின்ற போது அரசு பங்களா ஒதுக்கக் கூடாது என்று கூறி அப் போது திராவிடர் கழகத்தினர் ஆனூர் ஜெகதீசன் தலைமை யில் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தி 200 பேர் கைதாகினர். புதிய குடியரசுத் துணைத் தலைவராக கேரள மாநிலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 21-8-92 அன்று பதவியேற்றார். அதுகுறித்து நான் விடுத்த செய்தியில், "நந்தனார் ஆலயத்திற்குள் நுழைய முடியாமல் கண்ணீர் வடித்த அந்தக் காலத்தையும், இன்று நாராயணன் இந்திய நாட்டுத் துணை ஜனாதிபதி மாளிகையில் வீற்றிருக்கும் காட்சியையும் எண்ணிப் பார்க்கிறேன். இந்தச் சமுதாயப் புரட்சிக்கு தீபச் சுடர் ஏந்திய காந்தியடிகள், அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் அயராத பணியினை எண்ணும் போது என் விழிகள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன" என்று குறிப்பிட்டிருந்தேன்.

37

தமிழக, ஆந்திர, கர்நாடக அரசுகள்!

1989க்கு முன்பு அரசாங்கத்திற்குரிய பெரிய நிலப் பரப்பில், முறையான அனுமதியின்றி கட்டப்பட்டு, நடைபெற்று வந்த போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை 1989ல் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அரசுடைமை ஆக்கிட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அக்கல்லூரியின் அறக்கட்டளையினர், கல்லூரியை அரசுக்கு ஒப்படைப்பதாக தீர்மானம் நிறைவேற்றி அதன்படி அந்தக் கல்லூரியை அரசு உடமையாக்கி, லட்சக் கணக்கான ரூபாய் நன்கொடை என்ற பெயரால் மாணவர்கள் அந்தக் கல்லூரியிலே சேருவதற்கு இருந்த நிலை மாற்றப்பட்டு, கல்லூரி மருத்துவமனையும் ஏழை எளியவர்கள் சிகிச்சைக்குப் பயன்பட்டு, கல்லூரி அலுவலர்களும் அரசுத் துறை அலுவலர்களுக்குரிய உரிமைகளைப் பெற்றிடும் நிலைமைகளும் ஏற்பட்டு, அந்தக் கல்லூரிக்கு அரசின் சார்பில் ஏழு கோடி ரூபாய் அளவுக்கு வளர்ச்சித் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் 1991ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு அந்த அறக்கட்டளையினர் நீதிமன்றத்திற்குச் சென்றனர். அப்போது பொறுப்புக்கு வந்திருந்த அ.தி.மு.க. அரசு உரிய ஆவணங்களைக் கொண்டு நீதிமன்றத்தில் சரியாக வாதாடாத காரணத்தால், நீதிமன்றத்தில் அந்தத் தனியார் அறக்கட்டளைக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசு உச்ச நீதிமன்றத்திலே முறையீடு செய்து கொள்ளாமல், அந்தக் கல்லூரியினை உடனடியாக தனியாருக்கே தாரை வார்த்துக் கொடுத்து

விட்டது. அதனை எதிர்த்து அந்தக் கல்லூரி மாணவர்களும், அவர்களுக்கு ஆதரவாக தமிழகத்திலே உள்ள மாணவர் களும் போராட்டம் நடத்தினர். தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி கட்சிகளின் சார்பில் 7-8-92 அன்று சென்னையில் கறுப்புக்கொடி பேரணியும் ஆர்ப்பாட்டமும் கழகப் பொருளாளர் சாதிக்பாட்சா தலைமையில் நடைபெற்றது. 1-9-92 அன்று ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அரசுடைமையாக்கிட வலியுறுத்தும் வகையில் மறியல் அறப்போராட்டம் நடத்துவதென்றும் தேசிய முன்னணி, இடதுசாரி கூட்டமைப்பு சார்பில் அறிவிக்கப்பட்டது. மறியல் நாளுக்கு நான்கைந்து நாட்களுக்கு முன்பே கழக முன்னணியினர் ஆயிரக் கணக்கானோர் முன் எச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரால் கைது செய்யப்பட்டு சிறைக்காவலில் அடைக்கப்பட்டனர். அவ்வாறு முன்கூட்டி கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் அடைக்கப் பட்டிருந்த ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், க. சுந்தரம், கும்முடிப்பூண்டி வேணு, சோ.மா. ராமச்சந்திரன் போன்றவர் களை நானும், பேராசிரியர், முரசொலி மாறன், நாஞ்சிலார், செ. குப்புசாமி ஆகியோரும் சென்று சந்தித்தோம். செப்டம்பர் 1ந்தேதியன்று தமிழகம் முழுவதும் இந்தப் பிரச்சினையையொட்டி தி.மு.க. நடத்திய மறியலில் 30 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். எனினும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அந்த மருத்துவக் கல்லூரியை மீண்டும் அரசுடைமையாக்குவது குறித்து அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் அரசு கவலைப்படவே இல்லை.

அதே ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் நாளன்று சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் திருமண மண்டபத்தில் முரசொலி பொன்விழா மிகுந்த சீரோடும் சிறப்போடும் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் நடை பெற்றது. தம்பி முரசொலி மாறன் வரவேற்புரை ஆற்றிட நான் முரசொலி பொன்விழா மலரினை வெளியிட்டு உரை யாற்றினேன். அந்த மலரை யொட்டி நான் எழுதிய ஒரு சிறு கவிதை இதோ :-

அஞ்சுக அன்னையிடம் உயிர்ப்பால் அருந்தி,
அய்யாவின் கொள்கையின்பால், உவப்பால் தவழ்ந்து,
அண்ணாவின் பேரன்பால் ஆளாகி வளர்ந்து,
இளமைத் துடிப்பால் இந்திப் போர்ப்படை கூட்டி
இலட்சிய முனைப்பால் முரசொலிக்க வந்தவன் நான்!
ஆதிமகன் வள்ளுவன் வழி முப்பால் தந்தவளே!
அணுப்பொழுதும் அப்பால் சென்றிடாமல் – எனை
அரவணைத்துக் காக்கின்ற தமிழே! உன் சார்பில்
போர்க்கள முரசின் பொன்விழா மலரை
ஆர்த்தெழும் உடன்பிறப்பாளர் அனைவருக்கும்;
–நெஞ்சில் என்றும்
பூத்திருக்கும் தாய், தந்தை, பெரியார், அண்ணா – மற்றும்
வாழ்த்துகின்ற ஆன்றோர் சான்றோர்க்கும்;
காணிக்கை ஆக்குகின்றேன்.

இந்த விழாவிற்கு வி.பி. சிங் அவர்கள் தன் கைப்பட ஆங்கிலத்தில் வாழ்த்து எழுதி அதிலே தமிழில் வி.பி. சிங் என்று கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார்.

விழாவில் நான் முரசொலியைத் தொடங்கியபோது எனக்கு உறுதுணையாக இருந்த என் நண்பன் திருவாரூர் தென்னன், அப்போது முரசொலியை அச்சிட்டுக் கொடுத்த திருவாரூர் கருணாநிதி அச்சக உரிமையாளர் கருணை எம். ஜமால், முரசொலியின் தொடக்ககால நிர்வாகியாகப் பணி யாற்றிய சிடி.மூர்த்தி, முரசொலி சொர்ணம், பெரியண்ணன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தினேன். முர சொலியை தொடர்ந்து நடத்துவதற்காக ஒரு அறக்கட்டளை நிறுவுவதென்று அன்று காலை மாவட்டக் கழகச் செய லாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை தனது தலைமையுரையில் பேராசிரியர் அறிவித்தார். அந்த அறக் கட்டளை சார்பில்தான் தற்போதும் முரசொலி தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளது. 92ஆம் ஆண்டு முரசொலிக் காக பொன்விழா கொண் டாடப்பட்டதைப் பற்றி எழுதும் இந்த 2002ஆம் ஆண்டுதான் முரசொலிக்கு மணிவிழா என்பதும், அந்த விழா இந்த ஆண்டில் நடத்தப்படவுள்ளது என்பதும் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய செய்தி களாகும்.

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஒன்றரை ஆண்டிற்குள்ளாகவே பல்வேறு ஊழல் புகார்கள்! உதாரணமாக அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை ஜெயலலிதா விலைக்கு வாங்கியது; ஸ்பிக் பங்கு பேர ஊழல்; சாராய சாம்ராஜ்ய ஊழல்; அரசுக்குச் சொந்தமான பீர் தொழிற்சாலையை டெண்டர் விடாமலே தனியாருக்கு வழங்கிய ஊழல்; சொந்தமாக சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுடன் ஆட்சிக்கு வந்தவர் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும், வைர, வைடூரிய நகைகளையும் சேர்த்திட்ட ஊழல், மதுரை அ.தி.மு.க. மாநாட்டிற்கு கட்டாய வசூல்; ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கிய ஊழல்; ஆம்னி பஸ் களுக்கு வரி குறைப்பு ஊழல்; சந்திரலேகா மீது திராவகம் வீச்சு போன்றவை, சிதம்பரம் காவல் நிலையத்தில் பெண் கற்பழிக்கப்பட்ட கொடுமை; வாச்சாத்தியில் 17 பெண்கள் கற்பழிக்கப்பட்ட அராஜகம் என்பன போன்ற சம்பவங் களை சமாளிக்க முடியாத ஜெயலலிதா 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியில் முதல்வராக இருந்த என் மீது சிவசுப்ரமணியம் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தார்.

அதைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநிலச் செயலாளர் திரு. ஏ. நல்லசிவன், எம்.பி., ஜெயலலிதா மற்றும் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பல பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கலைஞர் மீது விசார ணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பது தமிழக அரசின் திசை திருப்பும் வேலை மட்டுமல்ல, அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையும் ஆகும் என்று தெரிவித்தார். ஜனதா தளத் தலைவர்களில் ஒருவரான அர்கிஷோர் சிங் விடுத்த அறிக் கையில் ஜெயலலிதா அரசியல் பழிவாங்கும் நோக்குடன் இந்த விசாரணைக் கமிஷனை தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி மீது அமைத்துள்ளார். இது வெளிப்படை யான பழிவாங்கும் நடவடிக்கை. ஜெயலலிதாவின் இச்செயலை ஜனதா தளம் வன்மையாகக் கண்டிக்கின்றது என்று தெரிவித்தார். இந்தியக் கம்யூனிஸ் கட்சியின் சார்பில்

ஆர். நல்லக்கண்ணு அவர்கள் விடுத்த அறிக்கையில் தமிழக அரசின் நடவடிக்கை அரசியல் வஞ்சம் தீர்க்கும் செயலாகும். அரசியல் பழிவாங்கும் போக்கை கைவிட்டு, தமிழகத்தில் நாகரிகமான அரசியல் நடத்துவதற்கு வழிவகை காண வேண்டுகிறோம் என்று எழுதியிருந்தார். அந்த விசாரணைக் கமிஷன் குறித்து செய்தியாளர்கள் என்னுடைய கருத்தைக் கேட்டபோது, அந்த ஒன்றரை ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியிலே நடைபெற்ற ஊழல்களையெல்லாம் நான் பட்டியலிட்டுக் காட்டியதோடு, அந்தப் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்பிவிடலாம் என்ற கடைசி நம்பிக்கையுடன்தான் அந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது என்றும், என் மீதும் என் குடும்பத்தார் மீதும் சாக்கடையை வாரி வீசினால் ஏதாவது ஒரு சில துளிகள் ஒட்டாதா என்கிற நப்பாசையுடன் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஜெயலலிதா ஈடுபட்டிருப்பதாகவும், அவற்றையெல்லாம் தி.மு. கழகம் சந்திக்க வேண்டிய விதத்தில் சந்திக்கும் என்றும் கூறினேன்.

விசாரணைக் கமிஷன் நியமித்ததோடு மட்டுமல்லாமல், அது பற்றி ஒரு முழு பக்க விளம்பரம் அனைத்து ஏடுகளிலும் 21-9-92 அன்று காலையில் வெளியிடப்பட்டது. ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்தது குறித்து அரசு செலவில் பத்து இலட்ச ரூபாய் செலவழித்து முழு பக்கம் விளம்பரங்கள் செய்தது எனக்குத் தெரிந்த வரையில் அதற்கு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. அது மாத்திரமல்ல, 21ந்தேதி வெளிவந்த அதே விளம்பரம் மீண்டும் ஒரு முறை அதுவும் முழு பக்க விளம்பரமாகவே செப்டம்பர் 28ந்தேதியன்றும் வெளியிடப்பட்டது. இது ஒன்றிலிருந்தே அந்த அம்மையாரின் பழிவாங்கும் நோக்கம் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

குற்றச்சாட்டுகள் தொடர்பான தகவல்களடங்கிய வாக்குமூலத்தைத் தர விரும்புபவர்கள் 15-10-92க்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு இந்த இரண்டு விளம்பரத்திலும் தெரிவிக்கப்பட்டது. அதிகம்பேர் வாக்குமூலம் தராததால், இந்த உறுதி

மொழிப் பத்திரங்களைப் பெறுவதற்கான கால அளவு பத்திரிகை செய்தி மூலம் 5-11-1992வரை நீட்டிக்கப்பட்டது. இதற்குப் பிறகும் 6 உறுதி மொழிப் பத்திரங்கள்தான் வரப் பெற்றன. அவற்றின் மீது அதிகாரிகள் புலன் விசாரணையை மேற்கொண்டனர்.

அந்த விசாரணைக் கமிஷன் முன்னால் மொத்தம் ஒன்பது குற்றச்சாட்டுகள் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்ததில் ஒன்றில்கூட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று விசாரணைக் கமிஷன் நீதிபதி அவர்களால் திட்டவட்ட மாகக் கூறப்பட்டது.

1992ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஆண்டுதோறும் கொண்டாடுவதைப்போல் முப்பெரும் விழா சிறப்பாக நடை பெற்றது. செப்டம்பர் 16ந்தேதி அண்ணா அறிவாலயத்தி லிருந்து ஆளுநர் மாளிகைக்கு ஜெயலலிதாவின் ஊழல்கள் மீது வழக்கு தொடர அனுமதி கேட்டு பேரணி நடத்துவ தென்று முடிவெடுத்திருந்தபடியாலும், செப்டம்பர் 15ஆம் தேதியன்று மாலையில் அண்ணா அறிவாலய வளாகத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையினைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தபடியாலும் நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகச் சிறப்புற அமைந்தது. வழக்கம் போலவே கவியரங்கம், கருத்தரங்கம் அனைத்தும் கொண்ட மூன்று நாள் நிகழ்ச்சிகளாக அனைத்தும் நடைபெற்றன. ஆண்டுதோறும் வழங்கப்படுவதைப் போலவே அந்த ஆண்டு பெரியார் விருது திருநெல்வேலி ஆ. திராவிட மணிக்கும், அண்ணா விருது கோவை மு. இராமநாதனுக்கும், கலைஞர் விருது இரா. வெற்றிகொண்டானுக்கும் வழங்கப் பட்டது.

16ஆம் தேதி மாலையில் அண்ணா அறிவாலயத்திலிருந்து லட்சோப லட்சம் மக்கள் கலந்து கொண்ட பேரணி என்னுடைய தலைமையிலே புறப்பட்டது. சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலம் வரையில்தான் பேரணி செல்ல போலீசார் அனுமதி தந்தனர். அங்கிருந்து நானும், பேராசி ரியர், சாதிக்பாட்சா, முரசொலிமாறன், நாஞ்சிலார்,

ஆற்காடு வீராசாமி ஆகியோர் மட்டும் உள்ளே சென்று ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கைச் சந்தித்து ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சரவை மீதும் 18 குற்றச்சாட்டுகள் கொண்ட பட்டியலைக் கொடுத்தோம். ஆனால் அந்த மனுவின் மீது ஆளுநர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் 24-10-92 அன்று ஆளுநருக்கு கழகத்தின் சார்பில் ஒரு நினைவூட்டல் கடிதம் எழுதப்பட்டது. அதில் ஆளுநர் அனுமதியை அளிப்பது தொடர்பாக மாநில அமைச்சரவையின் ஆலோசனையை ஆளுநர் பெறத் தேவையில்லை, அவரே உரிய முடிவை எடுக்கலாம் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம், அதற்குப் பிறகு வழக்கு தொடர அனுமதியளிக்க வேண்டும், இல்லாவிட்டால் மறுக்க வேண்டும், முடிவெடுக்காமல் நீண்ட காலத்துக்கு மனுவை நிலுவையில் வைப்பதோ, புறக்கணிப்பதோ சரியல்ல, வழக்கு தொடர அனுமதி அளிப்பதில் காட்டப்படும் காலதாமதம், சட்டத்தை அமல்படுத்துவதில் பாரபட்சம் காட்டப்படுகிறதோ என மக்கள் சந்தேகிக்க வழி வகுக்கும் என்பதால் உரிய பதிலை விரைந்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம்.

இதற்கும் ஆளுநரிடமிருந்து பதில் இல்லாததால் ஆளுநர் அனுமதி தராததைச் சுட்டிக்காட்டி அதைப் பெற நீதிமன்றம் செல்வோம் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தேன். இந்தச் செய்தி ஏடுகளில் வந்ததும் ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் அவர்கள் முதலமைச்சர் ஜெயலலிதா மீது வழக்குத் தொடர அனுமதி கொடுக்க அவசியமில்லை என்று பதில் அனுப்பியிருந்தார்.

18-9-92 அன்று ஆந்திர உயர்நீதிமன்ற முழு பெஞ்ச் வழங்கிய தீர்ப்பில் நன்கொடை கட்டணம் வசூலிக்கும் 20 தனியார் மருத்துவ, பல் மருத்துவக் கல்லூரிகளை தொடங்க ஆந்திர மாநில அரசு வழங்கிய அனுமதியை ரத்து செய்த தோடு, தனியார் கல்வி நிறுவனங்கள் 50 சதவிகித இடங்களை நன்கொடைக் கட்டணம் வாங்கிக் கொண்டு நிரப்பிக் கொள்ள வகை செய்யும் ஆந்திரப் பிரதேச கல்வி நிறுவனங்கள்

சட்டத்தின் பிரிவையும் ரத்து செய்தது. மாணவர்களிட மிருந்து நன்கொடை கட்டணமாக வசூலிக்கப்பட்ட முழு தொகையையும் 4 வாரங்களுக்குள் திருப்பிக் கொடுக்கும் படியும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். நெல்லூரில் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டதில் அந்தக் கல்லூரிக் குழுவிலே முதல் அமைச்சர் ஜனார்த்தன ரெட்டியின் மனைவியும் தம்பியும் இடம்பெற்றுள்ளார்கள் என்றும் நீதிபதிகள் கூறியிருந்தார்கள்.

இதன் காரணமாக முதல்வர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று 47 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மேலிடத்துக்கு கோரிக்கை வைத்தனர். ஆந்திரப் பேரவையில் பெரும் அமளி ஏற்பட்டு அவை ஒத்திவைக்கப்பட நேரிட் டது. எதிர்ப்பு அதிகமான நிலையில் பிரதமர் அவர்கள் மூப்பனார் அவர்களை சிறப்புத் தூதுவராக ஹைதராபாத் நகருக்கு அனுப்பி வைத்தார். திரு.மூப்பனார் முதல்வரிடம் பேசியதைத் தொடர்ந்து ஜனார்த்தன ரெட்டி தனது பதவி விலகல் கடிதத்தை தருவதற்கு முதலில் மறுத்த போதிலும் பின்னர் வலியுறுத்தலுக்கிணங்க பிரதமரும் காங்கிரஸ் கட்சித் தலைவருமான பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்தார். ஆந்திராவிற்கு புதிய முதல்வரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பிரதமருக்கே சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்டது. பிரதமரின் அறிவுரையின் பேரில் ஆந்திர முதல்வராக மத்திய அமைச்ச ராக இருந்த விஜயப்பாஸ்கர் ரெட்டி ஒருமனதாக 7-10-92 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆந்திராவில் இந்தத் தகராறு நடைபெற்றுக் கொண் டிருந்த அதேநேரத்தில் கர்நாடகத்திலும் முதலமைச்சர் பங்காரப்பாவிற்கு எதிராக அவருடைய கட்சிக்குள் பெரிய குழப்பம். அவருக்கு எதிராக அப்போது முதன் முதலில் போர்க்கொடி உயர்த்தியவர் அஜீஸ் சேட் என்ற அமைச்சர். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கட்சித் தலைமைக்கு அனுப்பி வைத்தார். இவர் மட்டுமின்றி அமைச்சர்கள் வீரப்ப மொய்லி, பி. பசவ லிங்கப்பா, கே.எஸ். நாகரத் தினம்மா, மனோரமா மாதவராஜ், கே. சிவமூர்த்தி, டி.எம்.

மஞ்சுநாத், எம்.எஸ். ஆத்மானந்த, எம்.பி. நாத கௌட ஆகியோரும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை அனுப்பினர். பங்காரப்பா தனது ஆட்சியின் இரண்டாண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்திருந்த விழாவினை நிறுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். ஆனால் அதை மீறி பங்காரப்பா விழாவினை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டதின் காரணமாக மத்திய அமைச்சர்கள் தாராதேவி சித்தார்த்த, ராஜேஷ் பைலட், சீதாராம் கேசரி ஆகியோர் நிகழ்ச்சியிலே பங்கேற்றார்கள். பெரும்பாலான சட்ட மன்ற உறுப்பினர்கள் விழாவினைப் புறக்கணித்தனர். அதிருப்தியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க தன்னை அனுமதிக்க வேண்டுமென்று பங்காரப்பா கேட்டுக் கொண்டார். அதிருப்தி அமைச்சர்கள் பிரதமருக்கு அனுப்பிய பதவி விலகல் கடிதங்களின்மீது அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே அக்டோபர் 23ந்தேதி கர்நாடக அமைச்சர்கள் மூன்று பேர் தங்கள் பதவி விலகல் கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பியதின் பேரில் அவர் அவற்றை உடனடியாக ஏற்றுக் கொண்டார். கர்நாடகத்தின் முன்னாள் முதல் அமைச்சர்கள் அனைவரும் பங்காரப்பா பதவியில் நீடிப்பதை விரும்பவில்லை. அவர் உடனடியாக விலக்கப்பட வேண்டுமென்று குண்டுராவ் அவர்களும், நிஜலிங்கப்பா அவர்களும், ராமகிருஷ்ண ஹெக்டே அவர்களும் வெளிப் படையாகவே தெரிவித்தனர். முதல்வர் பதவியை விட்டு விலகுமாறு பிரதமர் நரசிம்மராவ் பங்காரப்பா விடம் கேட்டுக் கொண்டார். அதனையேற்று 11-11-92 அன்று பங்காரப்பா முதல்வர் பதவியிலிருந்து விலகினார். அவருக் குப் பதிலாக கர்நாடக மாநிலத்தின் புதிய முதல்வராக வீரப்ப மொய்லி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 20-11-1992 அன்று பதவியேற்றார்.

ஆனால் வீரப்ப மொய்லி புதிய முதல்வரானதை எதிர்த்து பேரவைத் தலைவராக இருந்த எஸ்.எம். கிருஷ்ணா போர்க் கொடி உயர்த்தி, தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டு, தன் ஆதரவாளர்களையெல்லாம் வீரப்பமொய்லிக்கு எதிராகத் திரட்டினார்.

38 1992 டிசம்பர் 6 கரசேவை

1992ஆம் ஆண்டு உலக அளவிலும் இந்திய நாட்டளவி லும் பெரும் விபத்துக்கள் நடைபெற்ற ஆண்டு என்பது மட்டுமல்ல; இந்தியாவில் மிகப் பெரிய மதக் கலவரமும் அதன் தொடர்பாக ஏராளமானோர் உயிர்ப்பலியாகவுமான கொடுமைக்கு வித்திட்ட ஆண்டுமாகும்.

அந்த ஆண்டில்தான் அக்டோபர் மாதம் 12ஆம் நாள் எகிப்து நாட்டில் கடுமையான பூகம்பம் காரணமாக 500 பேர் மாண்டு மடிந்தனர். 5000 பேர் படுகாயமுற்றனர். கெய்ரோ பகுதியில் பள்ளி மாணவர்கள் 100 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர்.

அதே நாளில் இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் ஓடிக் கொண்டிருந்த புகைவண்டியில் "டைம்-பாம்" வெடித்து முப்பது பேர் சிதறிச் செத்தனர்.

இந்த விபத்துக்களையொட்டி வந்த மற்றொரு செய்தி தான்; அதே ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் டெல்லி ஜான்சிராணி மைதானத்தில் 5000 சாமியார்கள் கலந்து கொண்ட விசுவ இந்து பரிட்சத்தின் பேரவைக் கூட்டம் நடைபெற்று; அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பிரச்சினை சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு; பிரதமர் நரசிம்மராவ் பாபர் மசூதியை அகற்றி இராமர் கோயில் கட்டும் முயற்சிக்கு ஆதரவு தராமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி; டிசம்பர் 6ஆம் நாள் அதற்கான கரசேவை யைத் துவக்குவதென்றும் முடிவெடுத்த செய்தியாகும்.

அது குறித்து நான் கூறும்போது, தேசிய முன்னணி ஆட்சியில் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் பதவியைப் பற்றிக் கவலைப்படாமல் எடுத்த நடவடிக்கையைப் போல் இன்றைய பிரதமர் நரசிம்மராவ் அவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும், இல்லையென்றால் நாட்டில் ரத்தக் களரியை உருவாக்கிட நடைபெறும் செயலுக்கு வாசல் கதவைத் திறந்துவிட்ட குற்றத்துக்கு மத்திய காங்கிரஸ் ஆட்சி பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்று கூறினேன். அயோத்தியில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்ட கரசேவையைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தி அறிக்கை விடுத்தனர்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான கரசேவையை டிசம்பர் 6ஆம் தேதியன்று தொடங்கப் போவதாக விசுவ இந்து பரிட்சத் (வி.எச்.பி.) அறிவித்துள்ள நிலையில் மத்திய அரசு என்ன செய்யப்போகிறது என்பதை 23-11-92க்குள் உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். 23ஆம் தேதி மத்திய அரசு தேசிய ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்தையும் கூட்டியிருந்தது. இந்த ஒருமைப்பாட்டுக் கூட்டத்தைப் புறக்கணிப்பது என்று பா.ஜ.க.வும், விஸ்வ இந்து பரிட்சத்தும் முடிவு செய்தன.


கரசேவையை மீண்டும் தொடங்குவதாக விசுவ இந்து பரிட்சத் அறிவித்துள்ளதையடுத்து சட்டத்தின் மாட்சியையும் அரசியல் சாசனத்தின் கண்ணியத்தையும் காப்பாற்றப் பொருத்தமான நடவடிக்கை எதையும் எடுக்கப் பிரதமர் நரசிம்மராவுக்கு அதிகாரம் அளித்து தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித் கொண்டு வந்தார். இந்தக் கூட்டத்தில் பிரதமர் பேசும்போது, அயோத்தி விவகாரத்தில் சட்டமோ, நீதிமன்ற உத்தரவோ எந்த வகையிலும் மீறப்பட அனுமதிப்பதற்கில்லை என்றும், அயோத்தியில்

கரசேவை துவக்கும் திட்டத்தை சம்பந்தப்பட்டவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், சட்டத்தையோ நீதிமன்ற உத்தரவுகளையோ மீறுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய தமிழக முதல்வர் ஜெயலலிதா "டிசம்பர் 6ந்தேதி பாரதீய ஜனதா, விஸ்வ இந்து பரிட்சத் மற்றும் சில அமைப்புகள் துவக்கப் போவதாக அறிவித்துள்ள கரசேவை நடைபெறுவதற்குத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் பாபர் மசூதி அப்படியே இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்" (தினமணி - 24-11-1992). மேலும் அவரது பேச்சில் சில குறிப்பிட்ட பகுதிகள் தினமணி இதழில் அப்போது வெளி வந்தது வருமாறு:-

"பெரும்பான்மையினராக உள்ளவர்கள் அனுபவிக்கும் உரிமைகளை அதே அளவில் சிறுபான்மையினராக உள்ள குடிமக்களும் அனுபவிக்கும் வகையில் நம்முடைய நடை முறைகள் அமைய வேண்டும் என்ற பொறுப்பை நமது அரசியல் சட்டத்தின் மதச்சார்பற்ற தன்மை நமக்குத் தந்துள்ளது. அதே நேரத்தில் அரசியல் சட்டத்தின்படி பெரும் பான்மையினருக்குக் கிடைக்கும் சாதாரண உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதிக்கும் வகையில் அரசியல் சரித்திர, சமூக அமைப்புகளின் பின்னணியில் தங்கள் நலன் களை முன்னிருத்தி செயல்படுவது சிறுபான்மையினருக்கு ஏற்றது அல்ல. இந்த நாட்டில் பெரும்பான்மை வகுப்பு இந்துக்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் தங்களுடைய மதச்சார்பான லட்சியங்களை அரசியல் சட்டத்தின் குறிக்கோள்களுக்கு மாறு படாத வகையில் அமைதியான வழியில் நிறைவேற்றிக் கொள்ள முயன்றால் அதனை அனுமதிக்க வேண்டும். பெரும்பான்மை யினரும், அவர்களுடைய உரிமைகளை சிறுபான்மையின ரைப் போல அனுபவிக்க அனுமதிக்க வேண்டும். அயோத்தி பிரச்சினையில் இதனைத் தொடர்புபடுத்தி குறிப்பாகக் கூற வேண்டுமென்றால் உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய

இடத்தில் இந்துக்கள் விரும்பியபடி கட்டுமானப் பணியை நிறைவேற்ற அனுமதிப்பதாகும். உத்தரப்பிரதேச அரசுக்கு உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணைகளும், உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளும் ஒருவித மான சட்டச் சூழலை உருவாக்கியிருப்பதை நான் அறிவேன். இந்தச் சூழலில் உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் கரசேவையோ அல்லது வேறுவித நடவடிக் கையோ மேற்கொள்வது கடின மாக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் கட்டுமானத்துக்குத் தடை இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் கட்டுமானப் பணிக்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்களை அகற்றத் தேவையான நடவடிக் கைகளை மத்திய அரசும் உத்தரப்பிரதேச அரசும் மேற் கொண்டாக வேண்டும். சட்டச் சிக்கல் இருப்பதையே இந்தப் பிரச்சினையில் முடிவு எடுப்பதை ஒத்திப் போடுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் கட்டுப்பட மறுக்கும் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பை எதிர்கொள் வது ஒவ்வொரு நாள் கழியக் கழிய அரசுக்குப் பெரும் கடினமாக அமையும். எனவே கரசேவை நடைபெறுவதற்குப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கத் தேவையான முடிவை இந்த அமைப்பு எடுக்க வேண்டியுள்ளது. கர சேவையை அனுமதிக்கும்படி நீதிமன்றங்களை அணுகத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். மிகவும் சுருக்கமாக என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் கரசேவை நடைபெறத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். மசூதி பிரச்சினை அப்படியே இருக்கட்டும். நம் நாட்டு மக்கள் அமைதியாக வாழட்டும். உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு ஒரு மாநில அரசு செவி சாய்க்காவிட்டால் அரசி யல் சட்டப்படி அந்த மாநில அரசு இயங்கவில்லை. அந்த அரசு டிஸ்மிஸ் செய்யப்பட வேண்டும் என்று வி.பி.



ஹர்கிஷன்சிங் சுர்ஜித்

சிங்கும் மற்றவர்களும் பேசினார்கள். ஒரு மாநில அரசு மட்டும் நீதிமன்ற ஆணையை அமல்படுத்த வேண்டும் என்று பாரபட்சமாகக் கூற முடியாது. அயோத்தியில் கோயில் கட்டப்பட வேண்டும் என்பது இந்த நாட்டின் பெரும் பான்மையான மக்களின் விருப்பத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக உள்ளது. பொதுமக்கள் கருத்தை இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களின் கருத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது."

இவ்வாறு கரசேவையை ஆதரித்து ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்திலேயே பேசியவர்தான் ஜெயலலிதா.


கரசேவையை டிசம்பர் 6ஆம் தேதி துவக்காமல் ஏழு நாட்களுக்கு ஒத்திப்போடுங்கள் என்று இறுதியாக பிரதமர் நரசிம்மராவ் கூறிய யோசனையையும் ஏற்க முடியாது என்று விசுவ இந்து பரிட்சத் நிராகரித்து விட்டது.

மதுரையிலே நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டிலே ஜெய லலிதா பேசும்போது கடந்த தேர்தலில் அ.தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியின் வெற்றிக்கு ராஜீவ் காந்தியின் படுகொலை காரணமல்ல என்று பேசியதற்குப் பிறகு அ.தி.மு க.விற்கும் காங்கிரசிற்கும் இடையே இருந்த உறவில் சற்று விரிசல் காணத் தலைப்பட்டது. காங்கிரஸ் கட்சியிலே உள்ளவர்கள் இரண்டு பிரிவாக நின்று அ.தி.மு.க.விற்கு ஆதரவாக ஒரு பிரிவினரும், சுயமரியாதையோடு கட்சி நடத்த வேண்டு மென்று ஒரு பிரிவினரும் கூறத் தலைப்பட்டனர். முதல் பிரி வினருக்கு திரு. வாழப்பாடி ராமமூர்த்தியும், இரண்டாவது பிரிவினருக்கு திரு. மூப்பனார் அவர்களும் தலைவர்களாக விளங்கினர். இரண்டு கட்சிகளுக்கு மிடையே உள்ள கூட்டணி உறவில் நீறுபூத்த நெருப்பாகப் புகைந்து கொண் டிருந்த கருத்து வேறுபாடு 92ஆம் ஆண்டின் இறுதியில் பெரும் விரிசலாகியது. இந்தக் காலகட்டத்தில் பழனி மக்கள் அவைத் தொகுதிக்கும், ராணிப்பேட்டை சட்டப் பேரவை தொகுதிக்கும் இடைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட விருந்ததால், அந்த இடைத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டு வேண்டாம் என்று அந்தக் கட்சியின் அகில இந்திய

தலைமைக்குப் பரிந்துரை செய்யப் போவதாக மூப்பனார் வெளிப்படையாகப் பேசினார்.

இந்த நேரத்தில் 14-11-92 அன்று டெல்லி சென்ற முதலமைச்சர் ஜெயலலிதா பா.ஜ.க. தலைவர் அத்வானியைச் சந்தித்துப் பேசியது, இந்திரா காங்கிரசுடன் கொண்டுள்ள உறவைத் துண்டித்துக் கொள்ளத் தயாராக இருப்பதை பிரதமர் நரசிம்மராவுக்கு உணர்த்துவதாக அமைந்தது. நவம்பர் 23ந் தேதியன்று ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் ஜெயலலிதா கரசேவையை ஆதரித்துப் பேசியது அவரது கட்சிக்கும் காங்கிரசுக்கும் இடையே இருந்த உறவு முறிந்தது என்பதை தெளிவாகக் காட்டியது. தினமணி இதழ் காங்கிரஸ் அ.தி.மு.க. உறவு முறிந்தது என்றே முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது.

ஜெயலலிதாவின் பேச்சுக்கு தமிழகத்திலே உள்ள கட்சித் தலைவர்கள் நல்லசிவன், திருநாவுக்கரசு, வீரமணி, அப்துல் சமது, அப்துல் லத்தீப், வாழப்பாடி ராமமூர்த்தி, அன்பரசு, நல்லக்கண்ணு ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர். ஜெயலலிதாவின் பேச்சைக் கண்டித்து தி.மு. கழகத்தின் சார்பில் தமிழகம் எங்கும் 30-11-92 அன்று கண்டனக் கூட்டங்களை நடத்துமாறு பொதுச் செயலாளர் பேராசிரியர் அறிக்கை விடுத்தார். விசுவ இந்து பரிட்சத் தலைவர்கள் அசோக் சிங்கால், விஷ்ணு ஹரி டால்மியா, ஆசார்ய கிரிராஜ் கிஷோர் ஆகியோர் ஜெயலலிதாவின் பேச்சினைப் பாராட்டி அவருக்கு தந்தி கொடுத்தனர். அறிக்கை தந்தனர். தமிழ்நாடு விசுவ இந்து பரிட்சத் சார்பாக சென்னை போன்ற பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில்- "தேசிய ஒருமைப் பாட்டுக் குழு கூட்டத்தில் அயோத்தி கரசேவைக்கு ஆதரவாகப் பேசி கோடிக்கணக்கான இந்துக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்த தமிழக முதல்வர் மாண்புமிகு செல்வி



அத்வானி

ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி! நன்றி! நன்றி!" என்று அச்சடிக்கப்பட்டிருந்தது.

கட்டுமானப் பணிகளை அனுமதிக்க மாட்டோம் என வாக்குறுதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரப் பிரதேச அரசிடம் உச்சநீதிமன்றம் கூறியது. அதன்படி உத்தரப்பிரதேச அரசு அளித்த வாக்குறுதியை ஏற்று, அயோத்தியில் டிசம்பர் 6ந்தேதி பஜனைகளை நடத்த அனுமதித்து நீதிபதிகள் எம்.என். வெங்கடாசலய்யா, ஜி.என். ராய் கொண்ட டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பு கூறியது. நீதிமன்றத் தின் இந்தத் தீர்ப்புக்கு விசுவ இந்து பரிட்சத் கண்டனம் தெரிவித்ததோடு அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டுவது தான் எங்கள் குறிக்கோள், அதில் யார் குறுக்கிட்டாலும் கடுமையாக எதிர்ப்போம் என்று கூறியது.

26-11-1992 அன்று சென்னை சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ணச் செட்டித் தெருவில் கழகத்தின் சார்பில் கரசேவை கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத் தில் நான் பேசும்போது வெளிநாட்டுப் படையெடுப்புகள் நிகழ்ந்தபோது பண்டிதநேரு, லால்பகதூர் சாஸ்திரி ஆகியோருக்கு ஆதரவு கொடுத்ததைப் போல, கரசேவை பிரச்சினையில் பிரதமர் நரசிம்மராவுக்கு தி.மு.கழகம் துணை நிற்கும் என்று அறிவித்தேன். 30-11-92 அன்று உச்ச நீதிமன்றம், அயோத்தியில் அரசு கையகப்படுத்தியுள்ள இடத்தில் டிசம்பர் 6ஆம் தேதியன்று கரசேவை என்ற பெயரில் கட்டுமானப் பணிகள் எதையும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது என்று உபி. அரசு அளித்துள்ள உறுதிமொழியை தவறாமல் காப்பாற்ற நிர்வாக இயந் திரத்தை முடுக்கி விடுமாறு உத்தரவிட்டது. ஆனால் விசுவ இந்து பரிட்சத் டிசம்பர் 6ந்தேதியன்று பஜனைகளும் நடக்கும், அதே நேரத்தில் கட்டுமானப் பணியும் மேற் கொள்ளப்படும் என்று தெரிவித்தது. கரசேவைக்காக அத்வானி அவர்களும், முரளி மனோகர் ஜோஷி அவர்களும் டெல்லியிலிருந்து அயோத்திக்குப் புறப்பட்டனர். தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த நாடாளு

மன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து அயோத்தி பற்றி பேசியபோது, பாபர் மசூதி இடிக்கப்படக் கூடாது, மாநில அரசு கையகப்படுத்திய 2.77 ஏக்கர் நிலத்தில் கரசேவை எதுவும் நடைபெறக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணை மீறப்பட்டால் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளித்தார். நாடாளுமன்றத்தில் நடந்த சிறப்பு விவாதத்தின் போது அ.தி.மு.க. உறுப்பினர்கள்; சிறுபான்மையினரின் உணர்வு மதிக்கப்படும் அதே நேரத்தில் பெரும்பான்மையினரின் உரிமையும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். டிசம்பர் 3ஆம் தேதியன்றே அயோத்தியில் மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட கரசேவகர்கள் திரண்டிருந்தனர். அயோத்திக்குப் பேரணி செல்ல முயன்ற முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கும் ஜனதா தள தொண்டர்கள் 350 பேரும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். டிசம்பர் 3ஆம் தேதிய டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் உ.பி.மாநில விசுவ இந்து பரிட்சத் அமைப்பின் செயலாளரான குலாப் சிங் பரிகார் என்பவர் அளித்த பேட்டியில் அயோத்தியில் நடைபெறும் கரசேவைக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினரை தமிழக முதல்வர் ஜெயலலிதா அனுப்பி வைத்துள்ளார், மேலும் கரசேவைக்குரிய பல உதவிகளைச் செய்வதாக உறுதியும் அளித்துள்ளார் என்று கூறியதாக செய்தி வெளி வந்திருந்தது.


டிசம்பர் 5ஆம் தேதி முரசொலியில் "துள்ளி வரும் வேலாக; ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக!" என்ற தலைப்பில் நான் ஒரு கவிதை எழுதியிருந்தேன். அதில் குறிப்பிட்ட சில பகுதிகள் வருமாறு :-

கரசேவை என்பது தான் என்ன ?
கடவுள் சேவையா ? அல்லால்
கலக விதை தூவும் சேவையா ? அதற்குக்
கை கொடுத்திட இங்கோர் பாவையா ?
திரேதாயுகத்தில் பிறந்தான் இராமன் எனில்
துவாபரயுகம் தொடர்ந்து வந்து; அதுவும் முடிந்து,
இப்போது நடப்பது கலியுகம் என்கின்ற போது

இருபது லட்சம் ஆண்டுகள் அன்றோ கடந்து போயின!
இத்தனை லட்சம் ஆண்டுக்கு முன்னே
இராமன் பிறந்த இடத்தைக் கண்டது யாரோ? விண்டது எவரோ?

இப்போது இதுதான் அந்த இடமென்று கூறி,
இஸ்லாமிய வரலாற்று சின்னத்தை இடித்தலென்ன நீதி?
அயோத்தி நகரில் இராமனுக்கோர் கோயில்
அட்டியின்றிக் கட்டிக் கொள்ள அனைவரும்
அனுமதிக்கின்றோம்; எனினும் அதற்காக
அகற்றுவோம் பாபர் மசூதியை எனில் ஒப்பிடமாட்டோம்!

குறிப்பிட்ட டிசம்பர் 6ந்தேதியும் மிகுந்த பரபரப்புடன் வந்தது. பூஜைகள், பஜனைகள், கீர்த்தனைகள் என்று மட்டுமே கரசேவை நடைபெறும் என்று விசுவ இந்து பரிட்சத், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளால் அறிவிக்கப் பட்டிருந்த போதிலும், கட்டுக்கடங்காமல் கூடியிருந்த கரசேவகர்களின் நடவடிக்கைகளால் பாபர் மசூதி கட்டடத்துக்கு பெருத்த சேதம் ஏற்பட்டது. பகல் 11.50 மணிக்கு ஒரு சாது எழுந்து கரசேவைக்கான பூஜைகள் ஆரம்பமாகப் போகின்றன என்று அறிவித்தார். உடனே சிவசேனை, பஜ்ரங்தளம் ஆகியவற்றின் தொண்டர்கள் பாபர் மசூதியை நோக்கி ஓடினர். போகிற வழியில் இருந்த மரக்கட்டை தடுப்பு, இரும்புக் கிராதிகள் தடுப்பு, முள்கம்பி வேலி தடுப்பு ஆகியவற்றை உடைத்து எறிந்து கொண்டு பாபர் மசூதி மீது வேகமாக ஏறினர். மசூதி கட்டிடம்மீது காவிக் கொடிகளைப் பறக்க விட்டு ஜய் ஸ்ரீராம் என்று முழக்கமிட்டனர். கைகளிலிருந்த கடப்பாரை, இரும்புக் கம்பி, கோடாரி ஆகியவற்றால் மசூதியின் கூண்டுகளையும், மேல்தளத்தையும் சுவரையும் உடைக்கத் தொடங்கினர். மசூதியை நோக்கி ஓடிவந்த கரசேவகர்களை மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த சுமார் 60 பேர் தடுக்கப் பார்த்தனர். ஆயிரக்கணக்கில் அலை அலையாகத்



முரளி மனோகர் ஜோஷி

தொண்டர்கள் ஓடி வருவதைப் பார்த்ததும் இனி தம்மால் ஏதும் செய்ய முடியாது என்று பின்வாங்கி விட்டனர். மாநில ஆயுதப்படை போலீசாரும், சாதாரண போலீசாரும் தடுக்கக் கூட முற்படவில்லை. ஒரே சமயத்தில் பல பேர் பல இடங்களில் இடித்ததால் ஒருவர் இடித்த செங்கல் இன்னொருவர் மீது விழுந்து காயம் அடைந்தனர். இதனால் மட்டும் நான்கு கரசேவ்கர்கள் இறந்தனர். கரசேவகர்கள் அயல் நாட்டுப் புகைப்படக்காரர்களையும் நிருபர்களையும் தாக்க முற்பட்டனர். கரசேவகர்கள் மீது எந்தக் காரணம் கொண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கூடாதென்று மாநில அரசு உத்தரவிட்டிருந்தது.

39 மசூதி இடிப்பும் மக்கள் கொதிப்பும்!

கரசேவகர்கள் பாபர் மசூதிக்குள் நுழைந்து அதன் கூண்டுகளை இடிக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்ததும் மாநில முதல்வர் கல்யாண் சிங் தமது சக அமைச்சர்களையும் உயர் அதிகாரிகளையும் அழைத்து ஆலோசனை நடத்தினார். அயோத்தியிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பைசாபாத்தில் அதிரடிப்படையை மத்திய அரசு நிறுத்தியிருந்தது. பகல் 1 மணிக்கு அவர்களுக்கு மாநில அரசு தகவல் அனுப்பி அயோத்தி செல்லப் பணித்தது. ஆனால் கரசேவகர்களால் முன்னேற்பாடாக அந்தப் பாதையில் அதிரடிப்படை வாகனங்கள் செல்ல முடியாதபடிக்கு பாறாங்கற்களும் மரக்கட்டைகளும் போடப்பட்டிருந்தன. தரையில் நிலக்கரித்தூள் கொட்டப் பட்டு பழைய டயர்களும் கொளுத்திப் போடப்பட்டிருந்தன. சாலைகளிலும் தீ எரிந்தது.

பகல் 11.50 மணிக்குத் துவங்கிய இடிப்புப் பணியால் முதல் கூண்டு 2.45 மணிக்கும், இரண்டாவது கூண்டு பிற்பகல் 4.30 மணிக்கும், 3வது கூண்டு மாலை 4.45 மணிக்கும் இடித்து வீழ்த்தப்பட்டன. பாபர் மசூதியின் முழுக் கட்டடமுமே மாலை 5 மணிக்கு இடித்துத் தள்ளப்பட்டு விட்டது.

இதைப்பற்றிச் செய்தி நிறுவனங்கள் உடனடியாக என் கருத்தைக் கேட்டபோது, "மதவெறி இயக்கங்களும் அவற்றின் போக்கை ஆதரித்தவர்களும் நினைத்ததையும் பேசியதையும் நிறைவேற்றி முடித்துவிட்டார்கள். கரசேவை

என்பது இந்திய ஒருமைப்பாட்டை உடைக்கும் சேவை ஆகிவிட்டது. இன்று நடந்துள்ள காட்டுமிராண்டித்தன மான மதவெறிச் செயல் மூலம் உச்சநீதிமன்றமே புறக் கணிக்கப்பட்டு பிரச்சினைக்குரிய பகுதி என்பதற்கான ஆதாரங்களும் சிதிலமாக்கப்பட்டுவிட்டன. மத நல்லிணக்கக் கொள்கையில் உண்மையான நம்பிக்கை கொண்ட கட்சி களால் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை மத்திய காங்கிரஸ் அரசு அலட்சியப்படுத்தியதோடு, இந்தக் கொடுஞ் செயலை யும் தடுத்து நிறுத்திட தக்க நடவடிக்கை எடுக்காமல் பெரிய தவறு செய்து விட்டது. எனவே, இதன் விளைவுக்கான முழுப் பொறுப்பையும் மத்திய அரசே ஏற்கவேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

அயோத்தி சென்றிருந்த அத்வானியும், உமாபாரதியும், ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. தொண்டர்களும் கரசேவகர்களைக் கீழே வருமாறு கேட்டுக் கொண்டும் அவர்கள் கீழே இறங்கத் தயாராக இல்லை. பஜ்ரங்தள் தொண்டர்களும், சிவசேனை யினரும்தான் கட்டிட இடிப்பு வேலைகளில் இறங்கினர் என்று வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் குற்றம் சாட்டினர்.


மாநில முதல்வர் கல்யாண் சிங் கட்சியின் மூத்த தலைவர் களுடன் ஆலோசனை க்லந்துவிட்டு, தனது ராஜினாமா கடி தத்தை ஆளுநர் பிசத்தியநாராயண ரெட்டியிடம் அளித்தார். ஆனால் அவர் அதை ஏற்கவில்லை. அதே நேரத்தில் டெல்லி யில் கூடிய மத்திய அமைச்சரவை கல்யாண்சிங் தலைமை யிலான உத்தரப்பிரதேச அரசை டிஸ்மிஸ் செய்யவும், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல் செய்யவும் தீர்மானம் நிறைவேற்றியது. அதற்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் வழங்கினார்.

உத்தரப்பிரதேச அரசைக் கலைத்தது பற்றி என்னிடம் கருத்து கேட்டபோது, "தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோலத்தான் இப்போது உத்தரப் பிரதேச அரசு கலைப்பும் உள்ளது. 400 ஆண்டு கால முகலாய வரலாற்றுச் சின்னத்தை இடிப்பதை

வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு இப்போது ஆளுக்கு ஆள் நீலிக் கண்ணீர் வடிப்பதில் பயன் என்ன?" என்று கூறினேன்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து நாடு முழுதும் பல இடங்களில் கலவரங்களும், தீ வைப்பு களும், சூறையாடல்களும் நடைபெற்றன. குறிப்பாக மராட்டியத்திலும் குஜராத்திலும் உயிர்ச்சேதம் அதிகமிருந் தது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால் மராட்டியத் தில் 68 பேரும், குஜராத்தில் 41 பேரும், உத்தரப்பிரதேசத்தில் 35 பேரும், கர்நாடகத்தில் 25 பேரும், ராஜஸ்தானில் 25 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 17 பேரும், ஆந்திராவில் 10 பேரும், டெல்லியில் 4 பேரும், மேற்கு வங்கத்தில் 4 பேரும், பீகாரில் 2 பேரும், கேரளத்தில் ஒருவரும் பலியானார்கள். பின்னர் இந்த எண்ணிக்கை மொத்தத்தில் 800 பேர் என்ற அளவிற்கு அதிகரித்தது. மராட்டியத்தில் முதலில் 68 பேர் என்பது பின்னர் 125 பேர் என்ற அளவிற்கு உயர்ந்தது. குஜராத்தில் 20 பேர் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர். தேசிய முன்னணி, இடதுசாரிக் கூட்டமைப்புக் கட்சிகளின் கூட்டம் 7 ஆம் தேதியன்று அண்ணா அறிவாலயத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. 10 ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் முழு அடைப்பு நடத்துவதென்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

கரசேவை அக்கிரமத்தைக் கண்டித்து கழகத்தின் சார்பில் சென்னை சூளையில் மாபெரும் பொதுக்கூட்டம் 7 ஆம் தேதியன்று நடைபெற்றது. பாபர் மசூதியைக் காப்பாற்றாத இந்திய ராணுவமா பாரதநாட்டைக் காப்பாற் றப் போகிறது என்று நான் பேசும் போது கேள்வி எழுப்பினேன்.



ஜோதிபாசு


தமிழ்நாட்டிலும் 8-ந் தேதியன்று பல இடங்களில் கலவரம் ஏற்பட்டு ஆறு இடங்களில் போலீசார் துப்பாக்கிச்

சூடு நடத்தினர். அந்தச் சம்பவங்களில் 3 பேர் இறந்தனர். 25 பேர் காயமடைந்தனர். கோவையில் கோயில்களுக்குத் தீ வைக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பிரதமர் பதவி விலக வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் அமளி ஏற்பட்டது. பலமுறை அவை ஒத்திவைக்கப்பட்டது. திரு.அத்வானி அவர்கள் மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்திற்குப் பொறுப்பேற்று தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

8ஆம் தேதி அதிகாலையில் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, அசோக் சிங்கால் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பிரதமர் இல்லம் நோக்கி ஊர்வலம் செல்ல முயன்ற பாபர் மசூதி கமிட்டித் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். நாடாளுமன்றம் ஒரு வார காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பாரதீய ஜனதா அரசுகளையும் கலைக்க வேண்டுமென்று காங்கிரஸ் மற்றும் இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டன.

மத்திய அரசு; ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிட்சத், பஜ்ரங் தள், இஸ்லாமிக் சேவக் சங், ஜமாத்-இ-ஹிந்த் ஆகிய ஐந்து மத அமைப்புகளைத் தடை செய்தது. இதன் தொடர்ச்சியாக, தடை செய்யப்பட்ட 3 மத அமைப்புகளைச் சேர்ந்த 21 அலுவலகங்களுக்குத் தமிழகத்திலே 'சீல்' வைக்கப்பட்டது. அந்த அமைப்புகளின் வங்கிக் கணக்குகளும் முடக்கப் பட்டன. அந்த அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

15-12-1992 அன்று நள்ளிரவில் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஆட்சியிலிருந்த பாரதீய ஜனதா கட்சி அரசுகளை மத்திய அரசு கலைத்தது. அந்த மாநிலங்களின் சட்டப்பேரவைகள் கலைக்கப்பட்டன. 3 மாநிலங்களிலும் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. அரசியல் சாசனத்தின் 356வது பிரிவைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.



பி. வி. நரசிம்மராவ்

3 மாநில ஆளுநர்களின் அறிக்கைகளை அடிப்படையாக வைத்து அமைச்சரவை அந்த முடிவை எடுத்தது என்று மத்திய அரசு அதிகாரி தெரிவித்தார். மத்திய அரசின் அந்த நடவடிக்கையை அடுத்து அப்போது எந்த மாநிலத்திலும் பா.ஜ.க. அரசு ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத நிலை உருவாக்கப் பட்டது

இதுபற்றி என்னிடம் கருத்து கேட்டபோது, "உச்ச நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக மசூதி இடிக்கப்படவும் அதனால் நாட்டில் பெரும் கலவரம் ஏற்படவும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மாண்டிடவும் உத்தரப் பிரதேசத்தில் ஆட்சியில் இருந்த பா.ஜ.க. அரசு காரணமாக இருந்தது. எனவே அந்த மாநில அரசைக் கலைத்ததற்கு நியாயம் கற்பிக்க முடியும். ஆனால் பாரதீய ஜனதா என்ற அரசியல் கட்சி தடை செய்யப் படாத நிலையில் அந்தக் கட்சி ஆண்டு கொண்டிருந்த மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகளை அரசியல் சட்டத்தின் 356வது பிரிவைப் பயன்படுத்தி கலைத்ததை தி.முக. ஏற்றுக் கொள்ள இயலாது" என்று கூறினேன். ஆனால் மேற்குவங்க முதல்வர் ஜோதிபாசு அவர்கள், மத்திய அரசு அந்த மாநிலங்களை டிஸ்மிஸ் செய்தது சரியான நடவடிக்கை, தனது நடவடிக்கையால் அரசை ஆளும் தகுதியை பாரதீய ஜனதா இழந்து விட்டது என்றார். பா.ஜ.க. அரசுகளைக் கலைத்தது குறித்து மத்திய அரசின் தோழமைக் கட்சியாக இருந்த அ.தி.மு.க. மக்கள வையிலே கண்டனக்குரல் எழுப்பியது. தேசிய ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்தில், கரசேவையை ஆதரித்துப் பேசிய ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசை ஏன் கலைக்கவில்லை என்று வி.பி. சிங் ஓர் அறிக்கையிலே கேள்வியெழுப்பினார். இதற்கிடையில் தமிழகத்திலே சில மாநிலங்களில் ராணுவத்தினர் நடமாட்டம் இருந்ததைக் கண்டு ஜெயலலிதா பிரதமருக்கு ஆட்சேபக் கடிதம் ஒன்றை

எழுதினார். பிரதமராக இருந்த நரசிம்மராவ் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென்று அ.தி.மு.க. அமைச்சர்கள் இருவர் அறிக்கை விடுத்தனர். பிரதமர், தமிழகத்திற்கு ராணுவம் வந்திருப்பது திருவனந்தபுரம் செல்லும் வழியில்தான் என்றும், தமிழகத்திற்காக வந்தவர்கள் அல்ல என்றும் விளக்கம் அளித்தார்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் சுந்தர் லால் பட்வா தலைமையிலான பாரதீய ஜனதா அரசைக் கலைத்ததும், குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல் செய்ததும் செல்லாது என்று மத்தியப் பிரதேச உயர் நீதிமன்ற ஜபல்பூர் பெஞ்ச் 2-4-93 அன்று தீர்ப்பு வழங்கியது. அதே சமயம், அந்தத் தீர்ப்புக்கு எதிராக மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய இரண்டு வார காலம் அனுமதித்து, அதுவரை தங்களுடைய தீர்ப்பை அமல் செய்வதை நிறுத்தி வைத்தது.

26-12-92 அன்று அ.தி.மு.க. பொதுக் குழுவில் பேசிய ஜெயலலிதா, இந்திரா காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க.வோடு உறவைத் தொடருவதில் ஆட்சேபம் இல்லை, அதே நேரத்தில் கூட்டணி என்பதை ஒரு வழிப்பாதையாகவே காங்கிரஸ் எண்ணி தொடர்ந்து செயல்படுமானால் அக்கட்சி தனி வழியில் செல்வதைப் பற்றியும் தங்களுக்கு அக்கறை இல்லை என்றும், தோழமை என்று உதட்டளவில் கூறிக்கொண்டு எங்களது முதுகில் குத்த வந்தால், கத்தியை எடுக்கும் கையை முறித்து விடுவோம் என்றும் கூறி அனைத்து ஏடுகளிலும் வெளி வந்தபோதிலும், பின்னர் ஜெயலலிதா அவ்வாறு பொதுக்குழுவிலே தான் பேசவில்லை என்று மறுப்பு தெரிவித்தார்.

மதுரை மாநாட்டிற்குப் பிறகு ஜெயலலிதா காங்கிரசை அவ்வப்போது தாக்கிப் பேசி வந்ததும், டெல்லியில் நடைபெற்ற ஒருமைப்பாட்டுக் குழுவில் கரசேவைக்கு ஆதரவாகப் பேசியதும், பிரதமர் நரசிம்மராவைச் சந்திக்காமல் பா.ஜ.க. தலைவர் அத்வானி அவர்களை மட்டும் சந்தித்ததும் அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் உறவில் விரிசல் ஏற்பட்டது நன்றாகத் தெரிந்தது. இதற்கெல்லாம் மேலாக 1-12-1992

அன்று பிரதமர் நரசிம்மராவ் தமிழகத்திற்கு வரவிருந்த நேரத்தில் அதற்கு முதல் நாள் ஜெயலலிதா, தினமணி பொறுப்பாசிரியராக இருந்த பிரபு சாவ்லா அவர்களுக்கு ஒரு சிறப்புப் பேட்டி அளித்தார். அப்போது, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் தற்போதைய பிரதமர் நரசிம்மராவுக்கும் என்ன வித்தியாசம் காணுகிறீர்கள் என்று கேள்வி கேட்கப் பட்டபோது, "நானும் ராஜீவ் காந்தியும் ஒரே தலைமுறை யைச் சார்ந்தவர்கள். இப்போது ஒரு தலைமுறை இடை வெளி இருக்கிறது. பிள்ளைகள் கூட தலைமுறை இடை வெளியினால் தந்தையோடு பல சமயம் ஒத்துப்போக முடியாது. பிரதமருக்கும் மாநில முதல்வருக்கும் இடையில் இதுபோன்று இருக்கும்போது பிரச்சினைகள் மேலும் சிக்கலாகின்றன" என்றார்.

சட்டமன்ற, நீதிமன்ற மற்றும் ஆட்சித்துறை அதிகாரங் களை ஒருங்கே பெற்று, உலகிலேயே அதிகமான அதிகார முடைய தனிநபராகத் திகழ்பவர் அமெரிக்க அதிபர். இந்தப் பதவிக்கான தேர்தல் நடைமுறைகள் 1992 ஆம் ஆண்டு தொடங்கியது.

அப்போது அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான தேர்தலில் ஜார்ஜ் புஷ் ஷும் எழுத்தாளர் பாட்ரிக் புக்கனனும் அவர்கள் கட்சிக்குள் போட்டியிட்டனர். முதலில் 15 மாநிலங்களில் நடைபெற்ற தொடக்கக் கட்டத் தேர்தல்கள் அனைத்திலும் புஷ் வெற்றி பெற்றார். இருந்தாலும் புக்கனன் மூன்றில் ஒரு பங்கு வாக்கு களைப் பெற்றிருந்தார். அந்தக் கட்சியின் சில மூத்த தலை வர்கள் வேண்டுகோள் விடுத்தும் கூட போட்டியிலிருந்து விலக புக்கனன் மறுத்துவிட்டார்.

பொதுமக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடந்தபோது ஜனநாயகக் கட்சி வேட்பாளரிடம் புஷ் தோல்வி அடையக் கூடிய நிலை உள்ளதாகத் தெரிந்தது. ஜனநாயகக் கட்சி சார்பில் பில் கிளிண்டன், ஜெர்ரி பிரௌன், பால் சாங்காஸ் ஆகிய மூவரும் (அந்தக் கட்சிக்குள்) அதிபர் பதவிக்குப் போட்டியிட்டனர். அதில் அர்கன்சா மாநில ஆளுநர் பில்



ஜார்ஜ் புஷ்

கிளிண்டன்தான் புஷ்ஷுக்கு உண்மையான போட்டி வேட்பாளர். கிளிண்டனுக்கு அவருடைய கட்சியில் சவாலாக இருந்தவர் பால் சாங்காஸ். எனினும், தேர்தல் வெற்றியை நிர்ணயிக்கும் கலிபோர்னியாவிலும் தெற்குப் பிராந்திய மாகாணங்களிலும் சாங்காஸுக்கு ஒரு இடம் கூடக் கிடைக்காததால் அவர் வேட்பாளர் தேர்வில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு குறைந்தது.

அமெரிக்க அதிபர் தேர்தல் நடைமுறை சிக்கலானது. முதலாவதாகக் கட்சிகளின் தலைவர்கள் தாங்கள் போட்டியிடுவதற்கான அறிவிப்பை வெளியிடுவார்கள். இதையடுத்து பல்வேறு மாநிலங்களிலும் தொடக்கக் கட்டத் தேர்தல் நடைபெறும். இதன்பிறகு அதிபரைத் தேர்வு செய்வதற்கான வேட்பாளர் நியமனம் நடைபெறும். அதன் பின்னர் இறுதி வாக்கெடுப்பு நடக்கும்.

நான்காண்டுகள் பதவிக்காலம் கொண்ட அதிபர் பதவிக்கு நவம்பர் 3ஆம் தேதி தேர்தல் நடைமுறை தொடங்கும். நான்காண்டுகளுக்கு ஒருமுறை வரும் 366 நாட்கள் கொண்ட லீப் வருஷத்தை அடுத்து வரும் ஆண்டில் ஜனவரி 20ந் தேதி அதிபரின் பதவிக் காலம் தொடங்கும். இரண்டு பதவிக் காலத்திற்கு மேல் அதிபர் பதவிக்கு ஒருவர் போட்டியிட முடியாது.

இரண்டாவது முறையாகப் போட்டியிட முன்வந்த புஷ், ஈராக் போரில் கிடைத்த வெற்றி தனக்குச் சாதகமாக இருக்குமென்று எண்ணியபோதிலும், உள்நாட்டுப் பொருளாதாரம் மோசமாகி, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வந்ததை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தேர்தலுக்கு ஒரு திங்கள் முன்னதாக, அதாவது அக்டோபர் திங்களில் அமெரிக்க அதிபர் தேர்தலில் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படும் தொலைக்காட்சிகளில் கிளிண்டனுக்கும் ஜார்ஜ் புஷ்ஷுக்கும் நடைபெற்ற நேருக்கு


நேர் விவாதங்களில் கிளிண்டன் வெற்றி பெற்றதாக ஏ.பி.சி. நியூஸ் தெரிவித்தது.

பதவியில் இருந்த ஜார்ஜ் புஷ் வளைகுடாப் போரில் வெற்றி பெற்றது, கம்யூனிசம் தோல்வியுற்று சோவியத் யூனியன் சிதறுண்டு போனது, உலகில் ஏகபோக வல்லரசாக அமெரிக்கா திகழ்வது ஆகியவற்றைத் தம் சாதனையாக புஷ் பெருமையுடன் கூறிப் போட்டியிட்டார்.

12 ஆண்டுக் கால குடியரசுக் கட்சி ஆட்சியிலே மேட்டுக் குடி மக்கள்தான் சலுகைகளைப் பெற்றார்கள் என்றும், நடுத்தர, கீழ்நிலை மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்றும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கிளிண்டன் தன் வாதங்களைக் கூறி அரசின் பொருளாதார நடவடிக்கைகள் மக்களுக்குப் பயனளிக்கவில்லை என்று கூறி பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

இறுதியில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பில் கிளிண்டன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 42வது குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 12 ஆண்டுகளுக்குப் பிறகு குடியரசுக் கட்சியிடமிருந்து நாட்டின் தலைமைப் பொறுப்பு ஜனநாயகக் கட்சிக்கு மாறியது.

குடியரசுத் தலைவராக அமெரிக்காவில் ஜிம்மி கார்ட்டருக்குப் பிறகு, குடியரசுக் கட்சியின் சார்பில் ரொனால்டு ரீகன் இரண்டு முறை வெற்றி பெற்றும், அவரைத் தொடர்ந்து ஜார்ஜ் புஷ் அவர்கள் 1988இல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்றும் குடியரசுத் தலைவர்களாக இருந்தபிறகு; ஜனநாயகக் கட்சியின் சார்பில் பில் கிளிண்டன் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜார்ஜ் புஷ், சுயேச்சை வேட்பாளர் ரோஸ்பெரட் ஆகியோர் தோல்வியடைந்தனர். கிளிண்டன் வெற்றி உறுதி



பில் கிளிண்டன்

யானதும், அவரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்ற இரண்டு வேட்பாளர்களும் தொலைபேசி மூலம் கிளிண்டனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

8-11-92 தேதி யிட்ட முரசொலி கரிகாலன் பதிலில் இந்தப் பண்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டு, நமது நாட்டில் அத்தகைய பண்பாடு இல்லையே என்ற கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலில், "இந்தியாவில் மற்ற மாநிலங்களை விடத் தமிழ்நாட்டில்தான் அந்த அரசியல் பண்பாடு நசித்துப் போய்விட்டது. ஆனால் 1967ல் தி.மு.க. வெற்றி பெற்றபோது அண்ணா அவர்கள் பெரியாரைத் தேடி திருச்சிக்குச் சென்று வாழ்த்துப் பெற்றார், ராஜாஜி, பக்தவத்சலனார், காயிதே மில்லத் போன்றவர்களின் இல்லங்களுக்கும் சென்று வாழ்த்துப் பெற்றார். அதேபோல 1969ல் நான் முதல்வர் பதவியேற்றபோதும் 1971 தேர்தலில் மிகப் பெரும் வெற்றியை தி.மு.க. பெற்று மீண்டும் நான் முதல்வரான போதும் பெரியார், பெருந்தலைவர் காமராஜ், மூதறிஞர் ராஜாஜி, பெரியவர் பக்தவத்சலனார், காயிதே மில்லத், சிலம்புச் செல்வர் ஆகியோர் இல்லங்களுக்குச் சென்று வாழ்த்துப் பெற்றேன். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது போற்றப்பட்ட அரசியல் பண்பாடுகள் என்பது தெளிவாக விளங்குமே" என்று குறிப்பிட்டிருந்தேன்.

40 சமூகநீதி வெற்றியும்; சில சங்கடங்களும்!

மண்டல் கமிஷன் பரிந்துரைகள் தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீது 92ஆம் ஆண்டு நவம்பர் 16ந்தேதியன்று ஒன்பது நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் தீர்ப்பு அளித்தது. இந்த ஒன்பது நீதிபதிகளில் தலைமை நீதிபதி எம்.எச். கனியா, நீதிபதி பி.பி. ஜீவன்ரெட்டி, எம்.என். வெங்கடாச்சலய்யா, ஏ.எம். அகமது, பி.பி.சவந்த், எஸ்.ரெத்தினவேல் பாண்டியன் ஆகிய ஆறு நீதிபதிகள் ஆதரவாகத் தீர்ப்பளித்ததின் பேரில் பெரும்பான்மை தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. மூன்று நீதிபதிகள் மட்டுமே வேறு விதமாக கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மை நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், "மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் தேதி மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கி அன்றைய பிரதமர் வி.பி. சிங் பிறப்பித்த உத்தரவு செல்லும். அதன் பிறகு 1991ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி பொருளா தார அடிப்படையில் 10 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து பிரதமர் நரசிம்மராவ் பிறப்பித்த உத்தரவு செல்லாது. இந்த ஒதுக்கீடுகள் அனைத்தும் 50 சதவிகிதத்திற்கு மேல் அதிகமாகப் போகக்கூடாது. ஏற்கனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பி லிருந்து சமூக ரீதியில் முன்னேறியவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு கூடாது. எனவே பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை நிர்ணயம் செய்ய இன்னும் நான்கு மாதங்களில் மத்திய மாநில அரசுகள் கமிஷன்களை நியமிக்க வேண்டும். பதவி

உயர்வுகளுக்கு இந்த ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருந்தால் அது ஐந்தாண்டு காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்த கருத்து வருமாறு :-

மண்டல் அறிக்கையை வீழ்த்தும் எண்ணத்துடன் காங்கிரஸ் அரசு 10 சதவிகிதம் பொருளாதார அடிப்படைக்கு ஒதுக்கிய ஒதுக்கீடு செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது, இதை வரவேற்கிறோம். பொருளாதார அடிப்படை அரசியல் சட்டத்திற்கு உகந்ததல்ல என்று தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது, இதையும் வரவேற்கிறோம். மத்திய அரசு உத்தியோகங்களில் 27 சதவிகிதம் பின்தங்கிய சமூகத்திற்கு ஒதுக்கிய தேசிய முன்னணியின் அரசு உத்தரவு செல்லுபடியாகும், இது தீர்ப்பின் இதயம் போன்ற பகுதி யாகும். இதையும் வரவேற்கிறோம், இது வரலாற்றுச் சிறப்பு மிக்கது. ஆனால் 27 சதவிகித ஒதுக்கீடு உத்தரவை உடனடி யாக அமல்படுத்த முடியாதபடி தடங்கல் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. சமுதாயத்தில் "முன்னேறிய- பின்தங்கிய சமூகத் தோரை" இந்த 27 சதவிகிதத்திலிருந்து நீக்கிவிட வேண்டு மாம். இதைக் கண்டறியவும், பின்தங்கியோர் பட்டியலைத் திருத்தி அமைக்கவும் ஓர் அமைப்பினை நான்கு மாதங்களில் உருவாக்கி இதற்குத் தீர்வுகாண வேண்டுமாம். பிறகு அது நிரந்தர அமைப்பாக நீடிக்குமாம். அதாவது இன்னொரு நிரந் தரக் கமிஷனுக்கு சுப்ரீம் கோர்ட் பரிந்துரை செய்திருக்கிறது. அதன் அளவுகோல் என்ன? அதை எப்படி கண்டறிவது என்பது குறித்து உச்ச நீதிமன்றம் விளக்கமளிக்கவில்லை. எனவே இப்பிரச்சினை மீண்டும் 'பண்டோரா பெட்டி'யைத் திறந்து அநாவசிய - தவிர்க்கக் கூடிய சர்ச்சைகளைக் கிளப் பும். சமுதாயத்தில் பதற்ற நிலையை உருவாக்கும். இதுகுறித்து மாநில அரசுகள் சுப்ரீம் கோர்ட்டை அணுகி இதற்கான மாற்றத்தை மறு ஆய்வின் மூலம் பெற வேண்டும். இல்லா விடில் இது மாநிலந்தோறும் ஒரு பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். அண்மைக்காலமாக நீதி மன்றங்களில்

பஞ்சாயத்து செய்து வைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. அதுவே இப்போதும் நடைபெற்றிருக்கிறது. ஆகவே இந்தத் தீர்ப்பு பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த பாதி வெற்றியே ஆகும்."

இதைப் பற்றி 21-11-92 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழ் எழுதும் போது, "இந்தத் தீர்ப்பு குறித்து முக்கியமாக திரு.கருணாநிதி சகல விதத்திலும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஏனெனில் பின்தங்கிய சமூகத்தினருக்கு சமூக நீதி கோரி அவரது கட்சி பெரும்பணி ஆற்றியிருக்கிறது. 1990ஆம் ஆண்டு மண்டல் எதிர்ப்பு அலையால் வி.பி.சிங் ஆட்சி என்ற படகு ஆடிக் கொண்டிருந்தபோது முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி தனது முழு பலத்தையும் உபயோகித்து வி.பி. சிங்கை ஆதரித்தார். ஆனால் சமுதாய ரீதியாக- கல்வி ரீதியாகப் பின்தங்கியோரிலிருந்து முன்னேறியோரைக் கண்டறிந்து அவர்களைப் பின்தங்கியோர் பட்டியலில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்கிற உச்ச நீதிமன்ற தாக்கீது தி.மு.க. தலைவரை வருத்த மடையச் செய்திருக்கிறது" என்று எழுதியிருந்தது.

பிரதமர் நரசிம்மராவ் அவர்களின் கொள்கைகளை விமர்சித்து மராட்டிய ஆளுநராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் சில கருத்துக்களைத் தெரிவித்ததாக கோவா தினசரி இதழ் ஒன்றில் வெளிவந்திருந்தது. அதன் தொடர்ச்சியாக 7-1-1993 அன்று சி.சுப்பிரமணியம் அவர்கள் தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களுக்கு அனுப்பி வைத்தார். உடனடியாக அந்தக் கடிதம் குடியரசுத் தலைவர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆளுநர் பதவியிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். இவரது இடத்திற்கு தமிழகத்திலே ஆளுநராக இருந்து சில திங்கள்களுக்கு முன் விடுவிக்கப் பட்டிருந்த திரு. அலெக்ஸாண்டர் நியமிக்கப்பட்டார்.

2-2-93 அன்று சென்னையில் அண்ணா அறிவாலயம், கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் மார்ச் 19, 20, 21 ஆகிய நாட்களில்

கோவையில் மாநில மாநாட்டினை நடத்துவதென்றும், மாநில அரசு இலவச மின்சாரத் திட்டத்தை ரத்து செய்தால் மாபெரும் போராட்டத்தை நடத்துவதென்றும் முடிவெடுக் கப்பட்டது. மேலும் கடும் குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருந்த தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் பதவி விலகலை வலியுறுத்தும் வகையில் 4ஆம் தேதியன்று சட்டப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது அதில் கழக உறுப்பினர்கள் பங்கேற்பதில்லை என்றும் முடிவெடுக்கப் பட்டது. அரிசி விலையை 2 ரூபாயிலிருந்து 2.75 ரூபாயாக வும், 3 ரூபாயிலிருந்து 3.75 ரூபாயாகவும் உயர்த்தியதைக் கண்டித்தும், நில வரியை மூன்று மடங்காக உயர்த்தியதைக் கண்டித்தும், உரம், பூச்சி மருந்து, விவசாய இடுபொருட்கள் விலை உயர்வைக் கண்டித்தும், குடும்ப அட்டைகளுக்கு மாதம் 20 கிலோ அரிசி கழக ஆட்சியிலே வழங்கப்பட்ட தைப் போல வழங்க வேண்டுமென்று கோரியும் பிப்ரவரி 9ஆம் தேதியன்று நியாய விலைக் கடைகள் முன்பு கழகம் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே பல லட்சம் பேர் கலந்து கொண்டு பல நகரங் களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். 4ஆம் தேதியன்று ஆளுநர் உரையாற்றும்போது புறக்கணிப்பது என்ற முடிவிற் கிணங்க அவைக்குச் செல்லவில்லை. பா.ம.க., சி.பி.ஐ., சி.பி.எம்., எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் சிறு சிறு அறிக்கையைப் படித்து விட்டு வெளி நடப்பு செய்தன.

இதற்கிடையே கழக முன்னணி தளபதிகளில் ஒருவரான என் ஆருயிர் நண்பர் அன்பில் தர்மலிங்கத்துக்கு 1992-93ஆம் ஆண்டுகளில் உடல்நலம் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டு அவரால் சரியாகப் பேச முடியாத நிலை ஏற்பட்டது. 93ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் உடல்நிலை சற்று மோசமாகி தனியார் மருத்துவமனை ஒன்றில் திருச்சியிலே உள்நோயா ளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார். சங்கரன்கோவில், தூத்துக்குடி, கன்யாகுமரி மாவட்டங்களில் சுற்றுப் பயண நிகழ்ச்சிக்காக தேதி கொடுத்திருந்த நான் நேராக அங்கே செல்லாமல் மார்ச் 5ந்தேதி திருச்சி சென்று அன்பிலை மருத்துவமனையிலே பார்த்து விட்டுத்தான் கார் மூலம்

சங்கரன்கோவில் கூட்டத்திற்கு சென்று கொண்டிருந்தேன். சென்று கொண்டிருக்கும்போதே அந்தச் சுயமரியாதை சுடரொளி, என் அன்புக்கு இனிய நண்பர், 45 ஆண்டு காலம் பழகிய அந்த மாவீரர் மறைந்துவிட்ட செய்தி வந்துவிட்டது. உடனடியாக திருச்சிக்குத் திரும்பிட நான் துடித்தேன். ஆனால் என்னுடனிருந்த வைகோ சங்கரன் கோவில் கூட்டத்திலே பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமி விட்டார்கள். நீங்கள் மட்டும் அந்தக் கூட்டத்திலே 15 நிமிடம் பேசிவிட்டு, தூத்துக்குடி, நாகர்கோவில் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்துவிட்டு திருச்சி திரும்பி விடலாம் என்று வலியுறுத் தியதின் பேரில் சங்கரன்கோவிலில் 15 நிமிடம் அன்பில் தர்மலிங்கத்தின் புகழைப் பாடிவிட்டு திருச்சி திரும்பினேன்.

அன்பில் தர்மலிங்கம் தன் வாழ்நாளில் பல பதவிகளை வகித்தவர். ஊராட்சி மன்றத் தலைவராக, கூட்டுறவு சங்க இயக்குநராக, திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக, சென்னை கூட்டுறவு வங்கி இயக்குனராக, திருச்சி மாவட்ட கழகத்தின் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, வேளாண்மைத் துறை அமைச்சராகப் பணி யாற்றியவர். என்னுடைய அமைச்சரவையில் வேளாண்மைத் துறை அமைச்சராக மட்டுமல்லாமல், உள்ளாட்சித்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளையும் அவர் வகித்தவர்.

சங்கரன்கோவில் கூட்டத்தை முடித்துக் கொண்டு திருச்சி வந்து அன்பில் அவர்களின் இறுதி நிகழ்ச்சிகளில் பங்கேற் றேன். சென்னையிலிருந்து பொதுச் செயலாளர் பேராசிரி யரும் திருச்சி வந்திருந்தார். அன்பிலுக்காக முரசொலியில் நான் எழுதிய கண்ணீர் அருவியில்; சில துளிகள் இதோ :-

"திருச்சியில் 1956 கழக மாநில மாநாட்டின்போது, "அன்பில் அழைக்கின்றார்" என்பது அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் தலைப்பு. அது அண்ணா வழங்கியுள்ள பொருள் பொதிந்த சொற்றொடர்களில் ஒன்றாக ஆகிவிட்டிருப்பதை எப்படி மறக்க இயலும்? அந்த அன்பில் இன்று இல்லை. படமாகி விட்டார். இந்த முடிவு

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உண்டு எனினும், இன்னும் அவர் பழமாக, கிழமாக மாறி அப்போதும் இந்த இயக்கத்தின் பாதுகாப்பு அரணாகத் திகழ்வார் என்றுதான் நம்பியிருந்தேன். நானிருந்தாலும் இல்லாவிட்டாலும் இல்லத்தில் எம் அஞ்சுகத்தாயின் கையினால் குறைந்தது பத்து இட்லிகளாவது பரிமாறச் செய்து உண்டு செல்லும் அந்தக் காலம் முதல் எங்கள் குடும்பத்தில் ஒருவரானவர் தானே அவர்! மாவட்டத்திலும் சரி, மாநில முழுமையும் சரி, எத்தனை செல்வாக்கு அவருக்கு! அமைச்சராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவரைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும். ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, உழைப்பால் உயர்ந்து, பெரியார், அண்ணா, இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், காயிதேமில்லத் போன்றவர்களின் அன்பைப் பெற்ற என் நண்பர் - என் உயிர்த் தோழர் - கழக ஆட்சியில் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்ததையும், அத்துறையினைத் திறம்பட வளர்த்ததையும் எண்ணித் தான் திருச்சி மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு "அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி" ஒன்றினைத் தொடங்கினேன் கழக அரசின் சார்பில்! அன்பிலுக்கும் அருமை நண்பர் எம்.ஜி.ஆருக்கு முள்ள நட்பைப் பத்திரிகைகள் எல்லாம் படம் போட்டு எழுதியுள்ளனவே இப்போது; அந்த எம்.ஜி.ஆர். அவர்களின் நண்பர் அன்பிலின் பெயரை நான் வைத்ததைத்தான்; இந்த ஆட்சி வந்ததும் வராததுமாகத் தூக்கி எறிந்து விட்டது. ஆனால் புகழ்வானின் உச்சியிலே கொடி போட்டு, இலட்சோப லட்சம் கழகத் தொண்டர்களின் உள்ளத்தில் குடி கொண்டுள்ள, அந்த விவசாயக் குடும்பத்து வீரன் - கொள்கைத் தங்கம், அன்பில் தர்மலிங்கத்தின் பெயர் என்றைக்கும் யாராலும் அழிக்க முடியாதது!



அன்பில் தர்மலிங்கம்

நண்பனே! அன்பில்! இப்போதும் நீ எங்கள் வீட்டுக்குள் நுழைந்து தாழ்

வாரம், கூடம், இங்கெல்லாம் நடந்து கொண்டிருப்பது போலவே இருக்கிறது! அண்ணா அறிவாலயத்தில் என்னருகிலும் பேராசிரியர் அருகிலும் அமர்ந்து இருப்பது போலவே உணருகிறேன்! நீ எங்கும் போய்விடவில்லை; எங்களுக்குள்தான் இருக்கிறாய்!"


அன்பில் என்னிடமிருந்து பிரிந்துவிட்டக் கொடுமைக்குப் பிறகு அவர் பெற்ற மூத்தசெல்வன் என்னை அன்பொழுக அப்பா, அப்பா என்று அழைப்பானே, அன்பு மகன் பொய்யா மொழி, அவனை சட்டப்பேரவை உறுப்பினராக ஆக்கினேன், இளைஞர் அணியின் இணைச் செயலாளராக ஆக்கினேன், ஆனால் அவன் தன் தந்தையைப் பின் தொடர்ந்து மிகச் சிறுவயதிலேயே மறைந்து விட்டான். அன்பிலின் இரண்டாவது மகனும், பொய்யாமொழியின் தம்பியுமான பெரியசாமியை திருச்சி இரண்டாவது தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக ஆக்கியுள் ளோம். அவனைப் பார்க்கும்போதெல்லாம் மறைந்த மாவீரர்களின் நினைவு என் நெஞ்சில் எத்தனையோ பழைய சிந்தனைகளைக் கிளப்பத் தவறுவதில்லை.

கழகத்தின் 7வது மாநில மாநாடு கோவையில் 1993ஆம் ஆண்டு மார்ச் 26, 27, 28 ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. கழகத்தின் முதல் மாநில மாநாடு 1951ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ஆம் தேதி முதல் 16ஆம் தேதிவரை சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றது. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு 1956ஆம் ஆண்டு மே திங்கள் 17 முதல் 20ஆம் தேதிவரை திருச்சியில் நடைபெற்றது. கழகத்தின் மூன்றாவது மாநில மாநாடு 1961ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13 முதல் 16ஆம் தேதிவரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது. நான்காவது மாநில மாநாடு சென்னை விருகம்பாக்கத்தில் 1966ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29, 30, 31 மற்றும் 67ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் தேதி ஆகிய நாட்களில் நடைபெற்றது. கழகத்தின் ஐந்தாவது மாநில மாநாடு கோவையில் 1975ஆம் ஆண்டு டிசம்பர் 25 முதல் 28ஆம் தேதி வரை நடைபெற்றது.

கழகத்தின் ஆறாவது மாநில மாநாடு திருச்சியில் 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9, 10, 11 ஆகிய நாட்களில் நடைபெற்றது. கோவையில் நடைபெற்ற 7வது மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் நான் ஒருமுறை கோவைக்குச் சென்று மாநாட்டுப் பணிகள் எல்லாம் முறையாக நடைபெறுகிறதா என்று பார்த்து விட்டு வந்தேன்.

அந்த மாநில மாநாடு நடைபெறும் இடத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. அந்த மாநாட்டிலே இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்து முடிவுகள் எடுக்கப்பட விருந்ததால் மாநாட்டுப் பந்தலுக்கு தாளமுத்து நடராசன் பெயர் சூட்டப்பட்டது. வால்பாறை இராமசாமி முகப்பு அமைந்த கோவை அரங்கநாதன் அரங்கத்தில் மாநாடு நடைபெற்றது. மாநில மாநாட்டிற்கு தலைமை வகிப்பது கழகத்தின் தலைவர் என்ற சட்ட விதிமுறைப்படி நான் தலைமை வகித்தேன். பொதுச் செயலாளர் பேராசிரியர் மாநாட்டி னைத் திறந்து வைத்தார். பொருளாளர் சாதிக் பாட்சா மாநாட்டுப் பொருளாளர். மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக மு.கண்ணப்பன், மாநாட்டுச் செயலாளர் களாக கோவை மு.ராமநாதன், சி.டி.தண்டபாணி, விடுதலை விரும்பி, எம்.பி., ஈரோடு அ.கணேச மூர்த்தி, நீலகிரி முபாரக், க.ரா.சுப்பையன் பொறுப்பேற்றனர்.

மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள் கோவை மாநில மாநாட்டுப் பந்தலுக்கு கயவர்கள் சிலர் தீ வைத்தனர். அதிலே பந்தலின் பெரும்பகுதி எரிந்து சாம்பலானது. 30 லட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டது. ரூபாய் இழப்புக் கூட அல்ல, 45 ஏக்கர் பரப்பில் 10 லட்சம் பேர் அமரக் கூடிய வகையில் ஒரு மாத காலமாக கழக முன்னணியினரின் மேற் பார்வையில் இரவும் பகலும் உழைத்து எழுப்பியது அந்தப் பந்தல். அந்த உழைப்பினை அந்தக் கயவர்கள் கருக்கினர். மாநாட்டிற்கு முதல் நாள் பகல் 3.15 அளவிலே ஒரே நேரத்தில் பந்தலின் மூன்று இடங்களில் திடீரென தீப்பிடித்தது. பந்தலுக்குள் வைக்கப்பட்டிருந்த மின் சாதனங்கள்,



பேராசிரியர்

தொலைக்காட்சிப் பெட்டிகள், அலங்கார வேலைப்பாடுகள் எல்லாம் கருகின. பாஸ்பரஸ் போன்ற பொருளைப் பயன்படுத்தி பந்தலுக்குத் தீ வைத்திருக்கின்றனர். நல்லவேளை யாக மாநாட்டின் முகப்பும் மேடையும் தீயினால் பாதிக்கப்படவில்லை. செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது, பந்தலுக்குத் தீ வைத்தது நாசவேலை என்றும், மாநாடும் பேரணியும் திட்ட மிட்டபடி நடந்தே தீரும் என்றும், D.M.K. will take It என்றும் கூறினேன். பந்தலுக்குத் தீ வைத்ததைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உமாநாத், காங்கிரஸ் கட்சியின் சார்பில் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், வாழப்பாடி ராம மூர்த்தி, பா.ம.க. சார்பில் பேராசிரியர் தீரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்.நல்லக்கண்ணு, திராவிடர் கழகத்தின் சார்பில் கி.வீரமணி, ஜனதா கட்சியின் சார்பில் சந்திரலேகா ஆகியோர் கண்டன அறிக்கை விடுத்தனர்.


26ஆம் தேதி நடைபெற்ற வரலாறு காணாத பேரணியில் 20 இலட்சம் பேர் பங்கேற்றனர். விடிய விடிய தனி மேடையிலிருந்து நானும் கழக முன்னணியினரும் ஊர்வலத்தைப் பார்வையிட்டோம். என்னுடைய நிறைவுரையின் போது ஏப்ரல் 20 அன்று தமிழகம் முழுவதும் இந்தித் திணிப்பை எதிர்த்து ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்துவதென்றும், இந்தி எழுத்து அழிப்பு தொடர் போராட்டம் நடத்துவ தென்றும் கழகத்தின் சார்பில் முடிவெடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்தேன். நுழைவுக் கட்டணம், நன்கொடை சீட்டுகள் மூலம் 86 இலட்சம் ரூபாய் வசூலானது. அதில் மாநாட்டுப் பந்தல் எரிப்பு காரணமாக இரட்டைச் செலவானதால் 55 இலட்சம் ரூபாய் போக மீதம் 31 இலட்சம் ரூபாய் என்னிடம் மாநாட்டுக் குழுவினரால் வழங்கப்பட்டது.

இலட்சக்கணக்கான கழகச் செயல்வீரர்களும், வீராங்கனைகளும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஏப்ரல் 20ஆம் தேதி

களம்புக காத்திருந்த வேளையில், தமிழகத்தில் கழகம் எழுப்பிய குரலைப் புரிந்து கொண்ட மத்திய அரசு தானே ரயில்களையெல்லாம் அந்த நாளில் நிறுத்துவதாக அறிவித்து விட்டது.

ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு 1992ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரை ஆறு மாத காலத்தில் 192 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியது. அ.தி.மு.க. அரசின் மீது தி.மு.கழகத்தின் சார்பில் ஆளுநரிடத்தில் தரப்பட்ட ஊழல் புகார் பட்டியலில் இதுவும் இடம் பெற்றிருந்தது. இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதில் முறைகேடு உள்ளது என்றும், அந்த அனுமதியை ரத்து செய்ய வேண்டுமென்றும் கோரி உயர்நீதிமன்றத்திலே ஒருவர் வழக்கு தொடுத்தார். உயர்நீதிமன்ற நீதிபதிகள் சீனிவாசன், தங்கமணி ஆகியோர் இந்த வழக்கை விசாரித்து அளித்த தீர்ப்பு வருமாறு:-

"கடந்த 92ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை வரை 192 ஆசிரியர் பள்ளிகளுக்குத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட பல பள்ளிகளில் பயிற்சி எதுவும் தரப்படவில்லை. இன்னும் சில பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கூட இல்லை. மனு கொடுத்த சில தினங்களிலேயே பல பள்ளிகளுக்கான அனுமதி தரப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றனவா, அவற்றில் மாணவர்கள் பயில்கின்றனரா என்பது குறித்து நாங்கள் வியப்படைகிறோம். மனுதாரர் குற்றம் சாட்டியிருப்பது போல இந்த நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டதில் புறம்பான காரணங்கள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. மனுவில் குறிப் பிடப்பட்டுள்ள இந்தக் கருத்து ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்திலும், பள்ளிக் கல்வி இயக்குநரகத்திலும் பணியாற்றும் சில அதிகாரிகள், கல்வி அமைச்சர் உத்தரவுபடி இந்த அங்கீகார உத்தரவுகளை வழங்கியுள்ளனர். அமைச்சர் அந்தஸ்தில் உள்ள ஒருவர் இதற்கான ஆணையை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது தெரிகிறது. இந்த ஆசிரியர் பயிற்சிப்



விடுதலை விரும்பி

பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியதில் முறைகேடு நடந்துள்ளது. இதுதொடர்பாக தலைமைச் செயலகத்தில் உள்ள அதிகாரிகள் கல்வித் துறை அதிகாரிகள் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். விதிமுறைகளை மீறி அங்கீகாரம் அளித்து ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசு பாழ்படுத்தி நாசப்படுத்தி விட்டது. அரசு தனது கடமையைச் செய்யத் தவறியதோடு அல்லாமல் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளது. இதில் நீதிமன்றம் தலையிடாவிட்டால் மாநிலத்தில் கல்வித்துறை அழிவுப் பாதையை நோக்கிப் போய்விடும். எனவே அனுமதி வழங்கப் பட்ட 192 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 175 பள்ளிகளின் அனுமதி ரத்து செய்யப் படுகிறது.”

இவ்வாறு உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.


41 ஆட்சியின் அலங்கோலமும் அராஜகமும்!

1993 மார்ச் 9ஆம் நாள் காங்கிரஸ் கட்சியுடன் உறவை முறித்துக் கொள்வதாக முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா அறிவித்தார். சில மாதங்களாகவே இரண்டு கட்சிகளின் உறவு நீடிப்பதில் சந்தேகம் இருந்து வந்தது. ஜெயலலிதாவின் திடீரென உணர்ச்சி வயப்படும் தன்மையும் அப்போதிருந்த காங்கிரஸ் தலைவர்களின் நடவடிக்கைகளும்தான் இரண்டு கட்சிகளுக் கிடையே உறவு முறியக் காரணம் என்று 'தினமணி' தலையங்கம் எழுதியது. 16-3-93 அன்று சட்டப் பேரவையில் பேசும்போது, அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்டபோது ராணுவம் என்ன செய்து கொண்டிருந்தது என்று ஜெயலலிதா மத்திய அரசைக் கடுமையாகத் தாக்கி உரையாற்றினார். அயோத்தி கரசேவைக்கு ஆள் அனுப்பியதாகப் புகழப்பட்டவர்; இப்படிப் பேசியது அவரது கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது ஒன்றும் புதிதல்ல! அவரது பேச்சுக்கு பதில் அளிக்க காங்கிரஸ் கட்சியின் பேரவை உறுப்பினர்கள் எழுந்தபோது அவர்களுக்கு வாய்ப்பு தரப்படவில்லை. தொடர்ந்து 19-3-93 அன்று பிரதமர்தான் பாபர் மசூதியை இடிக்க அனுமதித்தார் என்றே ஜெயலலிதா குற்றஞ் சாட்டினார். இதற்கிடையே சென்னையில் 21-3-93 அன்று பேட்டியளித்த பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி அவர்கள் பா.ஜ.க.விற்கும் அ.தி.மு.க.விற்கும் இடையே பெருமளவில் நல்லெண்ணம் நிலவுகிறது என்றும், தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் பாரதிய ஜனதாவை

ஆதரித்துப் பேசிய ஒரே முதல்வர் ஜெயலலிதாதான் என்றும், கரசேவை நிகழ்ச்சியையும் அவர் வரவேற்றுப் பேசினார் என்றும், அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே பெருமளவில் நல்லெண்ணம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

20-4-93 அன்று தமிழக சட்டப் பேரவையில் வரலாறு காணாத அளவிற்கு விடிய விடிய எதிர்க்கட்சிகளின் தர்ணா, உண்ணாவிரதம் நடைபெற்றது.

காவல்துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தில் 'எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.' உறுப்பினர் திருநாவுக்கரசு புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூடு குறித்துப் பேசியதையொட்டி தகராறு எழுந்தது. ஆளுங்கட்சி தரப்பிலிருந்து திருநாவுக்கரசை நோக்கி "வெளியே போடா" என்ற குரல் வந்தது. ஒருவருக்கொருவர் வேகமாக வாதிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் பேரவைத் தலைவர் அவை நடவடிக்கைகள் முடிந்துவிட்டதாக அறிவித்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளியே சென்றபிறகும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாரும் வெளியே போகாமல் அவைக்குள்ளேயே இருந்தனர். இந்த நிலையில் குளிர்சாதனமும் மின் விளக்குகளும் அணைக்கப்பட்டன. கதவுகள் மூடப்பட்டன. அதற்குப் பிறகும் பெண்கள் உட்பட காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியே போக வில்லை. சி.பி.ஐ., சி.பி.எம். உறுப்பினர் களும் பேரவைக்குள்ளேயே இருந்தனர். அதற்குமுன்பே பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட திருநாவுக்கரசும் அங்கே வந்துவிட்டார். கழக உறுப் பினர் பரிதிஇளம்வழுதியும் அங்கிருந் தார். அங்கிருந்த பத்திரிகையாளர்களை வெளியேறும்படி பேரவைத் தலைவர் அலுவலகத்திலிருந்து கூறியதற்கு



திருநாவுக்கரசு


பத்திரிகையாளர்களும் வெளியேற மறுத்துவிட்டனர். மறுநாள் காலையில் அவை மீண்டும் கூடியதும் அரசுக்கும் பேரவைத் தலைவருக்கும் எதிராக எதிர்க்கட்சியினர் முழக்க மிட்டனர். கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்றனர். ஆனால் பேரவைத் தலைவர் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க மறுத்ததோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டார். அவர்கள் வெளியேற மறுக்கவே அவைக் காவலர்களைக் கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை அவையிலிருந்தும் அவை தாழ்வாரத்திலிருந்தும் வெளியேற்றினார். அப்போது காவலர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. வெளியேற்றப்பட்ட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கோட்டை வாயிற்புறம் முன்பு சிறிது நேரம் ஆர்ப்பாட்டம் செய்து விட்டு போர் நினைவுச் சின்னம் அருகில் பிறகு சென்று சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். மாநகர போலீஸ் ஆணையர் அவர்களிடம் சென்று கலைந்து செல்லுமாறு கூறினார். இதையடுத்து அங்கிருந்து எதிர்க்கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலை அருகே வந்து அங்கே சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். இந்தப் போராட்டத்தில் அப்போது காங்கிரஸ் கட்சியிலே இருந்து கொண்டே ஆளுங்கட்சிக்கு ஆதரவாக நடந்துகொண்ட சஞ்சய் ராமசாமி, சிங்காரம், கோவை செல்வராஜ் போன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வில்லை. மறியலில் ஈடுபட்டவர்கள் பிற்பகல் 12.30 மணி அளவில் கைது செய்யப்பட்டு தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டார்கள். காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும், கழகத்தின் சார்பில் ஆற்காடு வீராசாமியும், மு.க. ஸ்டாலினும் தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்குச் சென்று அவர்களைப் பார்த்தார்கள்.

இதைத் தொடர்ந்து 22-4-93 அன்று பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கூறும்போது "ஏற்கனவே எழுதி வைத்த நாடகத்தை இந்திரா காங்கிரஸ் திறம்பட அரங்கேற்றி

விட்டது. ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் உயிர் நீத்ததால், காங்கிரசுக்கு மக்களிடம் ஏற்பட்டிருந்த சிறிதளவு அனுதாபம் கூட, அக்கட்சியினரின் நடவடிக்கை, போக்கு காரணமாக மக்கள் மனதில் இருந்து இந்நேரம் விலகியிருக்கும். பொதுமக்கள் சேவையை மறந்து விட்ட காங்கிரஸ் இனி எக்காலத்திலும் தேர்தலில் மக்களைச் சந்திக்க முடியாது" என்றார். 22ஆம் தேதியன்று எதிர்க்கட்சியினர் அனைவரும் பேரவையைப் புறக்கணித்தனர்.

இதற்கிடையே பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கும் ராணிப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதிக்கும் இடைத் தேர்தல் மே மாதம் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டு கழகத்தின் சார்பில் பழனியில் சுப்புலட்சுமி ஜெகதீசனும், ராணிப்பேட்டையில் ஆற்காடு வீராசாமியும் போட்டியிட்டனர். தொடக்கத்தில் அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பா.ம.க. ஆதரவு தருவதாக முதலில் தெரிவித்தது. ஆனால் தேர்தலின்போது ஆதரவு தெரிவிக்கவில்லை.

ஆனால் அதற்குள்ளாகவே அதைப் பற்றிப் பேரவையில் விமர்சித்த ஜெயலலிதா "பாட்டாளி மக்கள் கட்சியினர் நடத்திய ஊர்வலத்தில் ராஜீவ்காந்தியைக் கொல்லச் சதி செய்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் படம், கொலையை மேற்பார்வையிட்ட சிவராசன் படம், நேரடியாக வெடிகுண்டுடன் கொலையில் ஈடுபட்ட தனுவின் படம் எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் புலி ஆதரவு கோஷங்களும் எழுப்பப்பட்டன. இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் பேசியிருக்கும் போதும், மூத்த காங்கிரஸ் உறுப்பினரான ஏ.எஸ்.பொன்னம்மாள் பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தடை விதிக்க வேண்டுமென்று அவையில் தெரிவித்திருக்கும்போதும், தடை செய்வது



ராஜீவ்காந்தி

தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நான் (ஜெயலலிதா) தெரிவித்தேன். மத்திய உள்துறை அமைச்சரிடமும் தடைசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ராஜீவ் காந்தியின் கொலைக்குக் காரணமான தீவிரவாதக் கும்பலுக்கு ஆதரவளிக்கும் பா.ம.க.வுடன் இந்திரா காங்கிரஸ் கூட்டணி வைத்திருப்பதை ராஜீவ் காந்தியின் ஆத்மாவே மன்னிக்காது" என்று முழங்கினார். ஆனால் பின்னர் ஜெயலலிதாவே அதே பா.ம.க.வுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டார் என்பதுதான் தமிழகத்தின் அரசியல் வரலாறு.

ஜெயலலிதாவிற்குப் பதிலளித்த காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் விடுதலைப் புலிகளுடனும் அதன் தலைவர்களுடனும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா நெருக்கமான உறவு கொண்டிருந்தார் என்றும் ஆதரவு தந்து வந்தார் என்றும், அதனால் புலிகள் தமிழ்நாட்டில் தங்குதடையின்றி நடமாடி ஆதிக்கம் பெற்றனர் என்றும், இது ராஜீவ்காந்தி படுகொலை செய்யப் படுவதற்குக் காரணமாக அமைந்தது என்றும் கூறினார். 26-4-93 அன்று திடீரென்று தேர்தல் கமிஷன் ராணிப் பேட்டை சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத் தேர்தலை ரத்து செய்தது. தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்ததன் மூலம் தேர்தல் நெறிமுறைகளை மீறி விட்டதாகத் தேர்தல் கமிஷன் அறிவித்தது. நலத்திட்டங்களை அறிவித்தது குறித்து தேர்தல் கமிஷன் விளக்கம் கேட்டதற்கு தமிழக அரசு பதில் ஏதும் தரவில்லை என்பதால் அது உண்மையென ஒப்புக்கொண்டதாகிறது என்றும், தேர்தல் நெறிமுறைகளை மீறி தமிழக அரசு செயல்பட்டுள்ளதை தேர்தல் கமிஷன் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியாது என்றும், அந்தச் சூழ்நிலையில் தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடக்குமெனக் கருத முடியாது என்றும் தேர்தல் கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. பழனியில் அ.தி.மு.க. சார்பில் குமாரசாமி என்பவரும், இந்திரா காங்கிரஸ் சார்பில் வேணுகோபால் என்பவரும் போட்டியிட்டனர். 8-5-93 அன்று பழனி மக்களவைத்

தொகுதிக்கான இடைத்தேர்தலையும் தேர்தல் கமிஷன் அந்தத் தொகுதியில் வறட்சி கடுமையாக உள்ளதால் ஒத்தி வைப்பதாகக் கூறி ஒத்தி வைத்தது. தேர்தல் நடப்பதற்கு இன்னும் பத்து நாட்களே உள்ள நிலையில் தேர்தல் கமிஷன் இவ்வாறு தேர்தலை ஒத்திவைப்பது அரசியல் உள்நோக்கம் தான் காரணம் என்று நான் கருத்து அறிவித்தேன். ஆகஸ்ட் திங்கள் 19ஆம் தேதியன்று இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று மீண்டும் ஒருமுறை அறிவிக்கப்பட்டு, அப்போதும் இடைத்தேர்தல் நடத்தப்படாமல் டிசம்பர் 18ஆம் தேதிக்கு இடைத் தேர்தல்கள் இந்தியா முழுமைக்கும் ஒத்திவைக்கப் பட்டன. அனைத்திந்திய அளவில் எதிர்க்கட்சிகள் எல்லாம் இவ்வாறு இடைத்தேர்தல்களை அடிக்கடி ஒத்திவைப்பதற் குக் கண்டனத்தைத் தெரிவித்தன. மத்திய தேர்தல் கமிஷனின் இந்த இடைத்தேர்தல் ஒத்திவைப்பிற்கு சென்னை உயர்நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்தது. அதனைத் தொடர்ந்து செப்டம்பர் 20ஆம் தேதியன்று ராணிப் பேட்டை, பழனி தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது. இந்த இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு நான் சென்றபோதுதான் ராணிப்பேட்டையில் காவல்துறையினரின் துணையோடு ஆளுங்கட்சியினர் அராஜகத்திலே பயங்கரமாக ஈடுபட்ட னர். ராணிப்பேட்டை தொகுதியிலே போட்டியிட்ட பா.ம.க. வேட்பாளர் இளவழகனை முதலமைச்சர் ஜெயலலிதா வுடன் வந்த போலீசார் தாக்கி விட்டதையொட்டி பாட்டாளி மக்கள் கட்சியினருக்கும் அ.தி.மு.க. வினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அதைக் கண்டித்து நான் ஒரு அறிக்கை வெளி யிட்டதோடு மருத்துவமனையிலே இருந்த இளவழகனை இரவு ஒரு மணி அளவில் சென்று பார்த்துவிட்டு வந்தேன். அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் அ.தி.மு.க. குண்டர்கள் என்னுடைய வேனையும் எனக்குப் பின்னால் தொடர்ந்து வந்த கார்களையும் கற்களாலும், தடிகளாலும், கம்புகளா லும் சோடாபுட்டிகளாலும் தாக்கினர். இரு தரப்பினரும் மோதிக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே எனது வேனை யும், கார்களையும் திருப்பச் சொன்னேன். அதற்குள்ளாக

அ.தி.மு.க.வினர் முன்னேறிவந்து நானும், என் மனைவியும் வேட்பாளர் ஆற்காடு வீராசாமியும் இருந்த வேனைச் சூழ்ந்துகொண்டு அடித்து நொறுக்கத் தொடங்கினர். இதிலே வேதனை என்னவென்றால் நூற்றுக்கணக்கான போலீசார் அ.தி.மு.க.வினருக்குத் துணையாக அவர்களோடு சேர்ந்துகொண்டு தாக்குதலை ஊக்கப்படுத்திய கொடுமையை என் கண்ணெதிரிலேயே கண்டேன். ஆனால் கழகத் தோழர்கள் அந்தத் தாக்குதலைத் தாங்கள் தாங்கிக் கொண்டு எங்கள் வேனைச் சுற்றி நின்றுகொண்டு எங்களுக்குப் பாதுகாப்பு அளித்தனர். என்னுடன் வந்த கார்கள் பல சேதமடைந்தன. என் வேனுக்கு அடுத்து வந்த கழகத் தொண்டர் அணியினர் வந்த வேன் கொளுத்தப்பட்டு அறவே கருகி விட்டது. அதிலிருந்த எனது உடைகள், பெட்டிகள் அனைத்தும் சாம்பலாகிவிட்டன. எனக்குப் பாதுகாப்பு என்ற பெயரால் இரண்டு ஜீப்புகளில் பத்து போலீசார் வந்து கொண்டிருந்தார்கள். இந்த அராஜகக் கலவரம் நடந்தபோது அவர்கள் பத்து பேரும் ஜீப்புகளை விட்டு இறங்கவே இல்லை. எனவே அவர்களை இனி நீங்கள் எனக்கு பாதுகாப்புக்கு வர வேண்டாம் என்று கூறித் திருப்பி அனுப்பி வைத்து விட்டேன். பழனி தொகுதியிலும் இதே நிலைமை நீடித்த காரணத்தினால் அங்கே பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அங்கிருந்த வாறே குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் அவசரத் தந்தி அனுப்பினார்.

வாக்குப்பதிவு நாளன்று போலி வாக்குகளைப் போட முயன்ற அ.தி.மு.க.வினரைக் கழக வேட்பாளர் வீராசாமி பிடித்த காரணத்தால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். காவல்துறையினரின் ஒத்துழைப்போடு அமைச்சர்கள் ஒவ்வொரு பூத்திலும் அராஜக நடவடிக்கையிலே ஈடுபட்டனர். பழனி தொகுதியில் வாக்குப்பதிவின் போது ஏராளமான வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதைக் கண்ட தேர்தல் அதிகாரி குறிப்பிட்ட நாளில் வாக்குகளை எண்ணிடவே முதலில் அனுமதிக்கவில்லை. ராணிப் பேட்டை தொகுதியிலோ 65 சதவிகிதம் வாக்குகள்தான் பதிவானதாக

முதல்நாள் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மறுநாள் வாக்கு எண்ணிக்கையின் போது 76 சதவிகித வாக்குகள் இருந்தன. வாக்குப் பெட்டிகளிலே பல சீல்கள் உடைக்கப்பட்டிருந்ததும் வாக்கு எண்ணிக்கையின்போது காணப்பட்டது.

இந்த இரண்டு தொகுதிகளிலுமே அராஜகம் வெற்றி பெற்று தி.மு.க. வெற்றி வாய்ப்பினை இழந்தது. இந்தத் தேர்தலின்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதாவது அந்த இடைத் தேர்தல்களில் ராணிப்பேட்டையில் தி.மு.க.வுக்கு காங்கிரஸ் ஓட்டுப் போடுவதென்றும், பழனியில் காங்கிரசுக்கு தி.மு.க. ஓட்டுப் போடுவதென்றும் உடன் பாடு செய்துகொள்ளப் பட்டதாக அந்தக் கட்சியின் செயலாளர் நல்லசிவன் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அது எவ்வளவு தவறான அறிக்கை என்பது வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டபோது தெளிவாகத் தெரிந்தது. பழனி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அ.தி.மு.க. 2,78,855 வாக்குகளும், தி.மு.க. 2,34,027 வாக்குகளும், காங்கிரஸ் 1,30,625 வாக்குகளும் பெற்றிருந்தன. இதிலிருந்து பழனி தொகுதியில் தி.மு.கழகம் காங்கிரசுக்கு வாக்களிக்கவில்லை என்பது தெளிவாயிற்று. இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து "இந்து" தனது தலையங்கத்தில் "நடந்து முடிந்த இடைத்தேர்தல் வாக் கெடுப்பின்படி தெரியவருவது, தி.மு.க.வின் செல்வாக்கு ஏறத்தாழ அசைக்க முடியாத உறுதியாக உள்ளது என்பது தான். அந்தக் கட்சி செல்வாக்கு குறைந்ததாகவோ அல்லது செல்வாக்கு இழந்ததாகவோ சொல்ல முடியாதவாறு தொடர்ந்து அசைக்க முடியாத சக்தியாகவும் உள்ளது" என்று எழுதியிருந்தது.

சென்னை மத்திய சிறையில் தடா கைதிகளாக கிருபன், சந்திரன், ரவி, விக்டர் ஆகிய விடுதலைப் போராளிகள் இருந்தார்கள். அவர்கள் சென்னை மத்திய சிறையிலிருந்து என்ன காரணமாகவோ பாளையங்கோட்டைச் சிறைக்கு மாற்றப்பட்டார்கள். 1993ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் தேதியன்று இவர்கள் போலீஸ் வேனில் சென்னையிலிருந்து

கொண்டு செல்லப் பட்டார்கள். இவர்களுக்குக் காவலாக போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், மூன்று காவலர்கள் உடன் சென்றனர்.

சென்னையிலிருந்து புறப்பட்ட வேன் இரவு 11 மணி அளவில் மதுராந்தகம் அருகே மாமண்டூர் சென்றபோது ஒரு ஓட்டலுக்கு முன் சாப்பிடுவதற்காக நிறுத்தப்பட்டது. அப்போது வேனுக்குப் பின் அம்பாசிடர் கார் ஒன்றில் நான்கு பேர் ஏ.கே.47 ரக துப்பாக்கியுடன் வந்திறங்கி போலீசாரைத் தாக்கினர். போலீசாரும் திருப்பித் தாக்கியுள்ளனர். இந்த மோதலில் மோகன் என்ற காவலர் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கிருபன், சந்திரன், ரவி ஆகிய மூவரும் போலீஸ் வேனில் இருந்து தப்பி அம்பாசிடர் காரில் ஏறிக் கொண்டு சென்று விட்டனர். விக்டர் என்பவர் மட்டும் தப்பவில்லை.

இதற்கடுத்த சில நாட்களில் சென்னை சைதாப்பேட்டை சிறப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த சார்லஸ் என்ற விடுதலைப் புலி, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே முக்கியமான சாட்சியான இவர் தப்பியோடி விட்டார்.

தொடர்ந்து 21-5-93 அன்று திருச்செந்தூரிலிருந்து விஜய குமார் என்ற தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர் - இலங்கை தீவிரவாதிகள் முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்தவர் தப்பிச் சென்றுவிட்டார். இதுபற்றி முதல்வர் ஜெயலலிதா கூறும்போது, கடந்த ஓராண்டில் சிறையிலிருந்து தப்பியவர்களின் எண்ணிக்கை 65 பேர் என்று சொன்னதோடு, மத்திய உள்துறை அமைச்சர் திரு.சவான் 1992 ஆம் ஆண்டு முதல்வர் ஜெயலலிதாவிடம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியமா என்று கேட்டதாகவும், அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து, தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் எப்படி பேச்சு நடத்த முடியும் என்று தான் கூறியதாகவும் தெரிவித்தார். அந்தச் செய்தி வந்தவுடன் மத்திய உள்துறை அமைச்சர், முதல்வர் ஜெயலலிதா அப்படிச் சொன்னது பொய் என்றும், தான் அப்படி

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுபற்றிக் கேட்கவே இல்லை என்றும் மறுப்பறிக்கை விடுத்தார். அதற்குப் பிறகும் ஜெயலலிதா மத்திய அமைச்சர் கேட்டது உண்மைதான் என்று ஒரு அறிக்கை விடுத்தார்.

மத்திய அமைச்சர் சவான் 24-5-93 அன்று ஒரு கூட்டத்திலே பேசும்போது, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட விடுதலைப்புலி ஒருவர் சென்னை சிறையிலிருந்து தப்பிச் சென்றது ஒரு கடுமையான விஷயம் என்று மத்திய அரசு கருதுகிறது. இந்தச் சம்பவம் பற்றிய முழுமையான அறிக்கை ஒன்றை அனுப்புமாறு தமிழக முதல்வரிடம் கேட்டுள்ளோம். மாநில அரசின் காவலில் இருந்த ஒரு குற்றவாளி தப்பிச் சென்ற விஷயத்தில் மாநில அரசின் நேர்மை பற்றி மக்கள் மனதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

42 கழகப் பெயர், கொடி, சின்னம் காப்பாற்ற பட்டபாடு!

1993 ஏப்ரல் 23ஆம் நாள் இரவு இலங்கை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அதுலத் முதலி கொழும்பு புறநகர் பகுதியில் தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார். 1989இல் நடந்த அதிபர் தேர்தலில் பிரேமதாசாவின் வெற்றிக்கு அதுலத் முதலி அரும்பாடு பட்டவர்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஒரு வார காலத்திற்கெல் லாம் இலங்கையில் கொழும்பு நகரில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மே தினப் பேரணி ஒன்று நடைபெற்றது. இந்தப் பேரணியை அதிபர் ரணசிங்கே பிரேமதாசா முன்னின்று நடத்தினார். பேரணி சென்று கொண்டிருந்தபோது, உடலில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு சைக்கிளில் வந்த ஒருவர் திடீரென்று பிரேமதாசா வந்து கொண்டிருந்த ஜீப் மீது மோத, வெடிகுண்டு வெடித்துச் சிதற, பிரேமதாசா உட்பட 40 பேர் பரிதாபமாக இறந்தனர்.

பிரேமதாசா அவர்கள் ஒரு சலவைத் தொழிலாளி குடும் பத்திலே பிறந்து ஒரு நாட்டின் தலைமைப் பதவிக்குத் தனது கடும் உழைப்பால் உயர்ந்தவர். கொழும்பில் அவர் நடுநிலைப் பள்ளியிலே படித்த காலத்தில்கூட, அவரது தாயார் காலை யில் சுட்டுத் தரும் இடியாப்பத்தை குறிப்பிட்ட இடங் களுக்கு எடுத்துச் சென்று விற்றுவிட்டுத்தான் பள்ளிக்குச் செல்வாராம். இதனால் அவரை 'லெவரியா பாய்' என்று

சின்ன வயதிலே அழைப்பார்களாம். லெவரியா என்றால் இடியாப்பத்துக்குள் இனிப்புப் பூரணம் வைத்துச் செய்யப்படும் ஒரு தின்பண்டமாகும். பணக்காரர்கள் கட்சி என்று கருதப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியில் முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகாவினால் கவரப்பட்டு அந்தக் கட்சியிலே பிரேமதாசா சேர்ந்தார். அவர் அந்தக் கட்சியிலே சேர்ந்த பிறகுதான் சாமான்ய குடும்பத்து இளைஞர்களும் அந்தக் கட்சியிலே சேரத் தொடங்கினார்கள். கொழும்பு மாநகரசபை உறுப்பினராக, துணைமேயராக, பிறகு மேயராக, பிறகு நாடாளுமன்ற உறுப்பினராக, அதிபராக என்று படிப்படியாக உயர்ந்தார். ஜெயவர்த்தனாவின் வலதுகரமாகத் திகழ்ந்தவர். ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 1987இல் இந்திய அரசுடன் ஜெயவர்த்தனா ஒப்பந்தம் செய்துகொண்டபோது அதனை எதிர்த்தார். ஒப்பந்தம் செய்து கொள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கொழும்புக்குச் சென்றபோது, அவரை வரவேற்கக்கூட பிரேமதாசா வரவில்லை.

ஜெயவர்த்தனாவுக்கு அடுத்த நிலையில் பிரேமதாசா இருந்த போதிலும் 1989ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட இளைஞர்களான லலித் அதுலத் முதலியையும், காமினி திசநாயகாவையும் ஜெயவர்த்தனா தயார் செய்தது பிரேமதாசாவிற்குப் பிடிக்கவில்லை. நீங்கள் போட்டியிடாமல் வேறு யார் போட்டியிட்டாலும், தானும் அப்பதவிக்குப் போட்டியிடுவேன் என்று பிரேமதாசா மிரட்டியதால் ஜெயவர்த்தனா அவருக்கு விட்டுக் கொடுத்தார். பிரேமதாசா அந்தத் தேர்தலில் வெற்றி பெற ஜெயவர்த்தனா, அதுலத் முதலி, காமினி திசநாயகா ஆகியோர் அரும்பாடுபட்டனர். குடியரசுத் தலைவர் வேட்பாளராக பிரேமதாசாவை லலித் முன்மொழிய, காமினி வழி மொழிந்தார். இருவரும் தங்களுக்கு பிரதமர் பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் பிரேமதாசா வெற்றி பெற்றதும் இந்த இருவருக்கும் முக்கியத்துவம் இல்லாத அமைச்சர் பதவிகளைக் கொடுத்துவிட்டு பிரதமர் பதவியை விஜயதுங்காவிற்கு அளித்தார்.

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் மீது வழக்குத் தொடர அனுமதி மறுத்து அவரது தவறான செயல் களுக்கெல்லாம் உடந்தையாக இருந்த தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் 23-5-93 அன்று திடீரென்று தனது ஆளுநர் பதவியிலிருந்து விலகினார். 23ஆம் தேதி இரவு டெல்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கின் ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டு ராஜஸ்தானில் அப்போது ஆளுநராக இருந்த டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் தமிழகத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்ப தாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

1993ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் தேதியன்று சென்னை யில் உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகம் இருக்கும் மூன்று மாடிக் கட்டடத்தில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்த தின் காரணமாக இரண்டு பெண்கள் உட்பட பத்து பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் குறித்து முதல்வர் ஜெயலலிதாவிற்கு அவர் திண்டுக்கல் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் திண்டுக்கல் புறப்பட்டுச் சென்று விட்டதாகவும், மறுநாள் காலையில் திண்டுக்கல்லில் இருந்து திரும்பி வந்தபிறகுதான் அந்த இடத்தைச் சென்று பார்த்தார் என்றும் ஏடுகள் செய்தி வெளியிட்டன.


இந்தச் சம்பவத்திற்குச் சில நாட்களுக்குப் பிறகு ஆளுநர் சென்னாரெட்டி அவர்கள் ஆனந்த விகடன் வார இதழுக்கு ஒரு பேட்டி அளித்திருந்தார். அதில் அவர் தெரிவித்த சில முக்கிய கருத்துகள் வருமாறு:-

"இடித்துரைக்க வேண்டியதை இடித்துரைத்துத்தானே ஆக வேண்டும்! உதாரணத்துக்கு ஆர்.எஸ்.எஸ். அலுவலக வெடிகுண்டுச் சம்பவத்தில் நான் உடனடியாக அங்கே விரைந்தபோது, அங்கிருந்தவர்கள் மூன்று மர்ம நபர்கள் சந்தேகத்துக்கிடமான வகையில் அங்கிருந்து ஓடியதாக என்னிடம் தெரிவித்தார்கள். சம்பவம் நடந்து இப்போது

வரையிலும் மாநில ரகசியப் போலீஸாரின் விசாரணையில் மூன்று நபர்கள் என்பது இரண்டு நபர்கள் என்றாகியிருக் கிறதே தவிர, மேற்கொண்டு எதுவும் வெளிப்பட வில்லை. ஜெயலலிதா தலைமையிலான நிர்வாகம் வெகு சுதந்திரமாய் இருப்பது போன்று எனக்குத் தெரியவில்லை. எண்ணங்கள், நடவடிக்கைகள், செயல்பாடுகள் ஆகிய எல்லாவற்றிலும் தமிழக அரசு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு ஆளுநர் சென்னா ரெட்டி தான் பொறுப்புக்கு வந்த ஒருசில மாதங்களிலேயே தமிழகத்தின் அரசியல் நிலை குறித்துப் புரிந்துகொண்டு அதனை வெளிப்படுத்தியிருந்தார்.

மண்டல் குழு பரிந்துரைகள் 8-9-1993 முதல் இந்தியா முழுவதும் அமலுக்கு வருவதாக மத்திய அரசு அறிவித்தது. இடஒதுக்கீடு உரிமைக்கு வித்திட்ட மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையுடனும், அந்தச்சமூக நீதிக்காகப் பல ஆண்டு காலமாகக் குரல் எழுப்பி வரும் திராவிட இயக்கத்தில் நானும் ஓர் அங்கம் என்ற பெருமிதத்துடனும் இந்த அறி விப்பை வரவேற்று அறிக்கை வெளியிட்டேன். பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக நீதி அடிப்படையில் இன்னும் பல வெற்றிகளைப் பெறவேண்டி யுள்ளது. குறிப்பாக பிற்படுத்தப் பட்டோரிலேயே முன்னேறி யோர் என்கிற CREAMY LAYERஐ நீக்கிவிட்டு மண்டல் அறிக்கை அமல்படுத்தப்படுவது குறை பாடு உடையதாகும். அரசுப் பணி களில் இப்போதே தாழ்த்தப்பட் டோருக்கு ஒதுக்கீடு நிரப்பப்பட வில்லை. அதுபோலவே CREAMY LAYER என்கிற செயற்கைப் பாகு பாட்டை நீக்கிவிட்டால் பிற்பட் டோர் ஒதுக்கீட்டை நிறைவு செய்ய இயலாது. எனவே இது



வைகோ

குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தேன்.

பழனி, ராணிப்பேட்டை இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் நான் ஈடுபட்டிருந்த நேரத்தில் கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினராகவும் தலைமை நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்த புதுக்கோட்டை வீரையா அவர்கள் மறைந்த செய்தி கேட்டு மிகவும் வருந்தியதோடு அவருடைய குடும்பத்தினருக்கும் அவரது இளவல் சிதம்பரத்திற்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொண்டேன். அவரது இறுதிச்சடங்கில் கழகத்தின் சார்பாகப் பொதுச் செயலாளரும், கழக முன்னணியினரும் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடமிருந்து 3-10-1993 அன்று எனக்கொரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் "அன்புள்ள அய்யா, திரு. வை. கோபால்சாமியின் ஆதாயத்திற்காக உங்களைத் தீர்த்துக்கட்ட எல்.டி.டி.ஈ.யினர் திட்டம் வைத்திருப்பதாக மத்திய அரசுக்குக் கிடைத்த அதிகாரபூர்வமற்ற தகவலை உங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்க முதல் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். தேவையான அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளை உங்களுக்கு வழங்கவும் எனக்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். எனவே உங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் பற்றி அரசின் அதிகாரிகள் வாயிலாகக் கேள்விப்பட்டு என்னைச் சூழ்ந்து கொண்ட செய்தியாளர்களிடம் "பொதுச் செயலாளர் ஊரில் இல்லை, சென்னை திரும்பியதும் அவருடனும் கழக முன்னணியினருடனும் கலந்து பேசி அரசு தரும் பாதுகாப்புப் பற்றி முடிவெடுப்பேன்" என்று கூறினேன்.

என்னையோ பொதுச் செயலாளரையோ தொடர்பு கொள்ளாமல் அக்கடிதம் பற்றி திரு. வைகோ ஓர் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில், "என் வாழ்நாளில் நான் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத பேரிடி என் தலையில் விழுந்த அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளேன்" என்று

தொடங்கி "மத்திய அரசின் உளவுத் துறையினர் தி.மு.க. வில் குழப்பத்தை ஏற்படுத்த கடந்த சில மாதங்களாக முயன்று வருவதாக தலைவர் கலைஞர் பலமுறை கூறியிருப்பதை நினைவுகூர்கிறேன். என்னால் தி.மு.க. தலைவர் கலைஞருக்கோ அல்லது கட்சிக்கோ கடுகளவும் கேடு வராமல் தடுக்க என்னைப் பலியிடத்தான் வேண்டுமென்றால் அதற்கும் நான் சித்தமாகவே இருக்கிறேன்" என்று கூறியிருந்தார்.

5-10-93 அன்று கழக மாவட்டச் செயலாளர்களின் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அடுத்தநாள் நான் வெளியிட்ட அறிக்கையில் சில கால மாகவே கழகத்தில் தொடர்ந்து நடந்து வருகிற சில விரும்பத் தகாத சம்பவங்களைக் குறிப்பிட்டிருந்தேன். அவற்றில் சில பகுதிகள் வருமாறு :-

"மத்திய, மாநில புலனாய்வுத் துறையினரும் குறிப்பிட்ட சில பத்திரிகைகளும் தி.மு.க.வின் பலத்தைக் குறைக்கவும், கட்சிக்குள் பூசலை ஏற்படுத்தவும் கடந்த ஓராண்டு காலமாகவே தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை நான் தொடர்ந்து கூறிக் கொண்டு வந்திருக்கிறேன். அப்பொழு தெல்லாம் அதனைச் சிந்தித்துப் பார்க்கக்கூட நமது கழகத் திலேயே சிலருக்கு மனமில்லாதது மட்டுமல்ல; மறுக்கவும் செய்தனர். ஆனால் இன்று திரு.கோபால்சாமி (வைகோ) அவர்கள்; முன்பு அவரால் ஏற்றுக்கொள்ளப்படாத அந்தச் செய்தியை இப்போது தனது தரப்பு வாதத்திற்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு இரண்டு நாளைக்கு முன்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இன்னமும் அவர், குறிப்பிட்ட சில பத்திரிகைகள் தி.மு.க. தலைமை யைக் குறை கூறி அவரை முன்னிலைப்படுத்தி ஆதரவு தருகிற குள்ளநரித் தந்திரத்தை அவர் உணர்ந்து கொண்டவராகத் தெரியவில்லை.

எனவே இனியாவது இது போன்ற சீர்குலைவு காரியங்கள் நடைபெறாமல் இருந்தால் கட்சிக்கு நல்லது என்று வலி யுறுத்திக் கூறியும் கூட, இன்னமும் அது தொடர்ந்து கொண்டேதானிருக்கிறது" என்று விளக்கியிருந்தேன்.



ஆர்க்காடு வீராசாமி

ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மத்திய அரசின் ஜெயின் கமிஷன் விசாரணை நடத்தியபோது அந்த விசாரணைக்காக நானும் சுமார் ஒரு வார காலம் சென்று கலந்து கொண்டேன். அந்த விசாரணைக் கமிஷனில் வைகோ அவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர் வளைத்து வளைத்து கேள்விகளைக் கேட்டார். வைகோவின் ஆதாயத்திற்காக விடுதலைப் புலிகள் என்னைக் கொலை செய்ய முயன்றார்களா? என்ற விஷயத்திற்கு வர அந்த வழக்கறிஞர் பெரும்பாடுபட்டார். நான் அவரைச் சுற்றி வளைக்க விடாமல் ஏன் இப்படி திரும்பத் திரும்பக் கேட்கிறீர்கள், நான் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். என்னைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் வைகோவிற்கு என்றைக்குமே இருந்ததில்லை, இருக்கவே இருக்காது என்று சொல்லி அந்த வழக்கறிஞரின் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தேன் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

நெஞ்சுக்கு நீதி இந்த நான்காம் பாகத்தில் இந்தப் பிரச்சினை குறித்து மேலும் மேலும் நான் எழுதிட விரும்பவில்லை. என் நிழல் போலவே இருந்து; என் கைப் போர் வாளாகவே திகழ்ந்து ஒருவரையொருவர் உயிருக்குயிரான உடன்பிறப்புகளாக நேசித்த நிலை எப்படியோ கெடுக்கப்பட்டு; அண்ணா அறிவாலயத்துக்கும், தி.மு.க. என்ற பெயருக்கும், தி.மு.க.வின் இரு வண்ணக் கொடிக்கும் அவர் உருவாக்கிய நிலைமைகளால் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற சூழல் அமைந்து, சட்டரீதியாகவும், தலைமைத் தேர்தல் ஆணையத்தில் தலைமை ஆணையர் திரு.சேஷன் முன்பாக பிரபல வழக்கறிஞர் கபில்சிபல் அவர்கள் வாதாடியும், பொதுச் செயலாளர் பேராசிரியர், முரசொலி

மாறன், ஆற்காடு வீராசாமி, என்.வி.என். சோமு, தா. கிருட்டிணன், மிசா கணேசன், முகமதுசகி ஆகியோர் புதுடெல்லியில் தங்கி அதற்கான வழக்கை நடத்தியும் கழகம், கழகக் கொடி, கழகத் தேர்தல் சின்னம் ஆகியவை பறிபோகாமல் காப்பாற்றப் பட்டன. இதற்கான ஆணையை 3-5-1994 அன்று தேர்தல் ஆணையர் வெளியிட்டார். இந்த வழக்கில் கபில் சிபல் அவர்களுக்குத் துணையாகக் கழக வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, கல்யாணசுந்தரம் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். கழகப் பொதுக்குழு இதற்கு முன்பே 29-12-1993 அன்று தஞ்சையில் கூடி உண்மையான தி.மு.க. இதுதான் என்பதை நாட்டுக்கும், தேர்தல் கமிஷனுக்கும் ஆதாரபூர்வமாக நிரூபித்ததால் இந்த நல்ல முடிவு ஏற்பட்டது.

இந்தச் செய்தி கிடைத்ததும் முரசொலியில் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதைப் படித்தாலே விவரங்களைப் புரிந்துகொள்ளலாம். அது வருமாறு :-

உடன்பிறப்பே, என் நெஞ்சிலிருக்கும் நீயும், உன் நெஞ்சிலிருக்கும் நானும் சேர்ந்து; நம்மையெல்லாம் ஆளாக்கி நமது இனத்துக்கென தி.மு.கழகத்தைப் போர்வாளாக்கி நம் கரத்தில் பேரறிஞர் அண்ணா ஒப்படைத்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்தும்; இடையில் இதற்கோர் விபத்து வருமோ என மனம் வெதும்பியும்- ஆறு மாத காலமாக இருளில் மூழ்கியிருந்த நிலை மாறி, "தெளிவு மிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி" எனப் புரட்சிக் கவிஞர் எழுதிய தற்கேற்ப, "வானில் உயர்கின்றான் உதயசூரியன் வாழ்க நன்றே!" என ஆடிப்பாடும் நாள் இந்நாள்!

கடந்த ஆறு திங்களாக நீ சென்னை வந்து என்னைக் காணும் பொழுதும், நான் வந்து உன்னைக் காணும் பொழுதும் ஊக்கமளிக்கத்தக்க உரைகளை நிகழ்த்துவாய்- உற்சாகமூட்டும் நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுவாய்- உறுதி குலையாத உடன் பிறப்புகள் என் போன்றோர் நாற்பது லட்சத்துக்கு மேற்பட்டோர் இருக்கையிலே கவலை எதற்கு எனக் கண்களால் பேசுவாய்- ஆயினும் ஓர் ஏக்கம்; என்

அன்பே, உன் அகத்தில் ஒளிந்திருப்பதை முகம் காட்டத் தவற வில்லை. அந்த ஏக்கத்தைப் போக்க முடியுமா? அண்ணன் சொன்னாரே ஆயிரங்காலத்துப் பயிர் இந்தக் கழகமென்று; அந்தப் பயிர் தழைக்க வேண்டிய இந்தக் கழனிக்கு வேலியாக இருக்க முடியுமா? வேறு எவரோ சிலர் வயலையே தூர்த்துவிட முனைவதைத் தடுத்திட இயலுமா?

உடன்பிறப்பே, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நியாய மான விடை கிடைத்திராவிடில்- இன்று எனக்கு மலர்மாலை அணிவித்திடும் நீ; மலர் வளையம் வைத்திடும் அளவுக்கு நான் ஆகியிருப்பேன்! இப்படி எழுதியது கண்டு என்மீது சீறிப் பாய்ந்துவிடாதே! என்மீது குற்றமல்ல உடன்பிறப்பே, இளம் பருவ முதல்- ஈரேழு பதினான்காம் வயது முதற் கொண்டு இரண்டறக் கலந்து ஊனாக, உயிராக, உயிர் மூச்சாக ஒன்றி விட்ட இயக்கமல்லவா இது!

ஓர் அரசியல்வாதி இப்படிப் பேசக்கூடாதுதான்! அறிவேன் நான்! வெறும் அரசியல்வாதியாக மட்டும் அன்று முதல் இன்றுவரை நான் என் பொதுவாழ்க்கையை அமைத் துக் கொள்ள வில்லையே; என் தந்தை முத்துவேலர் - தாயார் அஞ்சுகம் என்றாலும்கூட; தந்தையாகப் பெரியாரையும், தாயாக அண்ணாவையும் அல்லவா பொது வாழ்வில் வரித்துக்கொண்டு; உன் போன்ற உடன்பிறப்புக்களையெல்லாம் ஒரு தாயின் உதிரப் புனலில் உதித்தவர்களாகக் கருதி உம் தோள்மீது கைபோட்டு உழைத் துக் கொண்டிருக்கிறேன். எனவே இந்த இயக்கம் என் வாழ்நாளி லேயே, என் கண் முன்னாலேயே, என்னைத் தொழுது ஏத்தியோர் கைகளில் ஒடுங்கிய படைக்கருவி யாலேயே சிதைக்கப்படு மென்றால்; பிறகேன் நான் இருக்க வேண்டும்! இதுபோல நான்



வீரபாண்டி ஆறுமுகம்

உணர்ச்சிப் பிழம்பாக, உறக்கமின்றிக் கழித்த நாட்கள் எத்தனை எத்தனை இந்த ஆறு மாதங்களில்!

ஏனிப்படி ஒரு பகை? எவருக்கும் எத்தீங்கும் விளைவிக்க வில்லையே! அவரா இப்படி? இவரா அப்படி? நம்பமுடிய வில்லையே! ஏன், எதற்காக? எவர் திசை திருப்பினர், எப்படித் திசை திருப்பினர், என்ன சொல்லி அந்த நீங்காத அன்பையும் பாசத்தையும் நீக்கிச் சிதைத்தனர்? ஒன்றாகப் பணியாற்றியது மறந்து போமோ! ஒன்றாகப் பயணம் செய்தது மறந்து போமோ! கடலின் அலை ஓயாததுபோல அல்லவா, மனதில் இந்த நினைவுகளும் ஓயாது தொடர்ந்தன!

நீர் இடித்து நீர் விலகுமா என்பார்களே; ஆனால் இயக்கத் தின் வேர் அறுக்கவே முற்பட்டனரே - எனப் புலம்பிய நெஞ் சுக்கு, புதிய தெம்பு! புதிய வலிவு! புதிய உற்சாகம்!

யாரால்? யாரால்?

எல்லாம் உன்னால்தான்! ஆம்; என் கண்ணாம் உன்னால் தான்!

மாஸ்கோ செஞ்சதுக்கத்தில்கூட இப்படியொரு விழாக் கோலம் இருந்திருக்குமா என வியக்குமளவுக்கு சேலத்தில் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மே தின விழாவை நடத்திக் காட்டினார்.

பெரியார் சிலை திறப்பு, அண்ணா சிலை திறப்பு, இராவண காவியம் விழா என சேலத்தின் இரு பகுதி விழாக் களிலும் வழியெங்கும் விழிமலர்ந்து - தமிழ்ப்பெருங்குடி மக்களைக் கண்டு மகிழ்ந்தேன்; எனினும் அகழ்ந்தெடுக்க இயலாத சோகச் சுமையொன்று இதயத்தின் ஆழத்தில் அழுத்திக் கொண்டுதானிருந்தது.

அந்தச் சுமையுடன்தான்; சென்னை திரும்பினேன்; நினைவை வேறுபக்கம் திருப்ப, மூன்றாம் தேதிக்கு முதல் தேதி "என் தமிழ் ஆசானுக்கு" எனக் குறிப்பிட்டு கவியரசு வைரமுத்து அனுப்பி வைத்த "வில்லோடு வா நிலவே!" நூலைப் படிக்கத் தொடங்கினேன். இடையிலேயே

டெல்லிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டவாறு இருந்தேன். பிற்பகல் மூன்றரை மணி அளவில்கூட செய்தி கிடைக்கவில்லை. ஆவலைச் சற்று உறங்க வைத்துவிட்டு; அமைதிக்காக, வைரமுத்துவின் நூலைப் படிப்பதில் ஆழ்ந்தேன்!

அந்த நூலில்; ஒரு இடத்தில் - மேற்கொண்டு படிக்க முடியாதவாறு- சில வைர வரிகள்! அப்படியே - அந்த இடத்திலேயே நெஞ்சுக்கு நங்கூரம் போட்டு நின்றுவிட்டேன் - ஆம்; அவ்வளவு அழகான கவிதை வரிகள்!


"மேற்கே சென்று விழுகிறபோதும்
சூரியன் முகம் காட்டுமே தவிர,
முதுகு காட்டுவதில்லை; வெற்றி நிச்சயம்!"

என்னே வியப்பு! அந்த வரிகளில் லயித்திருக்கும்போது தொலைபேசி மணி அடித்தது - நானே எடுத்தேன்! ஆம்; அன்று முழுதும் நானேதான் எடுத்தேன்! டெல்லியிலிருந்து தம்பி முரசொலியும் ஆர்க்காடும் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு "நல்ல செய்தி" சொன்னார்கள். என் முத்தம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றேன்- அவர்களுக்கு அது எதிர் பாராத முத்தம் - நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த முத்தம்; என் தாய் அஞ்சுகத்தின் உருவில் அண்ணாவும், என் தந்தை முத்துவேலர் உருவில் அய்யாவும் அளித்த முத்தம்!

அனைத்தையும் சேர்த்து; அன்பு உடன்பிறப்பே;. இந்தா; வாங்கிக்கொள், என் வாஞ்சைமிகு முத்தம்! இப்படியொரு கடிதம்; இப்போது படித்தாலும் என் கண் கலங்குகிறது!

☆ ☆ ☆

தேர்தல் ஆணையத்தின் தீர்ப்புக்குப் பிறகு அவர்களும் திரு. வைகோவை பொதுச்செயலாளராகத் தேர்வு செய்து 'மறுமலர்ச்சி தி.மு.க.' என்ற பெயருடன் அ.தி.மு.க.வுக்கு எதிர் முகாம் என விளக்கி; புதுக்கட்சி உருவாக்கிக் கொண்டனர். 1998 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் இடம் பெற்றனர். பின்னர் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகத்தோடு உடன்பாடு



ராஜா

வைத்துக்கொண்டுபோட்டியிட்டார்கள். அந்தத் தேர்தல் முடிவுக்குப் பிறகு ம.தி.மு.க.வின் சார்பில் திரு. கண்ணப்பன், திரு.செஞ்சிராமச்சந்திரன் ஆகியோர் இணை அமைச்சர்களாகவும் ஆயினர். தி.மு.க. சார்பில் முரசொலி மாறன், டிஆர்.பாலு, பெரம்பலூர் ராஜா ஆகியோர் முதலிருவர் கேபினட் அமைச்சர்களாகவும், ராஜா இணை அமைச்சராகவும் ஆயினர். ஆனால் 2001இல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் ம.தி.மு.க.வுடன் தொகுதி உடன்பாடு கொள்ள முடியாமல் போய்விட்டது!

43 உச்சநீதிமன்றத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு தீர்ப்பு!

1993ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இறுதியில் உத்தரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், டெல்லி யூனியன் பிரதேசத்திலும் தேர்தல் நடைபெற்றது. இமாசலப் பிரதேசத் தில் காங்கிரஸ் கட்சி நான்கில் மூன்று பங்கு இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தம் 68-இல் 52 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. பா.ஜ.க. விற்கு 8 இடங்கள் மட்டுமே கிடைத்தன. அந்த மாநில முதல்வராக முன்னாள் முதல்வர் வீரபத்ர சிங் பதவியேற்றார். ஆனால் டெல்லியில் பா.ஜ.க. மூன்றில் இரண்டு பங்கு இடங்களைக் கைப்பற்றியது. மொத்தம் 70 இடங்களில் 48 இடங்களையும் பா.ஜ.க.வும், இந்திரா காங்கிரஸ் 14 இடங்களையும் அங்கே கைப்பற்றின. டெல்லி யூனியன் பிரதேச முதல்வராக பா.ஜ.க. வைச் சேர்ந்த மதன்லால் குரானா தேர்ந்தெடுக்கப்பட்டார். உத்தரப் பிர தேசத்திலும், ராஜஸ்தானிலும் இழுபறி நிலை! ராஜஸ்தானில் மொத்தம் 199 இடங்களில் பா.ஜ.க. 95 தொகுதிகளையும், காங் கிரஸ் 76 தொகுதிகளையும், ஜனதாதளம் 6 தொகுதிகளையும், மார்க்சிஸ்ட் கட்சி ஒரு தொகுதியையும், சுயேச்சைகள் 21 தொகுதிகளையும் பெற்றார்கள். சுயேச்சைகளின் ஆதர வோடு பா.ஜ.க. சார்பில் முன்னாள் முதல்வர் ஷகாவத் புதிய முதல்வராகப் பதவியேற்றார். உத்தரப்பிரதேசத்தில் மொத்தம் 421 இடங்களில், பா.ஜ.க. 176 இடங்களிலும், சமாஜ் வாதி, பகுஜன் சமாஜ் கூட்டணி 176 இடங்களிலும், காங்கிரஸ் 28 இடங்களிலும், ஜனதா தளம் 28 இடங்களிலும், இந்தியக்

கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களிலும், மார்க்சிஸ்ட் கட்சி 1 இடத்திலும், ஜனதா கட்சி 1 இடத்திலும், சுயேச்சைகள் 8 இடங்களிலும் வெற்றி பெற்றனர். சட்டப் பேரவை சமாஜ் வாதி- பகுஜன் சமாஜ் கட்சிகளின் தலைவராக முலாயம் சிங் யாதவ் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சியில் உள்ள 28 பேர்களின் ஆதரவையும், ஜனதா தளக் கட்சியில் உள்ள 28 பேர்களின் ஆதரவையும் அவர் கோரினார். ஆனால் அந்த இரண்டு கட்சிகளிலும் அதற்கு முரண்பாடான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. பா.ஜ.க. அங்கே ஆட்சி அமைக்க விரும்பவில்லை என்று தெரிவித்து விட்டது. எனினும் உத்தரப்பிரதேச ஆளுநர் மோதிலால் வோரா பா.ஜ.க.வை ஆதரிக்கும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் பட்டியலை அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்தப் பட்டியலை அந்தக் கட்சியினர் அளிக்க மறுத்ததையடுத்து முலாயம் சிங் யாதவ் முதல்வராகப் பதவியேற்றார். உத்தரப் பிரதேசத்தி லும், ராஜஸ்தானிலும் காங்கிரஸ் தோல்வியுற்றதற்காகப் பொறுப்பேற்று காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகவேண்டுமென்று மத்திய அமைச்ச ராக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த ரெங்கராஜன் குமார மங்கலம் கோரிக்கை வைத்தார். மேலும் அயோத்தி உட்பட பல முக்கியமான பிரச்சினைகளை கட்சித் தலைமை சரியாகக் கையாளாததும் தோல்விக்கு ஒரு காரணம் என்று தன் கடிதத்திலே தெரிவித்திருந்தார். இதற்கிடையே மத்தியப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும் அளவிற்கு பெரும்பான்மை பெற்றதும் பிரதமர் நரசிம்மராவ் அமைச்சர் குமாரமங்கலத்தை அழைத்து பதவியைவிட்டு விலகுமாறு கூறியதின் பேரில் உடனடியாக அதற்கான கடிதத்தை குமார மங்கலம் அளித்து விட்டார். மத்தியப் பிரதேசத்தில் 316 தொகுதிகளுக்கு நடை பெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் 171 இடங்களைக் கைப்பற்றியது. மத்தியப் பிரதேச முதல்வ ராக அந்த மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திக்விஜய்சிங் பொறுப்பேற்றார்.

தஞ்சைப் பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி தமிழகத்திலே இருந்து வரும் 69 சதவிகித இடஒதுக்கீடு

நீடிக்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை நகரில் 23-1-1994 அன்று சமூக நீதிப் பேரணி நடத்தப்பட்டது. அந்தப் பேரணியில் தமிழகம் முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான கழகத் தோழர்கள் கலந்துகொண்டார்கள். பேரணி ஒரு இடத்தைக் கடக்க ஐந்து மணி நேரமாயிற்று. அன்று மாலையில் பேரணியின் முடிவில் கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டமும் நடைபெற்று நானும், பொதுச் செயலாளரும், கழக முன்னணியினரும் அதிலே கலந்து கொண்டு உரையாற்றினோம்.


இந்தக் காலகட்டத்தில் தமிழக அரசுக்கும் ஆளுநருக்கும் இடையே விரிசல் அதிக அளவிற்கு ஏற்பட்டு ஏடுகள் எல்லாம் அதைப் பற்றி விமர்சிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இந்திய அரசியலில் ஒருசில ஆளுநர்கள் செயல் பட்ட விதம் குறித்து இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். தி.மு.கழகத்தின் கொள்கை பொதுவாக ஆளுநர் பதவி என்று தனியாக ஒன்று மாநிலத் திற்குத் தேவையில்லை என்பதுதான். ஆனால் அப்படியொரு பதவி இருக்கும்வரை அந்தப் பதவிக்கு உரிய மரியாதை செலுத்தப்பட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டது. 1976ஆம் ஆண்டு தமிழக கவர்னராக இருந்தவர் திரு. கே.கே. ஷா. கே.கே. ஷா என்றால் கலைஞர் கருணாநிதி ஷா என்று பொருள் கொள்ளலாம் என்று அவரே கூட்டத்தில் சொல்லக் கூடிய அளவிற்கு என்பால் அன்பு கொண்டவர். ஆனால் அவரிட மிருந்தே மத்திய அரசு கையெழுத்துப் பெற்று தி.மு.கழக அரசை 76ஆம் ஆண்டு கலைத்தது. மீண்டும் 1991ஆம் ஆண்டு தி.மு.கழக அரசை மத்திய அரசு கலைத்தபோது தமிழக ஆளுநராக இருந்தவர் சுர்ஜித் சிங் பர்னாலா. தமிழக கழக அரசைக் கலைப்பதற்கு 91ஆம் ஆண்டு பர்னாலா அவர்களிடம் அறிக்கை கேட்ட போது தனது பதவியைப்பற்றிக்கூடக் கவலைப்படாமல் அப்படி உண்மைக்கு மாறான அறிக்கையைத் தரவே மாட்டேன் என்று டெல்லிக்கு அழைத்து குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனே வலியுறுத்திய நேரத்திலே

கூட உறுதியாக நின்று இந்திய வரலாற்றில் தனியானதொரு இடம் பெற்ற ஆளுநர் இவர்.

மராட்டிய மாநில ஆளுநராக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த சி.சுப்ரமணியம் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் வெளியிட வேண்டாமென்று கேட்டுக்கொண்டு மத்திய அரசின் செயல்பாடுகள் குறித்து விமர்சனம் செய்ததை ஒரு பத்திரிகை பிரசுரம் செய்த காரணத்தினால், அவராகவே முன் வந்து தான் அரசியல் மரபுகளை மீறிவிட்டதாக உணர்வ தாகக் கூறி அந்தப் பதவியிலிருந்து விலகினார்.

இமாசலப் பிரதேச ஆளுநராக இருந்தவர் குல்ஷார் அகமது கான். அவரது மகன் சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் ஆளுநர் தனது மகனுக்காக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக தேர்தல் கமிஷனே கூறியதால், தார்மீகப் பொறுப்பேற்று தனது ஆளுநர் பதவியை விட்டு அவராகவே விலகி விட்டார்.

மேற்கு வங்கக் கவர்னராக இருந்தவர்களில் ஒருவர் தர்மவீரா. அவர் அவையிலே உரையாற்ற வந்தபோது, அரசு தயாரித்துக் கொடுத்திருந்த உரையின் சில பகுதிகளை தான் படிக்க மாட்டேன் என்று மறுத்துவிட்டார். அதன் காரணமாக அவையிலே அமளி ஏற்பட்டு அரசியல் சட்டச் சிக்கலே ஏற்பட்டது. அவரைத் தொடர்ந்து அந்த மாநில ஆளுநராகப் பொறுப்பேற்றவர் நூருல் ஹசன். சிறந்த பேராசிரியர், அரசியல் அறிஞர். அவரை ஆளுநராக நியமிக்கவேண்டுமென்று மேற்கு வங்க முதல்வராக இருந்த ஜோதிபாசு அவர்களே கேட்டுப் பெற்றார் என்றுகூடச் சொல்வதுண்டு. அவர் மாநில அரசுக்கும்




ஷெகாவத்

மத்திய அரசுக்கும் இடையே நல்ல இணைப்புப் பாலமாக விளங்கினார்.

இந்த வகையில் தமிழகத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்ட சென்னா ரெட்டி அவர்களின் காலத்தில் முதல்வர் ஜெயலலிதாவிற்கும் ஆளுநருக்கும் இடையே ஒரு தொடர் போராட்டமே தொடர்ந்தது. அதற்கு முதல் காரணம் ஜெயலலிதா மீது கொடுக்கப்பட்ட புகார் மனுக்களை ஆளுநர் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைத்துவிட்டார் என்பதுதான். அடுத்து சென்னை நிருபர்கள் சங்கம் சார்பில் ஆளுநருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் அவர்கள் தெரிவித்த புகார்கள் குறித்து கோப்புகளை வரவழைத்துப் பார்ப்பதாக ஆளுநர் குறிப்பிட்டதுதான். அடுத்து ஒரு ஆங்கில இதழுக்கு அவரளித்த பேட்டியில், தமிழக அரசில் எந்த வேலையும் நடைபெறவில்லை, அரசு செயல் இழந்து விட்டது என்று கூறியது. தொடர்ந்து ராணிப்பேட்டை, பழனி இடைத் தேர்தல்களின்போது எதிர்க்கட்சிகளின் மனுக்கள் குறித்து தலைமைச் செயலாளரிடம் அறிக்கை கேட்பதாக ஆளுநர் கூறியதும் ஜெயலலிதாவின் கோபத்தை அதிகப்படுத்தியது. அமைச்சர்கள் எல்லாம் ஆளுநரை எந்த அளவிற்கு ஆபாசமாக விமர்சிக்க முடியுமோ அந்த அளவிற்கு விமர்சித்தார்கள். அவரது உடல் நலிவினைக் குறிப்பிட்டுக்கூட விமர்சனங்கள் செய்யப்பட்டது. எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநர் சரியாக நடந்துகொள்ளவில்லையென்று அமைச்சர் அரங்கநாயகம் குற்றஞ்சாட்டியபோது முதல்வர் எம்.ஜி.ஆர். அமைச்சரை விட்டு அதற்கு வருத்தம் தெரிவித்து அறிக்கை விடச் செய்தார். ஆனால் சென்னா ரெட்டி-ஜெயலலிதா காலத்தில் ஆளுநர் மாளிகை வேவு பார்க்கப்படுவதாகப் புகார். பணியாளர்கள் மீது புகார். போதிய பாதுகாப்பு தரப்படவில்லை என்று புகார். ஆளுநர் அவர்கள் விடுதலை நாள் அன்றும், குடியரசு நாள் அன்றும் தொன்றுதொட்டு வழங்கும் தேநீர் விருந்தை முதல்வரும் அமைச்சர்களும் அறவே புறக்கணித்தனர். ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திலும் சட்டப் பேரவை

ஆளுநர் உரையுடன்தான் தொடங்கும். சட்டப்பேரவையைக் கூட்டுவதற்கான கோப்பு ஆளுநருக்கு முதல்வரிடமிருந்து செல்கிறது. ஆனால் பேரவையைக் கூட்டுவதற்கான அறிவிப்பு ஆளுநர் மாளிகையிலிருந்து வரவில்லை. பேரவைத் தலைவரும், சட்ட அமைச்சரும் டெல்லிக்கு குடியரசுத் தலைவரிடம் முறையிடப் புறப்பட்டுச் செல்கிறார்கள். அதற்குள் இங்கே அறிவிப்பு வெளியானது. அதுபோலவே தமிழக அரசின் தலைமைச் செயலாளரின் பதவி நீடிப்பு கோப்பிலும் தாமதம் ஏற்பட்டு, பின்னர் கையெழுத்தானது. ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திலும் ஆளுநர் உரையுடன் கூட்டம் தொடங்கப்படுவது பல ஆண்டுக் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்ட மரபு. அதற்குக்கூட ஆளுநரை அழைக்க அ.தி.மு.க. அரசு முன்வரவில்லை. ஆளுநர் உரையின்றி பேரவைக் கூட்டம் நடப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனதா தளமும் எதிர்ப்பு தெரிவித்து ஏடுகளில் அறிக்கை விடுத்தன. 3-1-94 அன்று ஆளுநர் உரை இடம் பெற்றாக வேண்டுமென்று பேரவையிலேயே கருத்துத் தெரிவித்து தி.மு.க.வும் இந்திரா காங்கிரசும் வெளிநடப்பு செய்தன. இதன் அடுத்த கட்டமாக 94ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் அப்போதிருந்த 13 பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பு அதுவரை ஆளுநரிடம் இருந்ததை மாற்றி முதல்வர்தான் அந்தப் பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்று சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினர். பேரவையில் சட்டம் நிறைவேற்றப் பட்டபோதிலும் அதற்கு ஆளுநரின் ஒப்புதல் கிடைக்குமா என்ற கேள்விக்குறி அப்போது பெரிதாக எழுந்தது. ஏனென்றால் ஆந்திராவில் என்.டி.ராமராவ் அவர்கள் முதல்வராக இருந்தபோது இதுபோன்றதொரு சட்டத்தை அங்கே நிறைவேற்றினார். ஆனால் அதற்குப் பிறகு




முலாயம் சிங் யாதவ்

அந்த மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற சென்னா ரெட்டி அவர்கள் அந்தச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, ஆளுநரே வேந்தராக நீடிக்க வகை செய்தார். எனவே அவர் தமிழகத்தின் ஆளுநராக இருந்து இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் தருவாரா என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டது. மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டால் அந்தக் காலத்தில் முதல்வர் இருக்க மாட்டாரே, அப்போது யார் பல்கலைக்கழகத் துணைவேந்த ராக இருப்பார்கள் என்ற கேள்வியும் அரசியல் வட்டாரத்தில் கேட்கப்பட்டது. தமிழகச் சட்டப்பேரவையில் தி.மு. கழகத்தின் சார்பில் அந்தச் சட்டம் தேவையற்றது என்ற கருத்து தெரிவிக்கப் பட்டது. அரசாங்கத்தின் மீது புகார் கூறி 10-1-94 அன்று ஆளுநர் அலுவலகத்திலிருந்து வெளியிடப் பட்ட அறிக்கைக்கு மறுநாளே முதல் அமைச்சர் அதற்குக் கண்டனம் தெரிவித்து ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார். மேலும் டெல்லி சென்று குடியரசுத் தலைவரையும் சந்தித்தார். 26-1-1994 அன்று குடியரசு நாளன்று கொடியேற்ற வந்த ஆளுநருடன் முதல்வர் பரஸ்பரம் பேசிக்கொள்ளக்கூட இல்லை. அன்று மாலையில் ஆளுநர் அளித்த தேநீர் விருந்தையும் முதல்வர் புறக்கணித்தார். ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற ஷெரீப் பதவியேற்பு நிகழ்ச்சிக்கும் முதல்வர் செல்லவில்லை. அந்தச் சண்டை எந்த அளவிற்கு முற்றியது என்பதற்கு ஒரு உதாரணம் அந்த ஆண்டு சட்டமன்ற அலு வலகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டு தோறும் தரப்படும் நாட்குறிப்பில் ஆளுநர் படம் முதலிலே இணைக்கப்பட்டு பின்னர் அனைத்திலும் அந்தப் படம் கிழிக்கப்படும் அளவிற்குப் போனதுதான். அந்தக் கூட்டத் தில் ஆளுநர் உரை நிகழ்த்தப்படாமல் விடப்பட்ட போதி லும் அதே ஆண்டு மார்ச் திங்களில் 16-3-1994 அன்று ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் அவைக்கு வந்து உரையாற்றி னார். ஆனால் ஆளுநர் உரையிலே புரட்சித் தலைவி என்ற வார்த்தை இடம் பெறுமேயானால் அப்படிக் கூறமாட்டேன் என்று ஆளுநர் அலுவலகத்திலிருந்து கூறப்பட்டதாகவும், அவ்வாறே அந்த வார்த்தைகள் எடுக்கப்பட்டு விட்டதாகவும்

ஏடுகளில் செய்தி வந்தன. ஆளுநர் உரையாற்ற வந்தபோதும் விடைபெற்றபோதும் முதல்வரின் பக்கம் திரும்பாமலே சென்றார் என்பதும் ஏடுகளில் செய்தியானது.

94ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10ஆம் நாளன்று சென்னை உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்தது. 1977ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்குக் கறுப்புக் கொடி காட்டியதற்காகத் தொடரப்பட்ட வழக்கில் கழகத்தைச் சேர்ந்த அனைவரையும் விடுதலை செய்து அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. நான், பொதுச் செயலாளர், பேராசிரியர் உட்பட 78 பேர் அந்த வழக்கிலிருந்து ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு தொடர்ந்த மேல் முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயன்றதாக முதலில் 134 பேர் மீது வழக்குத் தொடர்ந்தார்கள். சுமார் பத்தாண்டுகள் நடைபெற்ற அந்த வழக்கில் 180 சாட்சிகள் விசாரிக்கப் பட்டார்கள். 1987ஆம் ஆண்டு அந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. அந்தத் தீர்ப்பில் கழகத்தைச் சேர்ந்த எஸ்.எஸ். தென்னரசு, ரகுமான்கான், கோவை ராமநாதன், வைகோ, பொன். முத்துராமலிங்கம் உட்பட 56 பேருக்கு இரண்டாண் டுகள் சிறைத் தண்டனை விதித்தும், நான் உட்பட மற்ற அனைவரையும் விடுதலை செய்தும் தீர்ப்பு கூறப்பட்டது. 56 கழகத் தோழர்களின் மீது தண்டனை வழங்கப்பட்டதை எதிர்த்து கழகத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்யப்பட்டது. அதேபோல தலைவர் கலைஞர் அவர்கள் உட்பட மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து எம்.ஜி.ஆர். ஆட்சியிலே மேல்முறையீடு செய்திருந் தார்கள். இந்த இரண்டு மேல் முறையீட்டு வழக்குகளிலே தான் 94ஆம் ஆண்டு தீர்ப்பு கூறப்பட்டது. அனைவரையும் விடுதலை செய்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் கே.எம். நடராஜன், சுவாமி துரை ஆகியோர் இந்தத் தீர்ப்பினை வழங் கினார்கள். கழகத்தின் சார்பில் இந்த இரண்டு வழக்கு களிலும் மூத்த வழக்கறிஞர் என். நடராஜன், சண்முகசுந்தரம், நல்லியண்ணன், நாகராஜன், கார்த்திகேய நாராயணன் ஆகியோர் வாதிட்டனர்.


சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்ட அதே காலகட்டத்தில் உச்சநீதிமன்றத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கப்பட்டது. அயோத்தி யில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான ஆட்சிகள் நடைபெற்ற மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளை மத்திய அரசு கலைத்தது செல்லும் என்றும், ஆனால் அதற்கு முன்பு கர்நாடக மாநிலத்தி லும், மேகாலயாவிலும், நாகாலந்தி லும் மாநில அரசுகளை மத்திய அரசு கலைத்தது செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் 11-2-1994 அன்று தீர்ப்பளித் தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356வது பிரிவைப் பயன் படுத்தி மாநில அரசுகளை மத்திய அரசு கலைப்பதற்கு எதிராகக் கருத்துக் கள் பேசப்பட்டு வந்த நேரத்தில் உச்ச நீதிமன்றம் அளித்த அந்தத் தீர்ப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறப்பட்டது.



ரகுமான் கான்

மாநில அரசுகளைக் கலைப்பதற்கான முடிவு மேற்கொள் வதற்கு முன்பு, நாடாளுமன்றத்தில் அது குறித்து விவாதித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்றபிறகே அச்செயலில் ஈடுபட வேண்டுமென்றும் அந்தத் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட் டிருந்தது. ஒரு மாநில அரசு கலைக்கப்பட்டது சரியல்ல என்று உச்சநீதிமன்றம் முடிவு செய்யுமேயானால் கலைக்கப் பட்ட அந்த அரசை, மீண்டும் அமைத்திடுமாறு கட்டளை யிடவும் அதிகாரம் உண்டு என்றும் அந்தத் தீர்ப்பில் தெளிவு படுத்தப்பட்டிருந்தது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை வழங்கியது மாண்புமிகு நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே அமைந்த நீதிபதிக் குழுவினர் என்பது நம்மைப் பெரிதும் மகிழ்ச்சியுறச் செய்தது. அவர் தனது



வாழப்பாடி ராமமூர்த்தி

தீர்ப்பிலே குறிப்பிடும்போது, "இப்படியொரு கலைப்பு நிலைமை கட்டாரி போலத் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தால், எந்த மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சர்கள், நாற்காலியில் உட்காராமல் நின்று கொண்டேதான். இருக்க வேண்டும், எப்போது கலைப்பு உத்திரவு வருமென எதிர்பார்த்து" என்று குறிப்பிட்டிருந்தார். உச்சநீதிமன்றம் அளித்த அந்தத் தீர்ப்பின் மூலம் அரசியல் சட்டத்தின் 356வது பிரிவு, நீக்கப்படவேண்டிய ஒன்று என்ற நமது கழகத்தின் நீண்டநாள் கோரிக்கையிலே நியாயம் உண்டு என்பதை நிலை நாட்டியது.

ஜெயலலிதா அரசு மீதான ஊழல் பட்டியல் ஒன்றை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி உட்பட ஏழு கட்சித் தலைவர்கள் 16-3-1994 அன்று தமிழ்நாடு ஆளுநர் சென்னாரெட்டி அவர்களைச் சந்தித்துக் கொடுத்தனர். அந்தப் பட்டியலில் மொத்தம் 38 புகார்கள் அடங்கியிருந்தன. தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அதன்மூலம் முதல் அமைச்சர் ஜெயலலிதா பல கோடி ரூபாய் சொத்து சேர்த்துள்ளார். எனவே அவர் மீதும் மற்ற அமைச்சர்கள் மீதும் வழக்குத் தொடர அனுமதிக்க வேண்டும் என்று அந்த ஊழல் புகார் அறிக்கையிலே ஏழு கட்சித் தலைவர்கள் கோரியிருந்தனர். இந்தப் புகார் மனுவினை தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, பிரதமர் நரசிம்மராவ், மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் ஆகியோருக்கு 19-3-1994 அன்று அனுப்பி வைத்தார்.

44 எதிர்க்கட்சியாக, இ.காங்கிரஸ் பட்ட வேதனை!

1991-96ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது இந்திரா காங்கிரஸ் கட்சிதான் பிரதான எதிர்க் கட்சி. அதுவும் தேர்தல் நேரத்தில் ஆளுங்கட்சிக்குத் தோழ மையாக இருந்து பிறகு அவர்கள் இடையே பிளவு ஏற்பட்டு காங்கிரஸ் கட்சி எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் தலைமையிலே பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டபோது அவர்கள் அந்தக் காலகட்டத்தில் குறிப்பாக 1994ஆம் ஆண்டு ஆளுங் கட்சியான அ.தி.மு.க.வினால் எந்த அளவிற்கு நடத்தப்பட் டார்கள் என்பதற்கு அப்போது நடைபெற்ற சில சம்பவங் களை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

17-3-94 அன்று ஆளுநர் உரை மீதான விவாதம் தொடங் கியது. முதல்நாள் விவாதத்தின்போதே, ஏற்பட்ட பிரச்சினையில் எதிர்க்கட்சித் தலைவரான எஸ்.ஆர். பாலசுப்ரமணி யத்திற்கே பேசுவதற்கு வாய்ப்பு தரப்படவில்லை. எனவே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர். விவாதத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய சோ.பாலகிருஷ்ணன் ஆளுநர் உரைக்கே பெரும் போராட்டம் நடத்தவேண்டியிருந்தது என்று ஆரம்பித்தவுடனேயே ஆளுங்கட்சியினர் அவரை தொடர்ந்து பேசவிடவில்லை. அப்போது காங்கிரஸ் உறுப்பினர்கள் இதென்ன சட்ட மன்றமா என்று கூறி விட்டு வெளிநடப்பு செய்தனர்.

19-3-94 அன்று பேரவையில் முதல்வர் ஜெயலலிதா குறுக் கிட்டுப் பேசியபோது, ராஜீவ் காந்தியின் மரணத்தினால்


ஏற்பட்ட அனுதாப அலை காரணமாக அ.தி.மு.க. ஆட்சிக்கு வரவில்லை என்று குறிப்பிட்டதோடு, அ.தி.மு.க.வின் செல்வாக்குதான் வெற்றிக்குக் காரணம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். 21-3-94 அன்று சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா காங்கிரசாரைப் பற்றியும் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியத்தைப் பற்றியும் விமர்சனம் செய்த நேரத்தில், "எங்கள் தயவால் எம்.பி., எம்.எல்.ஏ.க்களாக ஆகி எங்களையே கொச்சைப்படுத்துகிறீர்கள். பர்கூர் தொகுதியில் காங்கிரஸ் தொண்டர்கள் உண்மையிலேயே எனக்கு ஓட்டுப் போடவில்லை. எனக்காகச் செயல்பட வில்லை. பர்கூரில் நடந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் எனக்கு எதிராகச் செயல்பட வேண்டும் என முடிவு செய்து பேசப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் வாழப்பாடி ராமமூர்த்திக்கு அப்பாவி அ.தி.மு.க. தொண்டர்கள் உண்மையோடு பணியாற்றி ஓட்டுப் போட்டனர். எனக்குக் கிடைத்தது அ.தி.மு.க. ஓட்டுகள் மட்டும் தான். காங்கிரஸ் கட்சியினர் செய்த சூழ்ச்சி, வஞ்சனை, துரோகச் செயல்களை நாங்களும் செய்திருந்தால் வாழப்பாடி ராமமூர்த்தி டெபாசிட் இழந்திருப்பார்." என்றார்.

அ.தி.மு.க.வுடன் இந்த அளவிற்கு காங்கிரஸ் உறவு முறிந்து கொண்டிருந்த நேரத்தில்கூட காங்கிரஸ் கட்சியிலே உள்ள சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகச் செயல்படத் தொடங்கினர். 25-3-94 அன்று காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரான வேலூர் ஞானசேகரன் முதல்வரைச் சந்திக்க நேரமே கிடைப்பதில்லை என்று குறை கூறிப் பேசிக் கொண்டிருந்த போது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செல்வராஜ் அவர்கள் கட்சியினர் தடுத்த போதும் மீறிக்கொண்டு பேரவைத் தலைவர் தந்த அனுமதியினைப் பெற்று முதல்வரைச் சந்திப்பதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்றும், தான் கோரிக்கை வைத்தபோது முதல்வர் அதனை யேற்று உடனடியாகச் செய்து கொடுத்தார் என்றும் புகழ் மாலை தொடுத்த வேடிக்கையும் நடந்தது.

29-3-1994 அன்று முதல்வர் ஜெயலலிதா, விடுதலைப் புலிகள் அமைப்புடன் மத்திய அரசின் உளவு நிறுவனமான

ரா வெளிநாட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும், மத்திய அரசு சூது சூழ்ச்சியில் ஈடுபடுகிறது என்ற உண்மை வெளியாகிவிட்டதாகவும் பேரவையிலே தெரிவித்தார். காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், இதே குற்றச்சாட்டை "93ஆம் ஆண்டிலேயே ஜெயலலிதா குறிப்பிட்டு, அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாகத் தெரிவித்ததாகவும், ஆனால் ஓராண்டு ஆகியும் ஆதாரத்தை வெளி யிடவில்லை" என்றும் தெரிவித்தார். பத்திரிகையில் வெளியான செய்திதான் ஆதாரம் என்று ஒரு அமைச்சர் பதில் கூற, எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர்.பாலசுப்ரமணியம் பத்திரிகைச் செய்தி ஆதாரமாகாது என்றார். தொடர்ந்து பேச அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படாது முதல்வரே தொடர்ந்து பதில் கூறிக் கொண்டிருந்ததால் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையி லிருந்து வெளிநடப்பு செய்தார்கள். அதைப்பற்றி ஜெய லலிதா அவையிலே விமர்சிக்கும்போது தன் பதிலைத் தாங்கிக்கொள்ள முடியாமல் காங்கிரசார் ஓட்டம் பிடிக்கிறார்கள் என்றார். வெளியேறிய எஸ்.ஆர். பாலசுப்ர மணியம் செய்தியாளர்களிடம் கூறும் போது, எதிர்வரிசை யிலே உள்ளவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கப்படவில்லை என்றும், ஏதாவது ஒன்று கூறினால் உடனே நான்கு அமைச் சர்கள் எழுந்துகொண்டு குறுக்கிடுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கடுத்தநாள் இதைவிட வேதனை. அவையில் கேள்வி நேரம் முடிந்ததும், எதிர்க்கட்சித் தலை வரான எஸ்.ஆர்.பி. அவர்கள் மத்திய அரசு மீது முதல்வர் சாட்டிய குற்றச் சாட்டு குறித்து பிரச்சினை கிளப்ப முயன்றபோது அவருக்கு வாய்ப்பு தரப்படவில்லை. மாறாகப் பேரவைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவரை நோக்கி, "இது சந்தைக்கடை அல்ல, சட்டமன்றம்; இதையெல்லாம் இங்கு வந்து பேச நான் அனுமதிக்கத் தயா ராக இல்லை. பல்வேறு சந்தர்ப்பங் களில் முறைகேடாகப் பலமுறை எதிர்க்



சாதிக் பாட்சா

கட்சித் தலைவர் நடந்திருக்கிறார். அவருக்கு எனது இறுதி எச்சரிக்கை. இனியும் அவ்வாறு நடக்காதீர்கள். இல்லாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். கை நீட்டிப் பேசுவது, வாய்க்கு வந்தபடி பேசுவது, உள்ளே உட்கார்ந்திருக்கும் உறுப்பினர்களை வெளியே வரச் சொல்வது போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கிறார். ஒரு முறை அவையில் ஒரு கலவரச் சூழ்நிலையை உருவாக்கக்கூட அவர் முயற்சித்தார். அப்போது பெருந்தன்மையோடு முதல்வர் தமது கட்சியினரை அமரச் செய்து அன்றைக்கு ஓர் அசம்பாவிதம் நடக்காமல் தடுத்தார். தனது முறைகேடான பேச்சுக்கு இன்றோடு எஸ்.ஆர்.பி. முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து எஸ்.ஆர்.பி. தன்னைப் பேச அனுமதிக்க வேண்டி நின்று கொண்டிருந்தபோதே அவைக் காவலர்களை அனுப்பி அவரை வெளியேற்றச் செய்தார். பிறகு அனைத்து காங்கிரஸ் உறுப்பினர்களையும் வெளியேற்றினார். நிதியமைச்சர் நாவலர் அப்போது எழுந்து எஸ்.ஆர்.பி. யும் அவரைச் சார்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக மன்னிப்புக் கேட்டால் ஒழிய அவர்களை இனிமேல் பேரவையின் நடவடிக்கைகளில் பேசுவதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று தெரிவித்த யோசனையையும் பேரவைத் தலைவர் ஏற்று அவ்வாறே அறிவித்தார். வெளியேறிய எஸ்.ஆர்.பி. மன்னிப்பு கேட்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்று தெரிவித்தார். ஆளுநர் சென்னாரெட்டி அவர்களை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்து இதுபற்றிப் புகார் கூறினர். காங்கிரசாரை மீண்டும் திரும்ப அவைக்கு அழைக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்புவதற்காக முற்பட்ட கழக உறுப்பினர் பரிதி இளம்வழுதிக்கும் அங்கே அனுமதி வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றிச் செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, "விடுதலைப் புலிகளைக் காரணமாகக் காட்டி தி.மு.க. ஆட்சியைக் காங்கிரசாரும் அ.தி.மு.க. வினரும் சேர்ந்து நியாய விரோதமாகக் கலைத்தார்கள். இப்போது மத்தியிலே உள்ள காங்கிரஸ் ஆட்சி, அ.தி.மு.க.

அரசு விடுதலைப் புலிகளோடு தொடர்பு வைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறது. மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசோ மத்திய காங்கிரஸ் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறது. எனவே இப்போது இந்த இரண்டு ஆட்சிகளையும் கலைப்பது யார்?" என்று கூறினேன்.

பேரவையிலே இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களை யெல்லாம் எதற்கெடுத்தாலும் வெளியேற்றிக் கொண்டிருந்ததை மனதிலே வைத்திருந்த நான் செய்தியாளர் ஒருவர் என்னிடம் தற்போதைய சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்து உங்கள் கருத்தென்ன என்று நிருபர்கள் கூட்டமொன்றில் கேட்டதும், "இப்படி சும்மா கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் வெளியே தூக்கி எறிந்துவிடுவேன்" என்று நான் கூறியதுதான் தாமதம், செய்தியாளர்கள் அனைவரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தனர்.

மூன்று நாட்கள் அவைக்கு வராமல் இருந்த காங்கிரசார் அதற்குப் பிறகு பேரவைத் தலைவர் அனுமதி அளித்ததின் பேரில் 6-4-94 அன்று அவைக்கு வந்தார்கள். அன்றைக்கும் காங்கிரஸ் அலுவலக மேலாளர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த பிரச்சினையிலே முதலமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அதிலே உண்மைக்கு மாறான தகவல்கள் உள்ளன என்பதைத் தெரிவிக்க முற்பட்ட எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதின் காரணமாக அவரும் காங்கிரஸ் கட்சியினரும் வெளிநடப்பு செய்ததோடு, வெளியே வந்து முதல்வர் அளித்த விளக்கம் அப்பட்டமான பொய் என்றும் தெரிவித்தார்கள்

11-4-94 அன்று நொச்சியத்தில் நடைபெற்ற ஒரு கொள்ளை குறித்து பிரச்சினை எழுப்பப்பட்டபோது கழக உறுப்பினர் பரிதியும், காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்சும் வெளியேற்றப்பட்டார்கள். அன்றைக்குத்தான் அவையிலே பதிலளித்த முதல் அமைச்சர் ஜெயலலிதா, தமிழகத்திலே நடைபெறும் கொள்ளைகளுக்கெல்லாம் மத்திய அரசுதான் காரணம் என்பதுபோலக் குற்றஞ் சாட்டினார். அதற்கு




என். வி. என். சோமு

எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்திரா காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சட்டமன்றத்தைப் புறக் கணித்தனர். சட்டமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் இதைத் தெரி வித்த எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் பிரதமர் மீதும் காங் கிரஸ் தலைவர்கள் மீதும் அபாண்ட மான குற்றச்சாட்டுகளை முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். அவருக்கு இதுபோன்று குற்றம் சாட்டுவது வாடிக்கையானது. முன்பு ஒரு கட்டத்தில் அவரது கட்சியிலிருந்து அவர் ஓரங்கட்டப்பட்ட போது, எம்.ஜி.ஆர். மறைந்து பல மணி நேரம் ஆகிவிட்டது, ஆனால் அதை மறைத்து விட்டார்கள் என்றும், அவர் கட்சித் தலைவராக வருவதைத் தடுக்கிறார்கள் என்றும் ராஜீவ்காந்திக்கு மனு கொடுத்தவர்தான் ஜெயலலிதா. எம்.ஜி.ஆர். இறந்த போது மோரில் விஷம் கொடுத்துக் கொன்று விட்டார்கள் என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டினார். மேலும் கலைஞர் என்னைக் கொல்ல சதி செய்கிறார் என்றும் குற்றம் சாட்டி யவர்தான் ஜெயலலிதா. இதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் வகையில் சட்டப் பேரவை நடவடிக்கைகளைக் காங்கிரஸ் புறக்கணிக்கும் என்று தெரிவித்தார். அப்போது சென்னை மாநகருக்கு வருகை தந்த மத்திய உள்துறை அமைச்சர் சவான் அவர்களைச் சந்தித்து ஜெயலலிதா மீது புகார் மனுவினை எஸ்.ஆர்.பாலசுப்ரமணியமும் அவரது கட்சியின ரும் கொடுத்தார்கள்.

காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று பேரவைத் தலைவர் பிறப்பித்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டு மென்று வைக்கப்பட்ட கோரிக்கையைப் பேரவைத் தலைவர் ஏற்க மறுத்தார். அதைக் கண்டித்து பேரவையிலிருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். ஆனால்

அ.தி.மு.க. ஆதரவு காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர்கள் மூன்று பேர் அப்போது அவையிலேயே இருந்தனர். இப்படித்தான் அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் யாருமே எதுவுமே பேசாத நிலைமை தொடர்ந்தது.

அமைதியின் உருவமாகத் திகழ்ந்தவரும் - கழகத்தைச் சோதனைகள் சூழ்ந்த நேரத்தில் எல்லாம் எஃகு இதயத்தோடு பணியாற்றி இயக்கத்திற்காக உழைத்தவருமான கழகப் பொருளாளர் சாதிக் பாட்சா அவர்கள் மே 12ஆம் தேதியன்று எங்களை விட்டுப் பிரிந்தார். சில மாதங்களாகவே உடல் நலக் குறைவுற்று சென்னை தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர் மே 12ஆம் தேதியன்று பிற்பகலில் கவலைக்கிடமான நிலைக்காளாயினார். செய்தி அறிந்ததும் நானும் பொதுச் செயலாளர் பேராசிரியரும், துரைமுருகனும், என்.வி.என். சோமுவும் மருத்துவமனைக்கு விரைந்தோம். டாக்டர் அர்ஜுன் தாஸ் அவர்களிடம் தொலைபேசியில் நானே பேசி உடனடியாக மருத்துவமனைக்கு வரும்படி கேட்டுக் கொண்டேன். அவரும் விரைந்து வந்து சாதிக் பாட்சா அவர்களின் உயிரைக் காப்பாற்றக் கடுமையாகப் போராடினார். ஆனால் பயனளிக்காமல் 3.30 மணி அளவில் சாதிக் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்தார்.



துரைமுருகன்

1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலும், 1969, 1971, 1989 ஆகிய ஆண்டுகளில் என் தலைமையில் அமைந்த அமைச்சரவையிலும் இடம் பெற்றிருந்தார். 1976ஆம் ஆண்டு ஆட்சி கலைக்கப்பட்டு நெருக்கடிநிலை அமல் படுத்தப்பட்டு 500க்கு மேற்பட்ட கழகத்தினர் சிறைச்சாலைகளில் மிசா கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் சாதிக் தி.மு.க.

தலைமை நிலையமான அன்பகத்தில் அலுவலகப் பொறுப் பாளராகவும் இருந்து பணியாற்றியவர். 1977 ஆம் ஆண்டு கழகப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதிக், 1982, 1986, 1992 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கழகத் தேர்தல் களிலும் கழகப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு பொறுப்பு வகித்தவர். கழகத்தின் வெற்றியிலும், தோல்வியிலும், சோதனையிலும், சாதனையிலும், கொடிய வெயிலிலும், நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் எனக்குத் துணையாக இருந்த அந்தத் தங்கத் தூண் சாய்ந்துவிட்டது. அந்த இன்முகத்தை, புன்முறுவலை, அன்புப் பெருக்கை, துன்பம் ஊழிப்பெருக் காக வரினும் துவளாமல் எங்களுக்குத் தோள் கொடுத்த அந்தத் தூயவரை இழந்தோம். அவரது உறுதி குலையாத கொள்கைப்பற்றை, இலட்சியப் பிடிப்பைப் பின்பற்றுவதே அவருக்கு நாம் செலுத்தும் இறுதி மரியாதை, கண்ணீர் காணிக்கை என்று அவருக்கு இரங்கல் தெரிவித்தேன்.

சாதிக் அவர்களின் மறைவினையொட்டி அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வந்த கொள்கைச்சுடர் கோவை ஞானகிராமன் சாதிக் வீட்டு வாசலிலேயே மயங்கி விழுந்து மரணமடைந்தார். மறைந்த சாதிக் பற்றி எங்களிடம் பேசிக் கொண்டிருந்தபோதே ஞானகிராமனை சாவு, தழுவிவிட்டது.

45

சமூகநீதிக்காக மீண்டும் போர்க்குரல்

1994ஆம் ஆண்டு ஜூன், ஜூலைத் திங்களில் தமிழகத்தில் இடஒதுக்கீடு பிரச்சினை குறித்து தொடர்ந்து பல போராட்டங்கள் நடைபெற்றன. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு 69 சதவிகித இட ஒதுக்கீடு அமலில் இருந்தது. உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு ஒன்றில் இட ஒதுக்கீட்டை 69 சதவிகிதம் என்பதற்கு மாறாக 50 சதவிகித அளவிற்கு மட்டுமே செல்லும் என்று 16-11-1992 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் விளைவாகத் தொழிற் கல்விகளில் 69 சதவிகித அளவிற்கு இடங்களை ஒதுக்குவது குறித்த போராட்டம் மாணவர்கள் மத்தியில் பெரிதாக எழுந் தது. இடஒதுக்கீடு பிரிவில் எத்தனை சதவிகிதம் என்பதை நிர்ணயிக்கும் உரிமையை அந்தந்த மாநில அரசுகளுக்கே வழங்கும் வண்ணம் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆனால் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஜெயலலிதா அரசு இரட்டை வேடம் போடுவதைப்போல ஒரு கருத்து பத்திரிகையாளர் கள் மத்தியில் எழுந்தது. அதற்குக் காரணம் 22-11-1993 அன்று உச்சநீதிமன்றத்தில் அளித்த ஒப்புதல் பிரமாணப் பத்திரத்தில், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பையேற்று தமிழ்நாட்டில் 93-94ஆம் ஆண்டுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க ஜெயலலிதாவின் அரசின் சார்பில் சம்மதம் கொடுத்ததுதான்.

இட ஒதுக்கீட்டுக்காக அரசியல் சட்டத்தைத் திருத்த ஆதரவு கேட்டு, பிரதமர் நரசிம்மராவ், முன்னாள் பிரதமர் வி.பி. சிங், தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் என்.டி. ராமராவ், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா, மார்க்சிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித், பாரதிய ஜனதா தலைவர்கள் வாஜ்பய், எல்.கே. அத்வானி மற்றும் சந்திரசேகர், ஜார்ஜ் பெர்னாண்டஸ், பஸ்வான், ரபிராய், சிக்கந்தர் பக்த், சுப்பிரமணியசுவாமி, இப்ராகிம் சுலைமான்சேட், பனத்வாலா, சித்த பாசு, உன்னிகிருஷ்ணன், பிரகாஷ் சிங் பாதல், கன்சிராம் போன்ற தலைவர்களுக்கு 28-6-1994 அன்று நான் கடிதம் எழுதினேன். 29ஆம் தேதியன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களிடமிருந்து பெற்ற அறிவுரைப் படி, இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் இதற்காக அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவர அனைத்துக் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதற்காகக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திண்டிவனம் வெங்கட்ராமன், விடுதலை விரும்பி, மிசா கணேசன், முகமது சகி, ஜெ. எஸ்.ராஜா ஆகியோரை டெல்லிக்கு அனுப்பிவைத்தேன். அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஜூலை 10ந்தேதி முதல் 15ந்தேதி வரை வட்டத் தலைநகரங்களிலும், பேரூர்களிலும் கூட்டங்களை நடத்துவதென்றும், ஜூலை 15ந்தேதி முதல் 22ந்தேதி வரை ஒன்றியங்களில் உள்ள எல்லா கிராமங்களிலும் அனைத்துக் கட்சி சைக்கிள் பேரணிகள் அல்லது நடை பேரணிகள் நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

கழகத்தின் முயற்சிக்குப் பெரிதும் ஆதரவளிப்பதாக கழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேரிடையாகவும், எனக்கு எழுதிய கடிதத்தின் மூலமும் வட இந்தியத் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இட ஒதுக்கீடு பிரச்சினைக்காக 17-6-1994 அன்று தி.மு. கழகம் உட்பட அனைத்து எதிர்க்கட்சிகள் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன் மறியல் நடத்தப் போவதாக


அறிவித்தபோது அதே நாளில் இட ஒதுக்கீடு பிரச்சினைக் காக பந்த் நடத்துவதற்கு ஜெயலலிதா அழைப்பு விடுத்தார். உடனே தி.மு.கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தமது மறியல் போராட்டத்தை 20ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தன. ஜெயலலிதா அரசு மறியல் போராட்டத்தால் வன்முறை ஏற்படும் என்று கூறி அனுமதி மறுத்ததோடு, 20-6-94 அன்று காலையில் என்னையும், நல்லக்கண்ணு, டாக்டர் ராமதாஸ், எஸ். திருநாவுக்கரசு ஆகியோரையும் கைது செய்து, பின்னர் பெரும் விளைவுகள் ஏற்படக் கூடும் என்பதற்காக அன்று மாலையில் எங்களை விடுவித்தது. ஜெயலலிதாவின் இந்த மாறுபட்ட நிலையினை 15-7-1994 தேதியிட்ட ஆங்கில இதழ் 'ஃப்ரண்ட்லைன்' நீண்ட கட்டுரையாக இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் ஜெயலலிதா இரட்டை வேடம் என்ற தலைப்பிலேயே வெளியிட்டிருந்தது.

இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து தினமணி இதழ் 8-7-94 அன்று ஒரு முக்கியமான தலையங்கத்தைத் தீட்டியிருந்தது. அதன் முக்கிய பகுதிகள் வருமாறு :-

"இட ஒதுக்கீட்டை 69 சதவிகித அளவில் தொடர வேண்டும் என்பதில் தனக்கு ஆத்மார்த்த ஈடுபாடு உண்டு; இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணாமல் ஓயமாட்டேன்" என்று முதல்வர் ஜெயலலிதா பொதுமக்கள் முன்னிலையில் உறுதி அளித்திருக்கிறார். அவரது இந்த முடிவை வரவேற்கிறோம். முன்பு கச்சத்தீவை மீட்பேன் எனச் செய்த சபதத்தைப் போல இதுவும் வெறும் வாய்ச்சொல் வீரமாகப் போய்விடாமல், இந்த வாக்கை நிறைவேற்றிக் காட்டுவார் என்று நம்புகிறோம்; நிறைவேற்றிக் காட்ட வேண்டுமென்று விரும்புகிறோம்.

அதே சமயம் மனத்தில் சில கேள்விகள் எழுவதைத் தவிர்க்க இயலவில்லை. 69 சத இட ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்று ஆத்மார்த்தமாக விரும்புகிற ஒருவரின் தலைமையில் இயங்கும் அரசு, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அமுல்படுத்த மாட்டோம், 50 சதவிகிதத்தை அமுல்படுத்து

கிறோம் என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு உறுதிமொழியை எழுத்து மூலமாகக் கொடுத்தது எப்படி?



டாக்டர் ராமதாஸ்

கல்வி நிலையங்களில் இடங்களின் எண்ணிக்கை போர்க்கால அடிப்படையில் அதிகரிக்கப்படும் என்று அமைச்சரவையில் தீர்மானம். ஒரு சில நாட்களுக்குள் மாணவர் சேர்க்கை ஒத்திவைப்பு என்று அறிவிப்பு. கன்னியாகுமரியில் ஒரு நிலை, புது டெல்லியில் ஒரு நிலை, நவம்பர் மாதம் ஒரு நிலை, டிசம்பர் மாதம் ஒரு நிலை, அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு நிலை, அரசு அறிவிப்பில் ஒரு நிலை என்று முதல்வர் வெவ்வேறு நிலைகளை மேற்கொள்வது இட ஒதுக்கீடு பிரச்சினையில் அவர் குழம்பிப் போயிருக்கிறார் என்பதைக் காட்டுவதாகவே இருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வது ஒன்றுதான் இந்தப் பிரச்சினைக்கு நிச்சயமான நிரந்தரமான தீர்வு. அதற்கு நாடாளுமன்றத்தில் பலம் கொண்ட அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு தேவை. முன்னாள் முதல்வர் கருணாநிதி எழுதியுள்ள கடிதத்திற்குக் கிடைத்திருக்கும் பதில்கள் அந்தக் கட்சிகளிடமிருந்து ஆதரவைப் பெற முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கின்றன.

கருணாநிதி எடுத்த முயற்சிதானே என்று அலட்சியமாகவோ, அல்லது அரசியல் போட்டி மனப்பான்மை காரணமாகவோ முதல்வர் இந்த வாய்ப்பை ஒதுக்கித் தள்ளி விடாமல் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும். கருணாநிதி புகழ்பெற்று விடுவாரோ என்று எண்ணித் தயங்குவதைவிட, தமிழக மக்கள் நலம்பெற வேண்டும் என நினைத்துச் செயல்படுவது ஆரோக்கியமான முன்னுதாரணமாக இருக்கும். கருணாநிதியின் முயற்சியைத் தொடர்ந்து அவரோடு இணைந்து அவர் களத்தில் இறங்கட்டும்.”

இவ்வாறு தினமணி இதழ் தனது தலையங்கத்தில் குறிப் பிட்டிருந்தது.

27-6-1994 அன்று நான் கடிதம் எழுதியதை நினைவு கூர்ந்தும், அகில இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் எனக்கு ஆதரவு தெரிவித்து எழுதிய கடிதங்களை இணைத் தும் மீண்டும் ஒருமுறை 9-7-1994 அன்று பிரதமர் நரசிம்ம ராவ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.


இட ஒதுக்கீடு பிரச்சினையில் நான் எழுதிய கடிதத்திற்கு ஆதரவு தெரிவித்து ஏ.பி. வாஜ்பய், வி.பி. சிங், ரபிராய், இந்திரஜித் குப்தா, ஜார்ஜ் பெர்னாண்டஸ், ஹர்கிஷன் சிங் சுர்ஜித், சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் எழுதிய கடிதங்கள் 10-7-1994 தேதிய தினமணி இதழில் முழுவதுமாக அப்படியே வெளியிடப்பட்டிருந்தன. இதற்குப் பிறகு 18-7-1994 அன்று தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவும் இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆதரவு கோரி கடிதம் எழுதினார்.

இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்தும் அ.தி.மு.க. அரசின் ஊழல், அநாகரீகப் போக்கு, குற்றவாளிகளுக்கு அமைச்சர் களே உடந்தையாக இருப்பது போன்ற பிரச்சினைகள் குறித்தும் பேசி முடிவெடுப்பதற்காக 11-11-1994 அன்று அண்ணா அறிவாலயத்திலுள்ள தி.மு.க. அலுவலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி யிருந்தேன். அந்தக் கூட்டத்தில்; பேரவையில் கழக உறுப் பினரான பரிதி இளம்வழுதியைக் காட்டு மிராண்டி எனப் பேசி இழிவுபடுத்திய செயலைக் கண்டித்தும், உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாது தள்ளிவைத்த போக்கினைக் கண்டித்தும், 50 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு உச்சநீதி மன்றத்தில் அரசு சார்பில் ஒப்புக்கொண்டதைக் கண்டித் தும், ஈரோட்டில் எம்.ஜி.ஆர். சிலையை வைக்க 'எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.' சார்பில் திரு.திருநாவுக்கரசு அவர்கள் எடுத்த முயற்சிக்கு எதிராக அந்தச் சிலையைக் கைப்பற்றிக் கொண்ட போக்கினைக் கண்டித்தும், 15-12-1994 அன்று மாவட்டத் தலைநகரங்களிலும் வட்டத் தலைநகரங்களிலும்

மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் நடத்தி இலட்சக்கணக்கானோர் சிறை செல்வதென்று முடிவெடுக்கப்பட்டது.

இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி விடுத்த கண்டன அறிக்கையில் - "தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 69 சதவிகித இடஒதுக்கீடு பிரச்சினையில் போதுமான ஈடுபாடோ அல்லது நம்பிக்கையோ இல்லாத காரணத்தால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை உதாசீனப்படுத்தி ஒதுக்கித் தள்ளி விட்டார். கடந்த 1929 ஆம் ஆண்டிலிருந்து தமிழகம் அனுபவித்து வந்த இந்த இட ஒதுக்கீடு, தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பொறுப்பற்ற செயல் காரணமாக இப்போது இழக்க வேண்டி வந்துள்ளது. ஜெயலலிதா இட ஒதுக்கீடு பற்றி உதட்டளவில் பேசி வந்தாரே ஒழிய அதனைப் பாதுகாக்க உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இட ஒதுக்கீடு 50 சத விகிதத்துக்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பு வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா வழி செய்து கொடுத்து விட்டார். எனவே தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்ட ஜெயலலிதா தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்து விட்டு வெளியேற வேண்டும்" -என்று தெரிவித்திருந்தார்.

டிசம்பர் 15ந்தேதி நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்த மறியல் போராட்டம் காரணமாக டிசம்பர் 10ஆம் தேதி முதலே கழகத்தைச் சேர்ந்தவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா தளம், பா.ம.க., இந்திய தேசிய லீக், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., ஆகிய இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டார்கள். முன்கூட்டி கைது செய்வதை எதிர்த்து கழகத்தின் சார்பில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில்



ஜார்ஜ் பொன்னாண்டஸ்

இருக்கும்போதே ஜெயலலிதா ஆட்சியினர் கைதுப் படலத்தைத் தொடங்கி விட்டார்கள். 15-ஆம் தேதி வரை சுமார் 30 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள். 15-ஆம் தேதியன்று நடைபெற்ற மறியல் போராட்டத்தில் இலட்சம் பேர் ஈடுபட்டு தமிழகமெங்கும் கைதாகினர். சிறைச் சாலைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. அவர்களைச் சிறையில் வைப்பதற்கு இடம் இல்லாத நிலையில் கைது செய்யப்பட்ட அனைவரும் அன்று இரவே விடுதலை செய்யப்பட்டனர்.

கழகத்தின் சார்பில் மதுரை மாநகரில் 30-7-1994 அன்று சமூக நீதி மாநாட்டினையும், 31-7-1994 அன்று அரசியல் மாநாட்டினையும் நடத்த முடிவெடுக்கப்பட்டு, 29 ஆம் தேதியன்று மாநாட்டினையொட்டி பேரணி ஒன்றை நடத்துவதென்றும், பேரணியின் முடிவில் சாதிக்பாட்சா நகரில், அன்பில் தர்மலிங்கம் அரங்கில், மன்னை நாராயணசாமி பந்தலில், புதுக்கோட்டை வீரையா முகப்பில் கொடியேற்றுவதென்றும் அறிவிக்கப்பட்டது. சமூக நீதி மாநாட்டிற்கு வீரபாண்டி ஆறுமுகம் தலைவராகவும், சுப்புலட்சுமி ஜெகதீசன் திறப்பாளராகவும், பரிதிஇளம்வழுதி கொடியேற்றுபவராகவும், அரசியல் மாநாட்டிற்குக் கோ.சி.மணி தலைவராகவும், எஸ்.பி. சற்குணம் திறப்பாளராகவும் அறிவிக்கப்பட்டார்கள். வரவேற்புக் குழுத் தலைவராகக் காவேரி மணியம், செயலாளர்களாக அக்கினிராசு, ஐ. பெரியசாமி, எல். மூக்கையா, நிதிக்குழுத் தலைவராக பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், மற்றும் பல்வேறு குழுத் தலைவர்களாகக் கழக முன்னணியினரும் நியமிக்கப்பட்டார்கள்.

ஜூலை மாத இறுதியில் மதுரை மண்டல மாநாட்டினையொட்டி நடைபெற்ற மாபெரும் பேரணியை நானும், பொதுச் செயலாளரும் மற்றும் கழக முன்னணியினரும் ஒரு மேடையில் ஒன்பது மணி நேரம் நின்றவாறே தொடர்ந்து பார்த்தோம். அந்த ஒன்பது மணி நேரமும் உட்காரலாம் என்ற எண்ணம் கூட வரவில்லை. அந்த அளவிற்கு அந்தப் பேரணி விடிய விடிய வந்து கொண்டே இருந்தது. மாநாட்டினையொட்டி நடைபெற்ற பொதுக் குழுவிலே

இட ஒதுக்கீடு குறித்தும், தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு தேவை என்பது குறித்தும், கல்வி நிலையங்களிலும் மண்டல் பரிந்துரை அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் மற்றும் பல முக்கியமான பிரச்சினைகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொதுக்குழுவிற்குப் பின் நடைபெற்ற செய்தியாளர்கள் பேட்டியின்போது, "மண்டல் கமிஷன் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட போது உச்சநீதி மன்றம்; கிரிமிலேயர் என்று ஒன்றை வைத்தும், கேரி பார்வர்டு முறையில் கைவைத்தும் ஒரு தீர்ப் பளித்தது. அதை தி.மு.க. ஒத்துக் கொள்ளவில்லை. எனவே உச்சநீதிமன்றத் தீர்ப்பையொட்டி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்; தாழ்த்தப்பட்டோருக்குப் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிப்பது ஐந்து வருடம் வரை இருக்கலாம், அதன்பின் கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறி யுள்ளது. எனவே பதவி உயர்வுகளிலும் தாழ்த்தப்பட்டோருக் கும், பிற்படுத்தப் பட்டோருக்கும் இடஒதுக்கீடு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று கூறினேன்.

முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களின் "மை பிரசிடென்ஷியல் இயர்ஸ்" என்ற புத்தகத் தில் காவேரி பிரச்சினை பற்றி எழுதும்போது 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம் மட்டுமே என்றும், 1974 ஆம் ஆண்டோடு அந்த ஒப்பந்தம் காலாவதி யாகிவிடும் என்றும் எழுதியிருந்தது பற்றி முன்னாள் நிதித்துறைச் செய லாளராக இருந்த திரு.குகன், ஐ.ஏ.எஸ். அவர்கள் 'இந்து' இதழில் மிகவும் கடுமையாக ஆர்.வி. அவர்களைக் கண் டித்து எழுதியிருந்தார். அதன் அடிப் படையில் நானும் திரு. ஆர்.வி. அவர் களின் அந்த வாதத்தைக் கண்டித்து ஒரு அறிக்கை விடுத்தேன். ஆர்.வி. அவர் களைக் கண்டித்து ஆகஸ்ட் 11ந்தேதி யன்று எல்லா நகரங்களிலும் கண்டன



ஆர். வெங்கட்ராமன்

ஊர்வலங்களை நடத்துமாறு பொதுச் செயலாளர் பேரா சிரியர் அறிக்கை விடுத்தார். வெங்கட்ராமன் செய்த தவறுக்கு தமிழ்நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று பா.ம.க. நிறுவனத் தலைவர் அறிக்கை விடுத்தார். ஆனால் அ.தி.மு.க., காங்கிரஸ் தரப்பிலிருந்து யாரும் ஆர்.வி. அவர்களின் செயலைக் கண்டிக்க முன்வரவில்லை. எதிர்ப்பு அதிகரித்த நிலையில் ஆர். வெங்கட் ராமன் அவர்கள் தனது தவறைத் திருத்திக் கொள்வதாகவும், அவரது நூலில் அதற் கான திருத்தம் செய்யப்பட்டு அடுத்த பிரதி வெளிவரும் என்றும் அறிக்கை விடுத்தார். அவரது அறிக்கையை வரவேற்று நானும் ஒரு அறிக்கை வெளியிட்டதோடு, கழகம் நடத்தவிருந்த பேரணியை நடத்தத் தேவையில்லை என்றும் கழக அமைப்புகளுக்கும் தெரிவித்துக் கொண்டேன்.

இதுபோலவே தேர்தல் கமிஷனராக இருந்த திரு. டி.என். சேஷன் அவர்கள் குறிப்பு கொடுத்து கோவிந்தன் குட்டி என்பவர் எழுதிய நூலில் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி சில விஷமமான கருத்துக்களை தி.மு. கழகம் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டமே அமெரிக்காவின் சி.ஐ.ஏ. தூண்டுதலால்தான் நடைபெற்றது என எழுதியிருந்த காரணத்தால் தமிழகமே வெகுண்டெழுந்தது.

15-10-1994 அன்று அண்ணா அறிவாலயத்தில் காலையில் கழகத்தின் தலைமைக் கழகச் செயலாளர்கள் கூட்டம் என் னுடைய தலைமையில் நடைபெற்றது. 17-10-94 அன்று சேஷனின் நூல் வெளியிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந் தது. அண்ணா அவர்களைப் பற்றிய தவறான கருத்துக்கள் அடங்கிய அந்தப் புத்தகத்தை வெளியிடக் கூடாது என்றும், மீறி அது வெளியிடப்படுமேயானால், அந்தநாள் தமிழ் மக்களுக்குக் கறுப்பு நாள் என்றும், அந்த நாளில் தமிழகம் முழுதும் கறுப்புக் கொடி ஏற்றப்பட வேண்டும் என்றும், தெருக்கள் தோறும் கறுப்புத் தோரணம் கட்டப்பட வேண்டும் என்றும், தமிழர்கள் அனைவரும் கறுப்புச் சின்னம் அணிந்திட வேண்டுமென்றும் தலைமைக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. தமிழ்

நாட்டில் உள்ள பல கட்சிகளின் தலைவர்களும் சேஷன் எழுதியிருந்த கருத்துக்குத் தங்களது கடும் எதிர்ப்பினை அறிக்கைகள் மூலமாக வெளியிட்டார்கள். அந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதாக ஒப்புதல் அளித் திருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான இந்திரஜித் குப்தா அவர்கள் தான் அந்த விழாவில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அந்தக் கட்சியின் தமிழகத் தலைவரான திரு. நல்லக்கண்ணு அவர்கள் மூலமாக எனக்குத் தெரிவித்தார். அவருக்கு என் சார்பிலும் கழகத்தின் சார்பிலும் உடனடியாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

மத்திய உள்துறை அமைச்சகத்தில் 1961 முதல் 1970 வரை மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.ராகவன் அவர்கள் 'இந்து' இதழில் எழுதிய ஒரு கட்டுரையில், இந்தி எதிர்ப்புப் போராட்டப் பிரச்சினையை தான் நேரில் கவனித்தவன் என்றும், அண்ணாவையும் நன்கு அறிந்தவன் என்றும், அண்ணா பற்றி சேஷன் எழுதிய கருத்துக்களில் கொஞ்சம் கூட உண்மை கிடையாதென்றும், வேண்டுமென்றே அந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளது என்றும் எழுதி யிருந்தார்.

அண்ணா அவர்களைப் பற்றிப் பொய்ப் புகார் கூறிய பகுதியை நீக்காமல் சேஷன் புத்தகத்தை வெளியிடவோ, விற்கவோ, மதிப்புரைக்கு வழங்கவோ, இலவசமாகத் தரவோ கூடாது என்றும், அந்தப் புத்தகத்திற்குத் தடை விதிக்க வேண்டுமென்றும் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் நானே ஒரு வழக்குத் தொடர்ந்தேன். அந்த வழக்கு 17-10-94 அன்று உயர்நீதிமன்ற நீதிபதி திரு.ஏ.ஆர்.லெட்சுமணன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. நீதிபதி வழங்கிய தீர்ப்பில், மேலெழுந்த வாரியாகப் பார்த்தாலே இந்த வழக்கில் உத்தரவு அளிக்க அடிப்படை இருக்கிறது. உத்தரவு கொடுக்காவிட்டால் இழப்பும் கஷ்டமும் ஏற்படும். இதே போன்றதொரு வழக்கில் நீதிபதி சீனிவாசன் இடைக்காலத் தடை விதித்திருக்கிறார். எனவே இந்த நீதிமன்றம் சேஷன்



டி. என். சேஷன்

புத்தகத்தை வெளியிடவோ, விற்கவோ, விமர்சனத்திற்காக வழங்கவோ, இலவசமாகத் தரவோ இடைக்காலத் தடை விதிக்கிறேன் என்று உத்தர விட்டார்.

18-10-94 அன்று திரு. டி.என். சேஷன் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவ ரான அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி நான் அவதூறாக நூலில் எழுதி யிருப்பதாகத் தமிழ்நாட்டு மக்களும் என்மீது அன்பு கொண்டவர்களும் அதிருப்திப்பட்டுள்ளது கண்டு நான் வேதனைப்படுகிறேன், வருத்தப்படுகிறேன். இது தொடர் பாகத் தலைவர் கருணாநிதி அவர்களும் மற்ற நண்பர்களும் கொடுத்த தந்திகளும் பெற்றேன். நான் கலெக்டராக இருந்தபொழுது நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பற்றிப் பலவாறாகப் பேசினார்கள் என்று சொன்னது மிகப் பெரிய விஷயமாக சி.ஐ.ஏ. உடன் அறிஞர் அண்ணாவுக்குத் தொடர்பு உள்ளதாக எழுதியது போலப் பத்திரிகைகளில் வேண்டுமென்றே தவ றாக வெளியாகி; பிரச்சினை பெரிதாகி விட்டது. சமீபத்தில் சென்னையில் பேசியபோதுகூட அண்ணாவின் அறிவையும், கண்ணியத்தையும், ஏல் பல்கலைக்கழகம் கொடுத்த மரியாதையையும் குறிப்பிட்டு, அவரைப் போன்ற உத்தமர்கள் நாட்டுக்குத் தேவை என்று குறிப்பிட்டது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. அப்படிப் பட்ட அண்ணாவைத் தரக் குறைவாக நான் எப்போதும் எண்ண மாட்டேன், பேசமாட் டேன். அண்ணாவைப் பற்றி அப்படியெல்லாம் சொன்னார்கள் என்றுள்ள பகுதி நூலிலேயே இருக்காது என்று எழுதியிருந்தார்.

46 தமிழ்மொழிக் காவலரும்- தமிழிசை பாவலரும் மறைவு!

94ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பன் தலைமையில் வந்த கும்பல் ஒன்று மேட்டுப்பாளையம் வனச்சரகம் சிறுமுகை கிராமத்தில் ஜீப்பில் வந்து கொண்டிருந்த போலீஸ் டி.எஸ்.பி. சிதம்பரநாதன், அவரது மைத்துனர் சேகர் ராஜ், தலைமைக் காவலர் ராஜகோபால் உட்பட ஏழு பேரை கடத்திச் சென்று விட்டது. மறுநாள் காலையில்தான் அதுபற்றிய செய்தியே கிடைத்தது. வீரப்பனைப் பிடிப்பதற்காக அப்போதும் தமிழக கூடுதல் டி.ஜி.பி.யாக இருந்த தேவாரம் தலைமையில் சிறப்புக் காவல் படையொன்று அமைக்கப்பட்டு அவனைத் தேடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது. கடத்திச் சென்ற வீரப்பன் கிராமவாசிகள் மூலம் கொடுத்தனுப்பிய கடிதத்தில் தங்களைத் தேடும் பணியில் போலீசார் தொடர்ந்து ஈடுபடக்கூடாது என்றும், அப்போது அங்கே யிருந்த போலீசார் அனைவரையும் வெளியேற்ற வேண்டு மென்றும், அவனது சகோதரர் மாதையனைப் போலீசார் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்றும் மூன்று கோரிக்கைகளைத் தெரிவித்ததோடு இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் கடத்தப்பட்டவர்கள் கொல்லப் படுவார்கள் என்றும் தெரிவித்திருந்தான்.

இதைத் தொடர்ந்து வீரப்பனைத் தேடிவரும் அதிரடிப் படையினர் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தி விட்டனர். வனக்காவல் துறையைச் சேர்ந்தவர்களும் யாரும் காட்டுக் குள் செல்லக் கூடாது என்று கூறப்பட்டனர். அப்போது

தலைமைச் செயலாளராக இருந்த அரிபாஸ்கர் செய்தியாளர் களிடம் கூறும்போது "வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டு செல்லும் போது, எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது, மற்றொன்று, சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களை யும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப்படையின் பணிகள் நிறுத்தப் பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்றுவிடக் கூடும். பேச்சுவார்த்தை முடிந்து, பேபி, வீரப்பன் மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

இதற்குப் பிறகு வீரப்பனின் தம்பி அர்ஜுனன் "நாங்கள் சரணடைய மாட்டோம், தண்டனை அனுபவிக்க மாட் டோம். எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து, ஜனாதிபதி எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்" என்று கூறியதாக ஏடுகளில் செய்திவந்தது. அதற்குப் பிறகு தலைமைச் செயலாளர் அரி பாஸ்கர், "ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது, இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம், போலீஸ் துணை சூப்பிரன்டென்டென்ட் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்" என்று தெரிவித்தார். மேலும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் காட்டிற்குள் வீரப்பனுக்காக எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருட்களை யாரும் தடுக்கக் கூடாதென்று அறிவித்தார்.


இறுதியாக டிசம்பர் 30ஆம் தேதியன்று அதிரடிப்படைத் தலைவராக இருந்த தேவாரம் செய்தியாளர்களைச் சந்தித்து, அதிரடிப்படையின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் வீரப்பனின் ஆட்கள் நான்கு பேர் பணயக் கைதிகளோடு

சரணடைந்து விட்டதாகவும், வீரப்பன் தப்பிச் கென்று விட்டதாகவும் கூறினார். இந்தச் செய்தியும் தேவாரம் நடுநாயகமாக அமர்ந்திருக்க கடத்தப்பட்டவர்கள் உடன் நிற்கும் புகைப்படமும் அனைத்து ஏடுகளிலும் வெளி வந்தது. ஆனால் அந்தச் செய்தியைத் தாங்கி வெளிவந்த ஏடுகளிலே மற்றொரு செய்தியும் வந்தது. "டி.எஸ்.பி. உள்ளிட்ட மூவரும் மீட்கப்பட்டார்களா? அல்லது தப்பி வந்தார்களா?" என்ற தலைப்புடன் அந்த மூவரும் தாங்களாகவே தப்பி வந்தார்கள் என்று போலீசாரில் ஒரு தரப்பினர் தெரிவித்த செய்தி வெளிவந்தது. அரசுத் தரப்பிலிருந்து இந்தச் செய்திக்கு எந்தவித மறுப்பும் வராததிலிருந்து எந்தச் செய்தி உண்மை என்பது மக்களுக்குத் தெளிவாகாத குழப்பமாகவே இருந்தது.

தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களுக்கும் முதல்வர் ஜெயலலிதாவிற்கும் இடையே நீடித்த தகராறு முற்றிப்போன நிலையில் டெல்லியில் 15-12-1994 அன்று ஒரு வேகமான கருத்தைக் கவர்னர் தெரிவித்தார். மத்திய அரசுக் குத் தைரியம் இருந்தால்தான் அளித்துள்ள அறிக்கைகள் அடிப்படையில் அ.தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்றும் தமிழகத்தில் நிலவும் சட்டம், ஒழுங்குச் சீர்குலைவுகள் பற்றியும், கல்வித் தரம் குறைந்து கொண்டே செல்வது பற்றியும் கலாச்சாரச் சீர்கேடுகள் குறித்தும் அவ்வப்போது மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியிருப்பதாக வும், மத்திய அரசு தமிழக அரசு மீது நடவடிக்கை எடுக்க அதுவே போதும் என்றும் செய்தியாளர்களிடம் ஆளுநர் சென்னா ரெட்டி தெரிவித்தார். இதற்குப் பதிலாக ஜெயலலிதா அளித்த ஒன்பது பக்க அறிக்கையில் ஆளுநர் முதல்வர் போல நடந்து கொள்கிறார் என்றும், அரசு ரகசியங் களை வெளியிடுகிறார் என்றும், சட்டப் பேரவையைக் கூட்டத் தாமதம் செய்கிறாரென்றும், அமைச்சரவை மாற்றங் களுக்கு முட்டுக்கட்டை போடுகிறாரென்றும், வீரப்பனுடன் பேச்சு வார்த்தை நடத்துவதைக் கண்டிக்கிறார் என்றும் அவரை உடனடியாக மாற்ற வேண்டுமென்றும் குடியரசுத்


தலைவரையும் பிரதமரையும் கேட்டுக் கொள்ளப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

இருவரிடையே நடைபெற்ற இந்தச் செயற்பாடுகள் குறித்து என்னிடம் கருத்து கேட்ட போது- ஓர் ஆளுநர் மாநில அரசின் நடவடிக்கைகள் குறித்து அந்த அரசுக்குச் சாதக மாகவோ பாதகமாகவோ மத்திய அரசிடம் அறிக்கை கொடுக்கலாம். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டு நடை பெறும் ஓர் ஆட்சியை, அந்த ஆட்சி நடைபெறும் மாநிலத்தில் உள்ள ஆளுநர் வெளிப்படையாகக் கடுமை யாக விமர்சித்து, மத்திய அரசுக்குத் துணிவிருந்தால் இந்த மாநில ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்கிற அளவுக்கு டெல்லியில் கூறி யிருப்பது சரியா என்கிற கேள்வி எழாமல் இல்லை. என்ன தான் அவரது பொறுமை சோதிக்கப்பட்ட போதிலும், அவர் அப்படி பேசியிருக்கத் தேவையில்லை என்று கருதுகிற காரணத்தினால் ஆளுநர் குறிப்பிட்டுள்ள குற்றம் குறைகள், ஊழல்கள், முறைகேடுகள், சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் ஜெயலலிதா ஆட்சியில் இல்லை என்று எவராலும் சொல்லி விட முடியாது- என்று கூறினேன்.



சி. எஸ். ஜெயராம்

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், சிக்கிம், கோவா மாநிலங் களுக்கான பொதுத் தேர்தல் 94ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்றது. ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சி மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. மூன்றாவது முறையாக அருமை சகோதரர் என்.டி. ராமராவ் அங்கே முதல்வராகப் பொறுப்பேற்றார். கர்நாடகாவில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த இந்திரா காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோற்று ஜனதா தளம் வெற்றிபெற்று, தேவகவுடா முதல்வராகப் பொறுப் பேற்றார். சிக்கிம் மாநிலத் தேர்தலில் சிக்கிம் ஜனநாயக



என். டி. ராமராவ்

முன்னணி மொத்தம் 32 இடங்களில் 19 இடங்களில் வெற்றி பெற்றது. அது வரை அங்கே ஆட்சியில் இருந்து வந்த இந்திரா காங்கிரஸ் இரண்டு இடங்களை மட்டுமே கைப்பற்றியது. சிக்கிம் காங்கிரஸ் கட்சி பத்து இடங்களைப் பெற்று எதிர்க்கட்சியானது. கோவாவில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதுவரை ஆளுங்கட்சியாக அங்கேயிருந்த இந்திரா காங்கிரஸ் 17 இடங்களிலும், மகாராஷ்டிரவாடி கோமந்தக் கட்சி 12 இடங்களிலும், ஐக்கிய கோவா ஜன நாயகக் கட்சிக்கு 3 இடங்களும், பா.ஜ.க.விற்கு 4 இடங்களும், சுயேச்சைகள் 3 இடங்களிலும் வெற்றிபெற்றனர்.

தமிழ் ஆர்வலர்களின் நெஞ்சங்களில் எல்லாம் நீங்கா இடம் பெற்றிருந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 19-12-94 அன்று தனது 95ஆம் வயதில் இயற்கை அடைந்தார். சென்னையில் டாக்டர் ரங்கபாஷ்யம் 'ரமணா' மருத்துவமனையில் கி.ஆ.பெ. அவர்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த கடைசி நேரத்தின்போது அவர் குடும்பத்தார் புடைசூழ அவர் அருகில் நின்ற என்னை அழைத்து என் கரம்பிடித்து தமிழையும் தமிழ்நாட்டையும் காப்பாற்றுங்கள் என்று சொன்னது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் மறைவு குறித்து நான் விடுத்த இரங்கல் செய்தியில் "தமிழ் மலை ஒன்று சாய்ந்தது; நிலை குலைந்தது உலகத் தமிழ் நெஞ்சம்! பேச்செல்லாம் மூச்செல்லாம் தமிழுக்கே என்று வாழ்ந்தவர் - இயங்குவதும் எழுதுவதும் தமிழர் ஏற்றத்திற்கே என்று இருந்தவர் - பிறமொழி ஆதிக்கத்தை எதிர்க்கும் போர்வாளாய்ச் சுழன்றவர்- பழகுவதற்கு இனியவராய், பண்பாட்டில் இமயம் நிகர்த்தவராய் - பரந்த மனப்பான்மையில் குமரி முனையில் கூடும் முக்கடலாய்த் தமிழ் நிலத்திற்கென்று வாய்த்தவர் - ஐம்பது ஆண்டுகட்கு முன்பு இளங்காளைப் பருவத்தினராய் இருந்த எம்போன்ற இளைஞர்களைத் தட்டியெழுப்பிய

ஏந்தல்- அருமை அண்ணன் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தார் எனினும் இன்னும் பல்லாண்டு அவர் இருந்து, தமிழையும் தமிழரையும் காத்திடும் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந் திருக்க வேண்டிய வாய்ப்பினை இழந்தோமே என்று எண்ணித் துடித்துப் போகிறேன். அந்தத் தமிழ் மாமேதை மறைந்து விடவில்லை. மறைய மாட்டார். தமிழர்களின் நெஞ்சில் என்றும் நிறைந்துள்ளார்."

இலங்கைத் தலைநகர் கொழும்பில் 23-10-1994 அன்று இரவு நடந்த எதிர்க்கட்சிப் பொதுக்கூட்டத்தில் குண்டு வெடித்து 60 பேர் இறந்தனர். இலங்கை அதிபர் தேர்தலில் பிரதமர் சந்திரிகாவை எதிர்த்துப் போட்டியிட்ட காமினி திசநாயகா அவர்களும் வடமேற்கு மாகாண முதல் மந்திரி பிரேம் சந்திரா ஆகியோரும் இதிலே பலியானார்கள். நவம்பர் 9ஆம் தேதியன்று நடைபெறவிருந்த தேர்தல் ஆளும் மக்கள் கூட்டணி யின் சார்பில் இலங்கை சுதந்திரா கட்சியின் தலைவரும் பிரதமருமான திருமதி சந்திரிகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் காமினி திசநாயகா போட்டியிட் டார். கொழும்பு நகரில் கேனா என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தலைவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது நடைபெற்ற குண்டுவெடிப்பில் இந்த வன்முறைச் சம்பவம் நடைபெற்றது. போலீசார் நடத்திய தீவிர விசாரணையில் மனித வெடிகுண்டாக வந்தது ஒரு பெண் என்று கண்டுபிடிக்கப் பட்டது.

நவம்பர் 9ஆம் தேதி இலங்கை அதிபர் தேர்தல் நடை பெற்றது. பத்தாயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு ஒரு கோடியே 90 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்தனர். ஆயிரம் இடங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. பிரதமர் சந்திரிகா சுமார் இருபது லட்சம் வாக்குகள் வித்தி யாசத்தில் இலங்கையின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 12-11-1994 அன்று பதவியேற்றார். அதிபர் பதவியேற்பதற்காக பிரதமர் பதவியிலிருந்து விலகிய சந்திரிகா தனது தாயாரான

திருமதி பண்டாரநாயக் அவர்களைப் பிரதமர் பதவிக்குத் தேர்ந்தெடுத்து தானே அவருக்குப் பதவிப் பிரமாணத்தையும் செய்து வைத்தார்.

அ.தி.மு.க.விற்கும் இந்திரா காங்கிரசிற்கும் இடையே இருந்த உறவு 1993ஆம் ஆண்டு முறிந்ததற்குப் பிறகும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆறு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அ.தி.மு.க. விற்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக இந்திரா காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்த பேராவூர்ணி சிங்காரம், கோவை செல்வராஜ், அப்பு நடேசன், ஜீனத் சர்புதீன், சின்னப்பன், சஞ்சய் ராமசாமி ஆகியோர் இந்திரா காங்கிரசிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, பேரவைத் தலைவருக்கும் அந்தக் கட்சியின் சார்பில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் கடிதம் எழுதினார். தங்களைக் கட்சியிலிருந்து நீக்க அகில இந்திய தலைவருக்குத்தான் அதிகாரம் உண்டு என்று அந்த உறுப்பினர்கள் கூறியதன் பேரில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த ஜனார்த்தன பூசாரி அவர்களே அது குறித்து கடிதம் எழுதினார்.

சாலை விபத்து ஒன்றில் படுகாயம் அடைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் கியானி ஜைல்சிங் அவர்கள் சண்டிகர் மருத்துவமனையில் 27 நாட்கள் சிகிச்சைக்குப் பிறகும் தேறாமல் 25-12-1994 அன்று காலமானார். 1982இல் குடியரசுத் தலைவராகி, அவர் அந்தப் பதவி வகித்த போதுதான் அமிருத சரஸ் பொற்கோவிலில் தங்கியிருந்த பயங்கரவாதிகளை ராணுவத்தினரைக் கொண்டு வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது சீக்கியத் தீவிரவாதிகளிடையே வெறியை ஏற்படுத்தியது. அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி, ஜைல் சிங் ஆகியோரை தங்களுடைய கொலைப் பட்டியலிலேயே தீவிரவாதிகள் வைத்திருந்தனர். இந்திரா காந்தி படுகொலைக்குப் பிறகு ராஜீவ் காந்திக்கு இவர்தான் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அப்போது டெல்லியில் பயங்கரமான மதக் கலவரம் ஏற்பட்டது.

ஏராளமான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பிறகு ஜைல்சிங்குக்கும் ராஜீவ் காந்திக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நல்ல உயரமும் அதற்கேற்ற கம்பீரமும் சாந்தமான முகமும் கொண்டு ஜைல்சிங் என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர்.

குடியான குடும்பத்திலே பிறந்து குடியரசுத் தலைவராகவும் ஆக முடியும் என்பதை உலகத்திற்கு உணர்த்திய ஜைல்சிங் மறைவு நாட்டிற்கும், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கும் ஏற்பட்ட பெரும் இழப்பு என்பதை என்னுடைய இரங்கல் செய்தியிலே தெரிவித்திருந்தேன்.


ஜெயலலிதா பதவிக்கு வரும்போதெல்லாம் அதற்கு முந்தைய ஆட்சியினர் பற்றாக்குறையை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள், அரசு நிதி நெருக்கடியில் மூழ்கியுள்ளது என்று சொல்லத் தவறுவதே இல்லை. அப்படியேதான் 91ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற பிறகு, வடசென்னை அனல் மின்நிலைய விழாவில் உரையாற்றும்போது ஜெயலலிதா "நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது எங்களுக்கு முன்னால் ஆட்சி செய்தவர்கள் விட்டுச்சென்ற கடன் சுமைகளும் நிதிப் பற்றாக்குறையும் எங்களுக்கு ஒரு சவாலாக இருந்தது" என்றார். திரைப்பட விழா ஒன்றில் பேசும் போது 1200 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டுடன் கழக ஆட்சி இவரைச் சிக்கலில் மாட்டி விட்டதாக முதலிலே குறிப்பிட்ட ஜெய்லலிதா தன் பேச்சின் இறுதி பகுதியிலே "கலைஞர் உபரி பட்ஜெட்டை வைத்தே ஆட்சி நடத்தினார். அண்ணா, எம்.ஜி.ஆர்., காமராஜ், ராஜாஜி, பக்தவத்சலம் ஆகியோரும் உபரி பட்ஜெட்டில்தான் ஆட்சி நடத்தினார்கள்" என்று முன்னுக்குப் பின் முரணாகப் பேசினார். 1991-92ஆம் ஆண்டு வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை 577 கோடி ரூபாய் என்றும், 90-91ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி முடிவான பற்றாக்குறை 208 கோடி ரூபாய் என்றும், அதையும் சேர்த்து 91-92இல் மொத்தப் பற்றாக் குறை 785 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் குறிப் பிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி 1200 கோடி ரூபாய் பற்றாக்

குறையை நாங்கள் வைத்து விட்டுச் சென்றோம் என்பது எவ்வளவு பெரிய பொய் என்பதையும், ஜெயலலிதா மேலும் குறிப்பிட்டதைப் போல தமிழகத்தின் மற்ற முதலமைச்சர் கள் எல்லாம் உபரி பட்ஜெட்டைக் கொண்டு ஆட்சி நடத் தினார்கள் என்பதும் தவறான தகவல் என்பதையும் ஆதார பூர்வமாக விளக்கிக் காட்டினேன். அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை வழக்கம் போல அப்படியே விட்டுவிட்டார்.


சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள காவல்துறை தலைவர் அலுவலகத்தை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாடு ஜெயலலிதா ஆட்சியிலே 1995இல் தொடங்கப் பட்டது. பாரம்பரியமிக்க புராதனக் கட்டிடமான அதை இடிக்கக் கூடாது என்று கோரி கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கான இந்திய அறக்கட்டளையின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, அந்தக் கட்டிடத்தை இடிப்பதற்குத் தடை உத்தரவைப் பெற்றனர். அதற்குப் பிறகு 1996இல் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு அந்தக் கட்டிடத்தை இடிக்கும் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, அந்த பாரம்பரியம் மிக்க பழைய கட்டிடத்தையே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து தற்போது தொடர்ந்து அங்கே காவல்துறை தலைமை அலுவலகம் செயல்பட்டு வருகின்றது.

1995ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பொங்கல் திருநாளை முன்னிட்டு சன் தொலைக்காட்சி சார்பில் "கணக்கு" என்ற தலைப்பில் என்னுடைய தலைமையில் நடைபெற்ற கவியரங்கிலே கலந்து கொண்டேன். கவிஞர்கள் ஈரோடு தமிழன்பன், நா. காமராஜன், கவியரசு வைரமுத்து, கவிக்கோ அப்துல் ரகுமான் ஆகியோரும் அதிலே கலந்து கொண்டனர்.

அத்திங்கள் இறுதியில் என்னுடைய அருமை மைத்துனரும், சின்னஞ்சிறு



கி. ஆ. பெ. விஸ்வநாதம்



கியானி ஜைல்சிங்

வயதிலேயே இசை உலகிலும், கலை யுலகிலும் கொடிகட்டிப் பறந்தவரும், கிட்டப்பா அவதார சங்கீத இளஞ் சிங்கம், சிதம்பரம் சிங்கக் குட்டி ஜெயராம் என்று தமிழகம் முழுதும் பாராட்டப் பெற்றவரும், தமிழ்ப் பாடல்களை எழுத்துச் சுத்தமாக உச்சரித்து அந்தப் பாடல்களுக்கு உயிர் கொடுத்து, கேட்போர் உள்ளத் தைக் கவரும் தனி ஆற்றல் பெற்ற தமிழ் இசைப் பாவலரும், தமிழிசை இயக்கத்தை வளர்த்த பெருந்தகைகளில் ஒருவரும், அண்ணா அவர்களின் அன்பினைப் பெற்று அவரால் சீராட்டிப் புகழப்பட்டவரும், திரைப்படங்களில், இசை மேடைகளில் தனது குரலுக்கென பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைப் பெற்றிருந்தவருமான இசைச்சித்தர் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் இயற்கை எய்தினார். அவரது மறைவு என் உள்ளத்தில் எத்தனையோ நினைவுகளையெல்லாம் அடுக்கடுக்காக எழுப்பியது. என்னை நானே தேற்றிக் கொண்டு எங்களுடைய குடும்பத் தாருக்கும் ஆறுதல் கூறினேன். நான், பொதுச்செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி மற்றும் கழகத் தோழர்கள் என்னுடைய குடும்பத்தினர் அனைவரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினோம்.

47 தமிழ் மாநாடும் தன்மானம் பறிப்பும்

1995ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் தஞ்சை மாநகரில் அ.தி.மு.க. ஆட்சியினர் உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால் நடத்தப்பட்ட மாநாடு இருக்கிறதே அதைப்பற்றிக் கூற வேண்டுமென்றால் தனியாக ஒரு நூலே எழுதப்பட வேண்டும்.

தஞ்சை மாநாட்டிற்கு பிரதமரும், குடியரசுத் தலைவரும் வருவதால் ஜெயலலிதாவின் ஆதாரபூர்வமான ஊழல் களுக்கு அங்கீகாரம் அளிப்பதாக ஆகிவிடும் என்றும், எனவே பிரதமரும் குடியரசுத் தலைவரும் தங்களின் வருகை பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அனைத்துக் கட்சிகள் கூடித் தீர்மானம் நிறைவேற்றி அந்தச் செய்தி ஏடுகளில் வெளிவந்திருந்தது. அந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணு, ஜனதா தளப் பொதுச் செயலாளர் டேவிட், தி.மு.கழகப் பொருளா ளர் ஆர்க்காடு வீராசாமி, இந்திய தேசிய லீக் பொதுச் செயலாளர் அப்துல் லத்தீப் மற்றும் பா.ம.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

மாநாட்டின் துவக்க நாளில், தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும், தமிழ் அறிஞர்களைப் புறக்கணித்து விட்டு உலகத் தமிழ் மாநாடு நடத்தக் கூடாது, உலகில் உள்ள பல தமிழ் அறிஞர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை, ஆளுங்கட்சிக்கு ஆதரவான அரசியல் கட்சி மாநாடு போல

நடத்தப்படுகிறது என்றெல்லாம் சுட்டிக்காட்டி பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன், தமிழறிஞர் பெருஞ்சித்திர னார் உள்ளிட்ட 200க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் தஞ்சையில் உண்ணாவிரதம் இருக்க முயற்சித்தபோது, ஜெயலலிதாவின் போலீசார் அவர்கள் மீது தடியடி நடத்தி கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தமிழறிஞர்கள் தஞ்சையில் கைது செய்யப்பட்டதைக் கழகத்தின் சார்பில் நான் வன்மையாகக் கண்டித்ததோடு, உடனடியாக அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த வாழப் பாடி ராமமூர்த்தி விடுத்த அறிக்கையில், முதலமைச்சர் ஜெயலலிதாவால் காங்கிரசார் அவமானப்படுத்தப்பட்டிருக் கிறார்கள் என்றும், ஆகவே பிரதமர் நரசிம்மராவ் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவிலே கலந்து கொள்ளக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டார்.

எல்லா தமிழ் மாநாடுகளுக்கும் அழைக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அறிஞர்கள் அந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட வில்லை. அது தவிர, அழைக்கப்பட்ட வெளிநாட்டுத் தமிழறி ஞர்கள் சிலர், குறிப்பாக இலங்கைத் தமிழறிஞர்கள் அவ மானப்படுத்தப் பட்டார்கள். இலங்கைத் தமிழ் எழுத்தாள ரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி மாநாட் டில் கலந்துகொள்ள முடியாமல் திருப்பியனுப்பப்பட்டார். தமிழ்க் கவிதை பற்றி இலக்கியமயப்படுத்தப்பட்ட நோக்கு களும், தமிழ் இலக்கியத்தின் உள்ளார்ந்த படைப்பாற்றல் நெகிழ்வுணர்வும் என்ற ஆய்வுக் கட்டுரையை அவர் படிப்ப தாக இருந்தது. ஆனால் அவர் கட்டுரை படிக்க முடிய வில்லை.

அதைப்போலவே பீட்டர்ஸ் சால்க் என்ற சுவீடன் நாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் மாநாட்டில் கலந்துகொள்ள முடியாமல் திருப்பி அனுப்பப்பட்டார்.

ஜப்பான் பேராசிரியர் சண்முகதாசனும் மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படவில்லை. சுவீடன் நாட்டு உபசாலா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வேலுப் பிள்ளையும் திருப்பி அனுப்பப்பட்டார். இந்தத் தமிழறிஞர் களை எல்லாம் அழைத்துவிட்டு, விளம்பரங்களில் அவர்களின் பெயர்களையும் வெளியிட்டுவிட்டு, அவர்களது ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டுச் செலவில் அச்சியற்றப் பட்டு, நிகழ்ச்சி நிரலிலும் அவர்கள் பெயர்கள் இடம் பெற்றபிறகு அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த இடங்களில் இருந்து போலீசாரால் வெளியேற்றப்பட்டனர்.


அந்த மாநாட்டினைப் பற்றி அப்போது தினமணி, எக்ஸ்பிரஸ் ஏடுகள் எழுதும்போது, எட்டாவது உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரில் ஜெயலலிதா அரசு தனது விளம்பர வெளிச்சத்திற்காக அரசுப் பணத்தை முறைகேடாகச் செலவு செய்து தஞ்சையில் அ.தி.மு.க. கட்சி மாநாடாகவே நடத்தி வருகிறது. தஞ்சைக்குச் செல்பவர்கள் அ.தி.மு.க. வண்ணத்தைப் பார்க்காமல் தப்பித்து விட முடியாது, அரசு செலவில் நடைபெறும் மாநாடு என்று சொல்லப்பட்டாலுங்கூட எங்கு பார்த்தாலும் எதில் பார்த்தாலும் அ.தி.மு.க. கட்சிக் குரிய வண்ணங்கள்தான் காட்சி தருகின்றன. மாநாட்டிற் கென அமைக்கப்பட்டுள்ள தொண்டர் படையில் இடம் பெற்றிருப்பவர்கள் எல்லோருமே அ.தி.மு.க.வினர். பெண்கள் அ.தி.மு.க. வண்ணம் தாங்கிய சேலைகளையும், ஆண்கள் ஜெயலலிதா படம், அவர்கள் கட்சிச் சின்னம் பொறிக்கப் பட்ட பனியன்களையும் அணிந்துகொண்டு கைகளில் பெரிய பெரிய தடிகளுடன் நகர்வலம் வருகிறார்கள். நடைபெறும் சம்பவங்களையும், கேலிக் கூத்துகளையும் பார்க்கும்போது நடைபெறுவது உலகத்தமிழ் மாநாடு அல்ல, அ.தி.மு.க. மாநாடுதான் என்பது தெள்ளத்தெளிவாகிறது என்று எழுதியிருந்தது.

பல்கலைக்கழகத்தின் சார்பில்தான் அந்த மாநாடு நடத்தப் பட்டது என்றபோதிலும், பல்கலைக்கழகத்தின் வேந்தரான திரு. சென்னாரெட்டி அவர்கள் அந்த மாநாட்டிற்கு

அழைக்கப்படவே இல்லை. அவருக்கே தபால் மூலம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டதுதான்.

மாநாட்டையொட்டி தமிழ்த்தாய் என்றும், நாராயணி என்றும், ஆதி பராசக்தி என்றும், தமிழ் மகளைப் பெற்றெடுத்த தாய் என்றும், வேதங்களுக்கு இணையான பாதங்களைப் பெற்ற தேவமாதா என்றும் ஜெயலலிதாவைப் புகழ்ந்து எழுதப்பட்ட ஒரு பக்க விளம்பரங்கள் பத்திரிகைகளில் வந்தது போதாதென்று ஜெயலலிதா படத்துடன் கூடிய இந்த வாசகங்கள் எழுதப்பட்ட வண்ண வண்ணமான பேனர் தட்டிகள் மட்டும் பத்தாயிரத்திற்கு மேல் வைக்கப்பட்டிருந்தன. முதல் நாள் ஊர்வலத்தில் மாணவிகள் கும்மிப் பாட்டிலும், கோலாட்டப்பாட்டிலும் ஜெயலலிதாவின் புகழே இசைக்கப்பட்டன. உலகத் தமிழ் மாநாட்டின் இதயம் போன்ற ஆராய்ச்சி கருத்தரங்கு நடைபெற்ற ஐந்து நாட்களில் ஒரு நாள் கூட அந்தப் பக்கம் முதலமைச்சர் ஜெயலலிதா தலைகாட்டவில்லை.

இன்றைய குடியரசுத் தலைவரும், அப்போதைய குடியரசுத் துணைத் தலைவருமான கே.ஆர். நாராயணன் அந்த மாநாட்டிலே குத்துவிளக்கினை ஏற்றி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் மேடையிலே எந்தக் குத்து விளக்கும் கிடையாது. குத்துவிளக்கை ஏற்றுவதற்காக எழுந்து நின்ற குடியரசுத் துணைத் தலைவர் நின்று நின்று பார்த்து விட்டு பின்னர் அமர்ந்து விட்டார். அடுத்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் போது ஒரு அதிகாரி பக்கத்திலே உள்ள ஏதோவொரு வீட்டிற்குச் சென்று அவர்கள் வீட்டிலேயிருந்த ஒரு சிறிய குத்து விளக்கினைக் கொண்டு வர அதனை கே.ஆர். நாராயணன் ஏற்றி வைத்தார்.



கே. ஆர். நாராயணன்

1995ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இறுதியில் சென்னை மத்திய சிறையிலிருந்து 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்த ஒன்பது விடுதலைப் புலிகள்

மர்மமான முறையிலே தப்பிச் சென்றனர். தப்பிச் சென்றவர் களில் இரண்டு பேர் கும்முடிப்பூண்டி அருகே பிடிபட்டு விட்டதாகவும், ஒருவர் சயனைடு அருந்தி தற்கொலை செய்துவிட்டதாகவும், மற்ற ஆறு பேர் தப்பிச் சென்று விட்டதாகவும் போலீசார் தெரிவித்தனர். தடா கைதிகள் தப்பிச் சென்றதால் ஆத்திரமடைந்த சிறை அதிகாரிகள் சிறையிலிருக்கும் மற்ற தடா கைதிகள் மீது காட்டி கடுமை யாகத் தாக்கினர். இதன் காரணமாக பலத்த காயமடைந்த பலர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டனர்.

ஜெயலலிதா ஆட்சியிலிருந்த அந்தக் காலத்தில் சிறையி லிருந்து கைதிகள் தப்பிச் செல்வதென்பது தொடர்கதை யாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் மட்டும் அந்தக் காலகட்டத்தில் 33 பேர் சிறையிலிருந்து தப்பிச் சென்றனர். அதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் திரும்பப் பிடிபட வில்லை. சேலம் சிறையிலிருந்து சிவன் என்பவர் 27-5-1992 அன்றும், அதே ஆண்டு நவம்பரில் மதுரை மேலூர் சிறையிலிருந்து யோகராஜ், சந்திரன் என்ற இருவரும் தப்பிச் சென்றனர். அதே நவம்பர் திங்களில் வேலூர் கோட்டைக்குள் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளில் 19 பேர் தாங்கள் தங்கியிருந்த அறையிலிருந்து சுரங்கப் பாதை தோண்டி நள்ளிரவில் தப்பிச் சென்றனர். அவர்களில் 8 பேர் பிறகு பிடிபடவே இல்லை. 8-4-1993 அன்று சேலம் சிறையிலிருந்து சக்திவேல் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முக்கியமானவர் தப்பிச் சென் றார். சைதாப்பேட்டை கிளை சிறைச் சாலையில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்தவர்களும் அவர்களது குடும்பத் தினருமாக 18 பேர் காவலில் வைக்கப் பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாட்சி களாவர். அதில் முக்கிய சாட்சியான சார்லஸ் 19-5-1993 அன்று சிறையி லிருந்து தப்பிச் சென்றார். சென்னை மத்திய சிறையிலிருந்து புதுக்கோட்டை



சென்னா ரெட்டி

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக கிருபன் உள்ளிட்ட நான்கு விடுதலைப் புலிகளை போலீசார் வேனில் அழைத்துச் சென்றபோது மாமண்டூர் அருகே ஓட்டலில் உணவு அருந்த நின்றபோது விடுதலைப்புலிகள் துப்பாக்கிகளோடு அங்கே வந்து அவர்களை விடுவித்துச் சென்றனர். விக்டர் என்ற ஒரு விடுதலைப்புலி மட்டும் தப்பவில்லை. கிருபன் உள்ளிட்ட 3 பேர் தப்பிச் சென்றனர். 29-4-93 அன்று இந்தச் சம்பவம் நடைபெற்றது.

95ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஜெயலலிதாவை அன்னை மேரியாகச் சித்தரித்து கட்-அவுட்களை வைத்ததின் காரண மாக கிறித்தவ சமுதாயத்தினர் ஜெயலலிதாவிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். அன்னை மேரியை அவமதிக்கும் வகையில் கட் அவுட் மற்றும் சுவரொட்டிகளை வைத்தமைக் காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று ஐக்கிய கிறித்தவப் பேரவையின் தலைவரான மதுரை கத்தோலிக்க கிறித்தவப் பேராயர் ஆரோக்கியசாமி அவர்கள் ஜெயலலிதாவிற்குத் தந்தி அனுப்பினார். ஜெயலலிதாவின் பிறந்தநாளையொட்டி வைக்கப்பட்ட இந்த கட் அவுட்களுக் கும், சுவரொட்டிகளுக்கும் எதிராகக் கிறித்தவ சமுதாயமே கொந்தளித்தது. பல நிறுவனங்களின் சார்பில் கண்டன அறிக்கைகள் விடப்பட்டன. தமிழகம் முழுவதிலும் ஆங்காங்கு ஆர்ப்பாட்டங்கள் கிறித்தவர்கள் சார்பில் நடை பெற்றன. ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் சிலர் வெளி யிட்ட அறிக்கைகள் நிலைமையை சுமுகமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக அவர்களை மேலும் ஆத்திரமடையச் செய்தது. அதுகுறித்து மதுரைப் பேராயர் ஆரோக்கியசாமி விடுத்த அறிக்கையில் அன்னை மேரியாக ஜெயலலிதாவைச் சித்தரித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது கிறித்தவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆங்காங்கே போராட்டம் நடத்தினார்கள். ஆனால் முதல் அமைச்சர் ஜெயலலிதா இது தொடர்பாக வருத்தம் தெரிவிக்கவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரச்சினை தொடர்பாக முதல் அமைச்சர் வெளியிட்டிருந்த அறிக்கை எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. இந்நிலையில்

ஒரு சிலர் வேண்டாத அறிக்கைகளை வெளியிட்டு கிறித்தவர்களின் மனங்களைப் புண்படுத்தி வருகின்றனர். இந்தப்பிரச்சினை தொடர்பாக முதல் அமைச்சர் ஜெய லலிதாவும், அமைச்சர் லாரன்சும் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும், சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்காக அ.தி.மு.க.வைச் சேர்ந்த சிலர் பேராயரின் இல்லத்திற்குச் சென்று மிரட்டினர். கடலூரில் கிறித்தவர்கள் கூட்டிய மாநாட்டில் நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றுக்கு முன் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தனர். இந்தப் பிரச்சினைக்கு ஜெயலலிதா உடனடியாகத் தீர்வு காணாவிட்டால் கிறித்தவர்களுடன் சேர்ந்து இஸ்லாமியர் களும் போராடுவார்கள் என்று இந்திய தேசிய லீக் பொதுச் செயலாளர் அப்துல் லத்தீப் அறிவித்தார். 26-3-1995 அன்று கன்னிமேரியாக ஜெயலலிதா சித்தரிக்கப்பட்டதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் கிறித்தவ தேவாலயங்களில் பரிகார திருப்பலி நடத்தப்பட்டது.

1995ஆம் ஆண்டு பிப்ரவரியில் மணிப்பூர் சட்டசபைக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றபோதிலும் எந்தக் கட்சியிலும் ஆட்சி அமைக்கும் அளவிற்குப் பெரும்பான்மை பெறாத நிலை ஏற்பட்டது. மொத்தம் 60 உறுப்பினர்களில் இந்திரா காங்கிரஸ் 21 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று அதிக இடங்களைப் பெற்ற தனிக் கட்சியாக விளங்கியது. மணிப்பூர் மக்கள் கட்சி 18 இடங்களைப்பெற்றது. இந்தக் கட்சியின் தலைவர் ரண்பீர் சிங் தலைமையில் ஆறு கட்சிகளைச் சேர்ந்த எதிர்க்கட்சிக் கூட்டணி தலைவர்கள் ஆளுநரைச் சந்தித்து, தங்கள் கூட்டணிக்கு 32 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும், தங்களை அமைச்சரவை அமைக்க அனு மதிக்கும்படியும் கோரிக்கை வைத்தனர். அந்தக் கூட்டணி யிலே மணிப்பூர் மக்கள் கட்சி, ஜனதாதளம், சமதா கட்சி, என்.பி.பி., எப்.பி.எம்., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை அடங்கும். இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்ட மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கெய்சிங் ஆளுநரைச் சந்தித்து தனக்கு 31 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும்

அமைச்சரவை அமைக்க தன்னை அழைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஆளுநராக அங்கே அப்போதிருந்த ஸ்ரீவஸ்தவா எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்து, தனிப்பெரும் கட்சி என்ற முறையில் அமைச்சரவை அமைக்க இந்திரா காங்கிர சுக்கு அழைப்பு விடுத்தார். ஒரு மாதத்திற்குள் தங்களது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டவேண்டுமென்றும் நிபந்தனை விதித்தார். அந்த வகையில் மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் கெய்சிங் தலைமையிலே இந்திரா காங்கிரஸ் பதவியேற்றது.

மணிப்பூரைத் தொடர்ந்து 288 தொகுதிகளைக் கொண்ட மகாராஷ்டிர மாநிலத்தில் பிப்ரவரி 9 மற்றும் 12ஆம் தேதிகளிலும், 182 தொகுதிகளைக் கொண்ட குஜராத் மாநிலத்தில் பிப்ரவரி 20 மற்றும் 25ஆம் தேதிகளிலும், 147 தொகுதிகளைக் கொண்ட ஒரிசா மாநிலத்தில் மார்ச் 7 மற்றும் 9ஆம் தேதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த மூன்று மாநிலங்களிலும் வாக்கு எண்ணிக்கை மார்ச் 11ந்தேதியன்று நடந்தது. பீகார் மாநிலத்தில் தேர்தல் கலவரம் காரணமாகப் பலமுறை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு பிறகு அங்கேயும் வாக்குப்பதிவு வன்முறைக்கிடையே நடை பெற்றது.

குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க. வெற்றி பெற்று இந்திரா காங்கிரஸ் தோல்வி அடைந்தது. சரத்பவார் தலைமையில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற மராட்டியத்திலும் இந்திரா காங்கிரஸ் தோல்வியடைந்தது. பா.ஜ.க.வும் சிவ சேனாவும் இந்த மாநிலத்தில் அமைத்த கூட்டணி பெரும் வெற்றியைப் பெற் றது. சரத்பவார் தோல்வியை ஏற்பதாக அறிவித்தார். பிஜு பட் நாயக் தலைமை யில் ஜனதாதள ஆட்சி நடைபெற்ற ஒரி சாவில் ஆளுங்கட்சி தோல்வியடைந்து இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றி



சரத்பவார்

பெற்றது. குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க.வைச் சேர்ந்த கேசுபாய் படேல் அவர்களும், மராட்டிய மாநிலத்தில் சிவசேனாவைச் சேர்ந்த மனோகர் ஜோஷி அவர்களும், ஒரிசா மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் சார்பில் ஜே.பி. பட்நாயக் அவர்களும் முதல் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். வன்முறைக்கிடையே தேர்தல் நடைபெற்ற பீகாரில் ஜனதாதளக் கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் லல்லு பிரசாத் யாதவ் அவர்களே முதலமைச்சராக ஆனார்.

தடா சட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டுமென்ற கோரிக்கையுடன் பாட்டாளி மக்கள் கட்சியினர் 17-3-95 அன்று வள்ளுவர் கோட்டத்திலிருந்து பேரணியும், சாஸ்திரி பவன் முன் ஆர்ப்பாட்டமும் செய்யப் போவதாக அறிவித்திருந்தனர். ஆனால் அவர்கள் வள்ளுவர் கோட்டத்திலிருந்து பேரணி நடத்த முற்பட்டபோது ஜெயலலிதாவின் காவல்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஊர்வலத்திற்கு அனுமதியில்லை என்று கூறி தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தினரைக் கலைத்தனர். இதில் 500க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். தாக்குதலுக்குப் பெண்களும் தப்பவில்லை. அதன் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் உட்பட 400க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில், தற்போது அ.தி.மு.க.விலேயும் அப்போது பா.ம.க.விலும் இருந்த தலித் எழில்மலை படுகாயமடைந்தார். அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூட காவல்துறையினர் அனுமதிக்கவில்லை. ரத்தக் காயங்களுடன் அவர் காவல்துறை வேனிலேயே படுக்க வைக்கப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட டாக்டர் ராமதாஸ் அவர்கள் நெஞ்சு வலி காரணமாக ராயப்பேட்டை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் போதே, அவரை வேலூர் சிறைச் சாலைக்குக் கொண்டு போய் அங்கே அடைத்தனர். டாக்டர் ராமதாஸ் அவர்களையும், தலித் எழில்மலை உள்ளிட்ட ஏனைய பா.ம.க.வினரையும்

உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அறிக்கை ஒன்றை நான் விடுத்தேன். 21-3-95 அன்று நானும் கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, துரை முருகன் ஆகியோரும் கார் மூலம் வேலூர் சென்று சிறையிலிருந்த டாக்டர் ராமதாஸ் அவர்களைச் சந்தித்தோம். முகமது சகி, எம்.பி., ராணிப்பேட்டை காந்தி, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் திருநாவுக்கரசு ஆகியோரும் வேலூரில் எங்களுடன் சிறைச்சாலைக்கு வந்திருந்தனர். டாக்டர் ராமதாஸ் மற்றும் பா.ம.க.வினர் போலீசாரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து 22-3-95 அன்று சென்னையில் நடைபெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டு உரையாற்றினேன்.

இதற்குப் பின்னர் டாக்டர் ராமதாஸ் அவர்களைச் சிறையி லிருந்து விடுவித்து முதலில் வேலூர் மருத்துவமனையிலும் பின்னர் சென்னையிலே தனியார் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டார். ஆனால் அவரை விடுவிப்பதற்கு முன்பு முதல்வர் ஜெயலலிதா விடுத்த அறிக்கை ஒன்றில் டாக்டர் ராமதாஸ் அவர்களின் மனைவி நேரில் முதல்வரைச் சந்தித்து தனது கணவரை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அந்த அடிப்படையில்தான் அவர் விடுவிக்கப்பட்டாரென்றும், போராட்டம் நடத்திவிட்டு சிறையிலே இருக்க முடியாமல் மனு போடுவதாகவும், குளிர்ப்பதன வசதி அறையிலே எப்போதும் இருக்க நினைப் பவர்கள் எதற்காகப் போராட்டத்திலே கலந்துகொள்ள முன்வரவேண்டுமென்றும் கேட்டிருந்தார். அதுகுறித்து செய்தியாளர்களிடம் டாக்டர் ராமதாஸ் அவர்களும், அவரது துணைவியாரும் தாங்கள் அப்படி எந்த மனுவையும் முதல்வரிடம் கொடுக்கவில்லை என்றும், முதல்வர் தெரி வித்தது அப்பட்டமான பொய் என்றும் மறுப்பு தெரிவித் தனர். அதற்கு அரசு தரப்பிலிருந்து எந்தப் பதிலும் கூறப்பட வில்லை.

48 வன்முறை- அராஜகம்- இரத்த வெறியாட்டம்!

ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியில் எதிர்க்கட்சி யினர் அடக்குமுறைக்கும், தாக்குதலுக்கும் ஆளாக்கப் பட்டதுகூட அதிசயமல்ல; அவரது சொந்தக் கட்சியின் முக்கிய நபர்கள் - குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களே கூட ஆளுங்கட்சியின் குண்டர்களால் தாக்குண்டு, ரத்தம் சிந்தி, அவை குறித்துக் காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கண்ணை மூடிக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளும் ஏராளம்.

மதுராந்தகம் தொகுதி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரே சென்னையில் சென்று கொண்டிருந்தபோது வழிமறித்து உருட்டுக் கட்டைகளால் அடிக்கப்பட்டு பலத்த காயத்துடன், சென்னை அரசினர் மருத்துவமனையிலே தங்கி சிகிச்சையும் பெற்றார். அந்தச் சம்பவம் குறித்து யாருமே கைது செய்யப் படவே இல்லை. அதைப்போலவே 1993ஆம் ஆண்டு தூத்துக் குடி தொகுதியைச் சேர்ந்த சட்டப்பேரவை அ.தி.மு.க. உறுப் பினர் வி.பி.ஆர்.ரமேஷ் வடபழனியிலிருந்து காரிலே வரும்போது வேனில் வந்த ஒரு கும்பல் இவரைத் தாக்கியது. வேனில் அ.தி.மு.க. கொடி பறந்தது. இந்தச் சம்பவத்திலும் யாரும் கைது செய்யப்படவில்லை. திருச்சி உப்பிலியாபுரம் சட்டப் பேரவை உறுப்பினராக ஆளுங்கட்சி சார்பிலே இருந்தவர் ரவிச்சந்திரன். இவர் 1994ஆம் ஆண்டில் சென்னை யில் காரில் மன்றோ சிலை அருகே சென்று கொண் டிருந்தபோது ஒரு கும்பல் இவரைத் தாக்கியது. பலத்த காயமடைந்த இவர் ராயப்பேட்டை மருத்துவமனையிலே

சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இந்தச் சம்பவம் தொடர் பாகவும் யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த வரிசையில் 1995 ஆம் ஆண்டிலும் குறைவைக்கவில்லை. ராணிப் பேட்டை தொகுதி சட்டப்பேரவை அ.தி.மு.க. உறுப்பினர் மோகனன் என்பவரை அரிவாளால் வெட்டி அவர் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார். இந்தத் தாக்குதலிலும் வழக்கம்போல யாரும் கைது செய்யப்படவில்லை. இதிலே வேடிக்கை என்னவென்றால் தாக்கப்பட்டவர்கள் யாரும் இந்த வழக்கை நடத்த வேண்டுமென்றோ, தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றோ கோராதது தான். காரணம், இவர்கள் எல்லோரும் ஆளுங்கட்சியின் தலைமையின் கோபத்திற்கு ஆளான காரணத்தால்தான் தாக்கப்பட்டார்கள் என்று அப்போது ஏடுகளில் எல்லாம் செய்தி வந்தது!

மார்ச் திங்கள் இறுதியில் காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சட்டப் பேரவையிலிருந்து தாக்கப் பட்டு வெளியேற்றப்பட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் அவர்களே மருத்துவ மனையிலே அனுமதிக்கக்கூடிய அளவிற்குத் தாக்கப்பட் டார். இதைத் தொடர்ந்து ஜெயலலிதா பதவி விலக வலியுறுத்தி காங்கிரசார் சென்னையிலே சாலை மறியலில் ஈடுபட்டனர். அதன் காரணமாக 31 காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர்களும், திருநாவுக்கரசு அவர்களும் கைது செய்யப்பட்டனர். அதே நாளன்று தமிழகத்திலே உள்ளாட்சி தேர்தல் மற்றும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை நடத்த மறுத்து வந்த ஜெயலலிதா அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதிலும் தி.மு.கழகமும், அதன் தோழமைக் கட்சிகளும் மாவட்ட, வட்டாட்சி, நகராட்சி அலுவலகங்கள் முன்னால் இலட்சக்கணக்கிலே கூடி ஆர்ப்பாட்டம் நடத் தினர்.

அப்போது கழகத்தின் சார்பில் ஒரேயொரு உறுப்பினர் பரிதி இளம்வழுதி மட்டும் இருந்த காரணத்தினால் ஆளுங் கட்சி தரப்பிலே யார் பேசினாலும் தி.மு.கழகத்தை மிகத்

தரக்குறைவாகத் தாக்கிப் பேசுவதும், குறிப்பாக என்னைப் பற்றியும் என் குடும்பத்தினரைப் பற்றியும் தரம் தாழ்ந்து பேசுவதும், அதற்கு ஆதாரத்தோடு மறுப்பு தெரிவிக்க இளம்வழுதி எழுந்தால் அவரைப் பேசவிடாமல் தடுப்பதும், இல்லாவிட்டால் அவையிலிருந்து வெளியேற்றுவதும் சர்வ சாதாரணமாக நடைபெற்று வந்தன. உதாரணமாக ஒன்றைக் கூற வேண்டுமேயானால் பழனி சுப்புரத்தினம் என்ற அ.தி.மு.க. உறுப்பினர் அவையிலே பேசும்போது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொடைக்கானலுக்குச் சென்றிருந்த என்னுடைய குடும்பத்தினர் மல்லிகைப்பூ வேண்டுமென்று விரும்பியதாகவும், அதைக் கொண்டு வருவதற்காகக் கொடைக்கானலில் இருந்து ஜீப்பில் சென்றபோது விபத்து ஏற்பட்டு பத்து போலீசார் உயிர் இழந்ததாகவும் கூறினார். உடனே பரிதி இளம்வழுதி எழுந்து இப்படியொரு சம்பவம் நடைபெற்றதே கிடையாது. ஆளுங்கட்சி உறுப்பினர் இந்தக் குற்றச்சாட்டை நிரூபித்தால் தான் தனது சட்டப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகத் தயார், நிரூபிக்கா விட்டால் அந்த உறுப்பினர் தனது பதவியை விட்டு விலகத் தயாரா என்று பேரவையிலே கேட்டார். அதற்கு எந்தவித மான பதிலும் ஆளுங்கட்சி தரப்பிலிருந்து கூறப்படவே இல்லை.

இந்தக் காலகட்டத்தில்தான் ஆளுநர் சென்னாரெட்டி அவர்கள் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் மீது வழக்குப் போடுவதற்கான அனு மதியை சுப்பிரமணிய சுவாமி அவர்களுக்கு கடிதத்தின் மூலம் வழங்கினார். இதன் காரணமாக கோபமடைந்த ஆளுங்கட்சியினர் 6-4-95 அன்று சென்னை தியாகராய நகரில் நடைபெற்ற ஜனதா கட்சிப் பொதுக் கூட்டத்தில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அவர்கள் மீதும், முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீதும் கற்களையும் செருப்பு களை வீசியதோடு டியூப் லைட்டுகளையும் எல்லாம் உடைத் தும் ரகளை செய்தனர். இவ்வளவிற்கும் அந்த நேரத்தில் சுப்பிரமணிய சுவாமிக்கு மத்திய அமைச்சர் அளவிற்கான அந்தஸ்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்திய அரசினால்

செய்யப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்திற்கு தி.மு.கழகத்தின் சார்பில் என்னுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவித் தேன். சுப்பிரமணிய சுவாமி ஆளுநர் சென்னாரெட்டி அவர் களைச் சந்தித்து இந்த நிகழ்ச்சி குறித்து முறையிட்டார். ஆனால் ஆளுநர் சென்னா ரெட்டிக்கு அதற்கடுத்த நாள் நேர்ந்த கதி இதைவிட மோசமானது. ஆம், புதுவைக்கு ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் காரிலே 10-4-95 அன்று சென்றுகொண்டிருந்த போது, திண்டிவனம் அருகே ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஜெயலலிதா கட்சியினர் ஆளுநரின் காரை முற்றுகையிட்டனர். அதை போலீசாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பின்னர் மாவட்ட போலீஸ் அதிகாரியை ஆளுநரே நேரில் அழைத்துப் பேசியதற்குப் பிறகு, அவரது கார் தொடர்ந்து புதுவைக்குச் செல்ல முடிந்தது. இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட நான் இரவு 10-30 மணி அளவில் புதுவைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதைப்பற்றி அவரிடம் கேட்டறிந்தேன்.

15. 4. 1995 அன்று ஜெயலலிதா மீது கிரிமினல் வழக்கு தொடர தி.மு.கழகத்தின் சார்பில் அனுமதி கோரி தமிழக ஆளுநர் மேதகு சென்னாரெட்டி அவர்களை நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் சந்தித்து 539 பக்கங்கள் கொண்ட ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலைக் கொடுத் தோம். எங்களுடன் அப்போது முரசொலி மாறன், நாஞ்சிலார், ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், என்.வி. என்.சோமு, ரகுமான்கான், சி.டி. தண்டபாணி ஆகியோர் உடன் வந்தனர்.

ஏப்ரல் திங்கள் இரண்டாவது வாரத்தில் கழகத்தின் சென்னை மாவட்டச் செயலாளராக அரும் பணியாற்றிய இயக்கத்தின் சண்ட மாருதமெனப் புகழப்பட்ட இளம்பரிதி அவர்களும், இந்தியப் பிரதமராக இருந்த மூத்த காந்தீய அரசியல்வாதியான மொரார்ஜி தேசாய் அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் இயற்கை எய்தி னார்கள். தவத்திரு அடிகளார் மறைவு குறித்து நான் எழுதிய

இரங்கல் செய்தி என் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற வேண்டுமென்று எண்ணுகிறேன். அது வருமாறு:-


"ஆன்மீகத் துறைக்கும் அறிவியக்கப் புரட்சிக்கும் இடையில் பாலமாக இருந்து நாட்டுக்கும், இனத்துக்கும், தாய் மொழியாம் தமிழுக்கும் தனது வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டவரும் - எல்லோரிடமும் அன்புடனும் பண்புடனும் பழகிடும் இயல்பு வாய்ந்தவராகத் திகழ்ந்த வரும்- இந்நாட்டுத் தமிழர்களிடம் மட்டுமின்றி; வெளி நாட்டுத் தமிழர்களின் மத்தியிலும் "அடிகளார்" என்றால் இவர்தான் எனப் புரிந்து கொள்ளுமளவுக்குப் புகழ் செறிந்த வருமான- என் அன்புக்கும் மதிப்புக்குமுரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டுத் துணுக்குற்றேன். பெரியாருடன், அறிஞர் அண்ணா வுடன், பெருந்தலைவர் காமராஜருடன் என் போன்றோ ருடன் அவர் கொண்டிருந்த அன்பும் மதிப்பும்; அது போலவே தமிழகத் தலைவர்கள் அனைவரும் அவர்மீது கொண்டிருந்த பற்றும் பாசமும் தமிழ்மக்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும். மூடநம்பிக்கையொழிந்த சமுதாயம் காண்பதில் தந்தை பெரியாருக்கு அவர் உடன்பட்டவராக இருந்தார். தமிழ்ச் சமுதாயம் ஒன்றுபட்டுத் திரளவேண்டு மென்பதில் அண்ணாவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார். இளைய தலைமுறையினர் கல்விக்கண் பெறவேண்டும் என்பதில் காமராஜருக்கு அவர் ஒரு கரமாக இருந்தார். கழக ஆட்சியில் என் வேண்டுகோளை ஏற்று; முறைப்படி அடி களார் சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பொறுப் பேற்று- அறநிலையத் துறையில் மேலும் ஆக்கப் பணிகள் மிகுவதற்கு எத்தனையோ அரிய ஆலோசனைகளை சட்ட மன்ற மேலவைப் பேச்சின்மூலம் வழங்கியிருக்கிறார். மடாலயம்- மகேசன்- என்று மாத்திரமில்லாமல்; இரண் டுமே மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று வெறும் சொல் அளவில் இல்லாது செயல் அளவில் செய்தும் காட்டினார். அவர் ஆண்டுதோறும் நடத்திய பாரி விழா பலவற்றுக்கு என்னை அவர் அன்புடன் அழைத்ததும்; நான் சென்று அந்த விழாக்களில் இலக்கிய உரைகள் நிகழ்த்திய

தும் கவியரங்கம் நடத்தியதும் இன்றைக்கும் என் அகக் கண்களில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கின்றன. ஒரு துறவியாகத் தன்னை முடக்கிக் கொண்டிராமல்- மக்களுடன் ஒன்றிக் கலந்த நிலையில்; அவர் ஏற்றுக் கொண்ட இறைப் பணியை இடைவிடாது ஆற்றி; இன்று புகழ் விளக்காக ஒளிமழை பொழியும் அவர் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையுடன்; அவரது மறைவுக்கு என் ஆழ்ந்த இரங்கலை உணர்த்துகிறேன்."

அத்தகைய மாபெரும் மனிதர் அடிகளார் மறைந்தபோது பேரவை நடந்து கொண்டிருந்தது. அவருக்கு அவையிலே இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்படுமென்று நாடே எதிர்பார்த்திருந்த நிலையில் - அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை வைத்த பிறகும் கூட அது ஏற்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை வைத்த பிறகு நாளைக்கு தீர்மானம் கொண்டு வருவதாக இருக்கிறோம் என்று கூறினார்கள். முதலமைச்சர் என்ற முறையில் ஜெயலலிதா அடிகளாரின் மறைவுக்கு இரங்கல் செய்திகூட வெளியிட வில்லை.

அடிகளார் மறைந்த ஒரு வாரத்திற்குள் நான் குன்றக்குடி சென்று அவர் மறைந்த இடத்திலே அஞ்சலி செலுத்திவிட்டு வந்தேன்.

அ.தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் ஜி.விசுவநாதன், அழகு திருநாவுக்கரசு ஆகியோர் ம.தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டதாக அறிவித்தார்கள். இதற்கு எதிராக ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவர் பேரவைத் தலைவரிடம் கொடுத்த புகார் மீது 20-4-1995 அன்று தீர்ப்பளித்த பேரவைத் தலைவர் சேடப் பட்டி முத்தையா அரசமைப்புச் சட்டம் 191(2) பிரிவின்படியும் பத்தாவது அட்டவணைப்படியும் இருவரும் பதவி இழப்புக்கு ஆளானதாக அறிவித்தார்.



டி. ராஜேந்தர்

தமிழக ஆளுநர் - முதல் அமைச்சர் மோதலின் உச்சகட்டமாக 27-4-1995 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களைத் திரும்பப் பெறக் கோரும் தீர்மானம் ஒன்று நிதி அமைச்சரும் அவை முன்ன வருமான நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. அந்தத் தீர்மானத்தை எதிர்த்துக் கடுமையாகப் பேசிய பரிதி இளம்வழுதியை ஆளுங் கட்சியினர் பேசவே விடவில்லை. கடும் வாக்கு வாதத்திற்குப் பிறகு வெளிநடப்புச் செய்தார். இந்த நாளில்தான் முதல்வர் ஜெயலலிதா பேசும்போது ஆளுநர் சென்னா ரெட்டியை அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்திக்கச் சென்றபோது தகாத முறையில் நடந்து கொண் டார் என்ற அசிங்கமான குற்றச்சாட்டைக் கூறியதாகும். அந்தக் குற்றச்சாட்டின் காரணமாகத் தமிழ்நாட்டிற்கே பெரும் தலைகுனிவு ஏற்பட்டது.

அ.தி.மு.க.வினர் தூத்துக்குடியில் நடத்திய மேதின விழா ஊர்வலத்தின் முடிவில் பிரதமர் நரசிம்மராவின் கொடும் பாவியைக் கொளுத்தினர். அதுகுறித்து ஒரு ஒழுங்குப் பிரச்சினையை 4-5-1995 அன்று காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலே எழுப்பினர். அதற்குப் பதிலளித்த முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்கள் அப்படியொரு சம்பவம் நடைபெற்றதாகத் தகவல் இல்லை என்றும், காரணம் நாட்டிலே பிரதமர் என்று ஒருவர் இருக்கிறாரா என்ற சந் தேகமே மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், அப்படி யொருவர் இல்லை என்ற எண்ணம்தான் மக்களுக்கு உள்ளது என்றும், அந்த நிலையில் எப்படி பிரதமர் நரசிம்மராவ் அவர் களின் கொடும்பாவி கொளுத்தப்பட்டிருக்க முடியும் என்றும், செயலற்ற ஒருவர்தான் பிரதமராக இருக்கிறார் என்றும் அவையிலேயே சாடினார். இதைத் தொடர்ந்து

பேரவை அமளிக்காடாயிற்று. மைக்குகள் உடைந்தன. உறுப்பினர்கள் கட்டிப் புரண்டு சண்டை போட்டனர். உறுப்பினர்களின் சட்டைகள் கிழிந்தன. காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவரால் வெளி யேற்றப்பட்டனர். நான்கு உறுப்பினர்கள் தொடர் முழுவதற்கும் நீக்கப்பட்டனர்.

ஜெயலலிதா மீது வழக்குத் தொடர தமிழக ஆளுநர் சுப்பிரமணிய சுவாமிக்குக் கொடுத்த அனுமதியை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா தொடர்ந்த வழக்கினை நீதிபதிகள் சீனிவாசன், எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் தள்ளுபடி செய்தனர்.

14-5-95 அன்று இரவு சேலம் அருகே ஒரு பயங்கர ரயில் விபத்து ஏற்பட்டது. 5 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 60 பேர் அதில் உயிர் இழந்தனர். சென்னையிலிருந்து சென்ற கன்னியாகுமரி எக்ஸ்பிரசும், சேலத்திலிருந்து சென்னை நோக்கி வந்த சரக்கு ரயிலும் இரவு 10.30 மணி அளவில் நேருக்கு நேர் மோதிக் கொண்ட காரணத்தினால் இந்த விபத்து ஏற்பட்டது. சுமார் 100 பேர் இந்த விபத்தில் காயமடைந்தனர்.

கொலை, கொள்ளை, விபத்து, அமைச்சர்கள் மாற்றம், அதிகாரிகள் மாற்றம், ஊழல், லஞ்சம், முறைகேடு, வன்முறை, அராஜகம் போன்றவை எப்படி ஜெயலலிதா ஆட்சியிலே தொடர் நிகழ்ச்சிகளோ அதைப் போலவே அதிகாரிகளுக்குப் பதவி நீடிப்பு வழங்குவதும் ஒரு சம்பிரதாய நிகழ்ச்சியாகும். உதாரணமாக சொல்லவேண்டுமே யானால் ஜெயலலிதா ஆட்சியில் தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் டிசம்பர் 94இல் ஓய்வு பெற வேண்டும். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு முதல் ஆறு மாத பதவி நீட்டிப்பை மாநில ஆளுநரே செய்ய முடியும். அப்போது முதல்வருக்கும் ஆளுநருக்கும் இடையே இருந்த மோதல் போக்கு காரணமாக அரிபாஸ்கரின் பதவி நீட்டிப்பை முதல் அமைச்சர் ஜெயலலிதாவே செய்தார். அரசுஅலுவல் விதியைப் பயன்படுத்தி இந்தப் பதவி நீட்டிப்பு செய்யப்பட்டது. இவ்வாறு அரிபாஸ்கர் விஷயத்தில் அரசு

அலுவல் விதியைப் பயன்படுத்தியதை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், கழக வழக்கறிஞர் ஜெகநாதன் ஆகியோர் வழக்குத் தொடர்ந்தனர்.

மாநில காவல் துறைத் தலைமை இயக்குநராக இருந்த வைகுந்த் அவர்களுக்கும் பதவி நீடிப்பு அப்போது வழங்கப்பட்டது. சட்டப் பேரவைச் செயலாளராக இருந்த ஜானகிராமனுக்கு ஒரே கோப்பில் மூன்று ஆண்டுக் காலத்திற்கு ஒரே நேரத்தில் பதவி நீடிப்பு வழங்கப் பட்டது. இந்த அதிகாரி மூன்றாண்டு காலம் பதவி நீடிப்பு பெற்று பணியாற்றிய பிறகு ஓய்வு பெற்றுவிட்டார். அந்த அதிகாரியைத் தேடிப் பிடித்துத்தான் தற்போது மீண்டும் ஜெயலலிதா பதவிக்கு வந்த பிறகு சட்டப் பேரவைத் துறையிலே முதன்மைச் செயலாளர் என்ற பதவியை அளித்துள்ளார். இப்படிப்பட்ட விநோதங்களையெல்லாம் ஜெயலலிதா ஆட்சியிலேதான் காண முடியும்.

இடையில் சில காலம் தாய்க் கழகத்தில் ஊடல் கொண்டு, தாயக மறுமலர்ச்சிக் கழகம் என்ற புதிய அமைப்பை நடத்தி வந்த தம்பி டி. ராஜேந்தர் 95ஆம் ஆண்டு மே திங்களில் மீண்டும் கழகத்திலே இணைந்தார். இதற்கான விழா மயிலை மாங்கொல்லையில் 20-5-1995 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், தம்பி டி. ராஜேந்தரும் கலந்து கொண்டோம்.




குன்றக்குடி அடிகளார்

ஜெயலலிதா டான்சி நிலம் வாங்கியது தொடர்பாக வழக்குத் தொடர ஆவணங்களைத் தயாரித்துக் கொண்டிருந்த கழக வழக்கறிஞர் சண்முகசுந்தரம் 30-5-95 அன்று இரவு அ.தி.மு.க. குண்டர்களால் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டு, குற்றுயிரும், குலையுயிருமாக மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டார். செய்தி கேள்விப்பட்ட நான்

உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்தேன். அந்த வழக்கு ஆலந்தூர் பாரதி அன்று மாலையில் சண்முகசுந்தரம் அலுவலகத்திற்கு வந்து விவாதித்து விட்டுச் சென்ற பிறகு இந்தக் குண்டர்கள் அங்கே வந்து "அம்மா மேலேயா கேஸ் போடற'' என்று கேட்டவாறே தாக்கியிருக்கிறார்கள். அவர் வயது காரணமாகவும், மருத்துவர்களின் தீவிர சிகிச்சை காரணமாகவும் மரணப் படுகுழியிலிருந்து தப்பிப் பிழைத் தார். உயிர் பிழைத்த பிறகும், அவர் அதற்கு முன்பு கழக வழக் கறிஞராக ஆற்றிய பணியில் சோர்ந்துவிடாமல் தொடர்ந்து மேலும் உறுதியாகக் கழக வழக்குகளை நடத்திவந்தார். அவர் அன்று சிந்திய ரத்தத்திற்கு கழகம் காட்டிய நன்றிக் கடனாகத்தான் கழக ஆட்சியில் அரசு வழக்கறிஞராகவும், தற்போது மாநிலங்கள் அவை உறுப்பினராகவும் பணி யாற்றிடும் அரிய வாய்ப்பினை அளித்தது.

சண்முகசுந்தரம் தாக்கப்பட்டது குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களை வழக்கறிஞர்கள் எல்லாம் சந்தித்து மனு கொடுத்தார்கள். மாநிலங்களவையில் முரசொலி மாறன் சண்முகசுந்தரம் தாக்கப் பட்டது பற்றி மத்தியப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) விசாரணை நடத்த வேண்டுமென்றும், அந்தச் சம்பவத்திற்கு ஜெயலலிதாவே காரணம் என்றும் குற்றஞ்சாட்டினார். 2-6-1995 அன்று நடைபெற்ற கழகப் பொதுக் குழுவிலும் சண்முகசுந்தரம் தாக்கப்பட்டது குறித்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 11-6-95 தேதியிட்ட ஆனந்தவிகடன் "சென்னை நகரில் வன்முறைக் கும்பல்கள் இப்படித் தாக்குதல் நடத்துவதும் போலீஸ் கையைப் பிசைந்தபடி பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நிற்கும் வெட்கம் கெட்ட காட்சியும் புதிதல்ல. இந்தத் தாக்குதலின் பின்னால் ஏதோ வஞ்சகமான மர்மங்கள் இருப்பதுபோல மக்களே பேச ஆரம்பித்து விட்டார்கள். இதனால் போலீஸ் மீது இருக்க வேண்டிய மரியாதை இன்னும் அதலபாதாளத்துக்கு இறங்கியிருக்கிறது. சண்முக சுந்தரத்தின் மீது விழுந்த 32 வெட்டுகள், உண்மையில் ஜனநாயக வேர் மீது விழுந்த வெட்டுகள். இதை உணராத

வரை காவல் துறையினர் தங்கள் காக்கிச் சட்டையைக் கழற்றி எறிவதே மேல்" என்று தலையங்கம் எழுதியது. 20-6-1995 அன்று தொடர்ந்து அடுத்த இரண்டு நாட்களும் தமிழகம், புதுவையில் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித் தனர். மேலும் வழக்கறிஞர்கள் சென்னை உயர்நீதி மன்றத் தில் வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்தனர். 20-6-95 அன்று நீதிபதி ஜெகதீசன் வழங்கிய தீர்ப்பில், இந்த வழக்கை மத்தியப் புலனாய்வுத் துறை விசாரணை நடத்த வேண்டும் என்றும், 4 மாதங்களுக்குள் சி.பி.ஐ. விசாரணை நடத்தி, நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், சி.பி.ஐ. விசார ணைக்கு மாநில அரசு அனைத்து உதவிகளும் அளித்து முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும், சண்முகசுந்தரத் திற்கு ஆகும் மருத்துவ செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்க வேண்டுமென்றும், சண்முகசுந்தரத்திற்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கூறியது.



சண்முகசுந்தரம்

இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஜெய லலிதா அரசு உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்தது. ஆனால் அங்கே நடைபெற்ற இருதரப்பு வாதங் களைக் கேட்ட உச்ச நீதிமன்ற நீதிபதி, சண்முகசுந்தரம் தாக்கப்பட்டது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த உத்தரவிட்டு சென்னை உயர்நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பை அங்கீகரித்து தமிழக அரசின் மேல் முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்தது.

49 கல்யாண வைபோகமும்; ஈழத்தமிழருக்காகப் பேரணியும்!

95ஆம் ஆண்டு தமிழகத்திலே நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி எழுதும்போது ஜெயலலிதாவின் இல்லத்திலே நடைபெற்ற அவரது வளர்ப்பு மகன் திருமணத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 19-6-95 அன்று அதுபற்றி தினமணி இதழ் வெளியிட்ட செய்திச் சுருக்கம் பின்வருமாறு :-

"முதல்வர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரனுக்கும், சிவாஜி கணேசனின் பேத்தி சத்தியலட்சுமிக்கும் செப்டம்பர் 7ஆம் தேதி திருமணம் நடைபெறுகிறது. இது குறித்து தமிழக முதல்வரின் இல்ல அலுவலகத்திலிருந்து பத்திரிகை அலுவலகத்திற்கு வந்த பேக்ஸ் செய்தியின் முழு விவரம். ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி அளவில் தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா தனது வளர்ப்பு மகன் வி.என். சுதாகரன் மற்றும் சிவாஜி கணேசனின் பேத்தி என்.சத்தியலட்சுமி ஆகியோரது திருமண நிச்சயதார்த்தத்தை நடத்துவதற்காக போயஸ் தோட்டத்திலிருந்து புறப்பட்டு சிவாஜி கணேசன் இல்லத்திற்குச் சென்றார். முதல்வருடன் மணமகனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் 18 கார்களில் சென்றார்கள். கிட்டத்தட்ட 150 பேர் மணமகன் வீட்டுச் சார்பில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். 27 வெள்ளித் தட்டுகளில் சீர்வரிசை மணமகளுக்கு வழங்கப்பட்டது."

இந்த நிகழ்ச்சிக்கு செய்தியாளர்கள் யாரும் அனுமதிக்கப்படாததோடு, ஜெ.ஜெ. தொலைக்காட்சியினரை மட்டும் நிகழ்ச்சியை படமெடுக்க அனுமதிக்கப்பட்டது.

இந்த ஆடம்பரத் திருமணம் குறித்து ஜூலை இறுதியில் திருச்சியில் என்னைச் சந்தித்த நிருபர்கள் கேள்வி கேட்ட போது, ஆடம்பரச் செலவில் திருமணம் நடைபெறுவது உண்மைதானென்றும், நான் முதல்வராக இருந்தபோது எங்கள் வீட்டுத் திருமணங்களை சாதாரணமாக மண்டபங் களில்தான் நடத்தியிருக்கிறேன் என்றும், குறிப்பாக மகன் அழகிரியின் திருமணத்தை பெரியார் திடலில்தான் நடத்தி னேன் என்றும், வருகை தந்தோர் அனைவருக்கும் சென்னை யிலே உள்ள ஓட்டல்களில் சாப்பாடு அவரவர் செலவிலே வழங்கத் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டதை ஞாபகப்படுத்தினேன். மேலும் பதவியிலே உள்ளவர்கள் நடத்தும் திருமண விழாக்கள் சிக்கனமாகவும், மற்றவர் களுக்கு எடுத்துக்காட்டாகவும் அமைய வேண்டுமென்றும் அங்கே தெரிவித்தேன். உடனே முதல்வர் ஜெயலலிதா ஒரு முதல்வரின் மகனுடைய திருமணம் நடக்கும்போது ஆகக் கூடிய செலவுகளே எனது வளர்ப்பு மகன் திருமணத்திற்கும் ஆகும் என்று பதிலளித்தார். இதுகுறித்து தினமணி எழுதிய துணை தலையங்கத்தில் "கண்டித்தவர் கருணாநிதி என்பதை மறந்து விடலாம். பெரியார், அண்ணா பாரம்பரியத்தில் வந்திருப்பதாக ஜெயலலிதா உரிமை கொண்டாடுகிறார். எனவே அண்ணாவின் கொள்கைக்கு மாறாக, மன்னர் ஆட்சிக்காலத்து அரண்மனைத் திருமணம் போல் நடத்து வது முறையா என்பதே கேள்வி. இந்தக் கேள்விக்கு முதல்வர் ஜெயலலிதா பதில் சொல்ல வேண்டும்" என்று எழுதியது. எழுதியதோடு மாத்திரம் விட்டு விடாமல் ஆடம்பரமான அளவில் மணவிழா கொட்டகைகள் போடப்பட்டதை யெல்லாம் புகைப்படமெடுத்து தனது இதழிலும் அவைகளை வெளியிட்டது.

செப்டம்பர் 7 ஆம் தேதி நடைபெறவிருந்த திருமணத் திற்காக 75 ஏக்கர் பரப்பளவில் பந்தல்கள் ஒன்றரை மாதங் களுக்கு முன்பாகவே அமைக்கப்படும் பணிகளில் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைக்கப்பட்ட 75 ஏக்கர் பந்தல் போதாமல் திருமண வரவேற்புக்காக சென்னை தரமணியில் உள்ள திரைப்பட நகரில் சினிமா செட் போல மிகப் பெரிய அளவில் பந்தல் போடப்பட்டது. மேலும் சென்னையில் பல்வேறு சாலைகளில் ஆடம்பரமான மின் அலங்கார வளைவுகள் வைக்கப்பட்டன. அதுதவிர சர விளக்குகள், குழல் விளக்குகள் உள்ளிட்ட பல்வேறு வகை யான விளக்குகள் ஜெயலலிதா வீடு உள்ள இடத்தி லிருந்து திருமணம் நடந்த எம்.ஆர்.சி. நகர் வரையிலும், பின்னர் அங்கிருந்து மாப்பிள்ளை அழைப்பு நடை பெறும் இடமான தரமணி வரையிலும் பரவலாக அமைக்கப் பட்டிருந்தன. அதற்கான மின்சாரத்தையெல்லாம் அர சுக்குரிய மின் கம்பங்களிலிருந்து நேரடியாகத் தொடர்பு படுத்தியிருந்ததை பல ஏடுகள் அப்படியே புகைப்படம் எடுத்து வெளியிட்டிருந்தன.

இந்தத் திருமணத்தையொட்டி அகில இந்திய வழக் கறிஞர்கள் சங்கம் மற்றும் 42 வழக்கறிஞர்கள் சார்பில் அதன் தலைவரும், மூத்த வழக்கறிஞருமான அபிபுல்லா பாட்சா அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணத்தையொட்டி போக்குவரத்து மாற்றம், அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரத் தடை, குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கே அலங்கார வளைவுகள் அமைக்கப்படுவதால் பொது மக்களுக்குப் பெரும் இடை யூறுகள் ஏற்பட்டுள்ளன. எனவே அவற்றைக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி ஜெகதீசன் அவர்கள் செப்டம்பர் 7, 8



ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் ஆடம்பரத் திருமணத்தைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்ட லயோலா கல்லூரி மாணவர்கள்

ஆகிய நாட்களில் குடிநீர், மின்சாரம் பொதுமக்களுக்கு வழங்குவதில் எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்றும், போக்குவரத்தில் மாற்றம் செய்யக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்தார். மின்சாரம் எப்படி பெறப்பட்டது என்பதற்கான விளக்கத்தையும் உடனடியாக நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் ஆணையிட்டார்.

6-9-95 அன்று ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரனின் மாப்பிள்ளை அழைப்பு நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியைப் படம் பிடிக்கவும், செய்தி சேகரிக்கவும் ஏராளமான செய்தியாளர்கள் அங்கே சென்றிருந்தனர். அந்த வகையில் சன் தொலைக்காட்சி நிறுவனமும் தங்கள் செய்தியாளர்களை அங்கே அனுப்பியிருந்தது. ஆனால் சன் தொலைக்காட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, அவர்கள் மீது அங்கே பயங்கரத் தாக்குதல் தொடுக்கப்பட்டது. சன் தொலைக்காட்சியைச் சேர்ந்த தொழில்நுட்ப மேலாளர் எஸ். கண்ணன் குறிப்பாக குறி வைத்துத் தாக்கப்பட்டார். ஊர்வலத்துக்கு இடையே கண்ணனைத் தாக்கி, நிலைகுலைந்து போன அவரைச் சில அடி தூரம் தரதர வென்று இழுத்துச் சென்றனர். அவரைக் கொண்டுபோய் திருமண மண்டபத்திற்குப் பின்புறம் ஒரு அறையில் வைத்து கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். அவரைக் காவல்துறைத் தலைவர் வைகுந்த், கமிஷனர் ராஜசேகரன் நாயர் ஆகியோர் வந்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். பின்னர் விடியற்காலை 3 மணியளவில் கண்ணன் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு, அலுவலகம் வந்து சேர்ந்தார். அவர்மீது நடைபெற்ற தாக்குதலை என்.வி.என். சோமு, வாழப்பாடி ராமமூர்த்தி, குமரிஅனந்தன், ஆர். நல்லக்கண்ணு, திருநாவுக்கரசு, தலித் எழில்மலை ஆகியோர் அந்தச் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை விடுத்தனர்.



சந்திரிகா

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் 70 பேர் தலைமை நீதிபதி திரு. கே.ஏ.சாமி அவர்களைச் சந்தித்து ஒரு மனு கொடுத்தனர். அதில் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணத்திற்காக அரசு இயந்திரங்கள் தவறாகப் பயன் படுத்தப்படுகின்றன என்றும், ஜனநாயக நடைமுறைகளும், சட்டதிட்ட விதிமுறைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து அந்த விழாவிலே நீதிபதிகள் கலந்து கொள்ளக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டிருந்தனர். சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு கல்லூரி வாசலில் திருமண நாளன்று மனிதச் சங்கிலி அமைத்தும் சாலை மறியலில் ஈடுபட்டும் திருமணத்தைக் கண்டித்து முழக்கமிட்டனர். இதேபோல, புதுக்கல்லூரி மாணவர்களும் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். மேலும் இந்த ஆடம்பரத் திருமணத்தைக் கண்டித்து, மொழிப்போர் தியாகிகள் சங்கம் சார்பில் ஏராளமான மொழிப்போர் தியாகிகளும், பெண் உரிமை சங்கத்தினரும், மனிதநேயக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், என்.எப்.ஐ. டபிள்யூ., பி.யூ.சி.எஸ்., தமிழ்மாநில குடிசை வாழ்வோர் மற்றும் குடியிருப்போர் சங்கம், ஷெனாய்நகர் மாதர் சங்கம், தமிழ் மாநில குடிசை வாழ்வோர் பெருமன்றம், மனித உரிமைக் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யூ.சி., எச்.எம்.கே.பி., கட்டிடத் தொழிலாளர் சங்கம், பஞ்சாயத்து சங்கம், அம்பேத்கர் மக்கள் இயக்கம், அம்பேத்கர் மக்கள் விடுதலை இயக்கம், பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான பெண்கள் மன்றம், தலித் மக்கள் போராட்டக் குழு, உழைக்கும் மக்கள் மாமன்றம், ஜன ஜாக்தன் சமூக ஒருமைப்பாட்டு மையம் உட்பட பல்வேறு சங்கத்தினர் திருமண நாளன்று உண்ணாவிரதம் இருந்தனர்.

காந்தி சிலையை மறைத்து திருமண விளம்பரம் வைக்கப் பட்டுள்ளதாகவும், அதனை உடனடியாக அகற்ற வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டு அதற்காக சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத் தலைவர் தளவாய் தலைமையில் போராட்டம் நடத்திய பிறகு காந்தியடிகள் விடுதலையானார்.

7ஆம் தேதியன்று முதல் பக்கத்தில் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலத்தை முதல் பக்கத்தில் மன்னர் கால மாப்பிள்ளை ஊர்வலம் என்று தலைப்பிட்டு ஏடுகள் செய்தி வெளியிட்டிருந்தன. அதிலே ஜெயலலிதாவும், சசிகலாவும் மற்ற பெண்களும் அணி வகுத்து வர அவர்களுக்கு முன்னால் கூடுதல் டி.ஜி.பி. தேவாரம் துப்பாக்கியை கையில் பிடித்தபடி செல்வார். நான்கு அராபியக் குதிரைகள் பூட்டப்பட்ட அலங்கார சாரட் வண்டியிலே மணமகன் சுதாகரன் ஊர்வல மாக அழைத்துவரப்பட்டார். செய்தி ஏடுகளில் பாதுகாப்பைத் தவிர முதல்வர் வளர்ப்பு மகன் திருமணத்துக்கு வந்த வர்களுக்குப் பூ கொடுத்து வரவேற்பது உட்பட அனைத்துப் பணிகளையும் தங்கள் வீட்டுத் திருமணம் போல் போலீசார் செய்தனர் என்றும், அனைத்து மாவட்டங்களிலிருந்தும் குவிக்கப்பட்டிருந்த போலீசார் திருமணப் பந்தல் முழுவதும் ஒவ்வொரு வரிசையிலும் நின்று கொண்டிருந்தனர் என்றும், திருமணம் முடிந்தவுடன் தேங்காய், பழம் இருந்த பையையும் போலீசாரே கவுண்டர்களில் அளித்தனர் என்றும் வர்ணனைகள் செய்திருந்தன.

இதற்கிடையே இலங்கையில் சந்திரிகா; அதிபர் பொறுப் புக்கு வந்த பிறகு தமிழீழப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற் காக விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் என்ன காரணத்தாலோ பேச்சுவார்த்தை முறிந்து இரு தரப்பினருக்கும் இடையே போர் மூண்டது. இதுகுறித்து மே திங்களில் நான் விடுத்த அறிக்கையில் தமிழ் ஈழத்தில் வாழுகின்ற லட்சோப லட்சம் தமிழ் மக்களின் உயிர்களைப் பலி கொள்ளக்கூடிய சோக நிகழ்ச்சி எதுவும் நடந்துவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன் இரு தரப்பினரும் பழி உணர்வுக்கு இடம் தராமல், அந்தத் தமிழ் மக்களின் உரிமைகள் மட்டுமல்ல, உயிரும் காப்பாற்றப்பட ஏற்ற முடிவுகள் மேற்கொள்வதற்கு இன்னமும் நேரம் இருக்கிறது என்றே கருதுகிறேன் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அனைவரின் எதிர்பார்ப்பிற்கும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் சிங்கள ராணுவம் இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் கடுமையான தாக்குதலை நடத்தியது. அப்போது நடைபெற்ற

தாக்குதலில் குழந்தைகள் மட்டும் 63 பேர் பலியாகினர். இதுகுறித்து 13-7-95 அன்று அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாநில அமைப்பாளர்களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஈழத் தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் நடத்திடும் தாக்குதலைக் கண்டித்திட 17-7-95 அன்று ஒவ்வொரு நகரத்திலும் கழகத்தினர் கறுப்புச் சின்னமணிந்து உண்ணா நோன்பு இருப்பதென்று முடிவெடுக்கப்பட்டது. அந்த உண்ணா நோன்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசியலீக், அகில இந்திய பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளும் கலந்து கொண்டன.

தமிழகம் முழுவதும் 100 இடங்களில் இந்த உண்ணா நோன்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சென்னையில் நடைபெற்ற உண்ணா நோன்பு நிகழ்ச்சியை கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் தொடங்கி வைத்திட, நான் முடித்து வைத்தேன். இதற்குப் பிறகு இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஓரளவிற்குக் குறைந்த போதிலும் சில மாதங்களுக்குப் பிறகு குறிப்பாக அக்டோபர் 95 இறுதியில் மீண்டும் தாக்குதல் கடுமையாகியது. எனவே ஈழத் தமிழர் மீது படுகொலை நடத்திய சிங்கள அரசைக் கண்டித்து கழகத்தின் சார்பில் 2-11-1995 அன்று சென்னையில் கடற்கரை காந்தி சிலை அருகிலிருந்து என்னுடைய தலைமையில், பேராசிரியர், ஆர்க்காடு வீராசாமி, நாஞ்சிலார் முன்னிலையில் கறுப்புக் கொடி ஏந்திய பேரணி ஒன்றை நடத்தி அண்ணா அறிவாலயத்திற்கு வந்தடையும் என்று அறிவிக்கப்பட்டது. அது போலவே மாவட்டத் தலைநகரங்களில் 3ந்தேதியன்று கறுப்புக் கொடி பேரணி நடத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறே 2ஆம் தேதியன்று கழகம் நடத்திய கறுப்புக் கொடி பேரணி காரணமாக சென்னை நகரமே குலுங்கியது. ஒரேநாள் அறிவிப்புதான் என்ற போதிலும் இலட்சக்கணக்கான மக்கள் அதிலே கலந்து கொண்டனர். பேரணி முடிவில் நான் உரையாற்றிய போது ஈழத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மருத்துவ உதவிக்காக தி.மு.க. அறக்கட்டளை சார்பில் 25 இலட்சம் ரூபாய் நிதி



ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் ஆடம்பரத் திருமணத்தைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்ட லயோலா கல்லூரி மாணவர்கள்.

செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அறிவித்த வாறே மறுநாள் 3ந்தேதி யன்று செஞ்சிலுவை சங்கத் தின் தமிழ்நாடு கிளைத் தலை வர் வி.கார்த்திகேயன் அவர் களிடம் 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலை கழக முன்னணியினர் மூல மாக ஒப்படைக்கப்பட்டது. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலை வரையும், பிரதமரையும் சந்தித்து ஈழத் தமிழர்கள் படு கொலை குறித்து முறையீடுகளைக் கொடுத்தனர். பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் சார்பில் 25-11-95 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஈழத் தமிழர் பிரச்சினைக் காக இந்திய அரசை நடவடிக்கை எடுக்கக் கோரி நவம்பர் 30ஆம் தேதியன்று முழு அடைப்பு நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது. 30ஆம் தேதி முழு அடைப்பு வெற்றி கரமாக நடைபெற்றது.

50 தேசிய முன்னணியிலிருந்து தி.மு.க. விலகியது ஏன்?

95ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உச்சநீதிமன்றம் தி.மு.கழகம் சம்மந்தப்பட்ட ஒரு முக்கியமான வழக்கில் தீர்ப்பளித்தது. 18 ஆண்டுகள் நீடித்த வழக்கு அது. 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தமிழகத்திற்கு வருகை தந்த இந்திராகாந்தி அம்மையாருக்கு தி.மு. கழகத்தின் சார்பில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. கறுப்புக் கொடி போராட்டத்தின்போது ஏற்பட்ட கலவரத்தைக் காரணமாகக் காட்டி, அப்போதிருந்த அ.தி.மு.க. அரசு நான், பேராசிரியர், ஆர்க்காடு வீராசாமி உட்பட 134 பேர் மீது இந்திரா காந்தியைக் கொலை செய்ய முயன்றதாக வழக்கு தொடுத்தது. சுமார் பத்தாண்டு காலம் இந்த வழக்கு நீடித்தது. 180 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 1987 ஆம் ஆண்டு இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. அந்தத் தீர்ப்பில் கழகத்தைச் சேர்ந்த தென்னரசு, ரகுமான்கான், கோவை ராமநாதன், கோபால் சாமி (வைகோ), பொன். முத்துராமலிங்கம், உட்பட 56 பேருக்கு இரண்டாண்டுகள் சிறை தண்டனை விதித்தும், நான், பேராசிரியர் உட்பட மற்ற அனைவரையும் விடுதலை செய்தும் உத்தரவிடப்பட்டது. எங்களை விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து அ.தி.மு.க. அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. 56 கழகத் தோழர்களுக்குத் தண்டனை வழங்கப் பட்டதை எதிர்த்து தி.மு.கழகத்தின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த இரண்டு மேல்முறையீடுகளையும் விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கே.எம். நடராஜன், சாமிதுரை ஆகியோர் 10-3-1994 அன்று வழங்கிய தீர்ப்பில் நான் பேராசிரியர் உட்பட 78 பேரை விடுதலை செய்தது சரியே என்று அரசின் மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்தனர். தி.மு.கழகம் செய்துகொண்ட மேல்முறையீட்டை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் 56 பேருக்கு அளிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து அனைவரையும் விடுதலை செய்தனர். ஜெயலலிதா அரசு இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இதனை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஆனந்த், நானாவதி ஆகியோர் 4-8-1995 அன்று அளித்த தீர்ப்பில் இந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் சென்னை உயர்நீதி மன்றம் விடுதலை செய்து அளித்த தீர்ப்பு சரியானது என்று தெரிவித்தனர்.

ஜெயலலிதா அமைச்சரவையில் அமைச்சராக இருந்த ஆர்.எம்.வீரப்பன் சத்யா மூவிஸ் நிறுவனம் சார்பில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களைக் கொண்டு பாட்சா படத் தினைத் தயாரித்து, அதன் வெள்ளிவிழா சென்னையிலே நடைபெற்றது. அந்த விழாவில் நடிகர் ரஜினிகாந்த் பேசும் போது தமிழ்நாட்டில் நடந்த வெடிகுண்டு சம்பவங்களைப் பற்றியும் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றியும் பேசினார். தமிழ்நாடு இப்படியே தொடர்ந்தால் சுடுகாடாக ஆகிவிடும் என்றும் பேசினார். அவரது இந்தப் பேச்சை முன்னிலை வகித்த ஆர்.எம். வீரப்பன் ஏன் கண்டிக்கவில்லை என்று முதல்வர் ஜெயலலிதா அமைச்சர் வீரப்பனிடம் கேட்டதாக வும், அதற்கு அவர் விளக்கம் அளித்ததாகவும் சில ஏடுகளில் செய்திவந்தது. ஆர்.எம்.வீ. மீது நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று அந்தக் கட்சி ஏட்டிலே கட்டுரையும் வெளிவந்தது. அமைச்சர் வீரப்பனுக்கு ஜெயலலிதா கருணை காட்டக் கூடாது என்றெல்லாம் அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப் பினர்கள் அறிக்கைகளை விடுத்தனர்.

தான் ஏன் அந்த விழாவில் ரஜினியின் பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்க இயலவில்லை என்பது குறித்து ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்றிருந்த நிலையிலும் அங்கிருந்தவாறே ஒரு அறிக்கை மூலம் விளக்கியிருந்தார்.

ரஜினிகாந்த் அவர்கள் அந்த விழாவில் பேசியது பற்றி நிருபர்கள் என்னுடைய கருத்தைக் கேட்டபோது தமிழகத்தில் வன்முறைக் கலாச்சாரம் இருக்கக்கூடாது, அதை நிறுத்த வேண்டும், இல்லாவிட்டால் வெடிகுண்டு ஆயுதக் கலாச்சாரம் பரவிவிடும் என்று நண்பர் ரஜினிகாந்த் பேசியது ஒரு பிரஜையின் உரிமையாகும். அந்த உரிமையைக் கூட வழங்க முடியாது என ஆளும் கட்சியினர் அச்சுறுத்துகிறார்கள். அதற்குக் காரணம் அத்தகைய வன்முறைக் கலாச்சாரத்தின் கர்த்தாக்களாகவே ஆளும் கட்சியினர் இருப்பதுதான் என்று கூறினேன். இந்தக் காலகட்டத்தில் ஆர்.எம்.வீ. அவர்கள் வெளிநாட்டில் இருந்ததால் அவர் வகித்து வந்த உணவு, சிவில் சப்ளை துறை பொறுப்புக்கள் வணிக வரித்துறை அமைச்சரிடம் கூடுதலாக ஒப்படைக்கப்பட்டன.

ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் முதல்வர் ஜெயலலிதா விற்கும் இடையே இருந்த பிணக்கு காரணமாக ஜெயலலிதா ஆளுநரை அந்தக் காலகட்டத்தில் நேரில் சந்திக்காமல் இருந்த காரணத்தினால்தான் ஆர்.எம்.வீரப்பன் அவர்களின் பதவி நீடித்து வருவதாக ஏடுகள் எல்லாம் எழுதின. ஆனால் ஜெயலலிதா தனது பிடிவாதத்தை விடுத்து 1-9-95 அன்று மாலையில் ஆளுநர் மாளிகைக்குச் சென்று அவரைச் சந்தித்தார். அப்போது ஆர்.எம்.வீரப்பன், நடேசன் பால்ராஜ் என்ற இரண்டு அமைச்சர்களையும் நீக்க வேண்டுமென்றும், அவர்களுக்குப் பதிலாக இரண்டு பேரை புதிய அமைச்சர்களாக நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் இருவரும் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதையடுத்து ரஜினிகாந்த் அவர்கள் விடுத்த அறிக்கையில், "பாட்சா விழாவில் நாட்டு நலனை மனத்தில் கொண்டு நான் வெளியிட்ட கருத்தினையும் அதற்குப் பிறகு வந்த

பத்திரிகை செய்திகளும் நடந்த சம்பவங்களும் தமிழக மக்கள் அனைவரும் அறிந்ததே. ஆர்.எம்.வீரப்பன் வெளிநாடு சென்று திரும்பியவுடன் வெறும் மரியாதை நிமித்தம் அவரை நான் சந்தித்தேன். அந்தச் சந்திப்பு முதல்வருக்கு அதிருப்தியைத் தந்திருப்பது என்பது அதற்குப் பிறகு அவர் எடுத்த நட வடிக்கைகள் தெளிவாக்குகின்றன. நேற்று ஆர்.எம்.வீ. பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சி எனக்கு மிகவும் வருத்தத்தை அளித்திருக்கிறது. நான் பாட்சா விழாவில் வெடிகுண்டு கலாச்சாரத்தைப் பற்றிப் பேசியது தவறில்லை. ஆனால் முதல்வரின் சுபாவம் தெரிந்திருந்தும் அவர் அமைச்சரவையில் இருந்த ஆர்.எம்.வீ. மேடையில் இருக்கும்போது பேசியதுதான் தவறு என்பதை நான் இப்போது உணர்கிறேன். நான் பாட்சா விழாவில் பேசியதும், பிறகு ஆர்.எம். வீ.யை இல்லத்தில் சந்தித்ததும் இயற்கையாக நடந்த சம்பவங்கள்தான். அவருக்கு இன்று ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமைக்கு நான்தான் காரணம் என்று நினைக் கிறேன். அதற்காக அவரிடமும் அவரது விசுவாசிகளிட மும், அமரர் எம்.ஜி.ஆர். ரசிகர்களிடமும் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

ரஜினிகாந்த் அவர்களின் இந்த அறிக்கைக்கு அ.தி.மு.க. அமைச்சர் செங்கோட்டையன் விடுத்த பதில் அறிக்கையில் "ஏதோ வருத்தம் தெரிவிப்பதுபோல் முதல்வரைக் குறை கூறும் வண்ணம் ரஜினி அறிக்கை வெளியிட்டுள்ளார். தெளிவு இல்லாமல் பேசுவதும், அறிக்கை விடுவதும் சுய தெளிவு இல்லாதவர்களின் சுபாவம். முதல்வரின் சுபாவத்தைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு அருகதை வேண்டும். சிவாஜி கணேசனுக்கு செவாலியே பட்டம் வழங்கும் விழாவிலும் முதல்வரின் பெருந்தன்மையைப் பாராட்டி நன்றி கூறுவதை விட்டுவிட்டு சற்றும் மேடை நாகரிகம் இன்றி சம்பந்தம் இல்லாமல் பேசினார் ரஜினி" என்று குற்றம் சாட்டியிருந்தார்.


95ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் விடுத்த ஒரு அறிக்கையில்;

"முதலமைச்சர் ஜெயலலிதா ஆண்டவன் அளித்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழக மக்களுக்குச் சேவை செய்யாமல் அந்தப் பதவியை தன்னுடைய சுயநலத்திற்கும் ஆடம்பர ஆர்ப்பாட்டத்திற்கும் பயன்படுத்திவிட்டார். மக்களுக்கு நிறைய நல்லது செய்வார் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்த பல கோடி மக்களில் நானும் ஒருவன்.

மக்கள் நலனை மனதில் கருதித்தான் முதலமைச்சர் ஜெயலலிதாவை நான் விமர்சித்தேன். அதில் எந்தவித தனிப்பட்ட வெறுப்போ சுயநலமோ அரசியல் நோக்கமோ இல்லை. வரும் பொதுத் தேர்தலில் மக்களும் தாய்க்குலங்களும் அ.தி.மு.க.வினரும், எம்.ஜி.ஆர். ரசிகர்களும், தொண்டர்களும், செல்வி ஜெயலலிதா தலைமையில் மறுபடியும் ஆட்சி அமைத்துக் கொடுத்தால் தமிழக மக்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது'' என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

அ.தி.மு.க.விலிருந்து ஆர்.எம். வீரப்பன் நீக்கப்பட்டதைக் கண்டித்து சென்னையில் எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பில் உண்ணா விரதம் நடைபெற்றது. இந்த உண்ணா விரதத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் (இந்நாள் நிதியமைச்சர்) பொன்னையன் அப்போது பேசியது ஏடுகளில் இன்றும் உள்ளது. அது வருமாறு:-

"அண்ணா, கருணாநிதியின் ஆட்சிகள் அமைவதற்கான அச்சாணியாக, அடித்தளமாக எம்.ஜி.ஆர். மன்றங்கள் செயல்பட்டன. அதன்பின் எம்.ஜி.ஆர். மன்றங்களை அரசியல் சக்தியாக்க மாற்றும் பணியை அதன் நிறுவனர் ஆர்.எம். வீரப்பன் நிறைவேற்றினார். எம்.ஜி. ஆரின் பெயரையும் புகழையும் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா இப்போது எம்.ஜி.ஆரின் புகழை மறைக்கும் விதத்தில் செயல்படுகிறார். ஆர்.எம். வீரப்பனையே கட்சியிலிருந்து நீக்கி விட்டார். இந்த எதேச்சாதிகார நடவடிக்கை கண்டிக்



ரஜினிகாந்த்

கத்தக்கது. அ.தி.மு.க. தலைமை, உலக வரலாறு காணாத ஊழலில் சிக்கியுள்ளது. ஜனநாயக விரோத, அராஜக நடவடிக்கைகளில் அது ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் எம்.ஜி.ஆரின் புகழைக் காக்க ஜெயலலிதாவைக் கட்சித் தலைமையிலிருந்து நீக்க வேண்டும். எம்.ஜி.ஆரின் உண்மையான வாரிசான ஆர்.எம். வீரப்பனைத் தலைவராக்க வேண்டும். இதற்கு ரஜினிகாந்த் உதவ வேண்டும்."

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு எதிராக உண்ணும் விரதம் இருக்கப் போவதாக ஆளுங்கட்சியான அ.தி.மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க.விற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடைவெளி அதிகமாகிக் கொண்டிருந்த காலகட்டத்தில் தேசிய முன்னணியின் பக்கம் அ.தி.மு.க. சாய்கின்ற நிலை தென்பட்டது. அதைப்பற்றி ஏடுகள் எல்லாம் பெரிதாக எழுதத் தொடங்கின. அவர்களின் அந்தச் செயற்பாடுகள் காரணமாக தி.மு.கழகமும் தேசிய முன்னணியிலிருந்து சற்று விலகியே இருக்க முற்பட்டது. இந்த நிலையில் 95ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற தேசிய முன்னணியின் கூட்டத்திலே கழகம் கலந்து கொள்ளவில்லை. அதுகுறித்து செய்தியாளர்கள் என்னிடம் நீங்கள் தேசிய முன்னணி கூட்டத்தில் கலந்து கொள்ளாததை வைத்து, அந்த அணியிலிருந்து உங்களை வெளியே அனுப்பக்கூடிய வாய்ப்பு ஏற்படுமா என்று கேட்டார்கள். அதற்கு நான், தேசிய முன்னணியில் அ.தி.மு.க.வைச் சேர்ப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருவதைப் பார்த்து நாங்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தேசிய முன்னணியில் தி.மு.க. இருக்கும் போதே அதில் உள்ள சில முக்கியத் தலைவர்கள் ஜெயலலிதா வீடு தேடிச் சென்று அ.தி.மு.க.வுக்கு அழைப்பு விடுத்ததையும், அறிக்கைகள் விடுத்ததையும் தி.மு.க. தனக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகக் கருதுகிறது. 1988 முதல் ஏழாண்டு காலம் எங்களுடன் அவர்கள் நண்பர்களாக இருந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நட்புக்கு இலக்கணமாகவும், சமூக நீதிக் காவலராகவும் திகழுகிற

வி.பி. சிங்கிடம் நாங்கள் கொண்டுள்ள மதிப்பு என்றைக்கும் மாறாது என்று கூறினேன்.

எங்களுடைய இந்த முடிவு குறித்து 24-7-95 தேதியிட்ட தினமணி தலையங்கத்தில் "தி.மு.க. வை தேசிய முன்னணியில் வைத்துக் கொண்டே ஜெயலலிதாவின் வீடு தேடிச்சென்று அதன் தலைவர்கள் பேச்சு நடத்தியதை, தி.மு.க. வுக்கு இழைக்கப்பட்ட அவமானமாக கருணாநிதி கருதியது நியாயமே. அதோடு, தேசிய முன்னணியுடன் தி.மு.க.வுக்கு இருந்து வந்த உறவு முடிவுக்கு வந்துவிட்டது என்றும் அவர் அறிவித்து விட்டதில் வியப்படைவதற்கில்லை. எனினும் அ.தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்து விட்டாலே தமிழகத்தில் கணிசமான மக்களவைத் தொகுதிகளைக் கைப்பற்றி விடலாம் என்ற தேசிய முன்னணி தலைவர்களின் கணிப்பு தப்புக் கணிப்பாகிவிடும்" என்று எழுதியிருந்தது.

51

அங்கும் இங்கும் அரசியல் படுகொலைகள்!

15-8-1995 அன்று விடுதலை நாள் விழா. அதற்கு முதல்நாள் இரவு வேலூர் கோட்டை சிறப்பு முகாமிலிருந்து 43 விடுதலைப் புலிகள் சுரங்கப் பாதை வெட்டி, அதன் வழியாகத் தப்பிச் சென்று விட்டனர். அவர்களில் 8 பேர் சென்னையில் சிக்கிக் கொண்டனர். 2 பேர் சயனைடு விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர். இதற்கு முன்பு 16-11-92 அன்று 19 விடுதலைப் புலிகள் வேலூர் கோட்டை மதில் சுவரில் கயிறு கட்டி ஏறித் தப்பினர் என்பது தெரிந்ததே! அதில் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். 7 பேர் சரணடைந்தனர். மற்றும் 7 பேர் தப்பிவிட்டனர். மற்றொருவர் தப்பிச் செல்லும் போது அடிபட்டு இறந்தார். தற்போது அந்த அறையில் குழி தோண்டி 43 விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றனர்.

தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி அமைத்ததைப்போல ஆந்திராவிலும் என்.டி. ராமராவ் அவர்கள் தெலுங்கு தேசம் கட்சியை ஆரம்பித்து ஆட்சியைக் கைப்பற்றினார். 95ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அந்தத் தெலுங்கு தேசம் கட்சி இரண்டாக உடைந்தது. அவருடைய மருமகனும், அவரது அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்தவருமான சந்திரபாபு நாயுடு அவர்களே அந்தக் கட்சி பிரிவதற்குக் காரணமாக அமைந்தார். ராமராவ் அவர்கள் லட்சுமி பார்வதி என்பவரைத் திருமணம் செய்துகொண்டதை அடுத்து, அவரைக் கட்சி நடவடிக்கைகளிலே ஈடுபடுத்த விடக் கூடாது என்றும், அந்த அம்மையாரை ஆதரிக்கும்

அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இடையில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவில்லை. சட்டப்பேரவையில் மொத்தம் 295 உறுப்பினர்களில் 214 பேர் தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர் களில் 163 பேர் சந்திரபாபு நாயுடுவிற்கு ஆதரவு கொடுத்தனர். ஆளுநர் பெரும்பான்மையை 31-8-95 அன்றுக்குள் நிரூபிக்க வேண்டுமென்று ராமராவ் அவர்களுக்கு ஆணை பிறப்பித் தார். அதன் அடிப்படையில் 31ஆம் தேதியன்று மாலை 4 மணிக்கு சட்டப்பேரவை கூடி நம்பிக்கை வாக்கெடுப்பு கோர முடிவு செய்யப்பட்டிருந்தது. இதைத்தொடர்ந்து என்.டி.ராம ராவ் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து 31ஆம் தேதியன்று ஹைதராபாத்தில் சட்டப் பேரவைமுன் மக்களைக் கூடுமாறு வேண்டுகோள் விடுத் தார். அவர் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்த நேரத்தில் சந்திரபாபு நாயுடுவை சட்டமன்றத் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவராக அவரது ஆதரவாளர்கள் தேர்ந் தெடுத்து அனுப்பிய தீர்மானத்தைப் பரிசீலித்த சட்டமன்றப் பேரவைத் தலைவர் சந்திரபாபு நாயுடுவை சட்டமன்ற தெலுங்கு தேசக் கட்சித் தலைவராக அங்கீகரிப்பதாக 29ஆம் தேதியன்று அறிவித்தார். சந்திரபாபு நாயுடு உடனடியாக ராமராவ் உட்பட அனைத்து தெலுங்கு தேச உறுப்பினர் களும் அரசின் நம்பிக்கை தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்று கொறடா ஆணை பிறப்பித்தார். 30ஆம் தேதியன்று தெலுங்கு தேசக் கட்சியின் பொதுக்குழு கூடி சந்திரபாபு நாயுடுவை அந்தக் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது. இதற்கிடையில் வி.பி.சிங், எஸ்.ஆர். பொம்மை, சரத்யாதவ் ஆகியோர் ஹைதராபாத் சென்று சமரச முயற்சியில் ஈடுபட்டும் வெற்றி பெறவில்லை.

31ஆம் தேதி காலை 9.30 மணியளவில் என்.டி. ராமராவ் அவர்களுக்குத் திடீரென்று பக்கவாதத் தாக்குதல் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தார். ஆளுநர் கிருஷ்ணகாந்த் மருத்துவமனைக்குச் சென்று ராமராவ்

அவர்களின் உடல்நலம் விசாரித்தபோது, அங்கேயே ராம ராவ் முதல் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாகக் கூறி தனது அமைச்சரவையின் விலகல் கடிதத்தை ஆளுநரிடம் அளித்தார். மத்திய அரசுடன் கலந்து கொண்டு ஆளுநர் கிருஷ்ணகாந்த் ராமராவ் அவர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டார்.

மாலை 4 மணிக்குக் கூடிய சட்டப் பேரவையில் ராம ராவும், அவரது ஆதரவாளர்களும் கலந்து கொள்ளவில்லை. பேரவைத் தலைவர் அதுவரை முதல்வராக இருந்த ராமராவ் அவர்களின் பதவி விலகலை ஆளுநர் ஏற்றுக்கொண்டு கடிதம் எழுதியிருப்பதாகக் கூறி அவையை ஒத்திவைத்தார். சந்திரபாபு நாயுடு அவர்களை அரசு அமைக்குமாறு ஆளுநர் அழைப்பு விடுத்ததின் பேரில் 1ஆம் தேதியன்று சந்திரபாபு நாயுடு ஆந்திராவின் முதல் அமைச்சராகப் பதவியேற்றார்.

ஆந்திராவில் இந்த அளவிற்கு ஒரு முதலமைச்சர் தனது பதவியை இழந்த நேரத்தில் பஞ்சாப் முதலமைச்சருக்கு இதைவிட பயங்கரக் கொடுமை ஏற்பட்டது. பஞ்சாப் அரசின் தலைமைச் செயலகம் சண்டிகர் நகரிலே உள்ளது. அங்கே அந்த மாநில முதல்வராக இருந்த பியாந்த் சிங் மாலை 5 மணி அளவில் தனது பணிகளை முடித்துவிட்டு வீட்டிற்குச் செல்வதற்காகத் தனது காரிலே ஏற முற்பட்டபோது, அந்தக் காரில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் அடையாளம் தெரியாத அளவிற்கு அவர் உடல் சிதறி பலியானார். அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேலும் இரண்டு கார்களும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அங்கே இருந்தவர்கள் 12 பேர் இந்தச் சம்பவத்தில் பலியானார்கள். பியாந்த் சிங் கொலை செய்யப்பட்டதை அடுத்து மாநில நலத்துறை அமைச்சர் எச்.ஆர். பிரார் தற்காலிக முதல்வராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். குடியரசுத் தலைவர், பிரதமர், குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோரும் மற்ற தலைவர்களும் இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றபோது, பியாந்த் சிங் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பிரதமர் நரசிம்மராவ் அவர்களின் தீவிர ஆதரவாளராக இருந்து வந்தார். சில ஆண்டுகளாக அடங்கிக்கிடந்த தீவிர வாதிகளின் செயலாக இது இருக்குமோ என்று காவல்துறை சந்தேகப்பட்டது.

1995ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடை பெற்ற விநாயகர் சிலை ஊர்வலத்தின்போது அதற்கு முந்தைய ஆண்டுகளைப் போலவே சென்னையில் பயங்கரக் கலவரம் நடைபெற்றது. கண்ணீர்ப் புகைக் குண்டுகள் சரமாரியாக வீசப்பட்டன. 150க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். மேலும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் 20 பேர் காயமடைந்தனர். காவல்துறையினர் தடியடி காரண மாகப் பிள்ளையார் சிலையைத் தூக்கிக்கொண்டு வந்தவர் கள் ஆங்காங்கு அவைகளை அப்படியே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். காவல் துறையினரின் செயலுக்குக் கண்டனம் தெரிவித்து இந்து முன்னணியினர் சீரணி அரங்கம் அருகே தர்ணா நடத்தினர். அங்கும் கல்வீச்சும் கண்ணீர்ப்புகை வீச்சும் நடந்தன.

சிலம்புச் செல்வர் என்று அனைவராலும் பாராட்டி அழைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் தலைவராக இருந்த ம.பொ.சி. அவர்கள் சில மாதங்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்தவர் 3-10-95 அன்று இயற்கையடைந்தார். வீரபாண்டிய கட்ட பொம்மனையும், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனாரையும் எழுத்து வடிவில் தமிழகத்திற்குத் தந்தவர் அவர்தான். விடுதலைப் போராட்ட வீரராகச் சிறைக் கோட்டங்களில் சித்திரவதையேற்று "சிப்பியேந்திய சிவஞானம்" என்று தன்னைத்தானே அழைத்துக் கொள்வதிலே தனி இன்பம் காண்பார். அந்தத் தியாக உணர்வு அவர் துவக்கத்தில் இருந்த இயக்கத்தில் மதிக்கப்படவில்லை என்ற மன வருத்தம் அவருக்கு உண்டு. அதை உணர்ந்து அண்ணா

அவர்கள் அவரை அணைத்துக்கொண்டதும் உண்டு. அண்ணா அவர்களின் ஆட்சியில் சென்னை ராஜ்யம் என்பதற்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டபோது ஒரு தாயின் மகிழ்ச்சியோடு கழக ஆட்சியைப் பாராட்டியவர் ம.பொ.சி. 1971ஆம் ஆண்டிற்குப் பிறகு அவரைச் சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவராக ஆக்கியவன் நான்தான். தொடர்ந்து அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் அவர் மேலவைத் தலைவராகவே பொறுப்பேற்றார்.

ம.பொ.சி. அவர்கள் ஆரம்பக் காலத்தில் திராவிட இயக்கத்தைக் கடுமையாகச் சாடியவர். எனினும் பெரியார், அண்ணா, என் போன்றவர்களிடம் தனிப்பட்ட முறையில் அன்பு செலுத்தியவர். தமிழரசுக் கழகத்திலே முக்கிய பொறுப்பான பதவிகளை வகித்த கவிஞர் கா.மு. ஷெரீப், ஏ.பி. நாகராஜன், திருத்தணி ரஷீத், மாடர்ன் தியேட்டர்ஸ் வேணு போன்றவர் களிடம் கலையுலகத் தொடர்பு கொண்டவன் என்ற முறையில் ம.பொ.சி. அவர்களிடமும் பழகிடும் வாய்ப்பு எனக்கு துவக்கத்தில் கிடைத்தது. ஒருமுறை மயிலாடுதுறை யில் ம.பொ.சி. அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டு அவருக்குச் சிறு காயம் ஏற்பட்டது என்ற செய்தி கேள்விப்பட்டவுடன் அந்தப் பகுதியில் நிகழ்ச்சிகள் சிலவற்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்த நான் அவர் தங்கியிருந்த இடம் சென்று நலம் விசாரித்தேன். கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தமிழைப் பயிற்று மொழி ஆக்குவதற்கான ஆணையைப் பிறப்பித்தபோது மாணவர்கள் அதை எதிர்த்துக் கடும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போது ம.பொ.சி. என்னைச் சந்தித்து நிலைமையை அனுசரித்து அந்த ஆணையைச் சற்றுத் தளர்த்துமாறு வலியுறுத்தியதன் காரணமாகத்தான் லட்சுமணசாமி முதலியார் தலைமையில் குழு அமைக்கப் பட்டது. அவரும் மேலவை உறுப்பினராக இருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் என்னை அடிக்கடி சந்தித்து அறநிலையத்துறை, ஆலயங்களின் சீரமைப்பு, தமிழ் மொழியின் ஆக்கம் போன்றவைகளில் பல அறிவுரைகளை


வழங்கியிருக்கிறார்கள். அவரது மறைவு என்னைப் பெரிதும் வருந்தச் செய்தது. அவரது நண்பர்களுக்கும், குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டேன்.

அதே அக்டோபர் திங்கள் 7, 8 ஆகிய நாட்களில் விழுப்புரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் "சமுதாய விழிப்புணர்ச்சி மாநாடு", "அரசியல் விழிப்புணர்ச்சி மாநாடு" ஆகியவை டாக்டர் ராமதாஸ் அவர்கள் தலைமையில் மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்டது. ஏ.கோவிந்த சாமி அரங்கில், திருக்குறள் முனுசாமி பந்தலில் நடைபெற்ற அந்த மாநாட்டில் இரண்டாவது நாளில் நான் கலந்து கொண்டேன். பேராசிரியர் தீரன் தலைமையில் அந்த மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் அந்தக் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அலங்கரிக்கப்பட்ட தனியானதொரு நாற்காலியில் என்னை அமரவைத்து மிகச் சிறப்பானதொரு உரையினை ஆற்றினார். அவரது பாராட்டுரையின் சில பகுதிகள் மட்டும் இதோ :-

"இட ஒதுக்கீட்டிற்காக நாங்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். 1989இல் கலைஞர் ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திற்குள்ளாக இடஒதுக்கீடு பிரச்சினையைத் தீர்க்க பெருமுயற்சி எடுத்தார். அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தை அனுப்பி என்னை அவரது இல்லத்திற்கு அழைத்து வரச் சொன்னார். அதன்படி நாங்கள் கலைஞர் இல்லத்திற்குச் சென்று இட ஒதுக்கீடு பிரச்சினை பற்றிப் பேசினோம். அப்போது எங்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டேன். மற்றவர்கள் ஏதாவது நினைத்துக்கொள்வார்கள், வேறு சில சாதிகளையும் சேர்த்துச் சொல்லுங்கள் என்றார். நான் சில சாதிகளைச் சேர்த்து வைத்திருந்த பட்டியலை அவரிடம் கொடுத்தேன். அதன்பிறகு மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு என்று ஒரு பிரிவை உருவாக்கி, அதில் 107 பிரிவுகளைச் சேர்த்து ஆணை பிறப்பித்தார். நான் இந்தக் கனியைக் கொடுக்கிறேன். இதனைச் சாப்பிட்டுப் பாருங்கள். வன்னியர்க்கு மருத்துவம்,

பொறியியல் படிப்புகளில் முன்பு எவ்வளவு இடங்கள் கிடைத்தது, இப்போது எவ்வளவு கிடைக்கிறது என்று பாருங்கள் என்றார். உண்மைதான். ஆனால் கலைஞர் ஆட்சி இரண்டு ஆண்டுகளில் கலைக்கப்பட்டது. நாங்கள் இட ஒதுக்கீட்டிற்காகப் போராடியபோது சட்டத்தில் இடமில்லை என்று சொன்னவர்களுக்குச் சாட்டையடி கொடுப்பது மாதிரி, சட்டத்தில் இடமிருக்கிறது, இதற்கு ஒரு ஆணை பிறப்பித்தாலே போதும் என்று கூறி அந்த ஆணையைப் பிறப்பித்த அந்தத் துணிச்சல், அந்தப் பக்குவம், அந்த மனப்பாங்கு கலைஞருக்குத் தான் வந்தது, வேறு யாருக்கும் வரவில்லை. எனவே இந்த இட ஒதுக்கீட்டை, பெருந்தன்மை யோடு இந்தச் சமுதாயத்தை மதித்து அந்த ஆணையை வெளி யிட்ட கலைஞர் அவர்களே, உங்களுக்கு இந்தச் சமுதாயம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது. அந்த நன்றியைச் சொல்வதற் காகத்தான் நாங்கள் உங்களை இங்கே அழைத்திருக் கிறோம்.”

95ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் உள்ளாட்சி மன்றங் களின் தேர்தலை நடத்தப் போவதாக மாநில அரசு அறிவித்தது. அத் துடன் இணைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் தேர் தலையும் நடத்தவேண்டுமென்று அனைத்து எதிர்க்கட்சிகளும் கோரிக்கை வைத்தன. தேர்தல் அறி விக்கப்பட்ட போதிலும், தொகுதி கள் பிரிக்கப்பட்டதில் ஏராளமான தவறுகள் நடைபெற்றது கண்டு பிடிக்கப்பட்டு அவைகள் ஏடுகளின் மூலம் எதிர்க்கட்சியினரால் எடுத்துக் காட்டப்பட்டது. பழங்குடி வகுப்பைச் சேர்ந்த ஒருவர்கூட இல்லாத தொகுதி, பழங்குடி வகுப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இதுபோல் ஏராளமான தவறுகள். எனவே அறிவித்தவாறு உள்ளாட்சித் தேர்தல் நடைபெற வில்லை.



ம.பொ.சி.

1995ஆம் ஆண்டு நவம்பர் 3ந் தேதியன்று இஸ்ரேல் நாட்டின் தலைநகர் டெல் அவிவ் நகரில் அமைதிப் பேரணி நடைபெற்றது. சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்துகொண்ட அந்தப் பேரணியில் கலந்து கொண்டுவிட்டு அந்த நாட்டின் பிரதமர் இட்ஸ்ஹாக் ரபின் இல்லம் திரும்புவதற்காகக் காரில் ஏற முற்பட்டார். அப்போது ஒரு கொலையாளி அவரை நோக்கி இருமுறை துப்பாக்கியால் சுட்டதில், துப்பாக்கியிலிருந்து வெளிவந்த குண்டுகள் அவருடைய முதுகிலும் வயிற்றிலும் பாய்ந்தன. ஆபத்தான நிலையில் அவர் உடனடியாக மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சையும் நடைபெற்றது. ஆனால் ஒரு மணி நேரத்திற்குப்பின் ரபின் உயிரிழந்து விட்டார். பிரதமர் ரபினைச் சுட்டுக்கொன்ற கொலையாளியைப் போலீசார் உடனே கைது செய்தனர். வலதுசாரி தீவிர அமைப்பைச் சேர்ந்த அந்தக் கொலையாளியின் பெயர் அமீர் என்றும் சட்டக் கல்லூரி மாணவன் என்றும் தெரியவந்தது.

1922ஆம் ஆண்டு ஜெருசலம் நகரில் பிறந்த ரபின் படிப் படியாக உழைத்து முன்னேறியவர். தனது 18வது வயதிலேயே ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றத் துவங்கினார். 1948ஆம் ஆண்டு நடந்த சுதந்திரப் போரில் பங்கேற்று ராணுவ கமாண்டராகப் பதவி உயர்வு பெற்றார். அரசியலில் பிறகு தீவிரமாக இறங்கி 1992ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பங்கேற்று தொழிலாளர் கட்சியை வெற்றி பெறச் செய்து, இஸ்ரேல் நாட்டின் பிரதமராக ஆனார். பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி அமெரிக்காவின் உதவியுடன் இஸ்ரேல்- பி,எல்.ஓ. அமைதி ஒப்பந்தத்துக்கு வழி வகுத்தார் ரபின். இதற்காக யாசர் அராபத்துக்கும் ரபினுக்கும் 1994ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இந்த மாபாதகத்தைப் புரிந்தவன் யூத சமய சாத்திரங்களில் ஆழ்ந்த பிடிப்புடையவன். பாலஸ்தீனத்தோடு ரபின் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையை இஸ்ரேலில் உள்ள வைதீக வலதுசாரிக் குழுவினர் துவக்கத்திலிருந்தே எதிர்த்து

வருகிறார்கள். சட்டம் பயின்று வரும் மாணவன் வலதுசாரி சித்தாந்தத்துக்கு மனத்தை அடிமையாக்கியதால், சமய நெறிக்கும் சட்டத்துக்கும் புறம்பான இந்தக் கொடுமையைச் செய்து விட்டான். ரபினின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இந்தியாவில் ஒருநாள் துக்கம் கடைப் பிடிக்கப்பட்டது.



யாசர் அராபத்

52

திருச்சியில் தி.மு.க. 8வது மாநில மாநாடு!

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் என்பதை மனதிலே கொண்டு கழகத்தின் 8வது மாநில மாநாட்டினை திருச்சியிலே ஜனவரி 96இல் நடத்துவது என்று கழகத்தின் நிர்வாகக் குழுவில் முடிவெடுக்கப்பட்டது. திருச்சியின் வரலாற்றில் அவ்வளவு பெரும் பரப்பளவு கொண்ட ஓர் இடத்தில் அதுவரையில் எந்த மாநாடும் நடைபெற்றதில்லை. நான்கரை லட்சம் சதுர அடி கொண்ட பந்தல் - பந்தலைச் சுற்றியுள்ள அண்ணா நகர் வளாகம் மேலும் நான்கரை லட்சம் சதுர அடி பரப்பளவு. கடலென பரந்து கிடக்கும் அந்த இடத்தை அரும்பாடுபட்டுத் தேர்வு செய்து அந்தக் கொட்டப்பட்டில் வாழுகின்ற பெருமக்களின் ஒப்புதலோடு அங்கே மாநில மாநாட்டுக்கான அண்ணா நகரையும், அன்பில் பந்தலையும் வரவேற்புக் குழுத் தலைவர் நேரு ஏற்பாடு செய்திருந்தார்.

நேருவுடன் இணைந்து நிதிக் குழுத் தலைவர் பால கிருஷ்ணன், துணைத் தலைவர்கள் அரியலூர் ஆறுமுகம், மாயவன், வரவேற்புக் குழு செயலாளர்கள் கோ.சி. மணி, பெரியண்ணன், செல்வேந்திரன், பரமத்தி சண்முகம், சிவசுப்பிரமணியம், அம்பலவாணன், துணைச் செயலாளர்கள் கே.கே.எம். தங்கராசு, நாகவேணி வேலு, ரெங்கய்யன், சுப.ராசகோபால், ஏ.சிவராமன், பா.செழியன், டாக்டர் தேவராசன், மெகன், மகராசன் மற்றும் ஒவ்வொரு குழுவிற்கும் பொறுப்பேற்றிருந்த உடன்பிறப்புகள் எல்லாம் பம்பர மெனப் பணியாற்றினார்கள்.

தீர்மானக் குழுவுக்கு செயலாளர் சிவா என்றபோதிலும், அவரும், ஊர்வலக் குழு செயலாளர் அன்பில் பொய்யா மொழியும், இளைஞர் அணி செயலாளர் ஸ்டாலினுடன் இணைந்து தென்னரசு பெயரால் அமைந்த தியாகிகள் மண்டபப் பணிகளிலும், திருச்சி ஏ.வி.கே. பெயரால் அமைந்த திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சிக் கூடப் பணி களிலும் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தனர். எஸ்.ஏ.ஜி. ராபி தலைமையில் பந்தல் குழுவினரும், ஆதிமூலம், நாகசுந்தரம் மேற்பார்வையில் உபசரிப்புக் குழுவினரும், மதிவாணன் தலைமையில் தொண்டர் அணியினரும், ராஜாமணி ரங்கராசன் தலைமையில் மகளிர் தொண்டர் அணியினரும், அரங்கராசன் மேற்பார்வையில் நகர் அலங்காரக் குழுவினரும், உபயதுல்லா, அஞ்சுகா மீனாட்சிசுந்தரம் மேற்பார்வையில் விளம்பரக் குழுவினரும், செங்குறிச்சி கருப்பையா தலைமையில் அலுவலகக் குழுவினரும், அவர்களோடு இணைந்து அனைத்துக் குழு உறுப்பினர்களும் அரும்பாடு பட்டு அந்த மாநாட்டினை வெற்றி மாநாடாக ஆக்கித் தந்தனர்.

மாநாட்டின் துவக்கமாக 26-1-1996 அன்று நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில், பொதுத் தேர்தலில் முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் உடன்பாடு கண்டு தி.மு.க. தோழமைக் கட்சிகளின் அணியை உருவாக்கி ஊழல் ஆட்சிகளை வீழ்த்தி நல்லாட்சி அமைத்திடும் முயற்சிகளில் கழகம் ஈடுபடும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

26ஆம் தேதி மாலையில் தொடங்கிய பேரணியில் 25 இலட்சம் பேர் பங்கேற்றனர். வெள்ளிக்கிழமை மாலையில் தொடங்கிய பேரணி சனிக்கிழமை காலை 7.30 மணி வரை வந்து கொண்டே இருந்தது. 14 மணி நேரம் நான் மேடையிலே இருந்தவாறு தொடர்ந்து அந்த ஊர்வலத்தை வைத்த கண் மாறாமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன். காலை 7.30 மணி அளவிலும் ஊர்வலம் வந்து கொண்டு தானிருந்தது. "திருச்சி நகரத்தின் இயல்பு வாழ்க்கை ஸ்தம் பித்து விட்டது, ஒளிமிகுந்த கருப்பு சிவப்பு உடையணிந்து தி.மு.கழகக் கொடிகளை ஏந்திய ஆயிரக்கணக்கான ஆண் களாலும் பெண்களாலும் அனைத்துச் சாலைகளும் நிரம்பி


வழிந்தன" என்று 27-1-96 தேதிய "இந்து" இதழே எழுதியிருந்தது. விடிய விடிய ஊர்வலம் என்று தினத்தந்தியும், எங்கு பார்த்தாலும் தலைகள், கொடிகள் என்று தினமணியும், தி.மு.க.வின் பலத்தை நிரூபிக்கும் வகையில் பேரணி என்று கதிரவனும், திருச்சி முற்றுகையிடப்பட்டதாக மாலை முரசும், காலையிலும் பேரணி தொடர்ந்ததாக யு.என்.ஐ. நிறுவனமும் ஊர்வலத்தை விமர்சித்திருந்தன.

மாநாட்டின் இரண்டாவதுநாள் நிகழ்ச்சி காலை 9 மணியளவில் திருச்சி கொட்டப்பட்டு அண்ணா நகரில், மன்னை நாராயணசாமி முகப்புடன் கூடிய அன்பில் தர்மலிங்கம் பந்தலில், சாதிக்பாட்சா அரங்கத்தில் தொடங்கியது. கொள்கை பரப்புச் செயலாளர் டி.ராஜேந்தர் இசையமைத்த 'கொள்கை கீதம்' ஒலிநாடாவை நான் வெளியிட, முதல் ஒலி நாடாவை டி.ஆர்.பாலு பெற்றுக் கொண்டார். வரவேற்புக் குழுத் தலைவர் கே.என். நேரு வரவேற்புரை ஆற்றினார். முதல்நாளன்று இரவு கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் மாநாட்டினைத் திறந்து வைத்து உரையாற்றினார். இறுதி நிகழ்ச்சியாக போலீஸ் கண்ணன் நடத்திய 'மீண்டும் உதயம்' நாடகம் நடைபெற்றது.

மாநாட்டின் மூன்றாவது நாள் 30 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமாகத் தமிழையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக உடனடியாக ஆக்கிட வேண்டுமென்ற தீர்மானத்தை முரசொலி மாறன் முன்மொழிந்தும், பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்தும் உரையாற்றினார்கள்.

மாநாட்டை நடத்திய கழகத்தைப் பற்றி அப்போது வெளிவந்த இந்தியா டுடே- திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்னொரு பெயர் ஃபீனிக்ஸ் பறவை. இடையில் இரண்டு ஆண்டுகள் போக, கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் அரியணையையே பார்க்காத கட்சி. இரண்டு முறை பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட கட்சி. இரண்டு பிளவுகளைச் சந்தித்த கட்சி. வேறொரு கட்சியாக இருந்திருந்தால் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். ஆனால் தி.மு.க. இதில் இருந்தெல்லாம் மீண்டு எழுந்து தமிழக அரசியல் அரங்கில் அசைக்க முடியாத கட்சியாகவே இருந்து வருகிறது. திருச்சி

மாநாடு இதைத்தான் உணர்த்தியது. இந்தக் கூட்டம் திருச்சி இதுவரையிலும் கண்டிராத ஒன்று என்று போலீஸ் அதிகாரிகள் கூட ஒப்புக் கொள்கிறார்கள்- என்று எழுதியிருந்தது. இது போலவே பல ஆங்கில இதழ்கள் கழக மாநாட்டின் சிறப்பினை வர்ணித்து எழுதியிருந்தன.



நேரு

ஜனவரி திங்கள் இறுதியிலே தி.மு.கழக மாநாடு இவ்வாறு நடைபெற்றது என்றால் பிப்ரவரி 8ஆம் தேதியன்று அ.தி.மு.க. அதே திருச்சியில் மாநாட்டினை நடத்தியது. ஆளுங்கட்சியைச் சேர்ந்த அத்தனை அமைச்சர்களும் இரவு பகலாக உழைத்து கழக மாநாட்டினை வென்று காட்டிட வேண்டுமென்ற எண்ணத்தோடு பணத்தை அள்ளிக் கொட்டி ஏற்பாடுகளைச் செய்தனர். ஆனால் இந்த இரண்டு மாநாடுகளையும் ஒப்பிட்டு மாலைமுரசு எழுதியது.

"தி.மு.க.வின் இந்த எழுச்சிப் பேரணியை முறியடிக்க ஜெயலலிதா திட்டம் தீட்டினார். திருச்சியில் நடந்த தி.மு.க. பேரணியை விட அ.தி.மு.க. பேரணியைப் பிரமாண்டமாக நடத்த அமைச்சர்கள், மாவட்ட அ.தி.மு.க. செயலாளர்களிடம் அவசர ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. பேரணி புறப்பட்டபோது எழுச்சியுடன் புறப்பட்டது. அதாவது பேரணியின் முன்பகுதி மட்டுமே எழுச்சியோடு இருந்தது. பின்பகுதியில் எழுச்சி இல்லை. பேரணியில் வந்த அணியினர் தி.மு.க.வினர் போல சாரைசாரையாக சாலையை அடைத்துக் கொண்டு செல்லாமல் நான்கு நான்கு பேராகச் சென்றனர். தி.மு.க. பேரணி இடைவெளி இல்லாமல் சென்றது. ஆனால் அ.தி.மு.க. பேரணி நீண்ட இடைவெளி விட்டுச் சென்றது. 72 வயது கருணாநிதி மாநாட்டிற்கு 7 தடவை வந்து இருக்கிறார். உடன்பிறப்புகளுக்கு மாநாட்டு அழைப்புக் கடிதம் எழுதியிருக்கிறார். எனவே தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் எழுச்சி ஏற்பட்டது. ஆனால் புரட்சித் தலைவி மாநாட்டுப் பக்கமே தலையைக் காட்டவில்லை. மாநாட்டு ஏற்பாடுகள் எப்படி நடக்கிறது

என்று பார்க்க ஒருநாள் கூட மாநாட்டுப் பந்தலுக்கு வரவே இல்லை. இப்படியிருக்கும்போது தொண்டர்கள் மத்தியில் எப்படி எழுச்சி ஏற்பட முடியும் என்று அ.தி.மு.க.வினர் கேள்விக்கணை எழுப்பியதைக் கேட்க முடிந்தது. தி.மு.க. பேரணியைப்போல் அ.தி.மு.க. பேரணி எழுச்சிமயமாக இருந்தது என்று ஜெயலலிதாவினால் கூற முடியாது. பேரணியின் எழுச்சிக் கணக்கைப் பார்த்தால் கருணாநிதிக்கு வெற்றி. இதுதான் திருச்சி நகர மக்களின் பொதுவான கணிப்பு." இவ்வாறு மாலைமுரசு எழுதியது.


சுதேசமித்திரன் இதழோ, "ஜெயலலிதா பொறுப்பேற்ற பின்பு கட்சியும் ஆட்சியும் கலந்துவிட்டன. முதலமைச்சருக்கே கட்சிக்கும் ஆட்சிக்கும் வித்தியாசம் காண முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் திருச்சி மாநாட்டுப் பேச்சில் கண்ணியம், பெருந்தன்மை தேடப்பட வேண்டியதாக ஆகிவிட்டது. தி.மு.க. தலைவர் கருணாநிதியை ஜெயலலிதா விமர்சித்துள்ள பாங்கு முதலமைச்சரின் ஆத்திரத்தையும் தாளாமையையும் எடுத்துக் காட்டுகிறது" என்று எழுதியது.

டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில இதழ், "தி.மு. கழகத்தினர் நடத்திய பேரணிக்கு வந்த கூட்டம் தானாக வந்த கூட்டம், அதனால் அது எழுச்சிமயமாகத் திகழ்ந்தது. ஆனால் அ.தி.மு.க. நடத்திய ஊர்வலம் அப்படி இல்லை" என்று எழுதியிருந்தது.

பொதுத்தேர்தல் அறிவிப்பு எந்த நிலையிலும் வரலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் பிப்ரவரி திங்கள் இறுதியில் "இந்து" இதழ் 'சென்டர் பார் மீடியா ஸ்டடீஸ்' எடுத்த கருத்துக்கணிப்பை வெளியிட்டது. அதிலே, தமிழ்நாட்டிலே அ.தி.மு.க. எதிர்ப்பு அலை பலமாக வீசுகிறது என்றும், சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தனித்துப் போட்டியிட்டால் கூட 34 சதவிகித வாக்குகளையும் 130 இடங்களையும் பெற்று தி.மு.கழகமே ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் எழுதியது. அ.தி.மு.க. ஆட்சியை தி.மு.க. ஆட்சியோடு ஒப்பிடும்படி வாக்காளர்களிடம் கேட்ட கேள்விக்குப் பெரும்பாலான வாக்காளர்கள் கழகத்தின் ஆட்சியே

சிறந்தது என்று பதிலளித்ததாகவும் அந்தக் கருத்துக்கணிப்பு கூறியது.

தேர்தலில் அணிகள் எவ்வாறு அமையும் என்பதைப் பற்றி ஏடுகள் எல்லாம் தங்கள் அபிப்பிராயத்திற்கு ஏற்றவாறு செய்திகளை வெளியிட்டன. இந்தக் காலகட்டத்தில் உமா சங்கர் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி மதுரையிலிருந்து திருச்சிக்கும், பின் திருச்சியிலிருந்து வேறு இடத்திற்கும் திடீர் திடீரென மாற்றப்பட்டார். அ.தி.மு.க. அரசின் ஊழலுக்கு இவர் ஒத்துழைக்க மறுத்த காரணத்தினால்தான் இவ்வாறு பந்தாடப்படுகிறார் என்று ஏடுகள் எழுதின. பத்திரிகைகளில் வந்த இந்தச் செய்திகளின் அடிப்படையில் திருச்சியைச் சேர்ந்த கோபாலன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு ஒரு கடிதத்தில் உமாசங்கர் கூறிய குற்றச் சாட்டுகள் குறித்து பத்திரிகைகளில் வந்த செய்திகளை யெல்லாம் தெரிவித்து அதனையே தனது ரிட் மனுவாக எடுத்துக்கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும் அதை ரிட் மனுவாக ஏற்றுக் கொண்டு அதுகுறித்து விசாரிக்க நீதிபதிகள் அருணாசலம், ஜெயராம் சவுதா ஆகியோரைக் கொண்ட ஒரு பெஞ்ச் அமைத்தார். ஐ.ஏ.எஸ். அதிகாரி உமாசங்கரை நீதிமன்றத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யுமாறு உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி யது. அதன்படி அவர் தாக்கல் செய்த மனுவில், "ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி மதுரை மாவட்டத்தில்



திருச்சி சிவா

பணிகளை ஆளுங்கட்சியினருக்குத்தான் வழங்க வேண்டு மென்று வாய்மொழி உத்தரவு பிறப்பித்ததாகவும், சேலத் திலே உள்ள நான்கு கூட்டுறவு சொசைட்டிகளுக்கே ஒப்பந்த வேலைகள் அளிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஒரு ஆணை பிறப்பித்ததாகவும், ஆதிதிராவிட மக்களுக்கான சுடுகாடுகளில் தகரக் கொட்டகைகள் அமைக்கும் பணியை ஆளுங்கட்சியினருக்குத்தான் அளிக்க வேண்டுமென்று

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரே தன்னை வற்புறுத் தினார் என்றும், தான் அதற்கு மறுத்தபோது, மதுரை கலெக்டர் எல்லா மாவட்டங்களிலும் தரப்படுவதுபோல ஆளுங்கட்சியினருக்குத்தான் ஒப்பந்த வேலைகள் அளிக்கப் பட வேண்டுமென்று தன்னை நிர்ப்பந்தம் செய்ததாகவும், அதை மறுத்துதான் கோப்புகளில் குறிப்பு எழுதியதாகவும் தெரிவித்தார். ஆனால் அந்தக் குறிப்பையும் மீறி சுடுகாடு களில் தகரக் கொட்டகைகள் அமைக்கும் பணி சிலருக்குக் கொடுக்கப்பட்டது என்றும், அந்தப் பணிகளுக்கான முழுத் தொகையும் முன்கூட்டியே வழங்கப்பட்டு விட்டதென்றும், அந்தப் பணிகளைத்தான் சோதனையிட்டபோது, பணிகள் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதைக் கண்டுபிடித்து அதையும் கோப்புகளிலே எழுதியதாகவும், அதன் காரண மாகத்தான் மதுரையிலிருந்து தான் மாற்றப்பட்டதாகவும் இந்த அதிகாரி எழுதியதோடு, பிறகு திருச்சியில் அவர் பணியாற்றியபோது அரசுக்குச் சொந்தமான பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை தனியார் ஓட்டல் ஒன்றுக்கு அளிக்கும்படி தனக்குச் சொல்லப்பட்டதாகவும், அந்த உத்தரவை நிறைவேற்ற மறுத்த காரணத்தினால் மீண்டும் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றப்பட்டதாகவும் வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார். ஜெயலலிதா அரசு சார்பில் ஆஜரான அட்வகேட் ஜெனரல், எந்தத் தவறும் நடக்க வில்லை என்றும், மாற்றப்பட்ட காரணத்தினால் அதிகாரி இட்டுக்கட்டிக் கூறுவதாகவும் வாதிட்டார். ஆனால் நீதிபதிகள் இந்த வாதத்தை ஏற்க மறுத்து தீர்ப்பு அளித்தபோது, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஊழல் நடைபெற் றிருப்பதற்கான அடிப்படை ஆதாரங்கள் உள்ளன என்று நீதிமன்றம் கருதுகிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதில் தமிழ்நாடு முழுவதுமுள்ள மாவட்டங்களில் பெருத்த ஊழல் நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகவே தெரிகிறது. இதில் வாங்கப்பட்ட பணமெல்லாம் எங்கே போய்ச் சேர்ந்திருக்கும் என்று தேடி அலைய வேண்டியதில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். எனவே இதுகுறித்து சி.பி.ஐ. உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி உண்மை களைக் கண்டறிய வேண்டுமென்று உத்தரவிடுகிறது.

அத்துடன் இந்தப் பெரும் ஊழலுக்குக் காரணமான அரசின் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் கிரிமினல் வழக்குகள் தொடர வேண்டுமென்றும் சி.பி.ஐ.க்கு உத்தரவிடுகிறது என்றும் தெரிவித்திருந்தது.

தி.மு.கழக அரசு ஆட்சியிலே இருந்தபோதுதான் ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சர்கள் மீதும் பழிவாங்கும் மனப்பான்மையோடு வழக்குகளைத் தொடுத்தது என்று இப்போதும் கூறுகிறார்களே, சுடுகாடு கொட்டகை ஊழல் வழக்கு என்பது அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோதே இந்த வழக்கு நடைபெற்று, அப்போது சென்னை உயர்நீதிமன்றத்திலே இருந்த இரண்டு நீதிபதிகள் அளித்த தீர்ப்புதான் இது. இது ஒன்று மாத்திரமல்ல. இன்னும் எத்தனையோ வழக்குகள் அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோதே பல தீர்ப்புகள் ஜெயலலிதாவிற்கு எதிராக அப்போது நீதிபதிகளால் வழங்கப்பட்டன என்பதுதான் உண்மை.

இந்தச் சுடுகாடு கொட்டகை ஊழலைப் போலவே தான் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம், பள்ளிச் சிறார்க்குச் சீருடை வழங்கும் திட்டம் ஆகியவற்றில் மட்டும் 35 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றுள்ளது என்று வருமான வரித் துறையினரே கண்டுபிடித்து, இந்தத் துணிமணிகளை 14 நிறுவனங்களிடமிருந்து வாங்கியதாகக் கணக்கு எழுதப்பட்டிருந்ததின் அடிப்படையிலே வருமான வரித்துறை அதிகாரிகள் அந்த 14 நிறுவனங்களைத் தேடிச் சென்றபோது, அப்படிப்பட்ட நிறுவனங்களே இல்லை என்பதைக் கண்டுபிடித்து, ஆதாரபூர்வமான ஆவணங்களோடு செய்திகளை வெளியிட்டார்கள்.



திருச்சியில் நடந்த தி.மு.க. 8–வது மாநில மாநாட்டில் தொண்டர்களைப் பார்த்து தலைவர் கலைஞர் கையசைக்கிறார். உடன் பேராசிரியர்.

53 கலையுலகம் நடத்திய பொன்விழா!

19-3-1996 அன்று மத்திய தேர்தல் ஆணையம் நாடாளுமன்ற மக்களவைக்கும், தமிழ்நாடு, புதுவை உட்பட ஆறு சட்டப் பேரவைகளுக்கும் நான்கு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறுமென்ற அறிவிப்பு வெளிவந்தது. அதன்படி தமிழ்நாட்டில் ஏப்ரல் 27 மற்றும் மே 2 ஆகிய இரண்டு நாட்களிலும், புதுவையில் ஏப்ரல் 27 ஆம் தேதியும் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்கான வாக்குப்பதிவு ஏக காலத்தில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டது. மார்ச் 27 ஆம் தேதியன்று வேட்புமனு தாக்கல் தொடங்கும் என்றும், ஏப்ரல் 3 ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. மார்ச் 26 முதல் வேட்பு மனு தாக்கல் செய்பவர்களையெல்லாம் நேர்காணல் செய்யப்படும் என்று கழகத்தின் சார்பில் விளம்பரப்படுத்தப்பட்டது.

24-3-96 தேதிய இந்துஸ்தான் டைம்ஸ் ஏடு இந்தத் தேர்தலில் தி.மு.க. வெற்றிபெறுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்றும், காங்கிரஸ் கூட்டு இல்லை என்றாலும் தி.மு.கழகம்தான் வெற்றிபெறும் என்றும் எழுதியது.

பம்பாயிலிருந்து வெளிவரும் டைம்ஸ் ஆப் இந்தியா இதழும் ஜெயலலிதா எதிர்ப்பு உணர்வு தமிழகத்தில் வேரூன்றிவிட்டது என்றும், அ.தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணியை வீழ்த்தி தி.மு.கழகம் நிச்சயம் வெற்றிபெறும் என்றும் எழுதியது.

கழகம் அறிவித்தவாறே மார்ச் 26ஆம் தேதி முதல் கழக வேட்பாளர்களை நேர்காணல் பணி கழக அலுவலகத்தில் தொடங்கியது. நானும், பேராசிரியர், நாஞ்சிலார், ஆர்க்காடு வீராசாமி, முரசொலிமாறன் ஆகியோர் அன்றாடம் நூற்றுக் கணக்கான கழகத்தினரைச் சந்தித்து வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியிலே ஈடுபட்டோம்.

தேர்தல் சூடு அதிகமாகிக் கொண்டிருந்த இந்தக் கால கட்டத்தில் 21-3-1996 அன்று ஐ.ஆர்.எஸ். பி-3 தொலை உணர்வு செயற்கைக்கோளைத் தாங்கிய பி.எஸ்.எல்.வி. டி-3 ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இது 90 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதாகும். இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் அந்த வெற்றி ஒரு மகத்தான சாதனை என்று அப்போது பாராட்டப்பட்டது. உலகம் முழுவதையும் ஐந்து நாட்களில் படம் எடுத்து பூமிக்கு அனுப்பும் திறன் கொண்ட சாதனங்கள் அந்தச் செயற்கைக் கோளில் பொருத்தப்பட் டிருந்தது. அன்றைய தினம் அனுப்பப்பட்ட செயற்கைக் கோள் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட பத்தாவது செயற்கைக்கோளாகும்.

அ.தி.மு.க.வோடு கூட்டுச் சேருவது பற்றி இந்திரா காங்கிரஸ் கட்சியிலே கருத்து வேறுபாடு பெரிய அளவிற்கு இருந்தது. அந்தக் கட்சியிலே உள்ள பெரும்பாலோர் தி.மு.கழகத்தோடுதான் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டு மென்பதில் பிடிவாதமாக இருந்தனர். செய்தியாளர்கள் அதைப்பற்றி என்னிடம் கேட்டபோது, காங்கிரஸ் பேசி னால் நாங்கள் பேசுவோம் என்ற அளவிற்குச் சொல்லியிருந் தேன். தி.மு.கழகத்துடன் பேசுவதற்காக நரசிம்மராவ் அவர் களிடமிருந்த அவரின் நம்பிக்கைக்குரிய தூதுவர் சென்னை வருவதாக தலைப்புச் செய்திகள் கூட தினமணி போன்ற இதழ்களில் வெளிவந்தது. ஆனால் முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் இந்திரா காங்கிரஸ் அ.தி.மு.க.வுடன் தான் உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டார். அது


ஒன்றும் அதிசயமல்ல; இயற்கையான சமுதாயப்பற்று! பார்ப்பனீய சாம்ராஜ்யத்தைச் சரியவிடாமல் பாதுகாப்பதில் அவருக்கு அவ்வளவு அக்கறை!

25-3-1996 அன்று ஏடுகளில் வெளிவந்த செய்தியில் அ.தி.மு.க.-காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே மீண்டும் கூட்டணி என்று முடிவாகி விட்டதாகவும், அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதாவிற்கு வேண்டிய நண்பர் ஒருவர் டெல்லி சென்று பேச்சுவார்த்தை நடத்தியதின் பேரில் கூட்டணி உருவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கூட்டணி ஏற்பட்டால் அதை எவ்வாறு எதிர்ப்பது என்பது குறித்து மூப்பனார் தலைமையிலே ஒரு அணியினர் சென்னையிலே தனியாக ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்கள். பிரதமர் நரசிம்ம ராவ் அவர்கள் காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க.வோடுதான் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்து அந்த முடிவினை 25-3-1996 அன்று டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் சார்பி லும், சென்னையில் அ.தி.மு.க. சார்பிலும் அறிவித்தார்கள். புதுவை உட்பட மக்களவை தொகுதிகளில் காங்கிரஸ் 30 இடங்களிலும், அ.தி.மு.க.10 இடங்களிலும் என்று பங்கிட்டுக் கொண்டதோடு சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.168 இடங்களிலும், காங்கிரஸ் 66 இடங்களிலும் போட்டியிடுவ தாக அறிவித்தார்கள். இந்த முடிவுகளோடு அப்போது காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவராக இருந்த குமரி அனந்தனும், எஸ்.ஆர். பாலசுப்ரமணியமும் சென்னைக்கு வந்தபோது, காங்கிரஸ் தொண்டர்களின் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. இதன் காரணமாக காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் பெரும் கலவரம் மூண்டது. நரசிம்மராவ் அவர்களின் கட்அவுட்டுகளைக் காங்கிரஸ் தொண்டர்கள் அந்தக் கட்சியின் அலுவலக வாசலிலேயே செருப்புகளா லும், கைகளில் வைத்திருந்த கட்டைகளாலும் அடித்து உடைத்து எரித்தனர். சத்தியமூர்த்தி வளாகத்தில் பறந்து கொண்டிருந்த கட்சிக் கொடியை கீழே இறக்கி கறுப்புக் கொடியை அங்கே சிலர் ஏற்றினர். மகளிர் காங்கிரசைச்

சேர்ந்தவர்கள் நரசிம்ம ராவ் கட்அவுட்டுகள் எரிக்கப்பட்ட போது ஒப்பாரி வைத்து ஏளனம் செய்தனர்.

இந்த நிலையில் அமெரிக்காவிலிருந்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் விடுத்த அறிக்கையில்- "நான் வெளிநாட்டில் இருக்கிறேனே தவிர, என்னுடைய உயிர்மூச்சு, உணர்வு, எண்ணம் எல்லாம் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. சகோதரி ஜெயலலிதாவுக்கு ஒரு முன் எச்சரிக்கை. தமிழக மக்களுக்கு நீங்கள் நல்லது செய்து அவர்களை வாழவைத்து அவர்களுடைய அன்பையும், ஆதரவையும், நன்மதிப்பையும் சம்பாதிப்பீர்கள் என்று நம்பினேன். தமிழக மக்களும் நம்பினார்கள். அதற்காக உங்களுக்கு அரசு பதவியும் கொடுத் தார்கள். ஆனால் நீங்கள் சுயநலத்திற்காக அதிகார துஷ்பிர யோகம் செய்து பணத்தைச் சம்பாதித்தீர்கள். அந்தப் பணத்தை வைத்து டெல்லியையே வாங்கி விட்டீர்கள். அந்தப் பணத்தைக் கொடுத்து வாழும் தெய்வங்களான தமிழக மக்களையும் தமிழ்நாட்டையும் வாங்க முடியுமென்று கனவிலும் நினைக்க வேண்டாம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணியைப் பற்றி ஏடுகள் எல்லாம் தாக்கி எழுதியிருந்தன. ஜெயலலிதாவின் ஊழல் களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நரசிம்ம ராவ் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக கூட்டணி வைத்துக் கொண்டதாக தினமணி கடுமையாக எழுதியிருந்தது. செய்தி யாளர்கள் என்னை அணுகி மூப்பனார் தலைமையிலே உள்ள காங்கிரசார் பிரிந்து எங்கள் அணிக்கு வந்தால் ஏற்றுக் கொள்வீர் களா என்று கேட்டபோது, அவர்கள் எங்களுக்கு ஆதரவளித்தால் ஏற்றுக் கொள்வோம், அவர்களது ஆதரவைத் தட்டிக் கழிக்கும் அளவிற்கு அரசியல் புரியாதவர்கள் அல்ல நாங்கள் என்று கூறினேன். அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்ட ணிக்கு எதிர்ப்பு தெரிவித்து முதல் நாள் இரவு வேகமாகப் பேசிய தமிழ்நாடு



மூப்பனார்

காங்கிரஸ் தலைவர் மறுநாள் அந்தக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து விட்டார்.

காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் எல்லாம் சேர்ந்து மூப்பனாரிடம் ஒரு முடிவினை எடுத்து அறிவிக்க வேண்டு மென்று வலியுறுத்தினர். அதன் காரணமாக மூப்பனார் தலைமையில் ஒரு பிரிவினர் தமிழ் மாநிலக் காங்கிரஸ் என்ற பெயரிலே புதிய கட்சியை உருவாக்கிக் கொண்டு, 31-3-1996 அன்று அண்ணா அறிவாலயத்திற்கு மூப்பனாரும் அவரது தோழர்களும் நேரில் வந்து எங்களுடன் அமர்ந்து பேசி உடன்பாடு கண்டனர். மத்திய அமைச்சரவையிலே இருந்த ப.சிதம்பரம், அருணாசலம் போன்றவர்கள் அமைச்சரவையி லிருந்து விலகி த.மா.கா.விலே இணைந்தனர். அந்தக் கட்சிக்கு கழக அணியில் 40 சட்டப்பேரவை இடங்களும், 20 நாடாளு மன்ற இடங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. த.மா.கா. விற்கு தி.மு.க. கூட்டணியுடன் உடன்பாடு வரவேண்டுமென் பதில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதோடு, அதற்கு ஒப்புக் கொண்ட எனக்கு நன்றி தெரிவித்து ஒரு அறிக்கை வெளியிட்டு; நடைபெற்று வந்த ஜெயலலிதாவின் ஆடம்பர அராஜக ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதைப்போலவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 11 சட்டப் பேரவை இடங்களிலும், 2 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் போட்டியிடுவதென்றும் உடன்பாடு காணப்பட்டது. இந்திய தேசிய லீக் 5 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடவும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி இரண்டு இடங்களில் போட்டியிடவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.


ஜெயலலிதாவும் சசிகலாவும் ஹெலிகாப்டரில் திருப்பதிக்குச் சென்று பிரார்த்தனை செய்துவிட்டு பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் 17 தொகுதி களிலும், த.மா.கா. 20 தொகுதிகளிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு தொகுதிகளிலும் கழக முற்போக்கு அணியின் சார்பில் போட்டியிட்டன. சட்டப்பேரவையைப் பொறுத்த

வரை தி.மு.கழகம் 176 இடங்களிலும், த.மா.கா. 40 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 11 இடங்களிலும், இந்திய தேசிய லீக் 5 இடங்களிலும், அகில இந்திய பார்வர்டு பிளாக் 2 இடங்களிலும் முற்போக்கு அணியின் சார்பிலே போட்டியிட்டன. 31ஆம் தேதியன்று இந்த முடிவுகள் மேற் கொள்ளப்பட்ட நாளன்றே நாடாளுமன்ற, சட்டப்பேரவை தேர்தலுக்கான கழகத் தேர்தல் அறிக்கையினையும் நான் வெளியிட்டேன். சிந்தாதிரிப்பேட்டை தொகுதியிலே அன்றைய தினம் மாலையில் நடைபெற்ற மாநாடு போன்ற பொதுக்கூட்டத்தில் கழக வேட்பாளர்களின் பெயர்களை வெளியிட்டு உரையாற்றினேன். புதுவை மாநிலத்திலும் வேட்பாளர்கள் தோழமைக் கட்சிகளோடு பேசி சுமுகமான முறையிலே அறிவிக்கப்பட்டது. சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் நேரில் என்னை வந்து சந்தித்து அந்தத் தேர்தலில் கழகத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யப் போவதாக அறிவித்து அவ்வாறே பிரச்சாரம் செய்தார். அந்தத் தேர்தலில் கழகத் தின் சார்பில் பூங்கா நகர் தொகுதியிலே போட்டியிட்ட டி. இராஜேந்தர் அவர்களும், திருமதி ராதிகா அவர்களும், கழகத்தின்பால் பற்று கொண்டுள்ள நடிகர் சந்திரசேகர் போன்ற மற்ற கலைஞர்களும் ஆர்வத்தோடு தேர்தல் பிரச்சாரப் பணிகளிலே ஈடுபட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழக முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரத் தொடக்க விழா 7-4-96 அன்று தியாக ராயநகர், பனகல் பூங்கா அருகில் தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் சைதை கிட்டு தலைமையில் தென் சென்னை த.மா.கா. தலைவர் எஸ். நாராயணன் முன்னிலை யில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், மூப்பனார், ஆர்.நல்லக்கண்ணு, எம்.ஏ.லத்தீப், அய்யணன் அம்பலம், ஆர்.எம்.வீரப்பன், பண்ருட்டி ராமச்சந்திரன், வை.பாலசுந் தரம் ஆகியோரும் உரையாற்றினோம். ஜெ.அன்பழகன் நன்றி கூறினார். அணியின் வெற்றிக்கு அந்த முதற் கூட்டமே சான்று பகருவதைப் போல மக்கள் கூடியிருந்தனர்.

தேர்தல் பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண் டிருந்த நேரத்தில் கலையுலகச் செல்வர்கள் இணைந்து நின்று எனக்கு கலையுலகப் பொன்விழாவினை 14-4-1996 அன்று சென்னையில் கொண்டாடப் போவதாக அறிவித் தார்கள். கலையுலகத்தினர் நடத்தும் விழா குறித்து விழாக் குழுத் தலைவர் தம்பி விஜயகாந்த் 7-4-96 அன்று அதைப்பற்றி செய்தியாளர்களிடம் விளக்கினார். அப்போது விஜயகாந்த் கூறியதாவது:- "கலைஞர் தமிழ்த் திரை உலகிற்கு செய்துள்ள சேவை அளவிட முடியாதது. அவர் எழுதிய சிறப்புமிக்க வசனங்கள் காலத்தால் அழியாதவை. அவர் பணியாற்றிய பல படங்கள் எதிர்கால கலைஞர்களுக்குப் பாடங்களாக அமைந்தன. பராசக்தி படத்திலும், மனோகரா படத்திலும் கலைஞர் எழுதிய வசனங்கள் மிகப் புகழ்பெற்றவை. பட்டி தொட்டியெல்லாம் மணம் வீசியவை. எங்களைப் போன்ற நடிகர்கள் ஆரம்பத்தில் சினிமா சான்ஸ் கேட்டு அலைந்த போது படக்கம்பெனிகளில் இவருக்குச் சரியாக வசனம் பேச வருமா என்று சோதிக்க கலைஞர் எழுதிய மனோகரா, பராசக்தி வசனங்களைத்தான் பேசச் சொல்வார்கள். அந்த அளவிற்கு கலைஉலக ஆசானாக விளங்கி கொடிகட்டிப் பறந்தவர் கலைஞர். அவருடைய வயது அனுபவத்தைப் பார்த் தால் கலை உலகத்தினர் நடத்துகிற இந்தப் பாராட்டுவிழா இன்னும் மிகப் பொருத்தமானதாகும். சுருக்கமாகச் சொல்வதென்றால் தந்தைக்கு மகன் செய்யும் கடமையைப் போன்றது இவ்விழா. இந்த விழாவில் அரசியல் கலப்பு சிறிதும் கிடையாது. தேர்தலைக் கருத் தில் கொண்டு இவ்விழா நடத்தப்பட வில்லை. நாங்கள் ஏற்கனவே தீர்மானித் திருந்தபடிதான் இவ்விழாவை நடத்து கிறோம். இதற்கு யாராவது அரசியல் சாயம் பூசினால் அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. எங்கள் மீது எப்படிப்பட்ட முத்திரை குத்தினாலும் கவலையில்லை. கலைஞர் முதல மைச்சராக வரப் போகிறார், அவரிடம்



சரத்குமார்


சலுகைகளை எதிர்பார்த்து இப்படி ஒரு விழாவை நடத்து கிறோம் என்று யாராவது நினைத்தால் அது தவறு. எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் கலை உலகின் பெருமைக் குரிய கலைஞரைப் பாராட்டி இந்த விழாவை நடத்து கிறோம்"

என்றெல்லாம் கூறியதோடு, விழா நிகழ்ச்சிகளைப் பற்றியும், அதனையொட்டி வெளிவரும் சிறப்பு மலர் பற்றியும் விளக்கிக் கூறினார்.

விழா சென்னை கடற்கரை சீரணி அரங்கத்தில் நடை பெற்றது. பொன்விழாக் குழுவின் சார்பில் ஆறு அடி உயர முள்ள பேனா ஒன்று நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. அந்தப் பேனா வெள்ளியால் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்டதாகும். பேனாவின் முள் மட்டும் தங்கத்தால் செய்யப்பட்டது. அந்தப் பேனாவினை மூன்று நாட்கள் மட்டும் என்னுடைய வீட்டிலே வைத்திருந்து விட்டு பிறகு தலைமைக் கழகத்திற்கு அனுப்பி விட்டேன்.

விழாவில் பாலச்சந்தர், பாரதிராஜா, கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து, நடிகர் மம்முட்டி, சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், வினுச்சக்கரவர்த்தி, கே.எஸ். கோபாலகிருஷ்ணன், விஜயகுமார், ஜெமினி கணேசன், பார்த்திபன், விஜயகுமாரி, நடிகர் பாண்டியன், கலைச்சுடர் சந்திரசேகர், தியாகு, நடிகர் ஆனந்த்ராஜ், நெப்போலியன், இயக்குநர் சந்திரசேகர், நடிகர் சங்கத் தலைவர் ராதாரவி, நடிகர் நாகேஷ், நடிகர் பாண்டிய ராஜன், துக்ளக் சோ, எம்.என். ராஜம், நடிகர் அர்ஜுன் ஆகியோர் எனக்கு வாழ்த்துரைத்தனர். இசைஞானி இளையராஜா என்னைப் பற்றி வாழ்த்துக் கவிதை பாடினார். நிகழ்ச்சிகளை நடிகை லட்சுமி தொகுத்து வழங்கினார்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வெளி நாட்டிலிருந்து அனுப்பி வைத்திருந்த வாழ்த்துச் செய்தியை அவரது உதவி யாளர் சத்தியநாராயணன் விழாவில் படித்தார். விழா தொடங்கி சில மணித்துளிகளிலேயே பெருமழை பொழிந் தது. ஆயினும் அந்த மழையினால் அந்தக் கூட்டத்தைக்



விஜயகாந்த்

கலைக்க முடியவில்லை. கலைஞர்கள் எல்லாம் மழை காரணமாக தங்கள் வாழ்த்துரையைச் சுருக்கிக்கொள்ள இறுதியாக நன்றி தெரிவித்து நான் உரையாற்றினேன்.

என்னுடைய ஏற்புரையில் அந்த விழாவினை அருமையாக ஏற்பாடு செய்த கலையுலகினைச் சேர்ந்த கலை ஞர்களுக்கெல்லாம் உளமார நன்றி தெரிவித்துக் கொண்டேன். கலையுலகில் நான் தொடர்பு கொண்ட பல சம்பவங்களை அந்த விழாவிலே நினைவு கூர்ந்தேன். இறுதியாக தயாரிப்பாளர்களுக்கு ஒரு வேண்டு கோளுடன் என்னுரையை நிறைவு செய்தேன். தயாரிப் பாளர்கள் எதற்காகப் படம் எடுத்தாலும், எந்தச் சூழலிலே படம் எடுத்தாலும் அந்தப் படம் மக்களுக்குப் பாடமாக அமைவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், சமுதாயத்தைத் திருத்த, புதிய எழுச்சியை ஏற்படுத்தத்தக்க வகையில் நாம் தயாரிக்கின்ற படங்கள் அமைய வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டேன்.

இந்த விழாவினையொட்டி 12-4-96 தேதிய "இந்து" இதழில் ராமானுஜம் என்பவர் என்னுடைய ஐம்பதாண்டு கால கலை யுலகப் பணியைப் பற்றி சிறப்பானதொரு கட்டுரையை எழுதி யிருந்தார். அந்தக் கட்டுரையில் "பொது மக்களைப் பெருமள வில் தனது கூட்டத்திற்கு இழுத்தது அண்ணாவின் ஆற்றல் மிகுந்த பேச்சுத் திறமை என்றால், வாசகர்களின் பெரும்பாலோரைக் கவர்ந்தது கருணாநிதியின் ஆற்றல் மிகுந்த பேனா வாகும். தமிழ்த் திரைப்பட வரலாற்றில் 1946ல் தொடங்கி இன்று வரை இவ்வளவு நீண்ட காலத்திற்கு திரையுலகில் தொடர்பு கொண்டுள்ள ஒரே நபர் கருணாநிதிதான். கதாசிரியர்களாகவும், நடிகர்களாகவும் இருந்து பதவிக்கு வந்தவர்கள் இருவரே, அவர்கள் சி.என். அண்ணாதுரையும், கருணாநிதியுமே! அவர்களிலும் கலைஞர் உலகிலேயே திரைப்படத் துறையில் ஐம்பதாண்டுகள் தொடர்பு கொண்

டிருந்த ஒரே ஒருவர் ஆவார். அவர் தயாரிப்பாளராகவும், வசனகர்த்தாவாகவும், திரைக்கதை எழுத்தாளராகவும், சில ஆண்டுகள் மாநிலத்தை நிர்வகிப்பவராகவும் திகழ்ந்த அவருடைய சாதனைகள் பொறாமைக் கொள்ளத் தக்கவை யாகும். கருணாநிதியின் திராவகம் வடியும் வசனங்களும், சிவாஜி கணேசனின் புயல் போன்ற நடிப்பும் 1952ல் வெளி யான பராசக்தி படத்தை நினைவில் நிற்கக்கூடிய ஒன்றாக மாற்றியது. அதில் கருணாநிதியின் வசனம் மதத்தின் பெய ரால் அப்பாவிகளை ஏமாற்றுபவர்களைத்தான் அடை யாளம் காட்டி விமர்சிக்கிறது என்பதைக் கவனிக்காமல், அந்தப் படம் கடவுளை எதிர்க்கிறது என்று கூறி, சிலர் அதனைத் தடை செய்யவும் கோரினர். கருணாநிதியின் நீண்ட வெற்றி, தோல்விகள் நிறைந்த, காலத்தைக் கடந்து நின்ற திரையுலக வாழ்வில் அவர் ஒரு போதும் தேர்ந்தெடுக்கப் பட்ட மரபுகளையோ, கட்சிக் கொள்கைகளையோ விட்டுக் கொடுத்ததில்லை. கால மாற்றத்திற்கேற்ற வகையில் கதை களையும் வசனங்களையும் மாற்றுவதில் அவர் திறமை பெற்றிருந்தார். அவர் தனது எழுத்தின்மூலம் தமிழ் மொழிக்கு மதிப்பும் அங்கீகாரமும் பெற்றுத் தந்தார். உலகம் முழுவதும் தமிழைப் பரப்ப உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவருடைய தனிப்பட்ட வாழ்வே வாளை விட பேனா வலிமை வாய்ந்தது என்பதை நிரூபித்துள்ளது. எனவே அத்தகைய உயர்ந்த மனிதருக்கு தங்கத்தால் ஆன பேனாவைப் பரிசளித்து சென்னையில் பொது நிகழ்ச்சியில் திரையுலகம் கவுரவிப்பது பொருத்தமேயாகும்" என்று அந்தக் கட்டுரையிலே குறிப்பிட்டிருந்தார்.

54 திருக்குறள் 'கலைஞர் உரை' வெளியீட்டு விழா!

திரையுலகம் என்னைப் பாராட்டியதற்கு அடுத்த நாள் 15-4-1996 அன்று நான் எழுதிய திருக்குறள் உரை நூல் வெளியீட்டு விழா சென்னை ராஜேஸ்வரி மண்டபத்தில் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனார் தலைமையில் நடைபெற்றது. நான் எழுதிய எத்தனையோ புத்தகங்களின் வெளியீட்டு விழாக்கள் அதற்கு முன்பு நடைபெற்றபோதிலும், திருக்குறள் நூலுக்கு நான் நீண்ட நாட்கள் செலவிட்டு எழுதிய உரை அரங்கேற்றம் செய்யப்பட்ட அந்த நாள் மிகுந்த மகிழ்ச்சியை என் உள்ளத்தில் ஏற்படுத்தியது. அப்போது எனது ஏற்புரையிலே நான் குறிப்பிட்டதைப் போல திருக்குறள் உரை வெளியிடப்பட்ட அந்நாள் என் வாழ்விலோர் திருநாளாக அமைந்தது. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனார் நூலினை வெளியிட திருமதி ராஜேஸ்வரி அம்மையாரும், நல்லி குப்புசாமி செட்டியாரும் நூலினைப் பெற்றுக் கொண்டார்கள். பீட்டர் அல்போன்ஸ், தமிழ்க்குடிமகன், திருமதி சக்தி பெருமாள், நன்னன், கவியரசு வைரமுத்து, கவிக்கோ அப்துல் ரகுமான், சி. பாலசுப்ரமணியம், மக்கள் தலைவர் மூப்பனார் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக நான் ஏற்புரையாற்றினேன்.

மூப்பனார் அந்த விழாவிலே பேசும் போது, டாக்டர் மு. வரதராசனார் என்னைப் பற்றி அந்த நூலிலே குறிப்பிட்ட ஒரு பகுதியை எடுத்துக்காட்டி எப்போதும்போல் சுருக்கமாகப் பேசினார். அவர் எடுத்துக்காட்டிய மு.வரதராசனார் எழுதியிருந்தது; "தமிழகத்தின் பெருமையை சங்ககாலம்

போல மீண்டும் உலகம் போற்றக் கூடிய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற கனவை நனவாக்க விடாமுயற்சியை மேற் கொண்டுள்ள சிறந்த அறிஞர் கலைஞர். தமிழ் அரசர்களான நலங்கிள்ளி, நெடுங்கிள்ளிக்குப் பின் புலவராகவும், அரசராகவும் வாழ்பவர் கலைஞர் ஒருவர்தான். தமிழறிஞர்களை, புலவர்களை வாழ்விக்கும் புரவலராக இருந்து பாதுகாத்து வருபவர் கலைஞர்" என்ற வரிகளாகும். அந்த விழாவில் மூப்பனார் இந்தியத் தேசப்படம் போன்ற உருவமும், அதன் நடுவே வள்ளுவர் படமும் பொறித்த நினைவுப் பரிசு ஒன்றினை எனக்களித்தார்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி அவர்கள் அந்த விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். அந்தச் செய்தியில் "மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களே, ஸ்ரீகாஞ்சி காமகோடி பெரியவர்களுக்கு உலகப் பொக்கிஷ மான திருக்குறள் மிகவும் விருப்பமான நூல். ஸ்ரீ பெரியவர்கள் அவருடைய ஒவ்வொரு சொற்பொழிவிலும் திருக் குறளில் இருந்து மேற்கோள் காட்டி உரையாற்றுவது வழக்கம். ஒவ்வொரு பள்ளியிலும் திருக்குறளைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று மிகவும் விரும்பியவர். அதேபோல லட்சக்கணக்கான பள்ளி மாணவர்களுக்கு திருக்குறள் போட்டி வைத்து பங்கு கொண்ட எல்லோருக்கும் ஏராளமான பரிசுகள் வழங்கிவருகிறார். 1988ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் தேதி கலைஞர் அவர்கள் பிறந்த நாளுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய காஞ்சி ஸ்ரீமஹா ஸ்வாமிகள், "கலைஞர் கருணாநிதி அவர்கள் திருக்குறளுக்கு வரைந்த குறளோவியம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது" என்று வெகுவாகப் பாராட்டியிருக்கிறார். இன்று வெளியிடப்படும் திருக்குறள் கலைஞர் உரை நூல் நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு குறள் என்று 1330 நாட்கள் ஆய்ந்து, வரைந்து நமக்கு அளித்துள்ள சிறப்புரை யாகும். இந்த அற்புதமான உரை அனைவரும் எளிதாக, அதே நேரத்தில் ஆழமாகப் புரிந்து கொள்ளக் கூடிய சிறப்புடன் எழுதப்பட்டுள்ளது திருக்குறளுக்கு அணி செய்வ தாகும். கலைஞர் கருணாநிதி அவர்கள் வள்ளுவர் கூறிய.

"இருள்சேர் இரு வினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்ற குறள் நெறி ஒப்பவும், "வேலன்று வெற்றி தருவது மன்னவன் கோல தூஉம் கோடா தெனின்", "இறை காக்கும் வையகமெலாம் அவனை முறைகாக்கும் முட்டாச் செயின்" ஆகிய குறள்களின் வழி நின்று, நீண்ட ஆயுளைப் பெற்று சிறந்த சேவை செய்து வாழ்ந்திட பொன்னாடை போர்த்தி வாழ்த்துகிறோம்" என்று குறிப்பிட்டிருந்ததோடு தன் பிரதிநிதி மூலம் பொன்னாடை ஒன்றையும் அனுப்பி வைத்து அதனை எனக்குப் போர்த்தச் செய்தார். இவ்வாறு திருக்குறளையும், தமிழையும் போற்றி எனக்கு வாழ்த்து அனுப்பிய காஞ்சி ஜெயேந்திரர் தான் ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்வதற்கும், தமிழில் மந்திரமொலித்து குடமுழுக்கு செய்வதற்கும் விரோதியாக விளங்குகிறார் என்பதும், அதன் காரணமாகத் தமிழ் மக்களின் கசப்பைத் தேடிக் கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் அந்த விழாவில் ஆற்றிய உரையிருக்கிறதே, அது தேன் மழை! பல ஆண்டுகளுக்கு முன்பே ராஜாஜி அவர்கள் கம்பனடிப் பொடி சா.கணேசன் அவர்களிடத்தில் தமிழ்நாட்டின் எதிர்காலம் இந்தப் பிள்ளையாண்டான் கையில் இருக்கிறது என்று என்னைச் சுட்டிக் காட்டிக் கூறியதாகத் தெரிவித்து, மேலும் பேசுகையில் "என்னுடைய கொள்கை வேறு, கலைஞருடைய கொள்கை வேறு. ஆனால் என் அன்புக்கும், மரியாதைக்கும் என்றைக்குமே குறைவு வந்ததில்லை. கோல்ட் ஸ்மித் என்ற ஆங்கிலப் பேரறிஞனைப் பற்றி ஜான்சன் என்ற திறனாய்வாளன் எழுதும்போது, "அவன் தொடாத துறையே இல்லை, தொட்டதைப் பொன்னாக்காமல் விட்டதும் இல்லை" என்று எழுதினான். அதைப்போல தமிழ்நாட்டில் ஒருவரைச் சொல்லவேண்டுமென்றால் அது கலைஞர் கருணாநிதிதான்! அவர் தொடாத துறையே இல்லை, தொட்டதைப் பொன்னாக்காமல் விட்டதும் இல்லை. வாழ்கின்ற காலங்களில் விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் இருக்கும். ஒரு ஐம்பது வருடம் கழித்து தமிழ்நாட்டின்

வரலாறு எழுதப்படும் போது தமிழ்நாட்டில் ஒரு பத்து இருபது பேர்தான் அறிவாளிகள் எனத் தேர்வார்கள். அதிலே ஒரு இடத்தில் கலைஞர் கருணாநிதி இருப்பார். நூறு வருடம் கழித்து தமிழ் வரலாற்றைப் படிக்கிறவன், இப்படி ஒரு ஆள் நம்ம ஆள் இருந்தாரா என்று நினைக்கக் கூடிய அளவுக்குப் பேராற்றல் பொருந்திய பெருமகனார் தான் இப்பொழுது குறளுக்கு இங்கே உரையெழுதியிருக் கிறார்" என்றெல்லாம் அடுக்கடுக்காக அவர் ஆற்றிய உரை இப்போதும் என் நெஞ்சத்தில் ஆழப் பதிந்துள்ளது.

நான் அந்த நூலின் முன்னுரையில் "இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துவது" என்று குறிப்பிட்டிருந்தேன். அதைப்பற்றி அ.ச.ஞா.குறிப்பிட்டபோது, "இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துவது என்றால் இமயமலையை முதலில் நினைக்கிறோம், அடுத்து பொன்னாடை. இமய மலைக்கு என தனிச் சிறப்பு ஒன்று உண்டு. ஆல்ப்ஸ் மலை போன்றவற்றிற்கு அந்தச் சிறப்பு கிடையாது. இமயமலை மட்டும் காலையில் ஒரு காட்சி, மதியம் ஒரு காட்சி, மாலை யில் ஒரு காட்சி தரும். அந்த அற்புதமான ஒரு உருவகத்தைச் செய்தாரே அது கலைஞருக்குத் தான் முடியும். பொன் னாடை போர்த்துவது என்றால் பொன்னாடை என்றால் நான் இருக்கிற கோணத்தில் இருந்து பார்த்தால் அது ஒரு விதமாக ஒளி தரும். எதிர்த்தாற் போல் இருக்கிற நீங்கள் பார்த்தால் ஒருவிதமாக ஒளி தரும். இது பொன்னாடையின் சிறப்பு. ஆதலால்தான் கலைஞர் இமயமலைக்குப் பொன் னாடை போர்த்துவது போல என்று குறிப்பிட்டுள்ளார்" என்று விளக்கினார். அதைப்போலவே முதல் அதிகாரத் திற்கு நான் கடவுள் வாழ்த்து என்று குறிப்பிடாமல் "வழி பாடு" என்று தலைப்பு தந்திருந்தது பற்றி விரிவாக விமர்சித்த தோடு, திருவள்ளுவரே திரும்ப வந்து அந்த அதிகாரத்திற்குப் பெயர்சூட்டச் சொன்னால் அவர் கடவுள் வாழ்த்து என்று வைக்க மாட்டார், வழிபாடு என்றுதான் பெயர் வைப்பார் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இறுதியாகத் தன் உரையை முடிக்கும்போது, "கலைஞரின் இந்த உரை உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஏற்றுக் கொள்கிறோம், ஏற்றுக் கொள்ளவில்லை, அந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. அறிவினால் வைக்கப் படுகின்ற விருந்து. அந்த விருந்தைப் போற்றி மகிழ்ந்து அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.

இவ்வாறு அந்த விழாவிலே என்னைப் பாராட்டிய ஞானசம்பந்தனார் அவர்கள் அதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே என்னை ஒருமுறை பாராட்டியிருக்கிறார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1938ஆம் ஆண்டு நடைபெற்றதே, அந்தத் தொண்டை மண்டலப் பள்ளியின் மன்றத்தில் அவ்வை டி.கே.சண்முகம் அவர்கள் தலைமையில் "கலை, கலைக் காகவா? மக்களுக்காகவா?" என்ற தலைப்பில் ஒரு விவாதம் நடைபெற்றது. நான் "கலை மக்களுக்காக" என்ற தலைப்பில் வாதிட்டேன். ஞான சம்பந்தனார் "கலை கலைக்காக" என்று வாதிட்டார். அப்போது என் கருத்திலே அவருக்கு மாறுபாடு இருந்தாலும், நான் வாதிடும்போது சொன்ன ஒரு உவமையை அப்போது என்னிடத்திலே வெகுவாகப் புகழ்ந்தார். "கலை, கலைக்காக என்று சொல்ல இயலாது. விளக்கு எப்படி விளக்குக்காக இல்லையோ, அதைப்போல கலை, கலைக்காக அல்ல, மக்களுக்காகத்தான்" என்று கூறிய உவமையைப் பாராட்டியவராகும்.

அவர் என்னுடைய உரையை நல்லுரை என்று பாராட்டியதை, திருக்குற ளுக்குக் கருணாநிதி எழுதிய உரை சென்னை ஏ.வி.எம். ராஜேஸ்வரி மண்டபத்தில், பேராசிரியர் தலைமையில் முதுபெரும் புலவர் ஞான சம்பந்தனார் அங்கீகாரத் தோடு அரங்கேறியது என்ற ஒரு வரலாற்று ஏட்டினை



'திருக்குறள்–கலைஞர் உரை' வெளியீட்டு விழாவில் தலைவர் கலைஞருக்கு மாலை அணிவிக்கிறார் பேராசிரியர்.


என்னுடைய வாழ்க்கைப் புத்தகத்திலே இணைத்ததாகவே அன்றும் கருதினேன். இன்றும் கருதுகிறேன்.

விழாவில் வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் நன்னன் அந்த நூலுக்குப் பதிப்புரையும் எழுதியிருந்தார். அதைப் பதிப்புரை என்பதைவிட நான் எழுதிய அந்த உரையினைப் பற்றி ஒரு ஆய்வுரை தீட்டியிருந்தார் என்றுதான் கூற வேண்டும். 16 பக்கங்களைக் கொண்டது அந்தப் பதிப்புரை. அதிலிருந்து ஒரு பகுதியைத்தான் விழாவிலும் சுருக்கமாகப் பேசியிருந்தார். சுமார் 20 திருக்குறளை எடுத்துக் கொண்டு அதற்கு நான் எழுதிய உரையையும் குறிப்பிட்டு, ஒவ்வொன் றின் மீதும் ஒரு ஆய்வு நடத்தியிருந்தார் புலவர் நன்னன். முழுமையாக அந்த உரையினைப் படித்தால் திரும்பத் திரும்ப அதையே படிக்க வேண்டுமென்ற எண்ணம்தான் மேலோங்கும். எனினும் அந்த உரையிலிருந்து சில வரிகளை இந்த வாழ்க்கை வரலாற்றில் இடம் பெறச் செய்ய விரும்பு கிறேன்.

"குறளுக்கு முதலில் தோன்றிய பத்து உரைகளோடு இன்று வரை எத்தனையோ உரைகள் வந்துள்ளன. அவற்றுள் இக்காலத் தேவையைச் சரியாக ஈடு செய்ய வல்லதாய் எழுந்ததே கலைஞர் உரை. வள்ளுவரின் பெண் வழிச்சேறல் எனும் அதிகாரத்தைத் தன் உரையின் வாயிலாக, பழைய உரையாசிரியர்களால் பெண்மைக்கு ஏற்பட்டிருந்த பழியை நீக்கியுள்ளார். பகுத்தறிவாளராகிய கலைஞர் ஊழ் என்னும் அதிகாரத்திற்குத் தெளிவானதொரு விளக்கத்தைத் தந்திருப் பதோடு அந்தக் கருத்து பற்றிய மாந்தரின் குழப்பம், அதனால் ஏற்படும் அச்சம், கவலை, கையறுநிலை ஆகிய அனைத் துக்கும் தீர்வும் காட்டியுள்ளார். கலைஞர் ஒரு பாவலரு மாவார். ஆதலின் அவர்தம் உரைநடையிலும் பாநலம் காணப்படுவது இயல்பேயாகும். அதற்கு இந்த உரையிலே ஏராளமான சான்றுகள் உண்டு. கலைஞர் வள்ளுவர் கோட்டம் அமைத்ததும் குறளோவியம் தீட்டியதும் போல் இக்குறள் உரை வகுத்ததும் குறள்நெறி பரப்பும் பணியில் குறிப்பிடத்தக்க விழுமிய பணியாக அமைந்துள்ளது.

பரிமேலழகர் முதலிய பழைய உரைகாரர்களும், திரு.வி.க., புரட்சிக்கவிஞர், மு.வ. போன்ற புத்துரைகாரர்களுமாகிய உரையாசிரியர் பற்பலருள் கலைஞர் தம் பணியால் தனித்துச் சிறக்கிறார்.

தொல்காப்பியரின் 'அகர முதல னகர இறுவாய்' என்னும் கூற்றுக்கிணங்கத் திருக்குறள் 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடிவதைப் போன்றே கலைஞருரையும் 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடியும் நலம் அறிந்து மகிழத்தக்கது. இவர் மரபுப் பொருள், சொற்பொருள், தெளிவுப் பொருள், சுருக்கப் பொருள் என்பன போன்ற முறையில் பொருள் கூறிச் செல்லாமல் இக்காலத் தமிழன் ஒரு குறளைப் படித்தால் எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதை இற்றெனக் கிளந்து, தெற்றெனக் காட்டுவதையே தம் உத்தியாகக் கொண்டுள்ளார் என்று தெரிகிறது. கலைஞர் உரையின் தேவை குறித்தும் கருத்து வேறுபாடு எழ இடம் இல்லை. திருக்குறள் கலைஞர் உரை மக்கள் நெஞ்சின் மலிவுப் பதிப்பாக வெளிவருகிறது."



விழாவில் மூப்பனார் தலைவர் கலைஞருக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்.

திருக்குறள் உரை நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய பொதுச் செயலாளர்தான் அந்த நூலுக்கு அணிந்துரையும் வழங்கியிருந்தார். அந்த அணிந்துரையைப் பேரா சிரியர் அன்பழகனார் ஒரு கவிதையாகவே யாத்திருந் தார். அந்தக் கவிதை முழுவ தும் இந்த நூலிலே இடம் பெற வேண்டிய ஒன்றாகும். எனினும் அந்தக் கவிதையின் இறுதிப் பகுதி மட்டும் வருமாறு :-

திருக்குறள் வகுத்திட்ட வாழ்க்கை நெறியொன்றே
திருவிடத்தின் பண்பாட்டு ஊற்றுக்கண் ஆகலின்
திருமறை உரைபொருள் எவரும் எளிதுணர

திருக்குறள் கருத்துரை வரையலானார் கலைஞர்
குறட்பா மொழிந்திடும் பொருளொன்றே எனினும்
குறள்பொருள் தெளிவார் உணர்திறன் வேறாகலின்
குறட்பா சொற்றொடர் புணர்வகை யாலன்றிக்
குறள்நெறி உளத்தூன்ற உரைதந்தார் கலைஞர்
தெளிந்த சிந்தையன், தேர்ந்த புலமையன்,
நுண்மாண் நுழைபுலம் வாய்த்த மதியினன்,
ஆழ்ந்த கருத்தினன், அசைவிலா உறுதியன்,
வெல்லுஞ் சொல்வலான், சோர்வு மிலான்,
கொண்ட கொள்கையே கோட்பாடாய் ஏற்றவன்
எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியன்.
பகுத்தறிவுத் திறலோன், பண்பினை மறவோன்
பொங்குநடையினில் 'சங்கத்தமிழ்ச்' சாறளித்தோன்
பளிங்குப் பாவையெனக் 'குறளோவியம்' படைத்தோன்
தெளிதமிழின் நடைபலவும் வல்லவனாம் கலைஞர்
"வீழ்வது நாமாக இருப்பினும்,
வாழ்வது தமிழாகட்டும்" எனத் துணிந்து
தமிழே தனது உயிர்மூச் செனவும்
தமிழர் வாழ்வே தன்வாழ்வென வுங்கொண்டு
இனநலம் மொழிநலம் காக்கும் தொண்டே
தன்பிறவிக் கடனென்று ஏற்ற செம்மல்!
தன்மானத் தந்தை பெரியாரின் உணர்வு காக்கும் மைந்தன்!
இனமான ஏந்தல் அண்ணாவின் இதயம் நாடிய இளவல்!
இனமாந்தர்தம் இழிவு துடைத்திட முனைவோருக்கோ தோழன்!
இலட்சியப் பணியினில் கலைஞர் என் பெருமைக்குற்ற நண்பர்!
தொண்டால், தியாகத்தால், திறமையால், பெற்ற
தகுதியால், தமிழினத்தின் தலைவரான கலைஞர்
தமிழர் வாழ்வை மயக்கிடு 'மாயை' அகன்றிட
உய்வு நெறியாம் குறளறம் விளங்கிடத்
தன்மதிநுட்பத் திறன்காட்டும் உரைதந்தார் இன்று
அதனதிநுட்பம் காட்டலும் எளிதன்றே எமக்கு!
தேனிறால் திருக்குறள் எனிலோ
அதன் பிழிவே இவ்வுரை என்பேன்.
தித்திக்கும் தேன்சுவையே யன்றி
மருத்துவப் பயனும் இவ்வுரைச் சிறப்பாம்!
பயில்தற்கும் தெளிதற்கும் எளிதாகும் இவ்வேடு
துயில்நீங்கி எழும் தமிழர்க்கோர் கைவிளக்கு!

இளைய தலைமுறையினர் தமக்கோ வாழ்வினில்
இருளகற்றி வழிகாட்டும் திருவிளக்கு!

விழாவின் இறுதிக் கட்டமாக என்னை ஏற்புரை என்ற பெயரில் நன்றியுரையாற்ற நவின்றார்கள். எனது ஏற்புரையில், திருக்குறளின் மீதும், திருவள்ளுவரின் மீதும் இளமைக் காலம் தொட்டு இருந்த பற்று, பாசம் காரணமாக நான் ஆற்றிய பணிகளையெல்லாம் பட்டியலிட்டேன். 354 குறள் பாக்களுக்குக் குறளோவியம் தீட்டியது குறித்தும், சட்டப் பேரவையிலே திருவள்ளுவர் படத்தினை வைக்க வேண்டு மென்று பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருந்த போது கோரிக்கை வைத்து அது நிறைவேறியது பற்றியும், பேருந்துகளில் திருக்குறளை எழுதச் செய்து திருவள்ளுவர் படத்தை வைக்கச் செய்தது குறித்தும், அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தங்கும் விடுதிகளில் திருவள்ளுவர் படத்தினை வைக்க ஏற்பாடு செய்தது குறித்தும், திருவள்ளுவர் படத்தினை வரைந்த வேணு கோபால் சர்மா குடும்பத்திற்கு நிதி வழங்கியது பற்றியும், வள்ளுவர் கோட்டம் எழுப்பியது குறித்தும், அதன் திறப்பு விழாவிற்கு நான் அழைக்கப்படாதது பற்றியும், அதற்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றியபோது அதே வள்ளுவர் கோட்டத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டது பற்றியும் வரிசைப் படுத்தினேன். ஆம், இந்தப் பட்டியலிலே குமரிமுனையிலே உள்ள திருவள்ளுவர் சிலை இடம் பெறவில்லை. காரணம், இந்த உரை வெளியீட்டு விழாவிற்குப் பிறகு நடைபெற்ற தேர்தலிலே வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வள்ளுவர் சிலை திறப்பு விழா நடைபெற்றது. என்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் திருக்குறளும், திருவள்ளுவரும் எந்த அளவிற்கு முக்கியத்துவம் பெற்றவர் களோ அதைப் போலவே அந்தத் திருக்குறளுக்கு நான் எழுதிய உரை வெளியீட்டு விழாவும் அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது.

இதற்கு முன்பு 7-4-96 தேதிய ஆனந்த விகடன் ஏடு தனது தலையங்கத்தில், "ஜெயலலிதாவின் ஐந்தாண்டு கால



‘திருக்குறள் – கலைஞர் உரை’ நூலின் முதல் பிரதியை அ.ச.ஞானசம்பந்தம் வெளியிட ராஜேஸ்வரி அம்மையார் பெற்றுக்கொள்கிறார்.

ஆட்சியை என்னவென்று வர்ணிப்பது? தன் விருப்பம் போல் தர்பார் நடத்திய சர்வாதிகார ஆட்சி என்பதா? லஞ்சம் தலைவிரித்தாட விட்ட ஊழல் ஆட்சி என்பதா? ஏழைகளுக்கான நலத்திட்டங்களிலும் சுரண்டி கொள்ளை யடித்த சுரண்டல் ஆட்சி என்பதா? உரிமைகளுக்குக் குரல் கொடுத்தவர்கள் மீது தொண்டர்களை ஏவிய பயங்கரவாத ஆட்சி என்பதா? உண்மையில் இப்படிப்பட்ட அத்தனை பெயர்களும் இந்த ஆட்சிக்குப் பொருத்தம். சட்டங்களையே செல்லாக் காசாக்கிய ஆட்சி ஆயிற்றே! இந்த அழகில் அகில இந்திய காங்கிரஸ் அ.தி.மு.க. வுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டிருக்கிறது. இது ஒன்று போதுமே, காங்கிரஸ் தலைமை தமிழனுக்கு இழைக்கும் நயவஞ்சகத் துரோகம்! இந்த உடன்பாட்டுக்காகவே மானம், ரோஷம் உள்ள தமிழன் இந்தக் கூட்டணி வெற்றி பெறக்கூடாது என்று தீர்மானிக்கவேண்டும். அப்படிக் கொதித்தெழும் மக்கள் உணர்வுக்கு எதிர்க் கட்சியினர் உதவி புரிய வேண்டும். எதிர்ப்பு ஓட்டுக்கள் பிரிந்துபோகாமல் பாதுகாக்கப்பட வேண்டும்” என்று எழுதியது. ஆனந்தவிகடனின் அழுத்தந்திருத்தமான இந்தத் தலையங்கம் எழுதப்பட்ட நாளான 7-4-1996 முதல் தேர்தல் பிரச்சாரத்திற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தமிழகம் முழுவதும் நானும், கழக முன்னணியினரும், தோழமைக் கட்சியின் தலைவர்களும் பிரச்சாரத்திலே ஈடுபடத் தொடங்கினோம். ஆளுங்கட்சியின் அணி; பணத்தை பணம் என்று பார்க்காமல் வாரி இறைத்தது.

55 சாதனை சரித்திரம் படைத்தோம்!

நான் போட்டியிட்ட சேப்பாக்கம் தொகுதியில் இரண்டு நாட்கள் இடையிலே வாக்குகளை தெருவாரியாகச் சென்று கேட்டுவிட்டு மீண்டும் எனது தேர்தல் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தேன். தூத்துக்குடி கூட்டத்தை முடித்து விட்டு 19-4-96 அன்று நெல்லை நகரத்திற்கு நான் திரும்பிக் கொண்டிருந்தபோது சுமார் 12.45 மணி அளவில் வல்லநாடு என்ற இடத்தில் என்னுடைய வேன் அந்த குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதற்கு முன்பு என் வேனுக்கு முன்னால் சென்ற கழகத் தினரின் கார்கள் மீது அ.தி.மு.க.வினர் சிலர் கற்களையும், ஆசிட் கலந்த முட்டைகளையும் வீசியும், கம்புகளை வீசியும் தாக்கினார்கள். நான் அந்த இடத்தை நெருங்கும்போது மிகப் பெரிய அளவிற்குத் தாக்குதல் நடத்துவதற்காக இரண்டு மூன்று தார் டின்களை சாலையிலே குறுக்காகக் கொண்டு வந்து போட்டிட முற்பட்டார்கள். நாங்கள் உடனடியாக சமயோசிதமாக அந்த இடத்தில் சாலை சற்று அகலமாக இருந்த காரணத்தினால் அப்படியே வேனைத் திருப்பிக் கொண்டு திருவைகுண்டம் வழியாக திருநெல்வேலி வந்து சேர்ந்தோம்.

இந்தச் சம்பவம் குறித்து ஆர்க்காடு வீராசாமி குடியரசுத் தலைவருக்கும், ஆளுநருக்கும் தந்திகள் கொடுத்தார். காவல ரின் ஒத்துழைப்போடு அ.தி.மு.க.வினர் நடத்தும் தேர்தல் அராஜகங்களைத் தடுத்து நிறுத்த கேட்டுக் கொண்டார். வல்லநாட்டில் நடைபெற்ற இந்தக் கொடுமைக்கு த.மா.கா. சார்பிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், இந்திய தேசிய

லீக் கட்சி சார்பிலும் கண்டனம் தெரிவித்தார்கள். அ.தி.மு.க. வினர் உட்பட 20 பேரை அந்தப் பகுதி காவல்துறையினர் இந்தச் சம்பவத்திற்காக கைது செய்திருந்தார்கள். ஆனால் ஜெயலலிதா இந்தச் சம்பவமே ஒரு நாடகம் என்று பொய் கூறினார்.

கழக முற்போக்கு அணிக்கு ஆதரவாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் சன் தொலைக்காட்சி மூலமாக சிறப்பானதோர் உரையாற்றினார். அந்த உரையாடலின் போதுதான் என்னை மூத்த அண்ணன் என்றே விளித்து நன்றி கூறியிருந்தார். திரு. சோ அவர்கள் அந்த நேரத்தில் நான் ஓவர்-கான்பிடண்ட் ஆக (அளவுகடந்த தன்னம்பிக்கை) இருப்பதாகக் கூறியதைப் பற்றி ரஜினி விமர்சிக்கும்போது, கலைஞர் "ஓவர்-கான்பிடண்ட்" ஆக இல்லை. "ஓவர்-காஷியஸ்" (அதிகமான எச்சரிக்கை உணர்வோடு) ஆக இருக்கிறார். இதிலிருந்து அவர் எவ்வளவு பெரிய அரசியல் வாதி, எவ்வளவு பெரிய அறிவாளி என்பது தெரிகிறதல் லவா? என்றெல்லாம் விளக்கியிருந்தார். கழக முற்போக்குக் கூட்டணி ஜெயலலிதாவை வீழ்த்தும் பிரம்மாஸ்திரம் என்றும் அந்தப் பேச்சினூடே குறிப்பிட்டிருந்தார்.

இந்து இதழ்- சி.எஸ்.டி.எஸ். இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பு மூலமும், சன் தொலைக் காட்சி, நக்கீரன், ஜூனியர் விகடன் போன்ற பல இதழ்கள் நடத்திய கருத்துக் கணிப்பு மூலமும் தி.மு.கழக அணியே மகத்தான வெற்றி பெறும் என்று தொடர்ந்து செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. மேலும் என்னுடைய தேர்தல் பிரச்சாரத்தில் மக்கள் அலைஅலையாக வந்து குவிந்தனர்.

தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு 30-4-96 தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தியில் போயஸ் தோட்டத்தில் முதல் அமைச்சர் ஜெயலலிதா வசிக்கும் வீட்டிலிருந்து டெல்லி மற்றும் சண்டிகார் பதிவு எண்களைக் கொண்ட 6 மூடப்பட்ட லாரிகள் பொருட்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டுச் சென்றன என்றும், அந்த மூடப்பட்ட லாரிகள் ஐதராபாத்துக்குச் சென்றதாகக் கூறப்படுகின்றன என்றும், அந்த வாகனங்கள்

ஜெயலலிதா வீட்டில் இருந்தன என்பதையும், அவை ஐதரா பாத்துக்குச் சென்றன என்பதையும் அதிகார வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன என்றும் கூறப்பட்டிருந்தது.

தேர்தல் வாக்குப் பதிவு முடிந்து, வாக்கு எண்ணிக்கை நடக்காமல் இருந்த நேரத்தில் அண்ணா அவர்களின் துணைவியார் இராணி அம்மையார் அவர்கள் இயற்கை எய்திவிட்டார். உடனடியாக அவர்கள் இல்லம் சென்று இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம்.

மே திங்கள் 8ஆம் நாளன்று வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. துவக்கம் முதல் கழக முற்போக்கு அணியே மகத்தான வெற்றியைப் பெற்றது. வாக்கு எண்ணிக்கை வெற்றிகரமாக வந்து கொண்டிருந்தபோதே டெல்லியி லிருந்து முன்னாள் பிரதமர் வி.பி. சிங் தொலைபேசி மூல மாகத் தொடர்பு கொண்டு உளப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்தார். கலையுலகப் பெருமக்கள் எல்லாம் அறி வாலயத்திற்கு வந்து நேரடியாக வாழ்த்துகளைத் தெரிவித் தனர். த.மா.கா. தலைவர் மூப்பனார் அவர்களும் அறிவாலயத் திற்கு வந்து என்னைக் கட்டித் தழுவி வாழ்த்து கூறினார். நேபாளத்திற்குச் செல்லும் வழியில் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் என்னுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு வாழ்த்து கூறினார். பிரதமர் நரசிம்மராவ், பா.ஜ.க. தலைவர் வாஜ்பய், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, பீகார் முதல்வர் லல்லு பிரசாத்யாதவ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா, அன்பு நண்பர் எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மையார் மற்றும் பல கட்சித் தலைவர்களும், ஆன்றோர்களும் சான்றோர்களும் வாழ்த்துகளைக் குவித்தனர்.

233 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் தி.மு. கழகம் 172 இடங்களிலும், த.மா.கா. 39 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் 8 இடங்களிலும், அகில இந்திய பார்வர்டு பிளாக் 1 இடத்திலும் வெற்றி பெற்றது. மொத்தம் 220 இடங்களில் தி.மு.கழக முற்போக்குக் கூட்டணியும், அ.தி.மு.க. 4 இடங்களிலும், பா.ம.க. 4 இடங்களிலும், பா.ஜ.க., ஜனதா

தளம், ஜனதா கட்சி, சி.பி.எம்., சுயேச்சை ஆகிய கட்சிகள் தலா ஒவ்வொரு இடங்களிலும் வெற்றி பெற்றன. நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் 39 இடங்களிலும் கழக முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களே வெற்றி பெற்றனர்.

12-5-96 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக சட்ட மன்ற உறுப்பினர்களின் கூட்டம் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் கூடியது. அந்தக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களும், கழக முன்னணியினரும் கலந்து கொண்டார்கள். சட்டமன்றக் கட்சித் தலைவராக ஒருமனதாக நான் தேர்ந் தெடுக்கப்பட்டேன். அதற்கான அதிகாரபூர்வ கடிதத்தை ஆளுநர் மாளிகை சென்று நேரடியாகக் கொடுத்தோம். ஆளுநர் அதனைப் பெற்றுக் கொண்டு ஆட்சி அமைக்கு மாறு கேட்டுக் கொண்டார். அமைச்சரவையில் பங்கேற்பவர் களின் பட்டியலை ஆளுநரிடம் அளித்தேன். 13ஆம் தேதி யன்று ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

நான்காவது முறையாக முதல்வர் பொறுப்பையேற்ற என்னுடைய அமைச்சரவையில் என்னைத் தவிர 25 பேர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். பேராசிரியர் கல்வி அமைச்சராகவும், ஆர்க்காடு வீராசாமி மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறைக்கும், நாஞ்சிலார் வருவாய்த் துறைக்கும், கோ.சி.மணி உள்ளாட்சித் துறைக்கும், வீரபாண்டி ஆறுமுகம் வேளாண்மைத் துறைக்கும், துரைமுருகன் பொதுப்பணித் துறைக்கும், டாக்டர் பொன்முடி போக்கு வரத்துத் துறைக்கும், டாக்டர் தமிழ்க்குடிமகன் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்கும், கே.என்.நேரு உணவுத் துறைக்கும், கே.சுந்தரம் பால்வளத் துறைக்கும், ரகுமான்கான் தொழி லாளர் நலத் துறைக்கும், ஆலடி அருணா சட்டத் துறைக்கும், வே.தங்கப் பாண்டியன் கூட்டுறவுத் துறைக்கும், என்.கே.கே. பெரியசாமி கைத்தறித் துறைக்கும், எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கும், பொங்க லூர் பழனிசாமி வனவளம் மற்றும் கால்நடைத் துறைக்கும்,

கே.பிச்சாண்டி வீட்டு வசதித் துறைக்கும், இ.பெரியசாமி ஊரகத் தொழில் துறைக்கும், வ.முல்லைவேந்தன் செய்தித் துறைக்கும், புலவர் செங்குட்டுவன் அறநிலையத் துறைக்கும், திருமதி எஸ்.பி.சற்குணம் சமூகநலத் துறைக்கும், சமய நல்லூர் செல்வராஜ் ஆதிதிராவிடர் நலத் துறைக்கும், என்.சுரேஷ்ராஜன் சுற்றுலாத் துறைக்கும், அந்தியூர் செல்வராஜ் கதர் மற்றும் அச்சுத் துறைக்கும், திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் மீன் வளத் துறைக்கும் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

பதவியேற்பு விழா முடிந்து தலைமைச் செயலகம் சென்றதும் நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பட்டாக்களுக்காக உரிமையாளர்களிடமிருந்து மனை வரி, தல வரி, கூடுதல் தல வரி எதுவும் இனி விதிப்பதில்லை என்ற முடிவினையெடுத்து அது பற்றிய கோப்பில் முதலாவதாக கையெழுத்திட்டேன். 13ஆம் தேதி மாலையில் சென்னை கடற்கரை காந்தி சிலை அருகில் நடைபெற்ற தேர்தல் வெற்றி நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்திற்குப் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமை வகித்தார். அந்தக் கூட்டத்தில் நானும், மூப்பனார், நல்லக்கண்ணு, அப்துல் லத்தீப், இராம. வீரப்பன், அய்யணன் அம்பலம், பண்ருட்டி ராமச்சந்திரன், வை.பாலசுந்தரம், எஸ்றா சற்குணம் ஆகியோரும் உரையாற்றினோம்.

13ஆம் தேதியன்று பதவியேற்பு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு 14ஆம் தேதி டெல்லி சென்றேன். இந்தியாவின் புதிய தலைமை அமைச்சராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து கழகம் அந்த முறையும் பெரும் பங்கினை ஏற்றது.

மக்களவையில் எந்த அணிக்கும் பெரும்பான்மை கிடைக்க வில்லை. மொத்தம் 545 இடங்களுக்கு 535 இடங்களுக்கு அப்போது தேர்தல் நடைபெற்றது. அதில் பா.ஜ.க. தனித்து 160 இடங்களிலும், இந்திரா காங்கிரஸ் 136 இடங்களிலும் வெற்றி பெற்றன. பா.ஜ.க.வின் தோழமைக் கட்சிகள் 26 இடங்களில் வெற்றி பெற்றிருந்தார்கள். தேசிய முன்னணி இடது சாரி கூட்டணியின் சார்பில் 111 இடங்களில் அந்த



இராணி அண்ணாதுரை அம்மையாருடன் கலைஞர்,
பேராசிரியர், நாஞ்சிலார், டி.ஆர்.பாலு.

அணி வெற்றி பெற்றிருந்தது. இது தவிர த.மா.கா. 20 இடங்களிலும், தி.மு.க. 17 இடங்களிலும், தெலுங்கு தேசம் 16 இடங்களிலும், அகாலி தளம் 8 இடங்களிலும், பகுஜன் சமாஜம் 11 இடங்களிலும் முக்கியமாக வெற்றி பெற்றிருந்தன. 14 ஆம் தேதி காலையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, கர்நாடக முதல்வர் தேவகவுடா, மூப்பனார், ப. சிதம்பரம், அஸ்ஸாம் கணபரிஷத் பொதுச் செயலாளர் ஆகியோர் டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் என்னை வந்து சந்தித்தனர். அன்று பிற்பகலில் மேற்குவங்க முதல்வர் ஜோதிபாசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹரிகிருஷ்ண சிங் சுர்ஜித், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இந்திரஜித் குப்தா, பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ், உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் முலாயம் சிங் யாதவ், முன்னாள் மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா ஆகியோர் தமிழ்நாடு இல்லத்தில் கூடிப் பேசி விவாதித் தோம்.

வி.பி. சிங் அவர்கள் தலைமை அமைச்சராகப் பொறுப் பேற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ள அவரது இல்லத் திற்கு நானும், தேவகவுடா, சந்திரபாபு நாயுடு, முரசொலி மாறன், லல்லு பிரசாத் யாதவ் ஆகியோரும் சென்று நேரில்

கேட்டுக் கொண்டோம். ஆனால் பிரதமர் பதவியை ஏற்க அவர் இசைவு அளிக்கவில்லை. மீண்டும் திரும்பி தமிழ்நாடு இல்லத்திற்கு வந்து அனைவரும் ஆலோசனை நடத்தினோம்.

இதற்குப் பிறகு மூன்றாவது அணியின் சார்பாக கர்நாடக முதல் அமைச்சர் தேவகவுடா அவர்களை தலைமை அமைச்சர் பதவிக்கு உரியவராகத் தேர்வு செய்து அந்த முடிவினை குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களைச் சந்தித்து தெரிவித்தோம். இந்த அணிக்கு தங்களின் நிபந்தனையற்ற ஆதரவைத் தருவதற்குத் தயார் என்று இ.காங்கிரஸ் கட்சியின் தலைவர் நரசிம்மராவ் குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதினார். ஆனால் குடியரசுத் தலைவர் பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய் அவர்களை அமைச்சரவை அமைக்கும்படியும் மே மாத இறுதிக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். 16-5-1996 அன்று வாஜ்பய் அவர்கள் இந்தியாவின் 11வது பிரதமராகப் பதவியேற்றார்.

ஆனால் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் வாஜ்பய் அவர்களின் இந்த அமைச்சரவை 13 நாட்களில் பதவி விலகியது. அதைத் தொடர்ந்து ஐக்கிய முன்னணி தலைவர் தேவகவுடா அவர்களின் ஆட்சி காங்கிரஸ், தி.மு.கழகம், த.மா.கா., தெலுங்கு தேசம் போன்ற கட்சிகளின் ஆதரவோடு பதவியேற்றது. ஆனால் ஓராண்டு காலத்தில் 97 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அந்த அமைச்சரவைக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரஸ் திரும்பப் பெற்றதால், தேவகவுடா பிரதமர் பதவியை இழந்தார். புதிய பிரதமராக ஐ.கே. குஜ்ரால் பதவியேற்றார். இந்த அமைச்சரவைகளில் முரசொலி மாறன், டி.ஆர். பாலு ஆகியோர் பொறுப்பேற்றிருந்தனர்.

புதுவை மாநிலத்திலும் ஆர்.வி. ஜானகிராமன் தலைமையில் த.மா.கா. ஆதரவோடு தி.மு.கழக கூட்டணி ஆட்சி அமைந்தது.

1996ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுக் காலம் தமிழகத்திலே பொற்கால ஆட்சி என்று கூறத்தக்க வகையில் அனைத்து தரப்பு மக்களும் மகிழ்ச்சி கொள்ளத்தக்க வகையில்


சாதனைகளைச் செய்து சரித்திரம் படைத்தது. அவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகள் சில; இதோ :-

- "மெட்ராஸ்" என்ற பெயர் "சென்னை" என்று மாற்றப் பட்டது.
- திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் கன்னியா குமரியில் சிலை அமைக்கப்பட்டது.
- காவிரி நதிநீர் ஆணையம் பிரதமர் தலைமையில் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டது.
- அரசு அலுவலர்களுக்கு ஏராளமான சாதனைகள் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான ஊதியம்.
- வணிகர்களுக்கு ஏராளமான சலுகைகள் - வரிகள் நீக்கம் - குறைப்பு. அனைத்துப் பொருட்களுக்கும் ஒருமுனை வரி.
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள்.
- மாணவர்களுக்கு அடுக்கடுக்கான சலுகைகள், இலவச பேருந்து வசதி, பள்ளிகளில் கணினி பயில நிதி ஒதுக்கீடு, ஒற்றைச் சாளர முறை அறிமுகம்.
- விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளுடன் 1989 கழக ஆட்சியில் அறிமுகப்படுத்திய - இலவச மின் சாரம் நீடிப்பு, கடன்கள் தள்ளுபடி, கொள்முதல் விலை உயர்வு, உர விலை குறைப்பு.
- உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் - மகளிருக்குத் தனி ஒதுக்கீடு.
- தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு முதலீடு - ஏற்றுமதி சாதனை - டைடல் பூங்கா.
- தகவல் தொழில்நுட்பத்திற்கான தனித் துறை - உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம்.
- காமராஜர், அம்பேத்கர், பக்தவத்சலம், காயிதே மில்லத் மணி மண்டபங்கள்.
- ஏழைப் பெண்கள் இலவச திருமண உதவித் திட்டம்.
- இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் - கைத்தறி யாளர்களுக்கு வாழ்வளிப்பு.


- வருமுன் காப்போம் திட்டம், வாழ்வொளித் திட்டம்.
- தொகுப்பு வீடுகள் - காங்க்ரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம்.
- பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்.
- உழவர் சந்தைகள்.
- அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.
- நமக்கு நாமே திட்டம்.

அ.தி.மு.க. ஆட்சி இருந்த காலத்திலேயே அவர்மீது பல ஊழல் குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு, வழக்கும் நடை பெற்று அதிலே உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் ஆதாரம் இருப்பதாக திட்டவட்டமாகத் தீர்ப்பளித் திருந்தனர். நீதிமன்றத்திலேயே அவர் ஏன் கைது செய்யப்பட வில்லை என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. அதன் காரணமாக அவர் பின்னர் கைது செய்யப் பட்டு வழக்குகள் எல்லாம் தன்னிச்சையாக எந்தவிதமான தலையீடுமின்றி நடைபெற்று சிலவற்றில் தீர்ப்புகளும், தண்டனைகளும் வழங்கப்பட்டன. பல வழக்குகள் இன்னும் முடிவடையாத நிலையில் மேல்முறையீடுகளில் உள்ளன. எனவே இந்த நிலையில் நான்காம் பாகம் முடிவுறுகின்ற நிலையில் அதைப்பற்றி உறுதியாக எழுதிட இயலவில்லை.

யாரைத் தங்கள் அணியிலேயே சேர்க்கக்கூடாது என்று முடிவெடுத்து தங்கள் தாய்க் கட்சியிலிருந்து பிரிந்து த.மா.கா. என்ற புது கட்சி யைக் கண்டார்களோ அவர் கள் நாளடைவில் ஜெயலலி தாவின் பக்கம் சென்ற விபரீத மும் நடந்தது. எனவே 2001ஆம் ஆண்டு நடை பெற்ற சட்டமன்றத் தேர்த லில் தி.மு.கழக அணியை எதிர்த்து அ.தி.மு.க.வும் த.மா. கா.வும், காங்கிரசும் ஒன்றாக



மு. க. அழகிரி



ஐ. கே. குஜ்ரால்

இணைந்து போட்டியிட்டன. கழகத்தைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சியோடு உடன்பாடு கொண்டாலும் அந்தக் கட்சியின் நல்லது கெட்டது அனைத்திலும் பங்கு கொண்ட இயக்கம் என்பதை பலமுறை நிரூபித்திருக்கின்றோம். த.மா.கா.வுடன் உடன்பாடு கொண்டிருந்த போதிலும் அவர்களோடு எந்த அளவிற்கு உள்ளன்புடன் பழகியது என்பதற்கு ஒரேயொரு உதாரணம் வருமாறு :-


காங்கிரஸ் கட்சியும், த.மா.கா.வும் ஒன்றாக இருந்தபோது, காங்கிரஸ் கட்சி சார்பில் மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பனார், ஜெயந்தி நடராஜன், பீட்டர் அல்போன்ஸ் ஆகிய மூவருக்கும் த.மா.கா. தனியாகப் பிரிந்த பிறகு கட்சித் தாவல் சட்டப்படி பதவி போகக்கூடிய நிலைமை 96-97இல் ஏற்பட்டது. த.மா.கா.விற்கு அப்படி மாநிலங்களவை உறுப்பினர்கள் மூன்று பேரின் இடம் போய், மறு தேர்தல் அங்கே நடைபெற்றால் அந்த இடங்கள் தி.மு.கழகத்திற்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பிருந்தது. இருந்தாலும் டெல்லியிலேயிருந்த மூப்பனார் அவர்களோடு நான் சென்னையிலிருந்து தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, பதவி இழக்கின்ற நிலையே தேவையில்லை, நீங்கள் மூவரும் தைரியமாக மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகச் செய்யுங்கள், உடனடியாக அந்த மூன்று இடங்களுக்குத் தேர்தல் நடக்கும், நாங்கள் மீண்டும் உங்கள் மூவரையும் எங்கள் ஆதரவோடு வெற்றி பெற வைக்கிறோம் என்று உறுதியளித்து, அவ்வாறே அவர்கள் மூன்று பேரும் செப்டம்பர் 97இல் பதவி விலகி, அக்டோபர் 18ந்தேதி தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் மூப்பனார் மீண்டும் போட்டியிட விரும்பாததால், தி.மு.கழகத்தின் ஆதரவோடு த.மா.கா. வேட்பாளர்களான பீட்டர் அல்போன்ஸ், ஜெயந்தி நடராஜன், அப்துல் காதர் ஆகியோர் போட்டியின்றி மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகம் அந்த அளவிற்கு

தோழமைக் கட்சிக்காக முழு மனதோடு அவர்கள் ஆதரவு வேண்டுமென்று கேட்காத நேரத்திலேயே எந்தவிதமான நிபந்தனையுமின்றி தானாகவே முன்வந்து ஆதரவு கொடுத்தது. இந்த ஒரு உதாரணத்திலிருந்து கழகம் எந்த அளவிற்குத் தோழமை கட்சிகளை அனுசரித்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதற்குப் பிறகும் த.மா.கா. அடுத்த தேர்தலில் கழகத்தின் உறவை அறுத்துக் கொண்டு அ.தி.மு.க. பக்கம் சென்று போட்டியிட்டது.

மேலும் தேர்தல் சட்டத்திலே ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளுக்குமேல் போட்டியிடக்கூடாது என்று வரையறுக்கப்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்ட பிறகும், தான் இரண்டு ஆண்டு சிறை தண்டனை பெற்ற ஒரு குற்றவாளி என்ற முறையில் போட்டியிட முடியாது என்ற காரணத்தால் வேண்டுமென்றே நான்கு இடங்களிலே வேட்புமனு தாக்கல் செய்து, தேர்தல் சட்டப்படி அவை நிராகரிக்கப்பட்ட காரணத்தை மக்களிடம் கூறாமல் கருணாநிதிதான் தன்னைப் போட்டியிட முடியாமல் தடுத்து விட்டார் என்ற பொய்க் காரணத்தை மக்களிடம் நம்புமாறு கூறி, சாதாரண பாமர மக்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றி பெற்றார். வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக எந்தவிதமான குற்றச்சாட்டும், வழக்கும் இல்லாமல் வேண்டுமென்றே பழி தீர்க்கும் எண்ணத்தோடு நட்ட நடுநிசியில் என் படுக்கை யறைக்குள்ளேயே காவல் துறை பட்டாளத்தை ஏவி விட்டு, என் மனைவி ராஜாத்தியம்மாளைக் கேவலமாக நடத்தி, என்னை அடித்து துவைத்து கைது செய்தனர். அந்தக் கொடுமையை ஏன் என்று கேட்க வந்த மத்திய அமைச்சர் என் மருமகன் தம்பி முரசொலி மாறன், மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலு, போலீசாரால் தாக்கப்பட்டு கைது-



மு. க. ஸ்டாலின்




தலைவர் கலைஞரை கைது செய்தபோது

செய்யப்பட்டனர். மதுரையில் என் மகன் மு.க.அழகிரியும் சென்னை மேயராக இருந்த என் மகன் மு.க. ஸ்டாலினும் மறுநாள் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டனர். மாநிலம் முழுதும் நடந்த கிளர்ச்சியையொட்டி கழகக் குடும்பத்தினராம் ஐம்பதாயிரம் உடன்பிறப்புக்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

அந்த இரவு நடத்தப்பட்ட அ.தி.மு.க. அரசின் அராஜக அடக்கு முறையை எதிர்த்து தமிழகம் கொதித்துக் குமுறியது. அனைத்துக் கட்சித் தலைவர்களும், கலையுலகத்தினரும் கண்டன அறிக்கைகள் வெளியிட்டனர். நெஞ்சு வெடித்தும் தீக்குளித்தும் 70க்கு மேற்பட்டோர் மாண்டனர்.

அந்தக் கொடிய நிகழ்ச்சி குறித்து அன்றைக்கே மாலை முரசு நிர்வாக ஆசிரியர் பா.இராமச்சந்திர ஆதித்தன் அவர்கள் அவரது மாலை முரசு இதழ் முதல் பக்கத்திலேயே அவரது கையொப்பமிட்டு; "ஜூன் 30, சுதந்திர இந்தியச் சரித்திரத்தில் ஒரு கறுப்பு நாள். தன் மனைவியுடன் தூங்கிக் கொண்டிருந்த தமிழகத்தின் மூத்த தலைவர் கலைஞரை தட்டி எழுப்பி, அவரை அரக்கத்தனமாக போலீஸ் உயர் அதிகாரிகள் அடித்து இழுத்துச் சென்று சிறையில் தள்ளிய கொடுமை நிகழ்ந்த நாள். அரசியல் சட்டம் ஒரு மாநில முதலமைச்சருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, ஜனநாயக மரபுகளையும் சட்ட விதிகளையும் மீறி முதல்வர் ஜெய



மு. க. தமிழரசு




தலைவர் கலைஞரை கைது செய்தபோது இன்னொரு கொடுமையான காட்சி.

லலிதா கலைஞர் மீது வரம்பு மீறிய இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார். தமிழக கவர்னர் பாத்திமாபீவி அவர்கள் அரசியல் சட்டரீதியான அறிக்கையை உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. மத்திய அரசு தலையிட்டு கலைஞர் மீது மூர்க்கத்தனமாக நடந்து கொண்ட உயர் போலீஸ் அதிகாரிகள் அனைவரது மீதும் வன்மையாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று எழுதியிருந்தார்.

இப்படி அராஜக முறையில் மீண்டும் ஆரம்பமான "ஜெய லலிதாவின் ஆட்சி" மேலும் பல அராஜகங்களுடனும் அடாவடியுடனும் போலீஸ் ராஜ்யமாக நடைபெற்று வரும் இந்தக் கால கட்டத்தில் - "நெஞ்சுக்கு நீதி" நான்காம் பாகம் நிறைவுறுகிறது.

ஐந்தாம் பாகம் எழுதும் வாய்ப்பை எனக்கு இயற்கை வழங்காவிடில்; அதனை யாரேனும் எழுதி வெளிவந்தால் அத்துடன் இணைத்துக் கொள்ளத்தான் 1996 முதல் 2001 வரையிலான கழக ஆட்சி சாதனைகளை "சாதனைச் சரித்திரம்" என்ற பெரிய புத்தகமாக வெளியிட்டிருக்கிறேன்.

ANNA CENTENARY LIBRARY
00103795
18 JAN 2010



விவேகமெனும் வெள்ளி மேனைக்கு
சாதி மதப்பிசு எனும் சனி விலகினாள்தான்
சமத்துவம் எனும் தாயது தோன்றும்!

- கலைஞர்